# மட்டக்களப்புத் தமிழர் பண்பாட்டு மரபுகள்



சைவப்புலவர் கலாநிதி

சாமித்தம்பி தில்லைநாதன்

குமரன் புத்தக இல்லம்

மட்டக்களப்புத் தமிழர் பண்பாட்டு மரபுகள்

# மட்டக்களப்புத் தமிழர் பண்பாட்டு மரபுகள்

சைவப்புலவர் கலாநிதி சாமித்தம்பி தில்லைநாதன்
BA(Pera), PGDE(OUSL), PhD(EUSL)

குமரன் புத்தக இல்லம்
கொழும்பு - சென்னை
2015

மட்டக்களப்புத் தமிழர் பண்பாட்டு மரபுகள்
எழுதியது சாமித்தம்பி தில்லைநாதன்

© சா. தில்லைநாதன், 2015

குமரன் புத்தக இல்லத்தினால் வெளியிடப்பட்டது
39, 36வது ஒழுங்கை, கொழும்பு-6, தொ.பே. 011 2364550, மி.அஞ்சல்: *kumbhlk@gmail.com*
3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, வடபழனி சென்னை -600 026

குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
39, 36வது ஒழுங்கை, கொழும்பு-6

Mattakkalapputh Thamilar Panpaatu Marapukal
by S. Thillainathan

© S. Thillainathan, 2015

*Published by* Kumaran Book House
39, 36th Lane, Colombo -6, Tel. - 011 2364550, E-mail: *kumbhlk@gmail.com*
3 Meigai Vinayagar Street, Kumaran Colony, Vadapalani, Chennai - 600 026

*Printed by* Kumaran Press (Pvt) Ltd
39, 36th Lane, Colombo -6

வெளியீட்டு எண்: # 668

ISBN 978-955-659-480-5

**சமர்ப்பணம்**

இப்பணியிலே எம்மையும் ஈடுபடுத்தி
இப்பணியைக் குறைவின்றி
முற்றுமாறு திருவருள் பாலித்த
தமிழ் அன்னையை வாழ்த்தி வணங்கி
அவ்வன்னையின் அடியிணைகளில்
இந்நூலைச் சமர்ப்பிக்கின்றேன்.

சிவமயம்
குருபாதம்

**நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்**

ஸ்தாபகர் :- ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
முதலாவது குருமஹா சந்நிதானம்
ஆதீன குரு முதல்வர் :- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்
ஸ்தாபிதம் : 1966

021 222 2870

பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.

15.03.2015 ....../....../20......

## அருளாசியுரை

யாழ்நூல் தந்த சுவாமி விபுலானந்தர் தோன்றிய மட்டக்களப்பு மாவட்டம் ஈழத்தமிழர் பண்பாட்டின் காலவரலாற்று அடிப்படையிலும் மரபியல் வகையிலும் குறிப்பிடத்தக்க விசேட அம்சங்களைக் கொண்டது.

தமிழினத்திற்கென பொதுவான பண்பாட்டு மரபுகள் காணப்படினும் சிறப்பாக ஈழத்தமிழினத்திற்கென விசேட பண்பாட்டு மரபுகள் காணப்படுகின்றன. இவற்றுள்ளும் அவ்வப் பிரதேசங்களுக்கெனத் தனித்துவமான பண்பாட்டு மரபுகள் இன்றுவரை பேணிக் காணப்படுகின்றன.

இவ்வகையில் ஈழத்தின் கிழக்குப் பகுதியில் மிளிர்ந்திலங்கும் மட்டக்களப்பு மாவட்டத்தின் தமிழரின் பண்பாடு மிகப் பழங்காலந்தொட்டு இன்றுவரை விதந்துரைக்கத்தக்க வகையில் காணப்படுகின்றது. இப்பண்பாட்டு மரபுகள் பற்றி அறியப் புகுவார்க்கு, ஆய்ந்து அறிந்து ஆராய்ச்சி செய்ய முற்படுவார்க்கு உண்மைகள் நன்கு புலப்படும் என்பதற்கு ஐயமில்லை.

மட்டக்களப்பு மாவட்டத்தின் துறைநீலாவணைக் கிராமத்தில் பிறந்து வளர்ந்து, கல்விகற்று, ஆசிரியராக அதிபராக பிரதேசக் கல்விப் பணிப்பாளராக கோட்டக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி, ஓய்வுபெற்ற சைவப்புலவர் கலாநிதி சாமித்தம்பி தில்லைநாதன் அவர்களை நன்கறிவேன். அவர் தமிழ் மொழியிலும் சைவநெறியிலும் பெரும்புலமை பெற்றவர். தமிழர் பண்பாட்டுடனும் தமிழ்மொழி நெறியுடனும் வாழவேண்டும் என்னும் உயர் சிந்தனைமிக்கவர். அவரால் ஆக்கப்பெற்ற ''மட்டக்களப்புத் தமிழர் பண்பாட்டு மரபுகள்'' என்னும் நூலில் காணப்படும் பண்பாட்டு மரபுகள் யாவரும் வெளிப்படையாக அறிந்து இன்புறவும், ஆவணப்பதிவாகவும் கொள்ளத்தக்கன. இந்நூல் நுண்மான் நுழைபுலத்துடன் வெளிவருவதையிட்டு பாராட்டி வாழ்த்தி வரவேற்கின்றேன்.

இந்நூலாசிரியர் அவர்கள் ஏலவே பல நூல்களை வெளியிட்டமையை ஏற்று ஆதரவுதந்த தமிழ் நெஞ்சங்கள் மட்டக்களப்புத் தமிழரின் பண்பாட்டுக் கருவூலக் களஞ்சியமாக வெளிவரும் இந்நூலையும் அன்புடன் வரவேற்று மகிழ்வடைவீர்களாக. அவரின் தமிழ்ப்பணி தொடர இறைவன் அருள்புரிவாராக.

''என்றும் வேண்டும் இன்ப அன்பு''

இரண்டாவது குருமஹா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

# அணிந்துரை

சைவப்புலவர் கலாநிதி சாமித்தம்பி தில்லைநாதன் அவர்களுடைய ''மட்டக்களப்புத் தமிழர் பண்பாட்டு மரபுகள்'' என்னும் இந்நூலுக்கு அணிந்துரை எழுதுவதில் மிகுந்த மகிழ்வடைகிறேன். நம்முடைய பண்பாட்டுக் கூறுகளைப் பிற பண்பாடுகளுடன் இணைத்துப் பரவசம் அடையும் இக்கால கட்டத்திலே நம் பண்பாட்டுச் செய்திகளை உள்ளவாறு கூறும் நூல் வெளிவருவது கண்டு மகிழ்கிறேன். கலாநிதி தில்லைநாதனுடைய நூல் அத்தகையதே.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலாநிதிப் பட்டத்திற்கான ஆய்வேடாகவே இது முதலில் உருவாக்கப்பட்டது. உயர்பட்ட ஆய்வேடுகள் எல்லாமே அப்படியே நூல் வடிவம் பெறுவதில்லை. இயல்பான நூல் வாசிப்புக்கு அது ஏற்றதாக அமையாது. இதனை நன்கு உணர்ந்தே கலாநிதி தில்லைநாதன் தன்னுடைய ஆய்வேட்டினை மாற்றியமைத்து நூல் வடிவாக வழங்குகிறார்.

பண்பாட்டு மரபுகளை ஆராயும் போது கர்ண பரம்பரைக் கதைகள், செய்திகள் ஆகியனவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய தேவை ஏற்படலாம். அப்படியான தேவை ஏற்பட்டாலும் அவற்றை மிக அவதானமாகக் கையாள வேண்டும் என்பதில் நூலாசிரியர் தெளிவாக உள்ளார். அவருடைய கூற்றே இதனைத் தெளிவுறுத்துகிறது. மட்டக்களப்புப் பற்றிய செவிவழிக் கதைகள் வரலாற்றுச் சான்றுகளற்றவை எனக் குறிப்பிடும் ஆசிரியர் இருப்பினும் இவை மட்டக்களப்புப் பற்றிக் கூறுவதனால் இவற்றை இங்கு குறிப்பிடுகின்றேனேயன்றி மட்டக்களப்பின் தொன்மையை இக்கதைகளின் அடிப்படையில் மிகைப்படுத்திக் காட்டுவதற்கல்ல என்று கூறுகின்றார். ஓர் ஆய்வாளனை இந்த இடத்திலே நாம் தரிசிக்கிறோம்.

மட்டக்களப்புப் பண்பாட்டு மரபுகளை இருபெரும் பிரிவுகளாக ஆசிரியர் பிரித்துப் பார்க்கிறார். முதலிலே சமயப் பண்பாட்டு மரபுகளை நோக்குகிறார். நம்முடைய பெரும்பாலான பண்பாட்டு மரபுகளுக்கு சமயம் அடிப்படையாக அமைகின்றது. இதற்கு மட்டக்களப்புப் பண்பாட்டு மரபுகளும் விதிவிலக்கல்ல. நூலின் இரண்டாம் அத்தியாயத்தில் மட்டக்களப்பின் சமயப் பண்பாடுகள் பற்றி விரிவாகக் கூறப்படுகின்றது. இரண்டாவதாக சமூகப் பண்பாட்டு மரபுகள் மூன்றாம் நான்காம் அத்தியாயங்களிலே விரிவாக விளக்கப்

படுகின்றன. ஆய்வேடாக அமைந்தபோதும் சாதாரணமானவர்களும் படித்துப் பயன்பெற இந்த அத்தியாயங்கள் உதவுகின்றன.

ஓர் ஆய்வுபற்றி ஆய்வாளர் தன்னைக் கேட்டுக் கொள்கின்ற ஒரு சிறப்பான வினா இந்த ஆய்வினால் என்ன பயன்? என்பதேயாகும் இதற்கான விடையினை

மட்டக்களப்புத் தமிழர் பண்பாடும் மிக முக்கிய அம்சங்களைக் கொண்ட தாகும்.... எனினும் இம்மலர்தலை உலகத்து (Evolving world) மாற்றத்திற் கேற்ப அவர்களின் பண்பாடும் அருகிவருகிறது. எனவே இவ்விடத்தில் அவர்களின் பண்டைய பண்பாடு பற்றிய ஆய்வும், அதன் ஆவணப் படுத்தலும் மட்டக்களப்புக் கலாசாரத்தைப் பாதுகாப்பதில் உள்ள முக்கியமான இன்னோரன்ன செயற்பாடுகளாகும் (பக். xiii) என்று ஆசிரியரே தந்துள்ளார்.

இந்நூலாசிரியர் இந்த ஆய்வுப் பொருளை மிகச் சிறப்பான தமிழ் நடையிலே எழுதியுள்ளார். கலைச்சொற்களாகப் பல வடமொழிச் சொற்கள் பயன்பட்டுள்ளன. ஏனைய இடங்களின் செம்மொழித் தமிழ்ச் சொற்களும் நடையும் பயன்படுத்தப்பட்டுள்ளன. மட்டக்களப்புக்கு உள்ள செம்மொழி நடையினை ஆசிரியர் நன்றாகப் பயன்படுத்தியுள்ளார். இந்த நூலுக்கு அணிசேர்க்கும் செம்மொழித் தமிழ் நடை படிப்பவர்க்கு இதமாயிருக்கும்.

இந்த நூல் பிறந்த வரலாறும் தனித்துவமுடையது. பல தடை தாண்டி ஆசிரியர் ஓடிய அறிவோட்டத்தின் வெற்றியாகத்தான் இந்நூல் வெளி வருகிறது. இந்த ஆய்வினை எப்படியாவது நிறைவு செய்ய வேண்டுமென்ற ஒரே இலக்குடன் ஆசிரியர் உழைத்ததை நான் நன்கு அறிவேன். தனக்குத் தெரிந்தவற்றை இந்த உலகுக்கு வழங்கிவிட வேண்டும் என்ற அவர் எண்ணம் நிறைவேறியுள்ளது, அவருக்கு என்னுடைய சிறந்த பாராட்டு களையும் மனம் நிறைந்த வாழ்த்துக்களையும் கூறி இந்த அணிந்துரையை நிறைவு செய்கிறேன்.

17.05.2015

**பேராசிரியர் அ. சண்முகதாஸ்**
Ph. D (Edinburgh), D. Litt. (HC, UJ)
தகைசார் நிறைவுநிலைத் தமிழ்ப் பேராசிரியர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# முன்னுரை

இலங்கையில் தமிழர் வாழும் பிரதேசங்களில் மட்டக்களப்பிற்தான் தமிழரது மரபு வழியான, பண்பாடு தொடர்பான இலக்கிய வடிவங்கள் இன்று வரை நிலைபெற்றுள்ளன. இவ்வகை இலக்கியங்கள் பலதரத்தில் உள்ளன. நெடுங் காலமாக வாய்ப்பாட்டாக எழுத்துவடிவம் பெறாத நிலையில் வந்துள்ள பாடல்கள் ஒருவகைப்படும். ஓலைச் சுவடிகளிலும், கையேட்டுப் பதிவு களிலும் வசனமாகவும், செய்யுள் வடிவமாகவும் அமைந்துள்ளவை இன்னுமொரு வகைக்குரியவை. அச்சிடப் பெற்று வெளிவந்த நூல்கள் மற்றொரு வகையாகும். நெடுங்காலமாக வருடாந்த உற்சவங்களிலே கோயில்களில் படிக்கப்பட்டுவரும் திருவேட்டைக் காவியம் போன்றவை இன்னொருவகையாகும். விழாக்களிலும் வேலைத் தளங்களிலும் இடம் பெறும் ஆடல் பாடல் இன்னொருவகையாகும். விவசாயம், கடற்றொழில் தொடர்பான அனுபவங்களை உணர்த்தும் பாடல்கள் அடங்கிய நூல்கள் தனி ஒரு வகைக்குரிய நூல்களாகும். தமிழர் வரலாற்றின் அம்சங்களையும், சமூக வாழ்க்கையையும் இணைத்துக் கூறும் பாங்கிலேயே அமைந்துள்ளமை ஒரு தனிச்சிறப்பம்சமாகும். இவற்றோடு, இவ்விடயம் தொடர்பாக 19ஆம் நூற்றாண்டிலே சமுதாய வழமைகள், சடங்குகள் தொடர்பாக அரசாங்க அதிகாரிகளினால் எழுதப்பட்ட ஆவணங்களும் மிகவும் பயன்படக்கூடியவை.

பரந்த அளவிலான இலக்கிய வடிவங்களை ஆய்வு செய்வதன் மூலம் மட்டக்களப்புத் தமிழரின் வாழ்வியல், பண்பாடு தொடர்பான அம்சங்களைத் தெளிவாகப் புரிந்துகொள்ளலாம். இந்தவகையில் மேற்குறிப்பிட்ட வாய்ப் பாட்டளவில் உள்ள இலக்கியங்கள், ஓலைச்சுவடிகளிலும் கையெழுத்துப் பிரதிகளிலும் அச்சுருப்பெறாமல் உள்ள இலக்கியங்கள், மற்றும் நூல்களில் வெளிவந்த இலக்கியங்கள் போன்றவற்றைக் கொண்டு 19 ஆம் நூற்றாண்டு வரை காணப்பட்ட மட்டக்களப்புத் தமிழரது பண்பாடு பற்றிய ஆவண மாக்கி யாவருமுணருமுகமாக இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

பண்பாடு என்பதற்கு செவ்வி, குணநலம், சீர்திருத்தம், பெருமை, தன்மை, செய்கை, அமைதி, இயல்பு எனப்பொருள் கொள்ளலாம் (கந்தையா பிள்ளை, 1957, பக்.275, மதுரைத் தமிழ்ப் பேரகராதி, 1956, பக்.119). மேலும் கடந்தகாலத்தைச் சேர்ந்த எந்த அம்சம் கடந்த காலத்தை முன்னிலைப் படுத்திக் காட்சியளிக்கின்றதோ அதுவே மரபு. அது சமகாலத்தில் இடத்திற

கேற்றவாறு புத்துருவாக்கம் கொண்டியங்கும் என பேராசிரியர் டெனெற் குறிப்பிடுவார். எனவே இந்நூலினூடாக மொழிப்பண்பு, இலக்கியங்கள், வழிபாட்டு முறைகள், பழக்கவழக்கங்கள் மற்றும் நம்பிக்கைகள் போன்ற வற்றின் துணை கொண்டு மட்டக்களப்புத் தமிழரின் பண்பாடு பற்றி அறியலாம். எனினும் இவைகளில் ஒவ்வொன்றும் விரிந்த ஆராய்ச்சிக்குரிய தனிப்பட்ட பெரிய புலமாகும்.

பொதுவாக தமிழரின் பண்பாடு என்பது சங்க காலத்திற்கு முன்பிருந்து அறிய வேண்டிய ஒன்று. எனினும் சங்ககாலத்திற்கு முன்பிருந்த தமிழரின் பண்பாடு பற்றி அறுதியிட்டுக் கூறமுடியாதுள்ளது. தமிழரின் பண்டைய வரலாற்றையும் அவர்தம் பண்பாட்டையும் அறிந்து கொள்வதற்கு இப்பொழுது சங்க இலக்கியங்களே உதவுகின்றன.

எந்த ஒரு சமூகத்திற்கும் அதனுடைய பண்பாட்டு அம்சங்களைப் பேணுவது இன்றியமையாததாகும். இது அச்சமூகத்தின் எதிர்காலச் சந்ததியை சரியான பாதையில் வழிப்படுத்திச் செல்லும். அதே வேளை தன் தனித்து வத்தைப் பேணிக்காத்துக் கொள்வதற்குரிய ஓர் உபாயமுமாகும். தற்காலத்தில் உலகமயமாதலின் காரணமாக ஒவ்வொரு சமூகமும் (குறிப்பாகத் தமிழர் சமூகம்) தமது தனித்துவமான மொழி, உடைநடை பாவனைகளில் பல்வேறு வடிவங்களில் உருமாற்றம் பெற்றுச் செல்கின்றது. இதனால் எதிர்காலச் சந்ததி எது தமது தனித்துவமான கலாசாரப் பண்பு என்பதை அறியமுடியாது ஈற்றில் தம் தனித்துவத்தையுமிழந்து, பண்பையும் மறந்து பல்நாட்டு - பல்சமூகப் பண்புகளையுங் கலந்த சமூகமாக மாறிப் பழுதுண்டு போகும் என்பதில் ஐயமில்லை. எனவே, பண்பாடுடைய சமூகம் தனது தனித்துவ மழியாது, தன்னிலையில் இருந்து கீழிறங்காது நிலை நிறுத்தவேண்டுமாயின், காலவகையினால் அழிந்தோ அல்லது மாற்றமுற்றோ செல்லுமுன் முற்காலப் பண்பாடுகள் பற்றி நன்கு பகுத்தாய்ந்து ஆவணப்படுத்திப் பேணப்படுதல் இன்றியமையாத தொன்றாகும்.

மட்டக்களப்புத் தமிழர் பண்பாடும் மிகமுக்கிய அம்சங்களைக் கொண்ட தாகும். உதாரணமாக மட்டக்களப்புத் தமிழர்களின் உபசரிப்புத்தன்மை மற்றும் அவர்களின் மொழி, சடங்குமுறைகள், வழக்காறுகள் முதலிய வாழ்க்கை முறைகள் என்பவற்றைக் குறிப்பிடலாம். எனினும் இம்மலர் தலை உலகத்து (Evolving world) மாற்றத்திற்கேற்ப அவர்களின் பண்பாடும் அருகிவருகிறது. எனவே இவ்விடத்தில் அவர்களின் பண்டைய பண்பாடு பற்றிய ஆய்வும், அதன் ஆவணப்படுத்தலும் மட்டக்களப்புக் கலாசாரத்தைப் பாதுகாப்பதில் உள்ளமுக்கியமான இன்னோரன்ன செயற்பாடுகளாகும்.

★ ★★★

இந்நூலுக்கு அருளாசியுரை கூறி ஆசீர்வதித்த நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களுக்கு எனது நன்றியறிதலை மனமொழி மெய்களால் ஆகியவந்தனையோடு சமர்ப்பிக்கின்றேன்.

இந்நூலைச் சிறப்புறச் செய்வதற்குத் தனது அறிவு அனுபவம் என்ப வற்றை யான் பயன்பெற வழங்கிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தரும் புகழ்பெற்ற வரலாற்றுத்துறைப் பேராசிரியருமான சி. பத்மநாதன் அவர்களின் அன்பை எண்ணி எண்ணி வியக்கின்றேன். அவர்களுக்கு நன்றிக் கடன் பட்டுள்ளேன்.

நூலை வெளியிடுமாறு ஊக்கி தேவையான வேளையில் தகுந்த அறிவுரைகளை வழங்கிச் சிறப்பித்த மூவர்களாகிய கிழக்குப் பல்கலைக்கழக மூத்த விரிவுரையாளர் கலாநிதி த. ஜெயசிங்கம், கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறைப் பேராசிரியர் செ. யோகராசா, எனது அண்ணர் கலாபூஷணம் எஸ். முத்துக்குமாரன் (ஓய்வு நிலை உதவிப் பதிவாளர் நாயகம்) ஆகி யோருக்கும் எனது உளமார்ந்த நன்றியையும் கடப்பாட்டையுந் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

மேலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தகைசார் நிறைவு நிலைத் தமிழ்ப் பேராசிரியர் முனைவர் அ. சண்முகதாஸ் அவர்கள் இந்நூலினை நுணுகியாய்ந்து உளம் விரும்பி எழுதிய அணிந்துரையால் இந்நூல் ஒளி பெறலாயிற்று. அன்னார்க்கு என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்வாய்வுக்கான கல்வெட்டுகள், பத்ததிகள் ஆகியவற்றின் ஓலைச் சுவடிகளையும் கையெழுத்துப் பிரதிகளையும் தந்துதவிய அமரர் திரு உ. கோவிந்த சாமி (காரைதீவு), திரு ச. துளசிதரன் (துறைநீலாவணை), திரு மா. வேலாப் போடி (கன்னங்குடா), விஸ்வபிரம்ம ஸ்ரீ வை.இ.எஸ். காந்தன் குருக்கள், (பெரியபோரதீவு), திரு கண. ஆறுமுகம் (மட்டக்களப்பு), திரு க. குணரெட்ணம் (கன்னங்குடா), திரு.க. கமலநாதன் (வாழைச்சேனை) ஆகியோருக்கு எனது இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இப்பணிக்கு மருத்துவத்துறைக்கான ஏடுகளையும் நூல்களையும் ஆலோசனைகளையும் நல்கிய சித்தவைத்தியரும் பண்டிதரும் பிரசித்த நொத்தாரிசுமாகிய திரு வை.க. விநாயகமூர்த்தி, ஆயுர்வேத முறிவு வைத்தியர் திருமதி. சுசீலாதேவி மனோகரன், அமரத்துவமடைந்தவர்களான சித்த வைத்தியர் திரு கோ. நாராயணபிள்ளை, எனது தாய் மாமனாராகிய விஷ வைத்தியரும் சோதிடருமான திரு வே. ஆறுமுகம், விஷவைத்தியர் திரு

மா. கணபதிப்பிள்ளை ஆகியோருக்கும் எனது உளமார்ந்த நன்றியைத் தெரவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

தேவையான போது ஆலோசனைகளை வழங்கி பல்லாற்றானும் உதவிகளை நல்கி உறுதுணைபுரிந்த எனது மகன் சைவப்புலவர் சட்டத்தரணி தி. சதானந்தன் (விரிவுரையாளர் - சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானங்கள் பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்), கணினி உதவி நல்கிய திரு.ப. முருகதாஸ் (நூலகர், மட்/மகாஜனக் கல்லூரி), மட்டக்களப்புப் பொது நூலகத்திலிருந்து நூல்களைத் தந்துதவிய நூலகர் திரு க. வித்தியாசாகரர் ஆகியோருக்கும் மனமுவந்து என் நன்றிகளைக் கூறிக் கொள்கின்றேன்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக இந்நூலின் செம்மையான ஆக்கத்திற்கு எல்லா முயற்சிகளிலும் இடைவிடாது இன்று வரை தமது அரிய நேரத்தையும் பொருட்படுத்தாது எனக்கு உற்றதுணையாக நின்றவர் கிழக்குப் பல்கலைக் கழக சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானங்கள் பீட சிரேஸ்ட உதவிநூலகர் திரு செ. சாந்தரூபன் அவர்களாவர். அவரின் ஒத்துழைப்பினால் இந்நூல் பெற்ற சிறப்புக்கள் பலவாகும். அன்னார்க்கு ''உதவி வரைத்தன்று உதவி'' என்ற உளமார்ந்த உணர்வோடு நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது என்பதற்குச் சான்றாக எனது எழுத்துப் பணிக்கும் எஞ்ஞான்றும் உறுதுணையாய் இருந்துவரும் எனது வாழ்க்கைத் துணைவியார் தவமணி அவர்களைப் பற்றிக் கூறாது விடுவது பண்பாகாது.

தமிழை வளர்க்க தமிழால் ஆனதைச் செய்யவேண்டும் என்ற பேரார் வத்துடன் இந்நூலை அச்சிட்டு வெளியீடு செய்யக் குணங்கொண்ட குமரன் புத்தக இல்ல உரிமையாளர் அவர்களுக்கு என் நன்றி பெரிதாகும்.

மேலும் இவ்வாய்வுக்காக நூல்கள், கையெழுத்துப் பிரதிகள் முதலியன தந்து துணைபுரிந்த ஏனைய பெருந்தகைகளுக்கும், நேர்காணலில் தமது அறிவு, அனுபவம் என்பவற்றை யான் பெற நல்கிய பன்னரும் பெருமக்கள் அனைவர்க்கும் எஞ்ஞான்றும் யான் மிகக் கடமைப்பாடுடையேன்.

**சாமித்தம்பி தில்லைநாதன்**

# பொருளடக்கம்


அருளாசியுரை vii

அணிந்துரை vii

முன்னுரை x

1. மட்டக்களப்பு – ஒரு அறிமுகம் 1

i. மட்டக்களப்பின் வரலாற்றுப் பின்னணி 3

ii. மட்டக்களப்பில் நிலவிய ஆட்சிகள் 10

iii. இலங்கை வரலாற்றில் மட்டக்களப்புத் தமிழரது இடம் 22

iv. மட்டக்களப்பின் வரலாற்று ஆதாரங்களான கல்வெட்டுக்கள் 28

v. குலங்களும் குடிகளும் 33

2. சமயப் பண்பாடுகள் 59

i. மட்டக்களப்பில் சைவ சமயம் 62

ii. புராதன சைவ ஆலய நடைமுறைகள் 77

iii. சைவ மக்களிடையே காணப்பட்ட நம்பிக்கைகள் 102

iv. கிறிஸ்தவ சமயம் 120

3. சமூகப் பண்பாடுகள் 131

i. சமூக வழமைகள் 134

ii. உணவும் விருந்துபசாரமும் 139

iii. குடிமனைகள் 143


iv. பாவனைப் பொருட்கள் 146

v. கல்விமுறை 152

vi. ஆடையும் ஆபரணமும் 155

vii. தொழில்களும் போக்குவரத்தும் 159

| | |
|---|---|
| 4. **சமூகச் சடங்குகள்** | 188 |
| i. சனனச் சடங்கு | 188 |
| ii. சாமர்த்தியச் சடங்கு | 190 |
| iii. திருமணச் சடங்கு | 195 |
| iv. மரணச் சடங்கு | 214 |
| 5. **கலைகள்** | 226 |
| i. கூத்து | 226 |
| ii. வசந்தன் ஆட்டம் | 240 |
| iii. கரகாட்டம் | 245 |
| iv. இசைகள் | 247 |
| v. விளையாட்டுக்கள் | 252 |
| vi. மகிடி நாடகம் | 269 |
| vii. மருத்துவம் | 272 |
| vii. கட்டடக்கலையும் கண்கவர்கலையும் | 279 |
| ix.. ஓலைச் சுவடியாக்கல் | 287 |
| 6. **தமிழ்மொழியும் இலக்கியமும்** | 292 |
| i. தமிழ்மொழி வழக்கு | 292 |
| ii. இலக்கியங்கள் | 301 |
| iii. தமிழ் வளர்த்த பெரியார்கள் | 337 |
| 7. **முடிவுரை** | 341 |
| நேர்காணல் விபரங்கள் | 347 |
| உசாத்துணை நூல்கள் | 349 |
| சொல்லடைவு | 356 |


வெருகல் ஆறு
வ
சித்தாண்டி
செட்டிப்பாளையம்
பெரிய நீலாவணை
வீரமுனை
அக்கரைப்பற்று
திருக்கோவில்
பொத்துவில்
குமுக்கன் ஆறு
மட்டக்களப்பு
கிழக்கு மாகாணம்

# 1

# மட்டக்களப்பு - ஒரு அறிமுகம்

மட்டக்களப்புப் பிரதேசமானது வடக்கே வெருகலாறு முதல் தெற்கே குமுக்கன் ஆறு வரை பரந்திருந்த நிலப்பரப்பாகும். 10-04-1961 ஆம் ஆண்டிலிருந்து மட்டக்களப்பு மாவட்டம் நிருவாக ரீதியாக அம்பாறை மாவட்டத்திலிருந்து வேறுபட்டதாக அமைந்துள்ளது. ஆனால் தமிழ் மக்களது பண்பாட்டு அடிப் படையில் இவ்விரு மாவட்டங்களையும் வேறுபடுத்தல் கடினமானதாகும். அத்துடன் நிர்வாக நோக்கத்துடன் வேறுபடுத்தப்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்தைப் பண்பாட்டு அடிப்படையில் வரையறை செய்துகொள்வது கடினமாகும். இதனை மனதிற்கொண்டு இரு மாவட்டங்களையும் பண்பாட்டு அடிப்படையில் ஒன்றாக இணைத்துக் கொள்வதால் இந்நூலில் மட்டக்களப்பு எனக் கூறும்போது அம்பாறை மாவட்டத்தையும் உள்ளடக்கியதாகவே கொள்ளப்படும். புராதன காலத்தில் மட்டக்களப்பானது மலையாளரால் ''மலையர் குகநாடு'' என்றும் நாகர்களால் ''நாகர் முனை'' என்றும் வங்கர்களால் ''மட்டக்களப்பு'' என்றும் அழைக்கப்பெற்றதாக கூறுவர் (நடராசா, F.X.C., 1962, ப.13). ஒல்லாந்தர் காலத்திலேயே முதன்முதலாக மட்டக்களப்பின் தலைநகரமாக புளியந்தீவு விளங்கியது. இது முதலாக மட்டக்களப்பு முக்கிய நகரமாக விளங்கியது.

முற்கால மட்டக்களப்பு நில எல்லையானது கிழக்கில் வங்காள விரிகுடாக் கடலையும், மேற்கே ஊவாவெல்லச மலைத்தொடரையும் எல்லைகளாகக் கொண்டு வடக்கே வெருகல் ஆறு தொடக்கம் தெற்கேயுள்ள குமுக்கன் ஓயா வரை 140 மைல் தூரத்திற்கு நீண்டு கிடக்கின்றது. மேற்கு ஊவாக்குன்றுப் பிரதேசத்தை விடுத்து நில அமைவின் உயரமானது கடல் மட்டத்திலிருந்து சுமார் 30 அடிக்கு உட்பட்டவையாக உள்ளது. மட்டக்களப்புப் பிரதேச நில அமைவானது கடற்கரை, மணற்றிட்டுக்கள், முகத்துவாரங்கள், சதுப்பு நிலங்கள், களப்புக்கள், கரச்சைகள், வண்டற் படிவுகள், களிமண் படிவுகள், செம்மண் திட்டுக்கள், செங்கற்படைகள், நைசுப்பாறைகள், குன்றுகள் முதலிய நில அம்சங்களைக் கொண்டுள்ளது.

ஒல்லாந்தர் மட்டக்களப்பில் கோட்டை கட்டிய பின்னரே மட்டக்களப்பு நகரம் உதயமானது. அது வரையும் அந்நகரம் ''புளியன் தீவு'' என்ற சிறிய கிராமமாக இருந்தது. மட்டக்களப்பு மான்மியத்தில் ''மட்டமாங்களப்பு'' எனவும் அழைக்கப் பெற்றதைக் காணமுடிகிறது.

மட்டக்களப்பு வாவி, வாழைச்சேனை வாவி, பனிச்சங்கேணி வாவி என்னும் வாவிகளையும் மட்டக்களப்புப் பிரதேசம் தன்னகத்தே கொண்டுள்ளது. மட்டக்களப்பு வாவியானது மட்டக்களப்பின் வடக்குத் தெற்காக மட்டக்களப்பு நகர்ப்பிரதேசத்தை ஊடறுத்துச் செல்கின்றது. 168 சதுரக்கிலோமீற்றர் பரப்பும் 56 கி.மீ. நீளமும் (Shanmugaratnam, 1995, pp.07) ஆகக்கூடிய ஆழமாக 5 மீற்றரையும் (Arulanantham, 2004, pp.29) கொண்டது. இவ்வாவியானது தெற்கில் வீரமுனை வரையும் வடக்கில் பங்குடாவெளி வரையும் நீண்டு விரிந்து செல்கின்றது. இவ்வாவியின் 90 வீதமான பகுதி மட்டக்களப்பு மாவட்டத்தினுள்ளும் 10 வீதமான பகுதி அம்பாறை மாவட்டத்தினுள்ளும் காணப்படுகிறது. பெருமளவு நிலப்பரப்பினைக்கொண்டு மட்டக்களப்பு வாவி விளங்குகின்றது. மட்டக்களப்பில் வாழ்வோர் இதனை ''ஆறு'' என்றே பெரும்பாலும் கூறுவராயினும் உண்மையில் இது வாவியேயாம். இதனைக் கடனீரேரி எனவும், காயல் எனவும் அழைப்பர். இப்பிரதேசத்தை இவ்வாவி யானது எழுவான்கரை, படுவான்கரை என இரண்டாகப் பிரிக்கின்றது. வாவிக்குக் கிழக்காக எழுவான்கரைப் பிரதேசமும், வாவிக்கு மேற்காகப் படுவான்கரைப் பிரதேசமும் அமைந்துள்ளன. இவ்விரு பிரதேசத்தையும் பாலங்கள் அமைக்கும் முன்னர் தோணிகள் வள்ளங்கள் மூலம் மக்கள் பிரயாணத்தை மேற்கொண்டனர்.

எழுவான்கரைப்பிரதேசம் நெய்தல் நிலமாகவும், படுவான்கரைப் பிரதேசம் மருதம், முல்லை, குறிஞ்சி ஆகிய நிலங்களாகவும் அமைந்துள்ளன. மட்டக்களப்புப் பிரதேசம் வெப்பமும், தட்பமும் ஆகிய இரண்டும் வாய்க்கப் பெற்ற இடமாகும். அனைத்து உயிரினதும் நலம் பேண இவை இரண்டும் இன்றியமையாதவை. மேற்படி நால்வகை நிலத்தின் தன்மைக்கேற்ப வாழ் வாங்கு வாழ்ந்து இன்பம் துய்த்தவர்கள் இம் மக்கள்.

மட்டக்களப்பு வாவி பெருமளவு நிலப்பிரதேசத்தை வளப்படுத்து வதனால் பெரும்பாலான மக்களின் வாழ்வாதாரத்திற்கு உயிர்நாடியாகவும் அமைந்துள்ளது. பொருளாதாரம், சூழற் சமநிலை என்பவற்றில் முக்கிய பேருதவி புரிகின்றது. இவ்வாவி மீன்பாடும் தேன்நாடு என மட்டக்களப்புக்குச் சிறப்புப் பெயரை வழங்கக் காரணமாக அமைந்துள்ளது. மக்களது கலாசாரத்தைப் பேணுகின்ற வாவியாகவும் பொருளாதாரத்திற்கான (விவசாயம், மீன்பிடி முதலியன) நீர்நிலையாகவும் விளங்குகின்றது. பண்டை

நாளில் அன்னியரது ஆட்சிக்காலத்தில் வணிகக் கப்பல்களும், வள்ளங்களும் வந்து பொருட்களை எடுத்துச் செல்வதற்கு வழியாகவும் இருந்துள்ளது.

அத்துடன் கொழும்பு செல்லும் பிரயாணிகள் 1888 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ''லேடிகோர்டன்'' என அழைக்கப்படும் கப்பல் மூலம் சென்று வந்ததாக அறியமுடிகின்றது (Canagaratnam, 1921, pp.9). மட்டக்களப்பு முகத்துவாரத்தினூடாக மட்டக்களப்புக் கோட்டையை அடைந்து அங்கிருந்தே போக்குவரத்தை மேற்கொண்டனர். அது மட்டுமன்றி மட்டக்களப்பிலிருந்து கல்முனைப் பகுதியில் உள்ள கிட்டங்கித் துறை வரை சிறு கப்பல்கள் மூலமாக ஏற்று-இறக்குமதி செய்யப்பட்டது. மட்டக்களப்புக் கோட்டைக்கும் கிட்டங்கித் துறைக்கும் இடையே உள்ள காத்தான்குடி, ஆரைப்பற்றை, தாளங்குடா, மண்முனை, கிரான்குளம், பட்டிருப்பு, களுதாவளை, குருமண்வெளி, முதலிய துறைகள் ஏற்று இறுக்குமதி செய்யும் இடங்களாக இருந்தன. இத்துறைகளில் இருந்து தோணிகள் வள்ளங்கள் மூலமாக அவ்வவ் துறைகளிற்கு நேரில் நட்டாற்றில் தரித்து நிற்கும் கப்பல்களில் இருந்து பொருட்கள் ஏற்று இறக்குமதி செய்யப்பட்டன. கப்பல் சென்ற வாவியின் வழியாகிய ஆழமாகிய நட்டாற்றினை "வோட்டுப்பள்ளம்", ''கப்பல் பள்ளம்'' எனக் கூறும் வழக்கம் இன்றும் இருந்து வருகின்றது.

## i. மட்டக்களப்பின் வரலாற்றுப் பின்னணி

### மட்டக்களப்பின் வரலாறு கூறும் நூல்கள்

மட்டக்களப்பின் புராதன வரலாற்றைத் தெரிவிக்கும் நூல்களாக Monograph of the Batticaloa District of the Eastern Province, மட்டக்களப்பு மான்மியம், மட்டக்களப்புத் தமிழகம், நாடுகாடு பரவணிக் கல்வெட்டு, Memories of Batticaloa District, Palm Feringed Coast: History of Trincomalee-Batticaloa Diocese (1895-1967), மட்டக்களப்பு மக்களின் வாழ்வும் வளமும்,ஈழத்து இலக்கியமும் வரலாறும் முதலானவற்றைக் குறிப்பிடலாம்.

முதலியார் S.O. கனகரெத்தினம் அவர்களால் எழுதப்பட்ட Monograph of The Batticaloa District என்னும் நூல் 1921 இல் வெளிவந்தது. இந்நூல் மட்டக்களப்பு மாவட்டத்தின் வரலாறு பற்றி வெளிவந்த முதல் அச்சுருப் பெற்ற ஆங்கில நூலாகும். மட்டக்களப்பு மாவட்டத்தின் பௌதீக நில அமைப்பு, தரைத்தோற்றம், புராதன வரலாறு, தற்கால வரலாறு (நூல் வெளியிடுவதற்கு சற்று முன்னரான வரலாறு), அரசியல் வரலாறு சனத் தொகை, இனம், சமயம், கல்வி, தொடர்பாடல், நிருவாகம், தாவரவிலங்கு

இனங்கள், வழமைகள் ஆகியவற்றைப் பதினெட்டு அத்தியாயங்களில் இந்நூல் கூறுகின்றது.

வித்துவான் F.X.C. நடராசா அவர்களால் பதிப்பிக்கப்பெற்ற மட்டக் களப்பு மான்மியம் இரண்டாவது நூலாகும். இந்நூல் அம்பிளாந்துறை, செட்டிபாளையம் என்னும் கிராமங்களில் உள்ள இரு பெரியோர்களினால் வழங்கப்பட்ட மட்டக்களப்புப் பூர்வ சரித்திரம் என்னும் ஏடுகளைக் கொண்டு 1962 ஆம் ஆண்டு வித்துவான் F.X.C. நடராசா அவர்களால் தொகுக்கப்பட்ட தாகும். இது ஈழத்தமிழர்வரலாறு பற்றி மரபு வழித்தரவுகளை ஆதாரமாக வைத்து எழுதப்பட்டது. இந்நூலின்கண் பன்னிரண்டு கல்வெட்டுக்கள் பற்றிப் பேசப்படுகின்றன. மேலும் புராதன வரலாற்றுக்காலம் முதல் ஒல்லாந்தர்காலம் வரையும் உள்ள மட்டக்களப்பின் சரித்திரம் கூறப்படுகின்றது. மகாவம் சத்திற் கூறப்பட்டுள்ள பல தரவுகள் இந்நூலிலேயும் வருகின்றன. இந்நூலுடன் ஒற்றுமைப்படாத விடயங்களும் உள்ளன. யாழ்ப்பாணப்பிரதேசம் பற்றியும் இந்நூலில் பேசப்படுகின்றது. இந்நூலில் மட்டக்களப்பின் சிறப்புக்கள், மட்டக்களப்புப் பிரதேசத்தில் அமைந்துள்ள கிராமங்களின் பெயர்வரலாறு, சரித்திரம், சாதிகள், ஆலயங்கள் என்பன பற்றியும் கூறப்படுகின்றது.

அடுத்ததாக மட்டக்களப்புப் பிரதேசத்தைக் கூறும் நூலாக மட்டக்களப்புத் தமிழகம் என்னும் நூலைக் கூறலாம். இந்நூல் 1964 ஆம் ஆண்டில் வித்து வான், பண்டிதர் வி.சீ. கந்தையா அவர்களால் எழுதி வெளியிடப்பட்டது. இது மட்டக்களப்புப் பிரதேசத்தைப்பற்றி பல வகையிலே ஆராய்ந்து எழுதப் பட்ட நூலாகும். மட்டக்களப்புப் பிரதேசத்தின் இயற்கை வனப்பு, கலை, மொழிவளம், என்பனவற்றையும் கூறுவதுடன் நாட்டு வரலாறு, புலவர் பரம்பரை, அரசியல் வரலாறு, தமிழர்குடியேற்றம், மருந்து மந்திரம் என்பனவும் இந்நூலிலே நன்கு விளக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்புத் தமிழகத்திற்கு அடுத்ததாக 1980 இல் வித்துவான் F.X.C. நடராசா அவர்களினால் தொகுக்கப்பட்ட மட்டக்களப்பு மக்கள் வளமும் வாழ்க்கையும் என்னும் தொகுப்பு நூல் வெளிவந்தது. இந்நூலில் மட்டக் களப்பு வரலாறு சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மாநிலத்தில் பழைய புவியியல் வரலாறு, இடப்பெயர்கள், மட்டக்களப்பில் தமிழ் மக்கள், சமூகம்-குழுக்கள்-சாதிகள்-குடிகள், சமயப்பண்பாட்டு முறைகள், சக்தியின் தனிப்பெருங்கருணை, கலையும் கலாசாரமும், சைவ ஆலய வரலாறு, மட்டக் களப்புத் தமிழ் ஆகியன பற்றிக் கூறப்படுகின்றன. இந்நூலில் அமைந்த சமூகக் குழுக்கள், சாதிகள் - குடிகள் பற்றி ம. சற்குணம் எழுதிய கட்டுரையில் மாதகல் மயில்வாகனப் புலவரால் எழுதப்பெற்ற யாழ்ப்பாண வைபவமாலை (பதிப்பாண்டுகள் 1884, 1949, 1995) என்னும் நூலில் குறிப்பிடப்பெற்ற

உதயன், சேந்தன் ஆகிய முக்குகச் சமூகத் தலைவர்களது வரலாற்றைச் சீர்பாத சமூகமாக மாறுபடக் காட்டும் சமூக வரலாற்றுத் திரிபு காணப் படுகின்றது.

இவ்வரிசையில் Lange என்னும் பாதிரியார் அவர்களால் 1975ஆம் ஆண்டு எழுதப்பட்ட Palam Fringed Coast: History of Trincomalee - Batticaloa Diocease என்னும் நூலினையும் குறிப்பிடலாம். இந்நூலானது நுலாசிரியரின் மறைவுக்குப்பின்னர் 2007 ஆம் ஆண்டு நூலுருப்பெற்றது. இந்நூல் மட்டக் களப்பு திருகோணமலை பிரதேசங்களில் 1895-1967 காலப்பகுதியில் இடம் பெற்ற திருச்சபை நிகழ்வுகளைக் கூறும் அதேவேளை இக்காலப் பகுதிக்குரிய வரலாற்று அம்சங்களையும் குறிப்பிடுகின்றது.

மட்டக்களப்பின் வரலாறு கூறும் கல்வெட்டுக்களில் நாடுகாடு பரவணிக் கல்வெட்டைக் கூறலாம். இக்கல்வெட்டு எழுதிய ஆசிரியர்பற்றி எவ்வித குறிப்புக்களும் தரப்படவில்லை. ஆனால் இக்கல்வெட்டில் புளியன்தீவில் உலுவிசியென்கிற பறங்கி வாழ்ந்தமை பற்றிக் கூறப்பட்டுள்ளது. எனவே இது பறங்கியர் காலத்திலோ அல்லது அதற்கு பின்னரோ தோன்றியதாகக் கொள்ள முடிகின்றது. இதனை பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்கள் 1976 ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாநாடு நினைவு மலரில் கட்டுரையாக தந்துள்ளார். மட்டக்களப்பின் ஏழு நிருவாகப் பிரிவுகளில் நாடுகாடுப் பற்றும் ஒன்றாக இருந்துள்ளது. இது மட்டக்களப்பின் தென்பகுதியின் வரலாறுகளைக் கூறுகின்றது.

**கர்ண பரம்பரைச் செய்திகள்**

இப்பகுதியில் குறிப்பிடப்படும் கர்ணபரம்பரைச் செய்திகள் மட்டக்களப்பைப் பற்றி வழி வழியே வந்த செவி வழிக்கதையினை ஆதாரமாகக் கொண்டு பல நூலாசிரியர்களால் எழுதப்பட்டவற்றின் தொகுப்புகளே. இவை எந்த விதமான வரலாற்றுச் சான்றுகளையும் கொண்டிருக்கவில்லை. இருப்பினும் இவை மட்டக்களப்புப் பற்றிக் கூறுவதனால் இவற்றை இங்கு குறிப்பிடுகின் றேனேயன்றி மட்டக்களப்பின் தொன்மையை இக்கதைகளின் அடிப்படையில் மிகைப்படுத்திக் காட்டுவதற்கல்ல.

மட்டக்களப்பு மான்மியம் மாமாங்கேஸ்வர ஆலயத்தை இராமாயண காலத்துடனும் திருக்கோயில், உகந்தை ஆகிய ஆலயங்களைக் கந்தபுராண காலத்துடனும் தொடர்புள்ளதாகக் காட்டுகின்றது. இராவணன் காலத்திலே தென்னிலங்காபுரி அவனது ஆட்சியின்பாற்பட்டது. கிழக்கிலங்கையின் தென்பகுதியில் பிரதான தலைநகரங்கள் இருந்துள்ளன. இராவணனது ஆட்சியிலிருந்த சிறியதும் பெரியதுமான கோட்டைகள் இரண்டும் பின்னர்

ஏற்பட்ட கடற்கோளினால் தாழுற்றன. இராவணன் திருக்கோணேசப் பெருமானது பக்தன் என்பதை கோணாசல புராணம், கோணேசர் கல்வெட்டு, சூளவம்சம் முதலியன தெரிவிக்கின்றன. இராவணனது காலம் குறைந்தது ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முந்தியதாகும். இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன் இலங்கை வந்த விஜயனிலும் பார்க்க இராவணன் காலம் முந்தியது என்பது தெளிவாகும். இராவணனது காலத்தை கி.மு. 6000 ஆண்டு என ராஜவலிய எனும் நூல் தெரிவிக்கின்றது.

இராமர் இராவணனை வதம் செய்து விட்டு சீதையினைச் சிறை மீட்டுக்கொண்டு வரும் வழியில் தங்கியிருந்த இடமே தற்போதுள்ள மாமாங்கேஸ்வரர் பதியாகும். அவ்வேளையில் இராமபிரான் சிவபூசை செய்வதற்காக அவ்விடத்தில் இருந்தெடுத்த மண்ணினைப் பிசைந்து ஒரு சிவலிங்கத்தை உருவாக்கினார் எனவும் அச்சிவலிங்கமே மாமாங்கேஸ்வர ஆலயக் கருவறை இலிங்கம் எனவும் கூறப்படுகின்றது (கந்தையா, வி.சீ., 1983, பக்.10 சற்குணம், ம., 1980, ப.116). மாமாங்கேஸ்வர ஆலயத்தை உன்னரசுகிரி, மட்டக்களப்பு முதலான இடங்களின் அதிபதியாக விளங்கிய ஆடகசவுந்தரி எனும் இளவரசியுடன் தொடர்புபடுத்திக் கூறப்படுகின்றது. இவள் மும்முலைகளையுடையவள் என்றும் மாமாங்கேஸ்வர தீர்த்தக் குளத்தில் மூழ்கி எழுந்தபோது மூன்றாவது முலை நீங்கப்பெற்றதாகவும் இவள் நூற்றுப்பதினேழு ஆண்டுகள் கன்னிப்பருவம் எய்தாமல் இளம் பெண்ணாகவே இருந்தவள் என்றும் பின்னர்குளக்கோட்டு மன்னனைத் திருமணம் புரிந்தாளென்றும் கூறப்படுகின்றது. இவளது காலம் கலியுகார்த்தம் 3180-3370 (கி.பி. 78-265) என மட்டக்களப்பு மான்மியம் கணிப்பிடுகின்றது.

மட்டக்களப்பின் பாரம்பரிய சமூகமுறைமை வேடர்வழி வந்த வழிபாட்டு முறையையே சுட்டிநிற்கின்றன. கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயம், அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் ஆலயம், மண்டூர் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயம் ஆகிய பிரசித்தி வாய்ந்த ஆலயங்களிலுள்ள மூல உருவங்களை கொத்துப் பந்தலிட்டு வழிபாடு ஆரம்பித்தவர்கள் வேடர்களே என கர்ண பரம்பரைக் கதைகள் கூறுகின்றன.

இயக்கர் இராட்சத சந்ததிகளாதலால் பத்திரகாளி ஆலயத்தையும், நாகர் குருகுல வம்சமாதலால் முருகையன் ஆலயத்தையும் உண்டாக்கி போர்முனை வீரர்களை அந்த இடத்தில் இருத்தி இயக்கர்கள் மந்திரிகளாயும் நாகர்கள் இராச்சிய அதிபதியுமாயிருந்து அரசுபுரிந்த காலத்தில் (கலிபிறந்து 2709 - கி.மு. 393) அயோத்தியில் இரகுவம்சத்தினைச் சேர்ந்த காலசேனன் என்னும் அரசன் தன்படையுடன் வந்து இயக்கர் நாகர்களை வென்று அவர்களது ஆலயங்கள் இரண்டையும் இடித்துத் தள்ளியதாக மட்டக்களப்பு மான்மியம்

கூறுகின்றது. இவ்விரு ஆலயங்களாவன தற்போதய கோயிற்போரதீவு சித்திரவேலாயுத சுவாமி ஆலயமும், பெரியபோரதீவு பத்திரகாளியம்மன் ஆலயமும் என அறியமுடிகின்றது (நடராசா, F.X.C., 1998).

## நூலாதாரங்களும் வெளிநாட்டார் குறிப்புக்களும்

மட்டக்களப்பு எனும் பெயர் தொன்றுதொட்டு அழைக்கப்பட்டு வந்ததா என்பது பற்றி சாசனங்கள் மூலம் அறியமுடியாதுள்ளது. அக்காலத்தில் இது காடடர்ந்த பகுதியாக இருந்திருக்கவேண்டுமென தெரிவிக்கின்றது (நடராசா, F.X.C., 1998). அன்னிய தேசத்தினர் இங்கு வந்து மரமேற்றியதாக வரலாறுகள் கூறுகின்றன. எனினும் Tennent, J.E., (1859) கருத்துப்படி Maticaloa (''மட களப்பு'' என்னும் சொல்லிருந்து பிறந்தது என்பதும் அவரது கருத்து) என அக்காலத் தமிழர் அழைத்தனர். எனினும் பொத்துவில் இருந்து குச்சவெளி வரையுமுள்ள கரையோரப் பிரதேசத்தில் கிட்டத்தட்ட இருபதுக்கு மேற்பட்ட சிற்றாறுகள் கடலில் சங்கமிக்கின்றன. இதனால் இப்பிரதேசங் களில் அனேக சிறு களப்புகளும், கழிமுகங்களும்கூட இருபதுக்கு மேலாகக் காணப்படுகின்றன. இத்தகைய புவியியல்பு காரணமாகவே மட்டக்களப்பு என்னும் காரணப்பெயர் தோன்றியது என்பது ஈழத்துப்பூராடனார் (2005) அவர்களது கருத்து. மேலும் அவர் மட்டக்களப்பு மான்மியம் கூறும் கருத் தினையும் மறுத்துரைக்கின்றார். எவ்வாறு இருப்பினும் மட்டக்களப்பு என்னும் பெயர் முற்காலத்தில் தற்கால மட்டக்களப்பின் தென் எல்லைப் பிரதேசத் திற்கே வழங்கப்பட்டது என்பது வரலாற்று நூல்கள் வாயிலாக அறியக் கிடைக்கின்றது. பின்னர் ஒல்லாந்தர்களால் 16ஆம் நூற்றாண்டில் ஒரு கோட்டை புளியந்தீவில் அமைக்கப்பட்ட பின்பே வாவியின் வடபுறமும் மட்டக்களப்பு எனப் பெயர்பெற்று வழங்கலாயிற்று.

மட்டக்களப்பு மன்னர்களின் விபரம் கலி ஆண்டில் மட்டக்களப்பு மான்மியத்தில் தரப்பட்டுள்ளன (நடராசா, F.X.C., 1998, பக்.11-67). மட்டக் களப்பு மான்மியத்தில் தரப்பட்ட கலி ஆண்டை கிறிஸ்து ஆண்டிற்கு மாற்றும் போது சில ஆண்டுகள் மகாவம்சம் கூறும் சில ஆண்டுகளுடன் ஒத்துப் போகவில்லை. எனினும் மேற்குறித்த மன்னர்கள் விபரம் மட்டக்களப்பு மான்மியத்தை ஆதாரமாகக் கொண்டு காட்டப்படுகின்றன. மட்டக்களப்பைத் தலைநகராகக் கொள்ளாது உன்னரசுகிரி, நாகர்முனை (திருக்கோயில்), தோப்பாவை (பொலன்னறுவை) ஆகியவற்றைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த விபரமும் மட்டக்களப்பு மான்மியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நடராசா, F.X.C., 1998, பக்.11-67).

இவர்களைத் தவிர மாகோனது ஆட்சியின் (கி.பி.1215 - கி.பி1255- கலி ஆண்டு 4250) பின் மட்டக்களப்பு, தோப்பாவை, உன்னரசுகிரி முதலிய இடங்களில் தர்மசிங்கன் (மட்டக்களப்பு) தினசிங்கன் (மட்டக்களப்பு) நாதன் (மட்டக்களப்பு) அணிகங்கன் (தோப்பாவை) முதலிய பல மன்னர்கள் ஆண்டார்கள்.

## தொல்பொருள் மற்றும் கல்வெட்டு ஆதாரங்கள்

ஆதி வாசிகளான இயக்கர், நாகர், வேடர் ஆகியோர் மரம், மலை, ஆறு, மிருகங்கள் முதலான இயற்கையைத் தெய்வமாக வழிபட்டுவந்துள்ளனர். ஆல், அரசு, வேம்பு, கடம்பு முதலான மரங்களை இன்றும் வழிபாடு புரிந்து வருகின்றனர். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தின் ஒரு பிரிவான பிந்திய கற்காலத்துக்குரிய எச்சங்கள் இங்கு காணப்படுவதாக ஆய்வுமுடிவுகள் சில கூறுகின்றன (Taylor, E. 1974, p.48).

மஜுந்தார் (Majumdar, R.C, 1951, pp08), சட்டர்ஜி (Pusadar, 1946, pp235) ஆகிய ஆய்வாளர்கள் கிழக்கு மாகாணத்திலே வாழும் திராவிடர்களுக்கு முற்பட்ட இந்த வேடர்களே இயக்கர், நாகர் என இதிகாசங்களில் குறிப்பிடு பவர்களாவர் எனக்கூறுகின்றனர். வரலாற்றுக்கு முற்பட்ட கற்காலமானது பழங்கற்காலம், இடைக்கற்காலம், புதியகற்காலம், சிறுகற்காலம், என்னும் காலப்பிரிவுகளை உடையது. பொதுவாக கற்காலத்தினை கி.மு. 3500 - கி.மு. 500 எனக் கொள்வர். இலங்கையில் பழைய கற்காலம் குறுணிக் கற் காலம் ஆகிய காலங்களைச் சேர்ந்த பண்பாடுகளே மிகவும் பழமையானவை. பழைய கற்காலத்து மக்கள் பல்லாயிரம் ஆண்டுகள் இலங்கையில் வாழ்ந்த தற்கான சான்றுகள் கிடைத்துள்ளதாக வரலாற்றாசிரியரான பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்கள் குறிப்பிடுகின்றார். பழைய கற்கால மக்களை அடுத்து குறுணிக் கற்காலத்து மக்கள் தோன்றினர்.

இலங்கை வரலாற்றில் பெரும் கற்படைக் காலப்பண்பாடு பரவியதன் விளைவாக நாகரீக வளர்ச்சி ஆரம்பமாகியது. இந்தப் பண்பாட்டின் செல்வாக்கு கி.மு. 5ஆம் நூற்றாண்டளவில் ஏற்பட்டதாகக் கருதலாம். பெரும் கற்படைக் காலப்பண்பாடு என்பது தென்னிந்தியாவில் கி.மு. ஆயிரமாம் ஆண்டளவில் பரவியதொன்றாகும்.

தென்னிந்திய கரையோரங்களிலிருந்து இலங்கையின் கரையோரங்களில் இவர்கள் கடல்மார்க்கமாக வந்து குடியேறினார்கள். அவர்கள் அங்குள்ள கடல் மலை காடு என்பவற்றின் வளங்களான முத்து, சங்கு, இரத்தினம், தேக்கு, முதிரை, கருங்காலி முதலியவற்றிலும் தமது கவனத்தைச் செலுத்தினர். அக்குடியேற்றங்களின் அடையாளங்கள் புத்தளம், மாந்தை, கந்தரோடை,

கதிர்காமம், உகந்தை, அநுராதபுரம், கதிரவெளி முதலான இடங்களில் கிடைக்கப் பெற்றுள்ளன.

இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் வாழ்கின்ற தமிழ்பேசும் மக்களின் மூதாதையர்கள் பழைய கற்காலப் பண்பாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இப்பண்பாட்டினை அவர்களின் ஈமக்கல்லறைகள் மூலமாக அறிந்து கொள்ளமுடிகிறது. கல்லறைகள், கல்வட்டம், தாழிகள், ஈமப்பேழை போன்றவைகளாகப் பயன்படுத்தியுள்ளனர்.

இலங்கையின் வடமேற்கிலும் கிழக்கிலும் பரவிய அம்மக்கள் அங்கு வாழ்ந்த குறுணிக் கற்கால சமுதாயத்துடன் இணைந்துவிட்டனர். ஏனைய பாகங்களிலும் வாழ்ந்த குறுணிக் கற்கால மக்கள் பெரும் கற்காலப் பண்பாட்டின் அம்சங்களை அறிந்து அவற்றைத் தாமும் பின்பற்றினார்கள். குடியிருப்புக்களை ஏற்படுத்தி வேளாண்மை, மந்தை வளர்ப்பு, மீன்பிடித் தொழில், வாணிபம், மரத்தொழில் முதலான தொழில்கள் விருத்தியடை வதற்கும் அவர்களும் அவர்களின் பிற்சந்ததியினரும் ஏதுவாக இருந்தனர்.

இலங்கையின் பலபாகங்களில் தமிழ் பேச்சுமொழியாக இருந்தமைக்கு ஆதியான பிராமிச் சாசனங்கள் ஆதாரமாக விளங்குகின்றன. அனுராதபுரம், பெரிய புளியங்குளம், திருகோணமலையின் சேருவில, மட்டக்களப்பின் குடுவில் ஆகியவற்றில் கிடைத்துள்ளன ஐந்து பிராமிச் சாசனங்களில் தமிழரைப் பற்றிய குறிப்புக்கள் உள்ளன (பத்மநாதன், சி., 2010, பக்.12).

அம்பாறை, திருக்கோயில், மகாஓயா, உறுகாமம், உன்னிச்சை, சிப்பிமடு, களுவங்கேணி, பனிச்சங்கேணி, வாகரை, கதிரவெளி முதலிய பூர்வீக இடங் களில் வேடர்கள் இன்றும் நிரந்தரக்குடிகளாக வாழ்கின்றனர். இதனால் மட்டக்களப்பு கற்கால மனிதர் வாழ்ந்த இடமாகக் காணப்பட்டது என்பது உறுதியாகின்றது. இது மட்டக்களப்பின் தமிழர் தொன்மையைத் தெளிவாகக் காட்டுகின்றது. மட்டக்களப்புப் பிரதேசத்தில் முறையான அகழ்வாராய்ச்சி கள் மேற்கொள்ளப்படாதது துரதிஷ்டமே. அகழ்வாராய்ச்சிகள் செய்யப்படின் மட்டக்களப்புத் தமிழர்களது பண்பாடு, நாகரிகம் தொடர்பான தொன்மையை மேலும் காண முடியும்.

ஆதி மனிதனுக்குரிய வழிபாட்டு முறைகளில் வேல்வழிபாடு, இலிங்க வழிபாடு, சூல வழிபாடு ஆகிய முறைகள் இன்றும் மட்டக்களப்புப் பிரதேசத்தில் இருந்து வருகின்றன. இவற்றிற்கு எடுத்துக்காட்டாகக் கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயம், திருக்கோயில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயம், உகந்தை முருகன் கோயில், மண்டூர் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயம், கோயிற்போரதீவு ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி கோயில் முதலான வற்றைக் குறிப்பிடலாம்.

## ii. மட்டக்களப்பில் நிலவிய ஆட்சிகள்

### புராதன ஆட்சிகள்

மட்டக்களப்பின் முற்கால அரசுப்பிரிவில் வங்க குலத்தவனான கூத்திகனை மட்டக்களப்பு மான்மியம் முக்கியத்துவப் படுத்துகின்றது. இவனது காலம் கி.மு. 236-214. பாளி நூலாகிய மகாவம்சம் கூத்திகன், சேனன் இருவரையும் குதிரை வணிகரெனக் குறிப்பிடுகின்றது. சேனன் அநுராதபுரத்தில் நிலை கொள்ள, கூத்திகன் சம்மாந்துறையை இருக்கையாக்கி மட்டக்களப்பை ஆட்சி புரிந்தான். மட்டக்களப்பு மான்மியம் மட்டக்களப்புப் பிரதேச அரசின் மீது அநுராதபுரி இராசதானி பெற்றிருந்த மேலாட்சி பற்றிக் குறிப்பிடுகின்றது (நடராசா, F.X.C., 1962, பக்.24-25).

மட்டக்களப்பினை சிறிகுலன் எனப்படும் படையாட்சித் தலைவன் ஆண்டதாகவும் மட்டக்களப்பு மான்மியம் கூறுகின்றது. சிறிகுலனின் மகனான வாகூரன் கி.மு. 32 (கலியுக ஆண்டு 30 - 20) இல் ஆட்சிப் பொறுப்பை ஏற்றான். இவன் மாணிக்கக்கங்கையில் இருந்து வாய்க்கால் வெட்டி விவசாய அபிவிருத்தி செய்ததாகக் கூறப்படுகின்றது. இவ்வாய்க் காலின் பெயர் முக்கனார் எனவும், விவசாயப்பிரதேசம் வாகூர வட்டை எனவும் அழைக்கப்படுகின்றது. இவனுக்குப்பிறகு இவனது மகன் பிரசின்ன சித்து கி.பி.முதலாம் நூற்றாண்டின் (கி.பி. 08 இல் அதாவது கலியுக ஆண்டு 31-10) முற்பகுதியில் ஆட்சியைப்பெறுகின்றான்.

கி.பி. முதலாம் (கி.பி.28 இல் அதாவது கலியுக ஆண்டு 31-30) நூற்றாண்டில் கலிங்கனான புவனேகபாகு சோழனின் புதல்வியான தம்பதி நல்லாள் என்பவளை மணம் புரிந்து மட்டக்களப்பிற்கு யாத்திரை வந்ததாகக் கூறப்படுகின்றது. அக்காலத்தில் மட்டக்களப்பை அரசு புரிந்த வாகூரனின் மகன் பிரசின்ன சித்துவின் காலத்தின் முன்னரே பாழுற்றிருந்த நாகர்முனை (திருக்கோயில்) சுப்பிரமணியர்கோயில் பிரசின்னசித்துவினால் பிரதேச மக்களது வேண்டுகோளிற்கிணங்க செப்பனிடப்பட்டது (நடராசா, 1962, ப.25).

பின்னர் இவர்களிற்காக ஒரு சிற்றரசு தென்பால் உருவாக்கப்பட்டது. கிழக்கில் வங்காள விரிகுடாக்கடலும், மேற்கில் கடவத்தையும், தெற்கில் மாணிக்கக் கங்கையும், வடக்கில் மக்கனம்வெட்டு வாய்க்காலையும் எல்லைகளாக அமைந்த பகுதியாக இது உருவாகியது. இதற்கு உன்னரசுகிரி என நாமம் வழங்கிற்று.

இதன் பின்னர் உன்னரசுகிரி புவனேகபாகுவின் மகன் மனுநேகபாகு விடமும், கி.பி. 68 இல் மட்டக்களப்பு பிரசின்னசித்துவின் மகனான

தாசனிடமும் சென்றன. மனுநேகபாகு காலத்திலும் திருக்கோயில் சிறப்பாகப் புனரமைக்கப்பட்டது.

கி.பி. 3ஆம் நூற்றாண்டு (கி.பி.268) காலப்பகுதியில் உன்னரசுகிரியின் ஆட்சி சிங்ககுமாரனிடமும் மட்டக்களப்பின் ஆட்சி பிரசேதுவிடமும் செல்கின்றன. இச்சிங்ககுமாரனை ஆடகசவுந்தரியின் மகன் என மட்டக்களப்பு மான்மியம் கூறுகின்றது. இக்காலப்பகுதியில் உகந்தை முருகன் கோயில் சிறப்பாக நடைபெற்றது.

கி.பி.4 ஆம் நூற்றாண்டு தொடக்கத்தில் உன்னரசுகிரியின் ஆட்சி சிங்க குமாரனின் மகன் சிறிசிங்கனிடமும் மட்டக்களப்பின் ஆட்சி பிரசேதுவின் மகன் தினசேனனிடமும் செல்கின்றது. பின்னர் தினசேனனுக்கு வாரிசு இல்லாமையால் மட்டக்களப்பு உன்னரசுகிரியோடு இணைந்து சிறிசிங்கனின் மகனான பானுவால் ஆட்சிபுரியப்பட்டது. கி.பி. 4ஆம் நூற்றாண்டின் மத்திய பகுதியில் (கி.பி. 364 இல்) பானுவின் மகன் அமரசேனன் ஆட்சியும் கி.பி.4ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி அமரசேனனின் மகன் குணசிங்கனின் ஆட்சியும் (கி.பி. 398 இல்) எனக் குறிப்பிடப்படுகின்றது.

கலிங்க அரசனாகிய குகசேனனின் மகள் உலகநாச்சி பற்றி மட்டக்களப்பு மான்மியம் கூறுகின்றது. இவள் புத்தரின் புனித தந்தத்தை இலங்கையரசன் மேகவண்ணனுக்கு இந்தியாவிலிருந்து கொணர்ந்து கொடுத்ததாலும், ஓர் இளவரசியாக இருந்ததாலும் மேகவண்ணனின் அறிவித்தலுக்கிணங்க மட்டக்களப்பு மன்னனான குணசிங்கன் ஒரு சிற்றரசை மண்முனை என்ற பெயரில் இவளுக்கு வழங்கியதாக அறிய முடிகின்றது. கொக்கட்டிச்சோலை தான்றோன்றீஸ்வரர் ஆலயம் இவளுடன் தொடர்புற்றதாகக் கூறப்படுகிறது.

### அனுராதபுர, பொலன்னறுவை ஆட்சிகள்

கி.பி 5ஆம் நூற்றாண்டு முதல் ஈழத்திற்கும் பாண்டிய நாட்டிற்கும் மிக நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது. கி.பி.412 - கி.பி.434 இல் 2 ஆம் மகாநாபன் பாண்டிய நாட்டில் திருமணம் செய்தான். கி.பி.436 - கி.பி463 இல் அநுராதபுரத்தை இருக்கையாக்கி பாண்டியன் ஆட்சிபுரிந்த போது உறுகுணை ஆட்சி அவர்களின் கீழ்வர மட்டக்களப்புச் சிற்றரசும் அவர்களின் ஆட்சியின் கீழ் அமைகின்றது. இதன் பின்னர் கி.பி 5ஆம் நூ.ஆ - கி.பி 7 ஆம் நூ.ஆ. முற்பகுதி வரை மட்டக்களப்பில் கலிங்கரின் ஆதிக்கம் நலிவடைந்த நிலையில் காணப்படுகின்றது.

மட்டக்களப்பில் சோழ, பாண்டிய படையெடுப்புக்களும் குடியேற்றங் களும் காலத்துக்குக் காலம் நடைபெற்று வந்துள்ளன. ஆயினும் பெரும் பான்மையான தென்னிந்தியத் தமிழர் குடியேற்றம் நடந்த வரலாற்றுக்காலமே

அநுராதபுரியிலும் பொலன்னறுவையிலும் தமிழர்கள் ஆட்சி நடத்திய கால மாகும். அது கி.மு. 205 - கி.பி. 1224 ஆம் ஆண்டு வரையில் இடைப்பட்ட காலமாகும் (ஈழத்துப் பூராடனார், 2005, பக்.89-112).

கி.பி.8 ஆம் நூ.ஆ. பிற்பகுதி தொடக்கம் கி.பி.9ஆம் நூ.ஆ. முற்பகுதி வரை பொலன்னறுவையின் அதிபர்களின் கீழ் மட்டக்களப்பு நிருவாகம் அமைந்தது. கி.பி.10 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அநுராதபுர ஆட்சி உட்பட ஈழத்தின் வடக்குக் கிழக்குப்பாகங்கள் சோழர் ஆட்சியின் கீழ்க் கொண்டுவரப்பட்டன. அப்போது மட்டக்களப்பின் சிற்றரசனாக தர்மசிங்கன் இருந்தான். இதன் பின் குமாரசிங்கன், கதிர்சுதன், மதிசுதன், நாதன், தினசிங்கன் ஆகிய கலிங்கரின் வாரிசு - ஆட்சி சோழரின் மேலாதிக்கத்தின் கீழ்க் கொண்டு வரப்படுகின்றது (F.X.C. நடராசா, 1998,பக்.89-112).

**சோழராட்சி**

சோழராட்சிக் காலத்தில் தமிழும் சைவமும் வளர்ச்சியுற்றன. கூத்துக்கள் போன்ற கலைகளும் வளர்ச்சியுற்றன. ஆலயங்கள் சிற்பங்களினாலும், ஓவியங்களினாலும் அலங்கரிக்கப்பட்டன. மட்டக்களப்பில் சிறு துறைமுகங் களாக இருந்த வாழைச்சேனை, மட்டக்களப்பு, கல்முனை, திருக்கோயில் என்பன வணிகத் தலங்களாக இருந்தன. மட்டக்களப்பு சுமார் 77 ஆண்டுகள் சோழர் ஆட்சியில் இருந்தமை குறிப்பிடத்தக்கது. மட்டக்களப்பின் ஆட்சியாளர்கள் சுயமாக ஆட்சி செய்ததாகவும் கூறமுடியாது. இவர்கள் மட்டக்களப்பு அரசர்களாகக் கருதப்பட்டாலும் பொலன்னறுவையில் இருந்த சோழ அரசின் பிரதிநிதியின் கீழே இவர்கள் இருந்தனர். இக்காலத்தில் இவர்கள் விஷ்ணு வழிபாட்டிற்கு முக்கியத்துவம் கொடுத்தமையால் விஷ்ணு வழிபாடும் செல்வாக்குப்பெற்றிருந்தது.

கிராம நிருவாக ஆட்சிக்கு இவர்களின் ஆட்சி முக்கியத்துவம் கொடுத்தது. கிராம நிருவாகத்துள் நிலப்பங்கீடுகள், சமூக கலாசாரங்கள் பேணல், குற்றச் செயல்களிற்குத் தண்டனை வழங்கல் முதலியன அமைந்தன. உச்ச தண்டனை பொலன்னறுவையில் இருந்த மத்திய அரசுப் பிரதிநிதியின் அனுமதியுடனேயே வழங்கப்பட்டது. நிலவரி, தொழில் வரி என்பவற்றி லிருந்து பெறப்படும் நிதிகளில் மூன்றிலொரு பகுதி மத்திய அரசுக்கும் மிகுதியானவை விவசாய அபிவிருத்தி, சமயப்பணி முதலிய கிராம வளர்ச்சிக்கும் பயன்படுத்தப்பட்டன.

சோழராட்சிக்குப்பின் (கி.பி. 1017-1070) கலிங்கமாகோனது ஆட்சி (கி.பி. 1215-கி.பி. 1255) சிறப்பான காலமாக வர்ணிக்கப்படுகின்றது. இவனது காலத்தில் சைவமும் தமிழும் பண்பாடும் சிறப்பிடம் பெற்றன.

சமூகங்களிற்குப் பொறுப்புகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. ஆலயத்தொழும்புகள் வரையறுக்கப்பட்டன. மட்டக்களப்புப் பிரதேசத்தில் கலிங்க மாகோனது ஆட்சிக் காலத்தில் சமுதாய அமைப்பில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டதாக மட்டக்களப்புப் பூர்வசரித்திரம் கூறுகின்றது. அவன் விஜயபாகு என்ற பெயரினைக் கொண்டிருந்தானென 14ஆம்நூற்றாண்டில் எழுந்த நிகாய சங்கிரகய என்னும் நூல் தெரிவிக்கின்றது. மாகோன் தனக்கு ஆதரவாகச் செயற்பட்ட முக்குவ சமுதாயத் தலைவர்களுக்கு மட்டக்களப்புப் பிரதேசத்து வன்னிமைப் பற்றுக்களில் வன்னிமைப்பதவிகளை வழங்கினான். மட்டக்களப்புச் சமுதாயத்தினரின் குடிமுறைப் பகுப்பையும் வகுத்ததாக மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது. முதலாம் விஜயபாகு காலம் கி.பி 1070 முதல் கலிங்கமாகோன் ஆரம்பகாலம் கி.பி. 1215 வரை மட்டக்களப்பு அரசியல் வரலாறு பற்றி விசேடமாகக் கூறுவதற்கு இல்லை.

மாகோனது காலத்தில் மட்டக்களப்பில் வீரசைவம் பரவியது. அவனால் கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் கோயில் வீரசைவர்களினால் பூசை செய்யும் கோயிலாக மாற்றம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்றோன்றீஸ்வரர் ஆலயம், அதன் தேர் அமைப்பு, திருக்கோயில் சித்திரவேலாயுத சுவாமி ஆலயம் என்பவற்றின் கட்டட அமைப்புக்கள் பாண்டிய பாணியில் அமைந்தது என கலாநிதி இந்திரபாலா கூறுகின்றார் (தங்கேஸ்வரி, 2007, ப.69). இதன்படி மட்டக்களப்பைப் பாண்டியர்களும் ஆண்டனர் எனத் தெரிவிக்கின்றனர். இருப்பினும் பாண்டியரதும், சோழரதும் கட்டட அமைப்பு முறைகளில் பாரிய வேறுபாடுகள் இல்லை என்பது வரலாற்று ஆய்வாளர்களின் ஆணித்தரமான கூற்று. ஆகவே மேற்குறிப்பிட்ட கட்டடங்களும் சோழர்காலத்துக்குரியனவாகவே கருத முடியும். இது மட்டக்களப்பைப் பாண்டியர் ஆட்சி புரிந்தனர் எனும் கருத்திற்கு ஐயம் விளைவிக்கின்றது.

**வன்னியர் ஆட்சி**

வன்னி என்ற சொல் 13 ஆம் நூற்றண்டளவில் வழக்கில் வந்தது. அது குறு நிலப்பிரிவுகளைக் குறிக்கும் சொல்லாகும். தமிழகத்திலும் ஈழத்திலும் அது ஏக காலத்தில் வழக்கில் வந்தது. ஆனால் குறு நிலப்பிரிவுகள் மிகவும் புராதனமானவை. மலையமான்களை 12 ஆம், 13 ஆம் நூற்றாண்டுகளில் வன்னியர்நாயன் என்று சாசனங்கள் குறிப்பிடும். வன்னியர்நாயன் என்பது ஒரு பட்டப்பெயர். அது முற்காலங்களில் வழங்காத ஒன்று. ஆனால் மலையமான்கள் மிகத் தொன்மைக் காலம் முதலாக சிற்றரசராய் விளங்கினர்.

மட்டக்களப்பிலும் ஏனைய பாகங்களிலும் உருவாகியிருந்த சிற்றரசுகள் திடீரெனத் தோன்றவில்லை. அவை புராதனமானவை. மட்டக்களப்பு மான்மியமும் அவர்களிற் சிலரை புராதன அநுராதபுர கால மன்னரோடு தொடர்புபடுத்துகின்றமை இங்கு நோக்கத்தக்கது. எனவே புராதன சிற்றரசுகள் 13 ஆம் நூற்றாண்டளவில் தனியாகவும் கூட்டாகவும் வன்னி என்று வர்ணிக்கப்பட்டன என்று கொள்வதே பொருத்தமானது. ஈழத்து வன்னிச் சிற்றரசுகளின் உற்பத்தியை வன்னி என்பதிலிருந்து பிரித்து நோக்க வேண்டும். வன்னி என்பது ஒரு காலகட்டத்தில் குறுநில மன்னர்களின் பொதுப் பதவிப் பெயராகியது.

மட்டக்களப்பு முழுவதும் முற்காலங்களில் ஒரு தனியான நிருவாகப் பிரிவாகவோ ஆட்சிப் புலமாகவோ அமைந்திருக்கவில்லை. அதில் கோறளைப்பற்று, வாகரை, மட்டக்களப்பு, மண்முனை, எருவில், ஏறாவூர், போரதீவு, பழுகாமம், நாடுகாடு, சம்மாந்துறை, பாணமை என்னும் பிரிவுகள் இருந்தன. அவற்றிலே வன்னியர் என்னும் குறுநில ஆட்சிப் பிரிவுகளைப்பற்றி மட்டக்களப்புப் பூர்வ சரித்திரம், நாட்டார்பாடல் முதலியனவற்றின் மூலமாக அறியமுடிகிறது. மட்டக்களப்பு, பழுகாமம், ஏறாவூர், பாணமை ஆகிய வற்றிலுள்ள வன்னியரைப்பற்றி ஐரோப்பியர் எழுதிய வரலாற்று நூல்களிலே குறிப்புகள் உள்ளன(பத்மநாதன், சி., 2003, பக்.70, 71, 88). இக்குறுநிலப் பிரிவுகளில் ஆட்சியதிகாரம் செலுத்தியவர்கள் பற்றி ஐரோப்பியர் எழுதிய ஆவணங்களில் குறுநில மன்னர்கள் எனவும் ஒல்லாந்தர் எழுதிய ஆவணங் களில் அரசர் எனவும் குறிப்பிட்டுள்ளனர். அவர்களின் ஆட்சி பரம்பரை வழியானது. பொலன்னறுவை, கோட்டை, கண்டி போன்ற இராசதானிகள் பலமுற்றிருந்த காலங்களில் வன்னியர் அவற்றின் மேலாதிக்கத்தை ஒப்புக் கொண்டு அங்குள்ள அரசர்களுக்குத் திறை செலுத்தினார்கள். ஏனைய காலப்பகுதிகளில் சுதந்திரமாக ஆட்சி புரிந்தனர். மட்டக்களப்பில் மாகோனால் புதியதாக முக்குவ வன்னிமைகள் உருவாக்கப்பட்டனர்.

மட்டக்களப்புத் தேசத்து வன்னிமைகள் சுயாட்சி உரிமையின் அடிப் படையில் பிரதேசத்து நிருவாக அதிகாரம் பெற்றிருந்தனர். அவர்களுக்கு உரித்தான பற்றுக்களில் நீதிபரிபாலனம், வரிசேகரித்தல், வேளாண்மை, ஆலய பரிபாலனம் முதலானவற்றில் அவர்கள் அதிகாரம் கொண்டிருந்தனர். யானை, தேன், மெழுகு ஆகியவற்றைச் சம்பிரதாய பூர்வமாக அரசனுக்குத் திறையாக செலுத்தவும் அரசனுக்கு ஆதரவாகப் படைத்துணை வழங்கவும் கடமைப்பட்டிருந்தனர்(பத்மநாதன், சி., 2010, ப.69).

அதுமட்டுமன்றி பலசமயங்களில் அரசபடையின் தலைவர்களாக வன்னிமைகள் கடமையாற்றியதாக அறியமுடிகிறது. இவ்வன்னியர்கள்

இராசதானியிலும் அதிமுக்கியமான விசேட ஆலோசனைக் கூட்டங்களிலும் பங்குபற்றினார்கள். உள்நாட்டுக் குழப்பங்களுக்குத் தீர்வு காணல் அரசனுக் குப்பின் அவனுடைய வாரிசைத் தீர்மானித்தல் போன்ற விடயங்களில் பிரதானிகளோடு வன்னியர்களும் அங்கம் வகித்தனர். ஒரு சமயத்தில் மட்டக்களப்பு வன்னிமை குமாரபண்டாரம், பழுகாமத்து வன்னிமை செல்லப் பண்டாரம், போரதீவு வன்னிமை தர்மசங்கரி, பாணமை வன்னிமை சமரவாய் முதலானவர்கள் இராசதானியில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டதாக அறியமுடிகிறது.

இராசதானிகளில் குழப்பமும் தகராறும் ஏற்பட்டபோது சிலசமயங்களில் ஒருசாராருக்கு ஆதரவு வழங்க நேர்ந்தது. விமலதர்மனுக்கும் ஜெயவீர பண்டாரனுக்கும் போர் ஏற்பட்டது. மட்டக்களப்புத் தேசத்து வன்னிமைகள் ஜெயவீரபண்டாரனுக்கு ஆதரவாக அனுப்பியிருந்த படைகளின் விபரங்களை பிலிப்பூஸ் போல்டே வர்ணிக்கிறார். பல்லாயிரக்கணக்கான போர் வீரர் களையும், அலியன் யானைகளையும், பொருள்களை ஏற்றிச்செல்வதற்கான வண்டிகளையும், காளைமாடுகளையும் இவர்கள் அனுப்பியதாகச் சொல்லப் படுகிறது (பத்மநாதன், சி., 2010, பக்.10-12).

கி.பி. 16ஆம் நூ.ஆ. பிற்பகுதியில் கண்டி அரசின் கீழ் மட்டக்களப்பு வந்தது. கண்டியரசுக்கும் மட்டக்களப்பிற்கும் நெருங்கிய தொடர்பு காணப் பட்டது. கண்டியரசுக்குத் திறைகொடுத்து மட்டக்களப்புச் சிற்றரசர்கள் தமிழர் பண்பாட்டை வளர்த்து வந்தனர். மட்டக்களப்பு வர்த்தகர்கள் பொதி சுமக்கும் எருதுகளில் (தவளமாடு) விளைபொருட்களை கண்டிக்கு எடுத்துச்சென்று வணிகம் செய்தனர். இவர்கள் கண்டிக்குச் செல்வதற்காக மண்டூர், பழுகாமம், சம்மாந்துறை முதலிய இடங்களில் இருந்து கண்டிக்குப் போவதற்கு பாதைகள் அமைக்கப்பட்டன. இப்பாதைகள் ஊவா மாகாண எல்லையிற் சந்தித்த இடத்தை ''கண்டிஅதர்'' எனக் கூறுவர். பழுகாமத்திலிருந்து கண்டி செல்லும் பாதை ''கண்டியன் கட்டு'' என வழங்கப்பட்டு வருகின்றது.

கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்குரியதெனக் கருதப்படும் சிலப்பதி காரத்திலே சேரன்செங்குட்டுவனால் கண்ணகிக்குக் கோயிலெடுத்த வரலாற் றினை இளங்கோவடிகள் குறிப்பிடுகையில் கடல் சூழிலங்கை கயவாகு வேந்தனும் இவ்விழாவிற்கு அழைக்கப்பட்டான் எனக் குறிப்பிடுகின்றார். இக்கயவாகு மன்னன் இலங்கைக்கு மீண்டு யாழ்ப்பாணத்திற்கும் மாத கல்லுக்கும் அண்மையிலுள்ள சம்புத்துறைமுக வழியாக வந்தானென்பது வரலாறு. மன்னன் வந்திறங்கிய இடத்திற்கண்மையிலுள்ள அங்கணாமக் கடவையென்னும் இடத்திலே கண்ணகி கோயிலை அமைத்தான். இது

ஈழத்திலெழுந்த பழங் கோயிலென பேராசிரியர் கலாநிதி சி. கணபதிப்பிள்ளை அவர்களும் கூறுகின்றார்(கந்தையா, வி.சீ., 1964, பக்.46-157).

ஆனால், ராஜாவலிய என்னும் பாளி நூலில் கயவாகு மன்னன் தமிழகம் புகுந்து பல வெற்றிகளீட்டி மீண்டு வருகையில் கண்ணகி தேவியின் காற்சிலம் பொன்றைக் கொண்டுவந்தான் எனவும் ஈழத்தில் பல இடங்களில் கோயில் எடுப்பித்தான் எனவும் கூறப்படுகிறது. கண்ணகியின் ஈழநாட்டு வருகை கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் எழுந்த ராஜாவலிய நூலிற் தான் முதன் முதலில் எழுத்து வடிவில் குறிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக் கயவாகு மன்னன் சேரன்செங்குட்டுவனின் அழைப்பின் பேரில் தென்னிந்தியா சென்றான் என்று தமிழ் நூல்கள் குறிப்பிடுகையில் பண்டைய சிங்களவர்களால் தோற்றுவிக்கப்பட்ட ராஜவலிய, கயவாகு போரிடத் தமிழ் நாடு புகுந்து பல வெற்றியீட்டிச் சிலம்பு கொண்டு வந்தானென்று கூறுவது ஈண்டு உற்று நோக்குதற்குரியது. தென்னிந்தியாவில் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் பல வகையினாலும் செழிப்புற்று போர்த் திறமைகளுடன் விளங்கும் வேளையில் இச்சிறுதீவில் இருந்து சென்ற ஓர்அரசன் எங்ஙனம் போராடி வெற்றியீட்டலாம். இவ்வரலாற்றுத் திரிபு எள்ளி நகையாடற்குரியதே.

கண்டி அரசுக்காலத்தில் மட்டக்களப்பிற்கு நெருங்கிய தொடர்பு இருந் தமைக்குச் சான்றாக கண்ணகி அம்மன் காவியப்பாடல்களில் (மழைக் காவியம்) ''கண்டி ராஜசிங்கனும் வாழி'' என்றும், உடுகுச்சிந்தில் ''எழில்பெறு ராஜசிங்கராஜன்'' என்றும் இடம்பெறுகின்றன. கண்டி அரசுக்காலத்தில் மட்டக்களப்பில் கண்ணகி வழிபாடு விரிவடைந்து துரித வளர்ச்சி பெற்றது. கண்டி அரசனான சிறிவிக்கிரமராஜசிங்கன் காலத்தில் மட்டக்களப்பில் அமைந்துள்ள துறைநீலாவணை என்னும் கிராமத்தினரில் ஊழியம் செய்தவர் களுக்காக அரசனால் எண்பத்தெட்டு (88)ப் பங்கு (ஒரு பங்கு = 4 ஏக் 01 றுட் 07 பேட். சுமார் 375 ஏக்கர்) காணிகள் வழங்கப்பட்டுள்ளன. அக்காணி இன்றும் ''ஊழியக்காணி'' என்றே அழைக்கப்பட்டு வருகின்றது. அவை துறைநீலாவணைக் கிராமத்தினருகில் உள்ள குளவெளிக் கண்டம், அன்னமலைப் பகுதியைச் சேர்ந்த கவுடாதீவுக் கண்டம், கல்முனை சவளக் கடைப் பகுதியைச் சேர்ந்த மணல்மேட்டுக் கண்டம் என்னும் இடங்களில் நெற்காணிகளாகத் தட்டு மாறும் முறையில் கூட்டுப் பங்காளிகளால் செய்கை பண்ணப்பட்டு வருகின்றன. எண்பத்தெட்டுப் பங்குகளும் பல பெயர்களைக் கொண்டு விளங்குகின்றன. இவ்வயல்களின் நிலையியல் தன்மை நோக்கி சுழற்சி முறையில் செய்கை பண்ணப்படும். ஒருவர் ஒரு குறிப்பிட்ட வயலைச் சொந்தமாக உரிமைகோர முடியாது. இதுவே தட்டுமாறும் முறையாகும்.

உரிமைப் பங்குகள் பிரிவிடாத பங்குகளாக உறுதி மாற்றம் செய்யப் படுகின்றன (தில்லைநாதன், எஸ்., 2008, பக்.44, 45)

தென்னிந்திய நாட்டு மக்கள் மட்டக்களப்பிற்கு வணிகம், குடியேற்றம், படையெழுச்சிகள் காரணமாக வந்தடையத்தக்கதாக மட்டக்களப்புத் துறை, கந்தபாணத் துறை ஆகிய துறைகள் அமைந்திருந்தன. இதன் காரணமாகப் பிற்காலத்தில் போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் என்போர் மட்டக்களப்பிற் புகுவதற்கு ஏதுவாக இருந்தது.

## அந்நியர் ஆட்சி

### போர்த்துக்கேயர்

போர்த்துக்கேயர் இலங்கைக்கு வரும் போது அதாவது 16ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கோட்டை, மாயரட்டை, யாழ்ப்பாணம் என இலங்கை மூன்று பிரதான இராச்சியப் பிரிவுகளாக இருந்தது. அத்துடன் மட்டக் களப்பு, திருகோணமலை பிரதேசங்களிலும் சுயேட்சையான மன்னர்கள் அதிகாரத்தைப் பெற்றிருந்தனர். இவை வன்னியர்களாலும் இன்னும் பல பிரதேசத் தலைவர்களாலும் நிருவகிக்கப்பட்டன. போர்த்துக்கேயர் கி.பி. 1622 இல் மட்டக்களப்பைத் தனது ஆட்சியின் கீழ்க் கொண்டுவந்தாலும் தமது ஆட்சி அதிகாரத்தைப் பூரணமாகச் செலுத்த முடியவில்லை. இவர்களது ஆட்சி மட்டக்களப்பில் புளியந்தீவிற்கு மேல் செல்லவில்லை (Tennent, J.E., 1859, pp.454 - 481). மேலும் குவேறோஸ் சுவாமியின் கூற்றுப்படி போர்த்துக் கேயரது அட்டூழியங்களைத் தாங்கொணாத இலங்கையின் மேற்கு வட மேற்குப் பகுதிகளில் வாழ்ந்த முஸ்லீம்களில் ஆயிரக்கணக்கானோர் 1626 இல் கண்டி மன்னனாகிய சேனரதனிடம் அடைக்கலம் புகுந்தனர். அடைக்கலம் புகுந்தவர்களை மட்டக்களப்பின் தென்பகுதியில் வன்னியர்களின் துணை கொண்டு சேனரதன் குடியேற்றினான். ஆனால், கிழக்கில் வாழும் முஸ்லீம் களிடையே அவ்வாறான மரபு வழிக்கதைகள் வழங்கவில்லை என்பது Dennis Mcgilvray போன்ற கள ஆய்வாய்வுகளை மேற்கொண்டவர்களின் கருத்தாகும்.

போர்த்துக்கேயர் சைவக்கோயில்களை இடித்துத்தள்ளினர். இதன்போது மட்டக்களப்பிற் காணப்பட்ட பெரும்பான்மையான கோயில்கள் அழிவுற்றன. போர்த்துக்கேயர் 1627 இல் புளியந்தீவில் கோட்டை ஒன்றையும் கட்டினர் (Tennent, J. E, 1859,pp.454 - 481). மக்களிடமிருந்து நிலவரி, தலைவரி, தென்னைவரி, புகையிலைவரி, மீன்பிடி வரி, ஆயவரி, சந்தைவரி எனப் பலவிதமாக வரிகளை அறவிட்டனர். இவர்களது பிற சமயங்களை அழிக்கும்

செயல்கள், வரி அறவீட்டு முறைகள் போன்ற செயல்களினால் மக்களது எதிர்ப்புகளிற்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தது.

போர்த்துக்கேயர் காலத்தில் தோம்பு முறை ஏற்படுத்தப்பட்டு மாடு, ஆடு, நிலம் என்பவற்றைப் பதிவு செய்தல் நடைமுறைப்படுத்தப்பட்டது. திருமணங்களும் சட்டரீதியாக்கப்பட்டமை முக்கிய அம்சமாகும். இது மதகுருமார்களினாலேயே மேற்கொள்ளப்பட்டது. விவாகப்பதிவு செய்யும் முறையும் இவர்களாலேயே ஆரம்பிக்கப்பட்டதாகும். தற்காலத்தில் விவாகப் பதிவு மேற்கொள்பவரை தோம்புதோர் என்றழைப்பது ஈண்டு எடுத்து நோக்க வேண்டியது.

போர்த்துக்கேயரின் விஸ்பனில் உள்ள ஆவணக் காப்பகத்தில் பிரான்சிஸ்கன் பாதிரிகளினால் இலங்கையில் இருந்து எழுதிய கடிதங்கள் பல உண்டு. இவற்றில் சில தொகுக்கப்பட்டு மொழிபெயர்க்கப்பட்டு 1922 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. அத்தொகுதியில் மட்டக்களப்புத் தொடர்பான கடிதங்களும் காணப்படுகின்றன. 1539 ஆம் ஆண்டிலிருந்து 1542 ஆம் ஆண்டு வரையில் பிதா சைவோ கொய்ம்ப்ரா அவர்களால் எழுதப்பட்ட கடிதங்கள் அத்தொகுதியில் காணப்படுகின்றன. அதில் மட்டக்களப்பு ஒரு தனி இராச்சியமாக இருந்ததாகவும், அம் மன்னனை தான் நேரில் சென்று கண்டதாகவும், அம்மன்னன் போர்த்துக்கேய மன்னனிடம் கோட்டை மன்னனில் இருந்து தனியாக தன்னை விடுவித்துக்கொள்வதற்காகவும், அதற்குப் பதிலாக கப்பல் கட்டுவதற்காக மரங்கள் போன்றவற்றைத் தருவதாகக் கூறிடதாகவும் அவர் விரிவாகக் குறிப்பிடுகின்றார் (சிவராம், 2005, பக். XIV, XV).

மேற்கூறிய தொகுப்பில் மட்டக்களப்புப் பிரதேச மன்னன் போர்த்துக்கேய மன்னனுக்கு எழுதிய கடிதத்தின் பிரதி ஒன்றும் சேர்க்கப்பட்டுள்ளது. இதிலிருந்து 1539 ஆம் ஆண்டுக்கு முன்னரே மட்டக்களப்புப் பிரதேசத்தைப்பற்றிய பரிச்சயம் போர்த்துக்கேயர்களுக்கு இருந்துள்ளது என்பது தெரிகின்றது.

அடுத்தாக டிக்கிரி அபயசிங்க அவர்கள் மொழிபெயர்த்து வெளியிட்ட போர்த்துக்கீஸ் ரெஜிமென் டோஸ் (Portuguese Reguments on Sri Lanka) என்னும் நூல் முக்கியம் பெறுகின்றது. இத்தொகுப்பில் கி.பி. 1582 - கி.பி. 1597 ஆம் ஆண்டுவரையிலான காலப்பகுதியில் எழுதப்பட்ட போர்த்துக்கேய நிருவாக ஆவணங்கள் உள்ளன. அது 1582ஆம் ஆண்டு காலப் பகுதியில் மட்டக்களப்பு மன்னனிடம் இருந்து போர்த்துக்கேயர் 300 அவண (மட்டக்களப்பில் நிலவிய ஓர் அளவுமுறை) நெல்லை திறையாகப் பெற்றதையும் குறிப்பிடுகின்றது.

**ஒல்லாந்தர்**

இவர்கள் இலங்கையில் தாம் ஆண்ட பகுதிகளை ஆறு ஆட்சிப்பிரிவுகளாக வகுத்து நடைமுறைப்படுத்தினர். அவற்றுள் ஒரு ஆட்சி மாவட்டம் மட்டக் களப்பு ஆகும். உண்மையில் அக்காலத்துக் கண்டி மன்னன் போர்த்துக்கேயரை எதிர்ப்பதற்காக அழைத்ததன் பேரிலேயே ஒல்லாந்தர் இலங்கைக்கு வந்தனர். அவர்கள் இலங்கையில் காலடியெடுத்து வைத்த முதலிடம் மட்டக்களப்பில் போர்த்துக்கேயர் கட்டிய கோட்டையே. பின்னர் 1638 இல் ஒல்லாந்துப் படையினர் போரில் வெற்றியீட்டி, ஒரு சில நாட்களிலேயே இக்கோட்டையைக் கைப்பற்றி ஒரு சிறு கல்லைக்கூட மிஞ்சவிடாமல் அகற்றினர் (Tennent, 1859, pp.454 - 481).

கி.பி. 1638 இல் மட்டக்களப்பு ஒல்லாந்தர்வசம் கிடைத்தாலும் போர்த்துக் கேயர் சந்தித்த எதிர்ப்பை விட பெருமளவு எதிர்ப்புக்களிற்கு ஒல்லாந்தர் முகம் கொடுக்க வேண்டியிருந்தது. இவர்களது செயற்பாட்டினால் இங்குள்ள நிலச்சுவாந்தர்கள், போடிகள் ஆகியோரில் பலர் உயிரிழந்தனர், வன்னியர்கள் சிறைப்பிடிக்கப்பட்டனர்.

ஒல்லாந்த நாட்டைச் சேர்ந்தவரான ஸ்பில்பேர்கன் 17ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வந்திறங்கி கண்டிராச்சியம் சென்றான். மட்டக்களப்பில் வந்திறங்கியபோது அங்கு தர்மகங்காதரன் வன்னிமையாக விளங்கினான். அவனுடைய நிருவாகத்துக்குப் பொறுப்பாயிருந்த முதலியார் ஒருவர் கடற்கரைக்குச் சென்று ஸ்பில்பேர்கனைச் சந்தித்தான். இருசாராரும் பரஸ்பரம் வழங்கினர். அடுத்தநாள் வன்னிமையின் ஏற்பாட்டினால் ஸ்பில்பேர்கனுக்கும் கப்பலில் வந்தவர்களுக்கும் விருந்துபசாரம் நடைபெற்றது. அவர்களை வரவேற்கும் வண்ணமாக மூன்று யானைகள் கால்களை மடக்கி மரியாதை செய்தன என்று சொல்லப்படுகிறது. வன்னிமையைச் சுற்றிநின்ற 1400 வாட்படையினர் வந்திருந்த ஐரோப்பியர்களை மரியாதை செய்துள்ளனர், அதன்பின்னர் அதனை அடுத்த நாட்களில் வன்னியத்தின் ஆதரவோடு ஒல்லாந்தர் கண்டி இராசதானிக்குச் சென்றதாக கூறப்படுகிறது (பத்மநாதன், சி., 2010,ப.10).

கி.பி.1700க்குப் பின் ஒல்லாந்தர் ஓரளவு முறைப்படுத்தப்பட்ட ஆட்சியைக் கொண்டு வந்தனர். கட்டாய மதமாற்றக் கெடுபிடி குறைந்தது. ஒல்லாந்தர் காலத்தில் மதமாற்றச் செயல்கள் முக்கியத்துவம் பெறவில்லை. மட்டக்களப்பைத் தாயகமாகக் கொண்டவர்களே தலைமைப்போடி என்னும் பதவியை வகிப்பதற்கு வழிவிட்டனர். மட்டக்களப்பு கி.பி.1766 இல் வடக்குத் தெற்கு எனப்பிரித்து இரு போடிகளின் கீழ் நிருவாக பரிபாலனம் மேற்கொள்ளப்பட்டது.

மட்டக்களப்புப் பகுதிக்குரிய தலைமைப்போடிகளை மத்திய அரசு நியமிக்க, ஊர்ப்போடிகளைத் தலைமைப்போடிகள் தங்கள் வசதிக்கேற்ப நியமித்து நிர்வாகம் புரிந்தனர். ஊர்ப்போடிகளும் ஊர்களின் பெயர்களால் போடிகளை நியமித்து நிர்வாகப் பணிகளைச் செய்தனர்.

ஒல்லாந்தர் காலத்தில் யாழ்ப்பாணத்திற்கு மட்டக்களப்பில் இருந்து நெல் ஏற்றுமதி செய்யப்பட்டது. மேசன்தொழில், தச்சுத்தொழில் முதலிய வற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு அவை சிறப்புற்றிருந்தன. அனாதைச் சிறுவர்களிற்கு இவர்களால் தோற்றுவிக்கப்பட்ட "ஆர்மன்கோணர்" கல்விச் சாலையின் வதிவிடமும் பெரும்பணி புரிந்தன.

மட்டக்களப்பை அண்டி சுமார் ஐம்பத்தேழு மைல்கள் தூரமுடைய நீர்வழி ஒன்றை உருவாக்கினர். இதனால் உள்நாட்டு வியாபாரம், பிரதான துறைமுகங்களில் இருந்து பொருட்களை ஏற்றுமதி இறக்குமதி செய்து விநியோகித்தல் முதலியன நடைபெற உதவிநல்கினர்.

மட்டக்களப்பு, திருகோணமலைக்குப் பொறுப்பாகவிருந்த ஒல்லாந்த அதிகாரி பீட்டர்.டீ. கிறாவ் என்பவரது ஆண்டறிக்கை (Memories of petter de graeme) 08-04-1676 ஆம் திகதி வெளியிடப்பட்டது. இவ்வறிக்கை மட்டக்களப்பைக் கட்டுப்படுத்துவது தொடர்பாயும் சாதிகள் தொடர்பாயும் பல தகவல்களைத் தெரிவிக்கின்றது.

அடுத்ததாக டச்சுக் காலத்திற்குரிய சமூக ஆவணமாக வருவது ஜேகப் பேணாண்ட் என்பவரால் 1794 ஆம் ஆண்டில் எழுதப்பட்ட அறிக்கையாகும் (Memories of Jacob Burnand) இவ்வறிக்கையில் மட்டக்களப்புச் சமூகம் பற்றிய தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. மட்டக்களப்புப் பூர்வீக சரித்திரம் பற்றிக் கூறுகின்ற நூல்களிலும் ஏடுகளிலும் கல் வெட்டுக்களிலும் காணப்படும் பல விடயங்கள் இவ்வறிக்கையில் உள்ளன.

அடுத்ததாக 1789 ஆம் ஆண்டில் ஒல்லாந்தர் மட்டக்களப்பில் சமூக ஒழுங்கு எவ்வாறு இருக்க வேண்டும் என்பது தொடர்பான பிரகடனம் ஒன்றை வெளியிட்டனர். டச்சு ஆளுனர் வாண்டி கிறாவ் (Van de Graffe) அவர்களின் உத்தரவின் படி இது வெளியிடப்பட்டது. 02-06-1789 ஆம் திகதி தமிழிலும் டச்சுமொழியிலும் அனைத்துப் பகுதிகளிலும் இவ்வாணை ஒட்டப்பட்டது. இவ்வாணையில் கோயில்கள், தோட்டங்கள் உட்பட பல தகவல்கள் கிடைப்பதுடன் மட்டக்களப்புப் பகுதியிலும் சமூக ஒழுங்கை எற்படுத்தும் முயற்சியிலும் அவர்கள் ஈடுபட்டிருந்ததையும் காணக்கூடியதாக உள்ளது.

**ஆங்கிலேயர்**

இலங்கையில் ஒல்லாந்தர்களின் வசமாயிருந்த பிரதேசங்களை ஆங்கிலேயர்கள் போர் புரியாது இரத்தம் சிந்தாது பெற்றுக்கொண்டனர். பிரெஞ்சுப் புரட்சியாளர்கள் ஒல்லாந்து நாட்டின்மீது படையெடுத்துச்சென்று அங்கு வற்றேவியக் குடியரசு என்ற அமைப்பை உருவாக்கினார்கள். அரசன் அங்கிருந்து இங்கிலாந்துக்கு ஓடிவிட்டான். இலங்கைப் பிரதேசங்களை இங்கிலாந்துக்கு ஒரு உடன்படிக்கை மூலம் வழங்கினான்.

கி.பி.1796 இல் கிழக்கிந்தியக் கம்பனி என்னும் பெயரில் இலங்கையிற் புகுந்த ஆங்கிலேயர் கி.பி.1802 இல் மட்டக்களப்பிற்குள் நுழைந்தனர். போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆகிய அந்நியர்களின் ஆட்சியை விரும்பாதது போன்றே போடிகள் முதலானோர் ஆங்கிலேயரின் ஆட்சியையும் விரும்பவில்லை. கி.பி.1803 இல் ஆங்கிலேயர் கண்டி மீது போர்தொடுத்த போது மட்டக்களப்புப் போடிமார் கண்டி அரசனுக்குத் தமது பூரணமான ஆதரவை வழங்கினர். கி.பி. 1804 இல் மட்டக்களப்பில் ஆங்கிலேயருக்கு எதிராக எழுந்த கிளர்ச்சியின் போது ஆங்கிலேயப் படைகள் கெப்ரன். ஜோன்சன் தலைமையில் தீவிர முயற்சியில் ஈடுபட்டு அக்கிளர்ச்சியை அடக்கினர்.

1815-03-02 இல் கண்டி அரசும் ஆங்கிலேயர் வசமாகியது. இவர்களது காலத்தில் மதமாற்றம் முக்கிய இடத்தை வகித்தன. மதம் மாறிய சுதேசிகள் கல்வியிலும் அதிகார நிலையிலும் ஆதிக்கச் சமூகமாக சமூகத்தில் மேலாண்மை பெற்று வாழ்ந்தனர். சமயம் மாறாத, தம்முடன் இணையாத சுதேசிகளைச் சகல வசதிகளிலும் ஒதுக்கினர்.

ஆங்கிலேயர் தமது கட்டளையை நிறைவேற்றக் கூடியவர்களிற்கு வன்னியர் பதவிகளை வழங்கினர். நீதி நிர்வாகத்தில் மாற்றம் ஏற்பட்டன. கிராம நீதிமன்றம் செயற்பட்டது. இது முதலில் மட்டக்களப்பிலும் பின்னர் 1871 இல் நற்பிட்டிமுனையிலும் செயற்பட்டது. இலங்கையை ஐந்து மாகாணங்களாகப் பிரித்து நிர்வாகத்தை மேற்கொண்டனர். அதில் மட்டக்களப்பு கிழக்கு மாகாணத்தில் இருந்தது. இக்காலத்தில் மட்டக்களப்பில் தமிழ்மொழி பேசுவோர் 90 வீதமாக இருந்தது எனக் குறிப்பிடப்படுகின்றது (Canagaratnam, S.O., 1921,ப.18).

ஆங்கிலேயர்காலத்தில் கி.பி. 1880 இல் மட்டக்களப்பு நகரில் மயானம் ஸ்தாபிக்கப்பட்டது. 1855 இல் மட்டக்களப்பில் பொது நூல்நிலையம், 1876 இல் திருக்கோயில் வாடிவீடு, 1883 இல் கிரான்குளத்தில் வாடிவீடு என்பனவும் தோற்றம் பெற்றன. மட்டக்களப்பில் இருந்து பதுளைக்குத் தபாற்சேவை ஆரம்பிக்கப்பட்டது. அதன் பின்னர், நாடு பூராகவும் தபாற் சேவை செயற்பட்டது.

1803 - 1816 ஆம் ஆண்டுகளின் மட்டக்களப்புப் பிரதேசத்தில் ஆங்கிலேயர் ஆட்சியில் கலக்டர்களான ஜிவல் (Jiwell) சோவர்ஸ் (Sawers) போன்றோரின் அறிக்கைகள் ஆவணக் காப்பகத்தில் வைத்துப் பேணப் படுகின்றன. இவற்றில் 1801-1803 காலப்பகுதியில் ஆங்கில அரசின் நிர்வாகக் கடிதங்கள் பிரகடனங்கள் மூலமாகவே மட்டக்களப்பில் அக் காலத்தில் ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக இடம்பெற்றபெரும் ஆயுதக் கிளர்ச்சி பற்றிய தகவல்களை அறியக்கூடியதாக உள்ளன.

மட்டக்களப்பு பெருமளவு வருமானத்தை அரசுக்கு ஈட்டிக்கொடுக்கும் ஒரு மாவட்டமாகத் தொடர்ந்தும் இருந்துள்ளது. காணிவிற்பனை குத்தகை, போடிமாரிடமிருந்து பெறப்பட்ட தானிய வரி, உப்பு விற்பனை வரி முதலியவற்றாலும் இங்கிருந்து நெல், தேங்காய், கொப்பறா, தும்பு, தேன், கோப்பி, மெழுகு, கருவாடு, முதிரை, தேக்கு, கருங்காலி முதலிய ஏற்றுமதியாலும் வருமானம் அரசுக்கு கிடைக்கப்பட்டன. ஆங்கிலேயர்தமது நிர்வாகச் செயற்பாட்டுக்காக (1) கோறளை (2) ஏறாவூர்(3) உறுகம் (4) மண்முனை (5) எருவில் (6) போரதீவு (7) கரவாகு (8) சம்மாந்துறை (9) அக்கரைப்பற்று (10) சாக்காடு (11) நிந்தவூர்(12) விந்தனை (13) பாணமை என்னும் 13 உபபிரிவுகளைத் தோற்றுவித்து ஆட்சி நிருவாகம் புரிந்தனர்.

### iii. இலங்கை வரலாற்றில் மட்டக்களப்புத் தமிழரது இடம்

இலங்கையின் மனித சமூகத்தின் தொன்மை பற்றிக் கூறும் நூல்களில் முக்கியமானதாக இராமாயணத்தைக் குறிப்பிடலாம். பின் வந்த ஆய்வாளர் களின்படி இராவணனது காலம் கி.மு. 6000 ஆண்டு எனக்கூறப்படுகிறது (Vyas, 1967, p.07). இலங்கையின் திரிகூட பர்வதம் என்னும் மலையின் உச்சியில் விளங்கிய இலங்கா புரியை இயக்கர்கோன் ஆகிய இராவணன் தனது தலைநகரமாகக் கொண்டான் என இராமாயணம் கூறுகின்றது. இராவணன் தனது தலை நகரில் இருந்து அந்தரங்கமாக வெளிச் செல்வதற்கு ''இராவண எல்லா'' என்ற நீளமான குகைக் குன்றினை உபயோகித்ததாகக் கூறப்படுகிறது (Major Forbes, 1740, p.49). இராமாயணத்தில் இராமர் சஞ்சரித்த இடமாகிய இலங்கை பற்றி WP Pargiter என்பவர் தெரியப்படுத்துகின்றார் (நடேசபிள்ளை, சு., 1951, பக்.02). எனினும் இராவணன் பற்றியும் இராமாயணம் பற்றியும் உள்ள குறிப்புகள் பெரும்பாலும் ஐதீகங்களாகவே காணப்படுகின்றன. இவற்றினைத் தக்க வரலாற்று ஆதாரங்களோடு சான்று படுத்த முடியாதுள்ளது. இவை ஐதீகங்கள் என்றும் உண்மைச் சம்பவம்

என்றும் தொடர்வாதங்கள் இன்றும் எழுந்தவண்ணமேயுள்ளன. மேலும் கி.பி 8ஆம் நூற்றாண்டு காலத்தில் எழுந்த தேவாரப்பதிகங்களிலும் இராவணன் பற்றிய தரவு தரப்படுகின்றது. இவற்றில் திருகோணமலை பற்றிய பாடல்களும் உள்ளன. ஆனால் தேவாரக் குறிப்பினால் ஐதீகமான கதைகள் வரலாறாகி விடமாட்டாது. ஏனெனில் தேவாரப் பதிகம் பாடுவோர் தம் வாழ்க்கைக் காலத்தில் தாம் அறிந்த புராணக்கதைகளில் காணப்பட்ட இறைவனின் கருணையை நினைந்துருகிப் பாடுகின்றனரேயன்றி அவர்கள் அப்புராண இதிகாசங்களில் பங்குகொண்டவரல்லர். ஆகவே இராமாயணத் திற்கான இச்சான்றுகளை இலங்கையில் மனித சமுதாயத்தின் தொன்மைக்குச் சான்றாகக் கொள்வது பொருத்தமாகாது.

இலங்கையின் வரலாறு பற்றிக் கூறும் சிங்கள நூலான ராஜவலிய கி.மு. 3544 இல் ஏற்பட்ட கடற்கோள் இலங்கையின் பெரும் பகுதியை அழித்தது எனக் கூறுகிறது. இதன்போதே திருக்கோணஸ்வர ஆலயமும் இக்கடற் கோளினால் கடலில் மூழ்கியது (தங்கேஸ்வரி, க., 2007, பக்.30, 69). இச்சான்றுகளின்படி கி.மு.3544க்கு முற்பட்ட காலப்பகுதியில் இருந்தே மனித சமுதாயம் குறிப்பாக சைவ மதத்தைத் தழுவிய மக்கள் சமுதாயம் இலங்கையில் காணப்பட்டது என இவர்கள் தெரிவிக்கின்றனர். ஆனால் இது வரலாற்று நெறிக்குப் புறம்பானது. ஏனெனில் கிறிஸ்துவுக்கு முன் மூன்றாம் நூற்றாண்டுக்கு முன்பு விக்கிரகங்களைத் தாபித்து வழிபாடு செய்ததற்கான கோயில்கள் இருந்தமைக்குச் சான்றுகள் இல்லை. வேதங்களும் கோயில்களைப் பற்றி எதுவும் கூறவில்லை.

இலங்கையில் தற்போது பிரபலமாகக் கூறப்படுகின்ற வரலாற்று நூல் களில் பாளி மொழியில் எழுதப்பட்ட மகாவம்சம், தீபவம்சம், சூளவம்சம் ஆகிய நூல்களைக் குறிப்பிடலாம். இந்நூல்கள் கி.பி. 4 ஆம், 5 ஆம் நூற்றாண்டுக் காலப்பகுதியில் உருவாக்கப்பட்டவை. இந்நூல்களின் கருத்துப் படி இலங்கைத் தமிழரின் வருகை விஜயனின் வருகைக்குப் பின்பே ஏற்பட்ட தாகக் கூறப்படுகிறது. இவற்றில் மகாவம்சம் என்னும் நூலை நோக்கு வோமாயின் (இந்நூல் இலங்கையின் வரலாறு கூறும் முதல் நூலாகத் தற்போது கருதப்படுகின்றது) இலங்கை வரலாறு விஜயன் வருகையிலிருந்தே அதாவது கி.மு. 543 இல் இருந்தே ஆரம்பிக்கின்றது (Sheligmen-Cabridge, 1911, pp.419,430). ஆனால் இதற்குப் பல நூறு வருடங்களுக்கு முன்னரே இலங்கையில் திராவிடர்களான இயக்கர், நாகர் என்போரின் ஆட்சி நடை பெற்றுள்ளது. உதாரணமாக இலங்கையின் பேரரசனாக இயக்கர்கோன் ஆகிய இராவணனின் ஆட்சி குறிப்பிடத்தக்கது. மேலும், Sir James Tennent 1859 ஆம் ஆண்டு வெளியிட்ட History of Ceylon (pp.05-10) என்னும் நூலில்

விஜயன் வருகைக்கு 200 வருடங்களுக்கு முன்பே மக்கள் வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது. Lange, (2007, pp. 26-27) கி.மு 1200 ஆண்டளவில் இலங்கைக்கு பாண்டியர் வருகை காணப்பட்டதாகக் கூறுகிறார். ஆகவே மேற்குறிப்பிட்ட நூலாதாரங்களின்படி இலங்கையில் தமிழரின் தொன்மை விஜயனின் வருகைக்கு முன்னரே காணப்பட்டது எனக்குறிப்பிடலாம். இவ்வாதாரங் களின் துணைகொண்டு தற்காலத்தில் பிரபலமாகக் கூறப்படும் இடையிட்ட வரலாறான சிங்களவரே முதன்முதலில் இலங்கைக்கு வந்தன ரென்பதை நிராகரிக்கலாம்.

எல்லாளன் என்னும் தமிழ் மன்னன் (கி.மு.145 - கி.மு.100) இலங்கை நாட்டின் பேரரசனாக நீதிவழுவா ஆட்சி செலுத்தியதாக மகாவம்சம் கூறுகின்றது. அதேவேளை பொய்யான நம்பிக்கை உடைய பைசாச மதத்தைக் (இந்து மதத்தை) கடைப்பிடிப்பவன் எல்லாளன். ஆதலால் அவனிடம் சிறப்பான ஆட்சியைக் காணமுடியாதெனவும் கூறுகின்றது. மகாவம்சம், மகாநாம தேரர் என்பவரால் கி.பி.5 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. இந்நூல் இலங்கை தமிழ் நாட்டுடன் ஏற்படுத்தியிருந்த அரசியல், சமூக, கலாசாரப் பண்பாட்டுத் தொடர்பினையும் அதன் தொன்மையினையும் அறிய உதவுகின்றது. எனினும் ஈழவரலாற்றை முழுமையாக இந்நூல் தெரியப்படுத்த வில்லை. தேவநம்பிய தீசன் முதலாக கண்டியரசனாகிய கீர்த்தி சிறிராச சிங்கன் ஈறாக ஈழவரலாற்றைத் தொடர்ச்சியாகக் கூறுகின்றது. 13ஆம் நூற்றாண்டில் வட இலங்கையில் சிறப்புடன் நிலைத்திருந்த யாழ்ப்பாண இராச்சியத்தைப் பற்றி இதில் கூறப்படவில்லை.

மற்றுமோர் பாளி நூலான தீபவம்சம் கி.பி.4 ஆம் நூற்றாண்டில் தொகுக்கப்பெற்ற நூலாகும். கிடைத்துள்ள இலக்கியங்களில் காலத்தால் இது முற்பட்டதாகும். இந்நூல் தொகுக்கப்பட்ட காலம் முதலாக இலங்கையில் ஆட்சி செலுத்திய மன்னர்களின் வம்சப்பட்டியலைத் தருகின்றது. இது இலங்கையில் இயக்கர், நாகர் என்போர் வாழ்ந்தமை பற்றிக் குறிப்பிடுகின்றது. இதன்மூலம் அநுராதபுரத்தின் அரசியல் பண்பாடு பற்றி அறிய உதவுகின்றது. இதில் தமிழர்தொன்மையைப் பற்றி முறையாகக் கூறப்படாவிடினும் பௌத்தசங்கத்தின் செல்வாக்கிற்கு உட்படாது உருவாக்கப்பட்ட நூலாக அமைந்திருப்பது சிறப்பானது.

இன்னுமோர் நூலான சூளவம்சம் தர்மகீர்த்தி என்பவரால் தொகுக்கப் பட்டது. இது பலரால் எழுதப்பட்ட நூலாகும். கி.பி.4ஆம் நூற்றாண்டில் இருந்து கி.பி.15ஆம் நூற்றாண்டு வரைக்குமான இடைப்பட்டகால இலங்கை வரலாற்றை அறிய முடிகின்றது. இதன்படி இலங்கை வரலாறு மகாசேனன் ஆட்சியுடன் ஆரம்பிக்கின்றது. இந்தநூலில் முதல் முதலாகக் கொண்ட

தென்னிந்தியத் தொடர்பு, பண்பாட்டுக்கலப்புகள், பாண்டியர் - சிங்களவர் நட்புறவுகள், சோழர் - சிங்களவர் பகைமை உறவுகள் போன்ற வரலாற்றுத் தரவுகளைப் பெற உதவுகின்றது. மேலும் கி.பி.1284 இல் ஆரியச் சக்கர வர்த்திகளில் ஒருவன் இலங்கை மீது படையெடுத்து வந்ததையும் அவன் இலங்கையின் பலமிக்க கோட்டையுள் புகுந்து புனித தந்தத்தையும், செல்வங்களனைத்தையும் கவர்ந்து சென்று பாண்டிய மன்னனாகிய குலசேகர மன்னனுக்குக் கொடுத்தமை போன்ற செய்திகளையும் அறியக்கூடியதாக உள்ளன. அக்காலத்தில் அநுராதபுரம் சிங்கள நாட்டுத் தலை நகராய் விளங்கியது. தமிழ் அரசர்களும் காலத்துக்குக் காலம் ஆண்டு வந்துள்ளனர்.

இலங்கையின் தமிழர்வரலாறு பற்றித் தெரிவிக்கும் தமிழ் நூல்களில் வையாபாடல், கைலாயமாலை, யாழ்ப்பாண வைபவமாலை, தக்ஷிண கைலாயபுராணம், கோணேசர் கல்வெட்டு, மட்டக்களப்பு மான்மியம் முதலிய நூல்களைக் குறிப்பிடலாம். இலங்கையின் தமிழர்தொன்மை பற்றிக் கூறிய தமிழ் மொழி நூல்களுள் இராச முறை, பரராசசேகரன் உலா, பெரியவளமைப் பத்ததி, குளக்கோட்டன் கம்ப சாஸ்திரம், போன்ற நூல்களையும் விசேடமாகக் குறிப்பிடலாம். இராச முறை, பரராசசேகரன் உலா ஆகிய இரண்டும் இன்று இல்லாமல் அழிந்து விட்டன. அதனைப் போன்றே கோணேசர் கல்வெட்டுக்கு ஆதாரமாக இருந்த பெரிய வளமைப்பத்ததி, குளக்கோட்டன் கம்ப சாஸ்திரம் என்பனவும் இன்று இல்லை (பத்மநாதன், சி., 2004, ப.33).

இலங்கை மக்களின் தொன்மை பற்றிக் கூறும் நூல்களில் வையாபாடல் நூல் ஈழத்தமிழர் வரலாற்று நூல்களில் மிகத்தொன்மை மிக்கது. இதனை வையாபுரி ஐயர் அவர்கள் இயற்றியுள்ளார். இவர் முதலாம் சங்கிலி மன்னன் காலத்து (கி.பி. 1519 - கி.பி. 1561) அவைக்களப்புலவராக விளங்கியவர். இந்நூல் பறங்கியரைப்பற்றிக் கூறுவதனால் இந்நூற் காலத்தை கி.பி.17ஆம் நூற்றாண்டு காலமாகக் கொள்ளலாம். இராமாயணச் செய்திகள், மாருதப் புரவீகவல்லி, யாழ்ப்பாணன் பற்றிய செய்திகள், வன்னியர் வரலாறு அவர்களது வீரச்செயல்கள் என்பனவும் கூறப்பட்டுள்ளன. யாழ்ப்பாணன் வட இலங்கையில் உள்ள மணற்றிடரை விபீஷணனிடமிருந்து பெற்றான் எனவும் கூறுகின்றது.

அடுத்ததாக கைலாய மாலை என்னும் நூலைக் கூறலாம். இந்நூல் 16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த முத்துராசகவிராயர் என்பவரால் எழுதப்பட்ட தாகும். இந்நூலில் ஆரியச் சக்கரவர்த்திகளான சிங்கையாரிய மன்னர்களது வரலாறு, யாழ்ப்பாண அரசின் வளர்ச்சி, மாருதப்புரவீக வல்லி - வாலசிங்கன், யாழ்ப்பாணன் ஆகியோரைப்பற்றிய செய்திகள், நல்லூர் கைலாசநாதர் கோயில் வரலாறு என்பன கூறப்படுகின்றது. பாளி நூலான

சூளவம்சமும், கைலாயமாலையும் ஆரியச்சக்கரவர்த்திபற்றிக் கூறுகையில் ஒற்றுமை காணப்படுகின்றது. சூளவம்சம் கூறும் ஆரியச்சக்கரவர்த்தியும், கைலாயமாலை கூறும் சிங்கையாரியனும் ஒன்றேயெனக் கொள்ளலாம். ஏனெனின் ஆரியச்சக்கரவர்த்தி, சிங்கையாரியன் என்னும் விருதுகளை யாழ்ப்பாண மன்னன் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் யாழ்ப்பாண வைபவ மாலை என்னும் நூலைக் கூறலாம். அது ஒல்லாந்தர்காலத்தில் மயில்வாகனப் புலவரால் எழுதப்பட்டது. இந்நூல் வையாபாடல், கைலாயமாலை, இராசமுறை, பரராசசேகரன் உலா ஆகிய நான்கு நூல்களையும் ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டதாகும். உக்கிரசிங்கன்- மாருதப்புரவீகவல்லி, யாழ்ப்பாணன், விஜயராசன் ஆகியோர் பற்றிய செய்திகள் இந்நூலின்கண் குறிப்பிடப்படுகின்றன. பொதுசன வழக்கில் உள்ள வரலாற்றுக் கதைகளும், கி.பி.1467 - கி.பி.1619 காலப்பகுதியில் ஆட்சி புரிந்த மன்னர்கள் பற்றிய சுருக்கமான செய்திகளும் தரப்பட்டுள்ளன. 13ஆம் நூற்றாண்டில் காணப்பட்ட ஒரு தமிழ் இராட்சியம் பற்றியும், வன்னியர்கள் என்னும் பல குறுநில மன்னர்களின் வளர்ச்சி பற்றியும் தெரிவிக்கின்றது. இந்நூல் ஈழத்தமிழ் வரலாறு பற்றிய பதிவு ஆவணமாகக் கொள்ளப்படுகின்றது.

அடுத்ததாக தமிழரின் தொன்மை பற்றிக் கூறும் இலக்கியமாகக் கோணேசர்கல்வெட்டு அமைந்துள்ளது. கோணேசர் ஆலயம் பற்றியும் அதனை நிர்வாகம் செய்யும் விதிமுறைகள் பற்றியும் விரிவாக பெரிய வளமைப்பத்ததியில் பொறித்து வைக்கப்பட்டிருந்தது. அப்பத்ததியில் உள்ள விடயங்களை விளக்கி கவிராஜவரோதயர் பாடியுள்ள பாடல்களும் உரை நடைப்பகுதியுமே கோணேசர் கல்வெட்டாகும்.

கைலாச புராணமும் கோணேசர்கல்வெட்டும் காலத்தால் வேறுபட்டவை. கைலாச புராணம் காலத்தால் முற்பட்டது. கோணேசர் கல்வெட்டுக் காலத்தை அறிஞர்கள் 17ஆம் நூற்றாண்டாகக் கொள்வர். கைலாச புராணத்தின் தொடர்ச்சிதான் கோணேசர் கல்வெட்டு எனக் குறிப்பிடுவதற்கு மேற்படி இரு நூல்களிலும் காணப்படும் செய்திகள் ஒத்துக்காணப்படும் அதேவேளை இரு நூல்களது காப்புச் செய்யுளும் ஒன்றாகும்.

திருகோணமலைப் பிரதேசத்தில் உள்ள சாசன வழக்காறுகளையும் அவற்றின் பொருள் மரபினையும் ஆதாரமாகக் கொண்டமைந்ததே கோணேசர் கல்வெட்டு. கைலாச புராணம் கோணேசர் கோயில் சிறப்புற்று விளங்கிய காலத்திலேயே எழுதப்பட்டது. கோணேசர் கோயிலைப் போர்த்துக்கீசர் இடித்தழித்த பின்பு அதன் உடைமைகளும் சேவைகளும் சீரழிந்தன. இவ் வேளையில் உருவாக்கப்பட்டதே கோணேசர்கல்வெட்டு.

சென்ற காலத்து நிகழ்ச்சிகளையும் தற்கால வழமைகளையும் தொகுத்துக் கூறும் நூலாக இது அமைந்துள்ளது. இந்நூல் திருகோணமலைப் பிரதேசத்து இந்துமத சமூகம், வன்னியர்களின் ஆட்சி, கோயிலுக்கு வழங்கிய நன் கொடைகள், குடியேற்றங்கள், குளக்கோட்டு மன்னன் கோயிலுக்குப்புரிந்த திருப்பணிகள், கயவாகுராஜன் செய்த திருப்பணிகள் போன்ற பல விடயங் களைக் கூறுகின்றது. அத்துடன் வழக்காறுகளையும், பிற ஆவணங்களையும் ஆதாரபூர்வமாகக் கூறுகின்றது. மேற்கூறப்பட்ட ஆதாரங்கள் ஈழத்துத் தமிழர்களின் தொன்மையைக் கூறும் அதேவேளை அவர்களின் செழிப்பான ஆட்சிமுறைக்கும் சான்றுகளாகின்றன.

மேலே குறிப்பிட்ட நூல்களின்படி மட்டக்களப்பு வரலாற்றுப் பின்னணியை நோக்கினால் இந்தியாவிலிருந்து காலத்துக்குக் காலம் மக்கள் வந்து மட்டக் களப்புப் பிரதேசத்தில் குடியேறியதாகக் கருதமுடிகிறது. ஏற்கனவே இங்கு பழங்குடி மக்கள் வாழ்ந்திருந்தாலும் குடியேறியோரும் தமக்கென ஆட்சி முறையை நிறுவிக்கொண்டனர். பழங்குடியினருக்கும் குடியேறியோருக்கும் இடையே இடைக்கிடையே சண்டைகளும் நிகழ்ந்துள்ளன. சமூகத்தில் செல்வாக்குப் பெற்றோர் ஓர் அரசை நிறுவிக்கொண்டனர். வலிமை குன்றி யவர்கள் வலிமை படைத்த அரசனின் கீழ் வாழ்ந்தனர். இவ்வகையில் மட்டக்களப்புப் பிரதேசமானது முறையே உறுகுண றட்டையின் கீழும், தமிழ் மன்னர்களின் கீழும், பின்னர்கண்டி அரசின் கீழும் இருந்துள்ளது. நிலவுடமைச் சமூகமே (அவர்கள் கொண்ட நிலமே அவர்களது, வாழ்க்கை அந்தஸ்து என்பவற்றைத் தீர்மானித்தது) மட்டக்களப்பில் காணப்பட்டது.

இலங்கையில் இயக்கர், நாகர், வேடர் ஆதிக்குடிகளாக இருந்துள்ளனர். இலங்கையில் வேடர்களின் பூர்வீக இடங்களாக விந்தனை, வெல்லச, மகியங்கண, அம்பாறை, திருக்கோயில், தமண, குமண, நுவரச, நில்கல, தெரணியகல, பிபில, சிப்பிமடு, உறுகாமம், உன்னிச்சை, தும்பாலை, மகாஓயா, களுவங்கேணி, பனிச்சங்கேணி, வாகரை, கதிரவெளி முதலியன கொள்ளப்படுகின்றன. சில ஆய்வாளர்கள் நாகர், இயக்கர் ஆகியோர்களை வேடர்கள் எனவும், இவர்களுடன் முண்டர் எனப்படும் ஒரு சமூகமும் காணப்பட்டதாகக் கூறுகின்றனர் (செல்வராஜகோபால், க.தா., 2006, பக்.37). இயல் இரண்டில் இயக்கர், நாகர், பற்றி சற்று விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இலங்கையின் பெரும் பகுதிகள் தொல்காலப் பாறைகளைக் கொண்ட மைந்தவை. மட்டக்களப்புப் பிரதேசம் பளிங்குப்பாறைகளைப் பெரும் பகுதியாகக் கொண்டவை. தொல்காலப்பாறைகள் உருமாற்றத்திற்கு உட்படும் போது பளிங்குப்பட்டடைப் பாறைகள் ஆகின்றன எனக் கூறுவார்கள். எனவே ஈழம் தொன்மை பெற்றுள்ளதைப்போன்றே மட்டக்களப்பும்

தொன்மை பெற்றது. கற்காலம் கி.மு. 35000 - கி.மு. 5000 எனக்கொள்ளப் படும் (இதனைப் பொதுவாக கி.மு 28000 ஆண்டுகளெனவும் கருதலாம்) மட்டக்களப்புப் பிரதேசத்திலே காணப்படும் கற்காலத்தடயங்களும் தொன்மைக்குச் சான்றாக விளங்குகின்றன (Mendious, 1948, pp.3, 45).

### iv. மட்டக்களப்பின் வரலாற்று ஆதாரங்களான கல்வெட்டுக்கள்

மட்டக்களப்பில் பெரும்பாலும் காணப்படும் கல்வெட்டுக்கள் பனை யோலையில் எழுதப்பட்ட ஓலைச் சுவடிகளே. எனினும் ஒரு சில பாறையில் பொழியப்பட்ட கல்வெட்டுகளும் கள ஆய்வில் இனங்காணப்பட்டன. அவையாவன திருக்கோயில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தில் காணப்படும் கல்வெட்டுக் கொண்ட இரு கற்றுண்களாகும். கல்வெட்டுக்களில் காணப்படும் விடயங்கள் செய்யுள் நடையிலும் உரைநடையிலும் அமைந் துள்ளன. கல்வெட்டுக்கள்,செப்பேடுகள் முற்காலத்தில் அரசர்களினதும், பிறதலைவர்களினதும் மெய்க்கீர்த்திகளை அறிவிப்பதற்கும்,கோயில் நடைமுறைகளையும், நன்கொடைகளையும், அரியநிகழ்வுகளையும், வீரச் செயல்களையும், நாடு நகர வரலாறுகளையும் கூறுவதற்கும் பயன்படுத்தப் பட்டன.

இக் கல்வெட்டுத் தரவுகளின்படி மட்டக்களப்பின் பண்டைய சமுதாயமானது அக்கால மன்னர்களின் மேலாண்மையாலும், கோயில்கள் வாயிலாகவும், சமூக அமைப்பின் கட்டுப்பாடுகளாலும், ஒழுங்கானமுறையில் வந்திருப்பதைக் காணலாம்.

#### பூர்வசாதிக் கல்வெட்டு

இக்கல்வெட்டில் பண்டையசமூகம் பற்றிக்குறிப்பிடப்படுகின்றது. குறுமண் வெளி ஆறுமுகபிள்ளை வ.வி. சாமித்தம்பி என்பவரால் 1861 ஆம் ஆண்டு ஆனி 4 இல் பிரதிசெய்யப்பட்ட ஓலைச் சுவடி ஒன்றில் பூர்வசாதிக் கல்வெட்டு ஒன்று காணப்படுகின்றது. அக்கல்வெட்டில்

*செப்பினார் கலிகடந்துஎண்ணூறு ஆண்டில் நாகர்*
*ஒப்பிட இலங்கைசேர்ந்து இயக்கரை உரிமைகொண்டு*
*தப்பிடா தரசுசெய்யசதாகுண விஜயன் ஈறாய்*
*வைப்புடன் பூர்வசாதிவரவெல்லாம் புகலலுற்றேன்*

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் சா.இ. கமலநாதன், கமலாகமலநாதன் (2005, பக்.57) ஆகியோர் அதனை பின்வருமாறு பாடபேதங்களுடன் குறிப்பிடுகின்றனர்:

*செப்பினன் கலிகடந்துஎண்ணூறு ஆண்டில் நாகர்*
*ஒப்பிட இலங்கைசேர்ந்து இயக்கரைஉரிமைகொண்டு*
*தப்பிடாதரசுசெய்யசதாகுணவிசயனாலே*
*வைப்புடன் கலிங்கர்வங்கர்வரவெல்லாம் புகலலுற்றேன்.*

ஆயினும் மட்டக்களப்பு மான்மியம் அக்கல்வெட்டுப் பற்றிக்குறிப்பிட வில்லை.

**சாதியியல் கல்வெட்டு**

கி.பி. 1215-1255 ஆண்டுகாலப் பகுதியில் பொலன்னறுவையில் இருந்து மட்டக்களப்பை ஆண்ட கலிங்கமாகோன் மன்னனால் வழங்கப்பட்ட ஆணைகளைக் கூறும் கல்வெட்டு இதுவாகும். இதனை மாகோன் கல்வெட்டு எனவும் கூறுவர். இக்கல்வெட்டில் சைவசமயத்தை வளர்த்து, சிவ ஆலயங்கள் சிறந்திலங்க ஊழியங்கள் வகுத்தமுறைகளையும் பணிகளையும் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

*சொல்லரிய விளக்கேற்றல் பூவெடுத்தல்*
*தூசகற்றல் சாணமிடல் அணிவிளக்கல்*
*நல்லமலர் மாலைகட்டல் மேளமீட்டல்*
*நற்சந்தன மரைத்திடுதல் நெல்லுக்குத்தல்*
*துல்லியமாய் விழாச்சிவிகை ஏந்திச் செல்லல்*
*தூணிகட்டல் அமுதுவைத்தல் முதன்மைபாப்பான்*
*வல்லபதம் நீர்வார்த்தல் அகத்தில் தொண்டு*
*புரியுமென்று மாகோனும் வகுத்துப்பின்னும்*

என அரனூழியம் பணிபற்றி கூறப்படுகின்றது (சாதியியல் கல்வெட்டு, 1821). இதனை அரனூழியம் வகுத்தகல்வெட்டு என்றும் கூறுவர். எனவே மாகோன் கல்வெட்டானது சாதியியல் கல்வெட்டு, அரனூழியம் வகுத்த கல்வெட்டு என இரு பிரிவுகளை உடையது. இக்கல்வெட்டுப் பாடல்களில் கண்டிமன்னன் விமலதர்மனையும், ஒல்லாந்து மன்னனையும் விழித்துக் கூறுவதாகக் காணப்படுகின்றது. எனவே இக்கல்வெட்டின் காலம் 18ஆம் நூற்றாண்டு எனக் கூறலாம். இக் கல்வெட்டின் மூலம் மட்டக்களப்பில் அக்காலத்தில் காணப்பட்ட நடைமுறைமொழி தூயதமிழ் மொழி என்பதும், வழிபட்ட நெறி சைவநெறி என்பதும் புலனாகின்றது.

**போடி கல்வெட்டு**

போடி கல்வெட்டில் மட்டக்களப்பின் இயற்கைச் சிறப்பியல்புகள், போடி நிர்வாகமுறை, மண்முனைப் பற்றுச் சிற்றரசு ஆதியன பற்றியும் குறிப்பிடப் படுகின்றது (நடராசா, F.X.C., 1998, பக்.93 - 96). வன்னிமை மரபும்

அவர்களின் தலைமையும் குறிப்பிடப்படுகிறது. வன்னிமை என்னும் சொல் வடக்கில் வன்னியரிடத்தும் கிழக்கில் முக்குவரிடத்தும், பொதுவாக வேடரி டத்தும், வதனமார் என்னும் மந்தை மேய்த்த பழமைக் குடியினரிடத்தும் உபயோகத்தில் இருந்ததாக அறியமுடிகின்றது. வன்னிமை என்னும் சொல்லானது பட்டப்பெயர் என்றே ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இப் பட்டப் பெயரானது வன்னியர் என்னும் மக்கள் குழுவின் படைத்தலைவனாக இருந்து சிற்றரசன் என்னும் நிலையைப் பெற்றவனுக்குரியது. மேலும் காலப்போக்கில் வன்னியர் என்னும் சொல்லானது வரட்சி வலயத்திலுள்ள மிகப்பரந்த பிரதேசத்தில் காணப்பெற்ற குறுநிலப்பிரிவுகளில் பரம்பரை உரிமையாக ஆட்சிபுரிந்த அதிபர்களைக் குறிப்பிடுவதற்கு பயன்படுத்தப் பட்டது (பத்மநாதன், சி., 2003, பக்.70-71,88).

## பெரிய கல்வெட்டு

இதன்கண் உலகத்தோற்றம், மூவேந்தராட்சி ஆகியன சொல்லப்படுகின்றன. தென்னிந்தியாவில் இருந்து கலிங்கன், மாயரணாசலன் படையுடன் கப்பலில் வந்து மட்டக்களப்பில் இறங்கி அங்கு அரசாண்டிருந்த திமிலரைத் துரத்தி அரசைக் கைப்பற்றியதாகக் கூறப்படுகின்றது. அத்துடன் மாயரணாசலனால் குககுலம் தோற்றம் பெற்றதாகவும் இது நடந்தது கலியுக ஆண்டு 3030 எனவும் கூறப்படுகின்றது (நடராசா,F.X.C., 1998, பக்.80,83).

## பங்கு கூறும் கல்வெட்டு

இக்கல்வெட்டில் ஆலய வழிபாட்டுக் காலத்தில் முட்டிகொடுத்து குடிமக்களை சமூகத்தில் கௌரவிக்கும் மரபு இருந்தமை பற்றிக் குறிப்பிடுகின்றது. மட்டக்களப்பில் வாழ்ந்தசாதியினர் பற்றியும் அச்சாதிகள்குடிகள் பற்றியும் ஆலய வழிபாடுபற்றியும் தெரிவிக்கப்படுகின்றது. உதாரணமாக படையாட்சி குடி, பணிக்கன் குடி, சிங்கன் குடி, எனவும் சாதிவரிசையில் வேளாளர், கோயிலார், பண்டாரம், குயவர், கொல்லர், கோனார், தொழுவர், முதலி, செக்கன், சாணார், ஈரங்கொல்லி, ஈட்டியர், பள்ளர், வாரந்தட்டி, மாலை தொடுப்பார், கடையர், துரும்பர் எனவும் கூறப்படுகின்றன.

## பாண்டியகுல விருதுக் கல்வெட்டு

இது ஓலைச்சுவடிகளில் கல்வெட்டு எனவும், செப்பேடு எனவும் பெயர் பெற்றுக் காணப்படுகின்றது. ஒவ்வொரு சாதியினருக்கும் எவையெவை விருதாக இருக்கவேண்டும் என வரையறுத்துக் கூறப்பட்டுள்ளது. வழங்கப் பட்ட தத்தம் விருதுகளைத் தமது பசு, எருமையாகிய மந்தையினங்களிற்குக்

குறிசுடுதல் வழக்கமானது இன்றும் இருந்துவருகின்றது. மாட்டிற்கு குறிசுடுதல் எனப்படுவது இரும்பினால் ஆக்கப்பட்ட கம்பியை நெருப்பில் பழுக்கக்காச்சி அக்கம்பியாகிய கோலால் பசு, எருமையாகிய மந்தை இனங்களின் முதுகை ஒட்டிய விலாப்புறத்தில் தத்தமக்குரிய குலவிருதுகளை எழுதுவது குறிசுடுதல் என அழைக்கப்படும். குறிசுடும் இரும்புக்கம்பியை ''சூட்டுக்கோல்'' எனக் கூறுவர். இக்கல்வெட்டு பாண்டிய மன்னனால் வகுக்கப்பட்டதாக் கூறப் படுகின்றது. அக்கல்வெட்டில்

> *இட்டமுடன் இந்த விதிப்படிக்கு எல்லாம் விருதெனவே*
> *பட்டமது கட்டிவைத்தான் பாண்டிமன்னன்*

என குறிப்பிடப்பட்டுள்ளது.

**சீர்பாத வரன்முறைச் செப்பேடு**

துறைநீலாவணை சீர்பாத வரன்முறைச் செப்பேடு சோழ மன்னனின் புதல்வியான சீர்பாததேவியை இலங்கை மன்னன் வாலசிங்கன் (ஜெயதுங்க பரராசசிங்கன்) மணந்து பின்பு இலங்கை வளம் காணவந்த தம்மோடு அழைத்துவரப்பட்ட சோழர் குலமக்களை (அரசகுலத்தவர், அந்தணர், வேளாளர், வணிகர்) வீரமுனையில் இருத்தி சீர்பாதகுலம் ஒன்றினைத் தோற்றுவித்தாள் என சீர்பாத சமூகத்தோற்றத்தைக் கூறுகின்றது (அருள் செல்வ நாயகம், 1982, பக்.40, 41). சீர்பாததேவியை நினைவூட்டும் ஞாபகச் சின்னங்களாக வீரமுனைச் சிந்தாயாத்திரைப் பிள்ளையார் ஆலயமும் மண்டூர் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயக் கருவறைத் தங்கவேலும் விளங்குகின்றன.

மட்டக்களப்புத் தமிழரின் மூதாதையர்கள் பெரும்பான்மையானோர் சேரநாட்டைச் சேர்ந்தவர்கள். இவர்களின் வழியில் வந்தவர்கள் தான் இன்று கிழக்கில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழர்கள். இங்குள்ள ஊர்களில் சேர நாட்டுமக்கள் வாழ்ந்திருக்க சீர்பாத குலமக்கள் என்னும் பெயருடன் சோழ நாட்டு மக்கள் தனியொரு சாகியமாக மட்டக்களப்புப் பிரதேசத்தின் சில ஊர்களில் வாழ்ந்து கொண்டு வருகின்றனர். இவர்களது சமூக வரலாற்றை வீரமுனைச் செப்பேடு, துறைநீலாவணைச் செப்பேடு, திருகோணமலைச் செப்பேடு, திருக்கோயில் செப்பேடு, கொக்கட்டிச்சோலைச் செப்பேடு என்பனவும் கூறுகின்றன.துறைநீலாவணைச் செப்பேட்டினை இலங்கை நூதனசாலையின் உதவிப் பணிப்பாளராகப் பணிபுரிந்த திரு.எம்.டி. ராகவன் அவர்கள் Ethnological Survey of Ceylon Vol-27 part- 1 No: 07 A Kalvettu of the Seerpatham of the Eastern Provincial என்னும் நூதனசாலை வெளியீட்டில் 24-10-1953 இல் வெளியிட்டுள்ளார்.

### நாடு காடு பரவெணிக் கல்வெட்டு

இது மட்டக்களப்புப் பிரதேசத்தில் 150 வருடங்களிற்கு முன் தென்பகுதியில் உள்ள ஒரு பிரிவின் வரலாற்று அம்சங்களைக் குறிப்பிடுகின்றது. இதன் மைப்பிரதி இலண்டன் மாநகரில் பிரித்தானிய பொருட்காட்சிச் சாலையில் பேணப்பட்டு வருகின்றது (பத்மநாதன், சி., 2004, பக்.104). இக் கல்வெட்டில் நாடு காடு பற்றிய வரலாற்றுக் குறிப்புக்களையும், நாடு காட்டிலே இடம் பெற்ற பல ஊர்கள் வயல் வெளிகள் ஆகியவற்றின் பெயர் விபரங்களையும் குறிப்பிடுகின்றது. இக்கல்வெட்டில் இருந்து 1827இல் பிரதி செய்யப்பட்ட ஓலைச்சுவடி கன்னன்குடா மாமாங்கன் வேலாப்போடி (வயது 103) அவர்களிடமுள்ளது. இதேபோன்றதொரு 1848 இல் பிரதி செய்யப்பட்ட ஓலைச் சுவடி காரைதீவு உ. கோவிந்தசாமி அவர்களிடமிருந்து பெறப்பட்டது.

### சாதித் தெய்வக் கல்வெட்டு

பாண்டியர் ஆட்சிக் காலத்தில் வழுதியால் வகுக்கப்பட்டதாகக் கூறப்படும் இக்கல்வெட்டில்

> *உழவருக்கு சிவனா முடுகருக்கு மாரியம்மன்*
> *நளவருக்குவயிரவராம் நாடார்க்குகண்ணகையாம்*
> *தொழுவருக்கு பிதிராம் தொண்டருக்குவேலவனாம்*
> *மழுவருக்குவீரபத்திரன் மறையோர்க்குநான்முகனே*
> *வேந்தருக்குமாலாம் வேடருக்குகன்னியராம்*
> *ஏந்துபணிசெய்வோர்க்குக் காளியாம்*
> *நேர்ந்திடையர்க்கு இந்திரனாம் நேர்ந்துவைக்கின்*
> *பாந்தமுடன் பாண்டியனும் பகுத்துவைத்தான்*

எனக் கூறப்படுகிறது. இக்கல்வெட்டானது 1821 இல் பிரதிசெய்யப்பட்ட ஓலைச்சுவடி ஒன்றில் காணப்படுகின்றது. இப்பிரதி கன்னன் குடாவைச் சேர்ந்தமாமாங்கன் வேலாப்போடி என்பவரிடம் இருந்து பார்வைக்கு கிடைக்கப் பெற்றதாகும். மட்டக்களப்பு மான்மியத்தில் உடுவருக்குமாரி யம்மன் என்பதற்குப் பதிலாக முரசருக்குமாரியம்மன் என்றும், காளியாம் என்னும் சொல்லுக்குப் பக்கத்தில் நேர்ந்துவைக்கின் என்றும் இறுதி இரண்டு அடிகளும் முறையே

> *முட்டன் முடுவன் முனிவரெவரார்வரினும்*
> *பட்டமது கட்டிவைத்தான் பாண்டிமன்னன் நிச்சயித்தான்*

எனமாற்றம் பெற்றுகாணப்படுகின்றன. இக்கல்வெட்டுக்களில் பொருள் ஒன்றே.

## v. குலங்களும் குடிகளும்

### ஆதிகாலக் குலங்கள்

இயக்கர், நாகர், வேடர் என்போர் ஆதிக்குலங்கள் எனவும், சேர, சோழ, பாண்டிய நாட்டிலிருந்து வந்து குடியேறிய மக்கள் ஏனைய குல மக்கள் எனவும் அறியலாம். இயக்கர் நாகர் ஆகியோரை மகாவம்சம் இலங்கையின் ஆதிக்குடிகளாகக் கூறுகின்றது. இலங்கையிற் காணப்படும் இரண்டாயிரத் திற்கும் மேலதிகமான பிராமிச் சாசனங்களில் நாகரைப்பற்றிய குறிப்புகள் மிகுந்து காணப்படுவதாக வரலாற்றாசிரியர் குறிப்பிடுவர் (பத்மநாதன், சி., 2010, பக்.10-72). மட்டக்களப்புப் பூர்வசரித்திரம், மட்டக்களப்புத் தமிழர் வரலாறு கூறும் நூல்களிலும் இயக்கர், நாகர், வேடர் ஆகியோரை ஆதிக் குடிகளாகக் குறிப்பிடுகின்றன. அவைகள் இயக்கரை நாகரீகமடையாத ஆதிவாசிகளாகக் குறிப்பிடுகின்றன.

### இயக்கர்

இலங்கேஸ்வரனான இராவணனை இயக்கர்சமூகத்தைச் சேர்ந்தவன் எனவும் அவனை இயக்கர்கோன் எனவும் அழைப்பர். இராவணனைத் திராவிட இனத்தவராக இராட்சசா என்னும் நூலில் ஏ. பத்மநாபராவ் என்பவர் குறிப்பிட்டுள்ளார். இராவணன் தென்னிலங்கையை ஆட்சி செய்தான் என மட்டக்களப்பு மான்மியம் கூறுகின்றது. இயக்கர், நாகர் கிழக்கின் பூர்வீகக் குடிகளே என வரலாற்றாசிரியர் குறிப்பிடுவர். புத்தர் முதன்முதலாக இலங்கைக்கு வந்த போது இயக்கர்களை மகாநாக (மையங்கனை) என்னும் இடத்தில் சந்தித்ததாக மகாவம்சம் கூறுகின்றது.

இயக்கர் மந்திரிகளாயும், நாகர் இராட்சிய அதிபராயும் இருந்து மட்டக்களப்பை ஆட்சி செய்தனர். இயக்கருக்குரிய கோயிலாக போரதீவு (போர் முனைநாடு) காளிகோயிலையும், நாகருக்குரிய கோயிலாக போரதீவு முருகையன் கோயிலையும் (சித்திரவேலாயுதர்கோயிலை) அமைத்தனர் (நடராசா, F.X.C., 1998, பக்.54).

நாகர்கள் இலங்கையின் வடபகுதி, வடமத்திய பகுதி, கிழக்கு மேற்குக் கரையோரங்கள் முதலானவற்றில் செல்வாக்குப் பெற்றிருந்தமைக்கு ஆதாரங்கள் பல உள்ளன. இலங்கையின் தென்கிழக்கில் அண்மைக்காலத்திற் கண்டெடுக்கப்பட்ட நாணயம் ஒன்றில் ''திசபுர தாட்ட நாகரசன்'' என்ற வாசகம் எழுதப்பட்டுள்ளதாகவும் நாகரிற் சிலர் பிராகிருதம், தமிழ் ஆகிய இருமொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றிருந்ததை அவ்வாசகம் உணர்த்து வதாகவும் சி. பத்மநாதன் (2010, பக்.10-12) அவர்கள் கூறுகின்றார்.

### நாகர்

நாகர்குலத்தினரை ஆதிக்குடிகளாக வரையறுத்துள்ளனர். இயக்கரில் பெரும் பான்மையோர் பின்னர் புத்த மதத்தைத் தழுவிக்கொண்டதாக மகாவம்சம் குறிப்பிடுகின்றது. ஈழத்து மன்னர்களில் ஒருவராக கி.பி. முதலாம் நூற்றாண்டில் ஆட்சி செய்த இளநாகன் பற்றி மகாவம்சம் குறிப்பிடுகின்றது.

நாகர் தமிழ்ப்புலமையிலும் நாகரிகத்திலும் சிறந்து விளங்கினர் என அறியமுடிகின்றது (இரத்தினம், கா.பொ., 1951, பக்.122). நாகர் இனத்தைச் சேர்ந்த முடிநாகராயர் முதற்சங்க காலத்துப் புலவராயும், நன்னாகனார், மதுரை மருதனிளநாகநார் ஆகிய புலவர்கள் கடைச்சங்க காலத்தவராயும் இருந்துள்ளனர் என தமிழ் இலக்கிய வரலாறுகள் கூறுகின்றன.

நாகன்சாலை (மண்டூர்), நாகர்முனை (திருக்கோயில்), நாகர்மேடு, நாகப்பொக்கணை (மன்னம்பிட்டி) ஆகிய இடங்கள் நாகர் தொடர்பினைக் குறிக்கும் முக்கிய இடங்களாக விளங்கின. மண்டு நாகன் நாகரினத்தைச் சேர்ந்தவனென்றும், அவன் நாகர் முனையைத் தலைநகராகக் கொண்டு மட்டக்களப்பின் சிற்றரசனாக விளங்கினான் என்றும் அறியமுடிகின்றது. தென்னிலங்கையில் இராவணன் காலத்தின் பின் நாகர் ஆட்சி நிலவியது. அயோத்தி நாகர், குருகுல நாகர் இப்பிரதேசத்தில் ஆட்சி செய்தனர் எனவும் அறிய முடிகின்றது (நடராசா, F.X.C., 1998, பக்.10).

### வேடர்

ஆதிகாலத்தில் வாழ்ந்த இயக்கரும் நாகரும் ஈழநாட்டின் ஆதிக்குடிகளாவர். இவர்களின் சமூகப்பிணைப்பில் எஞ்சியவர்களே வேடர். ஏனையோர்கள் இந்தியாவில் இருந்து வந்து குடியேறியோரின் பரம்பரையினர் ஆவர் (செபஸ்தியான் கபிரியல், 2009, பக்.23).

இத் தீவின் பிந்திய கற்கால மனிதரின் வழித்தோன்றல்களே வேடர்கள் எனப் பொதுவாக நம்பப்படுகிறது. காலவோட்டத்தில் சில வேடர்கள் தமிழருடனும் சிங்களவருடனும் நெருக்கமாக இருந்தனர். எனவேதான் பிற்காலத்தில் வேடர்களின் மத்தியில் தமிழ் பேசுவோரையும் சிங்களம் பேசுவோரையும் காணமுடிந்தது. பொதுவாக இவர்களுடைய ஆண்பாற் பெயர்களாக பொரமோலா, சல்லியா, கரக்கோலயா, கவ்வா, போடா, புப்பார, கூனா, கருவா, கொம்பிரா, காகய்ரா, ஹந்துனா, கந்தா முதலியனவும் பெண்பாற் பெயர்களாக சுவந்தி, வியானி, பிஞ்சி, களு, செல்லி, கிரி போன்றனவும் பெயரிடப்பட்டன (தர்மதாச, கே.என்.ஓ., 1993, பக்.3).

வேடர்களின் முக்கிய வாழ்வாதாரத் தொழில் வேட்டையாடுதலும், தேன்சேகரித்தலுமே. எனினும் மட்டக்களப்புப் பிரதேசத்தில் வாழும்

வேடர்கள் வேட்டையாடுதல், தேன்சேகரித்தல், பயிர்ச்செய்கை, மீன்பிடித்தல், ஆகியவற்றை வாழ்வாதாரமாக மேற் கொள்கின்றனர். வேட்டையாடுதலை மட்டும் மேற்கொள்பவர்கள் குறைவாகவே காணப்படுகின்றனர். ஈட்டி, அம்பு, வில் கொண்டு வேட்டையாடுவதில்லை. ஒரு சிலர் துப்பாக்கியைக் கடனாகப் பெற்று வேட்டையாடிப் பெறப்படும் இறைச்சியில் மூன்றிலொரு பகுதியை துப்பாக்கியின் வாடகையாகக் கொடுக்கின்றனர்.

வேட்டையாடுவதில் இவர்கள் திட்டமிட்ட ஒழுங்குமுறையைப் பின் பற்றுவர். இளம் மிருகங்கள், கன்றுகள், பால்கொடுக்கும் தாய் மிருகங்கள், கர்ப்பமாயுள்ள மிருகங்கள் ஆகியவற்றை வேட்டையாடுவதில்லை. நன்கு வளர்ந்த ஆண்மிருகத்தை வேட்டையாடுவதை ஒரு விதியாகக் கடைப்பிடித்து வருகின்றனர். அதுமட்டுமன்றி மிருகங்கள் உணவு உட்கொள்ளும் போதும், நீரருந்தும் போதும் வேட்டையாடுவதில்லை. உணவு உட்கொண்டு நீரருந்தி முடித்தபின்னரே வேட்டையாடப்படும் (தம்பனே குணவர்தன, 1993, பக். 5-15). கொல்லப்பட்டமைக்காக தெய்வத்திற்கு நன்றி செலுத்தும் வழக்கம் இருந்தது. இதனை "கிரிகோரஹ" என்பர். இது முக்கியமான வைபவமாகக் கருதப்படுகின்றது (தர்மதாச, கே.என்.ஓ., 1993, பக்.4).

வேடர்கள் சேனைப்பயிர்ச் செய்கையின் போது ஒரு வருடத்தில் செய்யப் படும் இடத்தில் மற்றவருடம் செய்வதில்லை. சுமார் ஏழு அல்லது எட்டு வருடங்களுக்கு ஒரு முறையே அவ்விடம் மீளப் பயிர்செய்யப்படும் சில வேளை செய்யப்படமாட்டாது. தமது குடியிருப்பின் அயலில் பயிர்செய் வதில்லை. சேனைப்பயிர்ச் செய்கைக்குரிய இடம் கல்வீசும் தொலைவிற்குட் பட்டதான சிறிய இடமாக அமையும். இந்த சிறிய சேனைகளைச் சூழ்ந்து பெரிய காடுகள் இருக்கும். அவற்றை ஒரு போதும் அழிப்பதில்லை. பயிர்ச் சேனைக்காணிகள் கைவிடப்பட்டதும் மீண்டும் அவ்விடத்தில் மரம் செடி கொடிகள் வளரத் தொடங்கும். இவ்வாறு இயற்கையை அழியாது பாதுகாத்து வருபவர்களாக கள ஆய்வின் போது தெரியவந்தது.

வேடர்கள் ஆதியில் மலைக்குகைகளில் வசித்து வந்தார்கள். ஒவ்வொரு குடும்பத்திற்கும் குகையில் தனி இடம் இருந்தது. அதில் மற்றவர்கள் அத்து மீறல் செய்வதில்லை (Sheligmen, G.G., 1911, pp.419 - 430). தேனினால் நிரப்பிய இறைச்சியை விசேடமாக அமைக்கப்பட்ட மரப்பொந்தில் வைத்துப் பாதுகாத்தனர். தேனை அல்லது தேன்கூட்டைப் பெறுவதற்காக மரத்தை முழுமையாக வெட்டி வீழ்த்துவதில்லை. தேவையான மரக்கிளை மாத்திரமே வெட்டப்படும். நிறையப் பழங்கள் உள்ள மரங்கள், பறவைகளும் விலங்கு களும் உணவாகப் பயன்படுத்தும் மரங்கள் ஆகியவற்றையும் வெட்டு

வதில்லை. அதனை மீறும் வேடர்களுக்கு வேடர்த் தலைவனால் தண்டனை வழங்கும் வழக்கம் இருந்தது (தம்பனே குணவர்தன, 1993, பக்.15).

பாரம்பரிய வழக்கப்படியே திருமணங்கள் நடைபெற்றன. மருமகனாக வரப்போகின்றவர் உலர்ந்த மாமிசம், தேன் ஆகியவற்றுடன் மணமகளின் குகைக்கு வருவார். மணமகளின் பெற்றோர், மணமகளினால் மணமகனுக்கு இடுப்பில் இலைபொருந்திய கொடியை கட்டச் செய்வர். மணமகன் தன்னுடைய அல்லது தனது சகோதரியின் தலைமயிரினால் ஆக்கப்பெற்ற ''ஹவாரிய'' என்னும் பொருளை அன்பளிப்பு செய்வார். மணமகளின் பெற்றோர் மணமக்களுக்கு வில், அம்பு ஆகியவற்றை அன்பளிப்பாக வழங்குவர். குகைகளிலே வேடுவப்பெண்கள் பிள்ளைகளைப் பிரசவித்தனர். பிள்ளையின் கொப்பூழ்க் கொடியினைக் கூரிய வில்லினால் வெட்டிச் சாம்பலினால் மூடிப் புண்ணைக் குணப்படுத்தினர்.

வேடர் குலத்தினர் தமிழர், சிங்களவர்களுடன் தொடர்பு கொண்டதன் காரணமாக அவர்களின் வாழ்க்கை முறைகள், சமூகக் கட்டமைப்புகள், வழிபாட்டு முறைகள் ஆகியவற்றில் மாற்றமடைந்து வந்துள்ளன. மட்டக் களப்புப் பிரதேச வேடர்களின் வழிபாட்டு முறையில் ஆதிகாலத்தில் கந்தே யக்கா, பிலிந்தி யக்கா முதலிய தேவதைகள் சக்திவாய்ந்தவைகளாகக் கருதப்பட்டன. மேலும் குமாரதெய்வ வழிபாடு, செம்பகநாச்சி வழிபாடு, மாறாத்தெய்வ வழிபாடு, தெவுத்தன் வழிபாடு, பத்தினி வழிபாடு, கப்பற் தெய்வ வழிபாடு, உத்தியாக்கள் வழிபாடு (பிதிர்வழிபாடு), அம்மன் வழிபாடு, வீரபத்திரர் வழிபாடு, வைரவர் வழிபாடு முதலிய வழிபாடுகளைக் கடைப்பிடிக்கின்றனர்.

சார்ல்ஸ் செலிக்மானும், பிரெண்டா செலிக்மானும் பழமையைப் பேணு கின்ற தூயவேடர்களைப்பற்றிய கண்ணோட்டத்தில் ''கிழக்குக் கரையோர வேடர்கள் வேடர்வாழ்க்கைப் பண்பை இழந்தவர்கள். எனவே இவர்கள் ஆய்வுக்கு உகந்தவர்களல்ல'' என்பது இவர்களது கருத்தாகும் (தங்கராசா, யு.வி., 1993, பக்.23).

கந்தப் பெருமான் இந்தியாவிலிருந்து கலத்தில் வந்து வாழைச்சேனைக்கு அருகிலுள்ள பெரியக்கடுவன் கரையைச் சேர்ந்தார் என்பதுவும் அவர் அங்கே தங்கிவிடாமல் வனத்திற்கு நேரே சென்றார் என்பதுவும் ஐதீகம். கந்தப்பெருமான் வேடர்களுக்கு வேட்டையாடும் முறை, அதற்குரிய காலம் முதலியவற்றைக் கூறியதாக நம்புகின்றனர். வேடர்கள் தமது சொந்த மக்கள் மத்தியில் காக்கும் கடவுளாக கந்தப்பெருமானைக் கருதுகின்றனர். இத்தகவல் களுக்கிணங்க கந்தப்பெருமான் வழிபாடும், குறிஞ்சிக் குமரன் வழிபாடு ஒன்று எனக் கருதமுடியும்.

வேடர்களுடைய வழிபாட்டில் குமார தெய்வத்திற்கு முக்கியம் அளிக்கப்படுகின்றது. குமாரதெய்வத்திற்குரிய பொங்கற்பானை என்னும் விநாயகப்பானையை அடுப்பில் வையாமல் ஏனைய இருபானைகளையும் வைக்கக்கூடாதெனவும் கூறுவர். பத்ததி மற்றும் ஆகமம் சார்ந்த வழிபாட்டு முறைகளில் விநாயகப்பானை பூசைமுறை காணப்படுவதால், இப்பொங் கற்பானை வைக்கின்ற வழக்கம் பிற்காலத்தில் ஏனைய மக்களிடம் இருந்து அவர்கள் உள்வாங்கியதென்பதனை ஊகிக்கமுடியும். குமாரதம்பிரானுக்கு இரண்டாயிரம் பரிகலத் தேவதைகள் உள்ளதாக அவர்கள் நம்புகின்றனர். பந்தரின் முதற்காரியமாக பந்தருக்குள் தென்னம்பாளை கட்டும் வழிபாடு நடைபெறும். தாங்கள் செய்யும் சடங்குக்கு இடையூறுவராமல் இருப்பதற் குரிய வழிபாடு இதுவாகும். பாளையை வைத்துக்கட்டும் கம்பாக வேம்பு, விண்ணாங்கு ஆகிய மரங்கள் முதன்மையாகக் கொள்ளப்படுகின்றன.

பூசைபுரியும் கட்டாடியாரின் உடம்பில் பூசையின் போது தெய்வங்கள் வந்து வெளிப்படும். முதலில் உத்தியாக்கள் வரும். இது பிதிர்வழிபாட்டு முறையாகக் காணப்படுகின்றது. இதற்கு அடுத்ததாக ஆலயத்தின் முதலாவது கட்டாடியாராக இருந்து காலஞ்சென்ற கட்டாடியார் வருவார். இவர் சடங்கினை ஒழுங்காக நடாத்துமாறு ஆசீர்வாதங்கூறிச் செல்வார். இவரது கையில் சூலமும், ஈட்டியும் இருக்கும். அதற்கடுத்ததாக தெய்வங்கள் ஒன்றன்பின் ஒன்றாக வரும். பேச்சிக்கும், வைரவனுக்கும் முறையே கள்ளு, சாராயம் வைக்கப்படுகின்றது. தற்காலத்தில் ஏனைய தெய்வங்களுக்கு இறைச்சி வைப்பதில்லை. வாழ்க்கை முறை மாற்றமடைந்து வருவதை இந்த வழக்கானது காட்டுகின்றது.

இப்பிரதேசப் பழம்பெரும் ஆலயங்களும் சரித்திரங்களும் இதனை உறுதி செய்கின்றன. இவ்வகையில் கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ் வரர் ஆலயம், திருக்கோயில் ஸ்ரீ சித்திர வேலாயுதசுவாமி கோயில், மண்டூர் ஸ்ரீ கந்தசுவாமி கோயில், சித்தாண்டி ஸ்ரீ சித்திர வேலாயுதசுவாமி கோயில் முதலியன குறிப்பிடத்தக்கனவாகும். இவ்வாலயங்களின் ஆரம்ப கால வழிபாட்டினர்களாக வேடர்கள் இருந்தமையை இவ்வாலய வரலாறுகள் கூறுகின்றன. இவ்வாலயங்களில் கந்தழி முறையிலான வேல்வழிபாடு, இலிங்க வழிபாடு, சூலவழிபாடு, மரவழிபாடு முதலியன ஆதி மனித வழிபாட்டு முறைகளில் அமைந்துள்ளன.

இவர்களிற்குரிய ஆதி வழிபாடானது குமார தெய்வ வழிபாடாகும். மட்டக்களப்பில் குடியிருப்பு (வேடர்குடியிருப்பு), தளவாய், களுவங்கேணி, சித்தாண்டி, கிரான், சந்திவெளி, வாழைச்சேனை (கற்குடாப்பகுதி), நாசிவன்தீவு, இறால்ஓடை, வாகரை, பொண்டுகள்சேனை, கோங்கணை,

பாற்சேனை, திராய்மடு, வாகனேரி, முறுத்தானை, பனிச்சங்கேணி, கட்டு முறிவு, பழுகாமம், மண்டூர் முதலிய இடங்களில் குமாரதெய்வ வழிபாடு காணப்படுகின்றது.

விந்தனை, வேகம் (நாடுகாடு), கோறளை (வாகரை) ஆகிய பிரதேசங் களில் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்து தொடர்ந்தும் வேடர்கள் வசித்து வருகின்றனர். மட்டக்களப்பின் சில பாகங்களில் வேடகுலத்தினருள்

பழுவள சீயா
ஆக்கமுத்து சீயா
செல்லாப்பத்து சீயா
கற்கோடா சீயா
கிரிமடி சீயா
திருக்காக்கனி சீயா
வெருக சீயா

என்னும் ஏழுகுடிகள் வழக்கில் உள்ளன. வேடரின் ''சீயா'' என்னும் சொல்லுக்கு தமிழில் ''குடி'' எனப் பொருள்படும். மேலும் சிங்களத்தில் ''சீயா'' என்னும் சொல் முதியவரைக் குறிக்கும். ஆகவே ஒரு வம்சத் தலைவனின் (Founder member) பெயரிலேயே இக்குடிகள் அழைக்கப் படுகின்றன. இக்குடிகள் மட்டக்களப்பின்

1. கருவப்பங்கேணி, களுவங்கேணிப் பிரதேசத்தில் பழுவழகுடியும்,
2. பாலையடித்தோணா, சந்திவெளிப் பிரதேசத்தில் ஆக்கமுத்து குடியும்,
3. சித்தாண்டிப் பிரதேசத்தில் செல்லாப்பத்துக்குடியும்
4. கற்குடாப் பிரதேசத்தில் கற்கோடாக் குடியும்,
5. பனிச்சங்கேணிப் பிரதேசத்தில் கிரிமடி குடியும்
6. வாகரை கதிரவெளிப் பிரதேசத்தில் திருக்காக்கனிக் குடியும்
7. வெருகல் பிரதேசத்தில் வெருகக் குடியும், வாழ்ந்து வருகின்றனர்.

களுவங்கேணியில் வாழ்ந்து வரும் 71 வயதான வேடகுலப்பெரியார் கந்தன் நாகமுத்து அவர்களுடன் மேற்கொண்ட கலந்துரையாடல் மூலம் மேற்படி குடிமுறைகள் பற்றி அறியக்கிடைத்தது. இக்குடிகளில் பழுவள குடியினரே தலைவனது குடியாக (முதன்மைக் குடியாக) இருந்து வருவது குறிப்பிடத் தக்கது.

மட்டக்களப்புப் பிரதேசத்தில் விந்தனை, வாகரை, கதிரவெளி, உன்னிச்சை, தும்பாலை, மகாஓயா, களுவங்கேணி, பனிச்சங்கேணி நிலப்

பரப்புக்களில் இன்றும் வேடர்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் தமது வேட்டையாடும் தொழிலைப் பெரும்பாலும் விட்டு, விவசாயத்துறையிலும் ஏனைய துறைகளிலும் முன்னேற்றமடைந்து காணப்படுகின்றனர். திருக் கோயில் பிரதேசத்தில் இவர்கள் வாழும் பகுதியின் பெயரொன்றை ஸ்ரீ வள்ளிபுரம் என மாற்றியுள்ளதாக கள ஆய்வின் மூலம் தெரியவந்தது.

மட்டக்களப்புப் பிரதேச ஆலயங்களில் நடைபெறும் வேடர்பூசை, சூரகவேட்டைத் திருவிழா என்பன வேடர்குலத்திற்கு வழங்கப்பட்ட முன்னீட் டுச் செயலாகக் கருதமுடியும். இவர்களது குல விருதாக வில்லும் அம்பும் அடையாளப் படுத்தப்பட்டுள்ளன.

## தமிழரின் பிரதான குலமும் குடியும்

மக்கள் சமுதாயமாக வளருங்கால் பல இடங்களிலும் பிரிந்து சென்றிருக்கக் கூடும். அவ்வாறு பிரிந்து சென்றவர்கள் தாம் சென்ற சென்ற இடங்களில் தனித்தனி கூட்டங்களாக அமைந்து வாழலாயினர். அவ்வாறு பல்வேறு கூட்டமாக வாழ்ந்து வந்த மக்கட் குழுக்கள் நாளடைவில் பல்வேறு தொழிற் பிரிவுகளாகப் பிரிந்து குலங்களாகத் தோற்றம் பெற்றிருக்கலாம். இதுவே சாதி அல்லது குலம் எனப் பின்னர் வகைப்பட்டிருக்கக்கூடும். அவ்வவ் குலத்திற்குப் பல குடிகளும் இருந்தன. இக் குலக்குடிகளுக்கு ஒவ்வொரு தலைவன் இருந்துள்ளான். இக்குடி முறைமை என்பது மட்டக்களப்புச் சாதிகளில் காணப்படும் விசேடத்துவம் ஆகும். குடி என்னும் சொல் மக்கள் வாழும் குடியிருப்புக்களையும், சாதியையும் குறிப்பதாக இருப்பினும் மட்டக்களப்புப் பிரதேசத்தில் குலத்தின் பிரிவுகளாகவே கொள்ளப்படுகின்றது (தில்லைநாதன், எஸ்., 2006, பக்.24).

ஒரு குறிப்பிட்ட குடிக்குள் தாய்வழிவந்த அண்ணன்/அக்கா, தம்பி/ தங்கை, மாமன்/மருமகன்/மருமகள் என்போரே காணப்படுவர். குலங்களாக, குடிகளாக வாழத் தலைப்பட்ட மக்கட் சமுதாயம் காலப்போக்கில் கடமை களைப் பகிர்ந்து கொண்டு தொழிற்பட்டமையை அறியமுடிகின்றது. சமுதாயக் கடமைகள், ஆலயத்தொழும்புகள் என்பவற்றில் அவை தொழிற்பட்டன. இவற்றைக் கலிங்க மாகோன் மன்னன், பாண்டிய மன்னன் ஆகியோர்களால் வகுத்து நெறிப்படுத்தப்பட்டதென்பதை அறியமுடிகிறது. மட்டக்களப்பில் விளங்கும் பல்வேறு குலங்களும் கூட்டு மொத்தமாக மட்டக்களப்புப் பிரதேசத்திற்கு அச்சாணி போன்று அமைந்துள்ளன. மக்களின் குல மரபுபற்றி அறிய வாய்மொழி சார்ந்த வரலாறுகளும், கர்ணபரம்பரைக் கதைகளும், கல்வெட்டுக்களும் செப்பேடுகளும் துணைபுரிகின்றன.

மட்டக்களப்புத் தமிழர்சமூகம் பல்வேறுபட்ட குலங்களையும் குடிகளையும் உள்ளடக்கியதாகும். மட்டக்களப்புச் சமுதாய அமைப்பின் பிரதான அம்சமான குடிமுறை மாகோன் மன்னனால் வகுக்கப்பெற்றது. சிலரால் தாழ்ந்த குலமாகக் கருதப்படும் குலங்களைப் பற்றியும் அச்சமூகத்தோற்றம், அதன் வரலாறு பற்றியும் மட்டக்களப்பில் எழுந்த கல்வெட்டுகள், நூல்கள் மூலம் பூரணமாக அறிந்துகொள்ள முடியாமல் இருப்பது கவலைக்குரியதே.

**மரபு வழியாக விளங்கும் பிரதானமான குலங்கள்**

| | |
|---|---|
| திமிலர் | தவசிகள் |
| முக்குவர் | நளவர் (நம்பிகள்) |
| வன்னியர் | கொல்லர் |
| வேளாளர் | வண்ணார் (புலவனார்குடி) |
| சீர்பாதர் | அம்பட்டர் (மருத்துவக் குடி) |
| கரையார் | சாணர் |
| கோயிலார் | பள்ளர் |
| மாதுலர் | பறையர் (வள்ளுவர்) |
| செங்குந்தர் (முதலிகள்) | கோவியர் |
| செட்டிகள் | கடையர் |
| தட்டார் | |
| தனக்காரர் | |
| வாணிபர் | |
| சிவப்பிராமணர் | |
| பண்டாரம் | |
| பண்டாரப்பிள்ளை | |
| வேடர்(வேடவேளாளர்) | |
| குயவர் | |

- கொல்லர், தட்டார் என்போர் விஸ்வப்பிரம குலம் எனவும் அழைக்கப்பெறுவர்.

**திமிலர்**

திமிலர்கள் இந்தியாவில் காவேரி நதிக்கரை முகத்துவாரத்தில் வாழ்ந்த மக்களாவர். இவர்கள் வந்து முதன்முதலாக யாழ்ப்பாணத்தில் வட்டுக் கோட்டைக்குப் பக்கத்திலுள்ள அராலி, நவாலி போன்ற இடங்களில் குடியேறி வாழ்ந்தனர். இவர்களில் ஒரு பகுதியினர் மட்டக்களப்புக்கு வந்து வெவ்வேறு இடங்களில் வாழ்ந்தனர். தாழங்குடா இவர்கள் முதலில் குடியேறி வாழ்ந்த

தாகக் கூறப்படுகிறது. இவர்களது வருகை கி.பி. 15ஆம் நூற்றாண்டெனக் கருதப்படுகிறது (Langee,J.W., 2007, pp.76-78).

தென்னிந்தியாவிலிந்து வந்த மீனவ குலத்துத் திமிலர்கள் மட்டக்களப்பில் குடியேறிய இடம் திமிலைதீவு எனவும், மீன் பிடித்து வலை கட்டிய இடம் வலையிறவு எனவும், இவர்களை முக்குவர் துரத்திச் சென்ற போது சிதறிய முக்குவர் மீண்டும் சந்தித்த இடம் சந்திவெளி எனவும் பின்னர் வந்து ஆறி இருந்த இடம் வந்தாறுமூலை எனவும், பதுங்கியிருந்த திமிலரை முக்குவர் அழித்த இடம் சத்துருக்கொண்டான் எனவும் இச்செயலின் போது முக்கு வருக்கு உதவி புரிந்த பட்டாணியரை குடியமர்த்திய இடம் ஏறாவூர் எனவும் பல்வேறு கர்ணபரம்பரைக் கதைகள் திமிலரைப் பற்றி நிலவுகிறது.

திமிலர்கள் மட்டக்களப்பை அரசாண்டிருந்தனர் என பெரிய கல்வெட்டு கூறுகின்றது. அக்கல்வெட்டில் மாயனரணாசலன் என்பவன் தென்னிந்தியா வில் இருந்து தன்படையுடன் கப்பலில் வந்து மட்டக்களப்பை அடைந்து அங்கு அரசாண்டிருந்த திமிலர்களது தலைவனிடமிருந்து அரசைக் கைப் பற்றினான் எனச் சொல்லப்படுகின்றது. இச்சம்பவம் பெரிய கல்வெட்டில் மேல் வருமாறு வரையப்பட்டுள்ளது:

*....கலிங்கள் மாயனரணாசலன்*
*தந்தையிடத்தில் தரும விடைபெற்று*
*முடியது தரித்து முதல்வனைப் போற்றி*
*துடிமுரசதிர சூழவே சயினியம்*
*படையொடு சென்று மந்திரியுடனே*
*மரக்கலமேறி வந்தனன் இலங்கையில்*
*சிரத்தொளி துலங்க தினகரனிலங்க*
*வரத்தோடு மட்டக்களப்பினிலிறங்கி*
*நிரைதனி வகுத்து நிறுத்திய பின்பு*
*கரத்தினில் வாளொடு காவலன் திமிலன்*
*நாடியே நீயார்? நானே அரசன்*
*ஓடியே போ மென்றுரைத்தவன் முறுவ*
*வாட்படைவீரரும் மழுப்படைவீரரும்*
*சூழ நிறுத்தி கலிங்கனோடெதிர்க்க*
*வெட்டினான் திமிலரை வேந்தனும் சிறைகளும்*
*கட்டியே திமில அதிபதிகளை*
*பறித்த பின் சென்று திமிலப்படையை*
*அறுத்தறுத்தழித்து ஆழியில் போட்டு*
*படைகளுக்கஞ்சி பதுங்கிய திமிலரை*
*கடலெனதுரத்தி நாட்டினான் கல்லு*

## முக்குவர்

இவர்கள் தென்னிந்தியாவின் சேரநாட்டிலிருந்து வெவ்வேறு காலங்களில் கடற்பயணம், குடியேற்றம், ஆட்சி அதிகாரம், போர் நடவடிக்கைகள் போன்ற காரணங்களால் இங்கு வந்து சேர்ந்த திராவிட மக்களாவர். மட்டக்களப்பில் குடியேறிய முக்குவர் பல கிராமங்களை அமைத்துக் காடுவெட்டி, செந்நெல் வயல்களாக்கி, மேலும் மக்களைக் குடியேற்றி சிற்றரசுகளை நிறுவினார்கள். மட்டக்களப்புப் பிரதேசத்திற்கு ஆக்கமளித்தவர்களில் முதன்மைக்குரியவர்கள் முக்குவரே. இவர்களது வருகை பற்றி முக்குவ வன்னிமைக் கல்வெட்டு, போடி கல்வெட்டு, திருப்படைக் களஞ்சியக்கல்வெட்டு, முதலியன கூறுகின்றன. மட்டக்களப்பு வாழ் முக்குவர் ஆட்சியதிகாரம் உடையவர் களாகவும், நிலப்பிரபுக்களாகவும், விவசாயத்தொழிலை உடையவராகவும் இருந்துள்ளனர். மட்டக்களப்பை முக்குவதேசம் என்று அழைப்பர். மண்டூர் போன்ற பழமை வாய்ந்த ஆலயங்களில் வரிசை கூறும் நிகழ்வுகளில் தேசம் என்று கூறும்போது முக்குவ வம்சத்தைச் சேர்ந்த ஒருவரிடமே அது கையளிக் கப்படுகின்றது.

*சீர்தங்கு வில்லவரும் பணிக்கனாரும்*
*சிறந்த சட்டிலான் தனஞ்சயன்றான்*
*கார்தங்கு மாளவன் சங்கு பயத்தான்*
*கச்சிலாங்குடி முக்குகரி னேமேகாண்*

இக்கல்வெட்டில் வில்லவர்குடி, பணிக்கனார்குடி, சட்டிலான்குடி, தனஞ்சயன் குடி, மாளவன்குடி, சங்குபயத்தான்குடி, கச்சிலான்குடி என ஏழு குடிகள் உள்ளன. கல்வெட்டுக்களில் காணப்படுகின்ற இக்குடிப்பெயர்களில் சிலகுடிப் பெயர்கள் மட்டக்களப்புப் பிரதேசத்தில் வெவ்வேறு கிராமங்களிலே திரிபடைந்தும் மாறுபட்டும் காணப்படுகின்றன. பணிக்கனார்குடி, சட்டிலான் குடி, மாளவன்குடி, பெத்தான்குடி, கச்சிலான்குடி, முரண்டகுடி எனவும், படையாண்டகுடி, உலகிப்போடி குடி, பெத்தாண்டகுடி, கச்சிலாகுடி, சங்கரப் பத்தன்குடி, வில்லவராயன் குடி, கோப்பிகுடி எனவும் உலகிப்போடிகுடி, காலிங்காகுடி, படையாண்டகுடி, பெத்தாண்டகுடி, பெத்தாண்டபடையாண்ட குடி, பணிக்கனார்குடி, தனஞ்சனாகுடி எனவும் ஊருக்கு ஊர்வேறுபட்டும் திரிபு பட்டும் உள்ளதை அவதானிக்க முடிகின்றது.

கலிங்க மன்னருக்கு மிக நெருங்கியவராய் சேவை செய்தோரின் சந்ததியார் காலிங்காகுடி முக்குவர் எனவும், படைத்தலைவராய் சேவை செய்தோர் படையாட்சிகுடி முக்குவர் அல்லது படையாண்டகுடி முக்குவர் எனவும், சிற்றரசியான உலகநாச்சி என்பவரின் நாமத்தால் தோன்றியவர்கள்

உலகநாச்சிகுடி முக்குவர் அல்லது உலகிப்போடி முக்குவர் எனவும் வழங்கலாயினர்.

கலிங்க மாகோன் தனது ஆட்சியில் படைத்தலைவர்களாகவும் வன்னிச் சிற்றரசர்களாகவும் இவர்களைக் கொண்டு பரிபாலனம் செய்தான். சேர நாட்டிலிருந்து வந்ததாகக் கருதப்படும் பணிக்கனார் குடியினர் ஆரம்ப காலத்தில் விவசாயத்திலும், பின்னர் ஆட்சி அதிகாரங்கள், ஆலயப் பரிபாலனங்கள் ஆகியவற்றிலும் இருந்துள்ளனர்.

முக்குவர் மட்டக்களப்புப் பிரதேசத்தின் பெரும்பான்மையான இடங்களில் வாழ்கின்றனர். இவர்கள் கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வர ஆலய பரிபாலகர்களாக ஆலயத் தொடக்க காலம் முதலாக இருந்து வருகின்றனர். குல விருதுக் கல்வெட்டின்படி முக்குவருக்கு எழுத்தாணி சுழி உரித்தாகும். ஆனால் தற்காலத்தில் முக்குவக் குடிகள் தத்தமக்கென விருதுகளாக

| | | |
|---|---|---|
| காலிங்காகுடி | - | செங்கோலும் வாளும் |
| உலகிப்போடிகுடி | - | எட்டுக்கால் |
| படையாண்டகுடி | - | பட்டுச்சங்கு, முடிஎழுத்தாணி |
| பணிக்கனார்குடி | - | மந்து வளையம் |
| கச்சிலாகுடி | - | வட்டச்சக்கரம் |
| கோப்பிகுடி | - | ஆறுகால் |
| பெத்தாங்குடி | - | சுழிச்சங்கு, காக்காக்கால் |
| சட்டிகுடி | - | செல் |

எனத்தனித்தனி விருதுகளை அடையாளப்படுத்துவதைக் காணமுடிகிறது. சுழி என்பது சக்கரத்தைக் குறிப்பதாகும். இவர்களது ஆரம்ப குடியிருப்புக்கள் மயிலம்பாவெளி, ஏறாவூர், சந்திவெளி, சத்துருக்கொண்டான், சம்மாந்துறை, கருங்கொடித்தீவு, செங்கற்படை, அம்பிளாந்துறை, எருவில், பண்டாரியாவெளி, பங்குடாவெளி என விரிவுபட்டுத் தெரிகின்றது.

மண்முனையில் (கோயில்க்குளம்) களப்புமுனை (முனைக்காடு) கொக்கட்டிச் சோலைப்பிரதேசம், கன்னன்குடாப்பிரதேசம், பெரியநீலாவணை, வெல்லாவெளி, கிரான்குளம், திமிலைதீவு, மகிழூர், கோயிற்போரதீவு, புதுக்குடியிருப்பு, அக்கரைப்பற்று, களுதாவளை, பாண்டிருப்பு, நாதனை, சந்திவெளி முதலிய இடங்களில் இவர்கள் நிறைந்து வாழ்கின்றனர். முக்குவர் வேளாள சமூகத்துடன் கலந்து வாழ்ந்து வருகின்றனர். இதனால் தமது தனி அடையாளங்களை நழுவவிட்டும் வருகின்றனர்.

**வன்னிமை**

F.X.C. நடராசா, (1998, பக்.106) அவர்களின் கருத்துப்படி வன்னிமைக் குலத்தினர் முக்குவர் குலத்தின் பிரிவாகக் கூறப்படுகின்றது. இதனை அவர்

*மதிநுதல் ஒல்லாந்த மன்னனே கேளும்*
*இதுவே குகன்குகன் குலமென வறிவாய்*
*கன்னியன் மகிழ்ந்து காவலன் றன்னை*
*வன்னிமைக் குலமாய் வைத்தவ னாண்டான்*

என்று பெரிய கல்வெட்டின் இறுதி நான்கு வரிகளும் உறுதி செய்கின்றது என்றும் இதன் காலம் கலியுக ஆண்டு 3030 (கி.மு.72) எனவும் குறிப்பிடு கின்றார். எனினும் வன்னிமை என்பது குறுநில மன்னரின் நிலை குறிக்கும் பட்டப்பெயரேயன்றி ஒரு சாதிக்குரிய குல அல்லது குடிப்பெயரன்று. வேளாளர், முக்குவர், வேடர் என்போர் வன்னியம் என்னும் பதவியைப் பெற்றிருந்தனர். மேலும் இவர்களது ஆட்சி நிலவிய காலம் கி.பி.13 ஆம் நூற்றாண்டேயன்றி கி.மு.72 அன்று (பத்மநாதன், சி., 2003, பக்.69-91).

கலிங்கரது ஆட்சியிலே மட்டக்களப்பில் வன்னியர் குடியேற்றம் நடைபெற்றுள்ளது. இராமனாதபுரத்திலிருந்து கலைவஞ்சி, மங்கி அம்மை, செட்டிச்சி, மகிழரசி, பாலம்மை, இராசம்மை, வீரமுத்து ஆகிய ஏழு பெண்கள் தமது கணவன்மாருடனும், ஐந்து வன்னிக்குருமாருடனும் வந்தபோது அமரசேன மன்னன் அவர்களுக்கு விருந்தளித்து இவர்களின் பெயர்களில் ஏழு ஊர்களை வழங்கியதாகக் கர்ணபரம்பரைக்கதை உள்ளது.

ஈழத்தில் மாகோன் ஆட்சிக்காலத்தில் (கி.பி.1215 - கி.பி.1255) பெருமள விலான வன்னியருட்பட அனேக தமிழ்க் குடிகள் தென்னிந்தியாவிலிருந்து ஈழத்திற்குக் கொண்டுவரப்பட்டனர். இவர்களை மன்னன் பல்வேறு நிருவாகப் பொறுப்புக்களில் நியமித்தான். மாகோன் காலத்திற்கு முன்னரே வன்னிமை யாட்சி நிலைபெற்றிருந்தன. ஆனால் மாகோன் காலத்தில் இவர்களின் குடியேற்றம் அதிகமாகியது. இராஜரட்டை, மாயரட்டை, றோகணை ஆகிய மூன்று பிரதேசங்களிலும் வன்னிமைகள் இருந்துள்ளனர் (Pathmanathan, S., 1978, pp.88). இவ்வன்னிமைகள் கோரைக்களப்பு, சிங்காரத்தோப்பு (அட்டப்பள்ளம்), மலுக்கம்பிட்டி, சம்மாந்துறை, நாதனை, மண்டபத்தடி, விளாவெட்டுவான், ஆகிய ஊர்களில் இருந்தனர் இவ்வுர்களில் முறையே மேல் வரும் வன்னிமைகள் இருந்துள்ளனர்:

| | | |
|---|---|---|
| கோரைக்களப்பு | - | கற்பகப்பண்டார வன்னியன் |
| சிங்காரத்தோப்பு | - | செல்லப்பண்டார வன்னியன் |
| மலுக்கம்பிட்டி | - | அருணாசலப்பண்டார வன்னியன் |

சம்மாந்துறை - ஆனந்தப்பண்டார வன்னியன்

நாதனை - அம்பக்கப்பண்டார வன்னியன்

மண்டபத்தடி - அழகரெட்ண பண்டார வன்னியன்

விளாவெட்டுவான் - கனகரெட்ண பண்டார வன்னியன்

**வேளாளர்**

முற்காலத்தில் சேரன், சோழன், பாண்டியன் வேளாளர்களை முறையே நாயர்குலம் எனவும் பிள்ளைக்குலம் எனவும் காராளர்வம்சம் எனவும் விருதுகொடுத்து வந்தனர் என திருப்படைக்களஞ்சியம் என்னும் திருக் கோயில் பட்டயம் கூறுகின்றது என்று வி.சீ. கந்தையா, (1964, பக்.435) அவர்கள் குறிப்பிட்டாலும் திருக்கோயிலில் இவ்வாறான பட்டயம் இருந்த தற்கான எந்தவொரு ஆதாரமும் காணப்படவில்லை.

ஆலயங்களின் திருப்பணிக்காக வேளாள குலத்தவரான கலிங்க வேளாளர்கள் கி.பி. முதலாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் மட்டக் களப்பின் கோரைக்களப்பில் குடியமர்த்தப்பட்டதாகக் கூறுவர். இவர்களது முதலாவது ஆலயப்பணி திருக்கோயில் முருகன் ஆலயத்துடன் ஆரம்பமாகி யுள்ளது. இவர்களைக் கலிங்க மாகோன் முன்னிருந்தவாறே ஏழு குடிகளாக வகுத்துப் பணிகளைத் திட்டமிட்டு வழங்கினான் என குளிக்கல்வெட்டு குறிப்பிடுகின்றது. அப்பாடல் பின்வருமாறு.

*கண்டனொடு சருகுபில்லி கட்டப்பத்தன்*
*கருதரிய கவுத்தனு மத்தியாயன்*
*மண்டலத்தில் பொன்னாச்சி வயித்தியென்று*
*கோவசியர் மக்களிலே வர்ணமாக்கி*
*பண்டுமறை தவறாமல் எழுகுடியாய்*
*பகுத்தீசர் பணிபரிய பரவணியாய்*
*அண்டர்தமைச் சாட்சிவைத்து தத்தம் வாங்கி*
*அரனகத்து ஊழியராய் அமைத்துச் சொன்னார்*

இப்பாடலில் கண்டன்குடி, சருகுபில்லிகுடி, கட்டப்பத்தன்குடி, கவுத்தன்குடி, அத்தியாயன்குடி, பொன்னாச்சிகுடி, வைத்திகுடி என ஏழு குடிகள் வேளாள குலத்தினருள் அமைந்துள்ளது. முதலியார் எஸ்.ஓ. கனக ரெத்தினம் அவர்கள் பெரிய கவுத்தன்குடி, சின்னக்கவுத்தன்குடி, அத்தியாகுடி, வைத்தியனாகுடி, கோப்பிகுடி, சங்கரப்பத்தன்குடி, போக்கன்குடி என ஏழாகக் கூறியுள்ளார். F.X.C. நடராசா அவர்களது மட்டக்களப்பு மான்மியத்தில்

விறல் கலிங்கன் படையாட்சி
இருவருந்தான் முத்தகல்லி விருத்தி வைத்து

*மாகோன்தானும் முதன்மைதரும்*
*படையாட்சி வன்னியைச் சேர்ந்துபெறும்*
*தோப்பாவையைக் கைவசப்படுத்திப்*
*படையாட்சி குலத்தார்க்கும் பகுத்து ஈந்தான்*

என வரும் பாடலின் வேளாளரை ஏழு குடிகளாகக் குறிப்பிடாது வேளாளரது இரு குடிகளுடன் முக்குவ குலத்தவரான படையாட்சிகுடியுடன் அதிகாரப் பரவலாக்கம் செய்துள்ளமையையும் காணலாம். ஆனால் இது ஆட்சியதிகாரம் பெற்றவர்களைப் பற்றி மட்டுமே குறிக்கின்றதேயன்றி வேளாளர்குலத்தின் குடிகள் இவையிரண்டும் தான் என்பதல்ல. வேளாளர்வாழும் சில ஊர்களில் குடிகளின் பெயர்கள் பின்வருமாறு திரிபடைந்தும் வழங்கப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| கண்டன்குடி | - | கண்டப்பத்தன்குடி |
| அத்தியாகுடி | - | அத்தியன்குடி |
| வைத்தியனாகுடி | - | வைத்தியன்குடி |
| கவுத்தன்குடி | - | கவுத்தவன்குடி |
| சரிவிலிகுடி | - | சருகொலியன்குடி |
| மடவகுடி | - | மடவன்குடி |

எனவும் அவை வழங்கப்படுகின்றன. இவ்வேழு குடிகளும் சோழ நாட்டிலிருந்து வந்ததாக அறிய முடிகின்றது. சித்தாண்டிப்பிரதேசத்தில் உள்ள புத்தூர் வேளாளரும், குருக்கள் மடத்திலுள்ள செட்டி வேளாளரும் தனித் தனியாக தமிழகத்திலிருந்து வந்ததாகக் கூறப்படுகின்றது. மேலும் தெய் வேந்திரன்குடி, தன்மன்செட்டிகுடி, சிங்களக்குடி, குருக்கள் கொணர்ந்தகுடி என்னும் குடிகளும் காணப்படுகின்றன. பெரிய கவுத்தன்குடி, சின்னக் கவுத்தன்குடி எனும் இரண்டிற்கும் பதிலாக கவுத்தன் குடி என ஒன்றாகியதுடன் செட்டிகுடி என்னும் இன்னுமொருகுடி சேர்க்கப்பட்டுள்ளது (தில்லைநாதன், எஸ்., 2006, பக்.36). இவர்களுள் பொன்னாச்சிகுடி, வயித்திகுடி, அத்தியாகுடி, ஆகிய குடியினர் கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வர ஆலயத்துடன் பரிபாலனத் தொடர்புள்ளவர்களாக இருந்துள்ளனர். பெரிய கவுத்தன்குடியினர் மண்டூர் ஸ்ரீ கந்தசுவாமி கோயிலிலிலும், போரதீவு ஸ்ரீ சித்திரவேலாயுதசுவாமி கோயிலிலும் நிருவாகப் பணிக்குரியவர்களாக உள்ளனர். அமிர்தகழி ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலயத்திலும் நிருவாகப் பணிக்குரியவர்களாகவும் வேளாளர் அமைந்தள்ளனர்.

இவர்களுக்குரிய குல விருது ''காணியுழும்மேழி'' (மேழி - கலப்பை) என் அடையாளப்படுத்தப்படுகின்றது. ஆனால் இவர்கள் தற்காலத்தில் தாமரைமலர், சக்கரம், மேழி என்பவற்றைக் குறியீடாக வைத்துக்கொள்ளும்

வழக்கம் காணப்படுகின்றது. வேளாளர் கோரக்களப்பு, தம்பிலுவில், திருக்கோயில், காரைதீவு, களுவாஞ்சிக்குடி, மண்டூர், பழுகாமம், குருக்கள்மடம், கோட்டைமுனை, சித்தாண்டி முதலிய இடங்களில் நிறைந்து வாழ்கின்றனர்.

**சீர்பாதர்**

இலங்கையில் தமிழர்வாழும் இடங்களில் எல்லாம் முக்குவர், வேளாளர், கரையார் முதலிய குலங்கள் பரந்து பட்டுத் தாயகமாகப் பல பிரதேசங்களில் வாழ்கின்றனர். சீர்பாத குலத்தவர் மட்டக்களப்புப் பிரதேசத்தில் மாத்திரம் தாயகமாக வாழ்கின்றனர். சோழப்பேரரசு வலியற்று இருந்த காலத்தில் பழையாற்றில் கி.பி.831 இல் சிற்றரசனாக விளங்கிய குமராங்குச மன்னனின் புதல்வி சீர்பாததேவிக்கும் இலங்கை சிங்கைபுர மன்னனான வாலசிங்க மன்னனுக்கும் திருமணம் நடந்தேறியது,

பழையாறு அரண்மனையில் சில நாட்கள் தங்கி இருந்த வாலசிங்கன் (ஜெயதுங்க பரராசசிங்கன்) சீர்பாததேவியின் விருப்புக்காக இலங்கை நாட்டு வளங்காண கடல் மூலமாக இலங்கை நோக்கி வரும் வழியில் காற்றின் உந்துதலுக்கு அகப்பட்ட கப்பலானது இலங்கையின் கிழக்குத் திசையை நோக்கி ஓடியது. கப்பல் திருகோணமலையை அண்மித்ததும் நகராது நின்று விட்டது. அரசனின் ஆணை நிமித்தம் கடலிற் குதித்த சிந்தன் கப்பலின் கீழே கடலடியில் விநாயகர் திருவுருவம் ஒன்றினைக்கண்டு தூக்கி எடுத்துக் கப்பலிற் சேர்த்தான். அவ்வுருவத்தை வணங்கிய சீர்பாததேவி இக்கப்பலானது தடையின்றி ஓடி எங்கு தரையைத் தட்டுகின்றதோ அங்கு ஆலயம் அமைப்பித்து விழாக் கொண்டாடுவேன் என வேண்டிக்கொண்டாள். கப்பலும் தடையின்றி ஓடி மட்டக்களப்பை அண்மித்ததும் மட்டக்களப்பு வாவியினூடாகச் சென்று வீரமுனை என்னும் இடத்தில் கரைதட்டியது. இவ்விடத்தில் இறங்கிக் கூடாரம் அமைத்து விநாயகருக்கு ஆலயம் எழுப்பி அவ்வாலயத்திற்கு சிந்தாயாத்திரைப் பிள்ளையார் ஆலயம் எனப் பெயர்சூட்டிச் சோழநாட்டிலிருந்து சீர்பாத தேவிக்குத் துணையாக வந்த ஆரிய நாடு, திருவொற்றியூர், கட்டுமாவடி, பெருந்துறை என்னும் நகரங்களில் வாழ்ந்த சோழ நாட்டு மக்களை அங்கு குடியமர்த்தினான், அவர்கள் அரசகுலத்தவர், அந்தணர், வேளாளர், வணிகர் ஆகிய குலங்களைச் சேர்ந்தவர்களாவர். பிற்காலத்தில் அவர்களுக்குள் வேறுபாடு தோன்றலாம் எனக் கருதிய மன்னவன் சீர்பாததேவியின் விருப்பு, சிந்தாத்திரைப் பிள்ளையார் ஆலய வழிபாடு, சோழநாட்டு மக்களின் குலப் பிரிவு ஆகிய மூன்றிற்கும் முடிவு கட்டினான். அதன் காரணமாக வந்த மேற்படி நான்கு குலத்தவரையும் ஒரே குலமென வகுத்து சீர்பாததேவியின் பெயரால் சீர்பாதகுலம் என நாமம் சூட்டி அவர்களுக்கு அரவிந்தமலர்,

கொடி, செங்கோல் என்பன பொறிக்கப்பட்ட அரசகுல விருதையும் வழங்கினான். அத்துடன் ஆலயத்திற்கும் மக்களுக்குமாக பல ஏக்கர் நிலங்களை வயல்நிலங்களாக மானியமாக வழங்கிச் செப்பேட்டிற் பொறித்து மன்னவன் கையளித்துள்ளமையைச் செப்பேடுகள் கூறுகின்றன.

**சீர்பாதகுலம் பற்றி வீரமுனைச்செப்பேட்டில்**

*ஓர்பெயரினால் ஓர்குலத்தவரென*
*சீர்பாததேவியின் திருப்பெயர்சூட்டி* எனவும்

**திருகோணமலைச் செப்பேட்டில்**

*அரசியின் குலமென்ன அவள் நாமமே பெற்று*
*அன்று சீர்பாதமானோன்* எனவும்

**துறைநீலாவணைச் செப்பேட்டில்**

*விருதென வீந்து விருப்புடன் தேவியின்*
*திருப்பெயர்என்றும் மறவாது விளங்க*
*சீர்பாதத்தோரென சீரிய நாமம்*
*பெயர்பெறுவுவகைப் பிளம்போடீந்து* எனவும்

**கொக்கட்டிச்சோலைச் செப்பேட்டில்**

*திரையகழ்சூழ் புவியரசன் சேர்த்து*
*வைத்து சீர்பாதம் என்று செப்பினானே* எனவும்

**திருக்கோயில் செப்பேட்டில்**

*சீர்பாததேவியின் திருப்பெயரால் சீர்*
*பாதகுலமென சிறந்த பெயர்சூட்டி*

எனவும் குறிப்பிடப்பட்டுள்ளன என அருள் செல்வநாயகம் (1982) அவர்கள் இரண்டாம் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் (1968 ஜனவரி மூன்றாம் திகதி) வாசிக்கப்பட்ட சீர்பாதகுல வரலாறு என்னும் தலைப்பிலான கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். மேலும் M.D. Raghavn (1952, pp.188 - 193) அவர்கள் தமது ஆய்வுக்கட்டுரையில் துறைநீலாவணையில் இருந்து பெறப்பட்ட இக்கல்வெட்டினைப் பூரணமாகக் காட்டியுள்ளார்.

மேலும் M.D. Raghavn (1955-8-11) அவர்கள் தினகரன் பத்திரிகைக்கு சீர்பாத சமூகத்தார் என்னும் தலைப்பில் எழுதிய கட்டுரையில் கிழக்கு மாகாணத்தில் கல்வெட்டு என்பது கையால் எழுதப்பட்டு புராதன குடும்பங்களிடம் விலைமதிக்கமுடியாத பொக்கிசம் போல பாதுகாக்கப்பட்டிருக்கும் வரலாறுகளைக் குறிக்கும் எனவும் எழுதியுள்ளார்.

சீர்பாத குலத்தினரது குடிகள் பற்றி கொக்கட்டிச்சோலைக் கல்வெட்டில் சிந்தாத்திரன்குடி, காலதேவன்குடி, காங்கேயன்குடி, நரையாயிகுடி, வெள்ளாயி குடி, முடவன்குடி, பெண்பழச்சிகுடி என ஏழு குடிகள் குறிப்பிடப்பட்டுள்ளது. துறைநீலாவணைச் செப்பேட்டில் சிந்தாத்திரன்குடி, பழச்சிகுடி, காலதேவன் குடி, படையாண்டகுடி, காங்கேயன்குடி, பரதேசிகுடி, நரையாயிகுடி, பாட்டு வாழிகுடி, வெள்ளாயிகுடி, ஞானிகுடி, முடவன்குடி என பதினொருகுடிகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

தற்போது துறைநீலாவணையில் வைரியடப்பன்குடி, வெல்வேலன்குடி, செம்பகநாச்சிகுடி, ஆகிய குடிகளும் குருமண்வெளியில் அவியரகுடி என்னும் குடியும் காணப்படுகின்றன. சீர்பாதகுலத்தினர் மட்டக்களப்புப் பிரதேசத்தில் வீரமுனை, துறைநீலாவணை, குருமண்வெளி, மண்டூர்க் கோட்டைமுனை, மகிழூர்முனை, சேனைக்குடியிருப்பு, நாவிதன்வெளி, தம்பலவத்தை, கரையாக்கன் தீவு, ஆகிய பழம்பெரும் கிராமங்களைத் தாயகமாகக் கொண்டு வாழ்கின்றனர். மல்வத்தை, 11 ஆம் கிராமம், 13ஆம் கிராமம், 15ஆம் கிராமம், 35ஆம் கிராமம் முதலிய குடியேற்றக் கிராமங் களிலும் குடியேறி வாழ்கின்றனர். இவர்கள் வீரமுனை ஸ்ரீ சிந்தாயாத்திரைப் பிள்ளையார் ஆலயம், மண்டூர் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயம், துறைநீலாவணை கண்ணகி அம்மன் ஆலயம் முதலான பழைய ஆலயங்களுடன் வரலாற்றுத் தொடர்புடையவர்களாக உள்ளனர்.

இவர்களின் பிரதேச ஆட்சி ஒன்று இருந்தது. அதற்கு வீரமுனை தலைநகராக விளங்கியது. சீர்பாத தேவியுடன் வந்த அரச பரம்பரையைச் சார்ந்த பரிபாலத்தினரை தாம் கண்டறிந்த இடத்தை பல பரிபாலனப்பகுதி களாகப் பகுத்து பரிபாலித்து வந்தனர். வீரமுனையில் ஒரு ஆலயத்தையும் சோழர்பாணியில் அமைத்தனர் (ஈழத்துப்பூராடனார், 2005, பக்.102).

**கரையார்**

மட்டக்களப்புப் பிரதேசத்தில் வாழ்ந்து வரும் தமிழர்கள் மத்தியில் முக்குவர், வேளாளர், சீர்பாதர், கரையார் என்போரே பெரும்பான்மைக் குலத்தவர்கள். முக்குகர் என்போர் மலையரசன், குடியரசன், திருவரசன் ஆகிய மூன்று சகோதர அரசர்களையும் இணைத்துக் கூறும் வழித் தோன்றல்கள் என்னும் கருத்தையும் வேளாளர் என்போர் விவசாய உற்பத்தியில் சிறந்த பண்ணை யாளர்கள் என்னும் கருத்தையும் தர, சீர்பாதர் என்போர் சீர்பாத தேவி என்னும் அரசியின் வழித்தோன்றல்கள் எனக் கொள்ளப்பட, கரையார் என்போர் ஒரு சந்ததியையும் குறித்துரையாமல் நீர்நிலைகளை அண்மிய நிலப்பரப்பில் வாழ்பவர்கள் என்ற கருத்தைக் கொண்டுள்ளது.

மட்டக்களப்பிற் குடியேறிய கரையார் தொடக்க காலத்தில் மீன்பிடித் தொழிலையும் பின்னர் விவசாயத்தையும் தொழில்களாகக் கொண்டுள்ளனர். இவர்கள் பெரும்நிலச் சுவாந்தராயுமுள்ளனர். சமூக நிலையில் முன்னேறிய சமூகமாக விளங்குகின்றனர். சிறப்பாகக் கல்வித்துறையில் உயர் சமூகமாக இவர்கள் நிலைபெற்றுள்ளனர். இவர்கள் ஆரம்பகாலத்தில் ஆரைப்பற்றை (ஆரையம்பதி) தீர்வத்துறையில் வந்திறங்கியதாக நேர்காணலின் மூலம் அறியமுடிகிறது (கதிர்காமத்தம்பி, K.O.V., 2007). இவர்கள் பின்னர் கல்லடி, அமிர்தகழி, வாழைச்சேனை, கல்லாறு, திருக்கோயில் ஆகிய பகுதிகளில் நிறைந்து வாழலாயினர். இவர்களிடையே காணப்படும் குடிப்பிரிவுகளைச் சான்றுபடுத்தியும் வலுவான சான்றுகளைக் கொண்டும் இவர்கள் பண்டைய தமிழகத்திலிருந்து வந்திருக்க முடியுமெனக் கருதமுடிகின்றது.

இதனிடையே இங்குள்ள சமூகப் பெரியார்கள் கரையார்குலம் என்பது ஆதி காலத்து நாகர்குலத்தின் பிரிவான குருநாகர் என்று கருதுகின்றனர் (ஆரையூர் அமரன், 2009). அமிர்தகழிப்பகுதியில் வாழும் கரையார் குருகுலக்கரையார் எனக் கூறுகின்றனர். பிழைப்பிற்காக மீன் பிடித்தொழிலை மேற்கொண்ட கரையாரும் பின்பு இணைந்தனர். காலப்போக்கில் கரையாரின் பிரிவுகள் ஒன்றித்ததாகக் கருதமுடிகின்றது.

இவர்களை ஏழுகுடிகளாக வகுக்கப்பட்ட கல்வெட்டுப்பாடல்

*கரையூரார்கம்பிளியார்ஆறுகாட்டி*
*கருது முதலித்தேவன் வயித்திவேலன்*
*தரைசெறி வங்காளம் வீரமாணிக்கன்தான்*
*கரையார்குடி ஏழாய்த் தரித்தான் பாரில்*

எனக் கூறுகின்றது (பூர்வசாதிக்கல்வெட்டு ஏட்டுப்பிரதி, 1861). அப்பாடலின் கூற்றுப்படி கரையார்குலத்தில் கரையூரார்குடி, கம்பிளியார்குடி, ஆறுகாட்டிக் குடி, முதலித்தேவன்குடி, வைத்திவேலன்குடி, வங்காளக்குடி, வீரமாணிக்கன் குடி என ஏழாக வகுக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

இதனை விட போற்றிகுடி, விசிறிப்பத்தான்குடி, வைத்திவேலன்குடி, கரையூரார்குடி, கம்பிளியார்குடி, வீரமாணிக்கன்குடி, முதலித்தேவன்குடி என ஏழாக வகுக்கப்பட்டுள்ளது (சாதியியல் கல்வெட்டு ஆறுமுகபிள்ளை, வீ.தோ.பொ.த., 1821). குடிகள் ஊருக்கு ஊர் திரிபடைந்தும் வேறுபட்டும் ஒற்றுமைப்பட்டும் உள்ளன. குடியமர்வும், குடிப்பெயர்ச்சியும் இத்தன்மைக்கு காரணமானது எனக் கூறலாம். உதாரணமாக

**பெரியகல்லாற்றில்**

வீரமாணிக்கன் குடி
ஆண்டசெட்டிகுடி
வங்காளக்குடி
பத்திநாச்சிகுடி
முதலித்தேவன்குடி
கம்பிளியார்குடி
வகுத்தவேலன்குடி
பெரியகுடி
போற்றிகுடி
ஆறுகாட்டிகுடி முதலிய குடிகளும்

**கோட்டைக்கல்லாற்றில்**

செம்பன்படை ஆராச்சிகுடி
முதலித்தேவன்குடி
சூரிய அடப்பன்குடி
ஆறுகாட்டியாகுடி
இராசாத்தைகுடி
கம்பிளியாகுடி
கலைஞானிகுடி
அச்சங்கிகுடி
பெரியகுடி
வகுத்தவேலன் குடி
வங்காளக் குடி
சடைஞானிகுடி
வீரமாணிக்கன் குடி
முதலிய குடிகளும்

**ஆரையம்பதியில்**

சாம்பாநோட்டிகுடி
ஆறுகாட்டிகுடி
முதலித்தேவன் குடி
திருவிளங்குகுடி
குரவர்குடி
புத்திநாச்சிகுடி
அருமைத்தேவன் குடி
விக்கிரமபாலசிங்கன் குடி
வங்காளக் குடி
வீரமாணிக்கத்தேவன் குடி
வைத்திவேலன் குடி
புலவனார்குடி
பொன்னாச்சிகுடி
அலரித்தேவன் குடி
சிறப்பினாகுடி

முதலிய குடிகளும் விளங்குவதை அறியக் கூடியதாய் உள்ளது. இவர்கள் வாகரை, மாங்கேணி, பனிச்சங்கேணி, தன்னாமுனை, புளியந்தீவு, அமிர்தகழி, மட்டிக்கழி, கல்லடி, கல்லடி உப்போடை நாவற்குடா, நொச்சிமுனை, ஆரையம்பதி, கோட்டைக்கல்லாறு, பெரியகல்லாறு, சவளக்கடை, சின்ன முகத்துவாரம், அறுகம்பை முதலான இடங்களில் நிறைந்து வாழ்கின்றனர்.

இவர்கள் பழம்பெரும் ஆலயங்களான அமிர்தகழி மாமாங்கேஸ்வர ஆலயம், மண்டூர் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயம் முதலியவற்றில் நிருவாகப் பணிக்குரியவர்களாக உள்ளனர். இவர்களது குலவிருது "தோணி" என குலவிருதுக் கல்வெட்டு அடையாளப்படுத்துகின்றது.

**கோயிலார்**

கோயிலார் கி.பி. முதலாம் நூற்றாண்டில் ஆலயக்கடமைகளின் பொருட்டு வேளாளருடன் இங்கு கொண்டு வரப்பட்டதாகக் கூறப்படுகின்றது. கோயிலாருக்கு திருக்கோயில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயம், மண்டூர் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயம், கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயம், கோயில்போரதீவு ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயம் முதலிய ஆலயங்களிற் கடமைகள் வழங்கப்பட்டுள்ளன.

ஒரு சிலர் இவர்களை வேளாளர்குலத்தின் பொன்னாச்சி குடியுடன் தொடர்பு படுத்திக் கூறுகின்றனர். கங்காணி, கவுடாக்காரன் என இவர்கள் இரு பிரிவுகளாகக் கொண்டு கோயிற்கடமைகளை மேற்கொண்டுள்ளனர். இவர்கள் மட்டக்களப்புப் பிரதேசத்தில் திருக்கோயில், கொக்கட்டிச்சோலை, கோயில்போரதீவு, மண்டூர் முதலிய பகுதிகளில் நிறைந்து வாழ்கின்றனர். இவர்களது குலவிருதாக ''கமலமலர்'' வழங்கப்பட்டுள்ளது.

**தட்டார்**

இவர்கள் மட்டக்களப்பிற் பொற்கொல்லர் அல்லது கம்மாளர் என அடையாளப் படுத்தப்படுகின்றனர். விஸ்வகர்மாகுலத்தினர் என்றே தங்களைக் குறிப்பிடுகின்றனர். இவர்கள் கி.பி.ஆறாம் நூற்றாண்டின் பின்னர் விஸ்வப் பிராமணர் என அழைக்கப்பட்டனர் என வரலாற்றாசிரியர் தேர்ஸ்டன் குறிப்பிடுகின்றார்.

மட்டக்களப்பில் தமது தொழில் நிமித்தம் முன்னேறிய சமூகமாக இவர்கள் காணப்படுகின்றனர். இவர்களைக் கலிங்க மன்னன் ஏழு குடிகளாக வகுத்து வைத்தான். அதனைக் கூறும் கல்வெட்டுப்பாடல் பின்வருமாறு கூறுகின்றது:

*சூரியடப்பனொடு சும்மாடு கட்டாடி பதஞ்சலியார்*
*வீரியவேளாளருள் மொத்தி காலமுறு வேலன்*
*ஆரிய ஆட்டுவள்ளி ஆனந்தி ஆசாமி ஏழுகுடிகளென*
*பாரினில் கலிங்கன்றான் அமைத்துவைத்தான்''*

இப்பாடல் சூரியடப்பன்குடி, சும்மாடுகட்டுக்குடி, கட்டாடிகுடி, பதஞ்சலி குடி, ஆட்டுவள்ளிகுடி, ஆனந்திகுடி, ஆசாமிகுடி என ஏழு குடிகள் அமைந்துள்ளன. ஆசாரிகுடியை ஆசாமிகுடி எனக் கூறப்பட்டுள்ளது. அச்சுப்பிழை காரணமாகவே ஆசாரிகுடி ஆசாமிகுடியாயிற்று என அக்குலத்தைச் சேர்ந்த பெரியார் (செல்லத்துரையுடன், பூ.ம., 2006) தனது கருத்தைத் தெரிவித்தார்.

இவர்கள் எருவில், பெரியபோரதீவு, முனைத்தீவு, பட்டாபுரம், ஒந்தாச்சி மடம், ஏறாவூர், கல்லாறு, அன்னமலை, பாண்டிருப்பு, அக்கரைப்பற்று,

மட்டக்களப்பு முதலிய இடங்களில் வாழ்கின்றனர். சில காலத்தின் பின்னர் சிங்களக்குடி, வடராமன்குடி, கொல்லக்கந்தன்குடி, சம்மாங்காரக்குடி, முத்தன் குடி, தட்டாகுடி என்னும் குடிகளும் இணைந்துள்ளன. பழம்பெரும் ஆலயமான பெரியபோரதீவு ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலயத்தின் நிருவாகத் தினராக உள்ளனர் (தில்லைநாதன், எஸ்., 2008, பக்.66,70). இவர்களது குல விருதாக ''குறடு'' அடையாளப்படுத்தப்படுகின்றது.

### செங்குந்தர்

செங்குந்தர் சோழர் ஆட்சிக்காலத்தில் தென்னிந்தியாவிலிருந்து மட்டக் களப்பிற்கு வந்துள்ளனர். இவர்களில் ஒரு பிரிவினர் யாழ்ப்பாணத்திலிருந்து முள்ளியவளை வழியாக மட்டக்களப்புக்கு வந்துள்ளார்கள் (அழகேசமுதலி, 2003).

இவர்கள் கைக்கோளர், முதலிகள் எனவும் அழைக்கப்பெறுகின்றனர். ஆரம்ப காலத்தில் இக்குலத்தினர் நெசவுத்தொழிலைச் சீவனோபாயமாகப் புரிந்தனர். தற்காலத்தில் அவர்களிடையே சிறந்த கல்விமான்களும் உள்ளனர். கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயம், அமிர்தகழி ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலயம், ஆரைப்பற்றை ஸ்ரீ கந்தசுவாமி கோயில் முதலிய கோயில்களின் திருவிழாவின் போது கொடியேற்றத்திற்கான கொடிச்சீலைகள் இவர்களால் வழங்கப்பட்டு வந்தன. இன்றும் மாமாங்கேஸ்வர ஆலய வருடாந்தத் திருவிழாவின் போது கொடியேற்றத்திற்கான கொடிச்சீலைகள் மட்டக்களப்பு வீரகத்திப்பிள்ளையார் ஆலயத்திலிருந்து இவர்களால் எடுத்துச் செல்லப்படுவது வழக்கமாக இருந்து வருகின்றது.

இவர்கள் மட்டக்களப்பு தாமரைக்கேணி, ஆரையம்பதி, கோட்டைக் கல்லாறு, கல்முனை ஆகிய இடங்களைத் தாயகமாகக்கொண்டு வாழ்கின்றனர். இவர்களுக்குரிய குல விருதாக ''நூலச்சு'' பாண்டியகுலவிருதுக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### வேட வேளாளர்

வேளாளர் தென்னிந்தியாவிலிருந்து வரும்போது தமது வீட்டூழியப் பெண் களையும் கொண்டு வந்தனர். இப் பெண்கள் வேளாளரிடமிருந்து விலகித் தாம் திருமணம் முடித்த ஆடவரின் பெயரிட்டு வந்த குடிகள் ஏழும் வேட வேளாளர் என அழைக்கப்பட்டனர் (நடராசா, F.X.C., 1980, பக்.52). இக் குலத்தினரது குடிகளாக

புத்தூர்க்குடி
கொங்குநகரார்குடி

காரைக்காட்டார்குடி
மருங்கூர்குடி
சந்தாப்பணிக்கன் குடி
மழுவரசன் குடி
வீரச்சோலைக் குடி

ஆகிய ஏழும் விளங்கின. இவர்கள் பரம்பரை வேடர்களாக இருந்து பின்னர் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டதால் வேட வேளாளர் எனப்பட்டனர் என இக்குலப் பெரியார்கள் கூறுவர். பண்டைய ஆலயங்களில் வேடர்களின் தொடர்பு காணப்படுகின்றது. இவர்கள் அப்பகுதி வேளாளர்களுடன் திருமண உறவு தொடர்புற்றிருப்பதால் வேடவேளாளர்குலம் தோன்றக்காரணமாக அமைந்தள்ளது. வேடர்களுக்குரிய குல விருதான ''வில்லம்பு'' வேட வேளாளர்களுக்கும் கையாளப்படுகின்றது.

**பண்டாரப்பிள்ளைகள்**

இவர்கள் கரவெட்டிப்பகுதியை தாயகமாகக் கொண்டு பின்னர் பழுகாமத்திற்கு விரிவு பட்டதாகக் கூறுவர். சமூகக் கடமைகளில் மட்டுமன்றி இவர்கள் பாதுகாப்புக் கடமைகளிலும் ஈடுபட்டிருந்தனர். 1827 இல் நடைபெற்ற சாதிக்கணக்கெடுப்பில் ''உள்ளூர்ப் பாதுகாவலர்கள்'' என குறிப்பிடப் பட்டுள்ளனர். திருப்படைக்களஞ்சியத்தில் இவர்களைப் பிள்ளைமார் எனக் குறிக்கப்பட்டுள்ளது.

பண்டாரப்பிள்ளைகள் வேடவேளாளர்களுள் கலப்புற்றமை பற்றிய செய்திகளும் இப்பிரதேசத்தில் வழக்கில் உள்ளன. பழுகாமத்தின் பண்டாரப் பிள்ளைகள், கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் திருவிழாவின் போது வில்லம்பு ஏந்தி பங்கேற்றமையை இதற்குச் சான்றாகக் கூறுவது கள ஆய்வின்போது அறியக் கிடைத்தது. இவர்களது குலவிருதாக ''கைப்பிரம்பு'' அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

**தனக்காரர்**

இவர்கள் சோழர் ஆட்சிக் காலத்தில் குடியேறியவர்களாகக் கூறப்படுகின்றது. இவர்கள் ஆரம்பத்தில் புகையிலைச் செய்கையைத் தொழிலாகக் கொண்டு பின்னர் சுருட்டுத் தயாரித்தல், விற்பனை செய்தல் ஆகிய பணிகளிற் செயற் பட்டதாகத் தெரிய வருகின்றது. தற்காலத்தில் விவசாயத் தொழிலையும் மேற்கொண்டு வருகின்றனர். இவர்கள் செங்கலடி, பிள்ளையாரடி, கல்லடித் தெரு போன்ற இடங்களில் வாழுகின்றார்கள். சேனைக்குடியிருப்புக்கும்

துறைநீலாவணைக்கும் இடையிலுள்ள இடமாகிய துரைவந்தியமேடு என்னும் ஊர் இவர்களது தாயகமாகக் கூறப்படுகின்றது.

**நளவர்**

இவர்கள் நம்பிகள் எனவும் மறுபெயர் கொண்டுள்ளனர். இவர்கள் உலகநாச்சி இளவரசி காலத்திலும் பின்பு மாகோன் மன்னன் காலத்திலும் மட்டக்களப்பிற்கு கொண்டுவரப்பட்டதாகக் கூறப்படுகின்றது. ஏடுகள் உறுதிகள் போன்ற பழைய ஆவணங்களில் நம்பிகள் என்ற பதம் இவர்களைச் சுட்டி நிற்கின்றது. மட்டக்களப்புப் பூர்வீக வரலாறு கூறும் ஏடுகளில் புராதன சமூகங்களில் ஒன்றாக நளவர்குலம் எழுதப்பட்டுள்ளது. அதன் பாடல் ஒன்றில்

*நழுவிய நம்பிமாரை நளவராய் வரிசை பண்ணி*
*வழுவிலா மதுவெடுக்கும் வருணமென்றியம்பினாரே''*

எனக் காணப்படுகின்றது. இவர்கள் மண்முனை, பாலமுனை, சம்மாந்துறை, முறக்கொட்டான்சேனை, ஏறாவூர், மட்டக்களப்பு, நாவற்குடா, மாங்காடு முதலிய இடங்களில் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் மட்டக்களப்பு மகாநர சிங்க கோயிற் பரிபாலகர்களாக உள்ளனர். இவர்களின் வழிபாட்டுத் தெய்வம் பற்றி ''நளவருக்கு வயிரவனாம்'' என சாதித்தெய்வக் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.

**வண்ணார்**

இவர்களைப் புலவனார்குடி, பெரியதம்பிரான்குடி எனவும் அழைப்பர். இவர்களது குடிப்பிரிவு பற்றிக் கூறும் கல்வெட்டுப்பாடலில்

முதலைக்குடா வண்ணார்
தாழங்குடா வண்ணார்
கரையார வண்ணார்
ஒழுங்கு வண்ணார்
பாவாடை வண்ணார்
கல்வயல் வண்ணார்
மியாங்கொடை வண்ணார்

என ஏழு பிரிவினர்களாகக் காணப்படுகின்றனர் (சாதிக்கல்வெட்டு, 1821). இக்குடிப்பிரிவுகள் இவர்கள் குடியேறிய இடங்களை மையப்படுத்துவதாகவே உள்ளது. மட்டக்களப்பு மான்மியத்தில் இக்கல்வெட்டுப்பாடல் காணப் படவில்லை.

இவர்கள் நீண்ட கால வரலாற்றுக்குரிய குலத்தினராவர். இவர்கள் ஈரங்கொல்லிகள் எனவும் பெயர்கொண்டிருந்தனர். உயர்குலத்தினராகக்

கருதப்படும் குலத்தினரால் வண்ணார், நாவிதர் ஆகிய இரு குலத்தினரும் சிறப்பாகக் குடிமக்கள் என அழைக்கப்படுவர். இக்குலத்தினரின் தலைவன் ''தண்டக்காரன்'' எனவும் ''கட்டாடி'' எனவும் கிராமங்களில் அழைக்கப் படுகின்றார். மட்டக்களப்புத் தமிழகத்தில் தண்டக்காரனைக் கட்டாடி எனவும் கண்ணகி அம்மன் கோயிற் பூசகரைக் கட்டாடியார் எனவும் அழைக்கும் மரபு காணப்படுகிறது. தமிழ்ச் சொற்களுக்கு இறுதியில் ஈறுகளை இட்டு கருத்து மாற்றத்தைத் தரும் வழக்கத்தினை இது காட்டுகிறது (கட்டாடி - தண்டக்காரன், கட்டாடியார் - பூசகர்). பிரசித்தி பெற்ற ஆலயங்களான கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயம், சித்தாண்டி ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயம் முதலிய ஆலயங்களில் திருவிழா செய்யும் உரிமையை இவர்கள் பெற்றுள்ளனர். இவர்களை ஏகாலி எனவும் அழைப்பர். இவர்கள் பிரசித்தி பெற்ற புன்னச்சோலை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய பரிபாலகர்களாக உள்ளனர். இவர்களது குலவிருதாக ''கல்'' அடையாளப் படுத்தப்பட்டுள்ளது.

### நாவிதர்

இவ்வம்சத்தினர் இளவரசி உலக நாச்சியின் குடியேற்றத்துடன் அடங்குபவர் களாகவும் இவர்கள் பன்னிரெண்டாம் நூற்றாண்டிற் கலிங்க மாகோனால் தென்னிந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டவர்களாகவும் அறியமுடிகின்றது (செபஸ்தியான் கவுரியல், 2009, பக்.23).

இக்குலம் மருத்துவ சமூகம் என்றே ஆரம்ப காலத்தில் வழக்கிலிருந் துள்ளது. இவர்களது தொழிலாகச் சவரத்தொழில் குறிப்பிடப்படினும் ஆயுர் வேத மருத்துவத்தொழிலில் இவர்கள் சிறப்புற்று விளங்கியிருந்தனர். இக்குலத்தினரின் ஆண்களை ''பரியாரி'' எனவும், பெண்களை ''மருத்துவிச்சி'' எனவும் அழைக்கும் வழக்கு இருந்துள்ளது.

திருப்படைக்களஞ்சியத்தில் இவர்களை ''பிராணஉபகாரி'' எனக் குறிப் பிடப்பட்டுள்ளது. ஆயுர்வேத வைத்தியக் கலையின் ஒரு பிரிவான ''சல்லியக்கிரியை'' இன்று மேலைநாட்டு ''அறுவைச்சிகிச்சை''யாகப் பெரு வளர்ச்சி கண்டுள்ளது.

நாவிதர்குலத்தினரை

வலையிறவு நாவிதர்

மண்முனை நாவிதர்

மகிழடித்தீவு நாவிதர்

சவளக்கடை நாவிதர்

பாலமுனை நாவிதர்

வலைவாய் நாவிதர்

சம்மாந்துறை நாவிதர் (ஏட்டுப்பிரதி, 1861).

*சாரியுறு மண்முனை அதில் அறவு தங்கும் மகிழடித்தீவு, சவளக்கடை*
*ஏரியுறு பாலமுனை வழலவாயிலங்கு சம்மாந்துறை என்னுமேழாய்..*

என ஏழாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. பாண்டியராட்சிக்காலத்தில் இவர்களுக்கு அம்பட்டர் என்னும் பெயர்வழங்கப்பட்டதாக அறிய முடிகின்றது. இக்குலத்தினரின் குல விருதாக ''கத்தரிக்கோல்'' வழங்கப்பட்டுள்ளது. இவர்களின் ஆரம்ப குடியிருப்பாக மண்முனையை அடுத்துள்ள தாழங்குடா கூறப்படுகின்றது. இக்குலத்தினர் மண்முனை, மகிழடித்தீவு, பாலமுனை, சவளக்கடை, எருவில், சம்மாந்துறை, பாண்டிருப்பு, மண்டூர் முதலிய இடங்களிற் பரவலாக வாழுகின்றனர்.

தற்போது இவர்கள் கல்வித் துறையில் முன்னேற்றமடைந்து காணப்படுகின்றனர். டாக்டர்களாகவும், அரச தனியார் துறைகளில் முக்கிய பதவி வகிப்பவர்களாகவும், எழுத்தாளர்களாகவும் விளங்குகின்றனர். இவர்களுக்கு மண்டூர் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்திலும், சித்தாண்டி ஸ்ரீ சித்திரவேலாயுத ஆலயத்திலும் திருவிழாச் செய்யும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. இக்குலத்தினரின் தலைவனை ''முல்லக்காரன்'' எனவும் அழைப்பர்.

**பறையர்**

இவர்களது மட்டக்களப்புக் குடியேற்றம் இளவரசி உலகநாச்சி காலத்துடன் இணைத்துக் கூறப்படுகின்றது. இக்குலத்தினர் ஆலயக் கடமைகளில் முக்கியத்துவம் வாய்ந்தவர்களாகக் கருதப்பட்டுள்ளனர். அம்மன் வழிபாட்டில் இவர்களது சேவை மகத்தானதாகக் கருதப்படுகின்றது. அம்மன் வழிபாட்டிற்கு நடைத்தாளமிடும் பறை ஒலியே உரித்தாகும் (தில்லைநாதன், எஸ்., 2006, பக்.171). இவர்கள் வள்ளுவர்குலம் எனவும் அழைக்கப்படுவர்.

பறைமேளக்கலை ஒரு தனிக்கலையாகும். உள்ளொலி, பரப்பொலி, புறவொலி இவைகளினூடே பேசப்படும் தாளக்கட்டுக்கள், குறு, இடை, நெடு, எடு, முடி, பேதவொலி வரையறைப்பண்புகள், தம்பட்டம், சொர்ணாளி, ஆகியவற்றின் தாள உறுப்புக்கள், மடிப்புக்கள் என்பனவற்றில் உள்ளடங்குவதாக உள்ளது (தேனூரான், 1976). இவைகளில் புலமை பெற்றவனே உண்மையான பறைமேளக்காரன் என இச்சமூகத்தின் மூத்தோர் தெரிவிப்பர் பரசுராமன், 2008). இவர்களது சமூகத் தலைவன் ''மூப்பனார்'' என அழைக்கப்படுகின்றார். இக்குலத்தினர் கோளாவில், களுதாவளை, புன்னைக்குளம், ஆரையம்பதி, கல்முனை முதலிய இடங்களில் பரவலாக வாழ்கின்றனர். இவர்களது குல விருது ''மேளம்'' என பாண்டி மன்னன் அடையாளப்

படுத்தியுள்ளான் என்பது பாண்டிய குலவிருது கல்வெட்டினூடாக அறியக் கிடைக்கின்றது.

**கடையர்**

கடையர் சோழர் ஆட்சியில் குடியேற்றப்பட்டவர்களாக அறிய முடிகின்றது. ஆரம்ப காலத்தில் முத்துக்குளிப்பதைத் தொழிலாகக் கொண்ட இவர்கள் பின்னர் கட்டடப்பணிக்குரிய நீறு, சுண்ணாம்பு தயாரிக்கும் தொழிலை மேற்கொண்டனர் எனக் கூறப்படுகிறது.

இவர்கள் ஆரம்ப காலத்தில் சைவ சமயத்தினராக இருந்துள்ளனர். பின்னர் பெரும்பாலானோர் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவியவர்களாகக் காணப்படுகின்றனர். சாதிப்பாகுபாட்டின் காரணமாகச் சமய மாற்றம் நடைபெற்றதாகத் தெரியவருகிறது. இவர்களது ஆரம்ப இடம் கோயில்க் குளம் எனவும், பின்னர் கல்லாறு முதலிய இடங்களுக்குக் குடியேறியதாகவும் அறியவருகின்றது. இவர்களது குல விருது ''கூடை'' என அடையாளப் படுத்தப்பட்டுள்ளது.

எனவே குழுக்களாகவும் பின்னர் குலங்களாகவும், குடிகளாகவும் வாழ்ந்து வரும் மட்டக்களப்பு மக்கட் சமுதாயமானது தமது கடமைகளை ஒன்றிணைந்து பகிர்ந்து கொண்டது. ஒவ்வொரு குலத்தினரதும் குடியினரதும் தொண்டூழியங்கள் ஒவ்வொருவருக்கும் அவசியமாகத் தேவைப்பட்டன. அவை கோயிற்சடங்குகள் முதல் மரணச்சடங்கு ஈறாக அனைத்திலும் அமைந்தன.

# 2
# சமயப் பண்பாடுகள்

இவ்வியல் மட்டக்களப்புப் பிரதேசத்தில் வாழும் தமிழரின் சமயப் பண்பாட்டு முறைகளைக் குறிப்பிடுகின்றது. ஆதிகாலத்திலே தமிழர்கள் சைவர்கள் என்றே கருதப்பட்டனராயினும் அந்நியர் ஆட்சியில் ஏற்பட்ட மதக்கலப்பினால் தமிழரிடையே சைவசமயத்தைத் தழுவியோர் மட்டுமன்றி கிறிஸ்தவ சமயத்தைத் தழுவியோரும் உள்ளனர். ஒரு இனத்துக்கு தனித்துவமானது மொழி. பேசுகின்றமொழியை அடிப்படையாக வைத்து இனப்பாகுபாடு செய்வது உலகவழக்கு. இந்தவகையில் இஸ்லாமிய சமயத்தைச் சார்ந்த மக்கள் பேசுவதும் தமிழ் மொழியாதலால் அவர்களும் தமிழரே என்றோர் வாதமும் பலரிடத்தேயுள்ளது. ஆயினும் அவர்கள் தமது சமயத்தை அடிப் படையாகக் கொண்டு தம்மை முஸ்லிம் இனமாகப் பிரித்துக் கொண்டனர். மேலும் இலங்கையில் உத்தியோகபூர்வ அறிக்கைகளும் தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் எனத் தனித்தனியாக இனங்களைக் காட்டுகின்றன. ஆகவே, தற்போது காணப்படுகின்ற இவ்வினப் பாகுபாட்டிற்கமைய தமிழர் சமூகத்தில் சைவ, கிறிஸ்தவ சமயங்கள் மாத்திரமே உள்ளதெனக் கொள்ளுதல் பொருத்தமாகும்.

மட்டக்களப்புத் தமிழரது சமயங்களாக சைவசமயமும் கிறிஸ்தவ சமயமும் கொள்ளப்பட்டுள்ளன. சைவசமயம் ஆதிக் குலங்களுடன் தொடர்பு கொண்டதாயிருக்க கிறிஸ்தவ சமயம் மேனாட்டர் வருகையுடன் மட்டக் களப்பில் தோற்றம் பெறுகிறது. மட்டக்களப்புச் சைவசமயத்தினர் பாரம்பரிய மாகத் தனித்துவமான சமய வழிபாட்டு முறைகளை உடையவர்கள். பண்டைத் தமிழரின் பண்பாட்டு அம்சங்கள் பலவற்றை இன்றுவரை பேணிப் பாது காத்துவரும் இயல்பினைக் கொண்டவர்கள். இத்தகைய நிலைக்கு இப்பிரதேச மன்னர்களே காரணமாக இருந்துள்ளனர். இதன் காரணமாக மட்டக்களப்பில் சைவசமயம் தமிழ்ச் சமயம் என்று கூறும் வழக்கமும் இருந்துள்ளது.

மட்டக்களப்புப் பகுதியிற் காலத்தால் முற்பட்டகோயில்கள் உள்ளன. இவற்றுட் சில தேசத்துக் கோயில்களாக விளங்குகின்றன. தேசத்துக் கோயில்கள்

எனக்கூறும் வழக்கு மட்டக்களப்புத் தமிழரது சைவ சமய வழக்கில் மட்டுமே காணப்படுகிறது. மட்டக்களப்பில் பலகோயில்கள் இருப்பினும் பழம்பெரும் கோயில்களாகக் கருதப்பட்டு வருகின்ற சில கோயில்களைப் பற்றியே இவ்வியலில் நோக்கப்பட்டுள்ளன. அக்கோயில்களினூடாக மட்டக்களப்புத் தமிழரது சைவசமயப் பண்பாட்டின் சில அம்சங்கள் ஆராயப்பட்டுள்ளன.

மட்டக்களப்பிற்குச் சிறப்பாகவுள்ள சைவசமய வழிபாட்டு முறைகளில் பத்ததி வழிபாட்டு முறையும், சுயவழிபாட்டு முறையும் பெரும்பான்மை பெற்றுவிளங்குவதைக் காணலாம். இவ்வழிபாட்டு முறைகள் நீண்டகாலமாக இருந்து வருகின்றன. பத்ததிகள் பெரும்பாலும் சடங்குசெய்யும் முறைகளைக் கூறுவனவாக ஓலைச் சுவடிகளில் உள்ளன. பூசையின்போது தெய்வம் மனிதரிடமாக வெளிப்பட்டு அருள் பாலிக்கிறது. தெய்வமாக பக்தர்களுக்குக் கட்டுரைக்கும் தன்மை மட்டக்களப்பின் தனித்துவ வழிபாடான பத்ததிமுறை வழிபாட்டம்சங்களிலே கிடைக்கப் பெறுகிறது. கட்டுரைத்தலைத் தெய்வத்தின் வாக்காகக் கொள்ளும் நம்பிக்கையுடன் வாழ்ந்து வந்துள்ளனர்.

சர்க்கரை அமுது, கன்னிமார் பூசை போன்ற வழிபாட்டின் போது சிறுமிகளை அம்மனாகவும் கன்னிமாராகவும் பாவனை செய்துபோற்றி ஆசி பெறும் வழக்கும் இருந்து வருகிறது. வீடுகளில் அம்மனுக்குச் சர்க்கரையமுது, ஆட்டுச்சடங்கு, வயிரவர் பூசை என்பன நடத்தப்பட்டு வருகின்றன. ஆதி காலத்தில் இயற்கை வழிபாடே பொதுவாகக் காணப்பட்டது. அவற்றில் மரவழிபாடு முக்கிய இடத்தைப் பெறுகிறது. மரவழிபாட்டில் சிலமரங்களைத் தெய்வீக மரங்களாகக் கருதி கோயில்களில் தலவிருட்சமாகவும் கன்னிக் காலாகவும் (கல்யாணக்காலாகவும்) வைத்து வழிபடுகின்றனர். கோயில் தவிர்ந்த பொது இடங்களிலுள்ள தெய்வீக மரங்களை வழிபாடு செய்யும் வழக்கமும் இருந்து வருகிறது.

வேடர்கள் பத்ததி, ஆகமம் சாராத தமக்கே உரித்தான வழிபாட்டு முறைகளை உடையவர்கள். பிற்காலத்தில் தமிழருடன் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டதன் காரணமாக தமிழரின் வழிபாட்டினையும் இணைத்துக் கொண்டனர்.

மட்டக்களப்புத் தமிழர்களின் வாழ்க்கையில் அவர்களது உயிர் நாடியாக விளங்குவது அவர்களிடமுள்ள நம்பிக்கை. மருந்துமந்திரம், சாத்திரம் கேட்டல், சகுனம் பார்த்தல், கனவு முதலியவற்றில் அசையாத நம்பிக்கை வைத்துள்ளனர். உதாரணமாக குழந்தை பிறந்தாலோ, ஒருவர் தொழில் ஆரம்பிக்கவேண்டியிருந்தாலோ திருமணம் செய்யவேண்டியிருந்தாலோ சாத்திரம் கேட்பதில் நம்பிக்கையுடையவர்களாகக் காணப்பட்டார்கள். அவர்கள் நல்லது தீயது என எது நடைபெற்றாலும் சாத்திரம் கேட்பதில்

மனநிறைவைப் பெற்றனர். அவ்வாறு அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கை களெல்லாம் சமய வழிபாட்டடிப்படையில் ஆன்மீகத் தொடர்புடையவை களாக விளங்குகின்றன.

கிறிஸ்தவர்கள் முறையே போர்த்துக்கீசர் கத்தோலிக்க கிறிஸ்தவ சமயத்தையும் ஒல்லாந்தர் மெதடிஸ்த கிறிஸ்தவ சமயத்தையும் பிரித்தானியர் வருகையோடு அங்கிலிக்கன் கிறிஸ்தவ சமயத்தையும் மட்டக்களப்பில் பரப்பினர். கத்தோலிக்க திருச்சபை தமது சமயத்தைப் பரப்பிய பின்னரே பாடசாலைகளை நிறுவினர். ஆனால் மெதடிஸ்த திருச்சபையானது பாட சாலைகளை நிறுவிய பின்னரே தமது சமயத்தைப் பரப்பினர். போர்த்துக்கீசர் ஒல்லாந்தரைக் காட்டிலும் சுதேசிகளின் வழிபாடுகளுக்கும் வழிபாட்டிடங் களுக்கும் கெடுதல் விளைவித்தனர். வாழ்வியலில் கசப்புணர்வைத் தோற்று வித்தனர்.

மட்டக்களப்புத் தமிழர் பொருளாதாரக் காரணிகளால் ஆங்கிலக் கல்வி யைக் கற்றனர். ஆங்கிலக்கல்வியைக் கிறிஸ்தவக் குருமாரிடமே கற்க வேண்டியிருந்ததால் அவர்கள் கிறிஸ்தவ சமயத்திற்கு மாறவேண்டியநிலை ஏற்பட்டது. கிறிஸ்தவக் குருமார் சமூகப் பணிகள் பலவற்றைச் செய்தமை யினால் வறியமக்களைச் சுலபமாகக் கிறிஸ்தவ சமயத்திற்கு மதமாற்றம் செய்தனர். மேலும்,மட்டக்களப்பில் நிலவிய சாதிப்பாகுபாட்டின் காரண மாகவும் சிலர் கிறிஸ்தவ சமயத்திற்கு மதம்மாறினர். கிறிஸ்தவ சமயத்திற்கு மாறியவர்களுக்குப் பலவகையான உதவிகளும் உபகாரங்களும் கிடைக்கப் பெற்றன.

கிறிஸ்தவசமயத்தைப் பரப்புவதற்காகக் கிறிஸ்தவக் குருமார் தமிழ் மொழியைக் கற்றுக்கொண்டு மொழி ஆராய்ச்சியிலும் ஈடுபட்டனர். இதனால் தமிழ்மொழி செழுமையுற்றதையும் அவதானிக்கமுடிகிறது. கிறிஸ்தவப் பணியாளர்களிடம் இந்துசமயச் சடங்குகள், அமைப்புகள், ஆசாரங்கள் பற்றி எதிரான சிந்தனைப்போக்கு இருந்தாலும் புதிய மேலைத்தேய, கீழைத்தேய சமயபண்பாட்டு ஊடாட்டங்களினால் புதிய எழுச்சியும் உருவாகியது.

கிறிஸ்தவர்களின் வருகையால் மட்டக்களப்புத் தமிழர் சிலரிடம் தமது நடை. உடை பாவனைகளில் மாற்றம் ஏற்பட்டன. சாதிப் பாகுபாட்டின் தளைகள் குறைக்கப்பட்டன. கல்வியில் சிறப்புநிலை ஏற்பட்டது. பிரயாண வசதிகள், அச்சுக்கூடம், தோம்புமுறை, நீர்ப்பாசனம் விவசாயம் விஞ்ஞான முறையிலான வைத்தியவசதிகள் நடைமுறைக்கு வந்தன. நீர்ப்பாசனம், விவசாயம், சுகாதாரம் எனபவற்றில் அபிவிருத்தி ஏற்பட்டன. நீதி நிருவா கத்தில் மாற்றம் ஏற்பட்டது. நாகரீகத்திலும் கல்வி அறிவிலும் பின்னிலையில் இருந்த வேடர்களுக்குச் செய்த சேவை பாராட்டத்தக்கது.

மட்டக்களப்புத் தமிழர் இவ்விரு சமயக் கொள்கையினால் வேறுபட்டோர். ஆயினும் மொழிப்பற்றினாலும் பிரதேசப் பற்றினாலும் ஒன்றுபட்டு வாழும் சான்றாண்மை போற்றுதற்குரியது.

## i. மட்டக்களப்பில் சைவ சமயம்

இலங்கையில் வாழ்ந்த ஆதித் தமிழ்க்குடிகளினிடையே காணப்பெற்ற மரபு வழியான சமயப் பண்பாடுகள் சமய அறிவுத்துறையில் ஏற்பட்ட வளர்ச்சி காரணமாக மாற்றம் பெற்றன. ஆனால் மட்டக்களப்பில் இத்தகைய பெருமாற்றங்கள் ஏற்படவில்லை. மரபுவழி மாறாது உள்ளதை உள்ளவாறு வைத்து வழிபடுவதில் மட்டக்களப்பு மக்கள் அசையாத நம்பிக்கை உடையவர்கள். அக்காலத்தில் இப்பிரதேச சமய வளர்ச்சிக்கு இப்பிரதேச மன்னர்களே முக்கிய காரணமாக இருந்துள்ளனர். அரசனின் ஆட்சிமுறை சமய வழிபாட்டில் மட்டக்களப்பு மக்களை மேலும் திடப்படுத்தியது. இதனால் சுதேச வழிபாட்டு முறை வேர் ஊன்றி வளர்ந்தது. மட்டக்களப்புப் பிரதேச சமயப் பண்பாடு என்னும் இந்த இயலில் மட்டக்களப்பில் புராதன கோயில் களைச் சார்ந்து வளர்ந்த பண்பாடு பற்றியும் கூறப்படுகின்றது. உண்மையில் புராதன கோயில்களைப் பற்றிய குறிப்புக்களை இக்கோயில்களில் காணப் படும் பட்டயங்களையும், சாசனங்களையும் ஆராய்ந்தே பெரும்பாலனவற்றை அறியவேண்டியுள்ளது. எனினும் பழம்பெரும் கோயில்களில் இவ்வாறான ஆவணங்கள் பொதுவாக மிக அரிதாகவே காணப்படுகின்றன. இதுபற்றி பேராசிரியர் சி. பத்மநாதன் மேல்வருமாறு கூறுகின்றார்.

> பட்டயங்களையும் பிற சாசனங்களையும் பேணுவதில் பௌத்த சங்கத் தாருக்குரிய ஆர்வமும் ஊக்கமும் சைவசமய குருமாரிடத்திலோ பொது மக்களிடத்திலோ காணப்படுவதில்லை. கல்வெட்டுக்கள் செப்பேடுகள் இல்லாதவிடத்து ஆலயங்களின் புராதன வரலாறுகளை ஒழுங்குபடுத்துவது சாலாக்காரியம். இந்த நிலையான காரணமாகவே சைவரின் புராதன ஆலயங்கள் அமைந்த இடங்களிலே முன்பு பௌத்த கோயில்கள் இருந்தன என்றும் தமிழர் அவற்றை இடித்து விட்டு சிவாலயங்களை அமைத்துள்ளனர் என்ற பழிமொழியை இந்நாட்களிலே கேட்கவேண்டியுள்ளது (தில்லைநாதன், எஸ்., 2008, பக்.8,9).

மட்டக்களப்புப் பகுதியில் உள்ள பிரதான கோயில்களில் காலத்தால் முற்பட்ட ஆலயங்கள் உள்ளன. இவற்றுள் சில தேசத்துக் கோயில்கள் என்று மரபு வழியாக கொள்ளப்பட்ட புராதன கோயில்கள் அடங்குகின்றன. இதனைத் திருப்படைக் கோயில்கள் எனவும் அழைப்பர். தேசத்துக் கோயில்கள் அல்லது

திருப்படைக் கோயில்கள் எனப் பிரித்துக்கூறும் வழக்கு இலங்கையில் மட்டக்களப்புப் பிரதேசச் சமய வழக்கில் மட்டுமே காணப்படுகிறது. தேசத்துக் கோயில்கள் என்பது மட்டக்களப்புத் தேசத்திலுள்ள பல சாதிமக் களாலும் வழிபடப்பெறும் கோயில் எனப் பொருள் தருகிறது. அவை பண்டைக்கால அரசர்களின் மானியத்தையும் மேற்பார்வைப் பணிகளையும் பெற்ற கோயில்கள். தேசத்துக் கோயில்களாக திருக்கோயில் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோயில், மண்டூர் ஸ்ரீ கந்தசுவாமி கோயில், கோவிற் போரதீவு ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி கோயில், கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் கோயில் என்பன விளங்கி வந்துள்ளன.

மட்டக்களப்புப் பகுதியில் புராதன ஆலயங்களாகத் திருக்கோயில் முருகன் ஆலயம், மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயம், மண்டூர் முருகன் ஆலயம், உகந்தைமலை முருகன் ஆலயம், கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயம், என்பன அடங்குகின்றன என்று கூறப் படுகின்றது (தனபாக்கியம், கு., 1988, பக்.56). இவ்வரிசையில் வரலாற்றடிப் படையில் மேலும் சில ஆலயங்கள் சேர்க்கப்படவேண்டும்.

### சிறப்பாகவுள்ள வழிபாட்டு முறைகள்

மனிதன் தோன்றிய காலம் முதலாகச் சமயமும் சமய நம்பிக்கைகளும் வாழ்வில் இரண்டறக்கலந்தன. இயற்கையின் செயற்பாடுகளைக் கண்டு தமக்கு மேல் ஒரு சக்தியிருப்பதாக உணரத்தொடங்கினான். அதன் வெளிப் பாடே கடவுள் நம்பிக்கையாகும் எனக் கூறப்படுகின்றது (பரமு புஸ்ப ரெட்ணம், 2002, பக்.24). மட்டக்களப்புப் பிரதேசமும் பாரம்பரியமாக தனித்துவமான வழிபாட்டுப் பண்பாட்டினை உடையதாகக் காணப்படுகின்றது. மட்டக்களப்பில் சைவ சமயம் தமிழ்ச் சமயம் என்றே அழைக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது (மௌனகுரு, சி., 2003, பக். XVIII).

### மரவழிபாடு

ஆதிகாலத்தில் இயற்கை வழிபாடே நிலவியது. மர வழிபாடு முக்கிய இடத்தை வகித்தது. ஆல், அரசு, வேம்பு, பூவரசு, இத்தி, மா, கடம்பு, வில்வம், கொன்றை போன்றவை முக்கிய இடத்தைப் பெற்றன. இம்மரங்கள் பட்டு அழியும் போது அந்த இடத்தில் கல் வைத்து வழிபாடு நடைபெற்றது. அக்கல்வழிபாடு பின்னர் மாற்றமடைந்தது இடைக்காலத்தில் மேற்படி மரங்களின் கீழ் வேல், சூலம் என்பன நடப்பெற்று வழிபாடாற்றப் பெற்றது. அதன் பின்னர் பலிபீடம் அமைக்கப்பெற்று வேல், சூலம் நடப்பெற்று மேடைகள் அமைத்து வழிபாடு நடைபெற்றது.

மர வழிபாட்டு முறையானது கொடிநிலை, கந்தழி, வள்ளி என மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளது. கொடிநிலை வழிபாடு என்பது கொடியால் சூழப்பெற்ற மேற்காட்டிய தெய்வீக மரங்களை வழிபடுதலாகும். கந்தழி வழிபாடு என்பது மேற்படி தெய்வீக மரங்கள் பட்டுப் போனதும் அதன் அடிப்பாகத்தை வழிபடுதலாகும். வள்ளி வழிபாடானது மேற்படி மரங்கள் பட்டுப்போனதும் அங்கு தனியே நின்ற கொடியை வழிபடுதலாகும். ஆனால்

*கொடி நிலை கந்தழி வள்ளி என்ற*
*வடு நீங்கு சிறப்பின் முதலன மூன்றும்*

என வரும் தொல்காப்பிய வரிகளுக்கு நச்சினார்க்கினியர் கொடி நிலை என்பது சூரியன், வள்ளி என்பது சந்திரன், கந்தழி என்பது உருவமற்ற நிலை என உரை கூறியுள்ளார்.

கந்தழி வழிபாடானது மட்டக்களப்புப் பிரதேச புராதன கோயில்களான திருக்கோயில் ஸ்ரீ சித்திரவேலாயுதசுவாமி கோயில், மட்டக்களப்பு ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் கோயில், கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் கோயில், மண்டூர் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் முதலியகோயில்களில் அக்காலம் முதலாக நிலவி வருகின்றது. வேல், சூலம், இலிங்கம் என்பது ஆரம்ப வழிபாடாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. மண்டூரில் முருகனது ஆலயத்தில் மந்திர, தந்திர கிரியைகள் நடைபெறுவதில்லை.

ஆதிகால மனிதனுக்கு ஆல், அரசு முதலிய மரங்கள் உறைவிடமாக அமைந்திருந்தன. ஆலமரத்தைக் கடவுள் உறையும் மரமாகக் கண்டு பழந்தமிழர் வழிபட்டனர் என்பதை ''நெடுவீழ இட்ட கடவுள் ஆலத்து'' என நற்றுணை கூறுகின்றது (பாடல் 343:4). புறநானூறு 168 ஆம் பாடலில் ''ஆலமர் கடவுள் அன்ன நின்செல்வம்'' எனவரும் பாடல் வரி இறைவன் ஆலமரத்தில் உறைபவர் என்பதைக் காட்டுகின்றது. மேலும் தெய்வீக மரங்கள் தூய்மையுடையதாகக் கருதப்பட்டது. அதனை அகநானூறு

*கடவுள் மரத்த முள்மிடைக் குடம்பைச்*
*சேவலொடு புணராச் சிறுகரும்பேடை*

எனக் குறிப்பிடுகின்றது (அகநானூறு 270: 12-13). கடவுளாக மதித்து வழிபாடியிற்றும் மரமொன்றிலே ஆண் பறவையும் பெண் பறவையும் சேர்ந்து கூட்டிலே முட்டையிட்டு வாழுகின்றன. வாழும் மரம் தெய்வீக மரமாகையால் சிறிய கரும்பேடையானது சேவலுடன் உடலுறவு கொள்ளாதிருக்கின்றது எனப் பொருள் கொள்ளப்படுகிறது. தூய்மை, காவல், செழுமை என்னும் பண்புகள் மரவழிபாட்டுடன் பெரிதும் தொடர்பு பட்டுள்ளதாகக் கூறுவர் (அ. சண்முகதாஸ், ம. சண்முகதாஸ், 1985, ப.19).

கடம்பமர வழிபாடும் அக்காலத்தில் நடைபெற்றுள்ளன. கடம்பமர நிழலின் கீழ் முருகப்பெருமான் கோயில் கொண்டிருந்ததாக பரிபாடலில் 17 ஆம் பாடல் கூறுகின்றது. கடம்ப மரத்தைப் பாடிப்பரவியமையைக் காணமுடிகின்றது. மரம் தெய்வீக சாந்நித்திய முடையது என்ற கோட்பாடு மிகவும் புராதனமானது. மகப்பேறு வேண்டி அரசு, வேம்பு ஆகிய மரங்களை வலம் வந்து வழிபடும் பண்பாடு இன்றும் மட்டக்களப்புத் தமிழரிடம் காணப்படுகின்றது.

கோயில்களில் கலியாணக்காற் கம்பு பூவரசு, வேம்பு, அரசு ஆகிய மரங்களிலிருந்து வெட்டப்பட்டு வழிபாடாற்றப்படுகின்றது. மேற்படி மரங் களில் ஒன்றிலிருந்து கலியாணக்காற் கம்பு பெறப்பட வேண்டும் என்பதை பத்ததிகள் கூறுகின்றன. வைரவர் பந்தலின் பின்பக்கத்தில் நடுவணாக தென்னம்பாளையை வைத்துக் கட்டுவதற்காக ஆல், அரசு, வேம்பு, பூவரசு, கருங்காலி இவைகளில் ஒன்றைக் காலாக நடவேண்டுமென வைரவர் பூசைப் பத்ததி கூறுகின்றது. இன்றும் மட்டக்களப்புப் பிரதேசத்தில் இம்மரபு பேணப் பட்டு வருவதை அவதானிக்கலாம்.

மட்டக்களப்புப் பிரதேசத்தில் ஆதிக் குடிகளான வேடர் குல மக்கள் தமது சடங்கு ஆரம்பமாகும் நாளில் தென்னம்பாளை கட்டி நேரும் வழிபாட்டில், வேம்பு அல்லது விண்ணாங்கு மரக்கம்பைக் காலாகக் கொண்டு நடப்பெற்ற அம்மரக்காலிலேயே தென்னம் பாளையைக் கட்டி வழிபாடு செய்வதாக அறிய முடிகின்றது (முத்துவேல், க., 2009).

திருக்கோயிற் பதியில் உள்ள வெள்ளை நாவல் மரத்தில் வேல்தங்கிய காரணத்தால் திருக்கோயிலை வெள்ளை நாவற்பதி எனவும் கூறுவர். கொக்கட்டிச் சோலையில் திண்ணன் என்னும் வேடன் என்பவர் கொக்கட்டி மரத்தை வெட்டியதால் அதிலிருந்து வெளியாகிய இரத்தப் பெருக்கினாலேயே தான்தோன்றீஸ்வர இலிங்கமானது தென்பட்டது எனவும் கூறுவர். இவ்விரு செய்திகளும் இறைவனுக்கும் மரத்திற்கும் உள்ள தொடர்பை உறுதி செய்கின்றன. கோயில்களில் மரங்களாகிய விருட்சங்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. மூர்த்தி, தலம், விருட்சம், தீர்த்தம் என்பன ஒரு கோயிலின் விசேட சிறப்பம்சமாகக் கொள்ளப்படுகின்றது. சக்தியுடன் வேப்பமரம் தொடர்பு பெற்றுக் காணப்படுகின்றது.

தொற்று நோய், மாதவிலக்கு முதலான ஆசௌசம் (தீட்டு) முதலியன ஏற்பட்டிருக்கும் காலங்களிலே மரவழிபாடு தவிர்க்கப்பட்டுள்ளது. மக்களின் தினசரி வழிபாட்டிலே தெய்வீக மரங்களைக் காலையில் மும்முறை வலம் வந்து தலையால் மரங்களை முட்டி வழிபடுவர்.

அம்மை நோய், உண்ணாக்கு, கண்ணோய் முதலிய நோய்களுக்கும் செவ்வாய் தோசம் முதலான கிரக தோசங்களுக்கும் மகப்பேறு இல்லாதவர்

களுக்கும் வெள்ளிக்கிழமைகளில் மா, இத்தி, அரசு முதலிய மரங்களுக்கு இருபத்தியொரு குடம் நீரை ஊற்றி வழிபடின் நினைத்த காரியம் நிறைவேறும் என்னும் நம்பிக்கையை இப்பிரதேச மக்கள் கொண்டுள்ளனர். நினைத்தவை நிறைவேறியதும் விசேட தினங்களில் பொங்கல் படையல் செய்து வழிபடும் பண்பாடு இருந்து வருகிறது.

எருமை, பசு ஆகிய மந்தையின வளர்ச்சிக்கு முன்னடித்தம்பிரான் என்னும் தெய்வத்திற்கு இத்தி மரத்தின் கீழ் முக்கோணப் பந்தலில் படையல் செய்து வழிபாடு புரிந்து வருகின்றனர். மர வழிபாடானது மக்களிடம் நம்பிக்கை உணர்வுடன் நீண்ட காலமாக இருந்து வருகின்றது. இவ்வாறு மரவழிபாடு நன்றி உணர்வு, அச்ச உணர்வு என்பவற்றின் அடிப்படையிலேயே தோன்றி அவர்களது வாழ்வியலோடு பண்பாடு பின்னிப்பிணைந்துள்ளது.

## பத்ததி வழிபாடு

பத்ததி வழிபாட்டு முறை நீண்டகால வழிபாட்டு முறையாக இருந்து வருகின்றது. இது மட்டக்களப்பின் தனித்துவத்தை அன்றுமுதல் இன்றுவரை பாதுகாத்து வரும் சின்னங்களிலொன்றாக விளங்குகின்றது. பத்ததியை பத்தாசி எனவும் அழைப்பர். பத்ததியானது குறிப்பிட்ட தெய்வத்தின் வழிபாட்டுக்குரிய பூசை விதிமுறைகளையும் அதற்கான மந்திர யந்திரங் களையும் கூறுகின்றது. பத்ததிகள் எழுத்தாணி கொண்டு எழுதப்பட்ட ஓலைச் சுவடிகளிலேயே பொதிந்து காணப்படுகின்றன. இவை ஆகமமுறை சாராத பத்ததிகளாகவும் ஆகமமுறைப் பத்ததிகளாகவும் விளங்குகின்றன (தில்லை நாதன், எஸ்., 1991, ப.63).

ஆகமமுறை சாராத பத்ததிகள் ஆக்கப்பெற்றவர்களின் பெயர்களால் அழைக்கப்பெறாது எத்தெய்வத்தின் பூசை விதிமுறைகளைக் குறிப்பிடு கின்றதோ அத்தெய்வத்தின் பெயராலேயே அழைக்கப்பெறுகின்றது. உதாரணமாக காளியம்மன் பத்ததி, மாரியம்மன் பத்ததி, பேச்சியம்மன் பத்ததி, கண்ணகியம்மன் பத்ததி, வதனமார் பத்ததி, வயிரவர் பத்ததி, திரௌபதி அம்மன் விதிமுறை, விஷ்ணு பத்ததி, பெரிய தம்பிரான் பத்ததி என்பன அவைகளுட் சிலவாகும். இவைகள் அகவற்பாவிலும் உரை நடையிலுமானவை. மந்திரங்களும் யந்திரங்களும் விரவி வருகின்றன. இப்பத்ததிகளில் உட்பிரிவுகளும் உள்ளன. அவை குரு சீட முறையில் பாதுகாத்து இரகசியமாகப் பேணப்பட்டு வருகின்றன.

பூசை செய்கின்றவர்கள் பூசகர், கப்புகனார், கட்டாடியார், நம்பியார், எனப் பல பெயர்களால் அழைக்கப்பெறுவர். அவர்கள் நல்லொழுக்கம் மிகுந்தவராகவும் சைவ சித்தாந்த தத்துவங்களை அறிந்தவராகவும் இறைபக்தி,

குருபக்தி ஆகிவற்றினைக் கொண்டவராகவும் மந்திரங்கள், யந்திரங்கள், கிரியைமுறைகளை நன்கு தெரிந்தவராகவும் உயரிய தத்துவத்தையே சதா தியானிப்பவராகவும் சமயாசாரங்களைப் பேணுபவராகவும் விபூதி, உருத்திராக்கம் அணிபவராகவும் கை வளையல் அணிந்தவராகவும் உடல், உளச் சுத்தம் உடையவராகவும் மக்களது அன்பிற்குப் பாத்திரமானவராகவும் இருக்கவேண்டுமெனப் பத்ததிகள் பூசைபுரிவோர் இலட்சணம் பற்றிக் கூறுகின்றன(கண்ணகை அம்மன் பத்ததிகளில் முனி பத்ததி, தோகை 1:3., தெய்வேந்திரன் பத்ததி, தோகை 3:2.) ஆசார்ய லட்சணங்கள் பற்றி ஆகமங்களும் கூறுகின்றன (கைலாசநாதக் குருக்கள், கா., 1963, ப.207).

ஆகமமுறை சாராத பத்ததி முறையிலான வழிபாட்டிற்குக் கட்டடங்களாலான அமைப்பு முறை அவசியமானதல்ல. தற்காலிகமாக ஆக்கப்பட்ட பந்தல்களிலோ அல்லது மரங்களின் கீழோ இவ்வழிபாடுகள் நடைபெறலாம். பின்னர், மடாலயங்களாக அமைந்துள்ள கோயில்களிலும் இவ்வழிபாடுகள் வளர்ச்சியுற்றன.

இப் பத்ததி வழிபாட்டு முறையில் விக்கிரகங்களை விட கும்பங்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. இவ்வழிபாட்டில் வேல், சூலம், இலிங்கம், கும்பம், முகக்களை,பொல், வாள், சிலம்பு, அம்மானைக்காய், கோடரி, கயிறு விசேட பொருட்களாக அமைகின்றன. மடையில் நிவேதனப் பொருட்களாக வெற்றிலை, பாக்கு, பழம், பூ, கரும்பு, கமுகம் பாளை, பாணக்கம் (பால், தேன், சர்க்கரை, பழ வர்க்கம் முதலியன கலந்தவை) பொங்கல், கறியமுது, துள்ளுமா, ரொட்டி முதலியன வழிபடும் தெய்வங்களுக்கேற்ப தனித்தும் ஒருமித்தும் நிவேதிக்கப்படுகின்றன.

பிற்காலத்தில் ஆகமம் சாராத பத்ததி முறை வழிபாட்டுடன் ஆகம வழிபாடு இணைந்த வழிபாட்டு முறையும் கலந்து காணப்படுகின்றது. எனினும் இப்பிரதேசத்தில் ஆகமம் சாராத பத்ததி முறை வழிபாட்டு முறையே பெரும்பாலும் காணப்படுகின்றன. பத்ததிகள் பின்வரும் விடயங்களைப் பெரும்பாலும் குறிப்பிடுகின்றன. அவைகளாவன:

1. வழிபாட்டிடம் அமைக்கும் முறை
2. மண்டபக் காவல் செய்யும் முறை
3. அடுக்குச் சாத்தும் முறை
4. மடைப்பிரிவுகள் வைக்கும் முறை
5. இணை, துணை பரிவாரங்களை நிறுத்தும் முறை
6. அவற்றின் மந்திரங்களும் மடைப்பிரிவுகளும்

7. ஆராதனை செய்யும் முறை
8. பூசகர் கைக்கொள்ள வேண்டிய மந்திரங்களும் மடைப்பிரிவுகளும்
9. தடைகளை அகற்றுவதற்கான மந்திர முறைகளும் யந்திர முறைகளும்
10. கலியாணச் சடங்கு செய்யும் முறை
11. வேள்விச்சாலை அமைக்கும் முறை
12. வட்டுக் குற்றும் முறை
13. குளிர்த்தி செய்யும் முறை
14. சடங்கு முடிக்கும் நிறைவுப் பூசை முறை என்பனவாகும்.

மேற்காட்டிய முறைகள் சிறு சிறு அம்சங்களாக மந்திரம், யந்திரம், பிரயோக விளக்கம் என்பன விரவியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. இம்முறைகளில் சிலவற்றை எடுத்துக்காட்டாக மேலேதரப்படுகின்றன.

மேலும், பத்ததிகளில் சடங்குகளுக்குரிய மந்திரங்கள் மட்டுமன்றி தெய்வமாடுபவர்களை ஆட வைக்கும் மந்திரங்கள் (உருவேற்றும் மந்திரங்கள்), ஆடுபவர்களைக் கட்டும் மந்திரங்கள், கட்டிய தெய்வத்தை மந்திர சக்தியால் மீண்டும் ஆடவைக்கும் மந்திரங்கள், மலையேற்றுவதற்கான மந்திரங்கள் என்பனவும் உள்ளன. இப்பத்ததி முறையிலான மடாலயங்களில் தூபிகளு மில்லை, கோபுரங்களுமில்லை. கர்ப்பக் கிருகத்தின் மேல் கலசகுடம் மட்டும் நிறுத்தப்படும். முற்காலத்தில் மட்டக்களப்புப் பிரதேச மக்களிடம் விக்கிரகப் பிரதிஷ்டை செய்யும் வழக்கு இருந்ததாகத் தெரியவில்லை. கும்பங்களிலும், முகக்களைகளிலும், வேல் சூலம் முதலிய சின்னங்களிலும் ஆவாகனம் செய்து வழிபட்டு வந்தனர். இப்பத்ததிகள் மேற்படி சடங்கு செய்யும் முறைகளைக் கூறும் நூல்களாக விளங்குகின்றன. சடங்கிற்கான பந்தல் அமைப்பது முதல் பலி அல்லது பள்ளயம் போடுவது ஈறாக செய்ய வேண்டிய அனைத்து விதிகளையும், மந்திரங்களையும், யந்திரங்களையும் குறிப்பிடுகின்றது. இப்பத்ததி முறையில் விக்கிரகப் பிரதிட்டை செய்வது பற்றிக் குறிப்பிடப்படவில்லை.

குறிப்பிட்ட மூலத் தெய்வத்திற்கு மட்டுமல்லாது அதனது இணை, துணை, காவல், பரிகல தெய்வங்கள் என்பனவற்றையும் தெரிவிக்கிறது. பூசையின் போது தெய்வம் சில மனிதர்களிடமாக வெளிப்பட்டு பக்தர்களுக்கு அருள் பாலிக்கிறது. தெய்வமாடிப் பக்தர்களுக்கு கட்டுரைக்கும் தன்மை மட்டக்களப்பின் தனித்துவ வழிபாடான பத்ததி முறை வழிபாட்டம்சங் களிலேயே கிடைக்கப்பெறுகின்றது. இதனைக் கட்டுச் சொல்லுதல், வாக்குச்

சொல்லுதல் என்பர். இப்பிரதேச மக்கள் தெய்வமாடிக் கூறும் வாக்கினை தெய்வத்தின் வாக்காகக் கொள்வர். இவர்கள் இப்பத்ததி முறைப் பூசை வழிபாட்டில் மிகுந்த நம்பிக்கை உடையவர்களாகக் காணப்படுகின்றனர். இப்பத்ததி முறையில் பக்தியே முக்கியமானதாகக் கொள்ளப்படுவது குறிப் பிடத்தக்க பண்பாட்டு அம்சமாகும்.

இப்பத்ததி முறை பூசை வழிபாட்டில் பூசகரின் மந்திர அறிவு ஆற்றலை அறியும் பொருட்டும் பூசகர்களின் மந்திர பலப்பரீட்சையைக் காட்டும் பொருட்டும் தெய்வமாடுபவர்களை ஆடாது செய்தலும் (படுகளம் போடுதல்/ கட்டுதல்) மீண்டும் ஆடச் செய்தலும் (படுகளம் எழுப்புதல்/வெட்டுதல்) பொங்கற் பானையில் உள்ள பால் பொங்காமல் தடைசெய்வதும், தடையை நீக்கி பால் பொங்கச் செய்தலும் போன்ற மந்திர சக்திகளை உடையதாக மட்டக்களப்பில் வழங்கும் பத்ததி வழிபாடுகள் விளங்குகின்றன.

இங்கு நடைமுறையில் விளங்கும் பத்ததி வழிபாட்டு முறையில் கன்னி மார் பூசை முக்கிய இடத்தை வகிக்கின்றது. அம்மன் வீதி உலா வரும் போது ஆராத்தி எடுக்கும் சிறுமிகளுக்குச் சடங்கு முடிவில் சர்க்கரை அமுது வழங்கி அவர்களிடம் ஆசிபெறும் வழிபாட்டு முறை அமைந்துள்ளது.

மட்டக்களப்பின் பழமைமிக்க அம்மன் ஆலயங்களான துறைநீலா வணைக் கண்ணகை அம்மன் ஆலயம், செட்டிபாளயம் கண்ணகை அம்மன் ஆலயங்களில் சடங்கு காலத்தில் சிலம்பு துள்ளியெழல், வெண்கல உடுக்கு மேலெழல் போன்ற மந்திர சக்தியிலாலான நிகழ்வுகளையும் பூசை வேளையில் அடியார்கள் பக்திப் பரவசத்தில் சன்னதம் (உரு) கொள்வதையும் காணலாம். இவ்வாறான நிகழ்வுகள் மட்டக்களப்புப் பிரதேச வழிபாட்டு முறையின் சிறப்பம்சமாகும். கோயில்களின் வழிபாட்டு நடைமுறைகளில் அந்தப் பிரதேச மக்களின் பண்பாடு மட்டுமன்றி மூதாதையரின் பண்பாட்டின் செம்மையும் கலந்துள்ளது. இறைவழிபாட்டில் நம்பிக்கை உணர்வும் பக்தி மார்க்கமும் இப்பிரதேச மக்களிடம் குடியிருந்தமையை மட்டக்களப்புப் பிரதேச வழிபாட்டு முறை காண்பிக்கின்றது.

பத்ததி முறையில் செய்யும் மட்டக்களப்பின் வழிபாட்டுக் கோயில்களில் பூசகர்கள் அக்கோயில்களுடன் நெருங்கிய உறவு கொண்ட பரம்பரையைச் சேர்ந்தவர்களாய் இருந்தனர். அவ்வாறு நெருக்கமான உறவு கொண்ட பரம்பரையினராக இருந்து வந்தமையைத் தெளிவாக அறிய முடிகின்றது (மகேஸ்வரலிங்கம், க., 1996, ப. 30). பத்ததி முறை வழிபாட்டிற் கும்பத்தில் ஆவாகனம் செய்து மந்திர சக்தியினால் கும்பத்திற்கு உருக்கொடுத்து, வழிபடும் தெய்வத்தை அதில் அமரச்செய்வதாக நம்பப்படுகின்றது.

இப்பிரதேசத்தில் உள்ள கண்ணகை அம்மன் கோயில்களில் தெய்வ மாடுவதில்லை. மாறாக துறைநீலாவணைக் கண்ணகை அம்மன் கோயில், தாண்டவன்வெளிக் கண்ணகை அம்மன் கோயில் போன்ற ஓரிரு கோயில் களில் மட்டும் தெய்வமாடப்படுகின்றது. இக்கோயில்களில் ஆடுகின்றவர்கள் வெவ்வேறு தெய்வங்களினால் தெய்வமேறி ஆடுகின்றனர். மேற்படி குறிப்பிட்ட கோயில்களின் பூசகர்கள் இத்தெய்வமாட்டும் பணியில் ஈடுபடார். இத்தெய்வமாடுபவர்களே தங்களை ஆடவைப்பதற்காகப் பிரத்தியேகமான பூசாரிகளைக் கூட்டிவருவர்.

மட்டக்களப்புப் பத்ததி முறை வழிபாட்டில் பலி கொடுத்தலும் அமைந் துள்ளது. காளி, வீரபத்திரன் முதலிய அகோர தெய்வங்களின் கோயில்களின் பூசை வழிபாட்டு முறையில் பலி இடுதல் நடைபெற்று வந்தன. இத்தெய்வங் களுக்கு மட்டுமல்லாது அதன் பரிகலத் தெய்வங்களுக்கும் பலி இடும் வழக்கம் இருந்து வந்தது. இது சடங்கின் இறுதியில் நடைபெறும் நிகழ்வாகும். தற்காலத்தில் உயிர்ப்பலி இடுதலுக்குப்பதிலாக நீற்றுப்பூசணிக்கையை வெட்டி குங்குமம் பூசி மந்திரார்த்தமாகப் பலியிடும் வழக்கமாக மாறிச் செல்வதையும் காண முடிகின்றது. இதற்கு உதாரணமாக பழம் பெரும் கோயிலான பெரிய போரதீவு ஸ்ரீ பத்திரகாளியம்மன் கோயிலைக் கூறலாம்.

இப்பத்ததிகள் மட்டக்களப்பில் காலத்துக்குக் காலம் வாழ்ந்த சமய அறிவும், பக்தி அனுபவமும் நிறைந்த பூசகர்களாலும் ஆக்கப்பட்டமையாகக் கருதப்படுகின்றது. கிடைக்கப் பெறும் பக்ததிகளில் பெரும்பாலானவை அவ்வக் கோயில்களின் பூசை வழிபாட்டிற்காக அதன் ஆரம்ப காலத்திலேயே தோற்றம் பெற்றதாக அக் கோயில்களின் வரலாற்றுக் கதைகள் தெரிவிக் கின்றன. மட்டக்களப்புப் பிரதேசத்தில் ஆகமம் சாராத பத்ததி முறையான இவ்வழிபாட்டு முறை நீங்காத இடத்தைப் பிடித்துள்ளது.

தற்காலத்தில் பத்ததியும், ஆகமமும் இரண்டும் கலந்து மாற்றமடைந்த கோயில்களாக வேலூர்க் காளி கோயில், ஈச்சந்தீவு கண்ணகியம்மன் கோயில், வெல்லாவெளி மாரியம்மன் கோயில் முதலிய கோயில்களை உதாரணமாகக் குறிப்பிடலாம். கொத்துக்குளம் மாரியம்மன் கோயில், ஏறாவூர் வீரபத்திரன் கோயில் முதலிய கோயில்கள் பத்ததி மரபுமுறையைக் கைவிட்டு ஆகம முறையில் செல்வதைக் காணலாம். எனினும் இப்பிரதேசத்தில் விரல் விட்டு எண்ணும் எண்ணிக்கை உடையவைகளே மரபு முறையைக் கைவிட்டு ஆகம முறையில் வழிபாடு நிகழும் கோயில்களாக மாற்றமடைந்துள்ளன.

பத்ததி முறையில் வழிபாடு புரியும் பூசகர்களால் பத்திரகாளி அம்மன், மாரியம்மன், வீரபத்திரன் போன்ற தெய்வங்களுக்கான வழிபாடுகள் நடாத்தப் படுகின்றன. இவர்களைப் பூசாரிகள் என அழைக்கப்பட்டனர். திரௌபதி

அம்மன் பூசகர் கட்டாடியார் எனவும் நம்பியார் எனவும் அழைக்கப்பட்டுள்ளனர். களுவாஞ்சிக்குடி வீரபத்திரர் கோயிற் பூசகரைக் கவுத்தன் என்று அழைத்தனர். தலைமைப் பூசகரைப் பெரிய கவுத்தன் எனவும் உதவிப் பூசகரைச் சின்னக் கவுத்தன் எனவும் அழைத்துவந்துள்ளனர் (மகேஸ்வரலிங்கம், க., 1996, பக்.107, 116).

கண்ணகியம்மன் கோயிலின் பத்ததி முறையிலான பூசகர்களைக் கட்டாடியார் என அழைத்தனர். கட்டாடியார் வழிபாட்டில் சக்தியை மந்திர சிரத்தையுடன் மன்றாடி வழிபடும் வழக்கத்தைக் காண முடிகின்றது. மட்டக்களப்புப் பிரதேசத்தில் பத்ததி வழிபாட்டிற் பூசை செய்வோர், வாயில் வெள்ளைத்துணி (வாய்ச்சீலை) கட்டிப் பூசை செய்வது மரபாகும். மௌன பூசை வழிபாட்டுக்குரியவர்களாக கப்புகமார் (கற்பகனார்) விளங்குகின்றனர். இவர்களது வழிபாடு முழுக்க முழுக்க சரணாகதி நிலையில் பூசை புரிவதாக அமையப்பெற்றுள்ளது.

பத்ததி வழிபாட்டு முறையில் காவியம், அகவல், தோத்திரம், கும்மி, தாலாட்டு, அம்மானை முதலியன வழிபாட்டுப் பாடல்களாக அமைந்துள்ளன. இவற்றின் வழிபாட்டு வாத்தியக் கருவிகளாக பறைமேளம், ஊதுகுழல், உடுக்கு, சிலம்பு, சங்கு, சேகண்டி முதலியன விளங்குகின்றன. பெண்களால் குரவை ஒலியும் இசைக்கப் பெறுகின்றது.

### தலயாத்திரை வழிபாடு

தலயாத்திரை செய்வது இப்பிரதேச மக்களின் பண்பாட்டுப் பழக்க வழக்கங்களில் ஒன்றாகும். குறிப்பிட்ட இடத்தில் தெய்வம் உறைந்திருந்து அருள் புரிகின்றது என்னும் அக நோக்கோடு தலயாத்திரை மேற்கொள்ளப் படுகின்றது. குறிப்பிட்ட இடத்திலுள்ள தெய்வத்தை வழிபாடு புரிய வழிநடைப் பயணமாகத் தலயாத்திரை செல்லும் போது இடையில் உள்ள கோயில்களையும் புனித தீர்த்தங்களையும் தரிசித்துச் செல்வது ஒரு சிறப்பம்சமாகும். முதலில் தமது ஊரில் உள்ள கோயிலில் அன்றிரவு தங்கி வழிபாடு புரிந்து யாத்திரையை ஆரம்பிப்பது வழக்காகும்.

இங்குள்ள மக்கள் கதிர்காமக் கந்தனை வழிபடுவதற்காக வழிநடைப் பயணமாக தலயாத்திரையை மேற்கொள்வது நீண்ட காலமாக இருந்து வருகின்றது, விரதம், ஆடல், பாடல், உடலை வருத்துதல் முதலியன கொண்ட செயற்பாடுகளின் மூலம் தெய்வத்தின் திருவருளைப் பெறும் வழிபாட்டு முறைகளுள் இதுவும் ஒன்றாகும். மட்டக்களப்பில் இருந்து தல யாத்திரை செய்வோர் பெரும்பாலும் இடையில் உள்ள திருக்கோயில் முருகன் கோயிலில் தங்கி பொத்துவில், பாணமை, சந்நியாசிமலை இவற்றிற்கூடாகச்

சென்று உகந்தை முருகனின் திருத்தலத்தில் தங்கி வழிபாடியற்றிச் செல்வது வழக்காகும். பிரயாண வசதிகள் நிறைந்த தற்காலத்திலும் வழிநடைப் பயணமாக தலயாத்திரை செய்து வழிபாடாற்றுவது தொடர்ச்சியாக இருந்து வருகின்றது. இவர்களது இத்தலயாத்திரைப் பயணம் பத்து நாட்களைக் கொண்டதாகும். இதனால் இப்பிரதேச மக்கள் ''பத்தாம் நாளில் பதியடைதல்'' எனக்கூறுவர். தலயாத்திரை செல்வோர் கூட்டம் கூட்டமாகச் செல்வது ஒரு தனி அழகு. கூட்டத்தில் உள்ள சிறியவர்களை சின்னச்சாமி எனவும் பெரியவர்களை பெரியசாமி எனவும் அழைப்பர். அவர்களது பெயர்களைச் சொல்லி அழைப்பதில்லை. பெண்களை வள்ளிச் சாமி என அழைக்கும் வழக்கமும் காணப்படுகிறது.



தலயாத்திரை மேற்கொள்வோர் (மேலுள்ள படம் அதனைக் காட்டுகின்றது) தமது உணவாக பகலில் மட்டும் ஒருகோயிலிலோ அல்லது ஒரு இடத்திலோ தங்கி பகலுணவைத் தயாரித்து உணவருந்துவர். இரவுப் பொழுதில் அரிசி மா, தேங்காய்ப்பூ, சீனி முதலியவற்றைச் சேர்த்து வறுத்தெடுத்து தமது வீட்டில் இருந்து கொண்டுவந்த இதனை உணவாகக் கொள்வர். இவ்வுணவுப் பதார்த்தம் நீண்ட நாட்களுக்குப் பழுதுபடாமல் இருக்கும் தன்மையை உடையது. சிலர் மடிப்பிச்சை எடுத்து அதன் மூலம் பெறப்படும் உணவை உட்கொண்டும் தலயாத்திரையை மேற்கொள்வர்.

ஓரிடத்தில் தரித்திருக்கும் போதும் வழி நடைப்பயணத்தை ஆரம்பிக்கும் போதும் அரோகரா என்னும் சத்தத்துடனேயே ஆரம்பிப்பது வழக்கமாகும். கதிர்காமக்கந்தனின் தோத்திரப்பாடலைப் பாடியும், ஆடியும் தலயாத்திரையை மேற்கொள்வர்.

மட்டக்களப்பில் உள்ள மண்டூர்க் கந்தசுவாமி கோயில் சின்னக்கதிர் காமம் என நீண்ட காலமாக அழைக்கப்பட்டு வருகின்றது. கதிர்காமக் கந்தனின் ஆடிமாதத்தில் நடைபெறும் வருடாந்தத் திருவிழாவைத் தரிசித்து விட்டு ஆவணி மாதத்தில் நடைபெறும் மண்டூர்க்கந்தனின் வருடாந்தத் திருவிழாவையும் வழிபாடு செய்வது இப்பிரதேச மக்களின் பண்டைய வழக்கமாகும்.

### சுய வழிபாட்டு முறைகள்

மட்டக்களப்புப் பிரதேசத்திற் சுய வழிபாடு இல்லாத வீடே இல்லை எனலாம். நிவேதனப் பொருட்களைப் படையலாக வைத்துத் தமக்குத் தெரிந்த தோத்திரப் பாடல்களைப் பாடி அல்லது மௌன பூசை வழிபாடாற்றுவது சுய வழிபாடாகும். இப்பூசையினை குடும்பத் தலைவரோ அல்லது குடும்ப உறுப்பினரோ புரிவர். பூசகரைக் கொண்டும் செய்யப்படும் வழக்கமும் காணப்படுகின்றது. இவ்வழிபாட்டில் இப்படித்தான் செய்யவேண்டும் என்னும் விதியில்லை. தமது மூதாதையரால் கடைப்பிடித்த வழிமுறைப்படியோ அல்லது தனது விருப்பப்படியோ இப்பூசை வழிபாடு நடாத்தப் பெறுகின்றது. இவ்வழிபாட்டு முறை வீடுகள், வயல் நிலங்கள், தொழில் புரியும் இடங்கள் என்பவற்றில் பெரும்பான்மையாக நடைபெற்று வருகின்றது.

#### அ. வீடுகளில் சர்க்கரை அமுது

வீடுகளில் ஏதாவது ஒரு தெய்வம் குல தெய்வமாக வழிபடப்பட்டு வருகின்றது. அவ்வாறான வழிபாட்டில் அம்மன் வழிபாடும் வயிரவர் வழிபாடும் பெரும்பாலும் காணப்படுகின்றன. இவ்வழிபாடானது கோயில் அமைத்துப் பூசை நடாத்தி வழிபடும் தெய்வத்திற்கு, வீடுகளிலும் பூசை வழிபாடு நடாத்தப்பெறுவதாக அமைகின்றது. இவ்வழிபாட்டு முறையானது பண்டைக் கால திராவிடர் வழிபாட்டைச் சார்ந்ததாகும். இப்பிரதேசத்தில் வீடுகள் தோறும் தாங்கள் வழிபடும் அம்மனுக்கு வழிபாடு புரிகின்றனர். அவற்றுள்ளும் மாரியம்மன் வழிபாடே வீடுகளில் நடாத்தப்பெறுகின்றது. வீட்டில் நடக்கும் பூசை பூசகராலோ அல்லது வீட்டு உறுப்பினராலோ நடாத்தப் பெறுகின்றது. இதனைச் சர்க்கரை அமுது எனக் கூறுவர். இப்பூசை நண்பகலில் நடைபெறும். ஆனி மாதம் தழுவியதாக இப்பூசைக்காலம் கொள்ளப்படினும் வீட்டில் நோய், துன்பம், இறந்தவர்களைக் கனவில் அடிக்கடி காணுதல் என்பனவற்றால் ஆனிமாதம் பாராது பூசை வழிபாடு நடைபெறும்.

சர்க்கரை அமுதுப் பூசையின் போது ஐந்து தொடக்கம் பன்னிரண்டு வயதிற்கு இடைப்பட்ட பருவமடையாத ஐந்து அல்லது ஏழு சிறுமிகளையும் அவ்வயதினை ஒத்த ஒரு சிறுவனையும் பூசையறையில் பூசையை நடத்தும்

பூசகருக்கு அண்மையாக நிரையாக அமரச் செய்வர். இருபாலாருக்கும் கண்களில் கரியமை தீட்டி சிறுமிகளுக்கு சீலை அணிவித்து பெண்களாகவும், சிறுவனுக்கு வேட்டி கட்டி ஆடவனாகவும் உருவகப்படுத்தி அவர்களை வெள்ளைச் சீலை விரித்த பலகையில் நிறுத்தி அவர்களது பாதங்களைக் கழுவி பூசையறையில் தூக்கிச் சென்று அமர்த்துவர். சிறுமிகளைக் கன்னி மாராகவும் சிறுவனைக் காத்தவராயனாகவும் கருதி அவர்களையும் பூசிப்பர். பூசை முடிவுற்றதும் அவர்களுக்கு முன்னால் உண்பதற்கு வாழை இலையில் அமுது படைப்பர்.

உண்ண ஆரம்பிப்பதற்கு முன்பாக வீட்டின் தலைவன் அல்லது தலைவி அவர்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் ஒவ்வொரு கவள உணவைப் பெற்றுக் கொள்வார். பெற்றுக்கொண்ட உணவை வழிபாட்டு முடிவில் வீட்டார் அனைவரும் பகிர்ந்து உண்பர். மேற்குறித்த குழந்தைகள் உணவு உண்ட பின்பு அவர்களை ஒவ்வொருவராகத் தூக்கி, வாயிலில் கொண்டுவந்து நிறுத்தி, அவர்களிடமிருந்து நல்வாக்கைப் பெறுவர். நல்வாக்கானது பூசை திருப்தி எனவும் நீங்கள் சந்தோசமாக வாழ்வீர்கள் எனவும் அமையப்பெறும்.

**ஆ. வீடுகளில் ஆட்டுச் சடங்கு**

வீடுகளில் பகலில் நடைபெறும் சர்க்கரை அமுது வழிபாட்டைப் போன்று இரவில் ஆட்டுச் சடங்கு நடைபெறுகின்றது. ஆட்டுச் சடங்கு நடத்தப் படுவதாயின் அவ்வீட்டில் தெய்வமேறி ஆடுபவர் இருக்கவேண்டும். இது பூசகரால் நடாத்தப்பெறுவது. வீட்டுமுற்றத்தில் பந்தலமைத்து, சுவருக்குப் பதிலாக சீலைகள் கட்டி மறைப்புச்செய்து, சீலையால் கூரையும் ஆக்கப் பட்டு பந்தல் அமைக்கப்பெறும். அப்பந்தலினுட் கும்பத்தினையோ அல்லது அம்மன் முகக்களையையோ வைத்து அவற்றிற்கு முன்பாக மடைகள், படையல்கள் வைத்து வழிபாடு செய்யப்படும். அன்றிரவு முழுவதும் இப்பூசை வழிபாடு நடைபெறும். தெய்வமாடுபவர் முழுகி, மாற்றுடுப்பு உடுத்து வர பூசகர் பூசைக்கு முன்பு அவரை நிறுத்தி மந்திரத்தால் உருவேற்றுவார். அவர் உருவேறித் தெய்வமாடுவார். அவ்வேளையில் பூசையிற் குற்றங்குறைகள் ஏற்பட்டிருந்தால் பொறுத்தருளுமாறும் நல்வாழ் வைத் தருமாறும் பூசகரும் வீட்டுத் தலைவரும் இரந்து வேண்டி நிற்பர்.

தெய்வமாடுபவருடன் தெய்வமாடும் வேளையில் பூசகரும் ஏனை யோரும் நேரடியான உறவுமுறையை வைத்துக்கொள்வர். அவ்வேளையில் பெண் தெய்வமாயின் அம்மா, தாயே என்றும் ஆண் தெய்வமாயின் அப்பா, சுவாமி என்றும் கூறித் தமது வேண்டுகோளைக் கூறுவர். தெய்வமாடுபவரின் ஆடுதல் முடிவுபெறுதலை மலையேறுதல் என்று கூறுவர். இவ்வுறவுமுறை

யான பேச்சு வழக்கு கோயில்களிலும் தெய்வமாடுதலின் போது கூறப் படுகின்றது. தெய்வமேறி ஆடுபவர் பூசையின் விளைவுகளையும், எதிர்கால நிகழ்வுகளையும் கட்டுரைப்பார். கட்டுரைத்து முடிய அவர் மயக்கமுறுவார். இதுவே மலையேறுதல் எனக் கூறப்படுகின்றது. பின்பு ஓரிரு மணித்தி யாலத்தின் பின்பே சுயநினைவடைவார்.

ஆட்டுச்சடங்கின் போது வேறு மந்திரவாதிகள் தெய்வமாடாது மந்திர சக்தியாற் தடை செய்வர். அவ்வாறு ஆடாது செய்தலைக் கட்டுதல் எனக் கூறுவர். ஆட்டுச் சடங்கினைச் செய்யும் பூசாரியார் அக்கட்டினை மந்திர சக்தியினால் வெட்டி மீண்டும் தெய்வமாட வைப்பார். இச்செயல் சிலவேளை களில் பல தடவைகள் நடைபெறும். இச்செயலானது பூசாரியாரின் மந்திர சக்தியை அறியும் ஒரு பலப் பரீட்சையாகக் கருதப்படுகிறது. இச் சர்க்கரை யமுது, ஆட்டுச் சடங்கு வழிபாடுகளை நோக்கும் பொழுது நெருங்கி நின்று இறையருள் பெறும் நிலையையும் அதற்கான ஆசி பெறும் போக்கையும் அவதானிக்க முடிகின்றது.

### இ. வேடர்களின் வழிபாட்டு முறை

மட்டக்களப்புப் பிரதேச ஆதிக்குடிகளான வேடர்கள் தமிழ் சிங்கள மக்களுடன் தொடர்பில்லாமல் வாழ்ந்தபோது அவர்களிடையே பத்ததி, ஆகமமுறைகள் சாராத வழிபாட்டுமுறை காணப்பட்டன. இவர்களது வழி பாட்டு முறைகளைப் பொறுத்த வரையில் ஆலாத்தித் தெய்வம், உத்தியாக்கள், தெகுத்தன் தெய்வம், மாறாத் தெய்வம், செண்பக நாச்சி, நாக தெய்வம், கரடித் தெய்வம், புது அம்மன், ஒட்டிப்பட்டு, ஓராப்பட்டு, நலப்பட்டு, தெங்கிரியம்மா, வேரத்து வயிரவன், வீரவள, முளத்தனியா, கொம்புநாச்சி, கப்பற் தெய்வம், யாங்கா பத்தினி, தாமரைப்பூ பத்தினி, கமுகம்பூப் பத்தினி, தென்னம்பூப் பத்தினி, தஞ்சாவூர்ப் பத்தினிகள், வீதிப் பத்தினி, கெங்க காளி, கெங்க வயிரவன், சுடலைக் காளி, சுடலை வயிரவன், நரசிங்க வயிரவன், அக்கினி வயிரவன், வீரபத்திரன், மாரியம்மன், பேச்சியம்மன், கண்ணகி யம்மன் முதலியன தெய்வங்களாக வழிபடப்படுகின்றன. இவற்றுட் பிற் காலத்தனவாகக் கண்ணகை, வீரபத்திரன், வயிரவர், மாரி, பேச்சி முதலியன காணப்படுகின்றன.

இவர்களது வழிபாட்டில் ஏற்பட்ட மாற்றத்தின் வளர்ச்சியில் ஆகமமயப் படுத்தப்பட்ட பெருந்தெய்வ வழிபாடுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. உதாரணமாக இவர்களது பாரம்பரிய வழிபாட்டு முறையிலிருந்த பாற்சேனை என்னுமிடத்தில் அமைந்த பெரியசாமி கோயில் மேற்படி மாற்றத்திற்குள்ளாகி இருப்பதைக் காணலாம். ஆதிகாலத்தில் இறைச்சியை வழிபாட்டிற்கு நைவேத்

தியமாகப் பயன்படுத்தினர். பின்பு பெரும்பாலானவர்கள் இறைச்சியை வழிபாட்டிற்குப் பயன்படுத்துவதில்லை. பேச்சி, வயிரவன் போன்ற ஒரு சில தெய்வங்களுக்கு மட்டும் கள்ளு, சாராயம் என்பவற்றைப் படையல் செய்வதை அவதானிக்க முடிகின்றது.

இறந்த தமது மூதாதையர்களை வழிபடும் முறையாக உத்தியாக்கள் வழிபாட்டு முறை காணப்படுகின்றது. இவை ஆத்துமத் தெய்வங்களாக கொள்ளப்படுகின்றன. கப்பற் தெய்வத்தாற் புதியதான கொள்ளை நோய், வாந்தி பேதி, சின்னம்மை போன்ற நோய்கள் ஏற்பட்டதாக இவர்கள் நம்புகின்றனர். கப்பற் தெய்வத்திற்குப் பூசைகள் சடங்குகள் செய்யப்பட்டு மேற்படி நோய்கள் வராமல் வழிபாடு புரிகின்றனர். ஐரோப்பியர் வருகைக்கு முன் இவர்களிடம் இத்தகைய தொற்று நோய்கள் ஏற்படவில்லை. இந்த நோய்களை எதிர்க்கும் இயல்பான சக்தி இம்மக்களிடம் குறைவாக இருந்ததால் பெருமளவு உயிரிழப்புக்கள் நேர்ந்தன. இப்பின்னணியில் கப்பற் தெய்வம் போன்றவற்றின் வழிபாடு முக்கியத்துவம் பெறுவதாகக் கூறப் படுகின்றது. (தங்கராசா, யு.வி., 1993, ப.24). இவர்களது வழிபாடு காடு களண்டிய பகுதியிற் பொது இடமொன்றில் மரத்தின் கீழ் பந்தலிடப்பட்டு நடை பெறுகிறது. இவர்கள் நடத்தும் வழிபாட்டுச் சடங்கு ஆண்டுக்கொரு முறை நடத்தப்பட்டு வருகின்றது. கிராமப் புறங்களை அண்டிய பகுதியில் சடங்குகள் கட்டட முறையில் ஆக்கப்பட்ட ஆலயங்களில் நடத்தப்பட்டு வருகின்றது.

இப்பூசை வழிபாட்டினைப் புரியும் பூசகர் கட்டாடியார் எனவும் கப்புறாளை எனவும் அழைக்கப்படுகின்றனர். இவர்கள் தமது சடங்கினை ஆரம்பிக்கும் முன்னர் வேம்பு அல்லது விண்ணாங்கு மரக்கம்பு ஒன்றினைப் பந்தலினுள் காலாக நட்டு அதில் தென்னம்பாளையைக் கட்டுவர். இப்பாளை கட்டுதலானது தமது சடங்கு இனிது நிறைவேற வேண்டும் என வேண்டி நேர்ப்புக் கட்டுதலாகும்.

இவர்களது வழிபாட்டின் போது ஒளியை ஏற்படுத்துவதற்காக ''பக்கினிய மரம்'' என்னும் மரத்தின் பாலைச் சேகரித்து உறையவைத்து, அதனை விளக்காக எரிக்கின்றனர். வழிபாட்டுச் சடங்கின் போது தெய்வங்களின் வரவிற்கேற்ப வெவ்வேறு இசை பொருந்திய வித்தியாசமான மொழியிலான பாடல்களைப் பாடுவர். பறைத் தாளமும் வரவிற்கேற்ப வித்தியாசமான முறையில் சேவிக்கப்படும். தெய்வங்களின் வரவானது கட்டாடியாரில் வந்து வெளிப்படுவதாகக் கொள்ளப்படுகின்றது. கட்டாடியார் தெய்வமாடும் போது எத் தெய்வம் வருகை தருகின்றதோ அத் தெய்வம் அவரிற் குடிகொண்டு

வெளிப்பட்டாடுவதாக உள்ளது. தெய்வமாடுதல், கட்டுச்சொல்லுதல் போன்ற அம்சங்களும் அவர்கள் வழிபாட்டில் காணப்படுகின்றன.

ஆதிக்குடிகளான வேடர்களின் வழிபாடுகளில் ''கிரிகோரஹ'' எனப்படும் வழிபாட்டு வைபவம் முக்கியம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது. மிருகம் கொல்லப்பட்டதும் இறைவனுக்கு நன்றி செலுத்தவும் எதிர்கால வேட்டையாடல் நிகழ்வுக்கு ''நேயக்கு'' என்னும் தேவதையின் ஆசிர்வாதத்தைப் பெறவும் இது நடத்தப்படுகின்றது. இவர்களிடத்து

| | | |
|---|---|---|
| நேயக்கு வழிபாடு | - | மரணத்தின் பின்னர் நடத்தப்படுவது |
| தோலயக்கு வழிபாடு | - | தேன் சேகரிக்கும் போது பாதுகாப்பைப் பெறவும் |
| வனகடயக்கு வழிபாடு | - | வேட்டையாடுகையில் ஆவிகளின் ஆசியைப் பெறவும் |
| ருவல வழிபாடு | - | நோயைக் குணப்படுத்தவும் |
| கோலமடுவ வழிபாடு | - | கொள்ளை நோய்களை நீக்குவதற்கும் |
| ராகுயக் வழிபாடு | - | நோயைக் குணப்படுத்தவும், தேன் சேகரிக்கும் போது நன்மை பெறவும் |
| பாட்டயக் வழிபாடு | - | கர்ப்பிணிகளைப் பாதுகாக்கவும் |

எனத் தனித்தனி வழிபாடுகளைக் கொண்டுள்ளனர் (கே.என்.ஓ. தருமதாச, 1993, ப.04).

## ii. புராதன சைவ ஆலய நடைமுறைகள்

சைவ சமயத்தினுள் பல்வேறு வகைப்பட்ட தனித்தன்மை கொண்ட சமயப் பிரிவுகள் அடங்கும். மட்டக்களப்புப் பிரதேச சைவ சமயத்தவர்கள் பல்வேறு தத்துவங்களை அனுசரிக்கின்றார்கள். பல்வேறு தெய்வ வழிபாடுகள், பல்வேறு சடங்குகள். இவை எல்லாம் ஒட்டு மொத்தமாக சைவ சமய வழி பாடே உலகிலே வேறு எந்தச் சமயத்திலும் காணாத புதுமை இது எனக்கூறுவர் (வசந்தா வைத்தியநாதன், 1982, பக்.221).

மட்டக்களப்புக் கோயில்களின் வழிபாட்டு முறைகள், நிருவாகக் கட்டமைப்புகள், தொண்டூழியங்கள், முதலியன மட்டக்களப்புத் தமிழரது பண்பாடுகளைக் காட்டிநிற்கின்றன. எடுத்துக்காட்டாக மேல்வரும் கோயில்கள் நோக்கப்படுகின்றன.

## கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயம்

மட்டக்களப்பு நகரின் தென்பால் சுமார் பதின்மூன்று கிலோமீற்றர் தூரத்தில் மட்டக்களப்பு வாவியின் மேற்குக் கரையில் (படுவான்கரை) கொக்கட்டிச் சோலை என்னும் கிராமத்தில் இக்கோயில் அமைந்துள்ளது. இக்கிராமம் மண்முனை தென்மேற்குப் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்டதாகும்.

மட்டக்களப்புப் பிரதேசத்தில் உள்ள தேசத்துக் கோயில்களுள் இக்கோயில் மட்டுமே சிவன் கோயிலாகத் தனி இடத்தைப் பெற்றுள்ளது. இக்கோயில் வரலாற்றுச் சிறப்பினைக் கர்ணபரம்பரைக் கதைகள், கல்வெட்டுகள், மட்டக்களப்பின் பூர்வ சரித்திரம் கூறும் ஓலைச்சுவடிகள், சமய வரலாற்று நூல்கள் முதலியவற்றின் மூலமாக அறியலாம்.

### ஆலய வரலாறு

கலிங்க (ஒரிசா) தேசத்தரசனான குகசேனனது புத்திரி உலகநாச்சி என்பவள் மட்டக்களப்பின் மண்முனைப் பிரதேசத்திற்கு அதிபதியாக இருந்த காலத்திற் காடுகளைக் களனிகளாக்கும் வேலைத்திட்டத்தின் போது திடகன் என்னும் வேடன் கொக்கட்டிமரத்தில் தேன் இருக்கக்கண்டு மரத்தை வெட்ட, வெட்டுவாயில் இருந்து இரத்தம் பாய்ந்தது. அதைக் கண்ட திடகன் தனது உடைத்துணியால் வெட்டுவாயைக் கட்டி வைத்துவிட்டு உலகநாச்சியிடம் தெரிவித்தான். உலகநாச்சி அவ்விடம் வந்து பார்த்த போது மரத்தடியில் ஒரு சிவலிங்கம் இருப்பதைக் கண்ணுற்று அதற்கோர் கோயில் அமைத்து வழிபாட்டிற்கு உரியதாக்கினாள். ஆலயத்திற்கென வடநாட்டுக் கொல்லடத்தில் இருந்து பட்டர் மூவரை வரவழைத்து பூசை பண்ணுவித்தாள் என்று சொல்லப் படுகின்றது.

இச்சிவலிங்கம் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே வழிபட்டு வந்த இலிங்கம் எனவும் அது கால ஓட்டத்தினால் மண்ணால் மூடப்பட்டிருந்ததாகவும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர் (நடராசா, FXC., 1998, பக்.48,49). இக்கோயில் குளக்கோட்டன், கலிங்கமாகோன், விமலதர்மசூரியன், விக்கிரமராஜசிங்கன் முதலிய மன்னர்களால் பரிபாலிக்கப் பெற்ற சிறப்பை உடையது (கந்தையா, வி.சீ., 1983, பக்.20). சிற்றரசர்களாலும், மன்னர்களாலும் கோயிலின் திருப்பணி வேலைகள் காலத்துக்குக் காலம் நடைபெற்றாலும் கலிங்க மாகோன் ஆட்சிக் காலத்தில் (கி.பி 1215-1255) மிகச் சிறப்பாகத் திருப்பணி வேலைகள் நடைபெற்றன. நிருவாகம் தொடர்பான சட்டதிட்டங்களும் வகுக்கப்பட்டன (சாதியியல் கல்வெட்டு).

இது வீரசைவ வழிபாட்டு முறையிலான கோயிலாகும். இக்கோயிலிற் பூசை செய்வோர் வீரசைவர் (சங்கமர்) குலத்தைச்சேர்ந்த சைவக் குருக்கள்

பரம்பரையினரே. இவர்கள் காலை, மாலை, உச்சி ஆகிய முப்போதும் சிவலிங்க பூசை தவறாது செய்யும் இயல்பினர். சிவசின்னங்களை தம்மேனியில் ஆபரணமாக அணிபவர்கள். பண்டைக்காலத்தில் மட்டக் களப்புப் பகுதியில் பெரும்பாலான புராதன கோயில்களில் சங்கமக் குருமார்களே பூசகர்களாக அமர்த்தப்பட்டனர் எனத் தெரிகிறது (சற்குணம், ம., 1980, பக்6).

தான்தோன்றீஸ்வர கோயிற் பூசைகளிலும் விழாக்களிலும் காலத்துக்குக் காலம் வழிபாட்டு முறையில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளமையைக் காண முடிகின்றது. வேடரால் ஆரம்பிக்கப்பட்ட வழிபாடு பின்னர் கப்புகனார் வழிபாட்டு முறையில் இருந்திருக்க வேண்டும். ஏனெனில் பூசைவேளையில் வாய்ச்சீலை கட்டுதல், தலைப்பாகை சுற்றிக்கட்டல் இன்றும் பேணப்பட்டு வருகின்றன. இது கப்புகனார் வழிபாட்டின் அம்சங்களின் பாற்பட்டதாகும்.

### நிர்வாக முறைமை

ஆதிகாலத்தில் தான்தோன்றீஸ்வரர் கோயில் முக்குவர் குலத்தைச் சேர்ந்த காலிங்காகுடி, உலகிப்போடிகுடி, படையாண்ட (படையாட்சி) குடி ஆகிய மூன்று பிரதிநிதிகளால் பரிபாலனம் நடைபெற்று வந்தது. (தில்லைநாதன், எஸ்., 2008, பக்92). பின்னர் வண்ணக்குமாருடன் தொண்டூழியகாரர் சட்டிகுடியார், பெத்தாங்குடியார், கோப்பிகுடியார், கச்சிலாகுடியார், உலகிப் போடிகுடியார், படையாண்டகுடியார் ஆகியோர் நிருவாக சபை உறுப்பினர் களாயினர். இக்கோயிற் தொண்டூழியக் கருமங்களில் வேளாளர், கோயிலார், பண்டாரிகள் ஆகிய மூன்று சாதியினர் செயற்பட்டுள்ளனர்.

### வருடாந்தத் திருவிழா

முற்காலத்தில் பங்குனி உத்தரத்தை தீர்த்தோற்சவமாக கொண்டு வருடாந்தத் திருவிழா நடைபெற்றதாக வரலாற்றுக் குறிப்பு தெரியப்படுத்துகிறது (மகேஸ் வரலிங்கம், க., 1998, பக்109). பின்னர், ஆவணி உத்தரத்தில் கொடியேற்றப் பட்டு பூரணையை அடுத்து வரும் ஞாயிற்றுக்கிழமையைத் தேரோட்டமாகவும் மறுநாள் தீர்த்தோற்சவமாகவும் கொண்டதாக அமைவுற்றது. பூரணையின் மறுநாள் ஞாயிறு தினமாக வராது பின்பு வந்தால் உற்சவ திருவிழாக் காலமும் அதிகரிக்கும்.

இவ்வாலய நித்திய பூசையில் பூசகர், கவுடாக்காரன், அமுதுவைப்பவர், பூப்பறிப்பவர், தொண்டூழியகாரர் என்போர் சம்பந்தப்படுகின்றனர். திரு விழாக் காலத்தில் குருக்கள், கவுடாக்காரன், கங்காணி, அமுதுவைப்பவர், தொண்டூழியகாரர், நெற்குற்றும் பெண்கள், தொழும்பறை ஊழியகாரர், பட்டிக்காரன், அன்னக்கொடி பின்னுபவர், கொடிமரத்தில் ஏறுபவர்,

உள்விளக்குக்காரன், வெளிவிளக்குக்காரன், திருநீற்றையர், விளக்குப் பார்ப்போர், மணிக்காரன், தவில்க்காரன், குழல்க்காரன், வீதி அதிகாரி, கோயில்வண்ணான், பரிவேட்டு வண்ணான், அம்பிளாந்துறைவண்ணான், மாலைகட்டுபவர், நாற்காலி தூக்குபவர், தம்பட்டம் தூக்குபவர், ஆராத்திப் பெண்கள், சந்திரப்பிறை சூரியப்பிறை தூக்குவோர், கொடிபிடிப்போர், சூலவிளக்கு தூக்குபவர் ஆகியோருக்கு படியென்ற வகையில் கொடுப் பனவுகள் வழங்கப்படுகின்றன. இதனைக் ''கூலி'' என்று கருதுவதில்லை. இக்கொடுப்பனவுகள் திருவிழாக் காரராற் செலுத்தப்பட்டு வருகிறது.

**தேரோட்டம்**

தருமசிங்கன் என்னும் மன்னனாற் சோழநாட்டில் இருந்து பொற்றேர், சித்திரத்தேர், சிறியதேர் ஆகிய மூன்று தேர்கள் வரவழைக்கப்பெற்று இக் கோயில் உற்சவத்தை நடத்தியதாகத் தெரியவருகிறது (கலைவாணி, க., 1998, பக்59). அதில் ஒன்று மட்டக்களப்பு வாவியிற் போய் மூழ்கியதாகச் சொல்லப் படுகிறது. தேர் மூழ்கி இருந்த இடத்தினைத் தேர்தாண்ட பள்ளம் என இன்றும் அழைக்கப்பட்டு வருகின்றது. ஏனைய இரு தேர்களும் அபூர்வமான சிற்ப வேலைப்பாடுகளைக் கொண்டதாற் பல்வேறு புராண நிகழ்வுகளைச் சித்தரிக்கும் காட்சிகள் இடம் பெற்றுள்ளன. ஒரு தேர் சித்திரத் தேர் எனவும் மற்றைய தேர் பிள்ளையார் தேர் எனவும் அமைந்துள்ளன. இத்தேர்கள் இலுப்பை மரத்தினாற் செய்யப்பெற்றவை. இவற்றின் சிற்ப வேலைப்பாடுகள் பாண்டிய பாணியில் அமைந்துள்ளதாகக் கருதப்படுகிறது. இவ்விரு தேர்களும் அளவு, அமைப்பு முறைகளில் வேறுபடுகின்றன.

தேரோட்டநிகழ்வு நடந்த அன்றிரவு திருவேட்டைத் திருவிழா (சூகர வேட்டை) நிகழ்வு நடைபெறும். சூகரம் என்பது பன்றியைக் குறிக்கும். திருவேட்டையின் போது பாடப்படும் பாடலுக்கேற்ப பாவனையுடன் வேட்டையாடுவது கண்கொள்ளாக் காட்சியாகும்.

**வரிசைமுட்டி கூறுதல்**

திருவேட்டைத் திருவிழா நிகழ்ச்சி முடிவுற்றதும் திருவேட்டை நிகழ்வு நடைபெற்ற இடத்திற்குத் தென்புறமாக வடக்கு நோக்கிய பந்தரின் கீழ் வரிசைமுட்டி கூறுதல் நடைபெறும். இதனைக் கஞ்சிமுட்டி கூறுதல் எனவும், குடுக்கைகூறுதல் எனவும் குறிப்பிடுவர். மட்டக்களப்புப் பிரதேசத்தில் வாழும் பல்வேறுபட்ட குலத்தினருக்கும், குடிவழிமரபினருக்கும் தொண்டூழியம் புரிபவருக்கும் முன்னிலையாளருக்கும் கௌரவப்படுத்தும் வகையில் இக்குடுக்கை கொடுக்கப்படுகின்றது. மரபுக்குரியோர் கௌரவிக்கப்படுகின்றனர். அவைபற்றி பங்கு கூறும் கல்வெட்டு, திருப்படைக் களஞ்சியம் என்பன

விரிவாக எடுத்தியம்புகின்றன. இதனையடுத்து காலையில் தீர்த்தோற்சவம் நடைபெறும். இங்கு தேரோட்ட உற்சவமே முக்கியமாகக் கருதப்படுகின்றது. இவ்வாலயத்தில் புதிர் எடுத்தல், புதிர் கொடுத்தல், புதிர் உண்ணல் ஆதியன விசேடமாக நடைபெறும்.

### புதிர் எடுத்தல்

பெரும் போக வேளாண்மையில் கோயில் வயலில் இருந்து முற்றிய நெற் கதிர்களை எடுத்துக் கொணர்ந்து பூசகரும், கௌடா வீட்டுக்காரரும் புதிர் எடுக்கும் பெட்டியுள் நெற்கதிர்களை வைத்து, பெட்டியைத் தலையில் ஏந்திய வண்ணம் மேளதாளத்துடன் கோயிற் புறவீதியில் வலம்வந்து கோயிலி னுள்ளே கொண்டு செல்வர்.

### புதிர் கொடுத்தல்

புதிர் எடுத்தலின் பின்பு வேறோர் தினத்தில் புதிர் கொடுக்கும் நிகழ்வு நடைபெறும். பல இடங்களில் இருந்தும் கோயிலுக்குக் கொண்டுவரப்பெற்ற புதுநெல்லினை தொண்டூழியக்காரர், வறியோர் ஆகியோருக்கு புதிர் உண்பதற்காக வழங்குவர். இதற்காக சுமார் நான்கு அவணநெல் செலவு செய்யப்படுகின்றது.

### புதிர் உண்ணல்

புதிர் கொடுத்தபின் வேறோர் சுபவேளைத் தினத்தில் புதிர் உண்ணல் நிகழ்வு இக்கோயிலில் ஆரம்பிக்கப்படும். புதிர் உண்ணுதலுக்கான கறி அமுது முதலில் தான்தோன்றீஸ்வரருக்கு நிவேதிக்கப்பட்ட பின்னர் அதனை மக்கள் பிரசாதமாகப் பெற்று உண்பர். இது புதிர் உண்ணல் எனப்படும்.

இக்கோயிலில் மகாசிவராத்திரி பூசையின் போது இரவு நான்கு சாமமும் சோறு, சோளம், பூசணிக்காய், கிழங்கு வகைகள் என்பன பிரசாதமாக வைத்துப் பூசைகள் நடைபெறுகின்றன. இப்பிரதேசத்தில் விளைவு பெற்றவைகளே இப்பூசைக்குப் பிரசாதமாக வைக்கப்பெறுவது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

### கட்டை நேர்தல்

மழையின்றி உயிரினங்கள் துன்பமடையும் போது மழையைப் பெய்விப் பதற்காக ''கட்டை நேர்தல்'' என்னும் வழிபாட்டுமுறை இக்கோயிலில் இன்று வரை பேணப்பட்டு வருகிறது. தான்தோன்றீஸ்வரர் கோயிலில் இருந்து சுமார் ஒரு மைல் தொலைவில் உள்ள தென்மத்தன் கிணற்றடியை நோக்கி, நாவல் மரக்கட்டை ஒன்றினைப் புனிதமான முறையில் எடுத்துச் செல்வர். தென்மத்தன் கிணற்றடியில் எழுந்தருளியிருக்கும் பிள்ளையாருக்கு

முன்பாக கொண்டு சென்ற நாவற் கட்டையை வைப்பர். மழையானது இக்கட்டையை உருட்டிச் செல்லும் தன்மைக்கேற்ப பெய்ய வேண்டும் என வேண்டுவர். மழைபெய்ததும் இப்பிள்ளையாருக்குப் பூசையும் மக்களுக்கு அன்னதானமும் செய்வர்.

### திருக்கோயில் ஸ்ரீ சித்திரவேலாயுதர் ஆலயம்

மட்டக்களப்பு நகரில் இருந்து சுமார் நாற்பத்தைந்து மைல் தூரத்திலே திருக்கோயில் என்னும் கிராமம் உள்ளது. மட்டக்களப்பிலுள்ள முதலாவது திருப்படைக் கோயில் இதுவாகும். இத்தலத்தின் சிறப்பினால் நாமம் பெற்ற இக்கிராமத்திற்கு வெள்ளை நாவற்பதி, கண்டபாணந்துறை, கந்தபாணந்துறை, நாகர்முனை, நாகர்மேடு, உன்னரசுகிரி முதலிய பெயர்கள் வழங்கப் படுகின்றன.

### ஆலய வரலாறு

சுப்பிரமணியக் கடவுளது ஆணையின் பிரகாரம் சூரனைச் சம்மாரஞ் செய்த வேலானது உக்கிரம் சகிக்க முடியாமல் கடல் நோக்கி வரும் வழியில் மூன்று தடாகங்களை ஏற்படுத்தி, வாகூர மலையை இரண்டு பிளவாக்கி சமுத்திரத்தில் மூழ்கி, வெள்ளை நாவலில் ஆறியிருந்த தெனவும், அந்தக் காலத்தே வேடுவர் அதனைக் கண்டு ஆராதித்தார்களெனவும், தமிழரின் இரண்டாம் படை யெழுச்சிக் காலத்தில் (கி.மு-103) வந்த சோழநாட்டு மன்னர் எழுவர் திருக்கோயிலைக் கட்டி முடிப்பதற்கு இந்தியாவினின்றும் கல் முதலியன கொணர்ந்து கட்டி முடித்துத் திருப்பணியைப் பூர்த்தி செய்தார்களெனவும், அத்தினத்து வடமுகமாயிருந்த வேல் கிழக்கு முகமானதினால் திருக்கோயில் என அழைக்கப்பட்டதெனவும் சான்று காட்டி மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது.

ஆதித்திராவிடரின் ஒருபிரிவான நாகர்குல மக்கள் வாழ்ந்த இடமாதலால் நாகர்முனை, நாகர்மேடு ஆகிய பெயர்கள் உரியதாயிற்று. திருக்கோயில் பிரதேசத்தின் தொன்மைக்கு இது சான்றாக உள்ளது. காலம் பல சென்ற பின்னர் குளக்கோட்டன், பரராசசிங்கன் ஆகிய அரசர்கள் வந்து வேலினைப் பணிந்து வழிபட்டதாகவும் பின்பு தென்னிந்திய சிற்ப சாத்திர முறைப்படி கோயில் அமைத்து, தொண்டூழியத்திற்காகவும், கோயில் முறைதவறாது பூசை முறைகள் நடத்துவதற்காகவும் மக்களைக் குடியேற்றி மானியங்களை வழங்கியதாகவும் அறியமுடிகின்றது (கோவிந்தசாமி, உ., 1965). இவ் வாலயம் மூர்த்தி, தலம், தீர்த்தம், விருட்சம் ஆதியன பெற்றுள்ள தலமாகும்.

காலத்துக்குக் காலம் மன்னர்களால் மகோன்னத நிலையில் கொண்டு வரப்பட்ட இக்கோயில் போர்த்துக்கீசரால் அழிக்கப்பட்டது. போர்த்துக்கீச தளபதியாகிய அசிவிடோ அழித்தொழித்த பலநூற்றுக்கணக்கான சைவக் கோயில்களுள் திருக்கோயிலும் ஒன்று என குவேரோஸ் அடிகள் குறிப்பிடு கின்றார் (Queyroz, F. 1930, pp351). அழிக்கப்பட்ட காலத்தில் மூன்று கோபுரங் களுடன் ஆலயம் இருந்தது (சற்குணம், ம., 1980, பக்130).

### நிருவாக முறைமை

திருக்கோயில், தம்பிலுவில் ஆகியவற்றுள் ஒருவரே வண்ணக்கர் பதவியை வகிப்பர். மட்டக்களப்புப் பிரதேசத்தில் உள்ள கூமுனைப்பற்று, பாணமைப் பற்று, அக்கரைப்பற்று, கரைவாகுப்பற்று, எருவில்பற்று, போரதீவுப்பற்று, மண்முனைப்பற்று, கோறளைப்பற்று என்னும் பகுதி மக்களுக்கும் உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. நிருவாக சபை வட்டாரப் பிரதிநிதிகளாக

1. திருக்கோயில் 2. தம்பிலுவில் 3. தம்பட்டை 4. பொத்துவில் 5. கோமாரி 6. வினாயகபுரம் 7. கோளாவில் 8. பனங்காடு 9. நாவற்காடு 10. ஆலையடி வேம்பு 11. அக்கரைப்பற்று 12. கண்ணகிபுரம் 13. காரைதீவு 14. பாண்டிருப்பு 15. துறைநீலாவணை 16. சேனைக்குடியிருப்பு 17. நற்பட்டிமுனை 18. கல்முனை 19. தாண்டியடி

என்னும் கிராமங்களின் பிரதிநிதிகள் விளங்குகின்றனர். பஞ்சாய சபையில் தலைவர், செயளாளர், பொருளாளர், வண்ணக்கர், கணக்காளர் ஆகிய ஐவர் விளங்குகின்றனர்.

### வருடாந்தத் திருவிழா

இத்தலத்தில் ஆடி அமாவாசைத் தினத்தில் சமுத்திர தீர்த்தோற்சவம் நடைபெறும். தீர்த்தோற்சவத்தின் முன் பதினேழு நாட்களும் திருவிழா நடைபெற்று பதினெட்டாம் நாள் தீர்த்தோற்சவம் நடைபெற்று வருகின்றது. பத்தொன்பதாம் நாள் பூங்காவனமும் இருபதாம் நாள் வைரவர் பூசையும் நடைபெற்று வருடாந்தத் திருவிழா நிகழ்வு நிறைவு பெறும். இத் தீர்த்தத்தினத்தில் கடல் நீரெடுத்து மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் தீர்த்தத்தில் கலக்கும் வழக்கம் ஆதிகாலம் முதலாக இருந்து வந்துள்ளது.

இக் கோயிலில் நித்திய பூசைகள் மூன்று வேளைகளிலும் நடைபெற்று வருகின்றன. வருடாந்தத் திருவிழாவைத் தவிர புதுவருடப் பிறப்பு, கந்த சஷ்டி, திருக்கார்த்திகை, விநாயகசஷ்டி, திருவெம்பாவை, மார்கழித் திருவிழா, சிவராத்திரி ஆகிய காலங்களில் விசேட பூசைகள் நடைபெற்று வருகின்றன.

**மண்டூர் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயம்**

மட்டக்களப்பு நகரின் தெற்குத்திசையில் சுமார் முப்பத்திரெண்டு கிலோமீற்றர் தூரத்தில் மட்டக்களப்பு வாவியின் மேற்குக் கரையில் மண்டூர்க் கிராமம் உள்ளது. இது போரதீவுப்பற்றுப் பிரதேச செயலகப்பிரிவில் அமைந்துள்ளது. இக்கிராமத்தில் கந்தசுவாமி ஆலயம் எழுந்துள்ளது. மட்டக்களப்புப் பிரதேசத்தில் உள்ள தேசத்துக்கோயில்களுள் இதுவும் ஒன்றாகும். இங்கு பூசைக் கிரியைகள் ஆகமநெறி சாராததும் பத்ததி முறை அற்றதுமான பக்தி நெறியின் பாற்பட்ட மௌன பூசையாகப் பண்டுதொட்டு நடைபெற்று வருகிறது. இக் கோயிலைச் சின்னக் கதிர்காமம், தில்லைமண்டூர்க் கோயில், மண்டூர் முருகன் கோயில் என்னும் பெயர்களாலும் அழைப்பர். மண்டு மரங்கள் செறிந்து காணப்பட்ட இடமாதலால் மண்டூர் எனப் பெயர் பெறலாயிற்று.

**ஆலயத் தோற்றம்**

மண்டூர்க்கந்தசுவாமி ஆலயவேல் வரலாற்றைச் சீர்பாத வரன்முறைக் கல்வெட்டு, வீரமுனைச் செப்பேடு, துறைநீலாவணைச் செப்பேடு ஆகியன சீர்பாததேவியினால் சீர்பாத குல மக்களுக்கு வழிபடக் கொடுத்த வேல் எனக் குறிப்பிடுகின்றன (Ragavan, 1953, pp188-193). சூரனைத் தொலைத்த வேலாயுதத்தில் இருந்து பிறந்த மூன்று ஒளிப்பிளம்புகளில் ஒன்று திருக்கோயில் வெள்ளை நாவல் மரம் ஒன்றிலும் மற்றது உகந்த மலையிலும் மற்றது மண்டூர்த்தில்லை மரத்திலும் தங்கி நிலைபெற்று விட்டன என்பது ஐதீகம் (கந்தையா, வி.சீ., 1983, பக்66). சீர்பாத தேவியின் வேலின் வரலாற்றுடன் தொடர்புடையவனான சீர்பாதகுலத்தைச் சேர்ந்த சிந்தனின் வம்சத்தினரே இவ்வாலயத்தின் பிரதம கப்புகனாராக இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

**ஆலய ஒழுங்கமைப்பு**

மண்டூர்க் கந்தசுவாமி ஆலயம் துறைநீலாவணை (சீர்பாதர்), பெரியகல்லாறு (கரையார்), கோட்டைக்கல்லாறு (கரையார்), குருமண்வெளி (சீர்பாதர்), மண்டூர் (பெரிய கவுத்தன்குடி வேளாளர்) ஆகிய ஐந்து பிரதிநிதிகளினாலான சபையினால் பரிபாலனம் செய்யப்படுகின்றது. மண்டூர் தவிர்ந்த மேற்காட்டிய நான்கு ஊர்களும் மட்டக்களப்பு வாவியின் கிழக்குக் கரையில் உள்ளன. அவை களுவாஞ்சிக்குடிப் பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ளவை. இந்நான்கு ஊர்களின் பிரதிநிதிகளை கணக்கப்பிள்ளைமார் எனவும் மண்டூர் பெரிய கவுத்தன்குடி வேளாளப் பிரதிநிதியை வண்ணக்கர் எனவும் அழைப்பர். இவர்களில் வண்ணக்கர் மாத்திரமே ஆலயத்திற் படிபெறும் பரிபாலன சபை அங்கத்தினராவார்.

இவ்வாலயத்தை தோற்றுவித்த துறைநீலாவணை, பெரிய கல்லாறு, கோட்டைக்கல்லாறு, குருமண்வெளி ஆகிய நான்கு ஊர்ப் பெரியார்களினால் இப்பிரதேச (பற்று) வன்னிமையின் மூலமாக இவ்வாலயத் திருப்பணி வேலைகளுக்காக பொத்துவில் பிரதேசத்தின் கோரக்களப்பில் இருந்து மண்டூருக்குக் கொண்டு வந்து குடியமர்த்தப்பட்ட பெரிய கவுத்தன்குடி வேளாள குடும்பம் ஒன்றின் வம்சாவளியினரே வண்ணக்கராவார். இவர் கணக்கப்பிள்ளைமாரின் அங்கீகாரத்துடனேயே இயங்க வேண்டியவராயுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மண்டூர்க் கிராமமானது கோயிலார் சமூகம், வேடர் சமூகம், சீர்பாத சமூகம், சிங்களக்குடிச் சமூகம், வேளாளர் சமூகம், முக்குவ சமூகம், பிராமணக்குடிச் சமூகம், காரைதீவு (வயிற்றுவார்) சமூகம், கோவியர் சமூகம், வண்ணார் சமூகம், நாவிதர் சமூகம் முதலிய பல்லின சமூகப் பிரிவுகளைக் கொண்டது. வேளாள சமூகத்தில் பெரிய கவுத்தன்குடி வேளாளர், செட்டி வேளாளர், சோனக வேளாளர் முதலிய பிரிவுகள் உள்ளன. பெரிய கவுத்தன் குடி வேளாளரில் மண்டூர் வயிற்றுவாரும் பழுகாம வயிற்றுவாரும் வண்ணக்கர் பதவியை வகித்து வருகின்றனர். அப்பதவியை வகிப்பதற்குச் சில சம்பிரதாயங்களும் மரபுகளும் பேணப்பட்டு வருகின்றன.

சீர்பாத சமூகத்தின் சிந்தாத்திரன்குடியைச் சேர்ந்த சிந்தனின் பரம் பரையினர் பெரிய (பிரதம) கப்புகனாராகவும் சிங்களக்குடிச் சமூகத்தின் கப்புகவம்சத்தைச் சேர்ந்தவர்கள் பூசைக்கப்புகமாராகவும் (உதவி கப்புகமா ராகவும்) சேவையாற்றி வருகின்றனர். பெரிய கப்புகனாரைத் திருவிழாக் கப்புகனார் என்றும் கூறுவர்.

கோயிற் தொண்டூழியம் செய்யக் கோயிலார் சமூகத்தில் வெளிப்பணி விடையாளர் உட்பணிவிடையாளர் என இரண்டு பிரிவுகளாக உள்ளனர். இவ்விரண்டு பிரிவுகளுக்கும் தலைவர்களாக இருவர் முறையே கங்காணி, கவுடாக்காரன் என்ற பதவிகளை வகிப்பர்.

வண்ணக்கர், பெரியகப்புகனார், பூசைக்கப்புகமார், கங்காணி, கவுடாக் காரன், கோயிலார் ஆகிய பதவியணியினர் இக்கோயிலின் படிபெறும் சேவையாளராவர்.

### வருடாந்தத் திருவிழா

கதிர்காம ஆலயத் தீர்த்தோற்சவம் நடைபெற்றுப் பத்தாம் நாளில் மண்டூர்க் கந்தசுவாமி கோயில் வருடாந்தத் திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்ப மாகும். கொடியேற்றப்பட்டு இருபத்தோராம் நாள் பூரணைத் தினத்தன்று

தீர்த்தோற்சவம்,கொடியிறக்கத்துடன் திருவிழா நிறைவு பெறும். தேசத்துக் கோயிலின் மரபு வழி மகாசனசங்கத் தலைவரான பிரதேச வன்னியனாரின் சமூகத்தில் கோயிற் கொடியேற்றம், தீர்த்தோற்சவம், கொடியிறக்கம் என்பன நடை பெறுவது வழக்காகும்.

### வரிசைமாலை கூறுதல்

தீர்த்தோற்சவம் நடைபெறும் வேளையில் பிரதேச வன்னியனார், தேசத்துக் குருக்கள், மட்டக்களப்புத் தேசத்தின் சார்பில் ஒருவர், நான்கு கணக்கப் பிள்ளைமார், நான்கு ஊர் கணக்கப்பிள்ளைமார்களின் ஊர்களின் இவ்வாலய உரிமையுடைய நான்கு தலைவர்கள் ஆகியோர்களுக்கு மஞ்சள் காப்பு, பட்டுத்தீர்த்தம், மாலை என்பன வழங்கப்படும்.

நித்திய பூசைக்காலத்தில் வண்ணக்கர், கப்புகமார், கங்காணி, கவுடாக்காரன், மாதக் கோயிலான் ஆகியோருக்கும் திருவிழாக் காலத்தில் வண்ணக்கர், பெரிய கப்புகனார், பூசைக் கப்புகமார், கங்காணி, கவுடாக்காரன், கப்புகப்பிள்ளைகள் இருவர், சுவாமி தூக்கும் வேளாளர், உட்பணி விடைகாரர், வில்லம்புக்காரன், ஐயன், மடப்பள்ளிக்காரன், ஆராத்திப்பிள்ளைகள், தேசத்து வண்ணான், பரிவேட்டு வண்ணான், எண்ணெய்க்காரன், பந்தவிளக்கு தூக்குவோர், கொடி பிடிப்போர், சூரியப்பிறை சந்திரப்பிறை முதலான ஆல வட்டங்கள் தூக்குவோர், பாதுகைக்காரன், தவிலடிப்போர், மாலைக்காரன், மூப்பன் ஆகியோருக்கும் கொடுப்பனவுகள் கொடுக்கப்படுகின்றன.

இக்கோயிலில் கந்தசஷ்டி விரதம், திருக்கார்த்திகை விரதம், சிவராத்திரி விரதம், சித்திரகுப்த விரதம், விநாயக சஷ்டி விரதம், தைப்பிறப்பு, புதுவருடப் பிறப்பு என்பன விசேட ஆராதனைக் காலங்களாக நடைபெறுகின்றன.

### கருவீரமலர் மாலை

திருப்பரங்குன்றத்தில் முருகனுக்கு கடம்ப மலர் மாலை சூட்டி வழிபாடு செய்வது போல மண்டூர் முருகனுக்கு கருவீர(கரையாக்கு) மலர் மாலை சூட்டி திருவிழாக்காலங்களில் வழிபாடு நடைபெறுகின்றது. இக்கோயிலின் சிறப்பம்சங்களில் அரட்டு மேளமும், அணையா விளக்கும் குறிப்பிடத்தக்கன.

## கோயிற் போரதீவு சித்திர வேலாயுதர் ஆலயம்

மட்டக்களப்பு நகருக்குத் தென்பால் சுமார் பத்தொன்பது மைல் தூரத்தில் மட்டக்களப்பு வாவிக்கு மேற்குப் பக்கத்தில் கோயிற் போரதீவு என்னும் கிராமம் அமைந்துள்ளது. வன்னியர் ஆட்சிக் காலத்தில் இக்கிராமம் முதன்மை பெற்று விளங்கியதாக அறிய முடிகின்றது. (கந்தையா, வி.சீ., 1983, பக்.75). இக்கிராமம் போரதீவுப்பற்றுப் பிரதேச செயலகப் பிரிவில் அடங்கியுள்ளது.

### ஆலய வரலாறு

மட்டக்களப்பு மான்மியம் என்னும் நூல் தருகின்ற தகவலை அடியொற்றியே இத்தலத்தின் வரலாற்றை அறிய முடிகின்றது. இதனது குறிப்புக்களைக் கொண்டு கோயில் வரலாற்றை இயக்கர் நாகர் காலகோயிலாக அறிய முடிகிறது.

மட்டக்களப்பின் அரசனான மதிசுதனும் இவ்வாலயத்திற்காக ஆயிரம் அவண நெற்களனிகள் (அவணம் என்பது நெல்லை அளக்கும் அளவை முறையாகும்) திருத்தி செந்நெல் வயல்களையும், நீரைத்தேக்கி வயல்களுக்குப் பாயச் செய்ய நாதனை என்னும் அணைக்கட்டையும் உருவாக்கினான். வேலாயுதர் வெளி என்று வயலுக்கு நாமம் சூட்டி சித்திரவேல் ஆலயத்திற்கு ஈந்தான் (நடராசா, F.X.C., 1998, பக்.55). இங்கு போர் முனைநாடு என்பது போரதீவைக் குறிக்கும் பெயராகும். போரதீவுக்குத் தோற்றுவாயாக இக் கோயில் அமைந்ததால் கோயில்போரதீவு எனலாயிற்று.

இவ்வாலயம் ஆரம்ப காலத்திலே கொத்துப் பந்தலிட்டு வழிபடப்பட்டு வந்தது. இதனை ஆலயமாகக் கட்டுவதற்குரிய வாய்ப்பு இங்குள்ள மக்களிடம் இல்லாத காரணத்தினால் அம்மக்கள் மனவேதனையுற்றனர். இதன் காரணமாக தென்னிந்தியாவிற் காரைக்குடி என்னும் கிராமத்திலே செல்வமிக்கவராய் வாழ்ந்த நாகப்பச் செட்டியார் என்பாரது கனவில் முருகக் கடவுள் தோன்றி ஈழத்து மட்டக்களப்பில் வெள்ளை நாவலம்பதியிற் கோயில் எடுக்குமாறு கூறியருளினார். பின்னர் செட்டியார் தன் மனைவியுடன் இவ்விடம் வந்து தங்கியிருந்து கோயிலைக் கட்டிமுடித்தார். அக்கோயில் சொறிக்கற்களினால், மருதமரச் சாம்பலுடன் தேன் கலந்து கட்டியதாகக் கூறுவர் (பெரியதம்பி, சி., 2007). இக்கோயிலின் கருவறையின் வாசற் படியில் ''தென்னிந்திய காரைக்குடி நாகப்பச் செட்டி உபயம் பிராமணர் பராபரிப்பு'' எனக் குறிப்பிடப் பட்டுள்ளது இங்கு நோக்கத்தக்கது.

### நிருவாக முறைமை

இவ்வாலயம் சிறப்புற நடைபெறுவதற்காக பிரதேச வன்னிமையால் வகுக் கப்பட்ட நெறிமுறையின் கீழ் ஆலயம் நடைபெற்று வந்துள்ளது. ஆலய முகாமைத்துவப் பொறுப்பு அப்பகுதி முக்குவ குல பணிக்கனார் குடியினரிடம் இருந்து வந்துள்ளன. வண்ணக்கர் எனும் நிருவாகப் பொறுப்பாளராகக் களுவாஞ்சிக்குடி கவுத்தன்குடி வேளாளர் கடமையாற்றியதாகவும் அறிய முடிகிறது (கவிக்கோ வெல்லவூர்க் கோபால், 2011, பக்154). கண்காணிப் பாளருக்குரிய கடமைப் பொறுப்பு கோயில்போரதீவு பொன்னாச்சி குடியைச்

சேர்ந்த கோயிலாரிடமும் ஒப்படைக்கப்பட்டு பரிபாலிக்கப்பட்டு வந்ததாகவும் தகவல்கள் கூறுகின்றன.

பின்னர் ஏதோ காரணம் பற்றி களுவாஞ்சிக்குடி வேளாளர் ஆலயத் தொடர்பில் இருந்து ஒதுங்கிக் கொண்டனர். அதன் பின்னர் முக்குவர் வண்ணக்கராயினர். முக்குவகுல பணிக்கனார் குடியும், பெத்தான் குடியும் இவ்வண்ணக்கர் பதவியை பரிமாறிக் கொண்டதாக அறியமுடிகிறது (கணேச மூர்த்தி, ச., 2007).

### வருடாந்தத் திருவிழா

இக்கோயிலின் வருடாந்த மகோற்சவத்தீர்த்தம் ஆடிமாதப் பூரணைத் தின மாகும். பூரணைத் தினத்தை இறுதி நாளாகக் கொண்டு இருபத்தொரு நாட்களைக் கொண்ட வருடாந்த மகோற்சவத் திருவிழா நடைபெற்று வந்தது.

ஆரம்ப காலங்களில் கோயிற் திருவிழாவானது முனைத்தீவு (சும்மாடு கட்டுக்குடி), எருவில் (கோப்பிக்குடி), மகிழூர் (பெத்தான்குடி), களுவாஞ் சிக்குடி (கவுத்தன்குடி), கோவிற்போரதீவு (காலிங்காகுடி, படையாட்சிகுடி, பணிக்கனார்குடி, பெத்தாங்குடி, கச்சிலாகுடி, மாதவிகுடி, கோப்பிக்குடி) ஆகிய கிராமத்தவர்களால் நடாத்தப்பட்டது. கொடியேற்றமும் கொடி யிறக்கமும் கோயிற் பொறுப்பில் நடைபெற்றது. கொடியேற்றத்தின் போது பயன்படுத்தப்படும் கொடிச்சீலை முனைத்தீவு ஆசாரிமார்களாலே தயாரித்து வழங்கப்பட்டு வந்ததாக அறிய முடிகிறது (கணேசமூர்த்தி, ச., 2007). மேற்படித் திருவிழாக்கள் தற்போது பத்து நாட்களுக்கு மட்டுப்படுத்தப் பட்டுள்ளது. இவ்வாலயத்தில் ஆகம முறையில் பூசைகள் நடைபெறுகின்றன.

## பெரியபோரதீவு ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலயம்

மட்டக்களப்பு நகரின் தெற்குத் திசையில் சுமார் பதினெட்டு மைல் தொலைவில் மட்டக்களப்பு வாவியின் மேற்குக் கரையை அடுத்து போரதீவுப் பற்றுப் பிரதேசச் செயலகப் பிரிவிற்குட்பட்ட பெரியபோரதீவுக் கிராமம் உள்ளது. இங்கு ஸ்ரீ பத்திரகாளியம்மன் கோயில் அமைந்துள்ளது.

### பழமையும் நிருவாக முறைமையும்

மட்டக்களப்பு மான்மியம் இக்கோயிலை இயக்கர், நாகர் காலம் முதலாக விளங்கி வருகின்ற பழைமை வாய்ந்த கோயிலாகக் கூறுகின்றது. ஸ்ரீ பத்திரகாளியம்மன் கோயிலின் நிருவாகக் கட்டமைப்பு பெரிய போரதீவினை தாயகமாகக் கொண்ட விஸ்வப்பிரம்மகுல மக்களுக்கும் பெரியபோரதீவைத் தாயகமாகக் கொண்ட முனைத்தீவு விஸ்வப்பிரம்மகுல மக்களுக்கும், இவ்

விரு கிராமங்களையும் தாயகமாகக் கொண்ட பட்டாபுர விஸ்வப்பரம்மகுல மக்களுக்கும் உரித்துடையதாக விளங்குகிறது.

ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் அக்கிராசனர் என்னும் பெயரில் விளங்கிய ஆலயத் தலைவருடனான நிருவாக அமைப்புமுறை இருந்துள்ளது (தில்லைநாதன், எஸ்., 2008). சூரியடப்பன் குடியில் தலைவரும் இரு உறுப்பினரும், சும்மாடு கட்டுக்குடியில் செயலாளரும் ஒரு உறுப்பினரும், சிங்களக்குடியில் பொருளாளரும், மேலும் வடராமன்குடி, கட்டாடிகுடி, கொல்லங்கந்தன்குடி, சம்மாங்காரக்குடி, பதஞ்சலிகுடி, ஆசாரிகுடி ஆகிய வற்றில் தலா ஒவ்வொரு உறுப்பினருமாக தெரிவுசெய்யப்படுகின்ற நிருவாக சபையினர் கோயிலைப் பரிபாலனம் செய்து வருகின்றனர். இக்கோயிலின் பழைய மரபின் படி கோயிற் பூசகர் கட்டாடியார் எனவும், நம்பியார் எனவும் பூசாரியார் எனவும் அழைக்கப்பட்டனர்.

**கனவு கண்ட பத்ததி**

''கனவுகண்ட பத்ததி'' எனக் கூறப்படும் பத்ததி விதிமுறையின்படியே பூசை முறை நடைபெற்று வருகிறது. (காந்தன் குருக்கள், வை.இ.எஸ்., 2006). இங்கு நித்திய பூசை நடைபெறுவதில்லை. வெள்ளிக்கிழமைகளிலும் விசேட தினங்களிலும் பூசைகள் நடைபெறுகின்றன.

**வருடாந்த உற்சவம்**

கோயில் வருடாந்த உற்சவ காலம் புரட்டாதி மாதத்தில் நவராத்திரி காலத்தை கவனத்திற்கொண்டு விஜயதசமியை அடுத்துவரும் புதன்கிழமை தீ மிதிப்பு நடைபெறும் நாளாகக்கொண்டு தீர்மானிக்கப்படும். புதன்கிழமைக்குப் பதினொரு நாட்கள் முன்னதாக வரும் சனிக்கிழமையன்று கோயில்த் திருக் கதவு திறப்பதோடு வருடாந்த உற்சவம் ஆரம்பமாகும்.

மது கொடுத்துப் பின்னர் ஆடுகள், கோழிகள் பலியாகக் கொடுக்கப்படும். பிற்காலத்தில் மதுவுக்குப் பதிலாகத் தேனும் உயிர்ப்பலிக்குப் பதிலாகப் பூசணிக்காயும் பயன்படுத்தப்படுகின்றன.

பின்னர், கட்டப்பெற்ற நோர்ப்பினை அவிழ்த்து, எட்டுத் திக்கிலுமுள்ள காவல்த் தெய்வங்களுக்கு பலி முறையில் அவற்றை வழங்குவர். அதன்பின்பு ஆலயத்தின் கிழக்குப் பக்கமாக வெளி மண்டபத்தில் அம்மனுக்குரிய அனைத்து ஆயுதங்களையும் வைத்துப் பூசை வழிபாடு நடைபெறும். ஆயுத பூசை முடிவுற்றதும் கோயிலுக்குள்ளே சென்று அம்மனுக்கு தாலாட்டுப் பாடி அருள்வாழி பாடுவர். அதன்பின்னர் கருவறைத் திருக்கதவு பூட்டுதலுடன் வருடாந்த உற்சவம் நிறைவு பெறும்.

## துறைநீலாவணைக் கண்ணகையம்மன் ஆலயம்

மட்டக்களப்பு நகரில் இருந்து தென்திசையில் சுமார் முப்பத்தைந்து கிலோ மீற்றர் தூரத்தில் துறைநீலாவணை என்னும் கிராமம் உள்ளது. தற்போதைய மட்டக்களப்பு மாவட்டத்து எல்லைக் கிராமமாக அமைந்துள்ளது. மண்முனை தென் எருவிற் பற்றுப் பிரதேச செயலகப் பிரிவிற்கு உட்பட்டதாகும்.

### அமைவிடம்

துறைநீலாவணையின் வட அந்தத்தில் இருந்து சுமார் கால்மைல் தூரத்தில் வடமேற்குத் திசையில் மலைக்குன்றுகளின் நடுவணாகக் கண்ணகையம்மன் கோயில் அமைந்துள்ளது. இக்கிராமத்துக்கும் இக்கோயிலுக்கும் இடையில் எவ்வித குடியிருப்புக்களும் இல்லை. கோயிலின் முன்பக்கம் மட்டக்களப்பு வாவியும் ஏனைய பக்கங்களில் சிறிய மலைக்குன்றுகளும் (அவை 15 அடிக்கு மேற்படாத உயரங் கொண்டவை) அமையப் பெற்றுள்ளன. மலைக்குன்றுகளைக் காணக்கூடியதாக இருப்பது இக்கோயில் அமைந்துள்ள சூழலில் மட்டுமே.

துறைநீலாவணையை நீலன்பழம்பதி எனவும் ''அம்மன் உறையுள் ஆக்கிய நீலன்'' எனவும் துறைநீலாவணைக் கண்ணகியம்மன் காவியங்களில் காணப்படுகின்றன. தில்லை மரத்தில் ஏற்றிய வேலினைத் தேடிச்சென்ற சிந்தனது குழாமில் நீலனும் ஒருவர் என அறியமுடிகிறது (செல்வநாயகம், டி.ரீ., 1957, பக்.195). ஆகவே சிந்தனும் நீலனும் சமகாலத்தவராதலால் மண்டூர் ஸ்ரீ கந்தசுவாமி கோயிலும் துறைநீலாவணைக் கண்ணகையம்மன் கோயிலும் சம காலத்தில் தோன்றியவை எனக் கொள்ளமுடிகிறது.

### வைகாசிச் சடங்கு

வைகாசி மாதத்தில் பூரணை தினம் உள்ளடங்குமாறு செவ்வாய்க்கிழமையை இறுதி நாளாகக் கொண்டு பத்ததி முறைப்படி ஏழு நாட்களில் சடங்கு நடைபெறும். கல்யாணக்கால் வெட்டச் செல்லும்போது சிலம்புகளே முக்கிய இடத்தை வகிக்கின்றன. உருவேற்றப்பட்ட சிலம்புகள் வைக்கப்பெற்ற பெட்டியும், அம்மனது பல்லக்கும் உடன்செல்ல, பெருந்திரளான மக்கள் புறப்பட்டுச் செல்வர்.

குளிர்த்திப்பூசை நடைபெறுவதற்குச் சற்று முன்பாக நாகங்களின் உணவாகப் பாணக்கம் நாகதம்பிரான் கோயிலினுள் வைக்கப்படும். பாணக்கம் என்பது நானாவித பழங்கள், தேன், சர்க்கரை, கற்கண்டு, இளநீர், பசுவின்பால் முதலியன கலந்த சேர்க்கையாகும்.

### வரிசைவட்டா கூறுதல்

பழமை வாய்ந்த கோயில்களில் வரிசை கூறுதல் வழக்கமாகும். கொக்கட்டிச் சோலைத் தான்தோன்றீஸ்வரர் கோயிலில் குடுக்கை கூறுதல், மண்டூர்க் கந்தசுவாமி கோயிலில் மாலை கூறுதல் போன்று இக்கோயிலில் வட்டா கூறுதல் இடம்பெறுகின்றது. வெண்கலத்தாலான வட்டாவில் அம்மனின் காளாஞ்சி வைத்து வரிசைகூறி வழங்கிக் கௌரவிப்பதே வட்டா கூறுதல் ஆகும். வன்னியனார், குடிமுகாமைகள், காணிமுகாமைகள், சீர்பாதகுல மக்களின் தாயகக் கிராமங்கள் ஆகியவை கூறி கௌரவிக்கப்படும்.

இங்கு தைப்பூசம், வைகாசிச் சடங்கு, எட்டாம் சடங்கு ஆகிய காலங் களில் மட்டுமே கருவறைத் திருக்கதவு திறந்து பூசைகள் நடைபெறும். ஏனைய காலங்களிற் கருவறையின் திருக்கதவு அடைக்கப்பட்டிருக்கும். திருக்கதவின் முன்பாகவே வெள்ளிக்கிழமை தோறும் பூசை வழிபாடுகள் நடைபெறும்.

### நிருவாக முறைமை

கோயில் தோற்றக் காலம் முதல் 1886ஆம் ஆண்டுவரை இருந்த தனியார் கோயில் 1886ஆம் ஆண்டு முதல் இக்கிராமத்தின் மூன்று குடிமக்களுக்குச் சாதனமூலம் உரிமையாகியது. அதில் கோயிற் பரிபாலனம் பற்றிய விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. பின்னர் 1908ஆம் ஆண்டு முதல் இக்கிராமத்தின் ஏனைய சீர்பாதகுல பத்துக்குடியினரும் சேர்ந்ததான பதின் மூன்று குடிகளுக்கும் சில ஒழுங்கு விதியுடன் உரிமையாகியது (தில்லை நாதன், எஸ்., 2008, ப.43). இக்கோயிலில் இது ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

1886 ஆம் ஆண்டு வைகாசிமாதம் முதலாகச் சிந்தாத்திரன் குடியைச் சேர்ந்தவர்களால் வண்ணக்கர் பதவி வகிக்கப்பட்டு வருகின்றது. சிந்தாத்திரன் குடி, பாட்டுவாழி குடி, முடவன் குடி ஆகிய மூன்று குடியினரின் கூடிய சம்மதத்தின் படியே வண்ணக்கர் தெரிவு செய்யப்படுவது மரபாகும்.

### கணக்கப்பிள்ளை

கணக்கப்பிள்ளை பதவியானது செயலாளராகவும், பொருளாளராகவும் செயற்படுவதைக் குறிக்கும். இப்பதவி பாட்டுவாழி குடியினராலேயே வகிக்கப்பட வேண்டும் எனவும் அவர்களிடையே போட்டியற்ற ஏகமனதான விருப்பத்தின் பெயரில் வேறு எக்குடியினரிலிருந்தும் ஒருவர் தெரிவு செய்யப்படலாம் எனவும் அறியமுடிகிறது. பதின்மூன்று குடியிலிருந்தும் பதின்மூன்று தலைவர்கள் தெரிவுசெய்யப்படுவர். அவர்கள் பதின்மூன்று

பேரும் வருடாவருடம் தெரிவு செய்யப்பட்டனர். வண்ணக்கர், கணக்கப் பிள்ளை ஆகிய இரு பதவிகளும் ஆயுட்காலப் பதவிகளாக இருந்து வந்துள்ளன. இங்கே குறிப்பிடப்பெற்ற பதினைந்து பேரும் ஆலய நிருவாக சபையினராக விளங்குவர். தீர்மானங்கள் உறுதிபெற ஆலய நிருவாக சபையினர், காணி அடப்பமார், கோயிலை ஊருக்கு உரிமையாக்கிவரின் குடும்ப அங்கத்தவர்கள் ஆகியோர் சேர்ந்ததாக இருக்க வேண்டும் என்பது மரபாகும். இதனை எழுத்து பூர்வமான ஆவணங்கள் தெரியப்படுத்துகின்றன. இம்மரபு ஒழுங்குமுறையில் நாட்டின் போர்ச் சூழல் காலத்திலிருந்து பின்னடைவு ஏற்பட்டுள்ளது. தற்காலத்தில் கணக்கப்பிள்ளைப் பதவியானது, செயலாளர், பொருளாளர் என இரு பதவிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. செயலாளர் பாட்டுவாழி குடியிலும், பொருளாளர் முடவன் குடியிலும் தெரிவு செய்யப்படுகின்றனர்.

### பாண்டிருப்புத் திரௌபதையம்மன் ஆலயம்

மட்டக்களப்பு நகருக்குத் தென்பால் நடுவணாகச் செல்லும் நெடு வீதியில் சுமார் இருபத்திமூன்று மைல் தூரத்தில் பாண்டிருப்பு என்னும் கிராமம் உள்ளது. இக்கிராமத்திற்கு அடுத்ததாகக் கல்முனை நகரம் அமைந்துள்ளது.

### பாண்டவர் வேடமும் வழிபாடும்

பாண்டுவின் மக்களை (பஞ்சபாண்டவர்களை) இங்கு பூசித்து வந்ததால் இந்த இடத்திற்கு ''பாண்டு இருப்பு'' எனக் கூறப்பட்டது. பின்னர் பாண்டு இருப்பு பாண்டிருப்பு எனப் பெயர் கொள்ளலாயிற்று. இக்கோயிலில் அனேகமான கிரியைகள் பாண்டவர்களாக வேடம் பூண்டு வழிபாட்டின் அங்கமாக நிற்கும் மனிதர்களுக்கே நடைபெறுகின்றன. இக்கோயில் வழி பாட்டு முறையில் ஒரு சிறப்புப் பொருந்திய அம்சமாக இதனை மக்கள் போற்றிப் பேணிவருகிறார்கள்.

இக்கோயிலை தாதன் கோயில் எனவும் கிருஷ்ணன் கோயில் எனவும் கூறப்பட்டாலும் பெருவழக்காகத் திரௌபதையம்மன் கோயில் என்றே கூறப்படுகிறது. கண்டியரசனான விமலதர்ம சூரியனால் (கி.பி. 1594 - 1604) இக்கோயிலுக்கு வயல் நிலங்கள், வெள்ளிக் களஞ்சியம் முதலியன வழங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது (தாதன் கல்வெட்டு, வரி 66 - 70).

### வருடாந்தச் சடங்கு

புரட்டாதி மாதச் சடங்குகால பதினெட்டு நாட்களும் பாண்டவர்கள், திரௌபதை, கிருஷ்ணன் ஆகியோர்களாக மனிதர்களை வேடம் புனைவித்து கொலுவிருத்தி, மாரி, காளி, வீரபத்திரன் போன்ற பரிவாரத் தெய்வங்

களுக்கும் அதிகாலையிலும் மாலை வேளையிலும் பூசைவழிபாடு செய்து உள்வீதி உலாவுடன் பூசை முடிவடையும். பாண்டவ, பரிவாரத்தெய்வக் கொலு வழிபாடு செய்யும் போது பாண்டவர்கள் ஏந்தியதாகக் கூறப்படும் செம்பு, வெள்ளிப்பிரம்பு, தண்டாயுதம், உலக்கை, வில், வாள் என்பவற்றோடு வேப்பங்குழை ஏந்தியவர்களாக நின்று வழிபாடு செய்வர். இவ்வாலயத்தின் பூசைகளும் சடங்குகளும் ''தாதன் பத்ததிவிதி'' முறைப்படியே நடைபெறுகின்றன.

### தீப்பள்ளயம்

சடங்கின் இறுதி நாள் தீப்பாய்தல் நடை பெறும். இச்சடங்கில் தீப்பாய்தலே முக்கிய நிகழ்வாகும். இறுதியான பதினெட்டாம் நாள் வளர்பிறை வெள்ளிக் கிழமை தீப்பாய்தல் நடைபெறும். அந்த நாளை இப்பிரதேச மக்கள் ''தீப்பள்ளயம்'' எனக் கூறுவர்.

பத்தொன்பதாவது நாள் பால் பள்ளயமும் தருமருக்கு முடிசூட்டும் வைபவமும் இடம்பெற்று நிறைவு பெறும். சடங்குக்குரிய காலங்களில் மகாபாரத படனம் இடம்பெறுவது வழக்காகும். இக்கோயிலில் ''பண்டாரம்'' என்னும் மஞ்சள் நிறப்பொட்டு (திலகம்) வழங்கப்படுகிறது. இங்கு வழிபடுவோர் பண்டாரத்திலகத்தை அணிகின்றனர். இது வாசனைத் திரவியங்களாலும் மூலிகைகளாலும் தயாரிக்கப்பட்டதாகும்.

### நிருவாக முறைமை

முக்குவ சாதியைச் சேர்ந்த பணிக்கனா குடியினரே அக்காலம் முதலாக இக்காலம் வரை தலைமைப்பதவியில் இருந்து வருகின்றனர். நிருவாக சபையின் தலைவர், அங்கத்துவப் பதவிகள் மரபுவழி முறையிலேயே தெரிவு செய்யப்பட்டு வருகின்றன. பணிக்கனா குடியுடன் மேலும் பதினொரு குடிகளும், நான்கு சாதியாரும் நிருவாக அமைப்புக்குரியவர்களாக விளங்குகின்றனர். அதன் விபரம் மேல்வருமாறு:

| | |
|---|---|
| 1. வீரச்சோலை வேளாளர் | 9. சின்னமடவர்குடி |
| 2. பெத்தான் குடி | 10. சங்கரப்பத்தான்குடி |
| 3. பணிக்கனா குடி | 11. மொட்டைச்செட்டிவேளாளர் |
| 4. வெள்ளரசர் குடி | 12. நாவிதர் சமூகம் |
| 5. மூங்கிற்சோலை வேளாளர் | 13. சாண்டார் சமூகம் |
| 6. சுருவிழிகுடி வேளாளர் | 14. வண்ணார் சமூகம் |

7. படையாண்ட குடி
8. மழுவரசன் குடி
15. தட்டார் சமூகம்

(சண்முகநாதன், கா.வே., 2008, பக்18).

**வீரமுனைச் சிந்தாயாத்திரைப் பிள்ளையார் ஆலயம்**

மட்டக்களப்புத் தமிழகம் மட்டக்களப்பு வாவியினாலும் இந்திய வடக்கு பிராந்தியங்களிலிருந்தும், தென்னிந்தியாவிலிருந்தும் வந்தவர்களது, திருக் கோயில்களின் நிறைவாலும் பெருமை பெற்றுள்ளது.

சுமார் முப்பது மைல் நீண்ட அளவினை உடைய மட்டக்களப்பு வாவியின் ஓர் அந்தத்தில் அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் ஆலயமும் தெற்கின் மறு அந்தத்தில் வீரமுனைச் சிந்தாயாத்திரைப் பிள்ளையார் ஆலயமும் சிறப்புற விளங்குகின்றன. இவற்றினிடையே பல திருக்கோயில்களும் அமைந்துள்ளன.

சிந்தாயாத்திரைப் பிள்ளையார் ஆலயம் தனக்கென சமூக, அரசியல், பொருளாதாரப் பண்பாடு காட்டும் சரித்திரப் பிரசித்தி வாய்ந்ததென்பதை வரலாற்று ஆதாரங்கள் எடுத்துக்காட்டுகின்றன. பெருமையும் புகழும் பெற்றது, பழமையானது, புதுமை கொண்டது, ஆகம முறையில் அமைந்தது. நான்மறை அறங்கள் ஓங்க மிகு சைவத்துறை விளங்க வழிபாடு நடாத்தப் பெறுவது. வழிவழியாக வளர்ந்து வரும் கலையும், ஞானமும், கலாசாரமும் பேணிக்காக்கப்படும் கருவூலமாகத் திகழ்கின்றது.

**ஆலய வரலாறு**

இவ்வாலயத் தோற்றத்தினைச் சீர்பாத வரன்முறைக் கல்வெட்டு, வீரமுனைச் செப்பேடு, நறுமலர்மாலை (செல்வநாயகம். டி.ரி., 1957) பிறரது ஆய்வு நூல்கள், கட்டுரைகள் முதலியன கூறுகின்றன.

விஜயராசனின் சகோதரன் மரபிற் பிறந்த உக்கிரசிங்கன் எனும் அரசன் கி.பி. 795 ஆண்டு காலப்பகுதியில் கதிரமலையைத் தலைநகராக கொண்டு (தற்போது கந்தரோடை) இலங்கையின் அரைப் பகுதிக்கு மேலாக ஆட்சி செய்தான் எனவும் தென்னிலங்கையை வேற்றரசன் ஆட்சி செய்தான் எனவும் வரலாறுகள் கூறுகின்றன.

உக்கிரசிங்கனது ஆட்சிக் காலத்தில் தென்னிந்தியாவில் சோழ நாட்டை சற்சனன் என்னும் அரசன் ஆட்சி செய்தான். சற்சனசோழ அரசனின் மகள் மாருதப்புரவீகவல்லி தனது குதிரைமுகம் நன்முகமாக மாறும் பொருட்டு ஈழத்திற்குத் தலயாத்திரையாக வந்தாள். அவளுக்கு கதிர்காம கதிரமலையில் முருகக் கடவுளின் அருளால் வழங்கப்பட்ட திருக்குறிப்பின்படி கீரிமலை

நீரூற்றுத் தீர்த்தத்தினால் அவளது தீர்த்த யாத்திரையின் நோக்கம் இனிது நிறைவேறியது.

உக்கிரசிங்க அரசனும் மாதமொரு தடவையாயினும் இத் தீர்த்தத்தில் நீராடி நகுலேஸ்வரப் பெருமானை வழிபட்டு வருவதை வழக்கமாகக் கொண்டவன்.

இக்காலத்தில் மாருதப்புரவீகவல்லியின் அழகில் மயங்கிய உக்கிர சிங்கன் அவளைத் திருமணம் புரிந்தான். இத்திருமண வாழ்க்கையின் பயனாக இவர்களுக்கு வாலசிங்கன், சண்பகவதி என்னும் இரு குழந்தைகள் கிடைக்கப்பெற்றன.

மாருதப்புரவீகவல்லியால் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம் எழுந்தது. சோழக்கடவை என்னும் இடத்தில் அவளது குதிரைமுகம் நன்முகமாக மாறியதால் அவ்விடம் மாவிட்டபுரம் ஆயிற்று என்பது ஆய்வாளர்களின் கூற்று.

வாலசிங்கன் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ச்சி யடைந்தான். சகல கலைகளையும் கற்றான். முனிவர்களது ஆச்சிரமத்திலும் தனது பிரமச்சரியத்தை மேற்கொண்டதன் பேறாக ஆகாய மார்க்கமாகச் செல்லும் ஆற்றலையும் பெற்றான்.

காலவிரையத்தினால் முதுமையடைந்த உக்கிரசிங்கன் தனது அரச பாரத்தினை வாலசிங்கனிடம் கையளித்து அவனை ''ஜெயதுங்க பரராச சிங்கன்'' என்னும் விருதுப் பெயருடன் அரியணையில் ஏற்றினான்.

இதே காலகட்டத்தில் தமிழகத்தில் சோழ அரசர்கள் நாடு, புகழ் இழந்து பல்லவ அரச ஆணையை ஏற்றுக் கொண்டு சிற்றரசர்களாக வாழ்ந்த காலத்திலே குமராங்குசன் என்னும் மன்னனும் சிற்றரசனாக ஆட்சி புரிந்தான். இவ் வரசனைப்பற்றி வேலூர் பாழைய செப்பேடுகள் மிகவும் புகழ்ந்து கூறுகின்றன.

குமராங்குச அரசனின் மகள் சீர்பாததேவிக்கும் ஈழ நாட்டின் சிங்கை நகர் மன்னன் வாலசிங்கனுக்கும் சோழநாட்டில் பாழையாற்றில் விமரிசை யாகத் திருமணம் நடந்தேறியது. (சிங்கை என்பது தற்போது யாழ் வல்லிபுரம் என வழங்கப் பெறுகிறது)

பாழையாற்று அரண்மனையில் சில நாட்கள் தங்கியிருந்த பின் சீர்பாத தேவி ஈழத்தில் தனது கணவனின் ஆட்சிக்கு உட்பட்ட இடங்களைப் பார்க்க விரும்பினாள். சோழ அரசன் சீர்பாததேவியைத் தனது இன பந்துக்களுடன் தம்மிடம் இருந்த விசுவாசம் கொண்ட ஆரியநாடு, திருவொற்றியூர், கட்டுமாவடி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பிராமணர், வேளாளர், செட்டிமார் முதலியோரைக் கொண்ட குழுவொன்றுடன் கப்பல் ஒன்றின் மூலமாக அனுப்பி வைத்தான்.

கப்பலும் யாத்திரையைத் தொடங்கியது. செல்லும் வழியில் வீசிய காற்றின் வேகம் காரணமாக நீர்ச் சுழியினால் இழுக்கப்பட்ட கப்பலானது திருகோணமலையை அண்மியதும் தொடர்ந்து செல்ல முடியாது நின்று விட்டது. சீர்பாததேவி கலக்கமுற்றாள். அவ்வேளை இனபந்துவில் ஒருவனான சிந்தன் என்பவன் கடலில் குதித்தான். அவன் கப்பலின் கீழ் ஆழ்கடலின் அடியில் கப்பலைத்தடைப்படுத்தியது பிள்ளையார் விக்கிரகம் என அறிந்து அதனைத் தூக்கியெடுத்து கப்பலில் ஏற்றினான். சீர்பாததேவி அப்பிள்ளையாரை வணங்கி ''இக்கப்பல் தடைப்படாது சென்று எங்கு கரை தட்டுகின்றதோ அங்கு கோயில் எடுப்பேன்'' என நேர்ந்து கொண்டாள்.

கப்பலானது தங்குதடையின்றி கடலில் இருந்து மட்டக்களப்பு வாவிய னூடாகச் சென்று அவ்வாவியின் தென்புற அந்தமாகிய வீரமுனை என்னும் இடத்தில் இனிதே கரை தட்டியது. வீரமுனையில் சீர்பாததேவி இறங்கினாள். கூடாரம் அமைத்துத் தனது நேர்த்தியின்படி அப்பிள்ளையாருக்குக் கோயில் எழுப்பினாள்.

### சீர்பாத குல தோற்றம்

கோயிலை நன்கு பரிபாலனம் செய்யும் பொருட்டு வாலசிங்க அரசன் சீர்பாததேவியுடன் வந்த அவர்களது இன பந்துக்கள், பிராமணர்கள், வேளாளர், செட்டிமார் ஆகியோரை வீரமுனையிலே குடியிருக்கப் பணித்தான். இவர்களிடையே வேற்றுமை தோன்றாதிருக்க இவர்கள் அனைவரையும் சேர்த்து சீர்பாததேவியின் பெயரால் ''சீர்பாதகுலம்'' என வகுத்து அரவிந்தமலர், செங்கோல், கொடி என்பன பொறிக்கப்பெற்ற விருதை வழங்கி சாசனமும் செய்து கொடுத்தாள்.

### நிலங்கள் மானியமும் தங்க வேலும்

இக் கோயில் பொலிவுடன் விளங்கும் பொருட்டும், பூசைகள் சிறப்புடன் நடைபெறும் பொருட்டும் கிண்ணறையம்வெளி, தரவைமுன்மாரி, மல்வத்தை வெளி, கல்லடி வயல், பருமணிவயல் முதலிய வயல் நிலங்களை மானியமாக வழங்கியதுடன் மக்கள் வசதியாக வாழ வசதிகளையும் செய்து கொடுத்தான். சீர்பாததேவி தான் வழிபட்டு வந்த தங்கவேலை அவர்களுக்கு வழிபடும் பொருட்டு ஈந்து, கணவருடன் சிங்கை நகருக்குச் சென்றாள்.

வீரமுனைப் பிள்ளையார் வரலாற்றுச் சிறப்பின் காரணமாக ''சிந்து யாத்திரைப் பிள்ளையார்'' என்னும் நாமத்தைப் பெற்றார். சிந்தாயாத்திரைப் பிள்ளையார், சிந்தாத்திரைப் பிள்ளையார் எனவும் திருநாமங்கள் அதற்குரிய தாயிற்று. இவ்வரலாற்றுச் சிறப்பின் காரணமாக இதனது வரன்முறைக்

கல்வெட்டு செப்புப்பட்டைய சிலாசாசனம் என்பன பெருமையை பெற்று விளங்குகின்றன.

### பூசையும் திருவிழாவும்

இக்கோயிலில் நித்திய, நைமித்திய பூசைகள் நடைபெற்று வருகின்றன. இதன் வருடாந்த மகோற்சவத் திருவிழா ஆனிமாத வளர்பிறை உத்தரத்தை தீர்த்தோற்சவமாகக் கொண்ட பத்து நாள் திருவிழாவாக நடைபெறுகிறது.

### மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயம்

மட்டக்களப்பு நகரின் பேரூந்து நிலையத்தில் இருந்து வடக்கே சுமார் 3 கி.மீ தூரத்தில் உள்ள அமிர்தகழி என்னும் ஊரில் மாமாங்கேஸ்வரர் ஆலயம் என்னும் புண்ணிய தலம் அமைந்துள்ளது. மட்டக்களப்புப் புகையிரத நிலையத்தில் இருந்து வடக்கே சுமார் ஒரு கி.மீ தூரத்தில் உள்ளது. மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றினாலும் மிகவும் மகிமை பெற்று விளங்கும் இப் புண்ணிய தலம் மட்டக்களப்பு மண்முனை வடக்குப் பிரதேச செயலக பிரிவுற்குள் அமைந்துள்ளது.

### ஆலய வரலாறு

இவ்வாலய வரலாற்றினை இராமாயண காலத்துடன் தொடர்புபட்டதாக சான்றுகள் குறிப்பிடுகின்றன. இராவணனைக் கொன்று சீதாப்பிராட்டியைச் சிறை மீட்டுச் செல்லும் வழியில் வனாந்தரமாக இருந்த இப்பகுதியில் இராமர் தங்கிச் சென்றார். தங்கிய பொழுதில் தனது சிவ பூசைக்காக மணலைப் பிசைந்து இலிங்கம் ஒன்றைத் தோற்றுவித்து, அவ்விலிங்க அபிசேகத்திற்காகத் தனது கோதண்டத்தை நிலத்தில் ஊன்றி அதனிடமாக உண்டாகிய பெரிய பள்ளத்தில் இருந்து பெறப்பட்ட அமிர்த தீர்த்தத்தினாற் சிவபூசையை நிறைவேற்றினார் எனவும் இராமபிரானின் சிவபூசையைக் கருத்திற் கொண்டு விந்திய மலையிலிருந்து இலிங்கம் கொண்டு வருவதற்காகச் சென்ற பக்தனான அனுமன் வருவதற்கு முன்னரே இராமபிரான் சிவபூசையை நிறைவேற்றினார் எனவும் காலம் தாழ்த்திக் கொண்டு வந்த இலிங்கத்தை கோதண்டத்தினால் தோற்றுவிக்கப்பட்ட திருக்குளத்தின் நடுவில் புதைத்து விடப்பட்டது எனவும் ஆலய வரலாறு தெரிவிக்கின்றது.

### மாமங்கைத் தீர்த்தம்

இங்ஙனம் மூர்த்தியினாலும், தீர்த்தத்தினாலும் இத்தலம் மகிமை பெற்று விளங்குகிறது. மேலும் காசி சேத்திரத்திலிருந்து வந்த முனிவர் தனது கமண்டலத்தினுள் கொண்டுவரப்பெற்ற மங்கைகளின் பெயரால் அழைக்கப்

பெறும் ஒன்பது நதிகளின் தீர்த்தங்களையும் (நவதீர்த்தம்) மேற்படி திருக் குளத்தில் கலந்து தீர்த்தமாடி இராமபிரானது சிவலிங்கத்தையும் வழிபட்டதால் இத் திருகுளத் தீர்த்தம் மாமங்கைத் தீர்த்தம் எனலாயிற்று. அவிமுத்தி தீர்த்தம் எனவும் அழைக்கப் பெறுவதுமுண்டு. அவிமுத்தி தீர்த்தம் எனறால் தன் கண்படிவோரைக் காப்பது என்பது பொருள். மாமங்கைத் தீர்த்தம் என்பதற்கு வேறுமோர் காரணமும் வழங்கப்படுகிறது அதாவது புராதன காலத்தில் மாமங்கை நதி, அனுமார் தீர்த்தம், காக்கைத் தீர்த்தம், நன்னீர் மடு, பாலமீன்மடு, மட்டிக்கிளியோடை, பழையாறு ஆகிய சப்த மங்கைகளின் தீர்த்தங்கள் ஒன்று சேர்ந்து கலப்புற்று விளங்கிய காரணத்தாலும் மாமங்கை எனலாயிற்று எனக் கூறப்படுகின்றது. தற்போது அவற்றுட் சில தூர்ந்து போய்விட்டன.

இராமபிரானால் ஆக்கி வழிபடப்பட்ட இலிங்கம் பின்னர் வேடர்களாலும் வழிபடப்பெற்று வந்துள்ளது. இராமாயண காலத்தின் பின்னர் பன்னெடுங் காலமாக காடும் பற்றையும் நிறைந்து மரவேர்களினால் மூடப்பெற்று மறைப்புண்டு இருந்தது. காலங்கள் சென்ற பின்னர் வேடன் ஒருவனால் முள்ளால மரத்தின் வேருக்கடியில் மறைந்திருந்த இலிங்கம் மீண்டும் வெளிக் கொணரப்பட்டு வழிபடலாயிற்று.

சிவலிங்கத்தையுடைய தலமாதலால் மாமாங்க ஈஸ்வரர் எனவும் சிவலிங்கம் பிள்ளையாரது அங்கியுடன் காணப்பெறுவதால் மாமாங்கப் பிள்ளையார் எனவும் அழைக்கப்படலாயிற்று.

கி.பி. 78 இல் உன்னரசு கிரியை (திருக்கோயில்) தலைநகராகக் கொண்டு கிழக்கிலங்கையை ஆட்சி செய்தவளாகிய மும்முலைகளையுடைய ஆடக சவுந்தரி இத்தலத்தின் மகிமையைக் கேள்வியுற்று வந்து பக்தியுடன் மாமங்கைத் தீர்த்தம் ஆடியதும் மூன்றாவது முலை நீங்கப்பெற்று பேரழகு பெற்றாள். பின்னர் குளக்கோட்டு (மகாசேனன்) அரசனைத் திருமணம் புரிந்து நல்லரசு புரிந்து சிறப்புடன் வாழ்ந்தாள் என வரலாறுகள் குறிப்பிடுகின்றன.

**நிருவாகம்**

ஆடகசவுந்தரியினால் இத்தலம் பேராலயமாக அமைக்கப்பட்டதெனவும் இவளது காலத்தின் பின்பு நெடுங்காலம் மறைப்புற்றுக் கிடந்தது என்றும் ஆங்கிலேயரது ஆட்சிக் காலத்திலேயே சுமார் 1800 ஆண்டு காலப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டு வளர்ச்சிப் படியில் எழுச்சி பெற்று விளங்குகின்றது என்றும் தெரியவருகின்றது. கோட்டைமுனை வேளாருக்கும் அமிர்தகழி குருகுல வம்சத்தாருக்கும் சேர்ந்ததென்றும் கருதப்படுகின்றது இவ்விரு சாராரில் இருவர் தலைமை நிர்வாகிகளாக இருந்து வருகின்றனர். தற்காலத்தில்

மேற்படி இவ்விரு இடங்களையும் சேர்ந்த சந்ததியார் குடியேறி வாழுகின்ற ஊர்ப் பிரதிநிதிகள் நிருவாக சபை அங்கத்தவர்களாக விளங்குகின்றனர்.

### வருடாந்தத் திருவிழா

ஆகமநெறி சார்ந்த வழிபாட்டுக்குரியதாகத் திகழ்கிறது. பிதிர்க்கடன் நிறை வேற்றுவதினால் தனிச்சிறப்பை வழங்கி இம்மைக்கும், மறுமைக்கும் நற்பயன் வழங்கும் தலமாகவும் தீர்த்தமாகவும் விசேடித்துக் கூறப்படுகிறது. இப்புண்ணிய தலம் ஆடி அமாவாசைத் தினத்தை இறுதி நாளாகக் கொண்ட பத்து நாட்களைத் திருவிழா நாட்களாகக் கொண்டது.

### சித்தாண்டி ஸ்ரீ சித்திரவேலாயுதர்சுவாமி கோயில்

இத்தலம் மட்டக்களப்பு நகரின் வடக்குப் பக்கம் திருகோணமலை வீதியில் சுமார் 13 மைல் தூரத்தில் அமைந்துள்ளது. இவ்வாலய உற்பத்திக்காலமாக சுமார் 300 ஆண்டுகளைக் குறிப்பிடுகின்றன. இக்கோயில் திருப்படைக் கோயில்களில் ஒன்றாகக் கூறப்படுகிறது எனினும் இவ்வாலயத்துக்கு மன்னனால் எந்த மானியங்களும் வழங்கப்படவில்லை என அறிய முடிகின்றது. இது தோன்றிய காலம் கி.பி. 17ஆம் நூற்றாண்டு காலப்பகுதி என அறியமுடிகிறது. இவ்வாலயத்தினது பூசை முறைகளின் சில அம்சங் களை நோக்கும்போது கி.பி.17ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டகாலத்திற் தோன்றியதாகக் கருதவேண்டியுள்ளது.

### ஆலய வரலாறு

இதன் வரலாறு பற்றி பின்வருமாறு கூறப்படுகின்றன. வேடர்களாலும் சிகண்டி எனும் முனிவராலும் வழிபடப்பெற்று பின்னர் தற்போதைய மக்கள் வழியில் வந்ததென்றும் மற்றோர் வழியாக சிகண்டி முனிவரால் வேல் வைத்து வழிபடப்பெற்று பின்னர் தற்போதைய மக்கள் வசமாகியதென்றும் கூறப்படுகின்றன. சிகண்டி முனிவரது வரலாற்றுக்கதை பின்வருமாறுள்ளது. முற்காலத்திலே தென்னிந்தியாவிலிருந்து சிகண்டி என்னும் முனிவர் ஒருவர் கதிர்காம யாத்திரையை மேற்கொண்டு இம்மார்க்கமாக வந்தார். வரும் வழியில் கந்தருவன் ஒருவன் யானை உருவில் வந்து யாத்திரையைத் தொடர வொட்டாது தடுத்தகாரணமாக செய்வதறியாது சிந்தித்த அம்முனிவர் தற்போது ''சித்தாண்டி'' அல்லது சிற்றாண்டி என அழைக்கப்பெறும் கிராமத்தின் ஓரிடத்தில் தங்கியிருந்தார். இவர் பல சித்துக்களைப் புரிந்து சிறிது காலம் வாழ்ந்து அங்கேயே சமாதியடைந்தார். இதனாலேயே இக் கிராமம் சித்து ஆண்டி எனப் பெயர்கொள்ளலாயிற்று எனக் கூறப்படுகிறது.

அவர் வேல் வைத்துப் வழிபடப்பெற்ற புனித இடமே இத்தலமாகும். வழிபடப்பெற்ற வேலாயுதமே மூலமூர்த்தியாகும் எனக் கூறப்படுகின்றது.

### வழிபாட்டுமுறை

கடம்பு, வேம்பு போன்ற விருட்சங்கள் சூழப்பெற்ற இவ்வாலயத்தின் தெற்கில் வள்ளியம்மனுக்கும், வடக்கில் தெய்வானை அம்மனுக்கும் கோயில் அமைந்துள்ளன. குமாரத்தன் கோயிலும் உள்ளன. இங்கு தெய்வானை கோயிற் கருவறை மட்டும் திரை திறவாது பூசை நடைபெற்று வருவதும் குமாரத்தன் கோயிலில் பூசையின் போது தெய்வமாடுவதும் கட்டுரைப்பதும் பண்டைய வழக்காறாகும்.

பின்பு வீரசைவ குருமாரினால் செய்யப்பெற்றுவந்த பூசை முறைகள் தற்காலத்தில் பிராமண குருமாரினால் செய்யப்பெற்று வருகின்றது.

### வருடாந்தத் திருவிழா

இவ்வாலய வருடாந்தத் திருவிழா ஆவணி மாத பூர்வபக்கப் பிரதமைத் திதியில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பதினைந்து நாட்கள் திருவிழாக்கள் நடைபெற்று ஆவணி மாதப் பூரணைத் தினத்தன்று தீர்த்தோற்சவத்துடன் நிறைவுபெறுகிறது. 12 ஆம் நாட்திருவிழா மயிற்கட்டுத் திருவிழா எனக் கூறப்படுகிறது. இந்நாட்களில் காதலர்-காதலியருக்கும், பெரியோர் நிச்சயிக்கும் மணமக்களுக்கும் திருமணம் நிறைவேற்றி வைக்கப்படுவது வழக்கமாகும்.

பெரிய கோயில் ஆலயத்தின் தீர்த்தத் திருவிழாவின் பின் குமாரத்தன் கோயிலில் ஆறு நாட்களுக்குச் சடங்கு நடைபெறும். இச்சடங்கின்போது தெய்வமாடல், கட்டுச்சொல்லல் நடைபெறுவது வழக்காகும். இந்நிர்வாகத்தில் மூன்று வண்ணக்குமார்கள் இருந்துவருகின்றனர். வன்னிமைக் குடியில் இருந்து தெரிவுசெய்யப்படும் பிரதிநிதியே வன்னிமை எனும் தர்மகர்த்தாவார். வன்னிமைக் குடியிற் பிறந்த பெண்ணும் புத்தூர்க் குடியிற் பிறந்த ஆடவனும் மணந்து இவர்களுக்குப் பிறக்கும் ஆண் குழந்தையே வன்னிமைப் பதவிக்குத் தகுதியானவர் என அறிய முடிகிறது. வேறு குடிகளின் பல பிரதிநிதிகளும் அயற் கிராமங்களின் பிரதிநிதிகளும் சேர்ந்த நிருவாக சபை உள்ளது.

### தவத்திரு யோக சுவாமிகள்

இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் இவ்வழியின் ஊடாகச் செல்லும் கதிர்காம யாத்திரிகர்கள் இத்தலத்தை வழிபாடு செய்வது வழக்கமாகும். தவத்திரு யோக சுவாமிகள் 1911ஆம் ஆண்டு காலப்பகுதியில் கதிர்காம

யத்திரை செய்யும் போது இத்தலத்தில் தங்கிச் சென்றார் எனவும், தாம் சமாதியடைவதற்கு முந்திய சில மாத காலமாய் இடையிடையே இத் தலத்தின் பெயரை உச்சரித்துக்கொண்டிருந்தார் எனவும் அறிய முடிகின்றது (செல்லத்துரை, அ., 2004) அவர் சிவதொண்டன் கிளை நிறுவனத்தினை சித்தாண்டித் தலப்பிரதேசத்தில் நிறுவும்படி பணித்தார் எனக் கூறப்படும் செய்தியும் இவ்வாலயத்தின் பக்திச் சிறப்புக்கோர் எடுத்துக்காட்டாகும். இப் பிரதேசத்தில் சைவப்பணி மேலோங்கிநிற்கும் சிவதொண்ட நிலையம் கதிர்காம யாத்திரிகளை அரவணைக்கும் நிலையமாகவும் விளங்கிவருவது யாவரும் அறிந்ததொன்றே.

**உகந்தைமலை முருகன் கோயில்**

பொத்துவிலுக்கு அப்பால் பாணமையிலிருந்து கூமுனை செல்லும் காட்டுப் பகுதியில் சமுத்திரக் கரையோரமாக உகந்தைமலை முருகன் கோயில் அமைந்துள்ளது. கதிர்காமத் தலயாத்திரை செல்வோர் தங்கி வழிபடும் விசேட தலமாகவும் விளங்குகிறது.

இராவணன் தட்சணாகிரி உகந்தைகிரி எனும் இருமலைகளிலும் கோயில்கள் அமைத்து வழிபட்டுவந்ததாக மட்டக்களப்பு மான்மியம் குறிப் பிடுகிறது. இக்கோயில் மிகப்பழமை வாய்ந்த கோயிலாகும்.

முருகக் கடவுளின் படைவீடுகளில் ஒன்றாக உகந்தைமலை அமைந் திருந்ததாகவும் சூரனை வதம்செய்த பின்பு மீண்டும் வந்து சில காலம் தங்கியிருந்ததாகவும் பேசப்படுகிறது. இத்தலம் முருகனுக்குகந்த காரணத் தினால் உகந்தைமலை எனப் பெயர் பெற்றது.

**வேற் பூசையும் தலவிருட்சமும்**

உகந்தைமலையின் அடிவாரத்தில் மலையுடன் இணைந்து சிறிய பிள்ளையார் கோயில் உள்ளது. அக்கோயிலின் பக்கத்தில் இப்பதியின் தலவிருட்சமான வெள்ளை நாவல்மரம் உயர்ந்து பருத்து கிளைகள் செறிந்தனவாய் நிற்கிறது. இப்பிள்ளையார் கோயிலுக்கும் முருகன் கோயிலுக்கும் இடையில் முருகன் கோயிலுக்குச் சமீபமாக மிகப்பெரிய ஆலவிருட்சம் ஒன்றுளது. அதன் கீழ் கூரையற்ற மேடை மீது வேலாயுதம் ஒன்று நடப்பட்டுள்ளது. இவ்விடத் திற்றான் பண்டைமுதலாக வேற்பூசை நடைபெற்று வந்ததாக கூறப்படுகிறது. கோயிற் திருவிழாக் காலத்தில் சுவாமியின் வீதி உலாவின்போது இவ்விடத் தில் சுவாமியை இறக்கிவைத்துப் பூசை நடத்தப்பெறுகிறது.

### இருமலைகள்

உகந்தை மலையில் வள்ளிமலை முருகன்மலை என இருமலைப் பிரிவுகள் உள்ளன. வள்ளிமலையில் வள்ளியம்மன் கோயிலுக்கு முன்னால் பெரிய நீர்ச்சுனை ஒன்று காணப்படுகிறது. இச்சுனையைச் சரவணப் பொய்கை என அழைப்பர். இதன் சூழலில் அமைந்துள்ள ஏழு நீர்ச்சுனைகளிலும் உள்ள நீரைப் பக்தர்கள் அள்ளி முழுகுவார்கள். இதனைப் பாவம் போக்கும் செயலாக நினைந்து புளகாங்கிதம் அடைவர். வள்ளியம்மன் ஆலயத்தில் வள்ளியம்மன் பிள்ளையார் விக்கிரகங்கள் காட்சி கொடுக்கின்றன.

### தங்கத் தோணி

உகந்தை முருகன் கோயில் முன்பாக சுமார் இருநூறு மீற்றர் தூரத்திலுள்ள சமுத்திரக் கரையில் தோணிமலை என்னும் குன்றுள்ளது. சூரனைச் சங்காரம் செய்து வரும் வழியில் முருகுக்கடவுள் வீரவாகுதேவர் முதலான பரிவாரத் துடன் தங்கத்தோணி மூலமாக வந்திறங்கிய இடமே இதுவெனவும் அவர்கள் வந்த தங்கத்தோணியே கல்லாக உருமாறி எமக்குக் கற்றோணியாகக் காட்சி தருகிறது எனவும் அதன் வரலாறு தெரிவிக்கின்றன.

இத்தோணிமலைக்கு அணித்தாக இருமலைக் குன்றுகள் காணப்படுகின்றன. சற்றுப் பெரியதான குன்றின் மீது பித்தளையாலான வேல் ஒன்று நடப் பட்டுள்ளது. இவ்வேலைச் சுற்றிய சூழலில் சிறிய கற்துண்டுகள் அடுக்கிவைத் தாற் போல காணப்பெறுகின்றன. இவ்வேலினை வணங்கவரும் அடியார்கள் தத்தமது நோக்கங்களை நிறைவேற்றுமாறு நேர்ந்து வைக்கும் கற்களே அக்கற்கள்.

### வருடாந்தத் திருவிழா

உகந்தை முருகன் கோயிலின் வருடாந்தத் திருவிழா ஆடிப் பூரணையின் முன்னுள்ள பதினைந்து நாட்களும் நடைபெற்று ஆடிப்பூரணையை ஒட்டிய தான திருவோண நட்சேத்திரத்தில் தீர்த்தோற்சவம் நடைபெறுவது வழக்க மாகும்.

## iii. சைவ மக்களிடையே காணப்பட்ட நம்பிக்கைகள்

ஈழத்துத் தமிழர்களது பண்பாட்டிலே சமயம் சார்ந்த உணர்வுகளும், நம்பிக்கை களும் மிக முக்கிய பங்கினை வகிக்கின்றன. மட்டக்களப்புத் தமிழரது நம்பிக்கைகள் சமய வழிபாட்டு அடிப்படையில் ஆன்மீகத் தொடர்புடை யதாக விளங்குகின்றன. சுருங்கக்கூறின் இவர்கள் இறை நம்பிக்கையுடன் பின்னிப்பிணைந்த வாழ்க்கையை உடையவர்களாக உள்ளனர். பழங்கால

மக்களிடையே சித்தாந்த வேதாந்த விளக்கங்களை அடிப்படையாகக் கொண்ட சமய உணர்வு குறைவாகக் காணப்பட்டாலும் ஏதோ ஒரு நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டே அவர்கள் வாழ்க்கை நடாத்தினர். இந்த வகையில் மட்டக்களப்புத் தமிழரிடையே குறிப்பாகச் சைவசமய மக்களிடையே மேல் வரும் நம்பிக்கைகள் காணப்பட்டன.

1. இறை நம்பிக்கை
2. ஊழ்வினையில் நம்பிக்கை
3. மருந்து மந்திர நம்பிக்கை
4. சாத்திரம் கேட்டலில் நம்பிக்கை
5. சகுனம் பார்த்தலில் நம்பிக்கை
6. கனவில் நம்பிக்கை
7. கண்ணூறில் (கண்திருஷ்டியில்) நம்பிக்கை

## இறை நம்பிக்கை

இறைவனையடைந்து பிறவிப்பிணி நீங்கி இன்புற்றிருத்தலே வேதாந்த சித்தாந்தம் கூறும் சமயத்தின் கொள்கையாயிருப்பினும், தற்காலத்தில் அது பெரும்பாலும் வாழ்க்கையை வாழ்வாங்கு நிறைவேற்ற உதவும் கொள்கை யாகவே விளங்கி வருகிறது. இதனால் சமயம் வாழ்க்கையில் நெறிப்படுத்தல் என்னும் கோட்பாட்டை உருவாக்குகிறது. இந்நெறிப்படுத்தல் மனிதனுக்கு அவசியமானது என்பதை உணர்ந்த யாவரும் சமயத்தைத் தமது வாழ்வின் ஆதாரமான இறை நம்பிக்கையாக்கி வாழ்கின்றனர் எனக் கூறப்படுகிறது (ம. சண்முகதாஸ், 1982, ப.217).

மட்டக்களப்புத் தமிழர் தம் வாழ்வில் இறை நம்பிக்கை மிகுந்தவர் களாவர். பிறப்பு முதல் இறப்பு ஈறாக நடை பெறும் நிகழ்வுகளில் எல்லாம் இறைவனை முதலில் வழிபட்டே தமது காரியத்தைத் தொடங்குகின்றனர். மகப்பேறு இல்லாதவர்கள் இறைவனை வேண்டுகின்றனர். அம்மன் கோயில்களில் மகப்பேறு வேண்டி உடல் சோர நெற் குற்றுகின்றனர். தமது துன்பங்கள் நீங்கினால் இறைவனுக்கு உடலாலோ அல்லது பொருளாலோ நன்றியைச் செலுத்துவதாக வேண்டுகின்றார்கள். அவை அங்கப்பிர தட்சணம் செய்தல், காவடி எடுத்தல், பூசை புரிதல், ஆக்க வேலைகள் புரிதல் கோயிலுக்குப் பலவகை அன்பளிப்புகளைச் செய்தல் முதலியனவாக நடை பெற்று வருகின்றன. தமது நிலத்தில் விவசாய வேலை ஆரம்பிக்கும் நாள் முதலாக விளைந்த தானியம் வீடு செல்லும் வரை வயற்பிரவேச நாள் (ஏர்

நாள்), விதைப்பு நாள், கதிர்கண்ட நாள், சூடடிப்பு நாள் முதலியவற்றில் இறைவழிபாடு புரிகின்றனர். பூசை புரிதல், பிதுர் வழிபாடு, அன்னதானம், கோயில்களுக்குப் புதிர் கொடுத்தல் ஆகியவைகளில் ஒன்றோ பலதோ நிறைவேற்றிய பின்னரே அத்தானியத்தைத் தமக்கு உணவாகப் பயன் படுத்துவர்.

## ஊழ்வினையில் நம்பிக்கை

ஊழ்வினையானது நல்வினை தீவினையின் பாற்பட்டதாகும். ''உன்னை நான் காணும் படி செய்தது என்னுடைய நல்வினைப்பயனாகும்'' என சங்ககாலப்பாடல் தெரிவிக்கின்றது.

*ஆற்றெதிர்ப் படுதலு நோற்றதன் பயனே*

பொருநராற்றுப்படை (பாடல் 59)

ஊழ்வினையானது எத்தகைமையுடையவர் இடத்தும் மெல்ல நுழைந்து விடும் என அதன்மீது நம்பிக்கை கொண்டுள்ளனர். ''உள்ளியர் தெள்ளி யராயினும் ஊழ்வினை மெல்ல நுழைந்து விடும்'' என்னும் நம்பிக்கையை உடையவர்கள் இவர்கள். ஒருவருக்கு ஏற்படும் இன்பம், துன்பம் ஆகிய வற்றுக்குரிய சம்பவங்கள் எல்லாம் விதி எனவும் ஊழ்வினை எனவும் கொள்வதும் பண்டைத்தமிழர் கொள்கையாகும். இதனைக் கன்மம், விதி, ஊழ்வினை எனப்பல பெயர்களால் அழைப்பர்.

''தாரமும் குருவும் தலைவிதி'' எனக் கூறுவதும் இந்த நம்பிக்கையின் விளைவேயாகும். சிலப்பதிகாரம் ஊழ்வினை உறுத்துவந்தூட்டும் எனக் கூறுகின்றது. ஊழ்வினை மாந்தரைப்பற்றி சங்க நூல்களில் குறிப்பிடப் படுகின்றன.

*மறந்தமை கல்லா பழனூமூ மிறந்து*
*பெரும்பயங் கழியினு மாந்தர் துன்னார்*

மலைபடுகடாம் (பாடல் 263 - 264)

## மருந்து மந்திரத்தில் நம்பிக்கை

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே மந்திரம் வழக்கில் பயின்று வந்துள்ளது. நான்கு வேதங்களில் ஒன்றாகிய அதர்வண வேதத்தில் முக்கிய பாகமாய் அமைந்துள்ளது. வேதங்கள் முழுவதும் மந்திரங்கள் என்றால் அது மிகை யாகாது. மந்திரம் செபிக்கின்றவனின் உடல் உளச்சுத்தம், பரிபக்குவமான மனது முதலியவற்றின் தன்மைக்கேற்பவே மந்திரசித்தி அமையும் என்பது ஆன்றோர் கருத்து.

மந்திர சக்தியினால் நோய்களைத் தீர்த்தல் நோய்களைத் தோற்றுவித்தல் விடங்களைத் தீர்த்தல் தேவதைகளை வசப்படுத்தல் மனிதகுலத்தை வசியப்படுத்தல் கொடிய விலங்குகளைத் தன்வயப்படுத்தல் முதலிய இன்னோரன்னவைகள் நிறைவேற்றப்படும் என்பதில் மட்டக்களப்புத் தமிழர் அசையாத நம்பிக்கை கொண்டுள்ளனர். சுருங்கக்கூறின் மந்திர சக்தியினால் தனக்கு மட்டுமன்றி மற்றவருக்கும் பயன்பெறச் செய்ய முடியும் என்பர் இப்பிரதேசத் தமிழர்.

மட்டக்களப்புத் தமிழர் மந்திரத்திலும் (மாந்திரிகத்திலும்), மந்திரம் சார்ந்த மருந்துகளிலும் நம்பிக்கை உடையவர்கள். ''மட்டக்களப்பார் பாயொட்டும் வித்தைக்காரர்'' என வேறு பிரதேசங்களைச் சேர்ந்தவர்களால் பரவலாகக் கூறப்படுவதுடன் ஒருவகைப் பீதியுடன் உறவுகொள்பவர்களாகவும் காணப்படுகின்றனர். மருந்து என்பது நோய் தீர்க்கும் மருந்துவகை அனைத்தையும் குறிப்பதாயினும் வசியம், பிரிவு ஆகியன செய்வதற்கான மருந்தையே இது குறிக்கிறது. மருந்து போடுதல் என்றால் வசியம் செய்தல் என்றும், பிரிவினை செய்தல் என்றும் பொருள் கொள்ளப்படுகிறது. மருந்து வகையினை மந்திர உட்சாடனத்துக்கு உட்படுத்தியே மருந்து கொடுக்கப்படுகிறது. ஆகவேதான் மருந்து மந்திரம் என வழங்கலாயிற்று. பிறப்பு முதல் இறப்பு வரையான பல்வேறு விதத் தேவைகளுக்கும் மருந்து மந்திர முறையினை பயன்படுத்துவர். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே மந்திரம் இருந்து வந்துள்ளது. நான்கு வேதங்களில் ஒன்றாகிய அதர்வண வேதத்தில் முக்கிய பாகமாய் அது விளங்குகிறது. மந்திர சக்தியினால் நோய்களைத் தீர்த்தல் நோய்களை ஏற்படுத்தல் விஷங்களை இறக்கல் தேவதைகளை வசப்படுத்தல் மனிதகுலத்தை வசியப்படுத்தல் கொடிய விலங்குகளைத் தன்வயப்படுத்தல் முதலிய இன்னோரன்ன பிறவும் நிறைவேற்றப்படுகின்றது. விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக மந்திரப் பயிற்சிகள் படிப்படியாக நகர்ப்புறங்களில் அருகிச் சென்றாலும் கிராமப் புறங்களில் அவை இன்னும் அழிந்துவிடாமல் பேணப்பட்டு வருவது இங்கு நோக்கத்தக்கது. இக்கால உலகில் மந்திரங்கள் இழிவான செயற்பாடுகளாகக் கருதப்படுகின்றது. ஆனால் இதனை முற்கால மக்களது தற்காப்புக் கலையாகவே நோக்கவேண்டும். இக்காலத்தில் பிறரை வஞ்சிப்பதற்காக சிலர் இதனைப் பயன்படுத்தினும் முற்கால மக்கள் தங்களது சொந்தப் பாதுகாப்பிற்கு மட்டுமல்லாது போர்த் தந்திரமாகவும் மந்திரவித்தைகளைப் பயன்படுத்தினர். இதனை இதிகாசம் முதலிய பண்டைய நூல்களினூடாகக் காணலாம். இவ்வாறான மருந்து மந்திர முறைகள் சில வற்றை இங்கு நோக்குவோம்.

*நண்டுக்கினிய கண்ணானும் நரையும் திரையுமில்லானும்*
*எல்லாப்பேய்க்கும் பெரும்பேயும் கொன்றைப்பிசினும்...*
*..............................................கூட்டிக் கொடுப்பீராயில்*
*கன்றைக் காணாப் பசுப் போலே கதறிப்பதறி வருவாளே*

என்னும் வசியப் பாடல் சேர்த்தி மருந்து (ஆணையும் பெண்ணையும் சேர்த்து வைக்கும் மருந்து) தயாரிக்கப் பயன்படுத்தும் மூலிகைகளையும், சரக்கு களையும் பற்றிக் கூறுகிறது. பாடலில் கூறப்பட்டவாறு மருந்தைத் தயாரித்து உரிய மந்திரத்தினால் செபித்துக் கொடுக்க வேண்டுமென விதிக்கப்படுகிறது. இத்தகைய மருந்துகளின் பெயர்களைப் பிறர் எளிதில் புரியாதவாறு கூறப் படுவது மரபாகும். அத்துடன் குருசீட பரம்பரையில் கற்றவர்கள் மட்டுமே இக்காரியத்தினைச் செய்வதில் வெற்றி காண்பர். மேற்காட்டிய பாடலைப் பொறுத்தவரை பின்வறுமாறு சொற்களின் பொருள் அமைந்து உள்ளன. நண்டுக்கினிய கண்ணான் - நரி எனவும், நரையும் திரையுமில்லான் - காகம் எனவும், எல்லாப் பேய்க்கும் பெரும் பேய் - பேய்க்கரும்பு எனவும் பொருள் கொள்ளப்படுகின்றன. மேலும் நரி எனக் கொள்ளும் போது நரியினுடைய கண்களையும், காகம் எனக் கொள்ளும் போது காகத்தினுடைய பித்தப்பை யையும் குறிக்கின்றன. எனவே குருமூலமாக சீடனுக்குத் தெரியப்படுத்தினால் மட்டுமே இவற்றைத் தெரிந்து கொள்ளலாம்.

இதனைப் போன்றே பிரிவிற்குரிய மருந்து தயாரிக்கும் மூலிகைகளைக் குறிக்கும் பாடல் ஒன்று கீழே தரப்படுகிறது.

*புத்துக் குழியன் மொசுமொசுக்கை இந்திர கோவை மூசுற்றுமுட்டை*
*குத்திப் பிரிக்கும் .........................கூட்டி*
*பட்டுப்பூச்சி வேட்டைவாளிசேர்த்து..... சீறிச்சினந்து செல்வாரே*

இம்மருந்தைத் தயாரித்து பின்வரும் மந்திரம் ஓதிக் கொடுக்கப்படும்.

*ஓம்பிறி ஓம்காளிபிறி.....இன்னானை ..பிரி பிரியவே சுவாகா*

என பிரிவுக்கு பயன்படுத்தும் மருந்துகளும் மந்திரமும் குறிப்பிடப்படுதலும் நோக்கத்தக்கது. மருந்து மந்திரங்களைப் பூரணமாகத் தெரியப்படுத்துவதால் ஏற்படும் தீய எதிர் விளைவைத் தடுப்பதனை நோக்கமாகக் கொண்டு மேற்படி பாடலையும், மந்திரத்தையும் நூலாசிரியர் இவ்விடத்தில் பூரணத்துவமாகக் கொடுக்கவில்லை.

மந்திரங்களுக்கேற்றபடி மந்திர எழுத்துக்களைச் சக்கரங்களில் வரைந்து உரிய தேவதைக்கு மந்திர உட்சாடனம் செய்து பிரயோகம் செய்வர். சக்கரங்கள் என்பது முக்கோணம், நாற்கோணம், அறுகோணம், ஐங்கோணம், எண்கோணம், வில்வடிவு, சற்பவடிவு, பூதவடிவு போன்றவற்றைக் குறிக்கும்.

ஓலைகளிலோ அல்லது உலோகத் தகடுகளிலோ சக்கரங்களை வரைந்து அதனுள் எழுத்துக்களை எழுதி மந்திர உட்சாடனம் செய்த பின்னரே அவை யந்திரங்கள் எனவும் அட்சரங்கள் எனவும் தகுதி பெற்ற பெயராக விளங்குகின்றன.

நோய் நீக்கத்துக்கும் பிறரால் ஏற்படுத்தப்பட்ட மருந்து, மந்திர முதலிய வித்தைகளையும், துன்பங்களையும் நீக்கும் சக்தியை உடையனவாகவும் மந்திரங்கள் உள்ளன. அக்காலத்தில் மட்டக்களப்புப் பிரதேசத்தில் ஒருவருக்கு நோய் ஏற்படின் முதற்கண்ணதாக மந்திர வாதிகளிடம் செல்லும் வழக்கு இருந்துள்ளது. அக்காலத்தில் மந்திரம் தெரியாத வைத்தியர்கள் இல்லை என்றே கூறலாம். காய்ச்சல், குக்கல், கண்நோய், வயிற்றுநோய், கண்ணூறு, அம்மன்நோய் முதலியவற்றுக்கெல்லாம் மந்திரத்தினால் தண்ணீர் ஓதிக் கொடுத்து அதனைத் தீர்த்துக் கொள்ளும் நிலையிருந்தது. கை, கால்களில் ஏற்படும் உழுக்கு, சுளுக்குகளும் விபூதி, மண் என்பவற்றினால் மந்திரித்துத் தடவுதல் மூலம் உழுக்குச் சுளுக்குகள் சுகமடைகிறது. இவ்வழக்கு இப் பிரதேச மக்களிடம் இருந்து வருகிறது.

முறைக்காய்ச்சல், கண்ணூறு, முதலியவற்றுக்கெல்லாம் மந்திரம் பிரயோகித்து திருநீறு போடுதல் மூலம் அத்துன்பங்களை நீக்கினர். மந்திரங்களைப் பலதடவைகள் உச்சரித்த வண்ணம் குறிப்பிட்ட நோயாளியின் உச்சியில் திருநீற்றைத் தூவித்தூவி நெற்றியில் திருநீற்றால் வட்டமிடுதலைத் திருநீறு போடுதல் என்பர்.

பொருள் காணாது போதல் அல்லது பீடிக்கப்பட்ட நோய் பற்றி அறிந்து கொள்ளல் ஆகியவற்றிற்குக் குறிபார்ப்பதில் நம்பிக்கை வைத்துள்ளனர். குறிபார்த்தலானது இப்பிரதேசத்தில் விற்குறி, வெற்றிலைக்குறி என இரு வகைகளாகப் பார்க்கப்படுகிறது. ஓலைப்பெட்டியொன்றைக் கவிழ்த்து அதன்மேல் மடை வைத்து நாருரித்த பூவரசந் தடியால் தயாரித்த சுமார் ஒரு அடி நீளமான வில்லின் நாணில் (நாண் பூவரசுமர நாரினால் ஆக்கப்பட்டது) பாக்குவெட்டியைக் கொளுவி, இரு கைகளாலும் பிடித்து, சாம்பிறாணித் தூபத்தின் முன்னால் இருந்து, மந்திர செபத்துடன் பார்ப்பது விற்குறியாகும். இங்கு பாக்குவெட்டியின் அசவை வைத்தே பயன் கூறப்படும்.

வெற்றிலையின் உட்பக்கமாக விளக்கெண்ணெய் (சித்தாமணக்கு எண்ணெய்) பூசி பசு நெய்யால் ஏற்றப்பட்ட விளக்குச் சுடரின் முன்னால் வெற்றிலை நுனியை மேல்நோக்கியவாறு பிடித்து மந்திரசெபத்துடன் பார்ப்பது வெற்றிலைக் குறியாகும்.

**அஞ்சனம் பார்த்தல்**

குறிபார்ப்பதைப் போன்ற இன்னோர் வகைக் குறி அஞ்சனம் பார்த்தல். அஞ்சனம் பார்த்தலை மை பார்த்தல், அஞ்சனம் போடுதல், மை வெளிச்சம் பார்த்தல் ஆகிய பெயர்களால் அழைப்பர். பெரும்பாலும் களவு நடந்தாலும், தீராத நோய் ஏற்பட்டால் அது பற்றி அறியவும் அஞ்சனம் பார்க்கும் வழக்கம் மட்டக்களப்புத் தமிழரிடம் தொன்று தொட்டு இருந்து வருகின்றது.

அஞ்சனம் பார்த்தல் பல வகைகளில் இருந்தாலும் மட்டக்களப்புப் பிரதேசத்தில் வெற்றிலையில் மை பூசிப் பார்த்தல், கண்ணில் மையிட்டுப் பார்த்தல் என இரு வகைகளாகப் பார்க்கப்படுகின்றன.

மூலிகைகளையும் சில பிராணிகளின் அங்கங்களையும் சேர்த்துக் கருங் கல்லில் வைத்து அரைத்து சித்தாமணக்கு எண்ணெயினால் குழைத்து அம் மையை வெற்றிலையில் தடவிப்பார்த்தல் ஒரு வகையாகும். வெற்றிலையிற் தடவப்பெற்ற மையை வெறோருவர் கண்ணிமைக்காது பார்த்துக் கொண்டிருக்க மந்திரவாதி பக்கத்திலிருந்து மந்திரங்களை உச்சரிக்க உச்சரிக்க அஞ்சனா தேவி, அனுமன், தோன்றவும் பின்னர் மந்திரவாதியின் அல்லது அவ்வீட்டாரின் குல தெய்வத்தை அனுமன் மூலமாக அழைத்து வந்து அத் தெய்வத்தின் மூலம் வேண்டியவற்றைக் கேட்டும், பார்த்தும் தெரிந்து கொள்ளப்படுகின்றது.

அதனை விட இன்னுமோர் வகையாகவும் பார்க்கப்படுகின்றது. அதாவது மூலிகைகள், பிராணிகளின் சில அவயவங்கள் என்பவற்றைச் சேர்த்துக் கருங்கல்லில் அரைத்து ஒரு சீலைத்துண்டில் தடவி உலர்த்திய பின்னர் ஒரு வகை எண்ணெயிலே தோய்த்து எரித்து அதன் சாம்பலைச் சித்தாமணக்கு எண்ணெயில் குழைத்தெடுத்து அம் மையை மந்திர உச்சாடனம் செய்து ஒருவரின் கண்ணில் விட அவருக்கு அது தெரியப் பெறும்.

தமிழ் அறிஞர்கள் அஞ்சனம் என்பதற்கு கண்ணிடு மை, பொருள் காட்டும் மை என உரை கூறுகின்றனர் (மதுரைத் தமிழ்ப் பேரகராதி, 1956, பக்.36). மேற்படி இரு வகை முறைகளுக்கும் அஞ்சனம் பார்ப்பவர் கண்ணி மைக்காது பார்க்க வேண்டும். கண்ணிமைத்தால் அத்துடன் அஞ்சனம் பார்த்தல் முற்றுப் பெறும். மந்திரவாதி முற்றுப் பெறும் வரை மந்திரம் செபித்துக் கொண்டே இருப்பார். அருகில் உள்ள வேறோருவர் கேட்கும் வினாவுக்கேற்ப காட்சி தென்படும் அதனை அஞ்சனம் பார்ப்பவர் சொல்லிக் கொண்டிருப்பார். தற்காலத்தில் தொலைக்காட்சியில் நாடகம் பார்ப்பது போன்று விடயம் காட்சியாகத் தெரியும் எனக் கூறப்படுகிறது.

பண்டைத் தமிழர் பேய்களில் நம்பிக்கை வைத்திருந்ததாக அறிய முடிகின்றது. இவற்றுக்காதாரமாக சங்க இலக்கிய நூல்களான பதிற்றுப்பத்து (பாடல் 23), மதுரைக் காஞ்சி (பாடல் 631-633) போன்றவற்றைக் குறிப்

பிடலாம். மட்டக்களப்புத் தமிழரிடத்தே வேட்டைக்காகச் செல்லும் போது மந்திர சக்தியினால் மிருகங்களை வரவழைக்கும் மந்திரவாதிகள் உள்ளனர். எந்த விலங்கினாலும் தீங்கு ஏற்படாது மாடுகள் காட்டுக்குச் சென்று மேயவும் மந்திரம் கூறி அழைத்தவுடன் மாடுகளை மீளவும் மாட்டுத்தொழுவத்திற்கு (காலையடிக்கு) வரச் செய்யவல்ல மந்திரவாதிகள் இன்றும் உள்ளனர்.

அங்கம் விடுதல், சூனியம் செய்தல், முதலிய தீமைகளைப் புரியும் வலிமை கொண்ட மந்திர வாதிகளும் இருந்துள்ளனர். அங்கம் விடுதல் என்பது குறித்த கால எல்லைக்குள் எதிரியை மரணமடையச் செய்தலாகும். சூனியம் செய்தல் என்பது எதிரியை நோய்வாய்ப் படுத்தி பலகாலமாக துயரப்படுக்கையில் கிடந்து இறக்கச் செய்தலாகும். சூனியம் செய்வினை எனவும் சொல்லப்பெறும். இது மலசலம் அடைக்கச் செய்தல், வயிறு பெருக்கச் செய்தல், உடற்தசைகள் கிழியச் செய்தல் போன்ற பல நோய்களைச் சூனியம் செய்தல் மூலம் ஏற்படுத்த முடியும். குறிப்பட்ட மந்திரங்களைப் பிரயோகிப்பதனால் அத்தேவதைக்குரிய சக்தியினால் நோய் தோற்றுவிக்கப் படுவதாகும்.

மேல்வரும் நாகபாஷம் என்னும் ஒருவகை மந்திரத்தின் பகுதியில் சூனியங்களின் பெயர்களும் சூனியங்களுக்கான சில தேவதைகளின் பெயர்களும் குறிப்பிடப்படுகின்றன.

''....அகாரங் கொண்டு மடக்கிடுபாஷமே உகாரம் கொண்டு உதைத்திடு பாஷமே ஓணான் வயிற்றில் ஓதி அறைந்ததுவும், கள்ளி மரத்தில் சாத்திய பாவையும், ஓமம் வளர்த்து எரித்திடு வித்தையும், கால்கை முடக்க கண்ணிற் குத்தியதும், பறங்கி வியாதியால் உயிர் விடு வித்தையும், ஊமக்கொட் டையில் வரிந்து புதைத்ததுவும், திருநீற்றுக் குடுகில் இறுக்கி வைத்ததுவும், பூ வோதி முடிந்ததும், தலைமயிர் மலம் சலத்தில் செய்ததுவும், பழுவாணி கொண்டு பழுவற அடித்ததும், முந்தானை பந்தலில் கட்டி எறிந்ததும், கரை யாக்கன் பூவில் செய்து தடுத்ததும், கோழிமுட்டையில் ஓதிப் புதைத்ததுவும், சட்டிகொண்டு தரையில் கவுட்டதுவும்,.......

இருளன், மருளன், எக்கலாதேவி, பேச்சிபிச்சி, பிணந்தின்னி, அந்திசந்தி ஆங்கார இருளி, கள்ளிமரத்தில் தங்கிய காடேறி, சுடலையாடும்வல்ல பத்திரகாளி, பிணமதை உண்ணும் உதிரமாகாளி, ஆடும்பேய், பாடும்பேய், பிள்ளை கொள்ளும் கெங்கவைரவன், ஊனப்பெலிகொள்ளும் உதிரமாடன், மொட்டையாக்கன், வட்டக்குறும்பறையன், அளுப்பறதேவதாவி, உக்கிரமான மயான வைரவன் இவர்களை ஏவித்தடுத்தவன் அற உறவாங்கு நாகபாஷமே .................''

கொடும் விலங்குகளால் தமக்கு தீமைவராது காவல் செய்யும் மந்திரங்கள் உள்ளன. எதிர்த்து வரும் எதிரியை மந்திரம் சொல்லி அறைதலினால் எதிரி இரத்தம் கக்கி இறக்கச் செய்யும் மந்திரங்களும், கடிக்கவரும் நாய், அடிக்க வரும் எதிரி ஆகியன எடுத்த காலடியை மீளப் பெயராது நிறுத்தும் மந்திரங்களும் உள்ளன. இவை முறையே நெட்டை என்றும் உறுக்குதல் என்றும் கூறப்படுகின்றன.

மந்திர சக்தியினாலும் மருந்தின் சக்தியினாலும் விஷவைத்தியம் மேற் கொள்ளப்படுகிறது. உதாரணமாக பாம்பு காலில் கடித்த தடையத்தில் இருந்து சற்று மேல்நோக்கி சுண்ணாம்பினால் மந்திரம் செபித்து காலைச் சுற்றி வட்டமிடுதலால் விஷம் மேலே செல்லாது கடிவாய்ப் பிரதேசத்தில் மட்டும் நின்று விடுகிறது. வட்டமிட்ட இடத்தின் கீழ்ப்பாகத்திலேயே வீக்கம் காணப் படும். இதனைத் தவணை போடுதல் எனக் கூறுவர். தவணை போடுதல் ஒரு முதலுதவி சிகிச்சையாகவே கருதப்படுகிறது. மந்திர சக்தியினால், உடலில் ஏறிய விஷத்தை இறக்கி நீக்கம் செய்யும் மந்திரங்களும் உள்ளன.

இவ்வாறு மந்திர சக்தியினால் பயன்கள் வெளிப்படையாகத் தெரிவ தனால் மக்கள் மந்திரங்களில் நம்பிக்கையுடையவர்களாகக் காணப்பட்டனர். மந்திரப்பிரயோகம் செய்வோர் வாய்மையும், நேர்மையும், ஒழுக்கமும், தெய்வ சிந்தனையும் உடையவர்களாக இருக்க வேண்டும். குறித்த தெய்வம் ஒன்றினை மந்திர சக்தியினால் தன்வயப்படுத்தும் மந்திரங்களும் உள்ளன.

போலி மந்திரவாதிகளினாலும் மருந்து மந்திரத்தை தவறான வழிகளில் பயன்படுத்துவதனாலும் மருந்து மந்திரத்தின் மீது நம்பிக்கை குறைவடைந்து செல்வதையும் அவதானிக்க முடிகிறது. இத்தகையவர்களின் செயற்பாட் டினாற் போலும் மந்திரத்தினால் மாங்காய் விழுமா என்ற வினா எழலாயிற்று. மந்திரங்களால் மாங்காய் மட்டுமல்ல தேங்காய் பறித்த மந்திரவாதிகளும், மந்திரத்தால் ஆற்றைக் கடந்த மந்திரவாதிகளும் வாழ்ந்துள்ளனர். இதற்கு எடுத்துக் காட்டாக மந்திர சக்தியினால் ஆற்றைக் கடந்த சம்பவமொன்று

பண்டுதொண் டதுபூண்ட வண்ணக்கு மாரின்
பண்போடு நேர்மையது பலர்நினைவு கூர்ந்தார்
கண்டிமன் னவர்களது செல்வாக்கில் மட்டக்
களப்பன்று இருந்தபொழு தேதலைமை யேற்ற
அண்டர்தொழு மீசனுக் கரியபணி யாளன்
அயல்திமில தீவிலுறைந் தப்போது வாழ்ந்த
எண்டிசை புகழ்ந்தநிலா மைப்பதவி கொண்டோன்
இகலுறுவே லாப்போடி என்றபெய ரோனே

பேர்பெற்ற வண்ணக்கு மார்களுக் குள்ளே
பெரியமுதல் வண்ணக்க னாயிருக் கையிலே
ஏர்பெற்ற தான்தோன்று மீசனது கோயில்
எக்காலும் முக்காலப் பூசைநிகழ் போதும்
ஊர்திமில தீவுவரை தவிலோசை கேட்கும்
ஒருவேளை கேளாது போனாலும் போதும்
நேராக மட்டுநகர் வாவியது தாண்டி
நிற்பராம் கொக்கட்டி யப்பன்நற் பதியே

அப்பனது நற்பதியை எப்படி யடைந்தார்?
அற்புதமே யானாலும் அது உண்மை யென்பார்
செப்பரிய மாந்திரிக வித்தைவல் லாளன்
சிறியகணப் பொழுதிலொரு முதலையைய ழைப்பார்
அப்படியே அவரேறி அதன்மேலே நிற்பார்
அவர் சால்வை அதன்மேலே மேற்கட்டி யாகும்
எப்படியோ தேசிக்காய் நான்கு அதைக் தாங்கும்
எல்லாரும் பயபக்தி யோடியங் குவரே
(திமிலைத்துமிலன், 1998, ப.27).

என்னும் பாடல்கள் மூலமாக காட்டப்பட்டுள்ளது.

மந்திரங்கள் தமிழ் மொழிச் சொற்களாலும், வேறு மொழிச் சொற்களாலும், தமிழும், வேறுமொழியும் கலந்த சொற்களாலும் காணப்படுகின்றன. எவ்வகை மந்திரங்களுக்கும் ஓம் என்னும் பிரணவ மொழி முதற்சொல்லாக அமையும். வேறு மொழி மந்திரத்திற்கு உதாரணமாக

ஓம் நமோ பெலி பெலி கேத்திலி கேத்திலி கேத்திலி
மீதே தும்பே தும்பே தும்பே தும்பே மறுப்பா பாலியே
தும்பே தும்பே மங்க பாலியேது கவேது கவாலி
வித்தேக் கிறுத்தே கிறுத்தானை மறுமே மறுமே
இறுமானே கார்பிரமக்கே அபே அகே அகாத அகாகி
அபாயியே நானுக்கி விச்சிவாகா

என்னும் மந்திரத்தை அவதானிக்கலாம். தமிழும் வேறு மொழியும் கலந்த மந்திரத்திற்கு உதாரணமாக

ஓம் ........... அறுக்காணி
அகத்திகேசா அவுண பரண பாணக்கொயா

என்னும் மந்திரத்தை அவதானிக்கலாம். மேற்காட்டிய வேறு மொழிச் சொற்களை உடைய மந்திரத்தைச் சந்நியாசி மந்திரம் எனக் கூறப்படுகின்றது.

மந்திரப் பிரயோகத்தை ஆரம்பிக்கும்போது முறையே சித்தி மந்திரம், பிராண மந்திரம், மூல மந்திரம் எனப் பிரயோகிக்கப்படல் வேண்டும். சித்தி மந்திரம் எனப்படுவது தான் செய்யப் போகின்ற காரியத்திற்குரிய மூல மந்திரத்தைச் சித்திக்குமாறு கணபதியை வேண்டுவதைக் குறிக்கும். பிராண மந்திரம் எனப்படுவது உயிர் எனவும் மூல மந்திரம் எனப்படுவது உடல் எனவும் கூறுவர். பிராண மந்திரம் பிரயோகிக்காமல் மூலமந்திரத்தைப் பிரயோகிப்பதனால் பயனில்லை என்பர்.

**சாத்திரம் கேட்டலில் நம்பிக்கை**

பழந்தமிழர் சாத்திரம் கேட்டலில் நம்பிக்கை வைத்திருந்தனர். சாத்திரம், சோதிடம் எனவும் பெயர் பெற்றுள்ளது. சாத்திரம் கலைகளில் ஒன்றாக கருதப்பட்டுள்ளது. தமிழர்களுக்குரிய சம்பிரதாயங்கள், பழக்கவழக்கங்கள் தற்காலத்தில் அருகிக் கொண்டு போனாலும் மட்டக்களப்புத் தமிழர்களி டையே அவை பேணப்பட்டு வருகின்றன. அவற்றுள்ளும் கிராமப்புற மக்களிடையே நம்பகத் தன்மையுடன் பேணப்பட்டு வருகின்றமை குறிப் பிடத்தக்கதாகும்.

சாத்திரம் கூறுபவரைச் சாத்திரியார் எனவும், சோதிடர் எனவும் அழைப்பர். சாத்திரம் கேட்பதற்காகச் சாத்திரியாரிடம் செல்லும் போது அல்லது சாத்திரியாரை வீட்டுக்கு அழைத்த போது வட்டாவின் மீது வட்டமாக வடுக்கள் அற்ற அழகிய வெற்றிலைகளை வெளிப்பக்கம் காம்பு வரக் கூடியதாக வைத்து அவற்றின் நடுவில் பாக்குகளை வைத்து அதன் மேல் சாத்திரியாரின் தட்சணைகளை வைத்து அவைகளை வெள்ளைத் துணியினால் மூடியவாறு அவ்வட்டாவை ஏந்திச் சென்று சாத்திரியாரிடம் கையளிப்பர். வட்டா என்பது வெண்கலத்தாலான ஒற்றைப் பாதமும் சுமார் ஒரு அடி உயரமும் கொண்ட மேற்பாகம் தாம்பாளம் போல் அமைக்கப்பட்ட பாத்திரமாகும்.

குழந்தை பிறந்தாலும், பிள்ளை பூப்படைந்தாலும், கலியாணம் என்றாலும் கலியாணம் தடைப்பட்டாலும், பொருள் காணாமற் போனாலும், துன்பம் ஏற்பட்டாலும் சாத்திரம் கேட்டலில் தமிழர் நம்பிக்கை உடையவர்கள். குழந்தை பிறந்து ஐந்தாம் நாள் அல்லது ஏழாம் நாள் சாத்திரியாரிடம் வெற்றிலை வட்டாவுடன் சென்று சாத்திரம் கேட்பதிற் கரிசனை காட்டுவர். குழந்தையினுடைய ஆயுள், நோய், யோகம் முதலியனவற்றையும் குழந்தைக்குச் சூட்டவேண்டிய நாமத்தின் முதல் எழுத்துக்களையும் குழந்தை யினுடைய தாய், தந்தை, சகோதரர்கள், தாயுடன் பிறந்தோர், தந்தையுடன் பிறந்தோர், பாட்டன், பாட்டி முதலியோரது எதிர்கால நன்மை, தீமைகளையும் சாத்திரம் கேட்பதன் மூலம் தெரிந்து கொள்வர். இவற்றின் மூலம் தெரியப்

படுத்தும் துன்பங்களையும் அவற்றுக்குரிய காரணங்களையும், கால எல்லைகளையும் தெரிந்து கொள்வர். துன்பத்துக்குரிய காரணம் கிரகங்களின் பகையே என்னும் நம்பிக்கையைச் சாத்திரம் மூலமாக அவதானிக்க முடிகிறது. எதனையும் செய்யும்போது சாத்திரம் பார்க்கும் பழக்கத்தைப் பண்பாகக் கொண்டிருந்தனர் தமிழ் மக்கள். உதாரணமாக கண்ணகி வழக்குரையில் கப்பல் வைத்தகாதையில் சுபமுகூர்த்தம் பார்த்தமைபற்றிக் கூறப்படுகிறது. அதில்

*கூறரிய வெள்ளி திங்கள் குலவிய வியாழன்ஓரை*
*ஊறுதிறல் மிகுதியாகும் உற்றநல்ல புதனில்ஓரை*
*ஏறியதோர் ராசியெல்லாம் இமைக்கும் முன்னே மூர்க்கமாகும்*
*தேறியதோர் சனியும் செவ்வாய் செய்கருமமாகாதே*

எனக் கூறப்படுகின்றது. மேலும்,

*அருக்கனுஞ் சனியும் செவ்வாயகத்துடன் இருக்குமாயில்*
*மரக்கலமுள்ளோர் தாமும் மாய்வர் தீக்கோளாகாதே*

என மரக்கலம் செய்வதற்குரிய சுப அசுப நாள் பற்றிக் குறிப்பிடப்படுகின்றன.

*வாக்குடைய நண்டு தேளும் மற்றுமேடம் வளர்கும்பம்*
*ஆக்கிய வியாழன் தன்னில் அமிர்தயோகமது தன்னிலே*
*வாக்குடைய வாரி தன்னில் வணிகர் நன்றெனவுரைத்தார்.*

என கண்ணகி வழக்குரையில் மாதவி பிறந்த குறிப்பு கூறப்படுகின்றது. அதில்

பற்று சித்திரை மூப்பதின் மூன்றாம் பக்கம் வியாழக்கிழமை மகத்தில்
சுற்றாறாங் கன்னி வியாழன் ஓரையில் தோன்றும் முகூர்த்தமாகப் பிறந்த
பொற்கொடிக்கு கோளுதைய மாதித்தன் பொருந்திய மூன்றாமிடத்திலே இராகும்
ஆகிய ஏழாம் இடந் தன்னில் வெள்ளி ஆறாம் இடந்தன்னில் செவ்வாயதாகும்.
ஏறிய சென்மந்தன்னில் புதனுடனே எண்ணும் வியாழன் ஆறாமிடம் தனிலே
வாகுபடப் பதினோராமிடந் தன்னில் வந்தசனியினால் வாழ்வுகள் உண்டு
ஆகுமிவள் மாணிக்கத் தைப்பெற்றே ஆயிளை வாழ்வாள் என உரைத்தாரே
அரிவையற்கு மேழா மிடம் தனிலே யந்தப்
பெருகு வெள்ளி நின்றதனாற் பின்பு - வருகணவன்
செங்கையினால் உள்ள பொருள் தோற்பன் அவன் தேவி
கொங்கையினால் அழியுங்கூடல்

எனக் கூறப்படுகின்றது. அதன்படி கிரக நிலையாவது பின்வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| 12 | லக். சூ. பு | 2 | ரா |
| சனி | கிரக நிலை மகம் | | 4 |
| 10 | | | சந் |
| கே | 8 | வெ | செ. வி. |

காணாமற் போன பொருளைப் பற்றி அறிவதற்காகச் சாத்திரியாரை நாடி சாத்திரம் கேட்டலைக் கெடுதி கேட்டல் என அழைப்பர்.

நோயுற்ற வேளையில் சாத்திரம் கேட்டல் வழக்கமாகும். வைத்தியர் எந்தத் திசையில் உள்ளார், நோய்க்குரிய காரணம் யாது, ஏற்பட்டிருக்கும் நோயினால் மரணம் சம்பவிக்குமா முதலிய வினாக்களுக்கு விடை காண் பதாக நோய்க்கான சாத்திரம் கேட்டல் அமையும். நோயைப்பற்றிப் பூரணமாக அறிந்து கொள்ள சாத்திரமே ஏற்றது என்பதில் மட்டக்களப்புத் தமிழர் அசையாத நம்பிக்கையுடையவர்கள். பிள்ளைகளுக்குரிய கல்வியை ஆரம் பித்தல், திருமணம் செய்தல், புதுமனை புகுதல், தொழில்களை ஆரம்பித்தல் முதலிய இன்னோரன்னவற்றுக்கு எல்லாம் சாத்திரம் கேட்டு நல்ல சுப முகூர்த்தத்தைத் தெரிந்து அச்சுப முகூர்த்தத்தில் தமது காரியங்களை மேற் கொள்வர்.

பெண் குழந்தைகள் பூப்படைந்ததும் அவர்களது எதிர்கால வாழ்க்கை பற்றிய அம்சங்களை சாத்திரம் கேட்டு அறிந்து கொள்வார்கள். சாத்திரியார் பூப்படைந்தவளின் உத்தேச நேரத்தைக் கொண்டு பலாபலன் கூறுவார். பலாபலன் கூறுவதற்கு முன்னர் பூப்படையும் போது பூப்படைந்தவள் அணிந்திருந்த துணியின் நிறம், பூப்படைந்த அறிகுறியை முதலில் கண்டவர் ஆணா, பெண்ணா? அவர் சுற்றத்தவரா, பிறரா? பூப்படைந்த நேரம் இரவா, பகலா? பூப்படைந்த இடச்சூழல் முதலியவற்றைக் கூறி அவற்றின் மூலம் சாத்திரம் கேட்பவர்களிடத்து சாத்திரத்தின் நம்பகத் தன்மையை ஏற்படுத்திய பின்னரே சாத்திரியார் பலாபலன்களைக் கூறுவார்.

**சகுனம் பார்த்தலில் நம்பிக்கை**

பண்டைத் தமிழர்கள் அவர்களது வாழ்க்கையில் சகுனம் பார்ப்பதில் நம்பிக்கை கொண்டுள்ளனர். ஒரு காரியத்தின் பொருட்டு வீட்டிலிருந்து புறப்படும் போது மனிதர் விலங்குகள் ஆகியவை எதிர்ப்படுதலும் அவை களிடமிருந்து தும்முதல், சத்தமிடுதல் தோன்றினாலும், தமது உடலில் மாற்றம்

ஏற்படுவதன் மூலம் தமது காரியம் சித்தியாகும் என்றும், சித்தியாகாது என்றும், தீமை நடக்கப் போகின்றது என்றும், நன்மை விளையப் போகின்றது என்றும் அறிந்து கொள்வர். ஆண்களுக்கு இடப்பக்கமும், பெண்களுக்கு வலப்பக்கங்கமுமாகப் புருவம், கண், நெற்றி முதலியன துடித்தலும், கண்ணாடி, உப்புப் பாத்திரம் ஆகிய பொருட்கள் விழுந்து நொறுங்குதலாலும், கெட்ட சகுனமென நம்பிக்கை கொண்டுள்ளனர். இங்ஙனம் சகுனம் பார்த்து எதிர்கால நிகழ்வை அறிவதில் நம்பிக்கையுடையவர்களாகக் காணப்பட்டனர். அக்கால மக்கள் சகுனசாத்திரத்தில் கொண்டிருந்த நம்பிக்கையைப் புறநானூறு, குறுந்தொகை, நற்றிணை, மலைபடுகடாம், முதலிய சங்ககாலத்து நூல்களும் எடுத்தியம்புகின்றன. மேலும் இராமாயணத்தில் அசோகவனத்தில் சிறை வைக்கப்பட்டிருந்த சீதை திரிசடையிடம் மேல்வருமாறு கூறுகின்றாள்.

பொலந் துடி மருங்குலாய் புருவம் கண் நுதல்
வலந்துடிக்கின்றில வருவதோர்கிலேன்

எனத் தெரிவிப்பது உடலில் ஏற்படும் மாற்றங்களைக் கொண்டு சகுனம் கூறுவதற்கு ஆதாரமாயுள்ளது.

வெய்ய சுடரையுடைய சூரியன் பல இடத்தும் செறிந்து தோன்றுதலும், அஞ்சத்தக்க பறவைகள் குரல் இசைத்தலும், பல் நிலத்தில் விழுதலும், தலையில் எண்ணெய் பூசியவரைக் காணுதலும், பன்றி ஏற்றம் ஏறுதலும், ஆடையைக் களைதலும் ஆகியவற்றைக் கனவில் காணுதலால் கண்டார்க்கு தீமையுண்டாகும் என்ற நம்பிக்கை கொண்டுள்ளனர். இது பண்டைத் தமிழரிடம் இருந்து வழி வழியாக வந்ததாக அறிய முடிகின்றது. புற நானூற்றுப் பாடல் (சக: 4 -12) பின்வருமாறு கூறுகின்றது:

திசையிரு நான்கு முற்க முற்கவும்
பெருமரத் திலையி னெடுங்கோடு வற்றல் பற்றவும்
வெங்கதிர்க் கனலி துற்றவும் பிறவும்
அஞ்சுவரத் தகுந புள்ளுக்குர லியம்பவும்
எயிறு நிலத்து வீழவு மெண்ணெயாடவும்
களிறுமேல் கொள்ளவும் காழக நீப்பவும்

மேலும் குறுந்தொகைப் பாடல் ஒன்று மேல்வருமாறு கூறுகின்றது. தோள் பூரித்தலும் வளை இறுகுதலும் நன்னிமித்தமாகும்.

சுரிவளைப் பொலிந்த
தோளுஞ் செற்றும் (புலியூர்க் கேசிகன், 1965, பாடல் 260)

தனதாடவனின் வருகையறிந்த மடவரலின் மனக்களிப்பினால் சுழித்த சங்கினால் செய்த அவளணிந்த வளைகளினால் அழகுபெற்ற அவள் தோள் களும் இறுகுகின்றன என்பது மேற்குறிப்பிட்ட பாடலில் பொருளாம்.

ஒரு காரியத்தின் பொருட்டு வெளியிற் செல்லும் போது கால் இடறல், தலையில் அடித்தல், பின் நின்று கூப்பிடுதல் என்பவற்றையும் துன்னிமித்த மாகவே நம்பினர். இவ்வாறு நேரும் போது வீட்டிற்கு வந்து இருந்து நீர் சிறிதுபருகி மீளப் புறப்படுவதனால் ஏற்படவிருக்கும் தீமையின் விளைவு நீங்கிவிடும் என்பதாக நம்பிக்கை கொண்டுள்ளனர்.

காரணமின்றிப் பகலிற் பெருந்தூக்கம் வருதல், நடுப்பகலில் தும்பி பறத்தல் என்பனவும் கெட்ட சகுனங்களென நம்பிக்கை கொண்டுள்ளனர், வலமாக பல்லி சொல்லலும், விறகுச் சுமையைக் காணலும், விதவையைக் காணலும் தீமை விளைவிப்பதாகக் கூறப்படுகின்றது. இதற்கு ஆதாரமாக கண்ணகி வழக்குரையில் (90) மேல்வரும் பாடலைக் குறிப்பிடலாம்.

> மறுகில் வரு மளவுதன்னில் வலப்பல்லி தடுத்திடவும்
> விறகுச் சுமை எதிர்வரவும் வெறுங்கழுத்தி வரவுங் கண்டு
> குறிகளிவை பொல்லாது குணக்கேடாம் நிமிர்த்தமெல்லாம்

அத்துடன் மொட்டைத் தலையர், மயிர் விரித்தவர், அங்கவீனர்கள், வெற்றுப் பாத்திரம், எண்ணெய்க் குடம், புதுப்பானை, கயிறு, சிவப்பு மலர், வீடு பற்றி எரிதல், ஒற்றைத் தும்மல் முதலியன எதிர்ப்படுதலும் பசு, எருமை, நரி, காகம், கிளி, மயில், கோழி, ஓணான் என்பன நமது இடது பக்கமாகச் செல்லுதலும், நாய் ஊளையிடுதலும், காகங்கள் கூட்டமாகப் பறந்து வட்ட மிட்டுக் கரைதலும் தீய சகுனமென நம்பிக்கை கொண்டுள்ளனர்.

மனிதரது கண்களுக்குத் தெரியாத ஏதாவதைக் காணும்போதுதான் நாய் ஊளையிடுகிறது என்பதை இன்றைய ஆராய்ச்சிகள் வெளிப்படுத்துகின்றன. மனிதனுக்குக் கேட்க முடியாத சில ஒலியலைகள் கடந்து செல்லும் போது அவற்றையுணர்ந்து நாய் அலறுகிறது என்பதே உண்மை என அறிய முடிகிறது (வெங்கானூர் பாலகிருஷ்ணன், 2005, ப.286). பூனை, மூஞ்சுறு, பாம்பு, எலி, குரங்கு, நாய், உடும்பு, கீரி, அணில் முதலியன நமது வலப்பக்கமாகச் செல்லுதலும் அரிசிப் பொதி, பசுமாடு, வெற்றிலை ஆகியவற்றைக் கண்டு செல்லுதலும் நல்ல சகுனமாகக் கொண்டனர் (ப.பாக்கியராஜா, 1980, ப.106).

நித்திரை விட்டு எழுந்தவுடன் நற்சகுனமாகப் பார்க்கத்தக்கவை தாமரைப்பூ, தீபம், தழல், தனது வலக்கை, மனைவி, மிருதங்கம், கருங்குரங்கு, கண்ணாடி, சூரியன்,கோபுரம்,சிவலிங்கம், சந்தனம், கடல், வயல், முகில் ஆகியவை நலந்தருவனவாகக் கூறப்படுகின்றது (கிருஷ்ணமாச்சாரியார், 2005, பக்.388,389).

## கனவில் நம்பிக்கை

மட்டக்களப்புத் தமிழர் கனவு காணுதலில் நம்பிக்கை வைத்துள்ளனர். கனவு காணுதலில் இரவின் பிற்சாமத்தில் காணப்படும் கனவு உண்மையாகிவிடும் என்பதில் விசேட நம்பிக்கை உடையவர்களாக உள்ளனர்.

பண்டைத் தமிழர் கனவில் நம்பிக்கை கொண்டிருந்தனர் என்பவற்றிற்குக் கம்பராமாயணத்திலே திரிசடை கண்ட கனவுகள் இதற்கு உதாரணமாக விளங்குகின்றன. கனவு காணும் பொழுது மங்கல நாண் என்னும் தாலி அறுந்து விழுதல், சிவந்த ஆடையுடன் தென் திசை நோக்கிச் செல்லுதல், எருமை, கழுதை, குரங்கு, பன்றி, பூனை, புலி, கரடி, காகம், பருந்து, கழுகு என்பவற்றைக் காணுதல், கட்டடங்கள் இடிந்து விழுதல், மயிர் களைதல், மரம் முறிந்து விழுதல், கடிதங்களை வாங்குதல் அல்லது எழுதிய ஓலையை ஏற்றல், நிர்வாணி, காவிவஸ்திரி, மொட்டைத் தலையர், மயிர் விரித்தவர், இறந்தவர்கள், கரியவஸ்திரம் உடுத்தவர்கள், விவாகம் நடைபெறுதல் என்பவற்றை கனவில் காணுமிடத்து நோய், துன்பம் மரணபயம் ஏற்படும் என்னும் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

இரவின் முற்பகுதியில் கண்ட கனவு ஓராண்டிலும், இரண்டாம் பகுதியில் கண்ட கனவு ஆறு மாதத்திலும், மூன்றாம் பகுதியில் கண்ட கனவு மூன்று மாதங்களிலும், நான்காம் பகுதியில் கண்ட கனவு பதினைந்து நாட்களிலும் பலன் தரும். விடியற்காலையில் காணும் கனவின் பலன் பத்து நாட்களில் தெரியும். ஓரிரவில் இருமுறைறை கனவு கண்டால் பின்னரே பலிக்கும் என நம்பப்படுகின்றது (கிருஷ்ணமாச்சாரியார், 2005, பக்.388-389).

## கண்ணூறில் [கண்திருஷ்டியில்] நம்பிக்கை

கண்ணூறு கழித்தலானது ஒருவர் இன்னொருவர் மேல் செலுத்துகின்ற விருப்புக்கள் எனக் கூறலாம். இது பேய்களைப் பற்றிய நம்பிக்கையோடு தொடர்புடையதாகவும் கூறப்படுகின்றது (சு.வித்தியானந்தன், 1954, ப.172). ஒருவரது அல்லது ஒன்றினது அழகில், ஒருவரது செயலில், அதிகபட்சம் கவருகின்ற வேளையில் அது கண்ணூறு எனப்படுகின்றது. மட்டக்களப்புப் பிரதேசத் தமிழர்கள் கண்ணூறு என்பது பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவதாக நம்புகின்றனர். அறிவியல் மிகுந்து நவீன விஞ்ஞான வசதிகள் பெருகியுள்ள இக்காலத்திலும் கூட மட்டக்களப்புத் தமிழரிடம் மேற்படி நம்பிக்கை உணர்வுகள் மிகுந்து காணப்படுகின்றன.

மந்தை வளர்ப்போர் பால் கறக்கும் வேளையில் பிறரை அனுமதிக்க மாட்டார்கள். ஏனெனில் அதிகமான பாலைத் தரும் மந்தையை பிறர் காணும் போது மந்தையினுடைய முலை பழுதடைவதாக நம்புகின்றனர். குழந்தை

பிறந்த சடங்கில் மாமனாரால் கண்ணூறு கழிக்கப்படுகிறது. பிறரால் பிள்ளையின் மீது வைக்கப்படும் திருஷ்டிக்காக அது நடைபெறுகிறது. குழந்தைகளுக்குத் தினமும் மாலை வேளையில் கண்ணூறு கழிக்கப் படுகின்றது. இக்கண்ணூறு கழித்தலானது திருநீறு மந்திரித்துப் போடுவதன் மூலமும் பழுக்கக் காய்ச்சிய இரும்புத்துண்டை நீரில் விட்டு அதனால் ஏற்படும் நீராவியைக் குழந்தையின் உடலில் படச் செய்வதன் மூலமும் சில வகைத் தாவரங்களினால் புகை பரப்புவதன் மூலமும் இத்தகைய கண்ணூறுகள் நீங்கப்படுவதாக நம்பிக்கை வைத்துள்ளனர்.

பூப்பு நீராட்டு விழாவின் போது ஆடை அணிகலன்களை புனைவித்து அழகு படுத்திய நிலையில் இருக்கும் இளம் பெண்ணுக்கு மற்றவர்களிடம் இருந்து ஏற்பட்ட கண்ணூற்றை நீக்குதற் பொருட்டும், திருமணத்தின் போது மற்றவர்களால் ஏற்பட்ட கண்ணூற்றை மணமக்களிடமிருந்து நீக்குதற் பொருட்டும் ஆராத்திகள் எடுக்கப்படுகின்றன.

குழந்தைகளுக்கும், பூப்படைந்த பெண்ணுக்கும், மணமக்களுக்கும் மட்டுமன்றி சபையில் சொற்பொழிவு, இசைநிகழ்ச்சிகள், நாடகங்கள் முதலிய நிகழ்வுகளில் பங்கேற்றவர்களுக்கும் கண்ணூறு கழித்தல் நடைபெறுகின்றது. புதிய மனைகள், புதிய கட்டடங்கள் ஆகியவற்றிற்குப் பிறரால் கண்ணூறு ஏற்படாதவாறு பலரது கண்களுக்குத் தெரியுமாறு சில பொருட்களைக் கட்டடத்தில் தொங்கவிட்டுப் பாதுகாக்கின்றனர்.

வயல்நிலங்களில் தானியங்கள் முற்றி விளைந்த நிலையில் மற்றவர் களால் கண்ணூறு ஏற்படும் பட்சத்தில் அத்தானியங்கள் பூச்சிகளாலும், விலங்குகளாலும், இயற்கையினாலும் அழிவுபட்டுவிடும் என நம்புகின்றனர். இதனால் இதனைத் தடை செய்யும் நோக்கமாக சில தாவரங்களின் குழைகளை யுடைய கிளைகளையும் இறந்த மாட்டின் தலைப் பகுதியினையும், தலை எலும்புக் கூட்டையும், வைக்கோலினால் செய்யப்பெற்ற பதுமைகளையும் வயல்களில் வைக்கின்றனர்.

### நோய் தீர்த்தலில் நம்பிக்கை

நோய்கள் தொற்று நோய்கள் முதலியவைகள் ஏற்பட்டால் கொம்புத்தட்டு எடுத்தல், குலதெய்வங்களுக்கு நேர்கடன் செய்தல், இறந்த மூதாதையரின் பேரால் வறியவர்களுக்கு உணவு வழங்குதல் முதலியனவற்றால் நோய் நீங்கப் பெறுவதாக நம்புகின்றனர். நேர்கடனாக கோயிலில் காவடி எடுத்தல், வாயில் அலகு குத்துதல், அங்கப்பிரதட்சணம், மடிப்பிச்சை எடுத்தல், நெற்குத்துதல், அடையாளம் கொடுத்தல், கோயிற் கட்டடப்பணிகளை மேற் கொள்ளல், பூசை புரிதல் முதலியன கோயில்களில் மேற்கொள்ளப்படுகின்றன.

**ஏனைய நம்பிக்கைகள்**

வாழ்வியலானது வழிபாட்டு நடைமுறைகள் பல நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு நிலைபெற்றுள்ளன. மட்டக்களப்புத் தமிழரிடையே காணப்படும் நம்பிகைகளில் ஒன்றான குழந்தை பிறந்து முப்பத்தியோராம் நாள் கோயிலுக்குக் குழந்தையை எடுத்துச் சென்று, அக்கோயிலின் வெளி வீதியில் தாயின் மடியில் குழந்தையை வைத்து, தந்தை அருகில் இருக்க குழந்தையின் தலைமயிர் முதன்முதலாக மழிக்கப்படுகின்றது. இதனால் குழந்தை உடல் நலத்துடன் நீண்ட காலம் வாழும் என்ற நம்பிக்கை அவர்களிடம் உள்ளதாகக் கூறப்படுகின்றது (திருவானைக்காப் புராணம்).

குழந்தை பிறந்து ஆணாயின் ஆறு அல்லது எட்டு மாதத்திலும் பெண்ணாயின் ஐந்து அல்லது ஏழாம் மாதத்திலும் குழந்தைக்குச் சோற்றுடன் தயிரும் நெய்யும் தேனும் கலந்து இறைவழிபாட்டின் பின்பு முதன் முதலாக ஊட்டப்படுகின்றது. இவ்வுணவூட்டலானது வீட்டில் அல்லது ஆலயத்தில் நடைபெறும்.

குழந்தை பிறந்து ஐந்தாவது வயதில் நவராத்திரி காலத்தில் சரஸ்வதி பூசையிலோ அல்லது விஜயதசமியிலோ குழந்தைக்கு வித்தியாரம்பம் செய்யப்படுகின்றது. இதனால் சரஸ்வதியின் அருளைப் பெற்றுக் கல்வியறிவு நிரம்பியவராவார் என்பது இவர்களது நம்பிக்கை. சிலவேளைகளில் சூரியோதயத்தில் ரேவதி நட்சத்திரத்தில் வித்தியாரம்பம் செய்யப்படுகின்றது.

இறந்த பின் செய்யப்படும் மூன்றாம் நாளில் அந்தி சந்தி நேரத்தில் வெள்ளரிசிப் பொங்கல் வைத்து வழிபாடு நடைபெறுகின்றது. முப்பத்தியோராம் நாளில் ஆன்ம ஈடேற்றம் கருதிய வழிபாடு நடைபெறுகின்றது. இதனால் ஆன்மா முத்தியடைவதாக நம்பப்படுகின்றது. இறப்பு ஏற்பட்டு பிரேத அடங்கம் செய்யப்பட்டு எட்டாம் நாள்வரை தொடர்ச்சியாகவும், முப்பத்தியோராம் நாள் வரை இடைக்கிடையேயையும் (விரும்பியவாறு) வைகுந்த அம்மானை பாடப் பெற்று வருகின்றது. இதனால் இறந்தவரது ஆன்மா வைகுந்தம் அடையும் என்ற நம்பிக்கை உடையவர்களாக உள்ளனர்.

தெய்வீக மரங்களாகக் கருதப்படும் ஆல், அரசு, கடம்பு, வேம்பு, பூவரசு, இத்தி, மா, வில்வம், கொன்றை முதலிய மரங்களுக்கு நீர் ஊற்றி வழிபடுவதால் துன்பங்கள் அகலும் என நம்புகின்றனர். அரசு வேம்பு ஆகிய மரங்களைச் சுற்றி வலம் வந்து வழிபட்டு வந்தால் மகப்பேறு கிடைக்கும் என்ற நம்பிக்கையுடையவர்களாக வாழ்கின்றனர். பெண்கள் மாதவிலக்கு, பிரசவத்தீட்டு முதலிய காலங்களில் தெய்வீக கருமங்களில் ஈடுபடுதல் கூடாது என்பதில் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

தமது காரியம் சித்தியாகுமா? நினைத்தவை கைகூடுமா? போன்ற எதிர்காலப் பலன்களை அறிய ஆலயங்களிலே திருவுளச் சீட்டுக்களை வைத்து. அவற்றுள் ஒன்றை எடுத்து அதன் மூலம் தெரிந்து கொள்வர். நற்செய்திகள் குறிக்கப்படாத சீட்டுக்களை ஆலய தெய்வீக மரங்களில் ஒன்றில் கட்டி விடுவர். அதனால் ஏற்படவிருக்கும் தீய விளைவுகளில் இருந்து நீங்கலாம் என நம்பிக்கை கொண்டுள்ளனர்.

பயிர்கள் நோய்களாலும் பூச்சிகளாலும் தாக்கமடைந்த காலத்தில் தெய்வ அருளில் இருந்து பயிர்களைப் பாதுகாக்கலாம் என நம்பினர். அதற்காக கோயில்களில் இருந்து இளநீர், தீர்த்தம் முதலியன கொண்டு போய் வயலைச் சுற்றித் தெளித்து வருவதில் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

## iv. கிறிஸ்தவ சமயம்

ஐரோப்பியர் வருகையின் போது இலங்கையில் ஒரு சுமூகமான சூழலிருக்க வில்லை. அரசியற் குழப்பங்கள் சமுதாய ஏற்றத் தாழ்வுகள் என்று பல்வேறு வகையான சிக்கல்கள் காணப்பட்டிருந்தன. இச்சூழலை அவர்கள் தமக்கு வாய்ப்பாகப் பயன்படுத்தி வணிகம் செய்வதற்கு வந்தவர்கள் அரசியலில் நுழைந்து ஆட்சி செலுத்துவதற்கும் தங்கள் மதத்தைப் பரப்புவதற்கும் சாதகமான ஒரு சூழலை உருவாக்கினர்.

கி.பி 1505 ஆம் ஆண்டு முதலாக போர்த்துக்கீசர் இலங்கையில் கத்தோலிக்க சமயத்தைப் பரப்பினர். இதன் பின் கி.பி 1659 ஆம் ஆண்டு முதலாக ஒல்லாந்தர் தமது சீர்திருத்த மதக்கொள்கையைப் பரப்பினர். இதன் பின்னர் கி.பி 1796 ஆம் ஆண்டு முதலாக பிரித்தானியர் இங்கு வந்தனர். பிரித்தானியர் வருகையோடு அங்கிலிக்கன் திருச்சபையும் இலங்கைக்கு வந்தது.

வர்த்தக நலன்களின் விரிவாக்கத்தை நோக்கமாகக் கொண்டு கண்டு பிடிக்கப்பட்ட புதிய நாடுகளில் வர்த்தகங்களின் பாதுகாப்பு நலனுக்காக கோட்டைகள் கட்டப்பட்டு சிறிய குடியேற்றத்தில் உள்ள மக்களின் ஆன்மீக நலன்களைப் பேணுவதற்கென கூடவே வந்த கிறிஸ்தவ மதக்குருக்கள் கிறிஸ்தவ மதக்கொள்கையைப் பரப்புவதில் ஈடுபடுத்தப்பட்டனர். ஆரம் பத்தில் கடலாதிக்கத்தைப் பேணிய போர்த்துக்கீசரும் அவர்களைத் தொடர்ந்து வந்த ஒல்லாந்து நாட்டினரும் தம் சமூகத்திடையே மண உறவில் கலந்து ''பறங்கி இனம்'' என்னும் புதிய சமூகக் குழுமத்தை உருவாக்கினார்கள். கிறிஸ்தவம் ஐரோப்பியரால் கொண்டுவரப்பட்டதால் ''பறங்கி மார்க்கம்''

எனவும் அழைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது (தனேந்திரா, வி.பி., 2008, ப.79).

தென்னிந்திய வாசனைத் திரவியங்களான கறுவா, மிளகு போன்றவையும் முத்துக்களும் உரோமாபுரிக்குக் கொண்டு செல்லப்பட்டன. இதன் பெறுமதிகளுக்குப் பதிலாக உரோமர்கள் பொன்னையும், பாரசீகக் குதிரைகளையும் தமிழக வாணிகர்களுக்கு வழங்கினார்கள். இவ்வாறான நடவடிக்கைகள் இலங்கை வரலாற்றிலும் தன்சாயலைப் பதித்துள்ளன.

கிறிஸ்தவ குருமார் தமது சமயத்தைப் பரப்புவதற்காக தாங்கள் சென்ற இடங்களில் வழங்கும் மொழியைக் கற்றுக்கொண்டு தமது சமயப்பணியோடு அங்கு நிலவும் மொழி ஆராய்ச்சியிலும் ஈடுபட்டனர். சுதேசிகளுடன் தாமும் ஒருவராக இணைந்து அவர்களது மொழி, கலாசாரத்தைத் தக்க முறையிற் கற்றனர். கிறிஸ்தவ சமயத்தின் வருகையால் தமிழ் மொழியிலும் கலாசாரத் தளங்களிலும் தாக்கங்கள் உருவாகின (Beven, L., 1946, pp.01). கிறிஸ்தவ சமய ஊடாட்டத்தில் தமிழ் செழுமையுற்றதை அவதானிக்கலாம். பெரும்பாலான கிறிஸ்தவ சமயப்பணியாளர்களிடம் சைவ சமயச் சடங்குகள், அமைப்புகள், ஆசாரங்கள் பற்றி எதிரான சிந்தனைப்போக்கு இருந்த போதிலும் புதிய மேலைத்தேய, கீழைத்தேய சமய பண்பாட்டு ஊடாட்டங்கள் புதிய எழுச்சியை உருவாக்கியது.

**கத்தோலிக்க சமயம்**

கத்தோலிக்கத் திருச்சபை தமது கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பிய பின்னரே பாடசாலைகளை நிறுவியது. ஆனால் மெதடிஸ்த திருச்சபையானது பாடசாலைகளை நிறுவிய பின்னரே தமது சமயத்தைப் பரப்பியது. தமது சமயத்தில் அறிவையும், சமயத்தில் பற்றையும் நிலைபெறச் செய்யும் நோக்கமாக அப்பாடசாலைகள் நிறுவப்பட்டன. போர்த்துக்கேயர் காலத்திலேயே கிழக்கிலங்கையில் காணப்பட்ட பெரும்பாலான பழமை வாய்ந்த கோயில்கள் இடிக்கப்பட்டுச் சூறையாடப்பட்டன. சமய மாற்றத்திற்குட்படாத சுதேசிகள் இன்னல்களுக்கு ஆளாக்கப்பட்டனர்.

லத்தீன், பிரெஞ்சு ஆவணங்கள் மூலம் புனித பிரான்சிஸ் சேவியர் காலத்திற்கு முன்னரே இலங்கையில் கத்தோலிக்க திருச்சபை இருந்துள்ளதை அறியமுடிகிறது. 01.02.1868 ஆம் திகதிய கடிதத்தின் படி றுவியாக் அடிகளாரால் மட்டக்களப்பில் கத்தோலிக்க தேவாலயம் கி.பி 1624இல் கட்டப்பட்டதாக கூறப்படுகின்றது (Canagaratnam, S.O., 1921, pp.39). இந்த தேவாலயமே தற்போது தாண்டவன்வெளியில் உள்ள தேவாலயம் எனக் கூறப்படுகின்றது. இந் நாட்டுக்கு வந்த ஒல்லாந்தரினால் இவ்வாலயம் எரித்து

சாம்பலாக்கப்பட்டது. ஆனால் ஆச்சரியமாக அங்கிருந்த காணிக்கை மாதாவின் திருச்சொரூபம் எரியுண்ணாது பாதுகாக்கப்பட்டது. அதன் பின்னர் கி.பி. 1660இல் கண்டி மன்னனின் அனுமதியோடு தாண்டவன்வெளி கத்தோலிக்கர்களினால் நிதி சேகரிக்கப்பட்டு இவ்வாலயம் மீளக் கட்டப் பட்டது.

அதன் பின்னரே புளியந்தீவில் அமைந்துள்ள புனித மேரித் தேவாலயம் கட்டப்பட்டது. அத்தேவாலயம் கட்டி முடிவதற்கு முன் புளியந்தீவு புனித அந்தோனியார் தேவாலயம் கட்டி முடிக்கப்பட்டது. முன்னைய தேவாலயம் தற்போதைய மட்டக்களப்பு மரியன்னை தேவாலயத்தின் சக்கிறிஸ்தி அறை யாக உள்ளது (வண.யோசப் மேரி அடிகளார், 2009).

மட்டக்களப்புப் புளியந்தீவின் பங்கில் மேற்படி இரண்டு தேவாலயங்களும் ஒன்றுக்கொன்று நெருக்கமாக அமைந்து காணப்படுகின்றன. அந்தோனியார் தேவாலயம் கி.பி 1800 இல் கட்டப்பட்டது. இத்தேவாலயம் மீனவர்களின் பரிபாலன உரிமையாக இருந்தது. இவ்வுரிமையில் வேளாளர், நாவிதர், பறங்கியர் ஆகிய மூன்று சமூகத்தினரும் உரிமை கொண்டாட முயன்றனர். அதனை மீனவர்கள் நிராகரித்தனர். இதன் காரணமாக வேளாளர், நாவிதர், பறங்கியர் ஆகிய மூவின சமூகத்தினரால் கிபி 1808இல் புளியந்தீவில் புனித மரியாள் தேவாலயம் தோற்றம் பெற்றது. இது பஸ்கோல் முதலியாரால் கட்டப்பட்டது. அத்தேவாலயத்துக்குக் காணியை நன்கொடையாகப் பஸ்கோல் முதலியார் அவர்களே வழங்கினார் (கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, 16.08.2009 வீரகேசரி).

சைவ ஆலயங்களில் காணப்படும் சாதிப்பாகுபாடு அன்றைய கால கட்டத்தில் கத்தோலிக்க தேவாலயங்களிலும் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. கத்தோலிக்க மக்கள் மத்தியில் இருந்த சாதிப்பிரிவுகளை பிரதிபலிப்பன வாகவே மேற்படி இரு தேவாலயங்களும் காணப்பெற்றன. தமது சமயத்தைப் பரப்புதலை நோக்கமாகக் கொண்டதால் சாதிக்கு ஒரு தேவாலயம் உருவாவதை குருமாரால் தடை செய்ய முடியவில்லை எனக்கூறலாம். ஆனால் எல்லாத் தேவாலயங்களிலும் சகல சாதியினரும் வழிபடவும் பங்கெடுக்கவும் உரிமையுண்டு என்பதனைக் குருமார் வலியுறுத்தி வந்தனர்.

பிரான்சிஸ் சேவியர் அடிகளார் ஆயர் பொன்ஜீன் ஆண்டகையின் பணிப்பின் பேரில் ஒரு ஆங்கிலப் பாடசாலையை நிறுவுதற்பொருட்டு மட்டக்களப்புக்கு அனுப்பி வைக்கப்பட்டார். பிரான்சிஸ் சேவியர் இலங்கை யின் முதலாவது தமிழ்க் குருவாவார். மரியன்னை தேவாலயத்துக்குப் பிரான்ஸ்சிஸ் சேவியர் ஆயரின் பிரதிநிதியாக அருட்தந்தை பெலிஜீயாவின் உதவியுடன் கி.பி 1874 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 19 ஆம் திகதி அடிக்கல்

நாட்டப்பட்டது. மீனவர்கள் கட்டிய புனித அந்தோனியார் தேவாலயத்தைக் கண்ணுற்றதன் பின்னர் தாமும் தேவாலயத்தைக் கட்ட வேண்டும் என்ற மரியாள் தேவாலயத்தைச் சார்ந்தவர்களின் விருப்பத்துக்கு இணங்கி அருட் தந்தை றுவியாக் அவர்கள் கி.பி. 1867இல் மரியாள் தேவாலயத்தைக் கட்டினார்.

மேற்படி இரு தேவாலயங்களைச் சார்ந்தவர்களின் போட்டி மனப் பான்மையினால் தேவாலயங்களைப் புனரமைப்பதில் இரு பகுதியினரும் அக்கறை கொண்டு செயற்பட்டனர். கி.பி 1895 ஆம் ஆண்டு தொடக்கம் இரு தேவாலயங்களுடனான குருமனைக் கட்டிடங்களை ஜேசுசபைத் துறவிகள் பயன்படுத்தி வந்தனர். இந்த இரு தேவாலயங்களைச் சார்ந்த மக்களுக்கு அது மகிழ்ச்சியைக் கொடுத்தது. ஆனால் கி.பி 1931இல் புனித வளனார் துறவிகள் மட்டக்களப்புக்கு வந்தனர். அவர்கள் தங்குவதற்காக புனித மரியாள் தேவாலயத்துடன் இணைந்திருந்த குருமனையை அவர் களுக்குக் கொடுத்துவிட்டு அந்தோனியார் தேவாலயக் குருமனையை பங்குத்தந்தையும், துணைப் பங்குத்தந்தையும் வாசஸ்தலமாகக் கொண்டனர்.

1895 இல் கிழக்கு மாகாணத்தில் சமயம் பரப்பும் பொறுப்பானது பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த யேசுசபைக் குருவைச் சார்ந்திருந்தது. இவர்களது சேவை மட்டக்களப்புப் பிரதேசத்திற்கு நன்கு வாய்க்கப்பெற்றது. ஏலவே இருந்த புனித மிக்கேல் கல்லூரி மட்டக்களப்புப் பிரதேசத்தில் இரண்டாம் தரமாக விளங்கக்கூடாது என்ற உறுதி கொண்டு அதனைச் சாதிக்கும் முயற்சி யில் அயராது உழைத்தனர். இவ்வாறு அயராது உழைத்தவர் பேடினன் பொனல் அடிகளாவர். இவர் மட்டக்களப்புப் பிரதேச மக்களின் மனதில் நீங்காத இடத்தைப் பிடித்துள்ளார். மட்டக்களப்புப் பிரதேசத்தில் கூடைப்பந் தாட்ட விளையாட்டை அறிமுகம் செய்ததுடன், மட்டக்களப்புப் பிரதேச இளைஞர்களை விளையாட்டில் திறமைமிக்க வீரர்களாய் நாடு முழுவதிற்கும் காட்டிய பெருமை சங்.வெபர், றீமன், நீ, கேபெயர் ஆகியோரைச் சார்ந்த தாகும். மட்டக்களப்பு விளையாட்டு மைதானம் வெபர் அடிகளாரின் பெயரில் ''வெபர் அரங்கு'' எனத் தற்போதும் விளங்குகிறது.

புனித மரியன்னை தேவாலயம் புனித அந்தோனியார் தேவாலயம் ஆகிய இரு தேவாலயங்களினதும் கட்டட வளர்ச்சியானது பல கட்டங்களாக பல சிறந்த திட்டங்களினால் வளர்ச்சியடைந்து தற்போதய தோற்றத்துடன் விளங்குகின்றன.

மட்டக்களப்பில் இரு நூற்றாண்டுகளுக்கு மேற்பட்ட இதர தேவாலயங் களான சொறிக்கல்முனை - திருச்சிலுவை தேவாலயம் (கி.பி1807) தன்னா முனை புனித சூசையப்பர் தேவாலயம் ஆகியன விளங்கின. இத்தேவாலயங்

களுக்குக் காணிகளை நன்கொடையாக பஸ்கோல் முதலியாரும், அவரது குடும்பத்தினரும் வழங்கினர் (கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, 16.08.2009 வீரகேசரி). மேலும் அமிர்தகழியில் கப்பலேந்திய மாதாகோயில் கி.பி. 1822 இலும் வீச்சுக்கல்முனை கி.பி1844 இலும், கல்லடி முகத்துவார புனித இஞ்ஞாசியார் தேவாலயம் கி.பி1894 இலும் கட்டப்பெற்றன.

புனித வளனார் துறவிகள் புனித அகஸ்தீனார் ஆசிரிய கலாசாலையையும், புனித மரியான் ஆண்கள் பாடசாலையையும் கத்தோலிக்க அனாதை ஆண்கள் இல்லத்தையும் பொறுப்பேற்றுச் சிறப்பாக நடாத்தினர்.

கல்லாறு இருதய தேவாலயம் கி.பி 1894இல் ஆரம்பிக்கப்பட்டது. கல்லாற்றில் அருட்தந்தை De Pech சில குடும்பங்களை கிறிஸ்தவர்களாக சமய மாற்றம் செய்ததுடன் அவர்களுக்காகத் தேவாலயம் ஒன்றையும் பாடசாலையையும் அமைத்தார். கி.பி 1895 இல் அருட் தந்தை Fr. Evrard அவர்கள் அந்த மக்களுடன் வாழ்ந்து அம் மக்களின் வறுமை நிலையைப் போக்க அரும்பணி ஆற்றினார் (Manel Abayaratna, 2007, pp.25). தன்னாமுனை புனித சூசையப்பர் தேவாலயத்தை கபிரியல் விதானையார் கட்டிக்கொடுத்தார். சொறிக்கல்முனை திருச்சிலுவை தேவாலயத்தை பஸ்கோல் முதலியார் கட்டிக்கொடுத்தார். கல்முனையில் கி.பி 1908இல் தேவாலயம் கட்டப்பட்டது. மிகச் சிறியதாக இருந்த இத்தேவாலயத்தை பிரான்ஸ் நாட்டின் நன்கொடையாளர்களின் உதவியுடன் அருட்தந்தை Hentry Bury என்பவர் பெரியதோர் தேவாலயமாக நிருமாணித்தார். அவர் Our lady Of Carmel என்னும் பெயரை அதற்குச் சூட்டினார்.

இன்று கத்தோலிக்க சமயத்தில் பல பிரிவுகள் உள்ளன. பிரிட்டிசார் 1796 இல் இங்கு பிரவேசித்ததும் 1806 ஆம் ஆண்டிற் கத்தோலிக்க மக்களுக்கு எதிராக எழுந்த சகல சட்டங்களும் நீக்கப்பட்டன.

**மெதடிஸ்த திருச்சபை**

மெதடிஸ்த திருச்சபையினர் கல்வியின் மூலம் ஆன்மிக விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்னும் கொள்கையை உடையவர்களாகக் காணப்பட்டனர். புளியந்தீவு மெதடிஸ்த தேவாலயம் இந் நாட்டின் பழைமையான கிறிஸ்தவ தேவாலயமாகும். இங்கிலாந்தின் வண. கலாநிதி தோமஸ் கோக் ஐயர் என்பவரின் முயற்சியால் கி.பி1813இல் ஐரிஸ் மெதடிஸ்த மகா சங்கத்திக்குச் செய்த விண்ணப்பத்தினால் அவருடன் பன்னிரண்டுபேர் அந் நாட்டை விட்டுச் செல்ல அனுமதி கிடைத்தது. கலாநிதி வண.கோக் ஐயர் அவர்களுடன் கிளவ், காவாட், லிஞ்ச், ஸ்குவான்ஸ், வில்லியம் ஓல்ட் ஆகிய ஐந்து குருமாரும் திருமதி ஸ்குவான்ஸ், திருமதி ஓல்ட் ஆகியோரும்

30.12.1813 இல் இங்கிலாந்து போடஸ்மத் துறைமுகத்திலிருந்து பாய்மரக் கப்பலில் புறப்பட்டனர்.

கப்பலில் பிரயாணம் செய்த போது இழப்புக்களையும் துயரங்களையும் அனுபவித்தனர். கடற் பிரயாணத்தில் இருபத்தைந்து வயதான இளம் மனைவி திருமதி ஓல்ட் அவர்கள் 10.02.1814 இலும், அறுபத்தாறு வயதான வண.கோக் ஐயர் 02.05.1814 இலும் மரணமடைந்தனர். இவர்களது உடல்கள் கடலிலேயே வைப்புச் செய்யப்பட்டன. வணக்கத்துக்குரிய காவாட் குரு அவர்கள் பம்பாயில் நீங்கிவிட ஏனையோர் 29.06.1814இல் காலித்துறைமுகத்தை அடைந்தனர். இந்நாளை மெதடிஸ்த சபையினர் இன்றும் கொண்டாடி வருகின்றனர்.

பின்னர் 11.07.1814 இல் காலியில் நடைபெற்ற கூட்டத்தின் போது துண்டு குலுக்குதல் (திருவுளச்சீட்டு) மூலம் தெரிவு செய்யப்பட்டு யாழ்ப் பாணம், மன்னார், மட்டக்களப்பு, காலி, மாத்தறை ஆகிய இடங்களுக்கு தங்கள் ஊழியங்களைச் செய்யுமாறு அவர்கள் அனுப்பப்பட்டனர். கொழும்பில் போதியளவு ஆங்கிலப் பாடசாலைகள் இருந்தபடியால் அங்கு எவரும் அனுப்பப்படவில்லை. வண. வில்லியம் ஓல்ட் அவர்களுக்கு துண்டு குலுக்குதல் மூலம் மட்டக்களப்பு கிடைத்தது. வண.ஓல்ட் அவர்கள் காலியிலிருந்து சுமார் 200 மைல் தூரத்தில் இருக்கும் மட்டக்களப்புக்குத் தோணிப் படகொன்றில் கடல் மார்க்கமாக அனுப்பி வைக்கப்பட்டார். மூன்று நாட்களில் முற்றுப்பெற வேண்டிய அப்பிரயாணம் பல சிரமங்களின் பின்னர் எட்டாம் நாளன்று அதாவது 12.08.1814 இல் மட்டக்களப்பு சுங்க இலாகா இறங்கு துறையை வந்தடைந்தார் (Small. W.A.T., 1965, pp.40-51).

வண.வில்லியம் ஓல்ட் அவர்களால் ஆரம்பித்த மெதடிஸ்த கிறிஸ்தவ முதலாவது சேவையாக கி.பி 1814 இல் புளியந்தீவு மெதடிஸ்த மத்திய கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. இது இலங்கையிலே முதன்முதலான ஆங்கில ஆண்கள் பாடசாலையாகத் தோன்றியது. இதற்கு அக்காலத்திலிருந்து திரு. சைமன் தோமஸ் என்னும் கலெக்டர் உறுதுணை புரிந்தார். ஆரம்பிக்கப்பட்ட போது ஐந்து மாணவர்கள் சேர்க்கப்பட்டனர். இவர்களில் மூவர் பிரித்தானிய இராணுவத்தினரின் அனாதைக் குழந்தைகள். அவர் மட்டக்களப்புக்கு வந்து எட்டு மாதங்களில் எட்டுப் பாடசாலைகளை நிறுவினார். அப்பாடசாலைகளின் வளர்ச்சிக்கும் மெதடிஸ்த திருச்சபையின் நிலைபேற்றுக்குமாகத் தன்னை அர்ப்பணித்த வண.வில்லியம் ஓல்ட் அவர்கள் 01.04.1815இல் இயற்கை எய்தினார். அன்னாரது சேவையினால் மட்டக்களப்புப் பிரதேச மக்கள் கல்வியில் மறுமலர்ச்சி அடைந்தனர்.

ஞாயிற்றுக்கிழமை நாட்களில் ஆராதனை செய்யும் இடங்களாக பாட சாலைகள் விளங்கின. மத்திய கல்லூரியைத் தொடர்ந்து வின்சென்ற் மகளிர் கல்லூரி கி.பி1820 இல் முதலியார் தெருவில் இருந்த கட்டடத்தில் திருமதி யேசுசார் அம்மையாரால் ஆரம்பிக்கப்பட்டது. இது ஆரம்பத்தில் தமிழ் பாடசாலையாகவும் பின்னர் தமிழ் ஆங்கில இரு மொழிப் பாடசாலையாகவும் இயங்கிற்று. மகாஜனக் கல்லூரி போன்ற சுமார் நூற்றைம்பதுக்கு மேற்பட்ட மெதடிஸ்த பாடசாலைகளின் தோற்றத்துக்குக் காரணகர்த்தாவாக விளங்கிய வண. வில்லியம் ஒல்ட் அடிகளார் அவர்கள் மட்டக்களப்புப் பிரதேச மக்களின் மனதில் நீங்காத இடத்தினைப் பிடித்துள்ளார்.

மட்டக்களப்புப் பிரதேசத்தின் தமிழ்ப் பெண்களது கல்வி வளர்ச்சிக்காகப் புளியந்தீவு மெதடிஸ்த தேவாலய வளவு கி.பி 1822 இல் வாங்கப்பெற்று கி.பி 1838 இல் கட்டப்பெற்றது. 1895 இல் செல்வி ஏமி வின்சன்ற் என்னும் மிசனறி அம்மையாரின் வருகையால் அது சிறப்புப் பெற்றது. இவர் மட்டக் களப்புப் பிரதேசத்தில் முதலாவதாக ஆங்கிலக் கல்வியினைப் புகட்டத் தொடங்கினார். 1902 இல் தமிழ் விடுதிப் பாடசாலையுடன் ஒரு தனியான ஆங்கிலப்பிரிவும் இயங்கலாயிற்று. இவ் அம்மையார் 1902 இன் இறுதிப் பகுதியில் தனது தாயகம் சென்று 1905இல் மரணமடைந்தார். மேலும் புளியந்தீவு சிங்களவாடியில் ஒரு தமிழ்ப் பாடசாலையையும் கல்முனையில் கி.பி 1847இல் லீஸ் உயர்தர ஆங்கிலப் பாடசாலையையும் அதற்கு அண்மையில் மகளிர் பாடசாலை ஒன்றினையும் ஆரம்பித்தனர். கி.பி. 1848இல் பெண் விடுதி உள்ள பாடசாலையும் தேவாலயமும் கட்டப்பெற்றது (சுகுணதாஸ், எஸ்., 2009).

மெதடிஸ்த திருச்சபையினரின் காலத்தில் பதிவுகள் தோம்புப் பதிவுகளாக மாற்றம் பெற்றன. அவைகள் ஓலையில் எழுத்தாணி கொண்டு எழுதப்பட்டன. தேவாலயங்களில் விவாக, பிறப்பு, இறப்பு பதிவுகள் வைக்கப்பட்டு இருந்தன. இம்முறை ஆங்கிலேயர் காலத்தில் கி.பி 1822 வரை செயற்பட்டது.

மெதடிஸ்த திருச்சபையினரால் விந்தனை, கோட்டைமுனை ஆகிய இடங்களில் தச்சுத் தொழிற் பாடசாலைகள் நிறுவப்பட்டன. கல்முனையில் கி.பி. 1891 இல் கைத்தொழில் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பிக்கும் போது முப்பத்திரண்டு மாணவர்கள் கல்வி பயின்றனர். விந்தனையில் வேடர் குலத்தினருக்கு கல்வி அறிவை ஏற்படுத்திய பெருமை மெதடிஸ்த திருச்சபையினரையே சாரும்.

தற்போது மட்டக்களப்புப் பிரதேசம் வாழைச்சேனை, செங்கலடி, கோட்டைமுனை, புளியந்தீவு, கல்லாறு, கல்முனை, திருக்கோவில், கோமாரி ஆகிய சேகரங்கள் (கொத்தணிகள்) என பல சபைகளை உள்ளடக்கி இயங்கு

கின்றன. வாகரை முதல் பொத்துவில் ஈறாக பல பாடசாலைகளை நிறுவி அறிவுப்புலத்தை மக்களுக்கு காட்டினர். மெதடிஸ்த சபையினர் நன்னோக்கத்தையும் அகத்தூய்மையையும் கொண்டிருந்தனர் என்பதை அவர்களால் நிறுவப்பட்ட பாடசாலைகளின் உயர் நிலையைக் கொண்டு அறிந்து கொள்ளலாம்.

**அங்கிலிக்கன் திருச்சபை**

அங்கிலிக்கன் திருச்சபை எட்டாம் கென்றி மன்னன் காலத்தில் தோற்றம் பெற்று, மேரி அரசியின் காலத்தில் தளர்வுற்று, எலிசபெத் அரசியின் காலத்தில் அமைப்பு ரீதியாகவும் இறையியல் கோட்பாட்டு ரீதியாகவும் வளர்ச்சியுற்றது.

எட்டாம் கென்றி கி.பி. 1535 இல் இறையியல் சம்பந்தமான கருத்துக்களை வெளியிட்டார். இதில் பொது நிலையாளர்கள், பணியாளர்கள் கடைப்பிடிக்க வேண்டிய அம்சக் கூறுகள் உள்ளடக்கப் பெற்றிருந்தன. கி.பி. 1535 இல் மைல்ங் கவல்டேல் என்பாரின் உதவியோடு விவிலியத்தை ஆங்கிலத்தில் வெளியிட்டார். கி.பி. 1542 இல் ஒரு புதிய இறை வழிபாடு நூல் உருவாக்கப் பெற்றது. இந்நூல்களின் மூலம் ஆரம்ப காலத்தில் அங்கிலிக்கன் சமயக் கொள்கைகள் பரப்பப்பட்டன (ஸ்ரீபன் சாமுவேல் வேதநாயகம், 1996, பக்.138). கி.பி. 1796 இல் பிரித்தானியர் இலங்கைக்கு வந்தனர். அவர்களின் வருகையோடு அங்கிலிக்கன் திருச்சபையும் இலங்கையில் காலடி வைத்தது. மட்டக்களப்பில் தற்போதைய அங்கிலிக்கன் தேவாலயம் இருக்கும் வளவு (கச்சேரிக்கு அண்மையில்) கி.பி 1850 ஆம் ஆண்டில் திரு. மொயிர் (Moir) என்பவரால் நன்கொடை செய்யப்பெற்றதாகவும் அது கி.பி 1889 இல் கட்டி முடிக்கப்பட்டு பிரதிட்டை செய்ததாகவும் கூறப்படுகின்றது. மேலும் கி.பி 1887 ஆம் ஆண்டில் வாழைச்சேனையின் கற்குடா வீதியில் உமையார் என்பவரிடமிருந்து பதினாறு ரூபா அறுபது சதத்திற்கு வளவு வாங்கி, பாடசாலை கட்டப்பெற்று நடைபெற்றது. கி.பி. 1887 இல் வாழைச்சேனையில் ஒரு தேவாலயமும் கட்டப்பெற்றது (வண. சந்திரன் கிறிஸ்பஸ், 2009). அப்பகுதியில் வாழும் வேடர்களுக்கு இத் திருச்சபை அரும்பெரும் பணிகளை ஆற்றியது.

மேலும் அதே ஆண்டில் நாவற்குடாவில் சீவல் தொழிலாளர்களினால் அங்கிலிக்கன் தேவாலயம் கட்டப்பெற்றது. இதனை வண.வேதக்கண ஐயர் ஆரம்பித்தார். இதனால் சைவ மக்களது சீற்றத்துக்குள்ளாகி வண.வேதக்கண ஐயர் ஒரு கையை இழந்ததாகக் கூறப்படுகிறது. இதன் விளைவாக நாவற்குடா சீவல் தொழிலாளர் சமூகத்துக் கிறிஸ்தவ மக்கள் வாழைச்சேனை, முறக்

கொட்டான்சேனை முதலிய இடங்களிற்கு இடம்மாறிச் சென்றதாக அறிய முடிகின்றது.

பேத்தாளையில் புனித யோவான் தேவாலயம் கட்டப்பட்டது. மட்டக் களப்பு, நாவற்குடா, முறக்கொட்டான்சேனை, மயிலம்பாவெளி, வாழைச் சேனை, வாகரை, களுதாவளை, கல்முனை, காரைதீவு, அம்பாறை முதலிய இடங்களில் அங்கிலிக்கன் திருச்சபை பாடசாலைகளை ஆரம்பித்து கல்விப் பணியை மேற்கொண்டது.

அங்கிலிக்கன் திருச்சபையினர் சொரூபங்களை வைத்து வழிபடுவ தில்லை. சிலுவையும் வேதாகமும் இவர்களது வழிபாட்டுக்குரியவைகளாகும். கத்தோலிக்க சமயத்தைப் போன்று கூடியளவு சடங்குகளை இவர்களது வழிபாட்டு முறையில் காணப்படவில்லை. அங்கிலிக்கன் திருச்சபைக் குருமார் திருமணம் செய்வதற்கு திருச்சபையால் தடை விதிக்கப்படவில்லை.

## கிறிஸ்தவர்களின் பண்பாடு

கிறிஸ்தவர்கள் தமது பண்பாட்டில் திருமணம் செய்கின்ற இருவரும் இரத்த உறவு, ஞான உறவு என்பவற்றினைச் சேர்ந்தவர்களாக இருக்கக்கூடாது என்பதில் இறுக்கமாக உள்ளனர். இரத்த உறவு என்பது உடன் பிறப்பு, தாய் தந்தை போன்ற உறவுகளைக் குறிக்கும். ஞான உறவு என்பது தொட்டப்பா, தொட்டம்மா உறவைக் குறிக்கும். ஞானஸ்நானம் வழங்குகின்ற பொழுது ஏற்படுகின்ற உறவால் தொட்டப்பா தொட்டம்மா என்னும் உறவுமுறை தோற்றம் பெறுகின்றது (இவர்கள் பெற்றோர் அல்லர்).

குருமார் தவிர்ந்த ஏனையோர் மரணித்த பின் பூத உடலை கத்தோலிக்கர் அல்லாத கிறிஸ்தவர்கள் தேவாலயத்திற்குள் கொண்டு செல்வதில்லை. ஒருவரை விபச்சாரத்தில் ஈடுபட்டார் என நிரூபித்தால் மட்டுமே திருமண முறிவை (விவாகரத்து) செய்யலாம் என்பதைத் திருச்சபை வலுவாகக் கடைப்பிடிக்கிறது.

கிறிஸ்தவர் வருகையால் மேலைத் தேய நாகரிகம் பின்பற்றப்பட்டு சுதேசிகள் தமது கலாசாரத்தின் சில அம்சங்களை இழக்க வேண்டிய நிலைக்கு உள்ளானார்கள். சுதேசிகளின் கலாசாரத்தில் உள்ள நடை உடை பாவனைகள் மாற்றமடைந்தன. பதினைந்தாம் நூற்றாண்டில் வந்த கிறிஸ்தவ சமயத்தினரால் சுதேச சமயங்களும் அதன் கலாசாரங்களும் அழிந்தன (ஸ்ரீபன், அ., 2008, பக்.17). மதம் மாறிய சுதேசிகளைக் கல்வியிலும் வாழ்வாதாரத்திலும் உயர் மட்டத்திற்குக் கொண்டு செல்லும் திட்டத்தினால் மட்டக்களப்புப் பிரதேசத்தின் சிறந்த பாரம்பரிய வழக்கங்கள் சில அருகின. குருமாரினது மதமாற்றச் செய்கைகளின் விளைவாக சாதிப்பாகுபாட்டின் தளைகள்

குறைக்கப்பட்டன. கலப்புத்திருமணங்கள் ஏற்பட்டன. பாடசாலைகளில் காலை உணவு வழங்கும் திட்டம் மெதடிஸ்த கிறிஸ்தவ சபையினால் ஆரம்பிக்கப்பட்டது.

நீண்ட தூர கால் நடைப்பிரயாணம் குறைக்கப்பட்டு மோட்டார் வள்ளங்களில் நீர்ப்பிரயாணம் மேற்கொள்ளப்பட்டது. இலங்கையில் கி.பி. 1888 இல் பிரித்தானியர் ஆரம்பித்த முதலாவது கடற்பிரயாண சேவைக் கப்பல்கள் திருகோணமலைத் துறைமுகத்திலிருந்து புறப்பட்டு கற்குடா, மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாந்தோட்டை, காலி ஆகிய துறைமுகங்களுக்கூடாக கொழும்பைச் சென்றடைந்தன. மட்டக்களப்பு - கொழும்பு பிரயாணமானது ஆறு நாட்களைக் கொண்டிருந்தது.

பயணிகளை ஏற்றிச்சென்ற ''லேடி கோர்டன்'' என்னும் கப்பல் கி.பி. 1897 இல் மட்டக்களப்பு கடற்பாறை ஒன்றில் மோதி நொறுங்குண்டது. கி.பி. 1926ஆம் ஆண்டு புத்தாண்டு தினத்தன்று நடு நிசி வேளையில் ''லேடி மக்கலன்'' என்னும் கப்பல் கற்குடா கடலில் அமிழ்ந்தது (மத்திய தீபம், 1989, பக்.149).

கடற்கப்பற் சேவையினால் போக்குவரத்து, வியாபாரம் என்பன சிறந்து விளங்கின. மட்டக்களப்பில் முதலாவது அச்சுக் கூடம் புளியந்தீவில் கி.பி. 1878 இல் நிறுவப்பட்டது, காணித்தோம்புடன் மாடு ஆடு என்பவற்றிற்கும் தோம்புமுறை நடைமுறைப்படுத்தப்பட்டது. விவாகப்பதிவு செய்யும் முறை கொண்டுவரப்பட்டது. திருமணங்கள் சட்டரீதியாக்கப்பட்டன. விஞ்ஞான முறையிலான வைத்திய வசதிகள் வேரூன்றின. கல்வியறிவில் மக்கள் நாட்டம் கொள்ள முனைந்தனர். மேசன் தொழில், தச்சுத் தொழில் போன்ற சுதேச தொழில்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. அனாதைச் சிறுவர்களுக்கான வதிவிடப் பாடசாலைகள் தோற்றுவிக்கப்பட்டன.

நீதி நிர்வாகத்தில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டது. கிராம நீதிமன்றங்கள் ஆரம்பிக்கப்பட்டன. மட்டக்களப்பில் பொதுமயானம் கி.பி. 1880 இலும் பொது நூல் நிலையம் கி.பி. 1855 இலும் திருக்கோயில் வாடி வீடு கி.பி. 1833 இலும் மட்டக்களப்பு-பதுளை தபாற்சேவை கி.பி. 1876 இலும் ஆரம்பிக்கப்பட்டன. நீர்ப்பாசனம், விவசாயம், சுகாதாரம், போக்குவரத்துச் சீர்திருத்தம் முதலிய நன்மைகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இவர்களது வருகையால் சமூகத்தில் உயர் மேட்டுக்குடியை உருவாக்கும் கல்வி முறை அறிமுகம் செய்யப்பட்டது. அறிவுப் புலமானது மேற்கத்திய கல்வி முறையான பாடசாலை அமைப்பு முறையால் புதிய அறிவு பெற்ற வகுப்பினரை உருவாக்கியது. பிரிட்டிசாரின் வருகையினால் சகல கிறிஸ்தவ

மதத்தலைவர்களும் 1806ஆம் ஆண்டு முதலாக மட்டக்களப்பிலும் திருகோண மலையிலும் ஒன்றாகப் பணிபுரிந்தனர்.

மட்டக்களப்பில் பெண்களுக்கும், நாகரீகத்திலும் கல்வி அறிவிலும் பின்னடைவு காணப்பட்ட வேடர்களுக்கும், கிறிஸ்தவர்கள் செய்த சேவை மகத்தானது. பெண்களுக்கு எனத் தனியான பாடசாலைகளை நிறுவியதுடன் அவர்களுக்கான பிரத்தியேகமான வைத்தியசாலைகளையும் நடைமுறைப் படுத்தினர். இலக்கியம், நாடகம், ஆராய்ச்சி முதலிய துறைகளில் உள்ள திறனாய்வுகளுக்குத் தகுந்த பயிற்சிகளை நல்கினர். அத்துடன் தத்தம் துறை களில் புலமை பெறுவதற்கும் ஊக்குவிப்பு வழங்கினர்.

ஒரு சமயத்தினர் கலாசார விழுமியங்களுடனும் முற்போக்கான சிந்தனை களுடனும் விளங்கினார்களெனில் அங்கு சமயக்கொள்கை ஆழமாக வேரூன்றிவிடும் எனலாம். மத வளர்ச்சியுடன் மக்களது வாழ்க்கைத் தரமும் உயர்த்தப்பட்டது. அதற்காக மதச்சார்புடையவர்கள் புரிந்த தியாகங்களும் பூரண பயன் கொடுத்துள்ளன.

கிறிஸ்தவ சமய வாதிகள் சைவ சமயத்தினரைத் தம்பால் இழுப்பதற்கு வறிய மக்களுக்கு நன்கொடைகளாக நிதி வழங்கல், நிலம் வீடு சலுகைகள் வழங்கல், சமூக அந்தஸ்தை நல்கல், வேலை வாய்ப்பு வழங்கல் என்பன வற்றைக் கைக்கொண்டனர். சைவ சமயத்தினரிடம் காணப்பெற்ற சாதி வேறு பாடு, வறுமை முதலியனவற்றால் தமது கிறிஸ்தவ சமயத்திற்கு அவர்களை மாற்றுவது இலகுவாயிற்று. மட்டக்களப்புப் பிரதேசத்தில் வாழும் சைவ, கிறிஸ்தவ சமய மக்களிடையே நிலவும் ஒற்றுமையும் நாட்டுப்பற்றும் சிறப்புடையது. கிறிஸ்தவர்கள் சமயக்கொள்கையினால் வேறுபட்டோர் ஆயினும் மொழியுணர்வினால் ஒன்றுபட்டுவாழும் தமிழர்களின் பண்பாடு பெருமையானது ஆகும்.

# 3
# சமூகப் பண்பாடுகள்

பண்பாடு உலகளாவியது, பரந்துபட்டது. மனித நடவடிக்கைகளின் விளைவே பண்பாடாகும். மனிதன் எங்குவாழ்கின்றானோ அங்கெல்லாம் பண்பாடு காணப்படுகின்றது. அது தேசிய ரீதியில் பொதுவானதாகவும் பிரதேச ரீதியில் இடத்துக்கு இடம் சில பிரத்தியேகமானதாகவும் காணப்படுகிறது. அது சமூகத்தில் பிரிக்கமுடியாத ஓர் அம்சமாகும்.

**சமூகதத்துவ சிந்தனையாளர்கள்**

பண்பாடு என்பது ''அறிவு, நம்பிக்கை, கலை, நெறிமுறைகள், சட்டம், பழக்க வழக்கங்கள் இவையெல்லாம் சேர்ந்தவை'' என்றும் ''மறைமுகமாகவோ அல்லது நேரடியாகவோ மனிததேவையைப் பூர்த்திசெய்யும் பொருட்கள், சாதனங்கள், பழக்கவழக்கங்கள் இவைகளின் ஒன்று சேர்க்கையே'' என்றும் அறிவு, மனப்பான்மை, பொருட்கள் என்பவற்றை உள்ளடக்கியதெனவும் இவையெல்லாம் தலைமுறை தலைமுறையாகப் பகிர்ந்து கொள்ளப்பட்டு வருவது என்றும் சமூக தத்துவ சிந்தனையாளர் பல்வேறுபட்ட கருத்துக்களைக் கூறியுள்ளார்கள். இவர்களின் இக்கூற்றுகளின்படி பண்பாடு என்பது மறைமுக மாகவோ அல்லது நேரடியாகவோ மனிததேவையைப் பூர்த்தி செய்கின்ற அறிவு, கலைகள், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், பாரம்பரியங்கள், நெறி முறைகள், மாந்தர் வழிகள், சட்டங்கள், தீர்ப்புக்கள், பொருட்கள் போன்ற சந்ததி வழியே பேணப்பட்டு வருகின்ற அனைத்தினதும் ஒரு தொகுதி எனலாம். இப்பண்பாட்டுடன் சமூக அமைப்பும், பண்பாட்டு பயன் மதிப்புக் களும், சமய ஏற்புத் தரங்களும் பின்னிப் பிணைந்துள்ளன. அவை ஒன்றுடன் ஒன்று இணைந்தே இருக்கின்றன. இப்பண்பாடுகள் ஒவ்வொரு நாட்டுக் கிடையிலும், ஒவ்வொரு நாட்டில் இடவேறுபாடுகளுக்கமையவும் மாறுபடும். இப்பண்பாடுகளை ஒப்புநோக்கி எது உயர்வானது எதுதாழ்வானது என்று சுட்டி அளவிடுதல் கடினமானது. பொ. இரகுபதி. (2008, பக்.11) அவர்கள் உணவு, சுகாதாரம், கல்வி, சமூகசமத்துவம், பால்சமத்துவம், சுற்றுச் சூழலைச்

சிதைக்காத இயைவானவாழ்வு, வாழ்க்கை முறையைத் தெரிந்தெடுக்கும் சுதந்திரம் போன்றவைகள் ஒரு சமூகப்பண்பாடு மேன்மையுடையதா? மேன்மையற்றதா? என்பதைத் தீர்மானிக்கும் அளவு கோல்களாகியுள்ளன எனக்குறிப்பிடுகின்றார். ஆனால் ஒவ்வொரு சமூகமும் தத்தமது சூழலுக்கும், தாம் கொண்ட வளத்திற்கும் அமையவே தமது பண்பாட்டை பரிணாம வளர்ச்சியடையச் செய்து தம் சந்ததிக்கு முதுசொமாகக் கொடுக்கின்றன. அனைத்துச் சமூகத்திற்கும் கிடைக்கின்ற சூழலும், வளங்களும் சமமாக இருக்கின்ற போதே மேற் குறிப்பிட்ட சுட்டிகளைக் கொண்டு சமூகங்களின் பண்பாடுகள் மேன்மையுடையதா? மேன்மையற்றதா? எனத் தீர்மானிக்கலாம்.

தமிழர்களிடையே காணப்பட்ட பழக்கவழக்கங்கள் சில பொதுவாகவும் சில பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபட்டும் காணப்படுகின்றன. மட்டக் களப்புப் பிரதேசத் தமிழர்களிடம் காணப்படும் பண்பாடுகள் பண்டைத் தமிழர்களிடம் காணப்பட்ட பண்பாடுகளை அடியொற்றியதாகக் காணப் படுகின்றன. மகாபாரதம் காட்டும் பண்புகள், கண்ணகி வழக்குரையிற் காணப்படும் செய்திகள் போன்றதான இப்பிதேசத்தில் கைக்கொள்ளப்பட்டு வருகின்ற பல நூல்களிற் பொதிந்துள்ளவைகள் இதனை வலியுறுத்தும்.

மட்டக்களப்புத் தமிழரிடம் பண்டைத் தமிழரிடையே கைக் கொள்ளப் பட்ட பல சமூகப் பண்பாடுகள் காணப்படுகின்றன. அவற்றில் சில பொதுவாகவும் சில தனித்தன்மையாகவும் விளங்குகின்றன. மட்டக்களப்புத் தமிழரின் சமூக வழமைகள், சடங்குகள், ஜீவனோபாயத் தொழில்கள், நடைமுறைகள் முதலியவற்றில் தனித்துவமான பண்பாடு அமைந்திருப்பதை அவதானிக்கமுடிகிறது. அவைகள் பற்றி இவ்வியலில் ஆராயப்பட்டுள்ளன.

முற்காலத்தில் அரசர்களால் வகுத்தளிக்கப்பட்டசெய்தியைக் கூறும் குலவிருதுக் கல்வெட்டில் சொல்லியபடி சீர் வரிசைகளை முறையாகக் கடைப்பிடிப்பவராய் மட்டக்களப்புத் தமிழர் வாழ்ந்து வருகின்றனர். தனித் தனியாக ஒவ்வொரு குலத்தினருக்கும் குலவிருதுகள் வழங்கப்பட்டுள்ளன. குல குடி விருதுப்படி கூரை முடிகள் வைக்கப்பட்டு வாழ்வியற் கருமங்களை நிறைவேற்றுகின்றனர். கூரைமுடிவைக்கப் பெறாது நடக்கும் சடங்குக்குரிய வரை பொதுமக்கள் மதிப்பதில்லை. தனிமனித பொதுநலசேவையாக தண்ணீர்ப் பந்தல் வைத்தல், தயிர் கடைந்துவைத்தல், சுமைதாங்கி நிறுவுதல், மிருகங்களின் உடற் தினவைப் போக்க உரஞ்சான் கட்டை (ஆவுரைஞ்சு கட்டை) நிறுவுதல் முதலியன கருதப்பட்டன. மூத்தோருக்கும் மரியாதைக் குரியோருக்கும் மரியாதை செய்பவராய் விளங்கினர்.

யாழ்ப்பாணத்தில் தேசவழமைச் சட்டம் இருந்ததைப் போல மட்டக் களப்பில் சமூகவழமைச் சட்டம் இருந்தது. நீதிமன்றங்களில் வழக்குகளைப்

பாரம்பரியமான வழமைப் பிரகார அடிப்படையில் விசாரணை செய்து தீர்ப்புக்களை வழங்கினார்கள். இப்பாரம்பரியமான வழமையே எழுதப்படாத சமூக வழமைச் சட்டமாக நிலவியது. இச்சமூக வழமைச் சட்டம் கி.பி. 1876 ஆம் ஆண்டு வரை நடைமுறையில் இருந்தது. பின்னர் உரோமன் டச்சுச் சட்டம் நடைமுறைக்கு வந்தது. எனினும் சொத்து உரிமை வழமைகளும் திருமண சம்பந்த விடயங்களும் உரோமன் டச்சுச் சட்டத்தில் உள்வாங்கப்பட்டன.

குடிமனைகளின் அமைப்புமுறை, குடிமனை அமைக்கும் போதுள்ள கடவுள் வழிபாட்டுமுறை, குடிமனை புகும் போது நடைபெறும் நடைமுறை கள் என்பன ஆராயப்பட்டுள்ளன. நிலத்தைத் தோண்டிப் பூவல்களையும் பூவல்களில் மரத்தைக் குடைந்து நட்டும் நீரைப் பெற்றனர். மரத்தைக் குடைந்து நடப்பெற்றதைக் கொட்டுக் கிணறு என அழைத்தனர்

மட்டக்களப்புப் பிரதேசத்தில் சமையற் பாத்திரங்களாக மட்பாண்டங்களே பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டன. சோற்றுக்குத் தவிடு நீக்காத புழுங்கல் அரிசியைப் பயன்படுத்தினர். பொரியல், கூட்டுக்கறி, பாலாணம், சுண்டல், கடையல் என்பன கறிவகைகளாகச் சமைக்கப்பட்டன. சைவக் குருமார் தவிர்ந்த ஏனையோர் மச்சம் மாமிசம் புசிப்பவர்களாக இருந்தனர். கரையல் உணவுக்குத் தயிர் விசேடமாகக் கொள்ளப்பட்டது. விசேட உணவுகளாக கஞ்சி, பாற்சோறு, பிட்டு, அப்பம், கூழ், களி, உரொட்டி, பலகாரவகை, முறுக்குவகை, அவல், சீனிமா, தானியவகை, கிழங்குவகை உட்கொள்ளப் பட்டன. குடிபானங்களாக இளநீர், நுங்கு, பால், தயிர் ஆகியன பயன்பட்டன. விருந்தினருக்கு முகமலர்ச்சியுடன் வயிறாற உணவு கொடுத்தும் அவர்கள் செல்லும்போது அரிசி, தயிர்ப் பானை, நெய் முதலியவற்றைக் கொடுத்தும் வழி அனுப்பும் பண்பாட்டுடன் வாழ்ந்தனர். விவசாயம், மந்தைவளர்ப்பு, மீன் பிடித்தல் ஆகிய தொழில்களைச் செய்ததுடன் மேசன் தொழில், தச்சுத் தொழில் போன்ற தொழில்களையும் தத் தமது குலத்தொழில்களையும் செய்தனர்.

பிரயாணத்திற்கென மாட்டுவண்டிகளும் குதிரைவண்டிகளும் அக் காலத்தில் பயன்படுத்தப்பட்டன. அரிதாக யானைமீது செல்லுதலும் வழக்கில் இருந்தது. நீர்ப் பிரயாணங்களுக்குத் தோணி, வள்ளம் என்பனவற்றைப் பயன்படுத்தினர். நீண்ட தூர நீர்ப் பிரயாணங்களுக்குப் பாய்மரத்தோணி, பாய்மரவள்ளம், உரு என்பன பாவனையில் இருந்தன. உரு மூலமாக உள்ளூர்த் துறைகளிலிருந்து இந்தியாவுக்கு ஏற்றிறக்குமதி செய்யப்பட்டன. கி.பி.1888 இல் லேடிகோர்டன் என்னும் கப்பற் சேவை மட்டக்களப்பில் இருந்து கொழும்பு வரை சென்றுவர ஆரம்பிக்கப்பட்டது.

அக்காலத்தில் மட்டக்களப்புப் பிரதேசத்தில் கல்விமுறையானது குடும்ப மட்டத்தில் நிலவிய கல்விமுறை, முறைசாராக் கல்விமுறை, செவியேறல் கல்விமுறை என்றரீதியில் நிலவியது. இங்குபெரும்பாலும் ஆண்கள் மட்டுமே கல்விகற்கும் நடைமுறை இருந்தது.

## i. சமூக வழமைகள்

**சீர்வரிசைகள்**

மட்டக்களப்புத் தமிழர் சீர்வரிசைகளை முறையாகக் கடைப்பிடிக்கும் பண்புடையவர்களாக வாழ்கின்றனர். இச்சீர்வரிசைகள் முற்காலத்தில் அரசர் களினால் வகுத்தளிக்கப்பட்டதாகக் கூறுகின்ற குலவிருதுக் கல்வெட்டு இதனை பத்தொன்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அவை

01. கும்பங்கள்
02. தென்னம்பாளை
03. பாவாடைவிரிப்பு
04. மேற்கட்டி
05. தாரை, தவில், குழல், வீணை
06. பந்தல்
07. நிறைகுடம்
08. பஞ்ச, கஞ்ச, மலர்தூவல்
09. பாவாணர் பாடல்
10. பலதீபகிரகணம் எடுத்தல்
11. கூரை முடி
12. நவதானியம் கொட்டல்
13. கொய்தகப்பட்டு
14. பதினெட்டு வரிசை கொளல்
15. சிறைக்குடிகளின் தொண்டு
16. வெண்குடை
17. புகழ்ந்துபாடல்
18. தக்ககொடையளித்தல்
19. முகமன் கூறுதல் என்பதாகும்.

மட்டக்களப்புப் பிரதேசத் தமிழர் சாமர்த்தியச் சடங்கு திருமணச்சடங்கு மரணச்சடங்கு நடைபெறும் காலத்து கூரைமுடிவைக்கும் பண்பாட்டுப் பழக்கத்தை உடையவர்களாக இருந்துவந்துள்ளனர். மேற்படி சடங்குகள் நடைபெறும் காலத்திலும் வீட்டின் நுழைவாயில் (கதவுக்குநேராக) மேற் கூரையில் நிறைகுடங்களைத் தமது குல குடி விருதுப்படி கூரைமுடி, கும்பங் களை வைப்பர். இக் கும்பங்களைவைக்கும் போது மரணச் சடங்குக்கு வைக்கும் கும்பங்களில் மூன்றுமாவிலை மட்டும் இடம்பெறவேண்டும் என்பது இவர்களது நடைமுறைவிதியாகும். சீர் வரிசைப்படி கும்பங்களை வைத்து சேலைகளைக் கொய்து கும்பங்களுக்கு மேலாய் நுழைவாயிலின் இருபுறமும் சேலைகளின் இருமுனைகளும் (தொங்கல்களும்) நிலத்தை நோக்குமாறுபோடுவர். இவ்வாறு சேலைபோடுதல் ''சீராடைசிறப்பாடை'' எனக் கூறப்படும்.

இவ்வாறு போடப்பட்ட சேலைகளின் இரு தொங்கல்களுக்கும் முன்பாக இரு பூரண கும்பங்களும் இரு சுடர்க் குத்து விளக்குகளும் வைப்பது வழக்காறாகும். இரு பூரண கும்பங்களும் சீர்வரிசைக் கும்பங்களின் எண்ணிக் கைக்குள் அடங்காது. இவற்றை முறையே மங்களாதேவி, அமங்களாதேவிக் கும்பங்களெனக் கூறப்படுகின்றன. கூரைமுடிகளின் எண்ணிக்கை தத்தம் குலக்குடியினருக்குக் குறித்துரைக்கப்பட்டபடியே இருக்கவேண்டும் என்பது வலுவாகக் கடைப்பிடிக்கப்படும் அம்சமாகும்.

குலகுடி விருதுப்படி கூரைமுடிகள் வைக்கப்பெறாதுநடக்கும் சடங்கு களுக்குரியவரை பொதுமக்கள் மதிக்கமாட்டார்கள் (வி.சீ. கந்தையா, 1964, ப.64). கூரைமுடிகள் உதாரணமாக முக்குவகுலத்தைச் சேர்ந்த குடிகளில் காலிங்கா குடியினருக்கு 13 கும்பங்களும் படையாட்சி குடியினருக்கு 09 கும்பங்களும் பணிக்கனார் குடியினருக்கு 09 கும்பங்களும் உலகிப்போடி குடியினருக்கு 11 கும்பங்களும் ஏனைய குடியினருக்கு 03 கும்பங்களும் வேளாளர் குலத்தினருக்கு 07 கும்பங்களும் சீர்பாதகுலத்தினருக்கு 21 கும்பங்களும் கரையார் குலத்தினருக்கு 19 கும்பங்களும் வகுக்கப்பட்டுள்ளன.

## குலவிருதுகள்

பண்பாட்டுக் கருமங்களில் குலவிருது முக்கிய இடத்தைப் பெற்றிருந்தன. தனித்தனியாக ஒவ்வொரு சாதியினருக்கும் குலவிருது வழங்கப்பட்டுள்ளது. இதனைக் கட்டளைப்படுத்தியது பாண்டியமன்னன் எனக் குலவிருதுக் கல்வெட்டுக் கூறுகின்றது. கீழ்வரும் அட்டவணை குலவிருதைக் காட்டுகின்றது.

| குலம் | விருது | குலம் | விருது |
|---|---|---|---|
| கரையார் | தோணி | திமிலர் | பால்முட்டி |
| துலுக்கர் | தொப்பி | சேணியர் | நூலச்சு |
| காராளர் | ஏர் | அமலர்(சீர்பாதர்) | தேர்க்கொடி |
| வேடுவர் | வில் அம்பு | அம்பட்டர் | கத்தரிக்கோல் |
| முக்குகர் | எழுத்தாணி | விமலர் | மத்து |
| கோயிலார் | தாமரைப்பூ | வேதியர் | பூணூல் |
| பண்டாரப்பிள்ளை | பிரம்பு | வண்ணார் | கல் |
| வாணிபர் | செக்கு | குயவர் | கும்பகுடம் |
| கடையர் | கூடை | தட்டார் | குறடு |
| அரசர் | செங்கோல் | சாணார் | கத்தி |
| வள்ளுவர் | மேளம் | செட்டி | தராசு |

இவ்விருதுகளைத் தத்தம் பசு, எருமை மாடுகளுக்குக் குறிகளாகச் சுடப்பட்டன. இக்குறிகள் கொடி பதாகைகளிலும் இடம்பெற்றதாக அறிய முடிகிறது.

## தனிமனித பொதுநல சேவை

வழிநடையில் வருவோருக்கான தாகசாந்திக்காக தெருவாசல்களிலும் நாற்சந்திகளிலும் பொது இடங்களிலும் தண்ணீர்க்குடம் வைத்தலும், தயிர்கடைந்து வைத்தலும், சுமை தூக்கிச் செல்வோரின் நலன் கருதி சுமை தாங்கிகளை நிறுவுதலும், மிருகங்கள் உடலின் தினவைப் போக்குவதற்காக பரந்தவெளிகளில் பெரும் மரக்கட்டைகளை (உரஞ்சான்கட்டை) நடுதலும் பொதுநலச் சேவையாக அக்காலத்தில் கருதப்பட்டு வந்துள்ளன.

விஷவைத்தியர்கள் எந்தவொரு கூலியோ அல்லது நன்கொடையோ பெறாது வைத்தியம் செய்துவந்துள்ளனர். இந்நடைமுறை தற்காலத்திலும் மட்டக்களப்பில் பேணப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## சால்வை மூலம் மரியாதை

மட்டக்களப்புத் தமிழர் மற்றவர்களுக்கு மரியாதைகொடுக்கும் பண்புடையவர்களாக வாழ்ந்து வந்துள்ளனர். ஆண்கள் வெளியிற் செல்லும் போது சால்வையை அகலம் சிறியதாக மடித்துத் தோளில் போட்டுக் கொள்வர். செல்லும் வழியில் மதிப்பார்ந்த ஒருவரைக் கண்டால் தமதுதோளில் உள்ள சால்வையை சற்று உயரத் தூக்கித் தலையைத் தாழ்த்திச் செல்லுதல் மரியாதை செலுத்தும் பண்பாடாகக் கருதப்பட்டது. உயர்வாகமதிக்கும் ஒருவரைக் கண்டால் தாழ்ந்தநிலையில் உள்ளவர் தோளில் உள்ள சால்வையைக் கையின் நடுப்பாகத்தில் வைத்துப் பணிவு காட்டிச் செல்லும் பண்பாடு இருந்து வந்துள்ளது. கோப உணர்ச்சியைக் காட்டுவதற்காகத் தனது தோளில் இருந்த சால்வையை எடுத்து உதறி மீண்டும் தோளில் போட்டுக் கொள்வது வழக்காக இருந்து வந்துள்ளது. வழியிற் காண்பவர் வேண்டத்தகாதவராக இருப்பின் சால்வை மரியாதை கொடுபடமாட்டாது.

## சமூகவழமைச் சட்டம்

இலங்கைத் தமிழரின் பாரம்பரிய முறையான சட்டநெறிகளுள் முக்குவசமூக வழமையும் ஒன்றாகும். இச்சமூக வழமைச் சட்டம் மட்டக்களப்பிலும் புத்தளத்திலும் ஒல்லாந்தர் ஆட்சியில் ஆட்சியாளரின் அங்கீகாரத்தைப் பெற்றிருந்தது. மட்டக்களப்பில் இச்சட்டம் முக்குவர் சட்டம் என வழங்கப் பட்டாலும் மட்டக்களப்புத் தமிழர் அனைவருக்கும் உரியதாக இருந்தது.

ஒல்லாந்தர் ஆட்சியில் நீதிமன்றங்களிலே ஆதனங்கள் சம்பந்தமான வழக்கு களைப் பாரம்பரியமான வழமைப் பிரகார அடிப்படையில் விசாரணை செய்து தீர்ப்புக்களை வழங்கினார்கள். அந்த முறை ஒல்லாந்த ஆட்சியிலும் 1876 ஆம் ஆண்டு வரையிலான பிரித்தானியர் ஆட்சியிலும் நடைமுறைப் படுத்தப்பட்டது. ஆனால் யாழ்ப்பாணத்துத் தேசவழமைச் சட்டத்தைப் போல அதனை ஆட்சியாளரினால் கோவைப்படுத்திச் சட்டமாகப் பிரகடனப் படுத்தவில்லை. பின்னர் பிரித்தானிய நீதிபதிகளினால் அவற்றைப் புரிந்து கொள்வதில் ஏற்பட்ட சிரமங்களினால் அந்தவழமைகள் வழக்கொழிந்து போயின. ஆனால் சொத்து உரிமை வழமைகளும் திருமண சம்பந்த விடயங் களும் உரோமன் டச்சுச் சட்டத்தில் உள்வாங்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன.

முக்குவர் சட்டம் என்னும் நூலை C.Britto என்னும் வழக்கறிஞரால் 1876 இல் எழுதி The Mukkuva Law: On the Rules of Succession among the Mukkuvars of Ceylon என்னும் தலைப்பில் வெளியிடப்பெற்றது. இந்த ஆங்கில நூலின் தமிழாக்கத்தினை சி. பத்மநாதன் 2002 இல் வெளியிட்டுள் ளார். அதில் ஏழு அத்தியாயங்களில் முறையே சொத்துடமைகளின் வகை, கணவனும் மனைவியும் வாழுங் காலத்திற் சொத்துக்களைக் கையாளும் விதங்கள், கணவனும் மனைவியும் மரணித்தபின் சொத்துக்களைப் பங்கீடு செய்யும் விதங்கள், தாய் வழி முதுசொமான ஆதனங்களின் உரிமை வகை, கணவன் மனைவி ஆகியோரில் ஒருவர் இறந்திருக்குங் காலத்திற் பின்பற்றப் படும் விதிகள், முக்குவர் சட்டம்பற்றிப் பொதுவாக நிலவும் சிலகருத்துகள், முக்குவர் சட்டத்தின் உற்பத்தி என அமைந்துள்ளன.

முக்குவர் வழமைகள் யாவும் முதுசொம், தேட்டம் என்னும் இரண்டு வகைகளாகக் கொள்ளப்படுகின்றன. முதுசொம் என்பது முன்னோர் வழியாகக் கிடைக்கப்பெற்ற சொத்து என்னும் பொருளைத் தருகிறது. முதுசொம் என்னும் சொல் மட்டக்களப்பில் முதிசம் எனமருவிற்று. தேட்டம் என்பது ஒருவர் தனது காலத்தில் தேடிச் சம்பாதித்த பொருள்கள், சொத்துக்கள் எல்லாம் தேடிய தேட்டம் என்னும் கருத்தைத் தருகிறது. அதாவது உடமை, கொள்வனவு, ஆட்சி, நன்கொடை, சீதனம் முதலிய உரிமை என்பவற்றுள் ஒன்றன் மூலமாகப்பெறும் சொத்து தேடியதேட்டமாகக் கொள்ளப்பட்டது.

மட்டக்களப்புத் தமிழர்களின் வழமைகளான முக்குவர் சட்டத்திற்கு மூலமாக அமைந்த சிலவற்றை மேல்வருமாறு கூறலாம்

1. தாய் வழியாக வருபவை. தந்தை வழியாக எதுவும் கிடைப்பதில்லை.
2. சந்தான உரிமைகளான பட்டம், பதவி போன்றவை தாய் வழியானவை.

3. முதிசமான நிலங்கள் கணவன் மனைவி சேர்க்கையினாற் பந்தப்படுவதில்லை.
4. பெண்களின் சார்பில் ஆண்களே அவற்றின் முகாமையாளராய் இருப்பர்.
5. தங்கள் தாயைக் கவனிப்பது முகாமையாளராய் இருப்பவரது கடமையாகும்.
6. முகாமையாளராய் இருப்பது மூத்தசகோதரன்.
7. பெண்கள் நிலத்தை உடைமைகொள்ளமுடியாது.
8. அசைவுள்ள பெறுமதியான சொத்துகள் ஆண்களுக்கு உரியவையாகும்.
9. ஒரே குடியைச் சேர்ந்தவர்கள் தமக்குள் திருமணஞ் செய்வது விலக்கப்பட்டுள்ளது.

**மருமக்கட் தாய உரிமை**

மட்டக்களப்புப் பிரதேசத் தமிழரின் வழமைகளும் சொத்துரிமைகளும் மருமக்கள் தாயத்தினை மூலமாகக் கொண்டவை. மருமக்கட் தாயமுறை வழமைகள் திருகோணமலைப் பிரதேசத்தில் தம்பலகாமம், கட்டுக்குளம், கொட்டியாரம் ஆகிய இடங்களிலும் நீண்டகாலமாக வழக்கிலிருந்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மட்டக்களப்புப் பிரதேசத்தில் ஆதனங்கள் பெண்வழி முதுசொம்மாகவே இருந்துள்ளன. பெற்றார் பொதுவாக பெண் மக்களிடம் கூடுதலான பிரியத்தை வைத்திருந்தனர். மகளுக்குச் சீதனங் கொடுத்து திருமணம் புரிவித்து அவர்களைத் தம்மோடு வைத்துக்கொண்டனர். பெற்றோர் தமது வயோதிபக் காலத்தில் பெண்மக்களுடனேயே வாழ்ந்தனர். பெண் மக்களே பெற்றோரைப் பேணிக் காக்கும் பொறுப்பினைப் பெற்றிருந்தனர். மகளுடைய பிள்ளைகளுக்கே முதுசொம் சேர்வதாக இருந்தது. இதனை மருமக்கட் தாயம் என்பர் (க. ஞானரெத்தினம், க.தா. செல்வராச கோபால், 2003, ப.14). சந்தான வழி உரிமைகள், சொத்துடைமைகள் என்பன ஒருவனுக்குப் பின் அவனுடைய மக்களுக்கன்றி அவனுடைய சகோதரியின் மக்களுக்கே உரியதாக இருந்தன. மருமக்கள் வழியான உரிமை முறையும் சமூக வழமைகளும் முக்குவருக்கு மட்டுமன்றி மட்டக்களப்புத் தமிழர் சமூகத்தவருக்கும் பொதுவானவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

மாகனுடைய ஆட்சிக் காலத்தில் மட்டக்களப்பிலே மலையாள தேசத்து முக்குவர் உயர் பதவிகளையும், நிலமானியங்களையும் சமுதாயக் கட்டமைப்பு, சமுதாய தேசவழமைகளில் அவர்கள் செல்வாக்கு மேலோங்கியவர்களாகவே வாழ்ந்துள்ளனர். அதன் காரணமாக மருமக்கட் தாயமுறையானது

மட்டக்களப்பில் தேசத்து வழமையாக அழுத்தம் பெற்றது. மட்டக்களப்புத் தமிழரின் வழமைகள், சொத்துரிமைகள் மருமக்கட் தாயத்தினை மூலமாகக் கொண்டவை. பொதுவாக ஆண்களின் திருமண வயது இருபது ஆகவும் பெண்களின் வயது பதினேழாகவும் கொள்ளப்பட்டன. பெண்களுடைய வயதை விடவும் சாமர்த்தியம் அடைதலே முக்கியமாகக் கொள்ளப்பட்டது.

## ii. உணவும் விருந்துபசாரமும்

**உணவு**

மட்டக்களப்புப் பிரதேசத்திலே சமையற் பாத்திரங்களாகப் பெரும்பாலும் மட்பாண்டங்களே பயன்படுத்தப்பட்டன. சமைத்த உணவுகளை ஆடவர்கள் வட்டியிலிட்டுச் சேவரக்கால் மீது வைத்து உண்பது வழக்கமாக இருந்துள்ளது.

மட்டக்களப்பு மக்களின் பிரதானமான உணவு நெல்லரிசிச் சோறாகும். சோற்றுக்குத் தவிடுநீக்காத கைக்குத்துப் புழுங்கலரிசியை உபயோகித்தனர். சீனெட்டி, வெள்ளைப் பெருமாள், கறுப்பன் ஆகிய நெல்லினத்தின் அரிசி யைப் பிரதானமாகக் கொண்டனர்.

பொரியல், கூட்டுக்கறி (கொழம்பு), பாலாணம், சுண்டல், கடையல் என்பன கறிவகைகளாக இருந்தன. மீன், இறைச்சி, மரக்கறி ஆகியனவற்றால் கறி சமைக்கப்பட்டன. நன்னீர் மீன் வகைகளை விரும்பி உண்டனர். வரால், கெளுத்தி, பனையான், சள்ளல், மணலை, வாளை, கிளக்கன், பொட்டியான், இறால், நண்டு என்பன அவற்றுட் சிலவாகும். மான், மரை, ஆடு, முயல், கோழி முதலியவற்றின் இறைச்சியைக் கறி சமைத்தனர்.

பாலும் தயிரும் முதன்மையான உணவுப்பண்டங்களாக இருந்தன. அவர்கள் சோற்றை உண்ணும் போது இறுதியாக சோற்றுடன் தயிர், வாழைப்பழம், தேன் ஆதியவற்றைச் சேர்த்துப் பிசைந்து உண்டனர். இதனைக் கரையல் உணவு என்பர். தயிர் இல்லாதவேளையில் தேங்காய்ப் பாலைத் தயிருக்குப் பதிலாகச் சேர்த்துக் கரைத்து உணடனர். மேலும் தமது உணவுப் பண்டங்களில் நெய்யை நன்றாகப் பயன்படுத்துவர். நெய்யினால் பொரித்தும், கறி முதலியவற்றில் நெய்யைச் சேர்த்துத் தயாரித்தும் உண்டனர். கறியின்றிச் சோற்றுடன் நெய்யைச் சேர்த்து உண்பதும் தலையில் நெய்யை எண்ணெயாகப் பூசுவதும் மட்டக்களப்புப் பிரதேசத்தில் வழக்காக இருந்து வந்துள்ளது.

அரிசியிலிருந்து கஞ்சி, பாற்சோறு, பிட்டு, அப்பம், களி, கூழ், உரொட்டி, பலகாரவகை, முறுக்குவகை, அவல், சீனிமா, என்பனவும் குரக்கன், சோளன்,

மண்டுப் பருப்பு என்பவற்றிலிருந்து பிட்டு, உரொட்டி, கூழ் முதலானவையும் அவித்த அல்லது வறுத்த தானியங்களும் அவித்த அவியாத கிழங்குகளும் உட்கொள்ளப்பட்டன.

சைவ உணவு சமைக்கும் வேளையில் மட்டக்களப்பு மண்ணில் முளைத் தெழுந்த வட்டுக்காய், பயற்றங்காய், பாகற்காய், நாடங்காய், சுரைக்காய், தும்பங்காய், பலாக்காய், கக்கரிக்காய், கத்தரிக்காய், வாழைக்காய் முதலிய காய்களையும் மரவள்ளி, காய்வள்ளி, வற்றாளை, கறணை முதலிய கிழங்கு வகைகளையும் பசுமுல்லை, முசுட்டை, காரை, கானாந்தி, கீரை, தகரை, திராய், பொன்னாங்காணி, குறிஞ்சா, பாற்சோற்றி, முருங்கை, தூதுவளை, ஒடுவடக்கி (மாம்பாஞ்சான்), மொசுமொசுக்கை முதலிய இலை வகை களையும் கொண்டு அறுசுவை பொருந்திய கறி சமைக்கும் பழக்கமுடை யோராக மட்டக்களப்புத் தமிழர் வாழ்ந்து வந்துள்ளனர்.

மட்டக்களப்பு உணவுமுறை பற்றி புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் மேல்வரும் பாடல் மூலமாகக் கூறுகிறார்.

*மோட்டெருமைவெண்தயிரும் முப்பழமும் கற்கண்டும்*
*போட்டினியசீனிதேன் பொருந்துசெந்நெல் வெண்சோற்றை*
*கூட்டியொன்றாயக் குழைத்ததனைக் குலக்குமரர் தமைக்கூவி*
*கூட்டுணுவார் அமிர்தமெனக் குறைவில்செல்வமவர்க் கம்மா*

(பெரியதம்பிப்பிள்ளை, ஏ., 1982, பக்.12).

அக்காலத்தவர்கள் பெரும்பாலும் மச்சம் மாமிசம் புசிப்பவர்களாக வாழ்ந் தனர். சைவக்குருமார் தவிர்ந்த ஏனையோர் தமது தேவையின் பொருட்டு மீன் பிடித்தும் வேட்டையாடியும் மச்சம் மாமிசம் புசிப்பவர்களாக வாழ்ந்தனர். மீனை வெயிலிற் காயவைத்தும், நெருப்பிற் காயவைத்தும், கருவாடாக்கிப் பதப்படுத்துவர். இக்கருவாட்டை உணத்திய (உலர்த்திய என்பதன் திரிபு) கருவாடு என்று சொல்வர். இதே போன்று இறைச்சியையும் புகையிட்டுப் பதனிடுவர். இதனையும் உணத்திய இறைச்சி என்று சொல்வர். ஒருவர் உண்பதையும் உடுப்பதையும் வைத்துக்கொண்டு அவரது ஆன்மீக வாழ் வினை எடைபோடுவது பொருத்தமுடையதன்று (முத்துராமன், எம்., 2006, பக்.118). இம்மக்கள் இவ்வாறான அசைவ உணவு உண்பவர்களாக இருந் தாலும் சில நாட்களில் அல்லது சில காலங்களில் அசைவ உணவைத் தவிர்த்து வழிபாடுகளில் ஈடுபட்டனர். உதாரணமாக இவர்கள் பொதுவாக வெள்ளிக் கிழமைகளில் அசைவ உணவைத் தவிர்த்துவந்துள்ளனர். உணவு உண்ட பின்பு தாம்பூலம் அருந்தும் பழக்கம் இருந்து வந்துள்ளது.

மட்டக்களப்புப் பிரதேசமக்கள் நெல், தினை, சோளன், குரக்கன், பயறு, இறுங்கு, மண்டுப்பருப்பு, நேரைப்பருப்பு, அல்லிப்பருப்பு முதலிய தானிய

வகைகளையும் மரவள்ளிக்கிழங்கு, வற்றாழைக்கிழங்கு, நேரைக்கிழங்கு, தாமரைக்கிழங்கு, அல்லக்கிழங்கு, கவலக்கிழங்கு, கட்டுவிளாக்கிழங்கு முதலிய கிழங்குவகைகளையும் உணவுக்குப் பயன்படுத்தினர். இவற்றில் அல்லக்கிழங்கு, கவலக்கிழங்கு, கட்டுவிளாக்கிழங்கு என்பன மேட்டு நிலங்களில் காணப்படும் கொடியினத்தை சார்ந்த தாவரங்களின் கிழங்கு களாகும் (வேலழகன், ஆ.மு.சி., 2008). குரக்கன், சோளம், மண்டுப்பருப்பு ஆகிய தானியங்களைச் சேகரித்து வைத்து மாரிகாலத்தில் உணவாகப் பயன்படுத்தி வந்தனர்.

சீலையிற் சோறு, கறி என்பவற்றை வைத்து வைத்திய ஒத்தண முடிச்சுப் போன்று கட்டிச்சென்று அதனை உண்டார்கள். அதனைக் கட்டுச்சோறு என அழைத்தனர். இக்கட்டுச்சோறு பல மணித்தியாலங்களுக்குப் பழுதடையாமல் இருக்கும் தன்மை வாய்ந்தது. இதனை நீண்ட தூரப் பயணங்களுக்கு உபயோகித்தனர். இதனைவிடக் குறைந்த சில மணித்தியாலங்களுக்குள் உண்ணுவதற்கு பெரும்பாலும் மூடியுடனான வெண்கலப் பாத்திரத்தைப் பயன்படுத்தினர். இப்பாத்திரத்துள் சோற்றைவைத்து அதன் மேல் கறிகளை வைக்கத் தட்டுக்களும் இருந்தன. தூக்கிச் செல்வதற்கான கைப்பிடியும் அதன்கண் அமைக்கப்பட்டிருக்கும்.

குடிபானங்களாக இளநீர், நுங்கு, பால் (பசுப்பால், எருமைப்பால்), தயிர், கள்ளு முதலியன பயன்படுத்தப்பட்டன.

### விருந்துபசாரம்

மட்டக்களப்புத் தமிழர் விருந்துபசாரம் செய்வதில் பலராலும் வியந்து கூறப்படும் இயல்பினைக் கொண்டவர்கள். இதனாற் போலும் ''வந்தாரை வாழ வைக்கும் மட்டக்களப்பு'' எனக் கூறப்பட்டுவருகிறது. பசியென வருவோருக்கு வெந்தது இருக்க வெறுந் தண்ணீர் கொடுக்கக்கூடாது என்பதை தாரக மந்திரமாகக் கொண்டவர் மட்டக்களப்புத் தமிழர். வீட்டிற்கு வருபவரை மலர்ந்தமுகத்தோடு வரவேற்று பாய் விரித்து அமரச்செய்து பால், தயிர், தாம்பூலம் வழங்கி உபசரிக்கும் பண்பு உடையவர்களாக விளங்கி வந்துள்ளனர். விருந்தினரை முகமலர்ச்சியுடன் தாம்பூலம் கொடுத்தபின்பே ஏனைய உபசாரம் செய்யப்பட்டு வந்துள்ளது.

கோடை காலப் பகல் வேளைகளில் தயிர் இல்லாதபோது இளநீர் கொடுத்துத் தாகம் தீர்க்கும் இயல்புடையவர்களாகக் காணப்பட்டனர். விருந்தினருக்கு உணவளித்து அவர்கள் உண்பதற்குப் பாவித்த வாழை யிலையை (எச்சிலை) அவர்களைத் தூக்கவிடாது அவர்களிடம் இருந்து பெற்று வெளியில் கொண்டுபோடும் பழக்கம் இருந்துவருகின்றது. இது

பற்றி ஈழத்துப் பூராடனாரின் (1992, பக்.12) பாடல் ஒன்று பின்வருமாறு தெரிவிக்கின்றது.

*வந்தார் தம்மைவரவேற் றனைத்துந்*
*தந்துபேணித் தம்மவ ராக*
*ஏற்றுவாழும் இயல்புடைமக்கள்*
*ஊற்றாங் களப்புஉள்ளதோர் மண்ணுள*
*மட்டுக் களப்பு எனும் மாண்புறு அந்நிலம்*

மட்டக்களப்பு நிலவளம் மிகுந்து வளம் கொழிக்கும் பிரதேசம். நெல்லும், நீரும், தயிரும், மீனும் எல்லோருக்கும் எளியனவாகப் பெற்றமையால் விருந்தினருக்கு வயிறாற உணவைக் கொடுத்து, அவர்கள் உண்டு மகிழ அதனைப் பார்த்து இன்புறும் பண்புடையவர்களாக மட்டக்களப்புத் தமிழர் விளங்கினர். அவர்கள் பண்டைத் தமிழரின் பண்பாட்டினைக் கொண்டிருந் தனர். எடுத்துக்காட்டாக உணவுவழங்குதல் பற்றி

*நீரின் றமையாயாக்கைக் கெல்லாம்*
*உண்டிகொடுத்தோருயிர் கொடுத்தோரே*
*உண்டிமுதற்றேஉணவின் பிண்டம்*
*உணவெனப் படுவதுநிலத்தொடுநீரே*
*நீருநிலனும் புணரியோரீண்*
*டுடம்புமுயிரும் படைத்திசினோரே* (புறநானூறு கஅ:18-23)

எனக் குடபுலவியனார் பாண்டியரசனாகிய நெடுஞ்செழியனுக்குக் கூறியுள்ளார். அதாவது நீரை இன்றியமையா உடம்பிற் கெல்லாம் உணவு கொடுத்தவர்கள் உயிரைக் கொடுத்தோர். உணவை முதலாக உடையது அவ்வுணவாலாகிய உடம்பு. ஆதலால் உணவென்று சொல்லப்படுவது நிலத்தோடு கூடியநீர். அந்நிலத்தையும் நீரையும் ஒருவழிக் கூட்டினவர்கள் இவ்வுலகத்து உடம்பை யும் உயிரையும் படைத்தவராவர் என்பதாகும். மட்டக்களப்புத் தமிழர் தமது வீட்டிற்கு விருந்தினராக வந்தவர்கள் உணவு அருந்தி தமது வீடு செல்லும் போது அவர்களுக்குக் கையுறையாகப் புழுங்கலரிசி, தயிர்ப்பானை, நெய் முதலியன கொடுத்து வழியனுப்பும் இயல்பினராகக் காணப்பட்டனர்.

கண்ணகி வழக்குரையில் அடைக்கலக் காதையில் விருந்துபசாரம் பற்றி கூறப்படுவதை நாம் இங்கு உதாரணத்திற்கு எடுத்துக் கூறலாம். கண்ணகிக்கு இடையசேரியில் கொடுக்கப்பட்ட மரக்கறி உணவுகள் பற்றி பின்வருமாறு என அடைக்கலக் காதை கூறுகின்றது:

*பாகற்காய் பயற்றங்காய் பழுபாவற்காய் பலாக்காய்*
*வாழைக்காய் பூசணிக்காய் வழுதிலங்காய் வெள்ளரிக்காய்*
*மாங்காய் எலுமிச்சங்காய் மணமினிய நாரத்தங்காய்*

தேங்காய் வள்ளிக்கிழங்கு சிறுகிழங்குசெவ்விளநீர்
..................................................................
மஞ்சள் உள்ளிகனமிளகு வண்மையான பெருங்காயம்
இஞ்சியுடன் சீரகம் இனிதுறவார்த் துப்புமிட்டு
சேர்பால் தயிர்க்குடங்கள் தேன் குடங்கள் இவைமுதலாம்.
எல்லாந்தான் வகைவகையாய் எடுப்பித்துப் பச்சைகட்டி
அன்புடனே நல்லடிசில் ஆக்கிஉண்ணுமகளே என்று
இன்பமுறத் தான் கொடுத்தார் இடைகுலத்துமாதரியும்

## iii. குடிமனைகள்

மட்டக்களப்புத் தமிழர்கள் கொட்டில், குடிசை, ஓலைவீடு, களிமண் வீடு, சொறிக்கல் வீடு என்பவற்றில் வாழ்ந்தனர். சொறிக்கல் வீட்டில் வாழ்ந்தவர்கள் செல்வந்தர்களாகக் கருதப்பட்டனர். பெரும்பாலானவர்களின் வீடுகள் மரம், மண்சுவர் கொண்டவை. அவற்றின் கூரைகள் வைக்கோல், கிடுகு, புற்கள் என்பவற்றால் வேயப்பட்டவை. வீட்டின் நிலம் களிமண்ணால் செப்பனிடப் பட்டு பசுவின் சாணத்தினால் மெழுகப்பட்டிருந்தன. வீடானது அறைகள், திண்ணை (விறாந்தை), தாழ்வாரம் என்பன அமைந்ததாக இருந்தன. திண்ணைக்குள் புகுவதற்கு இருபக்கங்களிலும், மத்தியிலும் நுழைவாயில்கள் அமைக்கப்பட்டிருந்தன. அந்நுழைவாயில்களினூடாகச் செல்வோர் குனிந்து செல்லக்கூடியதாக கூரை இருந்தது. அறைக்கதவுகள் நிமிர்ந்தவாறு செல்ல முடியாததாய் அமைக்கப்பட்டிருந்தன. ஏனெனில் வீடுகளையும் ஆலயங் களாகக் கருதுவதனால் வீடுகளுக்குள் சிரம் தாழ்த்தியே செல்லவேண்டும் என்பது மட்டக்களப்புத் தமிழர் பண்பாடாக இருந்தது.

வீட்டின் பின்புறத்தில் அமைந்த தாழ்வாரத்தில் உழவுத் தொழிலுக்குப் பயன்படுத்தும் கலப்பை, நுகம், வேலைக்காரன் கம்பு, கைப்பெட்டி, கடகம், மண்வெட்டி, கயிறு முதலியன வைக்கப்பட்டிருக்கும். வீட்டின் நடு அறை அல்லது வலது பக்க அறையை உள்வீடு எனவும் இடதுபக்க அறையை சாப்பு வீடு (மட்டக்களப்புச் சொல் வழக்கில் சாப்பூடு எனக்கூறுவர்) எனவும் அழைக்கப்பெற்றன. உள்வீடு தெய்வ வழிபாட்டிற்குரிய அறையாக இருந்தது. அத்துடன் வெண்கலப்பாத்திரங்கள் வைக்கும் அறையாகவும், தானியங்களை வைக்கும் அறையாகவும் இருந்தது. சாப்புவீடானது வசிக்கும் அறையாகப் பயன்பட்டது. வெள்ளிக்கிழமை தோறும் வீட்டின் நிலம் பசுவின் சாணத்தால் மெழுகித் தூய்மைசெய்யப்படும். வெள்ளிக்கிழமையைத் தெய்வீக நாளாகக் கருதி வந்துள்ளனர்.

மட்டக்களப்புப் பிரதேசத் தமிழர்களிடத்து தெற்குத் திசையில் தலை வைத்து உறங்குதல் தவிர்க்கப்பட்டுள்ளது. புராணங்கள் இயமனுடைய திசையான தென்திசையில் மானசோத்திரம் என்னும் இயமபுரி உள்ளதாகக் கூறுகின்றது. இதனை வென்றிமாலைக் கவிராயர்

*ஞானவீட்டுறுதிறவுகோல் கடாவுடைநடுவன்*
*மானசோத்திரக் கதவெட்டியோகத்தின் மதிப்பா*
*ரானநெஞ்சகத் திருஞ்சுடர் விளக்கதாமமரர்*
*சேனைகாவலற் குரியதாஞ் செயந்திநன் னகரம்.*

என ச. சிவப்பிரகாசர், (1969, பக்.25) கூறுகின்றார்.

இத்திசையில் தலைவைத்து உறங்குதலால் ஆயுள் குன்றிவிடும் எனக் கருதுகின்றனர். தெற்குப் பக்கம் தலைவைத்துப்படுத்தல் நன்று எனக் கூறுவாரும் உள்ளனர் (தயாளன், எம் .எஸ்.ஸ்ரீ., 2009, பக்.28). இது வேறு மாவட்டத்துக்குரிய வழக்காகக் கருதவேண்டியுள்ளது. மட்டக்களப்புத் தமிழர் பெரும்பாலும் சாதாரணமாகத் தென்திசையில் பாயின் தலை மாடு விரித்திருப் பதற்கே அனுமதிக்க மாட்டார்கள். பெரும்பாலும் தரையில் படுத்தனர்.

**குடிமனை அமைப்பதிற் கடவுள் வழிபாடு**

தமது குடியிருக்கும் மனையை அமைக்கும் நாளில் பொங்கல் செய்து இறை வழிபாடாற்றியே வீடு அமைக்க ஆரம்பிப்பர். கூரைக்கான வளை வைக்கும் போதும் கதவுநிலை வைக்கும் போதும் அவைகளுக்குத் திருநீறு பூசி இறை வழிபாடு புரிந்து அக்கருமங்களைச் செய்வர். வளையைப் புதிய வெள்ளைச் சீலையால் போர்த்துவர். கதவுநிலை வைத்ததும் நிலையைக் கடந்து உள்ளே செல்லும் போது வீட்டுறுப்பினர்கள், மேசன், தச்சன் (ஓடாவி) முதலிய ஒவ்வொருவரும் நிலையின் நடுவில் சிதறு தேங்காய் உடைத்து உட்புகுவது வழக்கமாக இருந்துவந்துள்ளது.

**புதுமனை புகுதல்**

புதுமனையில் குடிபுக முன்பு பசு மாடுகளைச் சில நாட்களுக்கு இரவு வேளைகளில் தங்கவைப்பது வழக்காகும் (பூச்சு வேலை நடைபெற முன்னர்). இதனால் பேய் பிசாசுகள் இல்லாது அகன்றுவிடும் என்பதும் ஐஸ்வரியம் உண்டாகும் என்பதும் இம்மக்களின் கொள்கையாகும். சுபமுகூர்த்த வேளையில் புதுமனைபுகுதல் நடைபெறும். வெற்றிலை பாக்கு பழம் வைத்து, பொங்கல் படைத்து பிள்ளையாருக்கும் தமது குலதெய்வத்திற்கும் பூசை வழிபாடு செய்வர். குடிபுகும் வேளையிற் பசுவும் கன்றும் கட்டிவைப்பர்.

இதற்காக கபில நிறப்பசுவைத் தெரிந்து எடுப்பர். அக்காலத்தில் மந்தை வளர்ப்போர் கபில நிறப்பசு ஒன்றைக் கட்டாயம் வைத்துக் கொள்வர். அப்பசு சாதுவானதாகவும் சோறு கறி பழவர்க்கங்கள் முதலியனவற்றை உண்ணும் தன்மையுடையதாகவும் பழக்கி இருப்பர். கருமையும் சற்றுச் செம்மையும் கலந்தநிறம் கபிலநிறம். கபிலப் பசு இல்லாத பட்சத்தில் வெள்ளைப் பசுவைப் பாவனைக்குப் பயன்படுத்துவர் (கதிராமத்தம்பி, K.O.V., 2007).

புதுமனைபுகும் போது கண்ணாடி, பூரண கும்பம், சுடரேற்றிய விளக்கு, சோற்றுப் பானை, சுண்ணாம்புக் குடுக்கை, தாம்பூலத் தட்டு, உப்புப் பாத்திரம், நெல் நிறைந்த மரக்கால், பாய் முதலிய பொருட்களுடன் வீட்டிற்குள் நுழைவர். வீட்டிற்குள் நுழையும் போது வலக்காலை முன்வைத்துச் செல்வது வழக்காகும். இப்பொருட்களை உள்வீட்டறையில் வைத்து இறைவழிபாடு செய்வர். பின்னர், கட்டப்பட்டிருக்கும் பசுவுக்கும் கன்றுக்கும் திருநீறு அணிவித்துத் திலகமிட்டு உணவு வழங்குவர்.


புதுமனை புகுந்த பின்பு உற்றார் உறவினர் நண்பர்களுக்கான விருந்து பசாரம் நடைபெறும். அன்றிரவு வளவுகாவல் பண்ணப்படும். காவல் பண்ணிய பின்பு உள்வீட்டிற்கு நேராக வாயிலில் முற்றத்திற்கான இடத்தை விட்டு சுமார் 4 x 3 அடி அளவுடைய பந்தல் அமைத்து ஆதிவயிரவருக்கான பூசை செய்து வழிபாடியற்றப்படும். கலியாண வயிரவரை வழிபடுவோர் பந்தல் அமையாது உள்வீட்டறையில் கலியாண வயிரவருக்காகப் பூசை செய்து வழிபடுவர். வயிரவருக்கான பூசையில் ரொட்டி, இளநீர், கரும்பு, மொந்தன் வாழைப்பழம் முக்கியமாக இடம்பெறும்.

புதுமனை புகுந்து முதல் வரும் ஆனி மாதத்தில் வெள்ளிக்கிழமை நாளொன்றின் நண்பகலிற் சர்க்கரை அமுது மாரியம்மனுக்கு நடைபெற்று வந்தது. குடிபுகுந்து முதல் வரும் வெள்ளிக்கிழமை நண்பகலிற் சர்க்கரை அமுதும் மாலையில் வயிரவர் பூசையும் நடைபெற்றும் வந்தன. அடுத்த நாள் அதிகாலையில் காத்தவராயனுக்குப் பூசை வழிபாடு நடைபெறும். பிற்காலத்தில் காத்தவராயனுக்குரிய பூசை வழிபாடு அருகி வந்துள்ளது.

## குடிநீரும் கொட்டுக்கிணறும்

மட்டக்களப்புப் பிரதேசமக்கள் தமது குடியிருப்பு மனைக்கு அருகாமையிலும் பொது இடங்களிலும் தேற்றாமரத்தைக் குடைந்து நிலக்குழியில் நட்டு அதன் மூலமாக நீரைப்பெற்றனர். இது கொட்டுக்கிணறு என அழைக்கப்பட்டது. பொது இடங்களில் கொட்டுக் கிணறுகளை மக்கள் கூட்டாகச் சேர்ந்து அமைத்தனர். மரத்தைக் குடைந்து ஆக்கப்பட்டதால் கொட்டு என அழைத்தனர்.

''நிலத்தைக் குடைந்தே நீரெடுப்பர் ஆனால் மட்டக்களப்பார் மரத்தைக் குடைந்து நீரெடுத்தனர்'' என ஓர் ஆங்கிலேயர் தெரிவித்ததாகவும் இப் பிரதேசத்தில் ஒரு கதை நிலவுகிறது. தேற்றாமரத்தில் இக்கொட்டு ஆக்கப்படு வதால் அக்கொட்டு நீர் தெள்ளிய, குளிர்ச்சி பொருந்தியதாகக் காணப்பட்டது. தற்காலத்திலும் கிணற்று நீரின் உவர்த்தன்மையைப் போக்குவதற்கு இப் பிரதேசத்தில் தேற்றாமரக்குற்றியை கிணற்றினுள் இடுவது வழக்காகவுள்ளது. தற்காலக் கிணறு போன்று அமைந்துள்ள அதனைக் கொட்டுக்கிணறு என்று அழைத்தனர். அக்கொட்டுக் கிணற்றிலிருந்து நீரைப் பெறுவதற்காக மரப்பட் டையினாலும், தளப்பத்து/பனை ஓலையினாலும் தயாரிக்கப்பட்ட பாத்திரத் தினால் நீரை அள்ளினர். இப்பாத்திரத்தை பட்டை என்று அழைத்தனர். இது தற்கால வாளி போன்று பயன்பட்டது.




நிலத்தில் இருந்துவெளியில் எடுக்கப்பட்ட மரக் கொட்டு-கிடக்கைத் தோற்றம்

## iv. பாவனைப் பொருட்கள்

வீட்டுப் பாவனைப் பொருட்களாக சிறுச்சட்டி, குண்டுச்சட்டி, குடுக்கைப் பானை, அண்டாப்பானை, உலைமூடி, குரச்சி, அரிக்கும் (அரிக்கன் சட்டி), குடம், முட்டி முதலிய மட்பாண்டங்களும் சருவ, வெண்கலப் பொருட்களும் மரத்தினாற் செய்த உரல், உலக்கை முதலானபொருட்களும் இரும்பினாலாக் கப்பட்ட கத்தி, கோடரி, மண்வெட்டி என்பனவும் சிரட்டையாற் செய்த அகப்பைகளும் கருங்கல்லினாற் செய்யப்பட்ட அம்மி, திருகை (மா அரைக்கும் கருவி) முதலியனவும் பனையோலையாலான பெட்டிகள், தட்டுகள் என்பனவும் கற்பன் புற்களினாலும் கிரான்புற்களினாலும் செய்யப் பட்ட உமல் (வாய்ப்பகுதி குவிந்து அடிப்பகுதி வட்டமாக விரிந்துள்ளதுமான

அமைப்பையுடையபை. உச்ச அளவாக ஒரு மரக்கால் அரிசி கொள்ளளவு உடையது.), பாய், விரிப்பு முதலியனவும், பிரம்பிலான சுளகு, மரக்கால், கைப்பெட்டி (வயலில் விதைக்கும் போது விதைநெல்லை எடுத்துவிதைப் பதற்கும் களவட்டியில் பொலியை அள்ளியெடுத்துத் தூற்றுவதற்கும் பயன்படுத்தும் சிறியபெட்டி. மரக்கால் அமைப்பையொத்தது. ஆனால் மரக்காலின் அடிப்பகுதி வட்டமாக இருப்பதுபோலன்றி இதன் அடிப்பகுதி நான்கு மூலைகளைக் கொண்டது), கடகம் (கைப்பெட்டியைப் போன்றது. கைப்பெட்டியிலும் பெரியது. கூடிய அளவாக ஒரு புசல் நெல் கொள்ளளவு உடையது. நெல்லை வைப்பதற்காகப் பயன்பட்டது.), கூடை (குப்பைகளை அள்ளுவதற்கும் மண்ணை அள்ளுவதற்கும் பயன்பட்டது.) முதலியனவும் பயன்படுத்தப்பட்டன.

**விளக்கு**



ஒவ்வொரு வீட்டிலும் பண்டைக்காலத்தில் இரவில் மிகநுட்பமான களிமண் விளக்குகளும், வெண்கல விளக்குகளும் பயன்படுத்தப்பட்டன. பெரும்பாலானோர் சுவரில் முக்கோண வடிவில் அமைக்கப்பட்ட மாடத்தினுள் மாட விளக்குகளை வைத்து விளக்கேற்றியுள்ளனர். அவ்விளக்குகள் பெரும்பாலும் பித்தளை, வெண்கலம் ஆகியவற்றால் செய்யப்பட்டவை. மாட விளக்குகளுடன் குத்துவிளக்கு, தூக்குவிளக்கு (தொங்கும் விளக்கு), தூண்டா மணி விளக்கு, அகல் விளக்கு என்பன உபயோகத்திலிருந்து வந்துள்ளன. தூக்கு விளக்குகளும், தூண்டா மணி விளக்குகளும், அகல் விளக்குகளும் கோயில்களிற் பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டன.


**சமையலறைப் பொருட்கள்**

சட்டி, பானை, குவளை, அகப்பை, கரண்டி, கிண்ணம், அரிக்குமலை, வெண்கலத்தட்டு, குடம், செம்பு, உண்கலன்கள் என்பன சமையலறைப் பாத்திரங்களாக இருந்துள்ளன. இவற்றுள் பெரும்பான்மை களிமண்ணாலும், சிறுபான்மை பித்தளை, செம்பு வெண்கலம் முதலியவற்றாலும் ஆக்கப் பெற்றன. வடிகட்டியாக தென்னம்பன்னாடையை உபயோகித்தனர். சுரக் குடுகு, நாடங்குடுகு என்பனவும் பயன்படுத்தப்பட்டன. நன்கு பழுத்த

சுரைக்காய், நாடங்காய் என்பவற்றின் உட்பகுதியைக் குடைந்து உள்ளீடுகளை அகற்றி அவற்றினைப் பாத்திரமாகப் பாவித்து வந்துள்ளனர். இவைகளை தேன், நெய், கள்ளு, பாணி, நீர் போன்றவற்றைச் சேகரிக்கும் பாத்திரங்களாகப் பயன்படுத்தினர். இரும்பினால் செய்யப்பட்ட கத்தி, கோடரி, முதலிய பொருட்களும் பயன்படுத்தப்பட்டன.

### சிமிழ்

மாட்டின் கொம்பினை குளிகைகள் போன்ற மருந்துப்பொருட்கள் வைப்பதற்குப் பயன்படுத்தினர். இதனைக் கொம்புச் சிமிழ் என அழைத்தனர். இக்கொம்புச் சிமிழுக்கு மூடியும் காணப்படும். ஆபரணங்களைப் பேணுவதற்கு மரத்தினாலும், பித்தளை, செம்பு முதலிய உலோகங்களாலும் ஆக்கப்பட்ட சிமிழ்களைப் பயன்படுத்தினர். இதனை ஆபரணச் சிமிழ் எனவும் ஆபரணச் செப்பு எனவும் அழைத்தனர்.



*ஆபரணச் செப்பு*

### வெற்றிலைக் குட்டான்


மட்டக்களப்புத் தமிழர் தமது வீட்டுக்குவரும் உற்றார் உறவினர் ஆகியோருக்கு தாம்பூலம் அருந்தக் கொடுத்து உபசரிப்பது வழமை. இது தென்னாசிய சமுதாயங்களிடையே காணப்படும் பொதுவழமையாகும். மட்டக்களப்புத் தமிழர் வீட்டில் தாம்பூலம் வைப்பதற்கு வெண்கலத்திலாலான வட்டாவைப் பெரிதும் பயன்படுத்தினர். விவசாயம், மந்தைவளர்ப்பு, மீன்பிடித் தொழில் முதலிய தொழில்களுக்குச் செல்வோர் தொழிலின் நிமித்தமாக வெளியில் செல்லும் நாட்களுக்குரிய தாம்பூலத்தை வைத்துக்கொள்ளக் கூடியதாக பனையோலையினால் அல்லது கற்பன்புல் போன்ற புல்லினங்களினால் செய்யப்பட்ட வெற்றிலைக் குட்டானைப் பயன்படுத்தினர்.

இது ஒன்றுக்குள் ஒன்றான இரண்டு மூன்றுஉள் அமைப்புக்களுடன் பொருந்தி இருக்கும். இவ்வுள்ளமைப்புப் பகுதிகளில் வெற்றிலை, பாக்கு, புகையிலை, மருத்துவக் குளிகைகள் என்பன வைக்கப்படும். அதனை மூடு வதற்கு ஒரு மூடியும் இருக்கும் மூடியில் நூற்கயிறு பொருத்தப்பட்டிருக்கும். குட்டானை மூடியால் மூடி இந்நூற் கயிற்றினால் மூடியும் குட்டானும் பிரியாதவாறு குட்டானையும் மூடியையும் சேர்த்து வரிந்துகட்டப்படும். பல நாட்களுக்குத் தாம்பூலப் பொருட்களை வைத்துக் கொள்ளக்கூடிய பெரிய குட்டான்களும் அன்றாடம் பாவிப்பதற்குரிய தாம்பூலப் பொருட்களை வைத்துக் கொள்ளக் கூடிய சிறிய குட்டான்களும் உபயோகப்படுத்தப்பட்டன. சிறிய வெற்றிலைக் குட்டான் இடுப்பிலே செருகக் கூடியவாறு சிறியதாக அமைந்திருக்கும்.

## திருகை

திருகை எனப்படுவது இரண்டாக உள்ளது. கருங்கல்லினால் செய்யப்படும்.. இது சிறிய திருகை, பெரிய திருகை என இரு வகைப்படும். திருகை இரண்டு பகுதிகளாக வேறாக்கி எடுக்கும் தன்மையில் அமைந்துள்ளது. சிறிய திருகையின் அடிப்பாகம் சுமார் அரையடி உயர அளவுடையதாகவும் சுற்றளவு சுமார் ஒன்றரையடி அளவுடையதாகவும் இருக்கும். அதன் மத்தியில் ஒரு துவாரமிட்டு சுமார் ஆறு அங்குல நீளமும் மூன்று அங்குல சுற்றுமுள்ள தடி பதிக்கப்பட்டிருக்கும். மேற்பகுதியான மற்றப்பகுதி சுமார் மூன்று அங்குல, மூன்றரை அங்குல உயரமானதாகவும் பதினெட்டு அங்குல சுற்றளவுடைய தாகவும் இருக்கும். மேற்பகுதியில் இரு முனைகள் செவிபோல் அமைந் திருக்கும். செவியாக அமைந்துள்ள ஒரு முனையில் ஒரு துவாரமிருக்கும். அத்துவாரத்துக்குள் கைபிடித்துச் சுற்றும் அளவுள்ள சுமார் பதினெட்டு அங்குல மரத்தாலான கைத்தடி ஒன்று புகுத்தப்பட்டிருக்கும். அடிப்பாகத்தில் உள்ள தடியினுள் மேற்பகுதியை அதன் துவாரத்தினூடாகப் புகுத்தி மாட்டுவர். அத்தடி மேற்பாகத்திலுள்ள துவாரத்தைவிட சற்றுச் சிறியதாக அமைந் திருக்கும். அத்தடிக்கும் துவாரத்திற்கும் இடையிலுள்ள இடைவெளிக்குள் குரக்கன், உழுந்து போன்ற தானியங்களை இட்டு மேற்பாகக் கைப்பிடியினால் சுற்றச் சுற்ற தானியம் அரைக்கப்பட்டு மாவாகி சுற்றிவரக் கீழேகொட்டும். மேற்படி அளவுள்ள சிறிய திருகை ஓராள் திருகை எனவும் அழைக்கப்பட்டு வந்தது. இருவர் பிடித்து சுற்றும் பெரிய திருகையானது சிறிய திருகையிலும் பார்க்க பெரிதாக அமைந்திருக்கும். மேற்காட்டியவாறு அரைத்து மாவைத் தூய்மையாகப் பெறுவதற்காகப் பாய் விரித்து அதன்மீது தூய சீலை ஒன்றை

விரித்து அதன் நடுவில் திருகையை வைத்து அரைக்கும் பணியை மேற் கொள்வர். (கீழுள்ளபடங்களைப் பார்க்கவும்)




திருகையும் அதில் தானியத்தை அரைத்தலும்

### ஈர்க்கில் கட்டு


பழுத்த தென்னோலையில் இருந்து ஈர்க்கில்களை வேறாக்கி இரு கைப் பிடியளவு எடுத்து அதனை சுமார் ஒன்றரை முள நீளமுள்ளதாகக் கூட்டும் தன்மையில் நுனியையும், அடியையும் சீராகவெட்டி எடுத்து இரு பிடிகளையும் ஒன்று சேர்த்து அடிப்பாகத்தில் நார் கொண்டு அல்லது சிறுகயிறு கொண்டு கட்டிக் கொள்வர். கட்டப்பட்டுள்ள ஈர்க்கில் கட்டு, வாருகல், விளக்குமாறு, கூட்டுமாறு என்னும் பெயர்களில் அழைக்கப்பட்டன. இவ்வாறு அமைத்த ஈர்க்கிற் கட்டை விரித்த நிலையில் இரு கரங்களாலும் பிடித்துக் கூட்டுவர். குனிந்து கூட்டும் பான்மையில் அது அமைந்துள்ள படியால் குனிந்தவாறே கூட்டுவர். இவ்வாறு கூட்டும் பணியை பெரும்பாலும் பெண்களே செய்தனர். இது உடற்பயிற்சிக்கு முதன்மையான செயல். காலையில் இவ்வாறு செய்வதால் உடல் ஆரோக்கியம் பெறுகின்றது.

### வெண்கலப் பொருட்கள்

இம்மக்களிடையே பலவகையான வெண்கலப் பொருட்கள் புழக்கத்தில் இருந்தன. இவற்றுள் சேவரக்கால், வட்டி, செம்பு, படிக்கம், வட்டா முதலான வெண்கலப் பொருட்களும் உள்ளடங்கும். (படங்கள் கீழ்வருமாறு)



அரசிலைவட்டா



உணவு கொண்டு செல்லும் வெண்கலப் பாத்திரமும்,
நீர் கொண்டு செல்லும் தூக்குச் செம்பும்

**மரக்கால்**

மரக்கால் என்பதற்கு ஆயிலியம், உப்பளம், ஓர் குறுணி அளவு, திருமால், கூத்துக்களின் வகைகளிற் சில, மரத்தாலாகியகால், முகத்தலளவைக் கருவி களிலொன்று எனப் பலபொருள் உள்ளதாகத் தமிழ் அறிஞர்கள் கூறுவர். (மதுரைத் தமிழ்ப் பேரகராதி. தொகுப்பு நூல். இரண்டாம் பாகம், 1956, பக்.265). மட்டக்களப்புப் பிரதேசத்தில் முகத்தலளவைக்குரிய நெல் அளக்கும் கருவிகளில் மரக்கால் முதன்மையுடையதாகக் கொள்ளப்பட்டுவருகிறது.

இம்மரக்கால் பிரம்புகளால் செய்யப்பட்டதாகும். அதன் வாய்ப்பகுதி முடியும் அந்தத்தில் உள்ளும் வெளியும் சுமார் ஒரு அங்குலத்துக்குக் குறையாத பருமனுக்கு ஒரு வகை மரத்தின் பட்டையைச் சீராக வார்ந்தெடுத்து வட்டமாகவைத்துக் கட்டுவர். அல்லது பருமனான பிரம்புகளை ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கடுக்காய் வட்டமாக வைத்தும் கட்டுவார்கள். இதனை வாய்க்கட்டு எனக் கூறிவந்துள்ளனர். மரக்காலை அமைக்கும் போது பிரம்பினை ஒன்றுடன் ஒன்று இணைந்து இருக்கத்தக்கவாறு வைத்து இறுக்கமாகப் பின்னுவர். அவ்வாறு இறுக்கமாகப் பின்னியெடுக்கப்பட்ட மரக்காலினுள் நீரை ஊற்றினால் நீர் ஒழுகாதபடி அது அமைக்கப்பட்டிருக்கும். மரக்காலைப் பயன்படுத்துவதற்கு முன்பதாக பசுவின் சாணத்தால் அல்லது வில்வப்பழம் போன்ற பசத்தன்மை பொருந்திய பழத்தையும் நெல்லரிசித் தவிட்டையும் சேர்த்துப் பிசைந்தெடுத்த கலவையை மரக்காலிற் பூசி அரிவெயிலில் நன்றாகக் காயவைத்து எடுத்த பின்னரே பாவனைக்குப் பயன்படுத்துவர்.

ஒரு மரக்கால் இருபத்திநான்கு சுண்டுகளின் தானியங்களைக் கொண்ட ஓர் அளவுக் கருவியாகும். ஒரு சுண்டு என்பது ஏறக்குறைய வயது வந்த ஒருவரினது இரு கைகளாலும் இரு தடவைகளில் அள்ளிச் சேர்க்கும்

அளவைப் பெறுமானத்தைக் கொண்ட ஒரு பாத்திரமாகும். நான்கு சுண்டுகள் சேர்ந்தது ஒரு கொத்து எனவும், ஆறு கொத்துக்கள் ஒரு மரக்கால் எனவும், நான்கு மரக்கால் ஒரு புசல் எனவும், முப்பது மரக்கால் ஒரு அவணம் எனவும், பத்துமரக்கால் ஒரு சாக்கு எனவும், பன்னிரெண்டு மரக்கால் ஒரு மூடை எனவும் இப்பிரதேசமக்கள் தானியங்களை அளந்து கணக்கிடுதலை வழக்கமாகக் கொண்டுள்ளனர். வயலிலுள்ள களவட்டியில் பொலிகள் தூற்றி அளக்க ஆரம்பிக்கும் போது மரக்காலை நெற்குவியலில் வைத்துக் கும்பிட்ட பின் நெல்லை அளக்கத் தொடங்குவர். அவ்வாறு நெற்குவியலில் மரக்காலை வைத்து அளக்க ஆரம்பித்தலை மரக்கால் வைத்தல் எனக் கூறிவந்துள்ளனர்.

(களவட்டி - வட்டமாக அமைக்கப்பெற்ற சூடுபோடும் நிலப்பரப்பு)

மட்டக்களப்புத் தமிழர் மரக்காலைப் புனிதமான பொருளாகவே கருதி வந்துள்ளனர். புதுமனை புகுதலில் நெல் நிறைந்த மரக்கால் கொண்டு செல்லுதல் இன்றியமையாததாகக் கருதப்படுகிறது. மரக்காலை கவட்டினால் தாண்டுதலை தகாத செயலாகக் கருதிவந்துள்ளனர். அது மட்டுமன்றி வெற்று மரக்காலாக வையாது அதனுள் ஒரு பிடியளவு தானியமாவது இருக்க வேண்டு மென்பதில் கண்ணுங்கருத்துமாய் இருந்துவந்துள்ளனர். (கீழுள்ளபடத்தைப் பார்க்கவும்)



மரக்கால்

## V. கல்விமுறை

முதன் முதலாகக் கல்வி கற்க ஆரம்பிக்கும் நாளை ஏடு தொடங்குதல் எனவும் வித்தியாரம்பம் எனவும் கூறுவர். இது குழந்தை பிறந்த ஐந்தாவது வயதில் நடாத்தப் பெற்றுள்ளது. நவராத்திரி கால சரஸ்வதி பூசை வேளையிலும், விஜயதசமியிலும் ஏடு தொடங்குதல் நடைபெற்றுவந்துள்ளது. குரு அல்லது

மதிப்பார்ந்த பெரியவர் ஒருவரால் இது நடத்திவைக்கப்படுகின்றது. பச்சரிசி, வெற்றிலை, பாக்கு, பழம் என்பவற்றைத் தாம்பாளத்தில் வைத்து அதனை வெள்ளைத் துணியால் மூடி குழந்தையின் கையால் ஏடு தொடங்கிவைப் பவரிடம் கொடுக்கப்படும். ''அரி ஓம் கணபதியேநம, குருவே துணை'' ஆகிய வசனங்களைக் குழந்தையைக் கூறுமாறு செய்வித்து நாமகளை வணங்கி தாம்பாளத்தில் அரிசி பரப்பி குழந்தையின் விரலைப் பிடித்து அவ்வரிசியின் மீது ''அ உ ம'' என்னும் எழுத்துக்களை எழுதுவிப்பர். அத்துடன் ஓம் சிவாயநம, ஓம் நமசிவாய, குருவே துணை எனவும் குழந்தையை உச்சரிக்கச் செய்வர். இதன் பின்னர் குழந்தை குருவிடம் கல்வி பயில்வதற்கு ஒப்படைக்கப்படுகின்றது.

எழுத்துப் பயிற்சியின் போது விரலால் மண்ணில் எழுதிப்பயின்ற பின்பு பனை ஓலையில் எழுத்தாணி கொண்டு எழுதும் பழக்கத்தை மேற் கொண்டனர். வசதி படைத்த குடும்பத்தில் பிறந்த பிள்ளைகள் தொடர்ந்து கல்வி கற்பவராகவும் ஏழைக்குடும்பத்தில் பிறந்தபிள்ளைகள் பெற்றாருடன் சேர்ந்து வேலை செய்பவராகவும் காணப் பெற்றனர்.

வசதியற்ற பெற்றோரின் பிள்ளைகள் குருவிடம் சென்று அவரோடு வதிந்து கல்விபயிலும் முறையும் வசதி படைத்தவர்களின் வீட்டிற்கு குரு சென்று கல்விபுகட்டும் முறையும் காணப்பட்டது. மேலும், திண்ணைப் பள்ளிகளும் நடாத்தப்பட்டன. இரவில் ஏற்றும் விளக்கெண்ணெய்க்காகவும், குருவின் தட்சணைக்காகவும் எண்ணெய்ச்சிந்து பாடும் வழக்கமும் கைக் கொள்ளப்பட்டது. குரு தட்சணைபெறுவது அரிதாகவே காணப்பட்டது. மட்டக்களப்புப் பிரதேசத்தில் மேல்வரும் கல்விமுறைகள் நிலவிவந்தள்ளன:

1. குடும்பமட்டத்தில் நிலவியகல்விமுறை
2. முறைசாராக் கல்விமுறை
   I. திண்ணைப்பள்ளிக் கல்விமுறை
   II. தொழிற் கல்விமுறை (வைத்தியம், மாந்திரிகம், சோதிடம்)
   III. செவியேறற் கல்விமுறை

மேற் கூறப்பட்டவற்றுள் குடும்பமட்டக் கல்விமுறையானது வசதியுள்ள குடும்பத்தினர் குருவைத் தமது வீட்டிற்கு அழைத்துக் கல்வியறிவைப் பெறுவதும் வசதியற்றவர்கள் தமது பிள்ளைகள் உரியகாலம் வரை குருவோடு வாழ்ந்து கல்வி கல்வியறிவைப் பெறுவதும் வழக்காக இருந்தது. குடும்ப ரீதியில் சோதிடம், வைத்தியம், மாந்திரீகம் என்பன தமது வருங்காலக் குடும்பவாரிசுகளுக்கு கற்பிக்கப்பட்டும் வந்தன.

திண்ணைப்பள்ளிக் கல்விமுறையில் உபாத்தியாயர், சட்டம்பி ஆகியோர் இடம் பெற்றனர். திண்ணைப்பள்ளி பெரும்பாலும் கோயிலால் நடத்தப் பெற்றது. திண்ணைப்பள்ளி திருக்கோயில், காரைதீவு, மண்டூர், ஆரையம்பதி, கொக்கட்டிச்சோலை, குறுமன்வெளி, துறைநீலாவணை, செட்டிபாளையம், புளியந்தீவு, சிற்றாண்டி போன்ற இடங்களில் நடைபெற்றதாக அறிய முடிகின்றது (வினாயகமூர்த்தி, வெ., 2006). திண்ணைப்பள்ளியில் மொழி (தமிழ்), சமயம், கணக்கு, தர்மநூல்கள் என்பன புகட்டப்பட்டன.

அக்காலத்தில் கல்விகற்பது பெரும்பாலும் ஆண்களுக்கு மட்டும் உரியதாக மட்டக்களப்புத் தமிழர்களிடம் காணப்பட்டது. அக்கல்வியில் எழுத்து, வாசிப்பு, கணக்கு, நிகண்டு, நீதி நூல்கள் (ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நன்நெறி, நல்வழி) தோத்திர நூல்கள் என்பன போதிக்கப் பட்டதாக அறியமுடிகின்றது (செ.யோகராசா, 2004). கோயில்களில் அல்லது வீடுகளில் ஏடு படிக்கும் பழக்கம் செவியேறற் கல்விமுறையின் முக்கிய ஊடகமாகக் காணப்பட்டது. கண்ணகி வழக்குரை கேட்டல், பாரத அம்மானை கேட்டல், பாரதம் கேட்டல், கம்சன் அம்மானை கேட்டல், புராணபடனம் கேட்டல், கதைகேட்டல், கூத்துக்கள் ஆடல் - பார்த்தல், தலயாத்திரை, கூட்டுப் பிரார்த்தனை முதலியவற்றால் செவியேறற் கல்வி பெறப்பட்டன.

அக்காலக் கல்விமுறையில் நெட்டுருச்செய்தல் (மனனம் செய்தல்) முக்கியமாகப் பின்பற்றப்பட்டது. இந்த ஞாபகமுறையாலும் தலைமுறை தலைமுறையாக வந்த ஆசிரியர் மாணவர்களின் பொறுமையாலும் கலைகள், பிற்சந்ததியாருக்குக் கைமாறப்பட்டு வந்துள்ளன. ஆசிரியர் மையக் கல்வி முறையே நடந்தது எனக் கொள்ளலாம். மாணவன் தன் ஆசிரியனைத் தெய்வம் போலமதித்து அவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்து அவரது ஏவல்களுக்கு மறு மாற்றம் கூறாது செவ்வனே ஒழுகுதல் வேண்டும் என எதிர் பார்க்கப்பட்டது. கல்வி புகட்டும் ஆசிரியன் வேதனம் கேட்கலாகாது என்பது இலட்சியமாகக் கொள்ளப்பட்டது. ஆசிரியருக்குக் கடன் கழிக்கும் முகமாக அவருக்குத் தொண்டுகள் புரிந்தனர். ஆயினும் கல்வி கற்று முடிந்ததும் ஆசிரியருக்குக் காணிக்கை ஒன்று கொடுக்கும் மரபு காணப் பட்டது. காணிக்கையாக பசுவும் கன்றும் கொடுக்கும் இயல்பினராக மட்டக்களப்புத் தமிழர் வாழ்ந்தனர்.

## vi. ஆடையும் ஆபரணமும்

பெண்கள் சேலை கட்டுபவர்களாகவும் இளம் பெண்கள் இடுப்பைச் சுற்றி ஒரு பாவாடையை அணிந்து தோளைச் சுற்றி ஒரு மேலாடையை அணிவது அக்கால வழக்கமாக இருந்தது. தலைமயிரை நன்கு வாரி இழுத்துப் பிடரியில் ஒரு பந்து போல கூந்தலை முடிவதே வழக்காக இருந்தது. இவ்வாறு முடிந்ததைக் கொண்டை எனக் கூறினர். அலங்காரம் செய்யும் வழக்கமும் இருந்தது. மட்டக்களப்புத் தமிழ் மக்களிடையே இத்தகைய வழக்கு முறையே இருந்தது (கதிராமத்தம்பி, KOV., 2007 உரோலின்சன், H.C., 1961, பக்.24).

மட்டக்களப்புத் தமிழர்ஆரம்பகாலத்தில் செடி, கொடி, தளிர், மலர் போன்றவற்றை ஆபரணங்களாகவும் பின்னர் வெள்ளியினாலும் ஐம்பொன் னினாலும் தங்கத்தினாலும் பூவேலைப் பாடுகளமைந்த ஆபரணங்களாக உருவாக்கி அணிந்தனர்.

பெண்களின் அணிகலன்களாக மூக்கிற்கு மூக்குத்தி (மூக்குமின்னி), நத்து (மூக்குவளையம்) முதலியனவும், கைகளுக்கு வளையல்கள், கிட்டிக் காப்பு, அறுப்புக்காப்பு, பட்டறைக்காப்பு, சிங்கமுகக்காப்பு முதலியனவும், விரல்களுக்கு மோதிரங்களும், காதணிகளாக தோடு, அள்ளுக்குத்து (அலுக் குத்து), சிமிக்கி (தொங்கட்டான்), காதுப்பூ, வாளி முதலியனவும், கொண்டைக்கு கொண்டைக்குத்தி, இராக்கொடி (திருகு பூ), மயிர் மாட்டி முதலியனவும், தலைக்கு உச்சிப்பட்டம், நெற்றிச்சுட்டி, சூரியப்பிறை, சந்திரப் பிறை முதலியனவும் கழுத்திற்குச் சவுக்கு மணிமாலை, மணிமாலை, பதக்க மாலை, மோறாமாலை (இது செல்வந்தக் குடும்பத்தில் அணியப்பட்டது. அக்காலத்தில் அமெரிக்கப்பவுண் இரண்டினை அருகருகாகப் பொருத்தி பதக்கமாக அலங்காரம் செய்யப்பட்டு மாலையில் கோர்க்கப்பட்டிருந்தது), முத்துமாலை, காசுமாலை, அட்டிகை, தாலி, சரடு முதலியனவும் இடுப்பு அணிகளாக ஒட்டியாணம், மேகலாபரணம், கடிசூத்திரம் முதலியனவும் கையணியாகக்கெவுடு (மேற்கையில் அணிவது), நாகபடம், கால் அணி களாகக்கரணை, சிலம்பு, தண்டை, சதங்கை, பாதசரம் முதலியனவும் விளங்கின (பாக்கியமூர்த்தி, வே., 2009 கந்தையா, கா., 1928, பக்07). ஏழைகள் வெள்ளியாலும், பித்தளையாலும், கண்ணாடியாலும், வண்ணம் பூசியபொருட் களாலும் செய்யப் பெற்ற ஆபரணங்களைப் பூண்டனர். எல்லாமகளிரும் ஆபரணங்களாலும் மலர்களாலும் தம்மை அழகுபடுத்தினர். பெண்கள் பனையோலையாலும் காதணி அணிந்திருந்தனர். அது காதோலை எனப்பட்டது.

ஆண்கள் வேட்டி, சால்வை, தலைப்பாகை அணிவது வழக்கமாக இருந்துள்ளது. மட்டக்களப்புத் தமிழ் ஆடவன் ஒருவன் வெள்ளை வேட்டியை

உடுத்து, சால்வையை விரித்தணிந்து நெற்றியில் விபூதிதரித்து அதன் மேல் சந்தணப் பொட்டிடுவான். அதனை

*செப்புவேன் தோழிநான் செந்தமிழ்க்களப்பூர்ச் செங்குமரன்*
*துப்பரவாக்கிய தூயவெண் வேட்டியைத் தோய்ந்துடுத்தும்*
*அப்பியநீறும் அதன்மேற் சந்தணமணிந்தபொட்டும்*
*அப்புறம் சால்வைஅகலவிரித்திடின் அழகெனுமே*

(ஈழத்துப் பூராடனார், 1992, பக்.42)

என்னும் பாடல் தெரிவிக்கின்றது. தலைப்பாகையைத் திருமணத்தின் போது மணமகனும், பூசை வேளையிற் கப்புகனாரும் அணியும் வழக்கு இருந்து வந்துள்ளது. காதணியாக மின்னி, கல்லுக் கடுக்கன், வெண்டுக்கடுக்கன், அள்ளுக்கடுக்கன் (கொத்துக்கடுக்கன்) முதலியனவும் கையணிகளாகக் கெவுடு, காப்பு, சங்கிலி முதலியனவும் விரல்களுக்கு மோதிரங்களும், கழுத்தணியாக காறை, மாலை என்பனவும் காலணிகளாக தண்டை, மெட்டி முதலியனவும் இடுப்பில் அரைஞாண் கொடியும் அணிவது வழக்கமாக இருந்தது.

ஆண்கள் கன்னக்குடுமி, உச்சிக்குடுமி வைத்திருக்கும் வழக்கம் உடையவர்கள் (பெரியதம்பிப்பிள்ளை, ஏ., 1982, பக்.52). திருமணப் பருவம் எய்திய ஆண்கள் பெரும்பாலும் மின்னியை நீக்கி கடுக்கன் அணியும் பழக்கத்தைக் கொண்டிருந்தனர். திருமணம் செய்யும் நாளில் பெரும் பாலானவர்கள் தாடியை மழிப்பவர்களாகவும் சிலர் கடுக்கன் அணியும் நாளில் தாடியை மழிப்பவர்களாகவும் காணப்பட்டனர். சுமார் 50, 60 ஆண்டுகள் வரை முன்பு ஆணுக்கு சுபநாளொன்றில் நாவிதன் வந்து முகத்து மயிர் மழித்து கடுக்கன் அணிவித்து கன்னக்குடுமி கட்டும் வழக்கம் காணப் பட்டது.

கடுக்கன் வெள்ளியாலோ பொன்னாலோ செய்யப்பட்டு, நவமணிகளின் கல் ஒன்றினால் பதிக்கப்பட்டிருக்கும். கல்லுக்கடுக்கன், கொல்லைக் கடுக்கன் (தொங்குக் கடுக்கன்), வெண்டுக்கடுக்கன் என்னும் வகைகளாகக் காதணி காணப்பட்டது. கல்லுக்கடுக்கன் தங்கம் முதலிய உலோகங்களினால் செய்யப் பட்டு நடுவில் சிவப்பு அல்லது வெண்நிறக் கல்லினால் பதிக்கப்பட்டிருக்கும். வெண்டுக்கடுக்கன் முழுவதும் தங்கத்தினால் செய்யப்பட்டிருக்கும். அதன் நடுப்பகுதி சற்றுப் பருத்து உருண்டையாக விருக்கும். சில வெண்டுக் கடுக்கனின் நடுப்பகுதி உருண்டையாக இருக்கமாட்டாது. பதிலாக சிறிய அளவிலான நிறக்கல் பதிக்கப்பட்டிருக்கும் (அமரசிங்கம், க., 2008)

## குங்குமப் பொட்டு

திருமணம் செய்யாத பெண்கள் நெற்றியில் திலகமாக குங்குமம் அணிவ தில்லை. திருமணம் செய்து குங்குமம் அணியும் பெண்களும் மரண வீட்டிற்கு இறுதி அஞ்சலிக்காகச் செல்லும் போது குங்குமத் திலகம் அணிவது தவிர்க்கப் பட்டுள்ளது. இவ்வழக்காறு மட்டக்களப்புத் தமிழர்களிடையே காணப்படும் பண்பாட்டு அம்சமாகும்.

இல்லற வாழ்வில் இணைந்த பெண்களின் முக்கிய கடமைகளாக அறுசுவை உண்டி தயாரித்தல், கணவன் உணவருந்தும் போது அருகிருந்து பரிமாறல், கணவரையும் மக்களையும் பேணுதல், பாத்திரங்களைக் கழுவி தூயதாக்குதல், வீடு, மனை பெருக்குதல், சாணம் மெழுகுதல், நற்புத்திரர் களைப் பெறுதல் போன்றவைகளாக இருந்தன.

வயலில் வேலை செய்து மாலையில் சோர்ந்துவரும் கணவனுக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்து அவருக்குச் சத்து நிறைந்த தவிடுமுற்றாக நீங்காத அரிசிச் சோற்றுடனான அறுசுவை பொருந்திய உணவு வழங்குவதும், தம்மக்கள் தமது மடியிலேறி விளையாடுவதும் தமக்குக் கிடைக்கும் பெரும் பாக்கியமாகக் கொள்ளுகின்றவர்களாக மட்டக்களப்பு மகளிர் விளங்கி வந்துள்ளனர். அதனை

*மக்களார் மடியினில் மலர்ந்திட் டிலங்கவும்*
*மருங்கி லமர்ந்தே மனம்நிறையத்*
*தக்கவோர் புழுங்கற் தவிடுடைச் சாதம்*
*தந்திடு மாலைத் தண்பொழுதே*
*பக்கலிலிருந்தவர் பசிதீர்த் திடுங்கால்*
*பார்க்குமென் மனத்தின் பரவசமே*
*மிக்கதாஞ் செல்வம் மிடைபடு வாழ்வினின்*
*மிளிர்மட் டுநகர் மேன்மைசொலே*

எனபாடல் ஒன்று கூறுகிறது (ஈழத்துப் பூராடனார், 1992, பக்.11). பொதுவாகப் பெண்கள் விரித்த கூந்தலுடன் இருக்க அனுமதிக்கப்படவில்லை. கைம் பெண் மறுமணஞ் செய்தல் பெரும்பாலும் நடைபெறாதிருந்தது. தன் பிள்ளைகள் தவிர்ந்த மற்றையோருக்கு அவள் மங்கலமற்ற வளாகவும். நற்காரியங்களின் போது விழித்தற்கு அருகதையற்றவளாகவும் கருதப் பட்டாள்.

## மழை, பனி பாதுகாப்புக்கான பொருட்கள்

மழை காலத்தில் வெளியிற் செல்லும் போது தலைவாரப் பெட்டி, தளப்பத்து, சாப்பைப்பாய், குடை என்பனவற்றை மழை, பனியில் இருந்து பாதுகாக்கப் பயன்படுத்தினர். சமூகத்தில் வசதி படைத்தோராய் வாழ்ந்த ஒரு சிலரால் மட்டுமே குடை பயன்படுத்தப்பட்டதாகத் தெரிகிறது. வெண்குடை சீர்வரிசைச் சிறப்புக்களில் ஒன்றாக மட்டக்களப்புத் தமிழர்களால் கொள்ளப்பட்டது.

மீன்பிடிப்பவர்கள் மழைகாலத்தில் மீன்பிடிக்கச் செல்லும் போது தலைவாரப் பெட்டியைத் தலையில் அணிந்துகொள்வர். தலைவாரப் பெட்டி யானது கூம்புவடிவத்தில் அமைந்திருக்கும். மேற்பக்கத்திலும் இருபக்கங் களிலும் மூலைகள் கொண்டதாக இருக்கும். சிலவேளை பின்னால் கொண்டை அமைவதற்கு ஏற்ப ஒரு மூலையும் அமையப் பெறுமாறு நாற்கோணம் கொண்டதாகச் செய்யப்பட்டிருக்கும். பனை யோலையை மட்டையிலிருந்து வேறாகப் பிரித்துக் காயவைத்து பின்னர் ஒவ்வோர் ஓலையாகப் பிரித்து சமமான அளவிற்கு ஓலையை வகிர்ந்து எடுத்துக் கொண்டு தலை வாரைப் பெட்டியைத் தயாரிப்பர். இதுதலையில் தொப்பி போன்று தலைக்கவசமாக அணிவதாகும். இதனைத் தலகாரப் பெட்டி என்றும் கூறுவர்.

மழைக் காலத்தில் சாப்பை என்னும் புற்களினால் பின்னித் தயாரிக்கப் பட்ட மழைக் கவசத்தைப் பயன்படுத்துவர். இதனை சாப்பைப் பாய் என அழைப்பர். இது பாய்போல கூடாரமாகப் பின்னப்பட்டு மேலிருந்து கீழாக ஒரு பக்கம் முற்றாகத் திறந்த நிலையில் உருவாக்கப் பெற்றிருக்கும். மழைக் காலத்தில் சாப்பைப் பாயைத் தலையில் கவிழ்த்துக் கொண்டால் மழை நீரினால் சிறிதளவும் நனையமாட்டார்கள். இச்சாப்பைப் பாயைப் பெரும் பாலும் மீன் பிடித்தல் தொழிலில் ஈடுபடுபவரே அணிவர். பெரும்பாலானோர் தளப்பத்து (தளப்பமரம்) மரத்தின் ஓலையால் ஆன தளப்பத்தினையே மழை காலத்தில் பயன்படுத்துவது வழக்கம். (நாகலிங்கம், இரா., 2009).

கதிர்காமம், மண்டூர் ஆகிய ஆலயங்களில் தீர்தோற்சவத்தன்று சுவாமி தீர்த்த மாடச் செல்லும் பொழுது சுவாமிக்கு முன்னாக தளப்பத்து ஒன்று கொண்டு செல்வது வழக்கமாக இருந்து வருகின்றது. இந்நடைமுறை பழமை போற்றும் பண்பாகக் கொள்ளப்படுகின்றது. சாப்பை, தளப்பத்து ஆகிய மழைக்குப் பாவிக்கப்படும் மழைக்கவசங்களை அத்தாவரத்தின் பெயர் மட்டும் கொண்டே அழைக்கப்பட்டு வருகின்றது.

## vii. தொழில்களும் போக்குவரத்தும்

தொழில் பற்றியே குலம் உயர்வாகமும் தாழ்வாகவும் கணிக்கப்பட்டது. பிறப்பினால் குலம் அமைந்தது என்று கருதப்பட்டமையினால் அவர்கள் ஒரு வகுப்பிலிருந்து மற்றொரு வகுப்பினைத் தழுவிக் கொள்ளவில்லை. அதனோடு குலத் தொழிலை விட்டு வேறோரு தொழிலை மேற்கொள்ளவும் முடியவில்லை. இராச காரிய முறைப்படி குறித்த ஒரு குலத்தில் பிறந்தவர் ஒரே வகையான பணியைச் செய்ய வேண்டும். குலத்தொழிலைக் கைக் கொள்ளாமல் விட முடியாதவாறு இராச காரிய முறை இருந்தது. ஆதலால் தனி மனிதனுடைய உரிமைக்கு இராச காரியம் முரணாக இருந்தது.

அக்காலத்தில் இப்பிரதேசத்தில் விவசாயம், மந்தை வளர்த்தல், மீன் பிடித்தல், எண்ணெய் வாணிபம்,தெங்குச் செய்கை, பருத்திச் செய்கை, நெசவு, நூல் நூற்றல், உலோக வேலை, மேசன் வேலை, தச்சு வேலை, யானை குதிரை வளர்ப்பு போன்றன நடைபெற்றன. எனினும் இவர்கள் விவசாயம், மந்தை வளர்த்தல், மீன்பிடித்தல் ஆகிய தொழில்களையே அதிகளவு கைக்கொண்டுள்ளனர். விவசாயத்தொழில் அனைத்துக்கும் மேலாகக் காணப் பட்டது. அனைத்துத் தொழில் புரிவோரும் இத்தொழிலில் அடங்குபவர்களாக வாழ்ந்தனர்.

பெரும்பாலும், மட்டக்களப்புப் பிரதேசத்தில் குலத்துக்கான பரம்பரைத் தொழிலுடன் உழவுத் தொழிலையும் செய்து வந்துள்ளனர். குயவர் குலத் திலுள்ளவர் மட்பாண்டம் செய்து விற்கும் தொழிலுடன் விவசாயத்தையும் செய்தனர். இப்பிரதேசத்தில் உழவுத் தொழில் பிரதான தொழிலாகவும் ஏனைய தொழில்கள் துணைத் தொழிலாகவும் கொள்ளப்பட்டன. சில இடங்களில் சிறுபான்மை உழவுத் தொழில் துணைத் தொழிலாகவும் நடைபெற்று வந்துள்ளது. ஆயினும் மட்டக்களப்புப் பிரதேசத்தின் உழவுத் தொழில், மந்தை வளர்ப்புத் தொழில் (கால்நடை), மீன்பிடித் தொழில் என்பன பிரதான தொழில்களாக நடைபெற்றன.

மீன் பிடித்தொழிலை மட்டக்களப்பு, ஆரைப்பற்றை, பாலமுனை, கல்லாறு, கரைவாகு, பொத்துவில், அக்கரைப்பற்று, உறுகாமம், பனிச் சங்கேணி, மாங்கேணி, புன்னைக்குடா, கற்குடா, பாசிக்குடா, வாழைச் சேனை முதலிய இடங்களிலும், நெசவு வேலை தாமரைக்கேணி, ஆரைப் பற்றை, பாலமுனை, கோட்டைக்கல்லாறு, அக்கரைப்பற்று, கோளாவில் முதலிய இடங்களிலும், உலோக வேலை, பெரியபோரதீவு, முனைத்தீவு, ஓந்தாச்சிமடம், அன்னமலை, பாண்டிருப்பு, ஏறாவூர் முதலிய இடங்களிலும், இரும்பு உருக்கு வேலை (வண்டிகளின் அச்சு பட்டம் ஆகியனவும் கோடரி,

கத்தி, வாள், அரிவாள் முதலியன) சின்ன உப்போடை, அக்கரைப்பற்று, கல்முனை, மணற்சேனை முதலிய இடங்களிலும் சுண்ணாம்பு செய்தல், நீறு சுடுதல் ஆகிய வேலைகள் கல்லாறு, ஓந்தாச்சிமடம், காரைதீவு, அமிர்த கழி, புளியந்தீவு, புன்னைக்குடா, கற்குடா, கிளிக்குடா. பனிச்சங்கேணி முதலிய இடங்களிலும் தச்சு வேலை ஆரைப்பற்றை, பெரிய உப்போடை, புளியடிக்குடா முதலிய இடங்களிலும் மட்பாண்ட வேலை ஏறாவூர், பாண்டிருப்பு, செங்கலடி, வந்தாறுமூலை ஆகிய இடங்களிலும் பிரதானமாக நடைபெற்று வந்துள்ளன. இறக்காமம், புனானை ஆகிய இடங்களில் பணிக்கர்கள் யானை வளர்ப்பைச் செய்துள்ளனர். வளர்ப்பு யானைகள் பெரும்பாலும் தென்னந் தோட்டங்களிலே வளர்க்கப்பட்டன. சிலோன் புளு புக்கின் கணக்கின்படி 1891 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 17 யானைகளும் 112 குதிரைகளும் மட்டக்களப்பில் இருந்துள்ளன.

**உழவுத்தொழில்**

மட்டக்களப்பு விவசாயத்தொழிலானது பெரும்பாலாக உழவுத் தொழிலையே கொண்டிருந்தது. எனினும் ஏனைய பயிர்ச்செய்கைகளும் செய்கை பண்ணப் பட்டு வந்துள்ளன.

மட்டக்களப்புப் பிரதேசத்தில் வேளாண்மை பெரும்போகம், காலபோகம், சிறுபோகம் என மூன்று பிரிவுகளாக செய்கை பண்ணப்பட்டு வந்துள்ளது. நீர் வசதியுடன் நிலத்தைச் சேறாக்கி பங்குனி சித்திரை மாதகாலத்தில் செய்கை பண்ணப்படுவது கால போகம் எனவும், மழை நீரை நம்பி புரட்டாதி ஐப்பசி மாத காலத்திற் செய்யப்படும் வேளாண்மையை பெரும்போகம் (மானாவாரி) எனவும், தை மாதத்தில் கிராமத்தை அண்டிய கரச்சைப் பூமிகளில் குளத்து நீரைக்கொண்டு செய்யப்படும் வேளாண்மையை சிறுபோகம் எனவும் அழைக்கப்பட்டு வருகின்றன. கரச்சைப்பூமியை வெளிப்பூமி எனவும் கூறுவர். மட்டக்களப்பு வாவி நீர் அதன் தென்பகுதிகளில் நன்னீராகக் காணப்படுவ தனால் அதனையும் விவசாயத்திற்குப் பயன்படுத்தி வந்துள்ளனர். வாவிக் கரையில் அமைந்துள்ள பெரும்பாலான வயல்களுக்கு அதன் நீர் பயன்பட்டன. பெரும்பாலான விவசாயிகள் மட்பாண்டம் செய்தல், பெட்டி பாய் இழைத்தல் முதலிய குடிசைத்தொழிலையும் செய்தனர்.

தொழிலை ஆரம்பிக்க முன்னர் ஒரு சுப நேரத்தில் ஆரம்பிப்பது வழக்க மாகும். இதனை ஏர் நாள் எனக் கூறுவர். ஏர் என்பது கலப்பையைக் குறிக்கும் மறு சொல்லாகும். ஏர் நாளன்று வயல் நிலத்தில் வடகிழக்குத் திசையில் (ஈசானிய திசை) மடை வைத்து பூக்கள் சாற்றி தேங்காய் உடைத்து நிலமாகிய பூமாதேவியை வழிபட்டு மண்வெட்டியினால் மண்ணை வெட்டி வரம்பினில்

வைப்பர். அதன் பின்னரே வயலில் வேலைகள் நடைபெறும். நீரைத் தேக்கி வேளாண்மை வளர்வதற்காக வரவைகளாக மண்ணினால் வரம்புகள் கட்டப் படும். வயலினைச் சிறுசிறு பகுதிகளாக பிரிக்கப்பட்டிருக்கும் நிலம் வரவை ஆகும். வரவை பொதுவாக போட்டா வரவை என்றும் கன்னட்டி வரவை என்றும் இருவகையாக உள்ளன. சுமார் முப்பது நாற்பது அடிச் சதுரத்திற்கு உட்பட்ட வரவையைக் கன்னட்டி வரவை என அழைப்பர். சுமார் இதனுடைய இரு பங்கு அளவுடையதும் அல்லது அதற்கு மேற்பட்ட அளவுடையதுமான வரவையைப் போட்டா வரவை எனச் சிறப்பாக அழைப்பர்.

அக்காலத்தில் காலபோக வேளாண்மையை மாடுகளைக் கொண்டு உழுதும், எருமை மாடுகளைக் கொண்டு மிதித்தும் நிலத்தைப் பண்படுத்துவர். மிதித்தல் பெரும்மிதி, இரட்டிப்பு என இரு தடவைகளில் நடைபெற்று வந்துள்ளன. உழவு நிலையெடுப்பு, இரட்டிப்பு என இரு தடவைகளில் நடைபெற்று விதைப்பு வேலை பூரணத்துவம் அடைகின்றது. அக்காலத்தில் காலபோகம் பெரும்பாலும் மாடுகளைக் கொண்டு மிதித்தல் மூலம் நடை பெற்று வந்துள்ளது. மிதித்தலை

*முதல் உழவு நிலை எடுப்பு முதிர்களியின் வயல்தனை*
*பதமாக எருமை கொண்டு பதப்படுத்தல் மிதிப்பாகும்*

என நீரரர் நிகண்டு (ஈழத்துப் புராடனார், 1984, பக்.113) கூறுகிறது.

பெரும் மிதியின் முன்னர் மேலெழுந்த வாரியாகவே வரம்புகள் திருத்தி அமைக்கப்படுகின்றன. இதனைக் கொத்தியிழுத்தல் எனக் கூறுவர். ஏனெனில் இப்போகத்தின் வரம்புகள் மழையினாலும், வெள்ளங்களினாலும், மிருகங்களின் நடமாட்டத்தினாலும் அழிக்கப்பட்டிருப்பதனால் நீரைப் பற்றி வைப்பதற்கான முன்னேற்பாடாக மண்வெட்டியினாற் கொத்தியிழுத்தல் நடைபெறுகின்றது. கொத்தி இழுக்கும் வரம்புகள் பெரும்மிதியின் பின்னர் சீராகக் கட்டப்படும்.

மக்கள் ஆழமற்ற மரக்கலப்பையில் இரு மாடுகள் பூட்டி நிலத்தை உழுதனர். உழவுக்காக எருமை மாடுகள் எருத்து மாடுகள் என்பன பயன் படுத்தப்படும். உழவு வகையின் இருவகை உழவு வேலைகளும் நடைபெற்று நெல் மணிகளை விதைத்து அவற்றைக் கலப்பையால் உழுது மறைத்தலை நெல் மறுத்தல் என்பர். இதனை

*ஏரா லுழுதல் முதலுழவு இரட்டிப்பாகும் மறுவுழவு*
*காரார் விதைத்து நிலங்கடியப் புதைத்தல் மறுத்தலென்ப*

என உழுதலையும் நெல்மறுத்தலையும் நீரரர் நிகண்டு கூறுகிறது (ஈழத்துப் பூராடனார், 1984, பக்.114).

பதப்படுத்தப்பட்ட வயல்களில் விதைப்பதற்கு முன்னர் சுபவேளையில் விதைநெல் மணிகளை ஒரு வரவையின் வட கிழக்குத்திசையில் தூவுவர். பின்னர் வயலில் நெல் விதைக்கப்படும். விதைத்து முடிந்து பயிருக்கு முதலாவது விடும் நீர் கண்கழுவுநீர் எனவும் கண்களவு நீர் எனவும் கூறப்படும். பயிர் வளரும் காலத்தில் பயிர்களுக்கு ஏற்படும் நோய்கள், பூச்சி புழுக்களில் இருந்து பாதுகாக்க ஆலயங்களிலிருந்து இளநீர், தீர்த்தம், மடைப்பள்ளிச்சாம்பல் என்பன எடுத்துச் சென்று வயலைச் சுற்றி விசிறப் படும். வியாழக்கிழமை இரவில் ஆலயம் சென்று தங்கி வெள்ளிக்கிழமை அதிகாலையில் எழுந்து நீராடி வாயிற் சீலை கட்டி ஆலயப்பூசகரினால் இளநீர், ஆலயத்தீர்த்தம் அல்லது மடைப்பள்ளியிலுள்ள அடுப்புச் சாம்பல் என்பவற்றில் ஒன்றையோ அல்லது கூட்டுச் சேர்வையாகவோ பெற்றுக் கொண்டு வயலைக் காவல் செய்வர். இவ்வாறு செய்தலை தீர்த்தம் வளைதல், சாம்பல் எறிதல் என்னும் பெயர்களால் காவல் செய்யும் பொருளின் பெயருக் கேற்ப அழைப்பர். இச்செயல் பூசகரினாலும் நடைபெற்று வந்துள்ளது. பயிர் முற்றி கதிர் வரவுக்கு முன்னர் உள்ள பருவம் குடலைப்பருவம் ஆகும். இப்பருவம் முடிந்து கதிர் வெளி வந்ததும் கதிருக்கு நோய் ஏற்படாதிருக்க வயலின் நடுவில் விண்ணாங்கு மரக்கிளையினை நட்டு, அம்மரக்கிளையில் வெள்ளைத் துணியில் ஒருநுனியில் மஞ்சள் துண்டை முடிந்து அதனை மஞ்சள் நீரினால் தோய்த்து வேளாண்மையில் ஒரு பிடியை அறுத்து அதனை அத்துணியுடன் கட்டிக் கிளையில் தொங்க வைப்பர் (கோவிந்தராஜா, நே., 2009).

இன்றைய தினத்தில் நாகவழிபாட்டுப் பூசை நடைபெறும். வயலில் ஓரிடத்திலோ வயலுக்கு அண்மையில் உள்ள புற்று ஒன்றிலோ இளநீர், பால், பழ வர்க்கம், கற்கண்டு, சர்க்கரை கலந்த உணவை வைத்து வழிபடுவர். மேற்படி கலந்த உணவானது புதுச்சட்டியில் வைக்கப்பட்டு வெள்ளைச் சீலையால் சட்டியின் வாயை மூடிச் சற்றுத் திறந்த வண்ணம் நாகத்திற்குச் சமர்ப்பணம் செய்யப்படும்.

வயலில் நாகதம்பிரானுக்கு வழிபாடு செய்யும் நாளன்று மாலையில் வயிரவருக்கும் வழிபாடு செய்யப்படும். வயிரவ வழிபாட்டில் வேப்பங் குழையுடன் இளநீர், வெற்றிலை, பாக்கு, பழம், மொந்தன் வாழைப்பழம், உரொட்டி முதலியவற்றைப் படைத்து வழிபடுவர். மடையில் வைக்கப்பட்ட வேப்பங்குழையையும் இளநீரையும் எடுத்து வயலைச் சுற்றி வேப்பங் குழையால் இளநீரைத் தெளித்த பின்பு வேப்பங்குழையை வயலின் மத்தியில் நடுவர். இதனால் நெற்கதிர்கள் எவ்வித பாதிப்புமின்றி நல்விளைவைத் தரும் என்று இப்பிரதேச மக்கள் நம்பினார்கள்.

மிருகங்களால் பயிர் அழிவு ஏற்படாதிருக்க வயல்கள் அமைந்த வட்டையைச் சுற்றி வேலிகள் கட்டப்பட்டன. அவ்வேலிகள் கம்புகளால் நடப்பட்டு மாவரைக்கம்புகளால் வரிச்சிட்டுக் கட்டுவர். தற்காலத்தில் உள்ள கம்பியைப் போன்று குறுக்காக வைத்துக் கட்டப்படும் கம்பு மாவரைக்கம்பு எனப்படும். இவ்வேலியை அமைப்பதற்காக வயற் சொந்தக்காரர்களின் வயலின் விஸ்தீரணக்கணக்கின் அடிப்படையில் வேலியின் அளவு பகிர்ந்து கொடுக்கப்படும். மாடு, பன்றி முதலியவற்றால் பயிர் அழிவு ஏற்படாதிருக்க ஒவ்வொருவரும் காவற் பரண் கட்டவேண்டியது கட்டாயமாகும்.

செட்டிபாளையம் சின்னவப்புலவர் அவர்களின் மேல்வரும் பாடல்கள் (வேளாண்மை செய்கை என்னும் ஆண்டு குறிப்பிடப்படாத இப்பாடல்த் தொகுதி அச்சுருப்பெறாத கையெழுத்துப்பிரதியாகும்):

*பன்றி பன்றி என்கிறீர்கள் சண்டித்தன முள்ளதையா*
*பதுங்கி பயிரழிக்குமே பாதுகாக்க வழியைத் தேடுங்கோ*
*கட்டிவேலியை மூட்டி கெட்டித்தனமாக நீங்கள்*
*கண்முளித்து காவல்பாருங்கோ*
*சேறும் சுரியுமாகத் திரட்டியுருட்டி ஐயா தின்றுகளை*
*ஆறிக் கொள்ளுமாம் ஆறும் அடவிகளில் அங்கு*
*படுத்துக் கொண்டு அடுத்தடுத்து வந்து கொள்ளுமாம்*
*கொடுத்த கடன் கேட்பவர் போல் - சினேகிதரே*
*வெடிமருந்தினாலே ஐயா வெருட்டித் துரத்தினாலும்*
*வேலி அருகாக நிற்குமாம் குடியோ*
*டெழுந்து வந்தால் அடியோ டழித்துப் போடும்*
*படி தந்தோன் ஏங்கிப் போவானே - சினேகிதரே*

மட்டக்களப்புப் பிரதேசத்தில் பன்றிக்காவல், படி கொடுத்தல் என்பன பற்றி எடுத்துக் கூறுகின்றது.

### படி

வயலின் முல்லைக்காரனுக்கும் செய்கைக்காரனுக்கும் மந்தை வளர்க்கும் பட்டிக்காரனுக்கும் தொழில் செய்யும் காலத்தில் குடும்பப் பராமரிப்புக்காக இலவசமாகக் கொடுக்கப்பட்ட நெல் படி எனப்பட்டது. தொழில் ஆரம்பிக்கு முன்னரே படி வழங்கப்படுகிறது. அதனைத் தொடர்ந்து மாதமொருமுறை அல்லது இருமுறை படி வழங்கப்பட்டது.

அவ்வாறு மட்டுமன்றி பங்குனி கார்த்திகை ஆகிய இரு காலங்களிலும் படி வழங்கும் நடைமுறை ஆதிகாலம் முதலாக இருந்து வந்துள்ளது. பங்குனி மாதத்தில் புது வருடப்பிறப்பிற்காகவும் கார்த்திகை மாதத்தில் பஞ்ச காலத்தை முன்னிட்டும் இது வழங்கப்படுகிறது. கார்த்திகை மாதத்தினைக் கருத்தலைப்


பஞ்சகாலம் என்பர் மட்டக்களப்புத் தமிழர். இவ்விரு காலங்களிலும் வழங்கப்படும் படிகளை ''ஆண்டு கார்த்திகைப் படி'' என இணைத்துக் கூறும் வழக்கு காணப்படுகிறது. மட்டக்களப்புத் தேசத்துக் கோயில்களில் தொண்டூழியம் செய்வோருக்கும் இந்நடைமுறைப் பண்பாடு இருந்து வருகின்றது.

**வட்டைக் காவல்**

வயல்களுக்கு மிருகங்கள் வந்து பயிரழிவு செய்யாமல் இரவில் காவல் காக்கும் காவற்காரர்களைக் (வயலில் வேளாண்மை செய்வோர்) கண் காணிப்பது அரியாரியின் பொறுப்பிலும் தண்டனை வழங்குவது வட்ட விதானையின் பொறுப்பிலும் இருந்து வந்தது. வட்ட விதானையின் உதவியாளரே அரியாரி. இரவில் சுமார் ஒன்பது, பத்து மணியளவில் அழைப்புமணி, பல நிறச் சீலைத் துண்டுகள், கயிறு என்பவற்றால் பிணைத்த பிரம்பு ஒன்றினைப் பாளைப்பந்த வெளிச்சத்துடன் தான் நின்று கொண்டிருக்கும் வயலின் காவல் காரனிடம் அரியாரி கையளிப்பார். பெற்றுக் கொண்ட காவல்காரன் கடுநடையாகச் சென்று அடுத்த வயல் காவல்காரனிடம் கையளிப்பான். இவ்வாறு ஒவ்வொரு காவற் பரண்களிலுள்ள காவற்காரர் க்ளிடம் பிரம்பு மாறி மாறிக் கொடுக்கப்படும். அவ்வாறு பிரம்பு கொண்டு செல்லும் வேளையில் உரிய வயலின் காவற்காரன் நித்திரையில் இருந்தாலும் அல்லது காவலுக்கு வராது விட்டாலும் அவன் தண்டிக்கப்படுவான். இக் காவல் முறை ''பிரம்பு விடுதல்'' எனக் கூறப்பட்டது.

நெற் கதிர் முற்றியதும் கதிர்களை அரிவாளால் அறுவடை செய்து, நெற்கதிர் உப்பட்டிகளை ஒன்று சேர்த்துக் கட்டாக்கி, களவட்டியில் சூடு வைப்பர். வேளாண்மை வெட்டும் போது சில பிடிக்கதிர்கள் ஒன்று சேர்ந்தது உப்பட்டி எனவும், பல உப்பட்டிகள் சேர்ந்தது கட்டு எனவும், பல கட்டுக் களைச் சேர்த்து மழைநீர் உட்புகாதவாறு குவித்தல் சூடு என்றுஞ் சொல்லப் படும். சுமார் நூற்றைம்பதுக்குக் குறையாத கட்டுக்களைக் கொண்டவை சூடு எனக் கூறப்படாது ''கந்து'' எனக் கூறப்பட்டு வந்துள்ளது. சூடு, கந்து வைக்கும் இடம் வயல் நிலத்தே நீர் தேங்கி நிற்காத உயர்ந்த இடமாகும். சூடுவைக்கப்படும் இவ்விடத்தினை களவட்டி என்பர்.

சூடு இருக்கும் இடத்தின் கிழக்கு அல்லது வடக்குத் திசையில் களவட்டி யைத் துப்பரவு செய்து நிலத்தைச் சமனாக்கி சமனாக்கப்பட்ட களவட்டியின் நடுவில் அரக்கு புதைக்கப்படும். (படத்தைப் பார்க்கவும்)



அரக்குச் சிமிழ்

முதிரைக்கம்பு அல்லது விண்ணாங்குக் கம்பில் வைத்துக் கட்டப் பெற்ற நெற்கதிர் வெற்றிலை பாக்கு பழம் சேர்ந்தவைகளே அரக்கு எனப்படும். ஆனால் நிரந்தர பல ஏக்கர்களையுடைய வயற் சொந்தக்காரர்களால் (போடி மார்) சங்கு, ஐம்பொன், நெல்மணி, அட்சரத் தகடு ஆகியவற்றை ஒரு சிமிழில் வைத்து அடைத்து களவட்டியின் நடுவில் புதைக்கப்படும். இச்சி மிழ் மூடியுடைய வெண்கலத்தினால் ஆனது. களவட்டியிற் புதைக்கப்படும் அரக்குச் சிமிழ் சூடடிப்பு வேலை முடிந்ததும் இறைவழிபாட்டுடன் மீள எடுத்து வீட்டிற்குக் கொண்டு செல்லப்பட்டு உள்வீட்டறையில் வைக்கப்படும்.

சூட்டைப்பிரித்து நெற்கதிர்களை கம்புகளாலும் கைகளாலும் எடுத்து களவட்டியில் புதைக்கப்பட்ட அரக்கின் மேற்பகுதியில் குவிப்பர். இவ்வாறு குவிப்பதை போரேற்றுதல் என்பர். குவிக்கப்பட்ட கதிர்க் குவியலில் ஏற்றிச் சுற்றிச்சுற்றி வளைந்து வரும்படி தொடுவைகளாகப் பிணைக்கப்பட்ட ஆறு, எட்டு எருமை மாடுகளைச் செலுத்துவர். மாடுகள் சுற்றிச்சுற்றி வளைந்து நடப்பதினால் வைக்கோலிலிருந்து நெல் மணிகள் வேறாகி விடுகின்றன. மாடுகளின் எண்ணிக்கை சூட்டின் அளவைப் பொறுத்ததாகும். சராசரியாக எட்டு மாடுகள் பயன்படுத்தப்படும். சூடடித்தலுக்கு சூட்டின்பருமனைப் பொறுத்து வேலையாட்களின் எண்ணிக்கை அமையும். அத்துடன் பெரியசூடு பகுதி பகுதியாகப் பிரிக்கப்பட்டு போரேற்றிச் சூடடிக்கப்படும். இதனால் சிலவேளை பெரியசூடடித்தல் பல நாட்களுக்கும் நடைபெறும். குவிக்கப்பட்ட கதிர்க்குவியலைப் போர் என்பர். குவியலின் நடுவில் முதலாவது எருமைக் கடா ஏறி நின்ற இடத்திலேயே நின்று சுற்ற ஏனைய மாடுகள் சுற்றி வரும். பொதுவாக இவ்வாறு சூடடிக்கும் எருமை மாடுகளை வாரிக்காலன் என்றும் முதலாவது மாட்டினை அரக்குமாடு என்றும் கூறுவர். வாரி என்னும் சொல் நல்ல விளைச்சலைக் குறிப்பதற்காகப் பயன்படுத்தும் சொல்லாகும். அக்காலத்தில் இரவுக் காலத்திலேயே சூடடிப்பு வேலை பெரும்பாலும் நடைபெற்றது.

மாடுகளின்றி மனிதர்களும் தம் கையால் கம்பின் உதவி கொண்டு அடித்து நெல்லைப் பிரிப்பதும் உண்டு. இவற்றிலே பெண்களே பெரும்பாலும்

ஈடுபட்டு வந்துள்ளனர். இதற்கென பத்துப் பன்னிரெண்டு பெண்கள் சேர்ந்த குழுக்கள் இருந்தன. இவர்களைச் சூடடிப்புப் பெண்கள் என அழைத்தனர். சூடுகள் மழையினால் பாதிப்படையும் சந்தர்ப்பத்தில் இவர்களது பணியைப் பெரும்பாலாகக் கொள்வர். சூடடிக்கும் போது இடைக்கிடை ஒரு பக்கக் கொழுவினால் அமைந்த கம்பினால் கிளறிவிடுவர். இக்கொழுக்கம்பினை ''வேலைக்காரன் கம்பு'' எனக் கூறுவர். வைக்கோலிலிருந்து நெல்லைப் (பொலியை) பிரித்தெடுத்து நெல்லைக் குவித்து காற்றில் தூற்றுவர். முக்காலி வடிவில் நான்கு கம்புகள் கொண்டு கட்டப் பெற்ற சுமார் ஐந்தடி உயரமுள்ள கருவியில் ஏறி நின்று நெல்லைக் கைப்பெட்டி மூலம் சொரிந்து தூற்றுவர். இக்கருவியை ''அவரி'' என்பர். தூசகற்றிப் பெற்ற நெல் வைரப் பொலி எனவும், தலைப்பொலி எனவும் பெயர் பெறும். மீண்டும் இரண்டாந் தடவையாகத் தூற்றி எடுக்கப்படும் நெல்லை இரண்டாம் பொலி எனக் கூறுவர். இரண்டாம் பொலியில் சற்றுத் தரம் குறைந்த நெற்பகுதியைக் ''கந்துமுறி'' எனவும், மண்கட்டிகள் உள்ள பொலியினை ''மண்ணாங்கட்டி'' எனவும், கழிபடும் பகுதியைப் ''பதக்கடை'' எனவும் பகுத்து வெவ்வேறாகக் கடகங்கள், சாக்குகள், பட்டறைகள் என்பவற்றில் சேகரிப்பர். பொலியினைத் தூற்றுவதற்காகப் பயன்படுத்தும் கைப்பெட்டியைக் ''குஞ்சுவாயன்'' எனவும் அளக்கும் கருவியாகிய மரக்காலைக் ''கணக்கன்'' எனவும் அழைப்பர்.

சூடடிப்பு முடிவுற்று நெல்லை வீட்டிற்குக் கொண்டு செல்லும் நாளில் ஏழைகளும் பரதேசிகளும் களவட்டிக்கு வந்து பிச்சை வாங்கிச் செல்வர். இதனைக் களவட்டிப் பிச்சை என்பர். இவர்களுக்கு நெல் களவட்டிப் பிச்சையாக வழங்கப்படுகின்றது.

காலபோகச் சூடடிப்பின் இறுதி நாள் இரவில் வீடு வேய்வதற்கான வைக்கோலைத் தூசகற்றிச் சேகரிப்பர். இதற்கான வைக்கோலை நீளமுடைய தான நெல்லினத்தின் சூடடித்த வைக்கோலிலிருந்தே சேகரிப்பர். மட்டக் களப்புப் பிரதேசத்தைப் பொறுத்தவரை உழவுத் தொழிலானது தொழில் மட்டுமன்றி அது வாழ்க்கை முறைக் கலாசாரமும், பண்பாடும் இணைந்த ஒரு சமூகவியல் நடவடிக்கையாகும்.

**நெல்லினங்கள்**

அக்காலத்தில் பலவகையான நெல்லைச் செய்கை பண்ணினார்கள். வெள்ளைப் பெருமாள், சீனெட்டி, வாணன், முருங்கன், வெள்ளையன் (வெண்நெல்), கறுப்பன் (கருநெல்), சென்நெல் (சிவப்பு நெல்), சம்பா (முத்துச்சம்பா, குண்டுச்சம்பா, சீரகச்சம்பா, புனுகுச்சம்பா, ஆவரம்பூச்சம்பா, மிளகுச்சம்பா) என்பன வழக்கில் இருந்தன (கந்தையா, வி.சீ., 1964, பக்.87

பேரம்பலம், பே., 1959, பக்.101). அவை முற்றி விளையவேண்டிய காலத்தையும் செய்கைபண்ணும் காலத்தையும் மேல் வருமாறு அட்டவணைப் படுத்தலாம்.

| நெல்லினம் | அறுவடைக் காலம் | விதைப்புக் காலம் |
|---|---|---|
| கறுத்தவாணனன் | 6மாதம் | முன்மாரி |
| பெரியகறுப்பன் | 4மாதம் | முன்மாரி, காலபோகம் |
| வெள்ளைக்கறுப்பன் | 4மாதம் | முன்மாரி, காலபோகம் |
| உவர்க்கறுப்பன் | 4மாதம் | முன்மாரி, காலபோகம் |
| மங்கல்கறுப்பன் | 4 மாதம் | முன்மாரி, காலபோகம் |
| முருங்கையல்லிவெள்ளை | 3 மாதம் | முன்மாரி, காலபோகம் |
| பெருவெள்ளை | 3 மாதம் | முன்மாரி, காலபோகம் |
| சித்திரக்கலை | 3 மாதம் | முன்மாரி, காலபோகம் |
| சம்பா | 3 மாதம் | முன்மாரி, காலபோகம் |
| வெள்ளைப் பெருமாள் | 3 மாதம் | முன்மாரி, காலபோகம் |
| கல்லுண்டை | 3 மாதம் | முன்மாரி, காலபோகம் |
| கயட்டை | 3 மாதம் | முன்மாரி, காலபோகம் |
| தம்பலக்கயட்டை | 3 மாதம் | முன்மாரி, காலபோகம் |
| இளங்கலையன் | 3 மாதம் | முன்மாரி காலபோகம் |
| சின்னட்டி வெள்ளை (சீனெட்டி) | 2, 2½ மாதம் | முன்மாரி, காலபோகம் |
| கறுத்தச் சின்னட்டி (சீனெட்டி) | 2, 2½ மாதம் | காலபோகம் |

(S.O.Canagaratnam, 1921)

வயலைக் குத்தகைக்குப் பெற்றோர் வயல் சொந்தக்காரருக்கு வைக்கோலால் அழகாகச் செய்யப்பட்ட கோட்டையினுள் நெல்லை வைத்து தயிர்ப் பானை வாழைக்குலை முதலியவற்றைக் காற்றாடி மூலம் காவிச் சென்று வழங்குவர். இது புதிர்க் கோட்டை எனப்படும். முதலில் கோயிலுக்குப் புதிர்க் கோட்டை கொடுத்த பின்பே குத்தகைக்கான கோட்டை கொண்டு செல்லப்படும். போடிமாரின் வீட்டு முற்றத்தில் வயலில் விளைந்த நெற்குவியல் வயலில் வேலை செய்வோருக்கான படிக்காகவும் அடுத்த முறைக்கான விதை நெல்லுக்காகவும் மழை புகாதவாறு பட்டறையினுள் வைத்துப் பேணப்படும். இவற்றை முறையே படிப்பட்டறை எனவும் விதைநெற் பட்டறை எனவும்

கூறுவர். இவ் விதை நெற் பட்டறையில் நாடை, பீர்க்கு முதலிய கொடிகள் படர விடப்பட்டிருந்தன.

கோயிலுக்குப் புதிர் கொடுத்ததும் இறந்த மூதாதையரான பிதிர்களுக்கு (உத்தியாக்கள்) புதிய அரிசி கொண்டு சமைத்த உணவினால் வழிபாடு செய்த பின்பே புதிய நெல்லிலிருந்து பெற்ற அரிசியை உணவாகக் கொள்வது வழமை. பிதிர் வழிபாட்டில் ஏழைகளுக்கு விருந்தளித்தல் தவறாது கடைப் படிக்கப்பட்டு வருகின்றது.

## நீர்ப்பாசனம்

மட்டக்களப்பின் கிராமங்கள் தோறும் அமைக்கப்பட்டுள்ள கிராமக் குளங்கள் வயல்களுக்கு மட்டுமன்றி கிராமத்திலுள்ள கிணறுகள் வற்றாதிருக்கவும் மந்தைகள் வாழவும் தோட்டப்பயிர்ச் செய்கை சிறக்கவும் பேருதவி புரிந்தன. பண்டைக்காலத்தில் சிற்றரசர்களாலும், வன்னிமைகளாலும், கிராம மக்களின் கூட்டு முயற்சிகளினாலும் ஆக்கப்பட்ட குளங்கள் இன்றும் நன்மை அளிப் பவைகளாகக் காணப்படுகின்றன. இக்குளங்களை காலத்துக்குக் காலம் அரசினரால் புத்துயிர் அளிக்கப்பட்டு வருகின்றன.

நீர்ப்பாசன முறைகளில் ஒன்றாக முக்காலி கட்டி அதனில் ஏத்து என்னும் கருவியைப் பூட்டி அதன் மூலமாக மட்டக்களப்பு வாவியின் நீரை இறைத்து பயிர்களை வளர்க்கும் முறை இருந்து வந்துள்ளது. இம்முக்காலியில் ஒருவர் முதல் மூவர் மூன்று ஏத்துக்களைப் பூட்டி இறைத்து வந்துள்ளனர். வயலி லிருந்து நீரை வெளியேற்றுவதற்கும் ஏத்தால் இறைக்கும் இம்முறை பயன் பட்டது. (படத்தைப் பார்க்கவும்)



ஏத்தால் நீரிறைத்தல்

அடுத்து, தோட்டப் பயிர்ச்செய்கையின் போது மழை குறைவாக உள்ள காலங்களில் சுமார் பதினைந்து, இருபது அடி அகலமானதும் ஆழமானதுமான பெரிய துரவுகளின் (கிணறு போன்ற அமைப்பான மடு) மூலம் நீரைப் பெற்று பயிர்ச் செய்கையை மேற்கொண்டனர். பண்டைக் காலத்தில் துரவுகளில் இருந்து பல வழிமுறைகளில் நீரைப் பெற்றனர். மரத்தினால் செய்யப்பட்ட பெரிய பெட்டி அமைப்பைப் போன்ற பட்டையினால் நீரைப் பெறுவது ஒரு முறை. அதாவது பட்டை என்பது நீரை மொண்டு (கோதி அள்ளி) எடுக்கும் பாத்திரமாகும். அது சுமார் இரண்டு, மூன்று கலன் நீரைக் கொள்ளக் கூடியதாக பாரமற்ற ஒரு வகை மரத்தைக் குடைந்து எடுக்கப்பட்டதாகும். இதனை துலாப்பட்டை எனவும் கூறுவர். இப்பட்டையில் கட்டப்பட்ட கயிற்றின் பெரும் பகுதி உருளை வடிவான மரக்குற்றி ஒன்றில் சுற்றப்பட்டிருக்கும். இதில் இரண்டு மாடுகளைப் பிணைத்து கலப்பை பூட்டி மாடுகளில் நுகத்தை வைத்துக் கட்டி, கயிற்றினால் முன்னும் பின்னுமாக மாடுகளை நடத்தி நீரைப் பெற்றனர். இதனை பட்டை அல்லது கவளை என அழைத்தனர்.

மாடுகளை இவ்வேலைக்காகப் பழக்கியிருப்பர். மாடுகளை நடத்துபவர் மாடுகளைப் பின் நோக்கிக் கயிற்றினால் இழுக்க இழுக்க உருளையின் ஓர் நுனியில் கயிற்றினாற் கட்டித் தொங்கவிடப்பட்ட பட்டை துரவில் இறங்கும். அவ்வேளையில் துரவுக்குக் குறுக்காகப் போடப்பட்டிருக்கும் மரம் அல்லது பலகையின் மீது ஒருவர் நின்று கயிற்றினைப் பிடித்து துரவுக்குள் சென்ற பட்டையால் நீரை மொண்டு எடுப்பார். அவ்வாறு நீரைக் கோதி அள்ளியதும் மாடுகளை நடத்துபவர் மாடுகளை முன் நோக்கி நடத்த நடத்த நீர்ப்பட்டை யானது மேல் நோக்கி வரும். மேலே வந்ததும் பலகை மீது நிற்பவர் பட்டையைப் பிடித்தெடுத்து நீர் செல்வதற்காக அமைக்கப்பட்ட வாய்க்காலில் (நீரோடுங் கால்) நீரை ஊற்றுவார். அதன் மூலம் செல்லப்பட்ட நீரைப் பயிர்ப் பாத்திகளுக்கு பிரித்துப் பாய்ச்சுவதற்காக ஒருவர் செயற்படுவார். இவர் தண்ணீர் மாறுபவர் என அழைக்கப்பட்டார். பயிர்களுக்கு தண்ணீரை மாறி மாறி வழங்குவதனால் தண்ணீர் மாறுபவர் என்னும் பெயரைப் பெற்றார்.

மேட்டுநிலப் பயிர்களுக்கு நீரைப் பாய்ச்சுவதற்கான இன்னுமோர் முறை உபயோகத்தில் இருந்தது. அக்காலத்தில் இது பாரிய நீர்ப்பாய்ச்சும் முறையாக கொள்ளப்பட்டது. இம்முறை முன்னர் கூறப்பட்ட கவளைமுறையிலும் சற்று வித்தியாசமானது.

நீரைப்பெறும் ஆற்றின் அருகில் பத்து பன்னிரெண்டு அடி இடைவெளி இருக்கத்தக்கதாக கவர் உள்ள வைரம் பொருந்திய இரு மரத்தூண்களை நாட்டி, இம்மரத் தூண்களின் கவர்களினுள் குறுக்காக வைரமான மரம் போடப்படும்.

இரு மாடுகளைப் பிணைத்து நுகம் பூட்டி நுகத்தில் தேர் இழுக்கும் வடம் போன்ற ஒரு கயிறும் அதனிலும் சிறிய கயிறும் இணைக்கப்படும். இவ்விருவகைக் கயிறும் தண்ணீரை மொண்டு இறைக்கும் நீளத்துக்குக் குறையாது இருக்க வேண்டும். போடப்பட்ட குறுக்கு மரத்தில் மத்தியாக மரம் அல்லது இரும்பினாற் செய்யப்பட்ட கப்பி போன்ற வளையம் பொருத்தப்படும். இவ்வளையத்தின் ஊடாக பெரியகயிறு சென்று நீரை மொள்ளுவதற்கும் பெற்ற நீரை மேனோக்கிக் கொண்டுவந்து இறைப் பதற்கும் பயன்படுத்தப்படுகின்றது.

நீரை மொள்ளும் பை மாட்டுத் தோலாலானது. அது சுமார் ஐம்பது, அறுபது கலன் நீரைக்கொள்ளக்கூடியது. அதன் மேற்பகுதியான வாய்ப் பகுதி ஏறக்குறைய மூன்று, மூன்றரை அடி விட்டமுள்ளதும் கீழ்ப்பகுதி சுமார் ஒரு அடி விட்டமுள்ளதுமாகக் கூம்பு வடிவில் அமைக்கப்படும். இதன் நீளம் ஏறத்தாழ ஐந்து, ஆறு அடி அளவினதாக இருக்கும். இவ்வாறு குவிந்துள்ள அடிப்பகுதி மடிக்கக்கூடியதான அமைப்பில் சுமார் ஆறு அங்குல அகலத்தில் உறுதியாகத் தைக்கப்பட்டிருக்கும். மடியக் கூடியதாகத் தைக்கப் பட்ட இடத்தில் துளையிடப்பட்ட வட்டவடிவமும் பாரமுடையதுமான கருங்கல், மரக்கட்டி, இரும்புக்கட்டி இணைக்கப்பட்டிருக்கும். இக்கல்லுடன் தொடர்புடையதாக சிறிய வளையமான கப்பி பொருத்தப்பட்டிருக்கும்.

மாட்டினை நடத்துவோன் (கவளை மாட்டுக்காரன்) பெரிய கயிறை ஒரு தோளிலும் சிறிய கயிறை மற்றைய தோளிலுமாகப் போட்டுக் கொள்வான். மாட்டினை பின்னோக்கியும் முன்னோக்கியும் நடத்த நடத்த கயிற்றுடனான தோற்பை கீழிறங்கி நீரை மொள்ளுவதும் மேனோக்கி வந்து நீரை இறைப்பதுமாகச் செயற்படும். பெரியகயிற்றை நீரைப் பெறுவதற்கும் சிறியகயிற்றை அடிப்பகுதியை மடிப்பதற்குமாகக் கயிறுகளை விடுவதும் வளைவதுமாகச் செயற்படுவார். நீர் மொள்ளப்பெற்றதும் சிறிய கயிற்றினை இழுக்க அடிப்பகுதி மடிந்து கொள்ளும்.

நீரைத் தேக்குமிடத்தில் நிலத்திலும் சற்று உயரமானதாக நீர்த்தொட்டி ஒன்றை அமைத்திருப்பர். மொள்ளப்பட்ட நீரானது இத்தொட்டியினுட் செலுத்தப்பெறும். தொட்டியினுள் விழுந்த நீரானது இரண்டு, மூன்று வழியாக (வாய்க்கால்) பயிர்களுக்குப் பாய்ச்சப்படும். நீர் வழிகளுக்கேற்ப நீரைப் பாய்ச்சுவோர் எண்ணிக்கையும் அமையும். ஒரே தடைவையில் ஐம்பதறுபது கலன்நீரைப் பெறுவதால், கவளை மாடு முதல் வேலையாட்கள் வரை வேலைகள் துரிதகதியில் நடைபெறும். இதன்காரணமாக நாளொன்றில் பெரும்பாலும் மூன்று மணித்தியாலங்களுக்கு மேல் வேலை செய்வதில்லை.

மாடுகள் நின்று வேலை செய்யும் இடம் நிழலாக இருக்கத்தக்கவாறு திறந்தவெளிக் கொட்டில் அமைக்கப்பட்டிருக்கும். இம்முறை உச்ச அளவான நீரைப் பெறும் முறையாக இருந்தது. கவளை மாடுகளின் சக்திக்கு ஏற்ப தோற்பை பருமனின் அளவு மாறுபடும். இம்முறையில் பயன்படும் பொருட்கள்

தோற்பை

தோற்கல்

வளையங்கள் (கப்பிகள்)

கயிறுகள்

மாடுகள்

நுகம்

வேலையாட்கள்

மேற்படி பொருட்கள் அனைத்தையும் சேர்த்துக் கவளை அல்லது தோற்பை என அழைக்கப்படுகிறது. அதில் பயன்படும் மாடுகளைக் கவளை மாடுகள் எனவும், மாடு நடத்துபவனைக் கவளைக்காரன் எனவும் அழைக்கப் படுகின்றன. தோற்பை, தோற்பைக்கல் என்பவை முறையே தோப்பை, தோப்பைக்கல் என மருவி அழைக்கப்படுகின்றன.

வாய்க்காலை ''நீரோடுங் கால்'' எனவும் ''கான்'' எனவும் அழைத்து வந்துள்ளனர். வாய்க்காலை மண்ணினால் அமைத்தும் பனை, தென்னை போன்ற மரங்களைக் குடைந்து எடுத்து வாய்க்காலாக ஆரம்ப முனைப்பில் அமைத்தும் நீர் செல்லும் வழியாகப் பயன்படுத்தினர். சில வேளைகளில் நீரைத் துரவில் இருந்து பெற்று நீர் ஊற்றப்படும் இடத்தில் மட்டும் பீலியாக மரத்தைக் குடைந்து வைத்து நீரைச் செலுத்தினர்.

தண்ணீரை மொள்ளும் கவளையையும், நுகத்தையும் தொடுக்கும் வார்க்கயிற்றைப் பிடித்திழுக்க மொள்ளும் பாத்திரம் கவிழ்ந்து வாய்க் காலில் நீரை ஊற்றும் முறையும் இருந்துள்ளது. இம்முறை பெருவாரியான நீரைப்பெற பயன்படுத்தப்பட்டது.

இவ்வாறு பண்டைக்காலத்தில் மேட்டுநில தோட்டப்பயிர்ச் செய்கைக்கு நீரைப் பாய்ச்சி பயிர் விளைவைப் பெற்றனர். பிற்காலத்தில் இரு கவருடைய துலாமரம் நிறுத்தி கவருள் நடுவில் குறுக்காக அச்சுச்சட்டம் என்னும் ஒரு சட்டத்தை மாட்டி அடி பெருத்து நுனி சிறுத்த துலாக் கொடியை கவர்களுக் கிடையில் மாட்டுவர். துலாக்கொடியின் நுனியில் பட்டைக் கொடியை இணைத்து மாட்டுவர். பட்டைக்கொடி ''பத்திக்கை'' எனவும் அழைக்கப்

பெறுகின்றது. பட்டைக்கொடியின் நுனியில் பட்டை கட்டப்படும். துரவு அல்லது கிணற்றில் நீர் இறைக்கும் போது துலாக் கொடியின் அடியில் மரக்குற்றி அல்லது இரும்புக்கட்டி என்பவற்றால் பாரம் கட்டுப்படும். பாரம் கட்டுவதனால் நீரை அள்ளுபவருக்கு இலகுவான தன்மை ஏற்படுகின்றது. இம்முறை தற்போதும் கிணறுகளில் நீர் அள்ளப் பயன்படுகின்றது.

1. துலாமரம்
2. துலாக்கொடி
3. கவர்.
4. குறுக்குச்சட்டம்
5. பாரம்
6. பட்டைக்கொடி (பத்திக்கை)
7. பட்டை அல்லது வாளி
8. துரவு அல்லது கிணறு

என்பன இம்முறையில் பயன்படுகின்றன.

### பராமரிப்பு

அக்காலத்தில் கணவன் போடியாரின் வயலிலும் மனைவி போடியாரின் வீட்டிலும் வேலை செய்து வாழ்வார்கள். அவர்களது குடும்பத்தைப் பராமரிக்கும் பொறுப்பு போடியாரைச் சார்ந்திருந்தது. இவர்கள் வேலை செய்ய முடியாதவாறு வயோதிப நிலையடைந்த காலத்தும் அவர்களுக்கு ஊண் உடை மருத்துவச் செலவு என்பவற்றை போடிமாரோ அல்லது போடி மாரின் பிள்ளைகளோ வழங்கிப் பராமரிக்கும் தன்மை மட்டக்களப்புத் தமிழரிடத்தே இருந்து வரும் பண்பாட்டுச் சிறப்பாகும்.

### நெல்லும் கூலியும்

அக்காலத்தில் மட்டக்களப்புப் பிரதேசத்தில் நிலமானிய முறை இருந்துள்ளது. அந்நாட்களில் கூலியாக மன்னனால் நிலமும், மக்களால் நெல்லும் கொடுக்கும் முறையே நடைபெற்று வந்துள்ளது. குடிமக்களாகிய வண்ணார், நாவிதர் ஆகியோருக்கும் கோயில் பூசகருக்கும் வயல் அறுவடையின் பின்பே கூலிகள் கொடுக்கப்பட்டன. மேலும், அவர்கள் வயலுக்குச் சென்று வேளாண்மைக் கதிர்க் கட்டு ஒன்றைப் பெறுவர். வயலின் அறுவடை செய்து கதிர்களை ஒன்று சேர்த்து களவட்டிக்குக் கொண்டு செல்வதற்காக ஒருவர்

தூக்குமளவு உச்சச் சுமையுள்ளதாகக் கட்டப்பட்ட கதிர்களே ''வேளாண்மைக் கட்டு'' என வழங்கப்பட்டது.

## நிருவாக முறை

போடியார் அல்லது வயல் சொந்தக்காரன், முல்லைக்காரன், செய்கைக்காரன், குருவிக்காரன், வட்டைவிதானை, அரியாரி முதலியோர் உழவுத் தொழிலின் பங்காளர்களாவர். பல ஏக்கர் நில வயல்களுக்கு உரிமையாளரைப் போடியார் எனக் கௌரவப் பெயர் கொண்டு அழைப்பர். அவர்களது பிள்ளைகளுக்கும் போடிப்பட்டம் தொடரலாயிற்று. ஆகவேதான் நிலபுலங்களை உடையவர் களை இன்றுவரை போடியார் எனக் கூறும் வழக்கம் தொடர்ந்து வந்துள்ளது. ''வேலிக்கட்டைக்குப் பிறந்தாலும் போடிப்பட்டம் போகாது'' என்பதும் மட்டக்களப்புத் தமிழரிடையே வழங்கும் பழமொழிகளில் ஒன்றாகும். ஒல்லாந்தர் காலத்தில் மட்டக்களப்புப் பிரதேசத்தில் இருவர் போடிமாராக நியமிக்கப்பட்டிருந்ததாக மட்டக்களப்பு மான்மியம் குறிப்பிடுகின்றது.

பெரும்பாலும் பெருந்தொகையான மாடுகளின் சொந்தக்காரரும் போடியாராய் இருப்பார். ஆனால் சிறிய அளவில் மாட்டுப்பட்டி வைத்திருப் பவரைப் போடியார் என அழைக்கும் வழக்கில்லை. பழங்காலத்தில் போடிமாரும் மாட்டுப்பட்டியாளரும் செல்வந்தராக இருந்ததுடன் சமூகத்தில் கௌரவத்துக்குரியவராகவும் மட்டக்களப்புப் பிரதேசத்தில் திகழ்ந்தனர். இவர்களுக்குக் கீழ் பல பணியாளர்கள் இருந்தனர். அவர்களது குடும்ப ஜீவனோபாயம் போடிமாரிடமே இருந்தது.

நிலச்சுவாந்தரான போடியாரின் குடியிருக்கும் வளவு பற்றிக் கூறுகையில் வளவு வேலியும், வேலியில் படரும் செடிகளும், வளவில் வளர்க்கும் பயிர்களும், பசிக்கு விருந்தளித்ததற்கான அடையாளமும், பசுக்களும், வண்டிகளை இழுக்கும் காளைகளும், அவற்றுக்கான வைக்கோல் குவியல் களுயும், முற்றத்தில் நெற்பட்டறைகளும் கொண்டதாக விளங்கியது. இதுபற்றி பள்ளுப்பாடலொன்று பின்வருமாறு தெரிவிக்கின்றது.

நாடை பீர்க்கு படர்ந்த வேலிகள் - கொண்டு
நாலுபக்கமும் அடைத்த வளவிலே
தோடை எலுமிச்சைசெழித்திடும் - பாளை
தோகை விரிக்கும் இளந்தென்னையே

வாழைகள் குலைதள்ளும் வண்ணமே - ஆனால்
வாழையில் இலைகளைக் காணோமே
ஏழைகள் விருந்தினர் வருவதால் - அவர்க்கு
இலைபோட வெட்டி இழந்ததே

*வாசலில் அறுவடை மலைபோலே - உயர்ந்து*
*வளர்ந்த பட்டறை வரிசைகள்*
*வாசமாய் வளர்திடும் பசுக்களின்பட்டியும்*
*பக்கமாய் வைக்கோலின் போர்களே*

*பெட்டி வண்டி ஒன்றின் அருகிலே - கட்டை*
*பெரியவண்டில் ஒன்றும் நிற்குமே*
*கட்டி இழுத்திடும் காளைகள் - நான்கு*
*களைப்பாறி படுத்தசை போடுமே*

இப்பள்ளுப்பாடல் க. ஞானரெத்தினம், க.தா.செல்வராசகோபால், (2003, பக்.176) அவர்களின் நூலில் குறிப்பிடப்பட்டபடி ஆசிரியர் பெயர் குறிப் பிடப் படாத ''கன்னங்குடா உழுதொழிற் பள்ளு'' என்னும் நூலில் இருந்து பெறப்பட்டுள்ளது.

உழவர் தலைவனை முல்லைக்காரன் எனவும் உழவனை செய்கைக்காரன் எனவும் வயலில் வேலைசெய்வோருக்கு சோறு தண்ணீர் முதலியவற்றைக் கொண்டு செல்லும் கெடுபிடி உதவிகளைச் செய்பவர் குருவிக்காரன் எனவும் அழைக்கப்பட்டனர். குருவிக்காரன் பன்னிரண்டு வயதுக்கும் பதினாறு வயதுக்கும் உட்பட்டவராக இருந்தார். குறிப்பிட்ட பல ஏக்கர் வயல்களைக் கொண்டது வட்டை எனப்படும். அத்தகைய வட்டையை மேற்பார்வை செய்வது வட்டை விதானை என்பாரின் தொழிலாகும். வட்டையின் விதைப்பு, அறுவடை என்பவற்றைத் தீர்மானிப்பதும் குளப்பாய்ச்சல் நீரினைப் பங்கிடு தலும் சுழற்சி முறைச் செய்கைக் காணியின் காணி உரிமையாளர்களின் உரிமைகளைச் செவ்வனே பாதுகாத்தலும் பயிரினை விலங்கினங்களால் அழியாது பாதுகாக்கத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துதலும் அரச கட்டளை களை நிறைவேற்றுதலும் இவரது பணிகளில் சிலவாகும்.

வட்டைவிதானையை காணிச் சொந்தக்காரர்களின் பெரும்பான்மை வாக்குரிமையினால் தெரிவு செய்யும் முறை காணப்பட்டது. அக்காலத்தில் காணியின் விஸ்தீரண அளவின் பெரும்பான்மையே வாக்குரிமையாகக் கருதப்பட்டது. வட்டைவிதானைக்கு உதவியாகச் செயற்படுபவர் அதிகாரி என அழைக்கப்பட்டார். அதிகாரி என்னும் சொல் அரியாரி என மருவி வழங்கலாயிற்று. வட்டைவிதானைக்குரிய ஊதியமாக போடிமார்/காணிச் சொந்தக்காரர் நெல்லை வழங்கினர். வட்டைவிதானைக்குரிய ஊதியத்தை வட்டைவிதானைச் சுதந்திரம் என அழைத்தனர். அரியாரி வயல்கள் தோறும் சென்று வட்டை விதானைச் சுதந்திரத்தை பெற்றுக்கொள்வார். அவற்றில் இருந்து அரியாரிக்குரிய கூலியை வட்டை விதானை வழங்கும் நடைமுறை பின்பற்றப்பட்டு வந்தது.

அக்காலத்தில் மேட்டுநிலங்களில் சேனைப்பயிர்ச் செய்கை நடைபெற்றது. குரக்கன், சோளன், இறுங்கு, பாசிப்பயறு, எள்ளு, தினை, மரவள்ளி, வற்றாளை முதலியன சேனைப்பயிர்களாகச் செய்கைபண்ணப்பட்டு வந்துள்ளன. இப் பயிர்கள் மாரி கோடை இரண்டிற்கும் உரியதாக இருந்தன. சேனைப்பயிர் செய்கைக்காக காடு வெட்டித் துப்பரவு செய்து, கம்புகளாலும் முட்களாலும் வேலியமைத்துக் காவற்குடிசைகள் அமைத்துக் காவல் புரிந்தனர். பறவை களாலும் மிருகங்களாலும் பயிர் அழியாது பாதுகாப்பதற்காகச் சேனைப்பயிர் விளைந்து வீடு கொண்டு வரும் வரையில் காவற் குடிசைகளில் வாழ்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

தெங்குப் பயிர்ச் செய்கையை ஐரோப்பியர் 1841 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய இடங்களில் மேற்கொண்டனர். எனினும் 1896ஆம் ஆண்டு காலப் பகுதியிற்தான் பெரிய நடுகைத்திட்டம் நிறை வேறியது. இவ்வாண்டில் மட்டக்களப்பில் 699 ஏக்கரில் தெங்குப் பயிர் செய்யப்பட்டது. கடற்கரையை அண்டிய பகுதிகளிற் பெருமளவு தென்னை மரங்கள் விருத்தி செய்யப்பட்டன (Lange, 2009, pp.26).

பருத்திச் செய்கை கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே பாவனையில் இருந்துள்ளது. இலங்கையின் கிழக்கு, தெற்கு பகுதியிற் பெருமளவு செய்கை பண்ணப்பட்டது. பருத்திப் பஞ்சு கொழும்பு, காலி போன்ற இடங்களிற் சந்தைப் படுத்தப்பட்டது. போர்த்துக்கீசர் பருத்திப் பஞ்சை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்துள்ளனர். மட்டக்களப்பிற் செய்யப் பட்ட பருத்தித் துணியை ஐரோப்பியர் விரும்பி அணிந்தனர் (Lange, 2009, pp.52).

துணை உணவுப் பொருட்களாக மிளகாய், வெங்காயம் என்பன வற்றையும் பழ மரங்களாக மா, பலா, வாழை, தோடை, முந்திரிகை முதலியவற்றினையும் செய்கை பண்ணினர். மேலும் வெற்றிலைக் கொடி நடுவதும் தொழிலாகக் காணப்பட்டது. வயல் சார்ந்த நிலங்கள் வட்டை, வட்டவான், வெளிகள், முன்மாரி, வில், பள்ளம், கேணி என்றும் குளம், ஓடை என்பவற்றைப் பெரும்பாலும் விகுதிகளாகக் கொண்ட பெயர்களைக் கொண்டும் அழைக்கப்பட்டன.

**மந்தை வளர்ப்புத் தொழில் [கால் நடை வளர்ப்பு]**

மட்டக்களப்பு வாவிக்கு அடுத்துள்ள மேற்குப் பகுதியான படுவான் கரைப் பகுதி மந்தை வளர்ப்பிற்குச் சிறந்த இடமாக அமைந்திருந்தன. எருமை மாடுகளும் பசு மாடுகளும் வளர்க்கப்பட்டன. சிறுபான்மையாக ஆடுகளும் வளர்க்கப்பட்டன. இவைகள் எருமை மாட்டுப்பட்டி எனவும் பசு மாட்டுப்

பட்டி எனவும் ஆட்டுப்பட்டி எனவும் கூறப்பட்டு வந்துள்ளன. மந்தைகளைக் கூலிக்காக மேற்பார்வை செய்வோர் ''பட்டிக்காரன்'' என அழைக்கப்பட்டார். பட்டியை ''காலி'' எனக் கூறும் வழக்கமும் உள்ளது.

மாடுகளின் சொந்தக்காரர் அரச கட்டளையின் நிமித்தம் அவற்றை அடையாளம் கண்டு அறிதல் பொருட்டு அவற்றிற்கு குறி சுட்டனர். இக்குறி வயிற்றின் பக்கமாக முதுகை அண்டிய பகுதியில் சுடப்பட்டது. குறியாக அவரின் அல்லது அவரின் குடும்பத்தின் ஒருவர் பெயரின் முதல் எழுத்தையும், பிரதேசப் பெயரின் முதல் எழுத்தையும், குலவிருதிற்குரிய விருதின் குறியீட்டை பெண்ணினமாயின் பின்னங்காலிலும், ஆணினமாயின் முன்னங் காலிலும் குறியாகச் சுட்டு வந்தனர். கன்று பால் குடி மறந்ததும் கன்றுக்குக் குறிசுடும் பழக்கம் காணப்பட்டது.

மந்தை வளர்ப்போர் மாரி காலத்தில் காடுகளை அண்டியும் கோடை காலத்தில் தமது கிராமங்களை அண்டியும் மந்தைகளை இடம்பெயர்த்துவர். மாரி காலத்தில் மழை, கொசுக்கடி என்பவற்றிலிருந்து மந்தைகளைப் பாதுகாக்கவும் மந்தைகளின் உணவுக்காகவும் காடுகளை அண்டிய பகுதி களுக்கு மாட்டுப்பட்டியைக் கொண்டு செல்வர். அக்காலத்தில் காடுகளும் தரிசுநிலமும் அதிகமாக இருந்தமையால் மாடுகளும் அதிகமான பாலை நல்கியிருக்கலாம். காடுகளில் மாடுகள் வாழும் காலத்தில் புலி கரடி போன்ற கொடிய மிருகங்களால் மந்தைகளுக்கு அழிவு ஏற்படாதிருக்க மந்திர சக்தி கொண்டும் பட்டியைப் பாதுகாத்து வந்துள்ளனர். இத்தகையவர்கள் இன்றும் மட்டக்களப்புப் பிரதேசத்தில் வாழ்ந்து வருகின்றனர். மந்தைகளைக் காட்டிற்கு கொண்டு சென்று மந்தை வளர்ப்போர் அங்கு வாழும் குடிசையை ''வாடி'' என அழைப்பது வழக்காகும்.

மந்தை எனக் கூறப்படுவது பொதுவாக ஆடு மாடுகளையே குறிக்கும். மட்டக்களபபில் மாடுகள் எனக் குறிப்பிடப்படுவது பசு இனத்தையும் எருமை இனத்தையுமாகும்.

பசுக்களைப் போலன்றி எருமை இனம் நீரில் அதிக நேரத்தைச் செல வழிக்கும் தன்மையன. ஆதலால் வெப்பம் மிகுந்த வேளைகளில் எருமை இனத்தைக் கொண்டு வேலை செய்வதைத் தவிர்த்துக் கொள்வர். எருமைகள் பெருந் தீனி விலங்காகும். எனவே இதனைக் காடுசார்ந்த பகுதியிலேயே வளர்ப்பர். அதனால் பெறப்படும் பாலும், பால் மூலமாகப் பெறப்படும் தயிர் நெய் முதலியனவும் விற்பனை செய்யப்பட்டன. பண்டமாற்று முறையில் தேவையான பொருட்களையும் பெற்றனர். காடு அண்டிய பகுதிகளில் வாழும் பொழுது வேடர், சிங்களவர் போன்ற ஏனைய சமூகத்தாருடன்

பழகும் வாய்புக்குள்ளாயிருந்தனர். இவர்களுடனான தொடர்பின் காரணமாக பண்டமாற்று முறையில் இலகுவாக உணவுப் பண்டங்களைப் பெற்றனர்.

மந்தை வளர்ப்போர் எருமை இனங்களைச் சேற்று வயலில் மிதிப்பு வேலைகளுக்குப் பயன் படுத்தினர். பசு இன எருதுகளை உழவு வேலை களுக்கும் வண்டி இழுப்பதற்கும் பயன்படுத்தினர். சிறு பான்மையாக எருமை இனங்களும் காலை மாலை வேளைகளில் உழவு வேலைகளுக்குப் பயன் படுத்தப்பட்டன. பொதி வண்டிகளை இழுப்பதற்கும் எருதுகளுக்கு அடுத்த படியாக எருமையினம் பயன்படுத்தப்பட்டது. இவைகளில் இருந்து பெறப் பட்ட ஊதியமும் மந்தை வளர்ப்போருக்கு பொருளாதாரத்தைக் கொடுத்தன. மாடுகளின் சலம், சாணம் முதலியன பயிர்களுக்குப் பசளையாகப் பயன் பட்டன. மட்டக்களப்புத் தமிழர்களிடத்தே ''அம்மா என்றால் பாலும் அப்பா என்றால் சோறும்'' என்னும் பேச்சு வழக்கானது மாடுகளின் பயனைப்பற்றி எழுந்த பேச்சு வழக்காகும். அதாவது பெண்ணின மந்தைகளால் பால் கிடைக்கப்பெற்றன. ஆணின மந்தைகள் வயல் வேலைகளுக்குப் பயன்படுத் தப்பட்டதால் அவற்றின் கூலி பயிரின் விளைவின் பின்னே தானியமாகக் கிடைக்கப்பெற்றன. இதனாற் போலும் மேற்படி பேச்சு வழக்கு தோன்றியது எனலாம்.

வீடுகள் தோறும் ஓரிரு பசு மாடுகளை வைத்துக் கொள்ளும் மரபும் காணப்பட்டது. பெரும்பாலும் நன்கு சாதுவான மாடுகளையே வீடுகளில் வைத்துக்கொண்டனர். இவ்வாறான சாதுவான பசுக்களை ''மடவிசை'' மாடுகள் என அழைத்தனர். பால் பெறும் நிலையிலுள்ள ஓரிரு பசுக்களையும் கன்றுகளையும் வீட்டில் வளர்த்தனர்.

மட்டக்களப்புத் தமிழர் தமது வீடுகளில் ஓரமாகப் பசு மாட்டுக் கொட்டில் அமைத்து பசுக்களை வைத்துப் பராமரித்தும் வந்துள்ளனர். பசுவைப் பார்த்து வெளியிற் சென்றால் செல்லுகின்ற காரியம் கைகூடும் என்பது மட்டக்களப்புத் தமிழர்களின் கொள்கையாக இருந்தது. இதனாற் போலும் பண்டைத் தமிழர் பசுவைக் கோமாதா என்னும் பெயர் கொண்டழைத்தனர்.

கறவைக்காலம் ஒரு நிலையாக இருப்பதில்லை. பால் சிறிது சிறிதாகக் கூடி வற்றுங்கால் அண்மிக்கும் போது சிறிது சிறிதாகக் குறையும். இரண்டாம் மூன்றாம் மாதங்களில் பாலின் விளைவு உச்ச நிலையை அடையும். சில மாடுகளுக்கு ஆரம்பத்திலேயே பால் விளைவு கூடிச் சென்று பின்னர் ஒழுங்கு முறையாகக் குறைந்து செல்லும். பொதுவாக பத்து மாதங்களைக் கறவைக் காலமாகக் கொள்வர். பசுக்களுக்கு கருக்காலம் சுமார் இருநூற்றி எண்பத்து மூன்று நாட்களாகவும் எருமைகளுக்கு சுமார் இருநூற்றித் தொண்ணூறு நாட்களாகவும் கொண்டுள்ளன (வே. பேரம்பலம், 1959). இவற்றினால்

பெறும் பால், தயிர், நெய் முதலியவற்றைத் தாங்கள் உணவாகவும் எஞ்சியதை விற்பனை செய்வது மட்டுமன்றி அதனை மாடு இல்லாதவர்களுக்குக் கொடுக்கும் பண்பும் காணப்பட்டது. பாலைத் தயிராக்கிச் சிறிது சிறிதாக ஆடையைச் சேகரிப்பார்கள். இவ்வாறு சேகரிக்கப்பட்ட ஆடையில் மூன்றில் ஒரு பங்கு நீரைச் சேர்த்து மத்தினாற் கடைவார்கள். மத்து மரத்தினால் செய்யப்பட்டது. மத்தின் முன்பகுதி பந்துபோல் உருண்டையாகவும், கைப் பிடிப்பகுதி உருளை வடிவான பொல்லாகவும் ஒரே மரத்தினாற் செய்யப்பட்ட கருவியாகும். ஆடையை மத்தினாற் கடையும் போது வெண்ணெய் திரண்டு மேலும் மத்தின் சூழலிலும் திரண்டு வரும். கடையக்கடைய இவ்வாறு வெண்ணெய் திரண்டு வரும். போதுமான வெண்ணெய் திரண்டதும் ஒரு பாத்திரத்திலிட்டு அடுப்பில் வைத்து உருக்கப்படும். நன்றாக உருகி நீர்ப்பற்று முழுவதும் ஆவியானதும் அடுப்பிலிருந்து இறக்கப்பட்டு பெறப்படுவதே நறு நெய்யாகும். பசு நெய்யானது மஞ்சள் நிறம் விரவிய வெண்ணிறமாகவும், எருமை நெய்யானது தூய வெண்ணிறமாகவும் காணப்படும்.

எருமை மாடுகள் வைத்திருப்போர் ஆண்டுக்கொருமுறை கூட்டாகச் சேர்ந்து வதனமார் வழிபாட்டினைச் சடங்காக மேற்கொண்டனர். மேலும், தமது பட்டியில் மாடுகளில் இருந்து பால் பெற ஆரம்பித்ததும் காட்டில் உள்ள இத்தி மரத்தின் கீழ் முக்கோணப்பந்தல் அமைத்து முன்னடித் தம்பிரான் எனும் தெய்வத்திற்கு மாடுகளில் இருந்து பெறப்பட்ட பாலினால் பொங்கிப் பூசை வழிபாடு புரிவர். இப்பூசைக்காக மாடுகளில் இருந்து பெறப்பட்ட பாலினாற் பொங்கி பாலில் இருந்து பெறப்பட்ட புதிய நெய்யையும் பொங்கலுக்குப் பாவிப்பர். இவ்வாறு பூசை ஆராதனை செய்த பின்பே மாடுகளில் இருந்து பெறப்பட்ட பால் தயிர் நெய்யைத் தமது உபயோகத் திற்குப் பயன்படுத்துவர். முன்னடித் தம்பிரானுக்குப் பூசை ஆராதனை செய்யாவிட்டால் கன்றுகள் கோதாரி நோயினால் இறந்துவிடும் என்ற கொள்கை உடையவர்களாக மட்டக்களப்புத் தமிழர் வாழ்ந்து வந்துள்ளனர்.

மட்டக்களப்புத் தமிழர் தமது மாடுகளுக்கும் மனிதர்களைப் போன்றே பெயர்களைச் சூட்டி அதனது பெயர்களைக் கூறி அழைத்து அதனுடன் நெருங்கிய உறவினைப் பேணினர். வள்ளி, வல்லை, வெள்ளை, குருமல், மயிலை, கூந்தல், அலங்காரி, ஆரம், சிறியாள், புள்ளம், சுவாதி, மங்கல், துரையம், மாதவி, பெத்தி, தாமரை, லெட்சுமி, சந்தணம், செம்மல், குருநாச்சி முதலிய பெயர்களை ஒவ்வொரு மாடுகளுக்கும் சூட்டி அழைத்து வந்தனர். இதுபற்றி மட்டக்களப்புப் பிரதேச வதனமார் அகவல் பாடல் ஒன்றில்.

"..........................................................
ஆளுக்கொருமாடு அவரவரே கட்டுமென்றார்
ஐந்நூறு மாடும் அணியாகக் கட்டியபின்
செம்மல் குருமல் சொல்லவொண்ணா மங்கலனாம்
வல்லல் அலங்காரி நல்ல குருநாச்சி
சின்னவள்ளி சிறியாள் இனங்காத்தாள்
என்று பெயரும் வகுத்துப் புறப்பட்டார் நயினாரும்"

(வதனமார் குழுமாட்டு கட்டு அகவல் பாடல் வரி 78 - 83)

என சில மாடுகளின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. காலை வேளையில் ஒவ்வொரு மாடும் பால் கறப்பதற்காக நடப்பட்ட மரத்தில் (கணுவில்) கட்டப்பட்டு கன்றுக்காலைக்குள் இருந்த அம்மாட்டின் கன்றைத் திறந்து விடுவர். அக்கன்று கட்டப்பட்டிருக்கும் தாயிடம் வந்து பாலைப் பருகும். அவ்வேளையிலேயே கன்றைப் புறந்தள்ளிக் கட்டிவிட்டு பாலைக் கறப்பர். இதற்காக பட்டியில் மாட்டின் பெயரைச் சொல்லி அழைக்க அம் மாடு கணுவின் பக்கத்தில் வந்து நிற்கும் அல்லது படுக்கையை விட்டு எழுந்து நிற்கும். அப்போது பால் கறப்பதற்காகக் கணுவில் கட்டப்படும். இவ்வாறு பட்டிக்காரனால் தனது பெயரைக் கூறி அழைக்க அதற்குச் செவிமடுக்கும் பழக்கத்தினை மாடுகள் கொண்டுள்ளமையை இன்றும் அவதானிக்கலாம்.

பால்கறக்கும் சிறிய முட்டி பழுது பட்டுப் பாவனைக்குப் பயன்படாது விடினும் தம்மனையிலேயே ஓரிடத்தில் அதனை வைப்பர். அதனை வீசி எறியும் பண்பு மட்டக்களப்புத் தமிழர் இடத்தே காணப்படவில்லை. பால் கறக்கும் சிறிய முட்டி சற்று வாய் பெருத்ததாகவும் சுமார் இரண்டு மூன்று போத்தல் பாலைக் கொள்ளக் கூடியதாகவும் அமைந்திருக்கும். இச்சிறு முட்டியை "கறவை முட்டி" எனக் கூறுவர். பாலைக்கறந்து சேகரிக்கும் முட்டியின் வாயானது சுமார் மூன்று அங்குல அளவுடையதாக குடத்தின் வாய் போன்று இருக்கும். பால் சேகரிக்கும் முட்டியைப் பால்முட்டி எனக் கூறுவர். இவை மண்ணினால் செய்யப்பட்டவையாகும். மந்தைகள் வைத் திருப்போர் கறவை முட்டியுடனோ அல்லது பால் முட்டியுடனோ பாலைக் கொடுப்பதில்லை. வாங்க வருவோர் உற்றார் உறவினர் நண்பர்களாக இருந்தாலும்கொண்டு செல்வதற்காக இரவலுக்கேனும் ஒருக்காலும் வழங்க மாட்டார்கள். இதனைக் கடைப்பிடிப்பதில் அக்கறையுடைவர்களாகக் காணப் பட்டனர். மேலும் தமது மந்தையினை வேறு ஒருவருக்கு விற்பனை செய்யும் போதும் அல்லது நன்கொடை, தானம் செய்யும் போதும் மந்தையினைக் கட்டி இருக்கும் கயிறுடன் கொடுக்கமாட்டார்கள். வேறு கயிறு கொண்டு கட்டியே கொடுப்பார்கள். இதனைக் கயிறு மாறுதல் என்பர். இதனை தமது பண்பாட்டு அம்சங்களில் ஒன்றாகக் கடைப்பிடித்து வருகின்றனர்.

மந்தை வளர்ப்புக்குரிய நிலப் பெயர்களாக காடு, பளை, பிட்டி, வத்தை, தளவாய், கோமாரி முதலியன அமைந்தது. இவ்வாறு அமைந்திருந்தாலும் விவசாயத்தொழிலுக்குரிய இடப்பெயர்களாகவும் இவைகள் விளங்கி வந்துள்ளன.

**மீன் பிடித்தொழில்**

ஆறுகள், வாவிகள், குளங்கள் என்பற்றை அடுத்தும் கடற்கரையை அடுத்தும் வாழ்ந்த மக்கள் மீன்பிடித் தொழிலை மேற்கொண்டு வந்துள்ளனர். மீன்பிடித் தொழிலைப் புரியும் மக்களைக் கரையார் குலமாகக் கணிக்கின்றனர். கரையார் குலத்தவர் அனைவரும் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளவில்லை. இதனை மட்டக்களப்புப் பிரதேசத்தில் உள்ள வயல்களும் தொழில்களும் உறுதி செய்கின்றன. கரையார் என்பதற்கு ஒரு சாதி, வலைஞர், பூமியுடையர், கரையில் வாழ்பவர், இளகார் என்னும் பொருளைத் தருவதாகத் தமிழறிஞர் கூறுவர் (மதுரைத் தமிழ் பேரகராதி, பக்.532). மட்டக்களப்புப் பிரதேசத்தில் தமிழரிடத்து பரவர் என்னும் சாதியினரும் மீன்பிடித் தொழிலை மேற்கொண்டு வாழ்ந்து வந்துள்ளனர்.

மட்டக்களப்பில் கடல் மீன்பிடி, வாவி மீன்பிடி, ஆறு குளம் என்பவற்றில் பிடிக்கப்படும் நன்னீர் மீன்பிடி என்பன காணப்பட்டன. ஆரம்ப காலங்களில் கரையோர நீர் நிலைகளில் மட்டுமே மீன்பிடித்தல் நடைபெற்று வந்துள்ளது.

வாவி கடல் குளம் என்பவற்றினுள் மீன்பிடிக்கச் செல்வதற்குத் தோணி, வள்ளங்கள், கட்டுமரம் என்பன பயன்படுத்தப்பட்டன. பாய்மரத் தோணிகள் கடலில் மீன்பிடிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டன. மீன்பிடித் தொழிலில் மட்டக்களப்பு வாவி பெரும் பங்கினை வகிக்கிறது. பெரும்பான்மையான மீனவர்களுக்கு வாழ்வாதாரத்தினை வழங்கும் இடமாக இது காணப்பட்டது. இதேபோன்று உப்பாறு, வாழைச்சேனை ஆறு போன்ற இடங்களிலும் மீன்பிடித்தல் நடைபெற்றது. கீழே உள்ள படம் முற்காலத்தில் தற்போதைய பார்வீதி ஓரமாக மட்டக்களப்பு வாவியில் மீன்பிடித் தோணிகள் மீன்பிடித் தலைக் காட்டுகின்றது.

பல்வேறு வகையான மீன்பிடி உபகரணங்களும், மீன்பிடி முறைகளும் பயன்படுத்தப்பட்டன. கரப்புக் குத்துதல், கூடுவைத்தல், தூண்டில், கொடிச் சீலை, நண்டுக்கூடு, அத்தாங்கு, கொண்டடி, வலை முதலிய கருவிகளின் மூலம் மீன்பிடிக்கப்பட்டது. கொடிச்சீலையால் மீன் பிடித்தல் என்பது மீன் வடிவில் அமைக்கப்பட்ட கொடியை நீளமான கயிற்றினில் கட்டிச் செல்லும் பொழுது நீரில் உள்ள மீன்கள் அதனை மீன் என நினைத்து உண்ண வரும் போது அதிலுள்ள உபகரணங்களின் (மண்டாக்கம்பு இருகூர்க்கம்பி,



ஆழிக்கயிறு) உதவியுடன் மீன் பிடித்தலாகும். வலைகளின் வகைகளாக வீச்சு வலை, பாட்டு வலை, இறால்வலை, சுறாவலை, கொல்வலை, முட்டுக் கண்வலை, என்பன உபயோகப்படுத்தப்பட்டன. நீர் ஓடைகள், வாய்க்கால்கள் என்பவற்றில் மீன்பிடிப்பதற்கு ''பறி'' என்னும் கருவியும் பயன்படுத்தப் பட்டது. இது ஈச்சை மர இலையின் நடுத்தண்டினைக் கூம்பு வடிவாக வைத்து சில கொடிகளினால் பின்னி உருவாக்கப்படும். நீர் ஓடைகளில் நீர் ஓடும் திசைக்கு எதிராகவே இதன் வாய்ப்பகுதி வைக்கப்படும். இதில் ஒரு தடவையில் ஒரு பெரிய மீனே பிடிபடும். பொதுவாக விரால், மசறி, கணையான் போன்ற பெரிய மீன்கள் இதில் பிடிபடும்.

பண்டைக் காலத்தில் பெரும்பாலும் வீச்சு வலை, பாட்டு வலை ஆகிய வலைகள் மீன் பிடித்தலுக்குப் பயன்படுத்தப்பட்டன. வீச்சு வலை கூம்பு வடிவில் அமைந்தது, மேல் அந்தம் முகட்டுவலை எனவும், கீழ் அந்தம் அளி வலை எனவும் அழைக்கப்பட்டு வந்துள்ளன. அளி வலையில் ஈயமும், முகட்டுவலையில் சூனியக்கயிறும் கட்டப்பட்டிருக்கும். ஊசியினால் பனை மட்டையிலான அளவு மட்டையின் உதவியுடன் முகட்டுவலை தயாரித்து தொடர்ந்து ஒவ்வொரு கண்ணாக வளர்த்துப் பல்லாயிரக்கணக்கான கண்களை உடைய வீச்சு வலை உருவாக்கப்படும். இதன் நீளம் சுமார் பத்து முழம் முதல் பதினாறு முழம் வரை இருக்கும்.

பாட்டுவலையின் மேலந்தம் மடங்கு எனவும், கீழந்தம் அளிவலை எனவும் பெயர் பெறும். மடங்கு இடையிடையே மரச்சில்லுகள் மிதப்பிற்காகக்

கட்டப்பட்டிருக்கும். சுறாவலையில் மரப்பொல்லுகள் கட்டப்பட்டிருக்கும். கீழந்தமான அளி வலை தடித்த சணல் நூலினால் ஆக்கப்பட்டிருக்கும். இவ்வலை சுமார் இருபது பாகம் முதல் முப்பது பாகம் வரை நீளமானது. ஒவ்வொரு தடவையும் தோணியில் இருந்து வாவியினுள் வலையை இறக்கி சில மணி நேரத்தின் பின்னர் தோணியில் ஏற்றி மீன்களைக்கழற்றி எடுப்பது ஒரு பாடு எனப்படும். இவ்வாறு பல பாடுகள் இறக்கப்பட்டு ஏற்றப்படும். இதன் காரணமாகவே இவ்வலை பாட்டு வலை எனப் பெயர் கொள்ளலாயிற்று (அம்பிகாரெத்தினம், த., 2009).

மீன்பிடித்தற் கருவிகளைத் தயாரிப்பதற்கான நூல் சணற் செடியிலிருந்து பெறப்பட்டது. சணற்செடியிலிருந்து பெறப்பட்ட நாரினை ''வடிக்கர்'' கொண்டு நூலாக்கி வலை பின்னுவர். இந்நூல் கடைகளில் வாங்கும் சணல்களை விட வித்தியாசமானதும் உறுதியானதுமாகும். அக்காலத்தில் மீன்பிடிப்போர் வலை தயாரிப்பதற்காகச் சணலை விளைவித்தனர்.

**சணல் நூல் தயாரித்தல்**

சணல்ச் செடிகளின் கம்புகளை வெட்டி சிறுசிறு கட்டுக்கட்டாக நீர், மடு, குளம் ஆகியவற்றில் ஊறப்போடுவார்கள் சில நாட்கள் சென்ற பின் ஊறப் போட்ட சணற்கட்டுக்களை வெளியில் எடுத்து இரு கைப்பிடியளவு சணற்கட்டாக இருகைகளிலும் எடுத்து இறுகப் பிடித்துக் கொண்டு அந்நீரில் அடிப்பார்கள். அவ்வேளையில் கம்புகளில் இருந்து வரும் பஞ்சைப் பிரிப்பர். இது சணற்பஞ்சு எனப்படும். சணற் பஞ்சைக் கற்றை கற்றையாகப் பிரித்து ஒரு கையளவு சணலை சுமார் ஒன்றரையடி அல்லது இரண்டடி அளவுள்ள பனைமட்டைச் சலாகையில் வைத்துக் கட்டி அதன் ஒரு பகுதியை நூல் நூற்பதற்கு ஏதுவாக நீளமாக வைப்பார்கள். வடிக்கர் என்னும் உபகரணத்தைப் பயன்படுத்தி சணற்பஞ்சை நூலாக்கி வடிக்கரில் சுற்றிக் கொள்வார்கள். பஞ்சு சுற்றிய பனைமட்டைக் கருவியை கட்கத்தில் (கமக்கட்டு) இடுக்கி வைத்துக் கொண்டு நூல் நூற்பார்கள். பின்னர் மருத மரம் போன்ற மரத்தின் சென்னிறப் பட்டையை உரலிலிட்டுத் துவைத்து அண்டாப்பானையில் ஊறப்போட்டு அவிப்பார்கள். அவித்து எடுத்த அப்பட்டையின் செந்துவரில் சூடு தணியும் முன்னர் (மெல்லிய சுடுநீர் சாயத்தில்) தயாரித்த நூலைத் தோய்த்து உறுதியாக்கிக் கொண்டு வலையைத் தயாரிப்பர்.

அதுமட்டுமன்றி கடைகளில் விற்பனையாகும் பருத்தி இழைத்திரட்டை (திறணை) வாங்கி நான்கு கம்புகளாலான சட்டத்தில் இட்டு அதில் நூலின் ஒரு முனையைப் பிடித்து இழுத்து இழுத்து நான்கு விரல் கொள்ளும் அளவு சுற்றி எடுப்பர். நான்கு விரல் கொள்ளும் அளவு சுற்றப்பட்டதை ''கைவினா''

என்பர். இவ்வாறு சுற்றி எடுக்கப்பட்ட கைவினாக்கள் பலவற்றை மாலை வேளையில் நீரில் ஊறப்போட்டு காலை வேளையில் எடுப்பார்கள். இதற்கும் வடிக்கர் ஒன்றைப் பயன்படுத்துவர். இதனை படிக்கதிர் என அழைப்பர். இப்படிக்கதிர் சணற்பஞ்சு நூலுக்கான வடிக்கர் போல் இருக்காது. ஈயத்தாலான அல்லது மரத்தாலான ஒருவட்டத்தின் நடுவில் துளையிட்டு ஒரு பென்சிலின் தடிப்பிலான சுமார் ஓரடி நீளமுடைய குச்சியின் முனையை அதனுள்ளிட்டுப் பொருத்தி மறுமுனையில் கைவினா நூலைக்கட்டிப் படிக்கதிரைச் சுழற்றி நூலினை முறுக்குவார்கள். நூலைச்சுற்றுபவர் தனது ஆடையைக் கொடுக்காகக் கட்டிக் கொண்டு தனது தொடையில் படிக்கதிர்க் கம்பை வைத்து உள்ளங் கையால் உருட்ட உருட்ட படிக்கதிர் நன்றாகச் சுற்றும். இதனால் நூல் முறுக்கேறும். அவ்வேளையில் அதனைப் படிக்கதிரில் சுற்றிக் கொள்வர். ஒரு கைவினா நூல் முடியும் வரை இவ்வாறு நூலினைச் சுற்றி எடுப்பர். இவ்வகை நூலினைச் சிறிய வலை தயாரிப்பதற்குப் பயன்படுத்துவர்.

மீனை நன்றாகப் பிடித்து வருகின்ற வேளையிலும் மந்தையிலிருந்து பாலைக் கறந்து வரும் வேளையிலும் மட்டற்ற மகிழ்ச்சியுடன் காணப்படுவர். அவர்கள் அவ்வேளையில் சிந்தனை உலகில் சஞ்சரிப்பர். அதனாலே தான் ''வீசி வரும் மீனுக்கும் கறந்துவரும் வெள்ளெருமைப் பாலுக்கும் பேச மனம் கொடா'' எனும் பேச்சு வழக்கு மட்டக்களப்புப் பிரதேசத் தமிழரி டத்திலே நிலவி வந்துள்ளது.

மீன்பிடித் தொழில் இடம் பெறும் இடங்களாக கரை, தோணா, தீவு, தாளை, முனை, களப்பு, குடா, கேணி, துறை, ஆறு முதலிய விகுதிப்பெயர்கள் விளங்குகின்றன. இத்தகைய பெயர்கள் விவசாயத் தொழில் நடைபெறும் இடங்களுக்கும் உரியதாகக் காணப்படுகின்றன.

ஏனைய பிரதேசங்களைப் போலன்றி பண்டைக்காலத்திருந்தே நன்னீர் மீனினங்கள் உணவுக்காகப் பிடிக்கப்படும் வழக்கம் மட்டக்களப்பில் காணப் பட்டது. அம்மீனினங்களாவன விரால், சுங்கான், பனையான், கெளுத்தி, கணையான், மசறி போன்றன இங்கு பிடிக்கப்பட்ட விரால், மசறி, கணையான் போன்றவை இலங்கையின் தேசிய மீனினங்கள் என்பது குறிப்பிடத்தக்கது (மேலதிக ஆசிரியர் கைநூல், 1998, பக்.14).


### எண்ணெய் வாணிபம்

எண்ணெய் வெளியூர்களுக்கும் இந்தியாவுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டது. எண்ணெய் தயாரிப்பதற்குரிய உபகரணங்களில் ஒன்றாக செக்கு அமைந் திருந்தது. செக்கானது செக்கு உரல், செக்கு உலக்கை, பாதம் என்னும் மூன்று பகுதிகளைக்கொண்டது. கருங்கற்பாறை ஒன்றால் ஒரே பொருளாக ஆக்கப்

பட்டது. சுமார் ஐந்து-ஆறடி உயரமும், சுமார் மூன்று-நாலடி வாய்விட்டமும் கொண்டதாக காணப்பட்டது. இதன் மேற்பகுதி விரிந்ததாகவும், கீழே செல்லச் செல்ல கழுத்துவரை சற்றுக் குறுகியும் சென்று கழுத்திலிருந்து கீழ்ப்பாகம் சற்று விரிந்ததாகவும் அமைந்திருந்தது (கீழுள்ள படத்தினைக் காண்க). இதன் கழுத்தின் கீழ்ப்பகுதி பாதம் எனவும், மேற்பகுதி செக்குரல் எனவும் அழைக்கப்பட்டது. பாதம் நிலத்துள் புதைக்கப்படும். மேற்பகுதியின் கீழ்ப் புறமாக ஒரு துவாரம் இடப்பட்டிருக்கும்.

செக்குலக்கையானது ஒரு பகுதி தலை போன்றும் மறுபகுதி உருளைத்தடி போன்றும் அமைந்திருக்கும். இது ஒரு மரத்தினாலும் சிலவேளைகளில் இரும்பினாலும் செய்யப்பட்டதாகும். நெய்க்காக தயிரின் ஆடையைக் கடையும் மத்துவின் அமைப்பைப் போன்றதாகும். இது உரலின் வாய், நீளம் என்பவற்றிற்கேற்ப அமைந்திருக்கும். (கீழுள்ள படத்தைப் பார்க்கவும்)

உலக்கை உரலில் வைக்கப்படும். இரண்டு மாடுகளைப் பிணைத்து நுகம் வைத்து இடையில் உழுங்கலப்பை போன்று நுகத்தில் வைத்துக் கட்டப்படும். ஆனால் கலப்பை (ஏர்) இருக்காது. நுகத்திலிருந்து வரும் மரக்கம்பை உலக்கையோடு பிணைப்பர். பின்னர் கொப்பறாவை உரலுக்குள் போட்டு மாட்டினைச் செக்கை வளைத்து நடத்த நடத்த செக்குலக்கை சுழன்று உள்ளிருக்கும் பொருளை நசுக்கி எண்ணெயாக்கும். இதனைச் செக்கடித்தல் என்பர். பெறப்படும் எண்ணெய் உரலில் துளைக்கப்பட்டிருக்கும் துவாரத்தினூடாக வெளியேறும். அவ்வேளையில் பாத்திரங்களை வைத்து



வந்தாறு மூலையில் காணப்பட்ட செக்கு உரல்

எண்ணெயை எடுப்பர் (வயிரமுத்து, க., 2007). செக்கிலிருந்து தேங்காயெண் ணெய், நல்லெண்ணெய் என்பன பெறப்பட்டன. செக்கின் இடைப்பகுதிக்கு சுற்றி வர இரும்புப் பட்டத்தினால் பட்டி போடப்பட்டு பாதுகாப்புச் செய்யப் படும். அக்காலத்தில் ஆரைப்பற்றையில் ஏழு செக்குகள் தொழிற்பட்டதாக அறிய முடிகிறது (கணபதிப்பிள்ளை, மு., 2009).

**போக்குவரத்து முறைகள்**

அக்காலங்களில் பிரயாணத்திற்கென வண்டில்களும், தோணிகளும் பயன் படுத்தப்பட்டன. வண்டிகளில் அந்தஸ்தில் உயர்ந்தவர்கள் ஊர்ந்து சென்றார். வண்டிகள் குதிரையினாலும், காளையினாலும் இழுத்துச் செல்லப்பட்டன. அது மட்டுமன்றி மக்களின் நெல், குரக்கன் போன்ற தானியப் பொதிகளையும் வேறு பொருட்களையும் கொண்டு செல்வதற்கும் வண்டி பயன்படுத்தப் பட்டது. இவ்வண்டியை காளைகள் இழுத்துச் சென்றன. வண்டிகள் ஒற்றை மாட்டு வண்டி, இரட்டைமாட்டு வண்டி என்னும் இரண்டு வகையாக இருந்தன. ஒற்றை மாட்டு வண்டியைக் கரத்தை என்றும் இரட்டைமாட்டு வண்டியையும் குதிரை வண்டியையும் வண்டி என்றும் அழைக்கும் வழக்கு இருந்து வருகிறது.

தோணி மீன் பிடிப்பதற்குப் பயன்படத்தப்பட்டது. அதுமட்டுமன்றி படுவான் கரையில் இருந்து எழுவான் கரைக்கும், எழுவான் கரையிலிருந்து படுவான் கரைக்கும் நீரினைக்கடந்து செல்லும் ஓடமாகப் பயன்பட்டது. ஒரு தோணியில் கூடியது சுமார் ஐந்து பேர் பிரயாணம் செய்யலாம். சில வேளைகளில் இரு தோணிகளைப் பிணைத்து அதில் சுமார் பத்துப்பேர் பிரயாணம் செல்வதுமுண்டு. இம்முறைகளை விட கூடுதலானவர்கள் பிரயாணம் செய்வதற்கு வள்ளங்கள் என்னும் ஓடங்களும் பயன்படுத்தப் பட்டன. இவைகள் மரங்களால் ஆனவை. வள்ளங்களும், தோணிகளும் தண்டு வலிப்பதன் மூலம் நகர்ந்து செல்லும். தண்டினை சவள் என்றும் கூறுவர். சவளானது மரத்தாலானது. நீரினுள் சவளைச் செலுத்தி நேராகவும் விரும்பியவாறும் தோணியை, வள்ளத்தைச் செலுத்த முடியும். தோணியின் முன்பகுதி அணியம் எனவும் பிற்பகுதி கடையம் எனவும் அழைக்கப்பட்டது. கடையத்தில் இருப்பவர் கைத்தடியைக் கொண்டு இயக்கிச் செல்வார். கூறைப் பாய்த் தோணியானது, தோணியில் பொருத்தப்பட்ட கூறைப்பாயைக் காற்று தள்ளிக் கொண்டு செல்லும். தண்டினைக்கொண்டு சுக்கான் பிடிப்பவர் குறித்த இடத்திற்குச் செல்ல உதவியாக சுக்கானைப் பிடிப்பார். அணியத்தில் இருப்பவர் விரைந்து செல்ல சவளை நீரினுள் செலுத்தி வலிப்பதினால் (தொடுப்பதினால்) உதவி புரிவார்.

ஆற்றிடைகளில் உள்ள வயல்களில் உள்ள வேளாண்மை அறுவடை முடிந்த நெற்குவியலைத் தோணி மூலமும் வள்ளத்தின் மூலமும் நீரினைக் கடந்து கொண்டு சென்றனர். மட்டக்களப்புப் பிரதேசத்தில் எருமைத்தீவு, கவுடாதீவு, மணல்மேடு போன்ற ஆற்றிடைமேட்டு வயற்காணிகளை உதாரண மாகக் கூறலாம். இவ் வயற்காணிகளைச் சுற்றி வாவி அமைந்துள்ளதனால் இவ்வயல்கள் தீவு என்னும் பெயரடிப்படையில் பெயர்களைத் தாங்கியுள்ளன.

நீண்ட தூரப் பிரயாணங்களை நீரினூடாக மேற்கொள்ளும் வேளையில் பாய்மரத் தோணியையும் பாய்மர வள்ளங்களையும் பயன்படுத்தினர். இவற்றை இப்பிரதேசத்தில் ''கூறப்பாய்த்தோணி'', ''கூறப்பாய் வள்ளம்'' என அழைத்தனர். இவற்றினைச் செலுத்தும் போது தண்டினால் வலித்துச் செல்வதில்லை.

மட்டக்களப்பில் நீர்ப்பிரயாணத்திற்கு உரு எனப்படும் ஒருவகை நீர்க்கலமும் பயன்படுத்தப்பட்டது. மட்டக்களப்பில் ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில் இது ஏற்றுமதி இறக்குமதி செய்யவதற்குப் பயன்படுத்தப் பட்டது. இது பாய்க்கப்பலை விடச் சிறியதாகவும், வள்ளத்தினை விடப் பெரியதாகவும் உருவமைப்புக் கொண்டது. இது முதலாளியின் பிரதிநிதி, கணக்கப்பிள்ளை, சமையல்காரன், கெடுபிடி வேலைக்காரர் முதலிய எழுவர் கொண்டோரையும் ஏற்றிச்செல்லும் பொருட்களையும் கொண்டு செல்லும் தன்மை பெற்றிருந்தன. இவ்வூர்தி தேக்கு, மா முதலிய மரங்களைக்கொண்டு செய்யப்பட்டதாகும். புளியந்தீவு, கல்லடி உப்போடை, ஆரைப்பற்றை, கிட்டங்கி முதலிய இடங்களில் இருந்த தீர்வைத் துறைகளில் இருந்து மலை யாளத்தின் கோழிக்கூடு எனும் துறைமுகத்திற்கும், அத்துறைமுகத்திலிருந்து மட்டக்களப்புத் தீர்வைத் துறைமுகங்களுக்கும் ஏற்றிறக்குமதி உரு மூலம் நடைபெற்றது. அவற்றில் இங்கிருந்து நெல், அரிசி, மரம், நெய், தேன், மான்கொம்பு, மான்தோல், யானைத்தந்தம், முள்ளம்பன்றி முள், சித்தமட்டி, பேரமட்டி, பற்படாகம் போன்ற மூலிகைகள் முதலியன இந்தியாவுக்குக் கொண்டு செல்லப்பட்டன. அங்கிருந்து கட்டடத் தளபாடங்கள், துணி வகைகள் முதலியன கொண்டுவரப்பட்டன (திமிலை மகாலிங்கம், 2000, பக்.52). மட்டக்களப்புக் கோட்டையிலிருந்து (கச்சேரி) தென் பகுதியிலிருந்து பொருட்களை ஏற்று இறக்குமதி செய்வதற்காக உரு புறப்பட்டுக் கல்லடி, காத்தான்குடி, ஆரையம்பதி, தாளங்குடா, மண்முனை, அம்பிளாந்துறை, களுதாவளை, பட்டிருப்பு, மண்டூர், கிட்டங்கி ஆகிய இடங்களுக்குச் சென்று வந்தது.

மட்டக்களப்புத் துறைமுகங்களிலிருந்து தேங்காய் எண்ணெய், நெய், தேன், அரிசி, கயிறு, கொப்புறா, மரங்கள் முதலியன கொண்டு செல்லப்பட்டு

அங்கிருந்து பட்டு முதலிய சீலை வகைகள், வீட்டு உபகரணச் சாமான்கள் முதலியன கொண்டு வரப்பட்டன. பெரும்பாலும் பண்டமாற்று முறையிலே கொள்வனவு செய்யப்பட்டன (கணபதிப்பிள்ளை, மு., 2009).

எடுத்துச்செல்லும் தீர்வைத்துறைக்கும் இறக்குமதி செய்யப்படும் துறை முகத்துக்குமாக இரண்டு தீர்வை வரிகள் செலுத்தப்பட்டன. தோணி, வள்ளம், உரு என்பன கடல்படு திரவியங்களைக் கொண்டு வருவதற்கும் பயன்பட்டது (வயிரமுத்து, க., 2007).

மேலும், 1888 ஆம் ஆண்டில் ''லேடி கோர்டன்'' என்னும் கப்பற் சேவை மட்டக்களப்பில் இருந்து கொழும்பு வரை சென்றுவர ஆரம்பிக்கப் பெற்றது. லேடி கோர்டன் கற்குடா, அம்பாந்தோட்டை, காலி வழியாக சென்று வந்தது.

# 4

# சமூகச் சடங்குகள்

## i. சனனச் சடங்கு

மட்டக்களப்புப் பிரதேசத் தமிழரிடம் காணப்படும் பழக்கவழக்கங்களில் கருவுற்றிருக்கும் தாயானவள் சித்திர வேலைப்பாடுடைய தையல் வேலைகளைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும் என்பதும், அவர்கள் பகலில் நித்திரை செய்தல் கூடாது என்பதும், அவர்களால் பிறருக்கு உப்பு வழங்குதல் தவிர்க்கப்பட வேண்டும் என்பதும், மனைவி கருவுற்ற நாள் முதலாக அவளின் கணவன் மரம் நடுதல், வீடுகட்டுதல் அல்லது கட்டிய வீட்டைத் தொடர்தல், சவத்தின் பின்னாற் செல்லுதல், தனது தலைமயிரைக் கத்தரித்தல் அல்லது மழித்தல், தாடியை வழித்தல், சவரம் செய்தல் முதலியவற்றைச் செய்யாது கடைப்பிடித்தனர். (Canagaratnam, S.O., 1921, p.84).

பிள்ளைபிறந்ததும் பிள்ளையை நெல் அரிசித் தவிட்டினால் சுத்தம் செய்வர். பிள்ளை பிறந்த அன்று முதல் முப்பத்தியொரு நாள் வரையும் பிள்ளை இருக்கும் அறைக்கு முன்னால் வாயிலில் இராப்பொழுதில் காவல் தீ எரிக்கப்படுகிறது. இதுகாவல் எரி எனவும் அழைக்கப்படுகிறது. இக்காவல் தீக்காக முற்றிய வேப்பமரத்தின் விறகுக் கட்டைகள் பயன்படுத்தப்படுகின்றன. இவ்விறகுக்கட்டைகள் காவற் கட்டைகள் எனவும் அழைக்கப்பெறுகின்றன. அத்துடன் பிள்ளையின் அறையில் வேப்பெண்ணெய் கொண்டு அணையா விளக்கு ஏற்றப்பட்டிருக்கும். பிள்ளை இருக்கும் அறைவாயிலில் இரும்புக் கம்பி அல்லது இரும்பினால் செய்யப்பட்ட ஒரு கருவியைக் குறுக்காக வைப்பர்.

முற்காலத்தில் பிள்ளைபிறந்ததும் தந்தை, அல்லது தாயின் சகோதரன் அல்லது மாமன் உறவுமுறையில் உள்ள ஒருவரால் ஆண் பிள்ளையாயின் கருங்காலி உலக்கையையும், பெண் பிள்ளையாயின் பிள்ளையின் மாமியால் வாயிலைப்பெருக்கும் விளக்குமாறு ஒன்றையும் பிள்ளை பிறந்த வீட்டுக் கூரையைக் கடக்குமாறு எறியப்படும் (Canagaratnam, S.O., 1921, pp84-85).

தற்காலத்தில் இந்நிகழ்வு அருகிவிட்டதெனலாம். பிள்ளை இருக்கும் அறை வாயிலில் வைக்கோற்புரி அல்லது இரும்புக்கம்பி அன்றேல் அதற்குப் பதிலான இரும்புப் பொருள் குறுக்காக வைக்கப்படுகின்றது. பிள்ளைப் பிரசவத்தின் போது கடுமை காணில் மந்திரவாதிகளைக் கொண்டு தேசிக்காய் வெட்டுதல், முன்கூரையில் நீர்வார்த்தல், முற்றத்து நுழைவாயிலில் நின்று மந்திரம் செபித்தல் ஆகியவற்றின் மூலம் பிள்ளையைப் பிரசவிக்கச் செய்தனர்.

பிள்ளை பிறந்து ஐந்து, ஏழு, ஒன்பது ஆகிய நாட்களில் ஏதாவது ஒரு நாளில் சாத்திரியாரிடம் வெற்றிலை பாக்கு வைத்தவட்டா ஒன்றினை வெண்துணியால் மூடிக் கொண்டு சென்று சாத்திரம் கேட்பர். சாத்திரியார் பிள்ளையின் தேகநிலை, ஆயுள், பெற்றோர், சகோதரர், மாமன், பாட்டன், பாட்டி ஆகியோரது எதிர்காலம் முதலியனபற்றிக் கூறுவார். இவ்வாறு சாத்திரம் கேட்டலை ''வெற்றிலை பாக்கு வைத்துக் கேட்டல்'' எனக் கூறுவர். சாத்திரியார் கணித்துக் கொடுக்கும் முதலெழுத்துக் கேற்பவே பெயர் வைக்கப் படுவது வழக்கமாகும். இத்தினத்தில் சாத்திரியாரால் எழுதிக் கொடுக்கும் குறிப்பை மரண காலம் வரையும் பேணிப் பாதுகாப்பர். இதனை தெரிப்பு, ஜனனக் குறிப்புஎன்னும் பெயர்களில் அழைப்பர். ஓலையால் எழுதப் பெற்றதைத் தெரிப்பு எனவும் கடதாசியில் எழுதப்பட்டதை ஜனனக்குறிப்பு எனவும் கூறப்படுகிறது. நோய், விவாகம் முதலியவற்றுக்கெல்லாம் இக் குறிப்பின் மூலம் எதிர்கால விளைவினை அறிந்து கொள்வர்.

மட்டக்களப்பில் ஆதிகாலத்தில் பிள்ளை பிறந்து ஐந்தாம் நாளில் உற்றார், உறவினர், மருத்துவிச்சி, மருத்துவிச்சிக்கு உதவியோர், குடிமகனான சலவைத் தொழிலாளி ஆகியோருக்கு விருந்துபசாரம் நடைபெறும். இது மருங்கை என அழைக்கப்படும். எனினும் இவ்வழக்கு தற்போது அருகி முப்பத்தி யோராம் நாட் சடங்கோடு இணைந்துவிட்டது. தற்போது முப்பத்தியோராம் நாட் சடங்கையே மருங்கை என அழைக்கின்றனர். ஆனால் தம்பிலுவில் பிரதேசத்தில் இம்மருங்கை ஒன்பதாம் நாளில் நடைபெற்று வருவது இன்றும் வழக்கமாயுள்ளது (றோசம்மா. அ., 2008).

பிள்ளை பிறந்து முப்பத்தியோராம் நாளில் வீடு துப்பரவு செய்யப்பட்டு, உற்றார், உறவினர், நண்பர்கள், மருத்துவிச்சி, மருத்துவிச்சிக்கு உதவியோர், குடிமக்களான சலவைத் தொழிலாளி, சவரத் தொழிலாளி, ஆகியோருக்கு விருந்துபசாரம் நடைபெறும். முப்பத்தியோராம் நாளிற் சுபமுகூர்த்த வேளையில் பிள்ளையின் தலைமயிர் மழிக்கப்படும். இம்மயிரைத் தொடக்கு மயிர் என்பர். அன்றையதினத்தில் பிள்ளைக்குக் காதுகுத்துதல், தொட்டிற் கட்டுதல், பிள்ளையைத் தொட்டிலில் கிடத்துதல் ஆகிய வைபவங்களும்

நடைபெறும். பிள்ளைக்குக் கிரகபீடைகள் நீங்கும் பொருட்டு மருங்கை என்னும் செடியின் காய்களைக் கோர்த்து மாலையாக்கி அணிந்த பின்னரே வேறு அணிகலன்களை அணிவது கடைப்பிடிக்கப்பட்டு வந்தது.

பிள்ளை தவழுவதற்கு ஆரம்பிக்கும் காலம் வரையும் தொட்டில் பயன் படுத்தப்படும். மாமனால் பிள்ளைக்கு அணிகலன் அணிவிக்கப் பெற்றுப் பிள்ளையின் தந்தையிடம் பிள்ளையைக் கொடுக்க, தந்தை வாங்கி மீளவும் மாமனாரிடம் கொடுக்க மாமனார் தொட்டிலில் கிடத்துவார்.

பல்முளைக்கும் போது ஒரு சடங்கு சுற்றம் சூழ நடத்தப்படும் வழக்கம் காணப்படுகிறது. அரிசி மாவினால் செய்யப்படும் உணவு வகைகளான கொழுக்கட்டை, பிடிகொழுக்கட்டை, ஆலங்காய் உருண்டை என்பன தயாரிக் கப்பட்டு அவற்றைப் பிள்ளையின் தலையில் பிள்ளையின் மாமன், அல்லது பாட்டனார் சொரிந்து மகிழ்வர். பிள்ளையும் அவற்றை எடுத்துக் கடித்தும் விளையாடியும் மகிழும். முதன் முதலாகப் பிள்ளைக்கு உணவு ஊட்டுவதும் முக்கிய பழக்கமாக இருந்துவருகிறது. சீனி கலந்த பாற்பொங்கலை நல்ல முகூர்த்தத்திற் சகலரும் மதிக்கும் ஒருவரால் பிள்ளைக்கு உணவாக ஊட்டப்படும்.

## ii. சாமர்த்தியச் சடங்கு

மட்டக்களப்புப் பிரதேசத்தில் சாமர்த்தியமடைந்த பெண்ணைக் கவனிப்பதும், அதற்கான சடங்கு நடத்துவதும் வழக்கமாகக் காணப்படுகிறது. சாமர்த்திய மடைதலை மட்டக்களப்புப் பிரதேசத்தில் பருவமடைதல், புத்தியறிதல், பூப்படைதல், மங்கைப்பருவம் அடைதல், பெரியவள் ஆதல் (மட்டக்களப்புப் பேச்சுவழக்கில் பெரிய புள்ளையாகுதல்) என்னும் பல பெயர்களால் அழைக்கப்படுகிறது (தில்லைநாதன், எஸ்., 2006, பக் .78).

### முதற் செய்தியும் முதல் நீராட்டலும்

பிள்ளை சாமர்த்திய மடைந்ததும் உற்றார், உறவினருக்கு அச்செய்தி உடனே தெரிவிக்கப்படும். முதற்செய்தி சம்பந்தியாக வரப்போகின்ற குடும்பத் தினருக்கு அறிவிக்கப்படும். இதனை ''முதல் விசளம்'' என வழங்குவர். சாமர்த்தியமடைந்த அன்றே மாலை வேளையிற் பிள்ளைக்கு முதல் முழுக்கு நீராட்டல் நடாத்தப்பெறும். மாலைவேளையில் விண்ணில் வெள்ளி தெரியும் நேரம் நீராட்டும் நேரமாகக் கொள்ளப்படுகிறது. இம்முதல் நீராட்டலானது குப்பைத் தண்ணீர் வார்த்தல், முதல் தண்ணீர் வார்த்தல் என்னும் பெயர்களால் வழங்கப் பெறுகிறது. நீர் வார்ப்பவர் மாமி அல்லது

பாட்டி உறவுமுறையில் உள்ளவராய் இருத்தல் வேண்டும். அவ்வேளையில் மாமிக்கு முன்னுரிமை வழங்கப்படும் அவற்றிலும் சாணைக் குறிபோட்ட மாமிக்கு விசேட உரிமை வழங்கப்படும். இவர்களில் ஒருவரால் முதலாவது நீராட்டும் குடத்தினை எடுத்து நீராட்டிய பின்பே ஏனையவர்களால் நீராட்டப் பெறுவார் (அருளப்பு அந்தோனிமுத்து 1976). இவ்வழக்கு தொடர்ச்சியாக இப்பிரதேசத்திற் பேணப்பட்டுவருகிறது.

நீராட்டுபவர் சுமங்கலியாய் இருத்தல் வேண்டும் என்பது நியதி. சாமர்த்தியமடைந்தவளை நீராட்டும் போது அவளது இருக்கையின் கீழ் சிறுகுப்பையைக் கூட்டிவைத்து, அதன் மேல் சீலைவிரித்து, பலகை அல்லது நாற்காலிவைத்து, அவளை இருக்கச் செய்து நீராட்டும் பழக்கம் சின்னவத்தை, கன்னங்குடா, மத்தியமுகாம் முதலிய சில பகுதிகளிற் காணப்படுகிறது. இப் பழக்கமுள்ள பகுதிகளில் குப்பைத் தண்ணீர் வார்த்தல் என்னும் வார்த்தைப் பிரயோகம் நடைமுறையில் உள்ளது.

**கூரைமுடியும் அறைக்கும்பமும்**

சாமர்த்தியமடைந்ததும் கூரைமுடி வைக்கப்படும். அத்துடன் வீட்டுவாயிலின் முன் கூரையில் தலைக்குமேலாக சுமார் மூன்றுமுழம் அளவினையுடைய வெள்ளைத்துணி கட்டப்படும். இத்துணி முப்பத்தியொராம் நாள் வரையும் இருக்குமாறு பேணப்படும். இதுவே சாமர்த்தியமடைந்த வீட்டின் அடையாளமாக விளங்கும். சாமர்த்தியமடைந்தவள் இருக்கும் அறையில் கும்பமொன்று நிறுவப்படும். அக்கும்பத்தில் மாவிலை, தேங்காய் என்பன இருக்காது. கும்பக்குடத்தில் தென்னம்பாளையே இருக்கும். சிலபகுதிகளில் இக்கும்பத்தின் பின்னால் ஒருகண்ணாடியை வைப்பர். நீராட்டியபின்னர் கண்ணூறு கழிக்குமுகமாக ஆராத்தி எடுத்து பின்னர் சாமர்த்தியமடைந்தவளை கும்பம் வைக்கப்பட்ட அறைக்குக் கொண்டுசெல்வர்.

**விசேடஉணவு**

பிள்ளை சாமர்த்தியமடைந்த நாள் முதலாக கோழிமுட்டை, நல்லெண்ணெய், பிட்டு என்பவற்றை உறவினர்கள் கொண்டு வருவர். வரும் போது குரவை ஒலியுடன் வளவிற்குள் நுழைந்துவருவர். சம்பந்தியாகச் சாணைக்குறி இட்டோர் பலகாரம் நிறைந்த பெட்டியுடன் குரவை ஒலி எழுப்பி வருவது குறிப்பிடத்தக்க அம்சமாகும். சாமர்த்தியமடைந்தவளுக்கு சாமர்த்தியமடைந்த நாள் முதலாக மஞ்சள் பூசுவதும், நல்லெண்ணெயுடனான உணவு வழங்கு வதும், முட்டை, எள்ளுருண்டை முதலிய பொருட்களை உணவாக உண்ணக் கொடுப்பதும் வழக்காகும். உண்ணும் சோற்றின் சிவப்பரிசியானது

(தவிட்டரிசி) கறுப்புச் சீனட்டிஎன்னும் ஒருவகைநெல் இனத்தைச் சேர்ந்த தாகும்.

**சடங்கு**

இரண்டாம் முறையாக சுபமுகூர்த்த நாளில் நீராட்டல் நடைபெறும். இந் நாளை சாத்திரம் பார்த்தெடுப்பர். இந்நீராட்டல், இரண்டாம் தண்ணீர் வார்த்தல், மஞ்சள் நீராட்டல், மங்கள நீராட்டல், பூப்புநீராட்டல் முதலிய பெயர்களால் அழைக்கப் பெறுகின்றது.

**நீராட்டல்**

இந்நாளில் சுமங்கலிப் பெண்கள் அருகிலுள்ள நீர் நிலைக்குச் சென்று குடங்களில் நீர் நிறைத்து வாத்தியக் கருவிகள் முழங்க மேற் கட்டிபிடித்து வீட்டிற்குக் கொண்டுவருவர். (கீழுள்ளபடங்களைப் பார்க்கவும்) அந்நீரினால் அவளை நீராட்டுவர்.





சுமங்கலிகள் நீர் அள்ளுதலும், அவர்களை மேற்கட்டிபிடித்துக் கூட்டிவருதலும்



தண்ணீர் வார்த்தல்

## கண்ணூறு கழித்தல்

திருமணக் கோலம் போன்று அவளைச் சிறப்பாக்கி தோழிசகிதம் முற்றத்தில் வீட்டு நுழைவாயிலில் கதவிற்கு நேராக வெள்ளை விரிக்கப்பட்ட பலகையில் நிற்கவைத்து சுற்றம் சூழ ஆராத்தி எடுப்பர். இவ்வாராத்தி கண்ணூறு கழிக்கும் நோக்கமாக நடைபெறுகின்றது. ஆராத்திகள் மூன்று வகைகளில் எடுக்கப்படும். அவையாவன:

i. சோறு,

ii. மாவுருண்டை,

iii. பால், அறுகு, மஞ்சள்

ஆராத்தி எடுக்கும் வேளையில் ஆராத்தி எடுப்பவரது கூந்தல் அவிழாதிருக்க வேண்டும் என்பது வழக்காகும். அத்துடன் ஆராத்தியில் சுடர்த்திரிகளின் சுடர் அணையாதும் பார்த்துக் கொள்ளவேண்டும். ஆராத்தி எடுப்பவர் தனதுதலையில் வெள்ளைத் துணி ஒன்றை வைத்துக் கொள்வார்.

ஆராத்தி எடுக்கும் போது சாமர்த்தியமடைந்தவளைத் தனது இரு கரங்களாலும் முடியுடைய தேங்காய் ஒன்றை ஏந்திக் கொள்ளுமாறு கொடுப்பர். அத்தேங்காயின் முடியில் எழுத்தாணி ஒன்றைப் பதித்து எழுத்தாணியின் நுனியில் சாமர்த்தியமடைந்தவளின் உள்ளங்கை அளவிலான பலகாரம் ஒன்றினைப் பதித்து வைப்பர். மேற்படிப் பொருள்கள் பொதிந்த தேங்காயில் வெள்ளியாலான அரைஞாண் கொடியை மாலையாக அணிவிப்பர். அத் தேங்காயினைச் சாமர்த்தியமடைந்தவள் இரு கரங்களாலும் பிடித்து நிற்க ஆராத்தி எடுக்கப்படுகின்றது. இவ்வேளையில் பெண்களால் குரவை யொலி எழுப்பப்படும். சாமர்த்தியச் சடங்கை இப்பிரதேச மக்கள் சாமர்த்தியக் கலியாணம் எனஅழைத்து வருகின்றனர். (கீழுள்ளபடத்தைப் பார்க்கவும்)



ஆராத்தி எடுத்தல்

### பலகாரம் பறித்தல்

ஆராத்தி முடிந்ததும் அவ்விடத்திலேயே சாமர்த்தியமடைந்தவளுக்குத் தாம்பூலம் அருந்தக் கொடுப்பர். தாம்பூலம் அருந்திக் கொண்டிருக்கும் சமயத்தில் அவளுக்கு மைத்துன உறவுமுறையுள்ள ஒருவர் அவளதுகையில் இருக்கும் பலகாரத்தைத் தேங்காயுடனோ அல்லது எழுத்தாணியுடனோ பறித்துச் சென்றுவிடுவான். பறிக்கும் சமயத்தில் அவன் மீது அவள் தாம்பூல உமிழ்நீரை உமிழ்ந்துவிட வேண்டும். அவளது எச்சிற்படாதவாறு பறித்துச் செல்வதே அவனது வெற்றியாகும். இதன் பின்னர் விருந்துபசாரம் நடைபெறும். (கீழுள்ளபடத்தைப் பார்க்கவும்)



பெண் தேங்காய், எழுத்தாணி, பலகாரம் என்பவற்றுடன் இருத்தல்

### மஞ்சள் விளையாட்டு

விருந்துபசாரத்தைத் தொடர்ந்து மஞ்சள் விளையாட்டு நடைபெறும். மைத்துன உறவுமுறையில் உள்ள ஆண், பெண் இருபாலாரும் தங்களுக்கிடையே மஞ்சள் ஊற்றுவதில் அக்கறை செலுத்துவர். யார் யாருக்கு முதலில் ஊற்றுவது என்பதும், யார் யாருக்குக் கூடுதலான தடவைகளில் மஞ்சள் ஊற்றியது என்பதும், இவ்விளையாட்டின் பிரதான அம்சங்களாகும். அன்றே மஞ்சள் ஊற்றப்பட்டால் அடுத்த நாட்களுக்கு அது தொடராது. மஞ்சள் ஊற்றப்படாது தப்பித்துக் கொண்டவர் மஞ்சள் ஊற்றுக்கு அகப்படாது மறைந்து வாழ்தலும் உண்டு. அத்தகையவர்களுக்கு மூன்று நாட்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. மூன்று நாளுடன் இவ்விளையாட்டு முற்றுப் பெறும். மூன்றாம் நாள் பந்தல் அகற்றப்பட்டு அத்தினத்தில் விருந்துபசாரம் நடைபெறும். இவ்விருந்துப

சாரத்தில் குடிமகனாகிய சலவைத் தொழிலாளியே முக்கியமாகக் கொள்ளப் படுவார். இவ்விருந்தில் அவரதுசகாக்களும் கலந்துகொள்வர். மதுபானமும் இடம்பெறும். இன்றைய விருந்துபசாரத்தை வண்ணான் சோறு என்றே அழைப்பது பெருவழக்காக உள்ளது.

சலவைத் தொழிலாளியிடம் கண்ணூறு கழிப்பதற்காகப் பயன்படுத்தும் பிட்டு, களி முதலிய உணவுப் பண்டங்களுடன் சோறு, கறி, தயிர் என்பவற்றைப் புதிய ஓலைப் பெட்டியில் வைத்து அவரின் குடும்பத்தினருக்காகக் கையளிப்பர். (கீழுள்ளபடத்தைப் பார்க்கவும்)



## iii. திருமணச் சடங்கு

திருமணம் என்ற சொல் 'திரு' என்ற சிறப்புச் சொல்லைப் பெற்ற ஓர் கோர்வை. ஆகவே, உள்ளீடு 'மணம்' என்பதாகும். மணம், வரைவு, வதுவை, மன்றல், மகட்கொடை, உடன்போக்கு, விவாகம், கலியாணம், சம்பந்தம் என்னும் சொற்களும் அதையே குறிக்கின்றன என்று கொள்வர் மயில்வாகனம், இரா., (1993, பக்.52). இதனைத்தவிர மணவினை, கண்ணாலம், மணவணி முதலிய சொற்களும் வழங்கப்படுகின்றன. இவை, இலக்கிய வழக்கில் உள்ளவை என்பது குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்புத் தமிழர்களிடையே பல சமுதாய அமைப்புக்கள் காணப் படுகின்றன. இவை ஒவ்வொன்றும் சில குடிப்பிரிவுகளை உள்ளடக்கியுள்ளன. இச்சமூகங்களுக்கும் அவைகளின் குடிகளுக்கும் சீர்வரிசைகளும் உள்ளன. அவைகள் திருமணத்தின் போது இறுக்கமாகப் பின்பற்றப்படும் பழக்கமாக

உள்ளன. இப்பழக்கங்கள் இடத்திற்கிடம் சிற்சில மாறுதல்களுடன் காணப் படுகின்றன.

தமிழர் சமுதாயத்திற் சாதி என்பது தமிழரின் ஒரு அளவையாகக் காணப்படுகிறது. இனம் சமயம் செய்தொழில் ஆகிய பலவித கலப்புக் களையும் பண்புகளையும் இச்சாதி முறை கொண்டுள்ளது. பெரும்பான்மையாக உள்ள ஒரு சாதியினர் அச்சாதியினரிடையே திருமணம் செய்து கொள்வர். ஒரு சாதியில் உள்ளார் வேறு சாதியில் திருமணம் செய்யாத வழக்கு நடை முறையிலுள்ளது.

மண்டூரில் இருந்து பழவகைகளை விற்பனை செய்வதற்காக ஒருவர் காத்தான்குடி என்னும் முஸ்லீம் கிராமத்திற்குச் சென்று வரும் போது, ஒரு முஸ்லீம் பெண்ணைக் கடத்தி வந்து தனது வீட்டில் யாருக்கும் தெரியாமல் வைத்திருந்தார். இவ்விடயம் வெளிவரவே அவ்விருவரும் அச்சமூகத்தால் ஒதுக்கி வைக்கப்பட்டனராம். இவர்களே மண்டூரில் சோனக வெள்ளாளர் என அழைக்கப்பட்டதாகக் கர்ணபரம்பரைக் கதை மூலம் தெரியவருகிறது.

இதனை வேறோர் விதமாகவும் கூறுவர். அதாவது மண்டூரைச் சேர்ந்த பெண் ஆரைப்பற்றையில் வாழ்ந்த யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஒருவரைத் திருமணம் செய்ததால் மண்டூர் சமூகத்தார் அவர்களை ஒதுக்கி வைத்தனராம். அதுமட்டுமன்றி அவ்வாடவனைச் சோனகர் என்று வதந்தியையும் உருவாக்கி விட்டனராம். இவர்களது சந்ததியாரையே மண்டூர் சோனக வேளாளர் என அழைக்கப்பட்டு வருவதாகவும் மற்றொரு விதமாகக் கூறப்படுகிறது. இக் கதையின் மூலமாக கடத்தல் திருமணம், சாதிவிட்டு வேறு சாதியில் செய்யும் திருமணம் ஆகிய திருமணங்களுக்கு இப்பிரதேச மக்கள் உடன்பாடற்ற இறுக்கமான திருமண பண்பாட்டு அம்சங்களைக் கொண்டிருந்தனர் என்பதை அறிய முடிகின்றது.

அக்காலத்தில் பெண் சாமர்த்தியமடைந்து விட்டாலும் அத்துடன் சமையல் செய்தல், வீட்டைப்பராமரித்தல் முதலியன தெரிந்திருந்தாலும் அவளைத் திருமணத்தகுதி பெற்றவளாகக் கருதுவர். ஆணுக்கு முகத்து மயிர்களையும் பருவம் வருவதுடன் கடுக்கன் அணிதல், கன்னக் குடுமியைப் பின் குடுமியாகக்கட்டுதல் என்பன திருமணத் தகுதி பெற்றவராகக் கருதப் பட்டது. கன்னக் குடுமி மட்டக்களப்பில் வழங்கிய ஒரு நாகரீகம் என புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளையும் உறுதி செய்கிறார் (பெரியதம்பிப் பிள்ளை, ஏ., 1982, பக்15). கன்னக் குடுமிகட்டும் வழக்கம் பண்டைய மலையாள வம்சத்தினரின் ஒரு வழக்காகக் காணப்படுகின்றது. ஆகவே பண்டைக்கால மட்டக்களப்பில் காணப்பட்ட இக் கன்னக் குடுமி கட்டும்

வழக்கு மட்டக்களப்பின் பூர்வீகம் அக்காலத்தைய சேர நாடு என்பதற்குச் சான்றாகக் கொள்ளலாம்.

### திருமண உறவு

இங்கு பேணப்படும் திருமண உறவுமுறையில் தாய்வழி மச்சான் முதன்மை நிலை பெறுவதைக் காணலாம். இதனால் மட்டக்களப்புப் பிரதேசத்தில் வைக்கோலில் விளைந்ததை வைக்கோலிற் கட்ட வேண்டும் என்னும் பேச்சு வழக்கு உள்ளது. ஒரு பெண்ணுக்கு மணமகனாகக் கொள்வதில் தாய் மாமனின் மகனுக்கு அல்லது தந்தை வழி மாமியின் மகனுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. இவற்றுள்ளும் தாய் மாமன் மகனுக்கு விசேட உரிமை காணப்பட்டது. இவ்வழி முறையில் மணமகன் இல்லாத பட்சத்திலேயே ஒன்று விட்ட மச்சான் உறவு, தூரத்து உறவு முறைகளில் மணமகன் தெரிவு செய்யப்பட்டார். மணமகன் ஒருகுடியிலும் மணமகள் வேறு குடியிலும் பிறப்பினால் அமைந்த சம்பந்தமே சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட திருமண சம்பந்தம் ஆகும். ஒரே குடியில் இருவரும் பிறந்திருந்தால் திருமண சம்பந்தம் தவிர்க்கப்பட வேண்டும். இம்முறை மட்டக்களப்புத் தமிழர் வழக்கில் முக்கியமானதாகும். திருமணப் பேச்சுவார்த்தையின் போது சாதி முறை அவதானிக்கப்படுகிறது. மணமகனதும் மணமகளதும் தாய் வழியை ஆராய்வது மட்டக்களப்பு பிரதேசத்து வழமை.

### திருமண வகைகள்

சங்ககாலத்தில் களவு, கற்பு, உடன்போக்கு என்னும் வகைகளில் திருமணம் நடந்தேறியதாக சங்ககால நூல்களின் மூலம் அறிய முடிகிறது. மட்டக்களப்புப் பிரதேசத் தமிழர்களிடையே நடைபெற்று வரும் திருமணங்களை மேல் வருமாறு வகைப்படுத்தலாம்:

அ. சாணைக்குறித் திருமணம்

ஆ. பேசிமுடிக்கும் திருமணம் (பெற்றோர்கள் தமது விருப்பப்படி திருமணம் பேசி செய்து வைப்பர்)

இ. காதல் திருமணம் (ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் விரும்பிச் செய்வர்)

### சாணைக்குறித் திருமணம்

சாணைக்குறித் திருமணம் என்பது குழந்தை பிறந்ததும் குழந்தையைச் சுத்தம் செய்த பின்னர் குழந்தையின் மாமியானவள் இந்தப்பிள்ளைக்கு எனது மகன்

திருமணத்திக்கு உரியவராவார் எனக் கூறிப் பிள்ளையின் வயிற்றின் மீது சீலைத் துண்டொன்றைப் போடுவாள். மட்டக்களப்புப் பிரதேசத்தில் உள்ள சில இடங்களில் இது வேறு விதமாகவும் நடைபெற்று வருகின்றது. அதாவது பிள்ளையின் வயிற்றின் மீது துணியைப் போடாது ஒரு புதிய பட்டுத் துண்டை நிலத்தில் விரித்து மேற்கூறியவாறு உறுதி மொழியைக் கூறிக் குழந்தையை அதன்மேல் வளர்த்தி விடுவர். இச் சாணைக்குறி முறைகள் ஆரம்ப நிட்சயதார்த்தமாகக் கொள்ளப்பட்டு வருகின்றன. சாணைக்குறித் திருமணமானது சாணைக் கூறைத் திருமணம் எனவும் அழைக்கப் படுகிறது. சில இடங்களில் பட்டினாலாகிய புதிய துணி யொன்றினால் உறுதியுரை கூறிப் பிள்ளையின் மீது அத்துணியினைப் போடுதலால் சாணைக் கூறை எனப் பெயர் கொள்ளலாயிற்று.

குழந்தைக்குப் பயன்படுத்தும் துணிகள் சாணை என்னும் பெயர் கொண்டு அழைக்கப் பெறுகின்றது. இவ்வகையில் குழந்தையின் மீது போடப்பட்ட துணியும் சாணை என்னும் பெயரைப் பெறுகின்றது. மாமியினால் கூறப்பட்ட ஆரம்ப நிட்சயதார்த்த மொழியான இவ்வுறுதி மொழி ஏலவே இரு குடும்பத்தாரினதும் இணைந்த நோக்கத்தின் பிரதிபலிப்பாகும். குறி என்பது அடையாளத்தைக் குறிக்கப் பயன்படும் சொல்லாகும். எனவே சாணையும் குறியும் சேர்ந்து சாணைக்குறியாயிற்று.

சாணைக் குறிக்கான பிள்ளை சாமர்த்தியமடைந்த அடையாளம் காணப் பட்டதும் சாணைக்குறி போட்ட மாமிக்கே முதற்செய்தி அனுப்புதல் மரபாகக் கொள்ளப்படுகின்றது. இவ்வாறு சாணைக்குறி மூலம் தீர்மானிக்கப்பட்ட குழந்தைகள் இருவரும் வளர்ந்து திருமணப்பருவம் எய்தியதும் இவர் களுக்குத் திருமணம் நடத்தி வைக்கப்படுகின்றது. ஆணுக்குத் திருமணப் பருவம் பொதுவாக இருபது வயதாகவும் பெண்ணுக்குப் பதினேழு வயதாகவும் கொள்ளப்பட்டன (விநாயகமூர்த்தி, வெ., 006).

## பேசிமுடிக்கும் திருமணம்

பேசிமுடிக்கும் திருமணம் என்பது மணமகனின் பெற்றோரும் மணமகளின் பெற்றோரும் தங்களிடையே உறவாடித் தமது பிள்ளைகளைத் திருமணம் செய்து வைப்பது பேசி முடிக்கும் திருமணமாகும். இத்திருமண முறையே மட்டக்களப்புப் பிரதேசத்தில் பெரும்பான்மை நடைபெற்று வரும் திருமண மாகும். காதலர் இருவர் கருத்தொருமித்திருந்தாலும் அவ்விருவரும் தமது பெற்றோரைத் தமது விருப்புக்குச் சம்மதிக்கச் செய்து நடைபெறும் திருமணமும் இவ்வகையினுள் அடங்கும். எனவே பெற்றோரினாற் செய்து வைக்கப்பெறும் திருமணமே மட்டக்களப்புத் தமிழர் பண்பாடாகக்

கொள்ளப்படுகின்றது. பேசி முடிக்கும் திருமணத்திற்குப் பெற்றோர் சம்மதமே பொருத்தமானதாகவும் ஒருவரையொருவர் விரும்பி முடிக்கும் திருமணத் திற்கு மனமே பொருத்தமாகவும் அக்காலத்து நடைமுறை இருந்ததாக அறியமுடிகின்றது (விநாயகமூர்த்தி, வெ., 2006).

### காதல் திருமணம்

ஒரு ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் விரும்பிச் செய்வது காதல் திருமணம். இது புராதன காலத் தமிழகத்திலும் இருந்ததாக அறியமுடிகிறது. அதனை நற்றிணை, அகநானூறு போன்ற நூல்கள் குறிப்பிடுகின்றன. அத்திருமண முறை மட்டக்களப்புத் தமிழரிடத்தேயும் இருந்துள்ளது. பெற்றோர் இசைவாக்கத்தைப் பெற மனமொத்த இருவரும் திட்டமிட்டிருந்த வேளையில் பெண்ணின் பெற்றோர் வேறொருவருக்குத் திருமணம் செய்து கொடுக்க ஏற்பாடு செய்ததன் காரணமாக ஊரார் பழி கூற, தன் நாணம் அழியப் பெண்ணானவள் தன் நெஞ்சைப்பறி கொடுத்த ஆணோடு புறப் பட்டுச் சென்று திருமணம் செய்கின்றாள். உயிரை விட நாணம் சிறந்தது. அதை விடக் கற்புச் சிறந்தது என்பது மாதரின் அறப்பண்பாகும். இது பற்றிய உடன்பாடான கருத்தை ஜகந்நாதன் கி.வா. (1951, பக்.89) அவர்களும் கூறுகின்றார். ஒரு ஆணும் பெண்ணும் பெற்றோரின் அனுமதியின்றி தாமாகவே திருமணம் புரிந்து கொள்வது அல்லது தேடிக்கொள்வது தமிழர் சமுதாயத்தில் இருந்து வருகின்றது.

## திருமண நிகழ்வுகள்

### பொருத்தம் பார்த்தல்

உறவினர் அல்லது நண்பர் மூலம் திருமணம் பற்றி ஆண்வீட்டார் விரும்பும் பட்சத்தில் இருவீட்டாரும் இரகசியமான முறையில் பொருத்தம் பார்ப்பர். முதலிற் பெண்ணின் பிறப்புக் குறிப்பை ஆண்வீட்டாரிடம் கொடுத்துப் பார்த்து அது பொருந்துமாயின் பின்பே பெண் வீட்டாரிடம் ஆணின் பிறந்த குறிப்பைக் கொடுப்பது வழக்காயிருந்து வருகிறது. சிலவேளைகளில் இரு பிரிவினரும் சேர்ந்து சென்று சாத்திரியாரிடம் பொருத்தம் பார்ப்பர். ஆதிகாலத்தில் பொருத்தம் பார்த்துத் திருமணம் செய்த முறை இருக்கவில்லை. அது இடையில் புகுந்ததாக அறியமுடிகின்றது. இடைக்காலத்திற் புகுத்தப் பட்ட பொருத்தம் பார்க்கும் முறை பின்னர் இன்றியமையாத தாகிவிட்டது. திருமணப் பொருத்தம் பார்ப்பதென்பது ஆணினதும் பெண்ணினதும் பிறந்த சோதிடக் குறிப்புக்களைக் கொண்டு சோதிடக் கலை தெரிந்தவர் மூலமாக இருவரது குறிப்புக்களும் வாழ்க்கைக்குப் பொருந்துமா? பொருந்தாதா?

எனத் தீர்மானிப்பதே பொருத்தம் பார்த்தலாகும். திருமணப் பொருத்தத்தில் 14 அம்சங்கள் குறிப்பிட்டிருப்பினும் அவைகளுள்ளும் கிரகப்பொருத்தம் இன்றியமையாதது.நட்சத்திரப் பொருத்தம், இராசிப் பொருத்தம், யோனிப் பொருத்தம், கணப்பொருத்தம், இரச்சுப்பொருத்தம் ஆகிய ஐந்து கவனத்தில் கொள்ளப்படும் இவ்வைந்தினுள்ளும் கணம், யோனி, இரச்சு ஆகிய மூன்றும் விசேடமாகப் பொருந்த வேண்டும். இவற்றினுள்ளும் திராவிட மரபினருக்கு யோனிப் பொருத்தம் இன்றியமையாததாகும். இம் மரபினருக்கு யோனிப் பொருத்தம் பொருந்தாவிடில் திருமணம் தவிர்க்கப்படும். எனினும் யோனிப் பொருத்தம் மத்திமமாக இருப்பின் வசியப் பொருத்தம் பொருந்துமாயின் திருமணம் செய்யலாம் என்பாரும் உளர். இவ்வாறு சோதிடமுறையில் பார்க்கப்பட்ட பொருத்தம் பொருந்துமாயின் திருமணப் பேச்சு வார்த்தை தொடரும். எனினும் மிருகசீரிடம், மகம், சுவாதி, அனுஷம் ஆகிய நான்கு நட்சத்திரங்களில் ஒன்று ஆணுக்கோ பெண்ணுக்கோ இருந்தால் பொருத் தங்கள் பொருந்தாவிடினும் விவாகம் செய்யலாம் எனக் கூறப்படுகின்றது (மகேந்திரராஜா, எம்.என்., 1994, பக்.4).

திருமணப் பொருத்தம் பார்ப்பதற்குமுன் வயதுப்பொருத்தம், தோற்றப் பொருத்தம் என்பவற்றை பிரதானமாகக் கொள்வர். ஆணின் வயதை விட பெண்ணின் வயது குறைவாக இருக்க வேண்டும் என்பது முக்கியமாகும். இவ்வயது வித்தியாசம் குறைந்த பட்சம் எட்டு வயது வரையில் இருப்பது நல்லது என்பது பொதுவான கருத்தாகும் (பிள்ளை, ஏ.எம்., 1995, பக்.12). ஆனால் இப்பிரதேசத்தில் ஆணின் வயதை விடப் பெண்ணின் வயது மூன்று வயது இடைவெளியையே கடைப்பிடிக்கின்றனர்.

### திருமணப்பேச்சு

திருமணப் பொருத்தம் திருப்தியாக அமைதலைத் தொடர்ந்து பெண்ணின் தந்தை, குலத்தாதை (குலப் பெரியவர் அல்லது ''மூப்பான்முருகன்''), சகோதரன், தாய், மாமன் முதலியோர் சேர்ந்த குழு ஒன்று ஆணின் வீட்டுக்குச் சென்று திருமண சம்பந்தம் பேசுவர். இக்கலந்துரையாடலில் சீதனம் பற்றிய பேச்சுவார்த்தை இடம்பெறும். இது பெரும்பாலும் சுமூக மாகவே நடந்தேறும். இத்திருமணப் பேச்சுக்குப் பின்னர் இரு வீட்டாரும் ஒரு சுமூக உறவையே பேணுவர்.

### கேட்டுப் போதல்

பெண் வீட்டார் தம் உறவினர்களைக் கொண்ட ஒரு குழுவாகச் சேர்ந்து சம்பிரதாய பூர்வமாக மாப்பிள்ளை வீட்டிற்குச் செல்வர். இதன்போது தாம்பூல வட்டா, கொழுக்கட்டை, பலகார வகை, முறுக்கு வகை முதலியன நிறைந்த

வெள்ளை கட்டிய பெட்டிகளுடனும் தயிர்ப்பானை, வாழைக்குலை ஆதியன கொண்ட ''கா''வுடனும் மணமகன் வீட்டுக்குச் செல்வர். இது கேட்டுப்போதல் என அழைக்கப்படும். கொழுக்கட்டைப் பெட்டி கொண்டு செல்லல், பலகாரப் பெட்டி கொண்டு செல்லல் என்னும் பேச்சு வழக்குகள் இப்பிரதேசத்தில் இடத்துக்கிடம் வழக்கிலுள்ளன.

கொழுக்கட்டைப் பெட்டியினுள் பெரிய கொழுக்கட்டை ஒன்றினையும் அலங்கார அமைப்பில் செய்து வைப்பர். அக் கொழுக்கட்டை மாப்பிள்ளைக் கொழுக்கட்டை எனப் பெயர் பெறும். இதன் உள்ளீடாகத் தேங்காய்ப்பூ, பதப்படுத்திய எள்ளு அல்லது பயறு, சீனி அல்லது சர்க்கரை சேர்த்த சுவை யான இனிப்புக் கலவையுடன், தங்க மோதிரம் அல்லது வெள்ளிக்காசுகள் வைக்கப்படும். இதன் உள்ளீடாக வைக்கப்பெறும் வெள்ளிக் காசு / தங்க மோதிரம் பெண்வீட்டாரினால் மணமகன் வீட்டாருக்கு வழங்கும் கௌரவ அன்பளிப்பாகும். அது மோதிரமாயின் பெரும்பாலும் மணமகனே அணிந்து கொள்வது வழக்காகும். இக் கொழுக்கட்டையைப் பெண் வீட்டார் பல பகுதிகளாக வெட்டி அவற்றில் ஒருபகுதியும், பலகாரவகைகளில் சிறுபங்கும் சேர்ந்ததாகத் தமது உற்றார் உறவினர்களுக்குப் பங்கீடு செய்வர்.

இந்நிகழ்வில் ஆண் வீட்டார் பெண் வீட்டாரை வரவேற்று உபசரிப்பர். அதன் பின்னர் பெண் வீட்டார் ஆண் வீட்டாரிடம் தாம் வந்துள்ள நோக்கத் தைத் தெரியப்படுத்துவர். முதன் முதலாக தந்தை அல்லது குலத்தாதை அந்நோக்கத்தைத் தெரியப்படுத்துவது வழக்காகும். பெண்வீட்டாரினால் உணவுப்பொருட்கள் கொண்டு செல்லப்பட்ட பெட்டிகளை ஆண்வீட்டார் வெறுமையாக அனுப்பாது பதிலாக மணமகள் வீட்டாருக்கு தாமும் அப் பெட்டிகளில் உணவுப் பொருட்களை வைத்துக் கொண்டு செல்வர். கொண்டு செல்லும் போது மோதகம் / கொழுக்கட்டை ஒன்றினை மேற்கூறியவாறு சுவை பொருந்திய இனிப்புக்கலவையுடன் ''திருகு பூ''வை உள்ளீடாக வைப்பர். திருகு பூ என்பது பெண்கள் கூந்தலில் அணியும் தங்கம்.பொன், வெள்ளி, செம்பு ஆகிய உலோகங்களின் ஒன்றினால் செய்யப்பெற்ற நகை யாகும் (மா. வேலாப்போடி, 2007). திருகு பூ செய்யப்பெறும் உலோகமானது அவர்களது பொருளாதார வசதிக்கேற்ப செய்யப்பெறும். இது மணமகன் வீட்டார் மணமகள் வீட்டாருக்கு அளிக்கும் கௌரவமாகும். இத்தினத்தில் மணமகள் வீட்டாரால் மணமகன் வீட்டாருக்கு விருந்துபசாரம் வழங்கப் பெறும்.

**நாள் குறித்தல்**

பெற்றோருடைய திருமண சம்பந்த நல்லிணக்கத்தைப் பொறுத்து பெற்றார் களிடையே உறவு வலுவடையும். பெற்றோர், உற்றார், உறவினரது உறவு வலுவடைந்து உபசரிப்புக்கள் உச்ச நிலையடையும். இரு பகுதிப் பெற்றோர்களையும் சம்பந்தி என அழைப்பர். சம்பந்திகள் சேர்ந்து திருமணத்துக்குரிய நாளைத் தீர்மானிப்பர். பொதுவாகக் கேட்டுச் செல்வதற் குரிய காலங்களாகவும், திருமணம் செய்வதற்குரிய காலங்களாகவும் சித்திரை, வைகாசி, ஆனி, ஆவணி, ஐப்பசி, கார்த்திகை, தை ஆகிய மாதங்களில் வரும் சுபமுகூர்த்தங்கள் கொள்ளப்படுகின்றன. இவற்றுள்ளும் தை, வைகாசி, ஆவணி மாதங்கள் மிகச் சிறப்பான மாதங்களாக கொள்ளப் படுகின்றன. மாசி, பங்குனி, ஆடி,புரட்டாதி,மார்கழி மாதங்கள் தவிர்க்கப்பட வேண்டிய மாதங்களாக விலக்கப்பட்டு வருகின்றன.

**சீதனம்**

சீதனம் என்பது வீடு, தோட்டம், வயல், மாடுகன்றுகள், முதலியனவற்றைக் குறிக்கும். பெண் வீட்டாரால் திருமணத் தம்பதிகளுக்கு வழங்கப்படும் நன்கொடை ஆகும். அத்துடன் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பெட்டகம், நகை நட்டு, உரல் - உலக்கை, அம்மி - குளவி, திருகை, குரச்சி, சேவரக்கால், வட்டி, செம்பு, அரிக்குமலை, வட்டா, படிக்கம் முதலியன கொடுப்பது கட்டாயமானதாகக் கருதப்பட்டது.

திருமணத் தம்பதிகளுக்கு ஆறுமாதம் வரை உணவு கொடுத்தல், அவர் களின் முதற் பிரசவ செலவினை ஏற்று நடத்துதல் என்பன பெண்வீட்டாரினது பாரம்பரிய கடைமைகளில் ஒன்றாக இருந்து வருகிறது. வசதிபடைத்த குடும்பமொன்றினால் வீடுவளவு, வயற்காணி, நெல் அவணம் (குறைந்தது மூன்று அவணநெல்), பால் கறக்கும் மாடுகள் (பசுக்களும், எருமைகளும்) ஆடுகள், இரு எருதுகள் பூட்டும் வண்டியும் இரண்டு எருதுகளும், கொடு பட்டன. பெண்ணின் பெற்றோர் தம்மிடம் உள்ள நிலபுலங்களை வழங்குவது கட்டாயமான தொன்றல்ல. பெண் பிள்ளைக்கு வீடு, சீதனம் என்பன இலெட்சுமி கரமான செல்வம் என இப்பிரதேச மக்களால் பேசப்பட்டு வருகிறது. ஸ்திரீதனம் என்பதே சீதனம் எனப் பின்னர் மருவிற்று எனலாம். இது சமஸ்கிருத சொல்லின் தமிழாக்கமாகும். சீதனம் என்பது பெண்ணின் சொத்து என்னும் பொருளைத் தருகிறது. சீதனம் இல்லறத்தில் புகுந்த தம்பதிகள் இன்பமுடன் காலங் கழிப்பதற்கும், இல்லற வாழ்வின் ஆரம்ப காலத்திலேயே கைமுதலைத் தேடிக்கொள்ளவும் உதவும் என்ற நோக்கத் திலேயே கொடுபட்டு வந்துள்ளன. மாப்பிள்ளை வீட்டாருக்குப் பணம்

முதலியன கொடுத்ததாக அறியமுடியவில்லை. ஆனால் பிற்காலத்தில் சீதனம் என்பது பணமாகக் கருதப்படுகிறது. இவ்வரதட்சணை என்பது மணமகனுக்கு வழங்கும் தட்சணையாக மாறிவிட்டது. அக்காலத்தில், சீதனம் பெற்றார் விரும்பிக் கொடுப்பதாகவே இருந்தது. அது கேட்டுப்பெறுவதாக இருக்கவில்லை. பண்டைய நாளில் பெண்வீட்டாரால் பெண்ணுக்குக் கொடுப் பதாக இருந்து வந்தது. சீதனம் கொடுத்தமையை

*ஆங்குநின்ற கோவலர்க்கும் அழகுதிகழ் கண்ணகிக்கும்*
*தாங்குபுகழ் சீதனமும் தானெழுதி - ஓங்கவென*
*வள்ளலெனும் மானாகர் மருகனெனும் கோவலர்க்கு*
*உள்ளபடி உவந்தார் தான்*

என கண்ணகி வழக்குரையில் கலியாணக்காதை கூறிப்பிடுகிறது.

திருமணத்திற்கு ஒரு சில தினங்களுக்கு முன்னர் சீதன உறுதி எழுதுதல், கணையாழி மாற்றுதல், திருமணப்பதிவு செய்தல் என்பன நடைபெறும். திருமணப்பதிவு செய்தல் அன்னியராட்சியிலிருந்து நடைமுறைக்குக்கொண்டு வரப்பட்டதாக அறியமுடிகின்றது. சில இடங்களில் பொருளாதார விரயம், காலவிரயம் முதலியவற்றைக் கருத்திற் கொண்டு திருமணத்தன்றே சீதன உறுதி எழுதுதல் நடைபெறுவதைக் காணக்கூடியதாக உள்ளது.

மட்டக்களப்புப் பண்டைத் தமிழர் உழவுத் தொழில் மூலம் விளைச்சலைப் பெற்று வாழ்வாங்கு வாழும் சால்புடையவர்கள். பெண்வீட்டார் தாமாக முன்வந்து சீதனம் கொடுத்தாலன்றி, மணமகன் வீட்டார் சீதனங்கள் என்று கேட்டு வாங்க மாட்டார்கள். ஏனெனில் அப்படிச் செய்வது சிறந்த வாழ்க் கையல்ல. அது வியாபாரச் செயல் என்பது அவர்களது உயர்ந்த பண்பு என்பதனை மேல்வரும் (ஈழத்துப்புராடனார், 1992, பக் - 60) பாடல் தெரிவிக்கின்றது:

*நிலத்தை உழுதுநெல்லை நிரைப்பார் மட்டுநகர்*
*புலத்தை எருவிட்டுப் பொலிவாக - நலஞ்செய்து*
*பெருக்குவ போல் வாங்கார் பெண்வீட்டுச் சீர்தனங்கள்*
*அரும்வணிகச் செயலாகு மாம்*

**கூறை உடுப்பு வாங்குதல்**

கூறை உடுப்புகள் வாங்கும் போது முதலாவதாக குங்குமம் வாங்க வேண்டும் என்பதும் இப்பிரதேச மக்களின் பண்பாட்டு முறைகளில் ஒன்றாகும். திருமணத்திற்கான கூறை முதலிய அணிகலன்களையும் சுபமுகூர்த்த நாள் ஒன்றிலே வாங்கப்படும். முதன் முதலாக ''குங்குமம்'' என்னும் திலகப்

பொருள் வாங்கப் பெறும். இவ்வாறு வாங்கச் செல்லும் போது மூன்று பேர் செல்வதைக் கட்டாயமாகத் தவிர்த்துக்கொள்வர்.

### தாலிக்குப் பொன்னுருக்குதல்

சங்ககாலத்தில் தாலி என்பது சிறுவர் சிறுமியர் அணியும் அணி விசேடம் எனக் குறிப்பிடப்படுகிறது. அக்காலத்தில் மாங்கல்யத் தாலி என்னும் ஒன்று இருந்ததாகத் தெரியவில்லை. இல்லறப் பெண்ணுக்கு அறிகுறியாக தொடி அல்லது இழை மணவணியாகக் கருதப்பட்டது (இராசமாணிக்கனார், மா., 1957, பக்.35). மேலும் சங்ககாலம் முதல் பத்தாம் நூற்றாண்டு வரையிலும் தாலிகட்டும் வழக்கு இருந்தமைக்கான சான்றுகள் இல்லை. பழங்காலத்தில் சாதாரணமாக அணியப்பட்டு வந்த புலிப்பற்றாலி போன்றவை பதினோராம் நூற்றாண்டு முதல் தமிழகத்திலே திருமணத்திற்குரிய சிறப்பு அணியாக மாறிவிட்டன (இராசமாணிக்கனார், மா., 1957, பக்.119). ஓலையினாலும் மிருகங்களின் பற்களினாலும் மரங்களினாலும் பலவகை உலோகங்களி னாலும் செய்யப்பெற்ற தாலியானது தற்போது பெறுமதிமிக்க உலோகங் களினாற் செய்யப்பெற்றதாக சுமார் கி.பி. பதினோராம் நூற்றாண்டு முதலாக மாற்றம் பெற்று வந்துள்ளதை அறியமுடிகின்றது.

தாலி என்பது பனை மரத்திற்குரிய மறு பெயர்களில் ஒன்றாகவும் உள்ளது. தாளி என்னும் சொல் தாலி என மருவிற்று. இதனை மண்டல புருடரின் சூடாமணி நிகண்டு தெரிவிக்கின்றது. பனையோலைக் கொழுந் தினால் செய்யப்பெற்ற அணிகலன் தாலி எனப்பட்டதாகக் கூறப்படுகிறது. தால் எனும் சொல் நாவைக் குறிக்கின்றது. எனவே தாலி என்பது நாவை யுடைய வாய் எனும் பொருளில் வந்து விடுகின்றது. எனவே அது புலியினது அங்காத்த வாய் (அங்காத்த வாய் - ஆவெனத் திறந்த வாய்) என வந்துள்ளது. ஆகவே தாலி என்பது புலியினது அங்காத்த வாய் வடிவில் செய்த ஆபரணத்தைக் குறிக்கலாயிற்று. அங்காத்த வாயில் முன்பற்களும் நாவும் வெளிப்பட்டே தெரியும். இது நாளடைவில் மறைந்து புலிப்பல் மாதிரி செய்து அணியப்படலாயிற்று (நல்லரெத்தினம், க., 2006).

திருமணத்திற்கு முன்னர் தாலிக்குப் பொன்னுருக்கும் வைபவம் மண மகன் வீட்டில் நடைபெறும். இருவீட்டார் சமூகத்தில் தாலியைச் செய்யும் விஸ்வ கர்ம குலத்தைச் (தட்டார்) சேர்ந்த ஒருவரால் பொன்னுருக்கல் வைபவம் நடைபெறும். தெய்வத்திற்கு மடை வைத்து வழிபாடு புரிந்து பொன்னுருக்கல் நடைபெறும். தாலி வேறு. கொடி வேறு. தாலியைக் கோர்க்கும் மாலை போன்ற வடிவமே கொடியாகும். தாலியை மஞ்சட் கயிறு (தெய்வீக மூலிகைநார் / நூலிழைக்கயிறு), மஞ்சள்நாடா, மாலை, கொடி

என்பனவற்றில் ஒன்றுடன் கோர்ப்பர். இவ்வாறு கோர்க்கப்பட்டபின் மங்கல நாண், மங்கல சூத்திரம், தாலிக்கயிறு, தாலிக்கொடி முதலிய பெயர்களைப் பெறுகிறது. மங்கல நாண் பற்றிய குறிப்பு சிலப்பதிகாரத்தில் வருகின்றது.

தாலி அணியும் வழக்கம் வைதிக மரபிலுள்ளது. தாலியின் உருவம் புராதன தமிழ் வழக்கிலிருந்து வந்ததாகலாம். இதில் மாங்கல்ய தாரணமே பிரதானமானது. அதாவது ''மங்கல நாணை உனது கழுத்திலே கட்டுகின்றேன்'' என்னும் பொருளில் வேதத்தில் வடமொழியிற் கூறப்பட்டுள்ளது.

தாலிக்கொடியை மணமகளின் கழுத்தில் அணிவிப்பதால் அவள் திருமணம் செய்யப்பெற்றவளாகவும், இல்வாழ்வாளாகவும் சந்தான விருத்திக்குரியவளாகவும் கருதப்படுகின்றாள். அக்காலத்தில் மட்டக்களப்புப் பிரதேசத்தில் பெரும்பாலும் கழுத்துடன் இணைந்ததான் தாலி கட்டப்பட்டது (செல்வநாயகம், த., 2006). இதனை உட்கழுத்துத்தாலி, உட்கட்டுத்தாலி, சரட்டுத்தாலி எனும் நாமங்களில் இடத்துக்கிடம் அழைக்கப்பட்டு வந்தது.

தாலி (தால்இ) தொங்குதல் என்னும் பொருளைத் தந்துள்ளதால், அது தொங்குதல் எனும் கருத்தைத் தந்து தொங்கும் நகையைக் குறிப்பதற்கு வந்துள்ளதாகக் கருதவேண்டியுள்ளது. ஐம்படைத்தாலி, புலிப்பற்றாலி, ஆமைத்தாலி, கொம்புத்தாலி, பிள்ளையார்தாலி என்ற பல வகைத் தாலியில் ஒன்றை அணிந்து வந்துள்ளனர். ஐம்படைகளைப் பொன்னாற் செய்த தாலி ஐம்படைத்தாலி எனவும், புலிப்பல்லை அழகுறத் திரித்துக் கோர்க்கப்பட்டதைப் புலிப்பற்றாலி எனவும், உலோக வகைகளில் ஒன்றினால் ஆமை உருவில் செய்து கோர்க்கப்பட்டதை ஆமைத்தாலி எனவும், இரு கொம்புகளில் கீழ்நோக்கியவாறு அமையச்செய்து கோர்க்கப்பட்டதைக் கொம்புத்தாலி எனவும், உலோகம் ஒன்றினால் பிள்ளையார் முகச்சாயலில் அமைத்துக் கோர்க்கப்பட்டதைப் பிள்ளையார் தாலி எனவும் பேர் கொள்ளலாயிற்று.

### திருமண அழைப்பு

பெற்றோர்களினால் நிட்சயிக்கப்பெற்ற திருமண நாளை உற்றார், உறவினர், ஊரவர்களுக்குத் தெரியப்படுத்துவர். இதனை மட்டக்களப்புப் பிரதேசத்தில் வெற்றிலை பாக்கு வைத்தல் எனக்கூறுவர். திருமணச் செய்தியைத் தெரிவிக்கச் செல்வோர் வெண்கல வட்டாவில் வெற்றிலை பாக்கு இரண்டையும் வைத்து செய்தி சொல்லப்படுவோருக்கு அவ்விரண்டையும் கொடுத்தலால் வெற்றிலை பாக்கு வைத்தல் எனப்பெயர் கொள்ளலாயிற்று. வெற்றிலை பாக்கு வைத்தலானது இலக்கியங்களில் ''வீடுசொல்லுதல்'' எனக் கூறப்படுகின்றது. கண்ணகியின் திருமணத்தை யானை மீது சென்று ஊரார் அனைவருக்கும் தெரியப்படுத்தியதாக சிலப்பதிகாரம் கூறுகின்றது.

*யானை எருத்தத்து, அணிஇழையார் மேல்இரீ*
*மாநகர்க்கு ஈந்தார் மணம்*

(சிலப்பதிகாரம் - மங்கல வாழ்த்துப் பாடல் 44-45).

**பால் தப்புதலும் நீராட்டுதலும்**

திருமண நாளன்று மணமகனின் சகோதரியினால் அல்லது சகோதரி உறவு முறையுள்ள ஒருவரினால் மணமகளின் சிரசில் பால், அறுகு, மஞ்சள், வெண்மலர் வைத்து நீராட்டப்பெறுவது வழக்காகும். வாழ்க்கையானது பால் போன்று பிறருக்குப் பயனுடையதாகவும் வெண்மலர் போன்று தூய்மையுடையதாகவும் அறுகு போன்று நீடித்த ஆயுள்வாழ்க்கை உடையதாகவும் மஞ்சள் போன்று மங்களகரம் உடையதாகவும் அமைய வேண்டும் என்பது இதன் கரும நோக்கமாகும். இந்நோக்கத்திற்காக மேற்கூறப்பட்ட பொருட்களை சிரசில் வைத்துப் பால் தப்புதல் எனக் கூறப்படுகிறது. மணமகளுக்கு மேற்படி மச்சாள் உறவுமுறையிலுள்ள ஒருவரால் பால் தப்பியதைத் தொடர்ந்து இனபந்துக்களாலும் பால் தப்பிய பின்னரே நீராட்டுதல் நடைபெறுகின்றது. இந்நீராட்டலைத் திருமண முழுக்கு என்பர்.

மணமகளுக்கு பால் தப்பி நீராட்டுவது போன்று மணமகனின் சிரசில் மணமகளின் சகோதரன் அல்லது சகோதர உறவு முறையுள்ள ஒருவராலும் இனபந்துக்களாலும் பால் தப்பி மணமகன் நீராட்டப்பெறுகின்றார். ஆதி காலத்தில் முதன்முதலாகத் தாடி மழித்தலும், கடுக்கன் அணிவதும் இன்றைய நாளிலேயாகும் என அறியமுடிகின்றது (வயிரமுத்து, க., 2008).

பால் தப்பச் செல்பவருடன் தாம்பூலத் தட்டுடன் மஞ்சள், சவர்க்காரம், பால், சீப்பு, கண்ணாடி, வாசனைப்பொருட்கள், நீராடியபின் துடைப்பதற்கான துணி என்பவற்றுடன் சிலரும் செல்வர். செல்லும் போது மேற்கூறப்பட்ட பொருட்களைத் தாம்பாளத்தில் வைத்து வெள்ளைச் சீலையால் மூடிச்செல்வர். நீராட்டலுக்குரிய நீர் சுமங்கலிப்பெண்களால் புதுக்குடங்களில் கொண்டு வரப்படும். இந்நீரானது ஆறு, கங்கை, குளம், கிணறு என்பவற்றின் ஒன்றிலிருந்து பெறப்பட்டு வந்துள்ளது. நான்கு, ஆறு, எட்டு எண்ணிக்கையில் இச் சுமங்கலிகள் கலந்து கொள்வர். சுமங்கலி என்பது இல்லறத்தில் ஆண்மகனைப் பெற்று செல்வச்சிறப்புடன் கணவனின் அன்புடை மனைவியாக வாழ்கின்ற இல்லத்தரசிகளைக் குறிக்கும். நீர் கொண்டு வரும் போது மேற்கட்டி பிடித்துக் குரவை ஒலி, வாத்திய ஒலிகள் சகிதம் வருவர். மணமகள் மணமகன் ஆகியவர்களை நீராட்டும் இடத்தில் நிறைகும்பம் வைக்கப் பட்டிருக்கும். நீராடிய பின்னர் தத்தமது குலதெய்வ வழிபாடு முடித்துப் பெற்றோர், குலத்தாதை, முதலிய பெரியோர்களை வணங்கி ஆசிர்வாதத்தைப் பெறுவர் (கதிராமத்தம்பி, K.O.V., 2007).

### மணமகனை அழைத்துவரச் செல்லல்

மணமகளின் வீடானது அவளது குல குடி சீர்வரிசைகளுக்கு ஏற்ப கூரை முடிகளுடன் அலங்காரக் கோலத்திற் காட்சியளிக்கும். திருமணத்திற் கலந்து கொள்ளும் பெண்கள் அனைவரும் தத்தமது கூறை ஆடையை இந்நாளில் அணிவது வழக்காகும். மணமகனை அழைத்து வருவதற்காக மணமகனின் வீட்டிற்கு மணமகளின் சகோதரன் அல்லது சகோதர உறவு முறையிலுள்ள ஒருவர் செல்வார். இவர் மாப்பிள்ளைத் தோழன் என அழைக்கப்படுவார். மணமகன் திருமணத்திற்காக புதியவேட்டி (கூறைவேட்டி), புதியசால்வை (கூறைச்சால்வை), தலைப்பாகை, ஏகாவடம் என்பவற்றை அணிந்து செல்வது வழக்கமாக இருந்துள்ளது. இப்பிரதேசத்தின் விஷ்ணு ஆலய பூசகர்கள் கலியாணக்கால் வெட்டச் செல்லும் போது இவ்வேடம் புனைந்து செல்வது இன்றும் இருந்து வருகின்றது. உதாரணமாக புராதன ஆலயங்களில் ஒன்றான திமிலைதீவு மஹாவிஷ்ணு ஆலயத்தில் நடைபெறும் கல்யாணக்கால் வெட்டும் நிகழ்வுக்கு பூசகர் புறப்படுவதைக் குறிப்பிடலாம்.

மணமகன் திருமணத்திற்காகப் புறப்பட்டுச் செல்லும் போது கூறைச் சேலையையும் தாலியையும் ஒருபெட்டியுள் வைத்து, தாம்பூலவட்டா, உணவுப்பண்டங்கள் நிறைந்த பெட்டிகள் என்பவற்றுடன் மேற்கட்டி பிடித்துச் செல்வர், கூறை தாலிப்பெட்டியை மணமகனின் சகோதரி அல்லது சகோதரி உறவு முறையுள்ள சுமங்கலி ஒருத்தி தன் தலையில் சுமந்து பெண்வீட்டிற்குக் கொண்டு வருவது முக்கிய சம்பிரதாயமாகும். கூறை, தாலிப்பெட்டியின் முன்னால் மணமகனின் இளைய சகோதரன் பலகாரக்கா கொண்டு செல்வார். காற்றாடியில் (காவு தடி) இருபக்கங்களிலும் உறிகளில் பலகாரங்கள் நிறைந்த ஓலைப் பெட்டிகள் ஒவ்வொன்றும் வைக்கப்பட்டிருக்கும். இதற்கும் முற்பட்ட காலத்தில் கற்பன் புல்லினால் இழைக்கப்பட்ட உமல் எனப்படும் புற்பையில் இப்பலகாரங்கள் இடப்பட்டு காவிலே கொண்டு செல்லப்பட்டது. உமல் நாடங்காயின் வடிவத்தையொத்தது. அது அரிசி முதலிய பொருட்களைக் கொண்டு செல்வதற்கும் பயன்பட்டது. இப்பலகாரக்காவினை திருமணக்கா, பலகாரக்கா என்பர். திருமணக்காமுன்னே செல்ல தொடர்ந்து கூறை தாலிப் பெட்டியும் அதனைத் தொடந்து ஏனைய பெட்டிகளும் மேற்கட்டியுடன் கொண்டு செல்லப்படும். இவைகளின் பின்னால் தோழன் குடைபிடிக்க மண வாத்தியங்கள் முழங்க பெண்கள் குரவையொலி எழுப்ப மணமகன் மண மகளின் வீடு நோக்கிச் செல்வார். பண்டைய நாளில் வெண்குடையின் கீழ் மணமகன் செல்வது வழக்காக இருந்தது. வெண்குடை இல்லாத வேளையில் கறுப்புக்குடையின் மேல் வெள்ளைச் சீலை விரிக்கப்படும்.

தாம்பூல வட்டாவில் வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம், எலுமிச்சம் பழம், மஞ்சள் என்பன அடங்கியிருக்கும். மணமகளின் வீட்டின் தெரு நுழை வாயிலை மணமகன் அடைந்ததும் மணமகனை வீட்டுக்குள் அழைத்துச் செல்வர். தீபம் கும்பம் முதலியன கையில் ஏந்தி, நெற்பொரி தூவி, பன்னீர் தெளித்து அவர் வரவேற்கப்படுவார். வரவேற்கும் போது நிறைகுடம் வைத்து சுடரேற்றப்பட்ட தாள்விளக்கு ஒளி வீச வரவேற்பார்கள்.

கூறை, தாலிப்பெட்டி தவிர்ந்த ஏனைய பொருட்கள் மணமகள் வீட்டாரால் கைமாறப்படும். கூறை தாலிப்பெட்டியை மணமகளின் சகோதரி கைமாறிச் செல்ல எத்தனிப்பார். ஆனால்கூறை தாலிப்பெட்டியை மணமகனின் சகோதரி கைமாற விடாது தாலிகட்டும் இடத்திற்கு அவளே கொண்டு சென்று வைப்பாள். இருவருக்கும் இடையில் கூறை தாலிப்பெட்டி மாறுவதில் கெடுபிடி காணப்பட்டாலும் மணமகனின் சகோதரி கொண்டு போய் வைப்பது மரபாகும். பிற்காலத்தில் சில வேளைகளில் மணமகளின் சகோதரி கைமாறிப் பெற்றுச் செல்வதையும் காணக்கூடியதாகவுள்ளது.

**மணமகனை வரவேற்றலும் திருமணச் சடங்கும்**

மணமகனை வரவேற்கும் காட்சி பெரிய புராணத்தில் கூறப்படுவது போன்று காணப்படுகின்றது. பன்னிரண்டாம் நூற்றாண்டிலே சேக்கிழார் இயற்றிய பெரிய புராணத்தில்

*நிறைகுடம் தூபம் தீபம் நெருங்கு பாலிகைகள் ஏந்தி*
*நிறைமலர் அறுகு சுண்ணம் நறும்பொரி பலவும் வீசி*
*உறைமலி கலவைச் சாந்தின் உறுபுனல் தெளித்து வீதி*
*மறையவர் மடவார் வள்ளல் மணம் எதிரி கொள்ள வந்தார்*

எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. அலங்கரிக்கப்பட்ட பந்தலின் கீழ் வீட்டை நோக்கியவாறு வெள்ளைச் சீலையால் விரிக்கப்பட்ட பலகையின் மீது மாப்பிள்ளை நிற்பார். இப்பந்தல் ஆண்களுக்கும் பெண்களுக்குமாக இரண்டாகச் சீலையால் பிரிக்கப்பட்டு அமைக்கப்பட்டிருக்கும். அவ்வேளை யில் சருவச்சட்டி ஒன்றில் மஞ்சளும், அறுகும் கலந்து வைத்த நீரினால் மணமகளின் சகோதரன் அல்லது இளைய சகோதரி மணமகனின் பாதங்களை கழுவுவார். பாதம் கழுவியவருக்கு மணமகனால் மோதிரம் பரிசாக வழங்கப் படும். பாதம் கழுவியவர் பெண்ணாயின் மோதிரம் வழங்கப்படுவதில்லை, பொற்காசு வழங்கப்படும். பாதம் கழுவுதலை பாதம் விளக்குதல் என்பர்.

இதன் பின்னர் மணமகளைப் பெற்றோர் தோழி சகிதம் அழைத்து வந்து மணமகனின் வலது பக்கத்தில் நிற்குமாறு செய்வர். மணமகன் தமது சகோதரி யிடமிருந்து கூறைச்சேலையை வாங்கி மணமகளின் தலையில் வைக்க

ஆராத்தி எடுக்கப்படும். ஆராத்தியை வலஞ்சுழியாக எடுத்து மணமகனின் நெற்றியில் திலகம் இடுவர். மணமகனின் சகோதரியும் மணமகளின் சகோதரியும் ஆராத்தியை எடுப்பார்கள். இவர்கள் இல்லத்தரசிகளாக, சுமங்கலிகளாக இருக்கவேண்டுமென்பதும் ஆராத்தியை எடுக்கும் போது இவர்களது கூந்தல் அவிழ்ந்து விடாதவாறு இருக்க வேண்டும் என்பதும் கட்டாயமாகும்.

அவ்வாராத்தி முடிந்த பின்னர் மணமகள் வீட்டினுள் அழைத்துச் செல்லப் பட்டு மணமகனால் கொடுக்கப்பட்ட கூறையை அணிந்து மணமகனின் வலப்பக்கத்தில் வந்து நிற்பாள். அவ்வேளையில் மணமகனின் இடது தோளில் இருந்த சால்வை வலது தோளுக்கு மாற்றப்படும். அதன் பின்னர் மணமகளின் தந்தை மணமகனின் வலக்கையைப் பற்றி மணமகளின் இடக்கை யைப் பிடித்து இருவர் கைகளையும் சேர்த்துப் பற்றி ''சந்திரன் சூரியன் சாட்சியாக இச்சபையோர் சாட்சியாக எனது மகளைத் தங்களிடம் ஒப்படைக் கின்றேன். இப்பொழுது முதல் நீங்கள் இருவரும் கடவுள் துணையுடன் மனமொத்து வாழ்ந்து சீரும் சிறப்புக்களும் பெற்று பல்லாண்டு காலம் வாழுங்கள்'' என்று வாழ்த்துவார். மணமகளின் தாய் பூவும் நீரும் சேர்ந்த நீரை மணமக்களின் கைகளில் வார்த்து மணமகளை மணமகனுக்கு உரித்தாக்குவர். இதனை கைப்பிடித்துக் கொடுத்தல் என்றும் தாரை வார்த்துக் கொடுத்தல் என்றும் இப்பிரதேச மக்கள் கூறுவர். பிற்காலத்தில் இங்கு கன்னிகாதானம் எனக்கூறும் வழக்கும் வழங்கலாயிற்று.

மணமகன் தனது சகோதரியின் உதவியுடன் மணமகளின் கழுத்தில் தாலி அணியப் பெற்றதும் மணமகனின் இடப்பக்கமாக மணமகள் இடம்மாறி நிற்பாள். தாலி அணியும் நேரத்தில் தாலி செய்தவரும் (தட்டார்) சமூக மிருப்பார். இந்நேரத்தில் நெல், அறுகு,வெண்மலர் தூவி மணமக்களுக்கு ஆசிர்வாதம் செய்யப்பெற்று வந்தது. பிற்காலத்தில் மஞ்சள் கலந்த அரிசி தூவுதலும், பல வர்ண காகிதத்துகள்களை தூவுதலும் புகுந்து விட்டன.

ஆராத்தி நிகழ்வு முடிவுற்றதும் மணமக்கள் தத்தமது வலக்காலைத் தூக்கி வைத்து வீட்டினுள் புகுவர். வீட்டினுள் அவர்கள் அழைத்துச் செல்லப் பட்டதும் பூரண கும்பம் கண்ணாடி என்பனவற்றைப் பார்க்குமாறு அவர் களைச் செய்வித்து வெள்ளை விரிக்கப்பட்ட பாயில் கிழக்கு அல்லது வடக்கு நோக்கி அமரச் செய்வர்.

மட்டக்களப்புப் பிரதேசத் தமிழர் சடங்குகள் சம்பிரதாயப் பழக்க வழக்கங்கள் முதலிய பண்பாடுகளைப் பேணுவதிலும் ஒழுகுவதிலும் அக்கறையுடைவர்களாக வாழ்ந்து வந்துள்ளனர். பெரும்பாலும் அவை

பண்டைத் தமிழரின் பண்பாட்டினை அடியொற்றியதாகக் காணப்படுகின்றன. அக நானூற்றில் 86ஆம், 136ஆம் செய்யுட்களில்

- திருமணத்தின்போது விருந்துபசாரம் நடைபெறுதல்
- திருமணப்பந்தலின் கீழ் மணல் பரப்பப்பட்டு மாலைகள் தூக்கி விளக்கு வைத்தல்
- காலைப்பொழுதில் திங்கள் ரோகணியுடன் கூடிய நல்லோரையில் முதுபெண் மணமக்களை நீராட்டுதற்குரிய நீரைப் புதுக்குடங்களில் எடுத்து வருதல்.
- அந்நீர்க்குடங்களில் மலரும் நெல்லும் தூவி பிள்ளை பெற்ற வாழ்வரசியர் மணமக்களை நீராட்டுதல்.
- புத்தாடை அணிதல், மணமுழவும் இடமுரசும் முழங்குதல் எனக் குறிப்பிடுகின்றது.

திருமணப்பந்தலை அழகுறச்செய்தல், திருமணத்தை சுப முகூர்த்தத்தில் நடத்துதல், மணமக்களை நீராட்டுதல், புத்தாடை அணிதல், வெண்மலரும், நெல்மணியும் தூவி மணமக்களை வாழ்த்துதல், திருமண ஒலிகளை இசைத்தல் என்பன அக்கால மக்களில் இருந்து திருமண முறை தொடரப்பட்டு வருவதைத் தெரிந்து கொள்ள முடிகின்றது.

**பால் பழம் பருகல்**


அவ்வேளையில் மணமக்களுக்கு பால் பழம் தேன் சர்க்கரை கலந்த உணவு திருமணத்தை நிறைவேற்றுபவரால் வழங்கப்படும். தம்பிலுவில் பிரதேசத்தில் முதலில் தேன் வழங்கியதையடுத்து பால் பழம் கலந்த உணவு வழங்கப்பட்டு வருகிறது. மட்டக்களப்புப் பிரதேச மக்கள் இதனைப் பால் பழம் கொடுத்தல் என்பர். இதனை இலக்கியங்கள் மதுபருக்கம் எனக் குறிப்பிடுகின்றது. திருச்செந்தூர் புராணத்தில்

*காதலி குறக்கோ மாட்டி கரகநீர் வார்ப்பச் செவ்வேள்*
*பாதமெய்த் துணையை வேடர் பார்த்திவன் விளக்கிப் பின்னர்க்*
*கோதிலா சமன நீருங் கொடுத்தருக் கியமு நல்கி*
*மாதவன் முருகன் கையின் மதுபருக் கமுமீந் தானால்*

எனக் குறிப்பிடுகின்றது (சிவப்பிரகாசர், ச., 1969, பா.67).

**கலத்தில் போடுதல்**

வெண்கலத்தாலான சேவரக்கால் என்னும் உணவாசனத்தின் மேல் வெண் கலத்தாலான வட்டியினை வைத்து அதனுள் செஞ்சோற்றுடன் ஏழு மரக்கறி கொண்டு சமைத்த கறியும் தயிரும் வைத்து அதிலிருந்து மணமகளால் மணமகனுக்கு மூன்று முறையும் மணமகனால் மணமகளுக்கு மூன்று முறையும் ஊட்டுவர். சேவரக்கால் என்பது சுமார் ஒரு அடி உயரமுடைய வெண்கலத்தால் ஆக்கப்பட்ட காலின் மேல் வட்டமான பலகை போன்ற தட்டுடன் கூடிய அமைப்பு ஆகும். வட்டி என்பது சோறு கறி வைத்து உண்ணும் பாத்திரமாகும். மேற்கூறியவாறு வட்டியில் வைத்து உணவை ஊட்டும் நிகழ்வு கலத்தில் போடுதல் எனக் கூறப்படும். கீழுள்ள படத்தில் வட்டியினையும் சேவரக்காலையும் காணலாம்.



வட்டியும்சேவரக்காலும்

உணவருந்திய பின் மணமகளினால் மணமகனுக்கு வெற்றிலையும் பாக்குச் சீவலும் மடித்துக் கொடுக்கப்படும். அதனைத் தாம்பூலம் கொடுத்தல் என்பர். இதன் போது விருந்துபசாரம் நடைபெறும். முதலில் மணமகனின் பகுதியாருக்கும் பின்னர் மணமகளின் பகுதியாருக்கும் பந்தி வைத்து திருமண விருந்து பரிமாறுவது வழக்கமாக இருந்து வந்துள்ளது. இவ் விருந்தில் தயிர் முக்கிய இடத்தை வகிக்கும். மணமகனின் பெற்றோருக்கு விசேட மரியாதை அளிக்கப்படும். இவர்களுக்காகத் தாம்பூல வட்டாவும் படிக்கமும் அவர்களுக்குப் பக்கத்தில் வைக்கப்படும். பிற்காலத்தில் படிக்கம் வைக்கும் வழக்கம் அருகிவிட்டது. விருந்துபசாரம் ஆரம்பிக்கும் போது வெள்ளைத் துணியால் வாய் மூடிய நீர் நிறைத்த மூன்று செம்புகளில் ஒன்றைமணமகனின் பெற்றோருக்கும் மற்றைய செம்பு ஒன்றை மணமகனின் பகுதியில் உள்ள சகலராலும் மதிக்கப்படும் பெரியவர் ஒருவருக்கும், அடுத்ததாக உள்ள செம்பை மணமகளின் பகுதியில் உள்ள சகலராலும்

மதிக்கப்படும் பெரியவர் ஒருவருக்கும் வழங்கி விருந்துக்கு அழைப்பர். கீழுள்ள படங்களைப் பார்க்கவும்.



விருந்துபசாரத்தில் ஆண்களுக்கான பந்தி



விருந்துபசாரத்தில் பெண்களுக்கான பந்தி

விருந்துபசாரத்தின் பின்பு தாம்பூலம் வழங்கும் நிகழ்வில் மணமகனின் பெற்றோருக்கு மணமகளின் பெற்றோர் தாம்பூலம் மடித்துக் கொடுப்பர். மணமகளின் பெற்றோர் அல்லது மணமகளின் தாய்மாமன் மாமி அல்லது மணமகளுக்கு நெருங்கிய உறவினர்கள் தம்பதிகளாய் நின்று நன்றி கூறி வழி அனுப்பும் முறை பேணப்பட்டு வருகின்றது. அத்துடன் புதிய ஓலைப் பெட்டியில் பலகாரவகைகளை வைத்து வெள்ளைத் துணியாற் கட்டி மண மகனின் வீட்டாருக்கு தமது உறவினர் மூலம் மணமகளின் பெற்றோர் அனுப்பி வைப்பர் (ஞானரெத்தினம், க., செல்வராசகோபால், க.தா., 2003, பக்.39). அன்றிரவு மணமகனின் பெற்றோர் திருமண வீட்டிலேயே மண மகளின் பெற்றோரின் வேண்டுகோட்படி தங்குவார்கள். மூன்று நாட்களின் பின்னர் வரும் சுபமுகூர்த்த நாளன்று மணமகனின் வீட்டிற்கு மணமக்களை மணமகளின் சுற்றம் சூழ அழைத்துச்செல்வர். இதனை இப்பிரதேச மக்கள்

கால்மாறிச் செல்லல் எனக் கூறுவர். அவர்களுக்கு மணமகன் வீட்டில் விருந்துபசாரம் நடைபெறும்.

திருமணமான மூன்றாம் நாள் மணமக்களைப் பார்க்க மணமகனின் வீட்டிலிருந்து பெண்கள் சேர்ந்த சிறுகுழுவினர் வருவர். இவ்வாறு வருதலை சம்பந்தி வருதல் என அழைப்பர். இன்றைய நாளில் திருமணப்பந்தல் அகற்றப்படும். ஆதலால் வெள்ளை அவிழ்க்கும் நாள் என்று இந்நாளை அழைப்பர். அன்றைய தினத்தில் சலவைத் தொழிலாளிக்கு விசேட விருந்து நடைபெறும்.

திருமணமான முதல் மூன்று நாட்களும் மணமக்கள் வீட்டைவிட்டு வெளியே செல்லுதல் தவிர்க்கப்பட்டுள்ளது. மேலும், திருமணம் நடைபெற்று ஆறு மாதம் வரையில் மணமக்கள் கோயிலுக்கு செல்லுதலும் தவிர்க்கப் பட்டுள்ளது. திருமணமான ஆறுமாத காலத்தைத் தீட்டாகக் கருதுகின்றனர். மேற்படி ஆறு மாத காலமும் மணமகளின் பெற்றோரே மணமக்களுக்கு உணவு வழங்குதல் மரபாகும் (கந்தையா, வி.சீ., 1964, பக்.446). ஆண்மகன் திருமணமானதும் பெண்ணினது வீட்டிலேயே வாழும் மரபு மட்டக்களப்புப் பிரதேசத்திலே தொடர்ச்சியாக நிலவி வருகிறது.மேற்குறிப்பிட்ட மட்டக்களப் பின் திருமண விழா நடைமுறையினை ''மட்டக்களப்பு உழவர் மாட்சிக் கலம்பகம்'' மேல்வருமாறு எடுத்துக்காட்டுகின்றது:

கோகூய் கூவெனக் குரவை யோங்க
கூறையுந் தாலியுங் கொழுநனின் தங்கை
பெட்டியில் வைத்துப் பெட்புற வெள்ளை
கட்டிய துணியாற் கவினுற வெடுத்துத்
தலைமேல் வைத்துத் தான்வர முன்னால்

மலையதை நிகர்த்த மணமக னோடு
மாப்பிளைத் தோழன் மருவி வரவுங்
கூப்பிய கையாற் குறையற வில்லறம்
நிலைக்க வென்று நெடுமுடிச் சிவனைத்
தொழுத வண்ணந் தொடருந் தாயும்

வளுவிலா மட்டக் களப்பார் பலரும்
ஆலயஞ் சென்று அமர்ந்து இருக்கும்
மங்கையின் கழுத்தில் மங்கல நாணாந்
தங்கத் தாலியை தயைவுறக் குரவர்
எடுத்து நீட்ட எடுத்ததை இளவல்

தொடுத்துத் தெரிவையின் தோள்மே லெடுத்து
மூன்று முடிச்சுகள் முடிப்பக் குரவை
தோன்றப் பெண்கள் தொடுப்ப வந்து

*பெண்ணின் அகத்திற் பெய்திடு முணவை*
*உண்ண அவளும் உடன் பரிமாறி*
*உண்டதிற் பாதி உண்டு இணைய*
*உற்றார் உறவினர் உவந்து கலத்தில்*
*இட்டனர் எழுமன விரந்து நிரைத்து*
*பந்தியில் விருந்து படைக்க வுண்டு*
*தந்திடு மாசில் தகையாம் வாழ்க்கைப்*
*பந்த மென்று பகரவும் படுமே*
*வாழ்வோர் இல்லமும் வயல்செய் கழனியும்*
*ஆழமார் கிணறும் அகத்துறைப் பொருளும்*
*சொந்தமா யுறுதி சொல்லி எழுதி*
*வந்துறு மிதுவே வாழ்க்கைப் புத்தகம்''*

(பக்.44,45)

## iv. மரணச் சடங்கு

இப்பிரதேசத்தில் பெரும்பாலும் அடக்கம் செய்யும் முறையே பரவலாகக் காணப்பட்டது. சிறுபான்மை தகனம் செய்யும் வழக்கும் காணப்பட்டது. ஒருவர் இறந்தால் அடக்கம் செய்தலை அல்லது தகனம் செய்தலை வயது வந்த பெரியோர்களே தீர்மானிக்கும் வழக்கு அக்காலத்தில் காணப்பட்டது. இது இறந்தவரின் மூதாதையிரினாற் பேணப்பட்டு வந்த வழக்கின் பொருட்டு அல்லது இறந்தவர் வாழ்ந்த போது கூறியதன்படி தீர்மானிக்கப்படும். மட்டக் களப்புப் பிரதேசத்தில் தாய் தந்தையர்களுக்கு அல்லது மனைவிக்கு எவ்வாறு அடக்கம் செய்தல் அல்லது தகனம் செய்தல் நடைபெற்றதோ அவ்வாறே பிள்ளைகளையும், கணவர் அல்லது மனைவியையும் அடக்கம் செய்தல் அல்லது தகனம் செய்தல் நடைபெற்று வந்துள்ளது. அக்காலத்தில் சைவ சமயத்தவர்களால் சவப்பெட்டியிலோ, பிணவண்டியிலோ பிணம் கொண்டு செல்லப்படவில்லை. பிரேதம் பாடையில் வைக்கப்பெற்று உறவினர்களால் தூக்கிச் செல்லப்பட்டது (கதிர்காமத்தம்பி, KOV., 2007).

நீளக்கிடத்தி குழிகளில் அடக்கம் செய்ததற்கான சான்றுகள் மட்டக் களப்பில் கதிரவெளிப் பிரதேசத்தில் காணப்படுகின்றன (சிற்றம்பலம், சி.க., 2001, பக்26). மட்டக்களப்புப் பிரதேசத் தமிழர் அக்காலத்தில் இறந்து மூன்று, நான்கு மணித்தியாலங்களுக்குள் பிரேத அடக்கம் அல்லது தகனம் செய்தலுக்காக மயானத்திற்குப் பிரேதத்தைக் கொண்டு செல்வது வழக்காக இருந்துள்ளதாக அறியமுடிகின்றது (Canagatanam, S.O., pp86). ஒருவர்

இறந்த பின் இயன்ற வரை விரைந்து பிரேதம் மயானத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. மரண வீட்டைப் பொதுவாக சாவீடு என்று கூறும் வழக்கும் உள்ளது.


**கூரைமுடி**

பிரேதத்தைக் குளிப்பாட்டுவதற்கு முன்னதாக மரணமடைந்தவரின் குலங்குடி சீர்வரிசைக்கேற்ப கூரையின் மீது கும்பங்கள் வைக்கப்படும். இதனை கூரைமுடி என்பர். ஆனால் கூரையின் மேல் உச்சியில் உள்ள கும்பத்தைக் கூரைமுடி என சிறப்பாகக் கூறுவர். விரித்த குடையின் கீழ் கூரைமுடிக் கும்பம் அமைக்கப்பெறும். ஆனால் பொதுவாக சீர்வரிசைக் கும்பங்கள் அனைத்தையும் கூரைமுடி என்று கூறும் வழக்கம் உண்டு.

கூரைமுடிக் கும்பம் முதலாக வாயிற் கூரைக் கும்பங்கள் வரை வைக்கப்படும் கும்பங்களின் எண்ணிக்கை மரணமடைந்தவரின் குலங்குடி சீர்வரிசைக்கு ஏற்ப வைக்கப்படும். நன்மைக்கும் தீமைக்கும் (சாமர்த்தியவீடு, திருமணவீடு - நன்மை: சாவீடு - தீமை) இக்கும்ப வரிசை இடம்பெறும். இக்கும்ப முறை பேணாத வீடுகளை மதிக்காத தன்மை மட்டக்களப்புப் பிரதேசத்தில் இன்றும் இருந்து வருகின்றது. சில குலத்திற்கும் சில குடி களுக்கும் சீர்வரிசைக் கும்பங்கள் தவிர்க்கப்பட்டு வந்துள்ளன.

பிரேதம் வைக்கப்பட்டுள்ள வீட்டு வாயிலின் மேல் உள்ள கும்பங்களை வளைந்து வாயிலின் இரு மருங்கிலும் தொங்குமாறு மடிக்கப்பட்ட சீலைகள் விடப்படும். இச்சீலைகள் ஐந்து, ஏழு, ஒன்பது என்ற எண்ணிக்கையில் அடங்கும். இவ்வாறு தொங்க விடப்பட்டிருக்கும் சீலைகளைச் சீராடை, சிறப்பாடை என்பர். கூரைமுடிக் கும்பத்தினைச் சுற்றி மடித்த சீலைகள் இருபக்கங்களினாலும் ஏனைய கும்பங்களின் ஓரமாகப் பக்கம் மாறிப்போடப் படும் இவ்வாறு போடப்பட்ட சீலையின் இரு முனைகளும் சீராடை, சிறப் பாடையுடன் வந்து பொருந்தும்.இதனை ஏகாவடம் என்பர். சீராடை சிறப் பாடை தொங்கும் இரு முனைகளிலும் நிலத்தில் இரு பூரண கும்பங்களும், இரு சுடர் விளக்குகளும் வைக்கப்படும். கீழுள்ள விளக்கப்படத்தைப் பார்க்கவும்

கூரைமுடி சீர்வரிசைக் கும்பங்கள் முதலானவைகள் பிரேதம் சுடலைக்குச் சென்றதும் அகற்றப்பட்டுவிடும். இக்கும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் மூன்று மாவிலைகள் வீதம் வைக்கப்படும். நன்மைக்குரிய நிகழ்வுக் கும்பங்களுக்கு மூன்றுக்கு மேற்பட்ட மாவிலைகள் வைக்கப்படும். சீர்வரிசைக் கும்ப அலங்கார முறைகள் குலம் குடிகளின் சிறப்புக்கான குறியீடெனக் கருதப்பட்டு




வீட்டு நிகழ்வுகளில் வைக்கப்படும் குலம் குடி காட்டும் கும்பவரிசை

வருகிறது. இம்முறையானது மட்டக்களப்பிற்குச் சேர நாட்டிலிருந்து வந்ததாகக் கொள்ளப்படுகிறது.

## மரணவீட்டு நிகழ்வுகள்

மட்டக்களப்புப் பிரதேசத்தில் இறந்தவரின் பிரேதத்திற்கு இரவு வேளையாயின் சாமங்கள் தோறும் ஆடை மாற்றி வைகறையிற் குளிப்பாட்டி ஆடை அணிகலன் புனைந்து சிறப்புறச் செய்வர். குளிப்பாட்டும் நீரை மூன்று, ஐந்து, ஏழு எனும் ஒற்றை எண் அடிப்படையில் ஆறு, குளம், கிணறு என்பவற்றினொன்றிலிருந்து மேற்கட்டி பிடித்து விதவைகளால் எடுத்து வரப்படும். குளிப்பாட்டலின் போது மைத்துனர் / மைத்துனி அல்லது சம்பந்தியினால் அரப்பு வைக்கப்படும். ஆணுக்கு ஆணும், பெண்ணுக்குப் பெண்ணும் குளிப்பாட்டல், ஆடை அணிதல் முதலியன செய்து பிரேதத்தைப் பேணுவது வழக்காகும். அரப்பு என்பது நல்லெண்ணெய், இலுப்பைப் பிண்ணாக்கு, பால், அறுகு, மஞ்சள் கலந்த கூட்டுக்கலவையாகும்.

திருமணம் செய்தவராயின் தலைப்பாகை முக்கிய இடத்தைப்பெறும். மனைவி உயிருடன் இருப்பின் மனைவியின் கழுத்தில் இருந்த தாலி

கழற்றப்பட்டு பிரேதத்தின் மார்பில் வைக்கப்படும். கழற்றப்பட்ட தாலி மனைவியால் ஒருபோதும் மீள அணியப்படமாட்டாது. இதனாலேயே அவள் தாலியிழந்தவள் என்னும் சொல்லுக்கு ஆளாகின்றாள். மேலும் கூறைச்சேலை பிரேதத்தின் மீது போர்த்தப்படும்.

பிரேதத்தின் மேலாகக் கூரையில் வெள்ளைச்சீலை கட்டப்படும். இதனை எச்சம் தாங்கி என அழைப்பர். பிரேதத்தினைக் கிடத்தி வைக்கும் போது தலைப்பக்கம் தென் மேற்குத் திசையை நோக்கியதாக வைக்கப்படும். தென் மேற்குத் திசையை மட்டக்களப்புப் பிரதேசத்தில் சாமூலை என அழைப்பது வழக்காகும். கோணத் திசைகளை மூலை என்பர். தென் மேற்குத் திசையை இப்பிரதேச மக்கள் சாவிற்குரிய மூலையாகக் கொள்வர். ஆதலால் அது சாமூலை என அழைக்கப்படலாயிற்று. ஒரு கிராமத்தின் தெற்குத் திசையிற் சுடுகாடு அமைதல் சிறப்புடையதாகும் என மனுதர்ம சாத்திரம் கூறுவது இதனோடு தொடர்புறுவதாகக் கருதவேண்டியுள்ளது.

பிரேதத்திற்கான வாய்க்கரிசியை குடிமகனாகிய சவரத்தொழிலாளியே (நாவிதர்) வறுத்துத் தயாரிப்பார். இதற்கான செயற்பாடு சாவீட்டிலேயே ஒரு புறமாக நடைபெறும். தம்பிலுவில் பிரதேசத்தில் வாய்க்கரிசியை விதவையொருவர் வந்து வறுத்துக்கொடுப்பது வழக்காக இருந்து வருகிறது (பவளேந்திரன், கு., 2006).

பிரேதத்திற்கு இடப்படும் வாய்க்கரிசியை ஒவ்வொருவருக்கும் வழங்குவது சவரத் தொழிலாளியின் கடமையாகும். பெண்கள் வீட்டிலும், ஆண்கள் சுடலையிலும் வாய்க்கரிசி இடுவது மரபாகும். பெண்கள் சுடலைக்குச் செல்லும் வழக்கம் இப்பிரதேசத்தில் இல்லாததால் இவ்வாறு நடைபெற்றது. வாய்க்கரிசி என்பது நெற்பொரியும், தென்னம்பாளையின் கதிர்மணிகளும், மஞ்சளும் சேர்ந்த கூட்டுக்கலவையாகும். பிற்காலத்தில் அரிசிப்பொரி, தேங்காயச்சீவல், மஞ்சள் ஆகியவை சேர்ந்த கூட்டுக் கலவையும் வழங்கப்படுகிறது (வயிரமுத்து. க., 2007).

தற்காலத்தில் மேற்கூறிய சலவைத்தொழிலாளி, சவரத்தொழிலாளி, மூப்பன் ஆகியவர்களது சேவைகள் அருகிச்செல்வதை அவதானிக்க முடிகின்றது. பிரேதம் கொண்டுசெல்வதற்குரிய கட்டிலின் பெயர் பாடை எனப்படும். நார் உரிக்கப்பட்ட மரக்கம்புகளினால் கூரை இடப்பட்டதாகப் பிரேதத்தை வைப்பதற்குரிய பாடை அமைக்கப்பட்டு, அது சோடனை செய்யப்படும். பின்பு பாடையின் நான்கு கால்களிலும் நான்கு இளநீர் கட்டப்பட்டிருக்கும். சுடலை கொண்டு செல்வதற்கான பிரேதத்தைப் பாடையில் வைக்கும் போது அழுகைக் குரல்கள் நிறுத்தப்படுவதுடன் அமைதியும் நிலைநாட்டப்பெறும்.

பிரேதத்தைப் பாடையில் வைக்கும் முன்பாக பாடையில் இரு பாய்கள் வைக்கப்படும். இப்பிரதேசத்தின் சில இடங்களில் மூன்று பாய்கள் விரிக்கப் படுவதுமுண்டு. மூன்று பாய்கள் விரிக்கப்பட்டால் பிரேதத்தைப் பாயுடன் தூக்கிச் செல்லமாட்டார்கள். எவ்வாறாயினும் பாடையில் மூன்று பாய்களின் மீது பிரேதம் கிடத்தப்படும். மேற்பாயும் கீழ்ப்பாயும் பிரேதத்தின் தலைப் பக்கமாகவும் நடுவிலுள்ள பாய் பிரேதத்தின் கால்பக்கமாகவும் அமையுமாறு பாய்களின் தலைமாடுகள் விரிக்கப்படும். பாடையில் வைத்ததும் பிரேதத்தின் இருகால்களையும் மரணமடைந்தவரின் வயது குறைந்த உறவினர்களால் மஞ்சள், அறுகு கலந்த நீரால் கழுவிப் பாதாஞ்சலி செய்யப்படும். கல்லடி உப்போடை, மஞ்சந்தொடுவாய் போன்ற சில இடங்களில் திருவாத்தி மரக்குழை மஞ்சள் அறுகு கலந்த நீரால் கழுவிப் பாதாஞ்சலி செய்யப் படுகிறது. மட்டக்களப்புப் பிரதேசத்தில் சில கிராமங்களில் குறிப்பாக கல்லடி உப்போடை, நொச்சிமுனை, கொக்கட்டிச்சோலை என்னும் கிராமங்களில் பட்டங்கட்டும் நிகழ்வு நடைபெற்று வருகின்றது. பட்டங்கட்டப்படுதலாவது பிரேதத்தை மயானத்திற்கு எடுத்துச் செல்ல ஆயத்தமான வேளையில் அதன் முன்னோடி வைபவமாகவே இது நிகழ்கின்றது. பிரேதத்தைத் திறந்த வெளியான வீட்டின் தலை வாசல் முற்றத்தில் வைத்து சொந்தக்காரர்களால் இது செய்யப்படுகின்றது. ஆண்களால் மட்டுமே.

சவரத் தொழிலாளி பிரேதத்தின் அருகில் வடக்குப்பக்கத்தில் பிரேதத்தைப் பார்த்தவாறு தெற்கு நோக்கி மஞ்சள் கலந்த வாய்க்கரிசியுடன் நிற்பார். பறைமேளக்காரர் (மூப்பர்) பறைமேளம் அடிப்பர். ஒரு வட்டியில் தண்ணீர்ச் செம்பு வைத்து அது வெண்சீலைத் துண்டால் மூடப்பட்டிருக்கும். பட்டம் கட்டும் நபர் அதனை தலையில் வைப்பார். முன்பக்கமும், பின் பக்கமும் இருவர் வெள்ளைச் சீலை கொண்டு மேற்கட்டி பிடிக்க நடுவில் பட்டங்கட்டுபவரான நபர் மும்முறை பிரேதத்தை வலம் வந்தவுடன் தலையில் உள்ள தண்ணீர்ச் செம்பும் வட்டியும் வாங்கப்படும்.

பின் பிரேதத்தை முதுகு காட்டி பிரேதத்தின் தலைப்பக்கம் நிற்க சவரத் தொழிலாளியான குடிமகன் வாய்க்கரிசியை வழங்க அதனை அவர் பின்முதுகு காட்டியவாறு ஒரு கையை ஒரு கையின் மேல் வைத்தவாறு கையினால் பிரேதத்தின் வாயில் அவ்வரிசியை இடுவார். இவ்வாறு மும்முறை வாய்க் கரிசி இடப்படும்.

இதுவே பட்டங்கட்டும் முறையாகும். இதன் பின் பிரேதத்திற்கு இன பந்துக்களான ஆண் பெண் இரு பாலாரினாலும் தலையில் அரப்பு வைத்துக் கால் கழுவி பாதாஞ்சலி செய்வர்.

மஞ்சள் தோய்த்தெடுக்கப்பட்ட நான்கு முழ வெள்ளைத்துணியினை உலர வைத்து பிரேதத்தின் தலையை விட்டு ஏனைய பாகங்கள் மூடப்படும். மஞ்சள் தோய்த்து உலரவைப்பதும் அதனைப் பிரேதத்தின் மீது மூடுவதும் சலவைத்தொழிலாளியின் சேவைகளில் ஒன்றாகும். பிரேதம் சுடலை செல் வதற்கு முன்பாக இது நடைபெறும். மஞ்சள் தோய்த்த இத்துணியை மட்டக் களப்புப் பிரதேச மக்கள் ''தூளி'' எனக்கூறுவர்.

### பறைமேளம்

சாவீட்டில் பறை ஒலி இசைக்கப்படும். இவ்வொலியினை பல்வேறு வகையில் எழுப்பும் திறமைபடைத்தவர்களை மூப்பனார் என்று அழைப்பர். இவர்கள் பறையர் குலத்தினர் ஆவர். பறை மேளத்தில் விசேட்மாக இராஜமேளம் பேணப்படுகிறது. இம்மேளம் உருவத்தில் சிறியதாகக் காணப்படும். பறை மேளம் சேவிப்பதற்காக அவர்கள் வீட்டிற்கு வந்ததும் இராஜமேளத்தைச் சுற்றுவதற்கான அழகான சேலை ஒன்று வழங்கப்படும். இச்சேலை அடை யாளச்சேலை எனப் பெயர் பெறுகிறது. ஏனைய பறைமேளங்களைத் தவில் என அழைப்பர்.

சாவீட்டுப் பறை ஒலியைச் சாப்பறை என்று கூறுவர். இறுதி அஞ்சலிக்காக ஆட்கள் வர வர இவர்கள் சாப்பறை ஒலியை எழுப்பிய வண்ணமே இருப்பர். ஆட்கள் வராத வேளையில் ஓய்வெடுப்பர். எனினும் இடைக்கிடை தமது சேவையைச் செய்து கொண்டேயிருப்பர். சுடலை வரையும் பலவித தாள வேறுபாட்டுடன் பறைத்தாள ஒலியை எழுப்புவர். சுடலைக்குக் கொண்டு சென்றதும் அடக்கம் செய்யப்படும் முன்னர் பூமி விலை கூறப்படும். கூறுவதன் முன்னராக இறந்தவரின் குல வரிசைக்கேற்ப அமைந்த பாடலைப் பாடி பறையொலியை எழுப்பி பின்னரே பூமி விலையைக் கூறுவார். இவ்விலை கூறலை ரூபாக்கணக்கில் சொல்லாது இறைசால்க் கணக்கில் கூறப்படும். இறைசால் என்ற சொல் ஒல்லாந்து மொழியின் தமிழ் வடிவமாகும் (ஒரு இறைசால் - எழுபத்தைந்து சதம்). விலை கூறுதல் மூன்று முறை மூப்பனாரால் கூறப்பட்டதும் விலை கூறல் முற்றுப்பெறும். மூப்பனார் ஒரு இறைசால் என விலைகூற, விலைவைப்போர் அரை இறைசால் (உதாரணமாக ஒன்றரை, இரண்டரை, மூன்றரை என்றபடி) எண்ணில் சொல்ல வேண்டும் என்பது நடைமுறை விதி. பெரும்பாலும் இவ்விலை கூறல் ஆறரை இறைசால் வரை விலை வைப்பர். துன்மரணமுற்றோருக்கு மாத்திரம் ஏழரை இறைசால் வரை (முடிவு விலை) வைப்பது மரபாகும் (க. வயிரமுத்து, 2007 அழகேச முதலில், 2003). சில பிரதேசங்களில் பத்தரை இறைசால் வரை வைக்கப்படுகிறது. எவ்வளவு இறைசால் கூட்டிச் சொன்னாலும் ஒரு

முழவெள்ளைச்சீலையும், ஒரு கொத்து அரிசியும் (4 சுண்டு = 1 கொத்து), ஒரு தேங்காயும் ஒரு பெட்டியினுள் வைக்கப்பட்டு இறுதிக்கடமை செய்பவரால் மூப்பனாருக்கு வழங்கப்பட்ட பின்பே பிரேத அடக்கத்திற்கான செயல்கள் நடைபெறும். வழங்கப்படும் ஒரு முழச் சீலையின் நான்கு மூலையிலும் பண நாணயம் முடியப்பட்டிருக்கும். (வழங்குபவரின் விருப்பப்படி) சில இடங்களில் ஒரு மூலையில் மட்டும் பண நாணயம் முடியும் வழக்கம் காணப்படுகின்றது. இத்துடன் மூப்பனாரின் கடமை நிறைவு பெறும்.

**சுடலை நிகழ்வுகள்**

சுடலைக்குக் கொண்டு செல்லப் புறப்பட்டதும் வீட்டின் தெரு வாயிலைக் கடக்கும் போது வளவுக்குள்ளும் வெளியிலும் பிரேதப் பாடையை மூன்று முறை முன்னும் பின்னுமாகப் போய் வரச் செய்வர். பிரேதம் சுடலைக்குச் செல்லும் போது பிரேதத் தலைப்பக்கம் முன்னே செல்லுமாறு பிரேதப் பாடையை தூக்கிச் செல்வது வழக்காகும். இவ்வேளையில் சவரத் தொழிலாளி யினால் நெற்பொரிகள் பாடையின் மேல் மூன்று தடவைகளில் தூவப்பெறும்.

மரணக்கிரியையில் கொள்ளிகுடம் உடைக்கும் வழக்கம் உண்டு. மனைவிக்குக் கணவனும் பெற்றாருக்குத் தலைமகனும் கொள்ளி குடம் உடைக்க வேண்டும் எனக் கூறும் மனு தர்ம சாத்திர நூலிற்கிணங்க மட்டக் களப்புத் தமிழர் மரணச் சடங்குடனான காரியங்களை முறைபிறளாது நிறைவேற்றி வருகின்றனர். தலைமகனாகிய மூத்த புதல்வன் இல்லையாயின் இளைய மகனே அக்காரியத்தைச் செய்ய வேண்டும் என்பது விதியாகும். பிள்ளை இறக்குமாயின் பிள்ளையின் தந்தையார் தனது தந்தையார் உயிருடன் இருக்கும் பொழுது கொள்ளி குடம் உடைத்தலாகாது. தந்தையாரது தகப்பனாரே அதனை உடைக்கவேண்டும்.

சுடலை செல்லும் போது கொள்ளி குடம் உடைப்பவர் முழுகி வாய்ச் சீலை கட்டியவராய் அதனைத் தூக்கிச் செல்வார். குடம் என்பது நீர் நிறைந்த மண்முட்டியாகும். பிரேதம் ஆணுடையதாயின் வாய் சிறுத்த முட்டியும் பிரேதம் பெண்ணுடையதாயின் வாய் அகன்ற பானை அமைப்பான முட்டியும் பயன்படுத்தப்படும். முட்டியின் வாய் வெள்ளைச் சீலையினால் மூடப் பட்டிருக்கும். கொள்ளி என்பது தென்னம் பாளையின் கீறல்களை ஒன்று சேர்த்துக் கட்டப்பட்டுத் தீ மூட்டப்பட்டிருப்பதைக் குறிக்கும்.

சுடலைக்குக் கொண்டு செல்லப்பட்ட பிரேதபாடை சவக்குழியியை வலஞ்சுழியாக மூன்று முறை சுற்றிய பின் குழியின் இடது பக்கமாக குழியின் ஓரமாக வெளியில் வைக்கப்படும். மரபு ரீதியாக மூப்பனுக்கு சுடலை உரிமையாகும். அதன்படி நிலத்திற்கு விலை கூறிப் பிரேத உரிமையாளர்

அவரிடமிருந்து மரபு ரீதியாக பெற்றுக்கொள்ளும் முறை இருந்து வருகின்றது. பின் சவரத் தொழிலாளியிடமிருந்து வாய்க்கரிசி பெற்றுப் பிரேதத்திற்கு வாய்க்கரிசி இடுவர். பிரேத இறுதிக்கடமையான கொள்ளி குடம் உடைப்பவர் முதலாவதாக வாய்க்கரிசியை இடுவார். அதன் பின் ஏனையோர் வாய்க்கரிசி இடுவர். அதன் பின்பு உருவமண் (பிடி மண்) இடும் செயல்முறை நடைபெறும். அதனையும் கொள்ளி குடம் உடைப்பவரே முதலாவதாக இட ஏனையோர் அதன்பின் உருவ மண்ணை இடுவார்கள்.

முட்டி உடைத்தலைத் தலைக் கோடுடைத்தல் எனக் கூறுவர். தீக்கொள்ளியையும் பிடித்துக் கொண்டு உடைப்பதனால் கொள்ளி குடம் உடைத்தல் எனக்கூறுவதும் வழக்கில் உள்ளது. தலைக்கோடுடைப்பவர் தனது சிரசில் வெள்ளைத்துணி வைத்து அதன்மேல் முட்டியை வைத்து பிரேதத்தின் தலைமாட்டில் பின் காட்டியவாறு நின்று வலது கையினால் கொள்ளியைப் பிடித்து அக்கை பின் முதுகை அண்டியவாறு அமைய பிரேதக் குழியை மூன்று முறை இடமிருந்து வலமாகச் சுற்றி வருவார் (அதாவது தலைமாட்டில் இருந்து பிரேதத்தின் இடப்பக்கமாக சுற்றிவருதல் வேண்டும்). ஒவ்வொரு சுற்றிலும் சவரத்தொழிலாளியினாற் கத்தி கொண்டு ஒவ்வொரு துளை இடப்படும். அத்துளையிலிருந்து நீர் வெளியே செல்லுமாறு முட்டியைக் கொண்டு செல்வார். இவ்வாறு மூன்று முறை சுற்றிய பின்னர் பின்புறமாகத் தலையிலிருந்த முட்டியை நிலத்தில் விட்டுக் கையிலிருந்த தீக்கொள்ளியையும் போட்டு விட்டுத் திரும்பிப் பாராது அவ்விடத்திலிருந்து வெளியேறுவார். தலையிலிருந்த முட்டியைப் பின்புறம் சாய்த்துக் கையை விட அது நிலத்தில் விழுந்து உடையும். இதுவே கொள்ளி குடம் உடைத்தல் என்றும் தலைக் கோடுடைத்தல் என்றும் கூறப்பட்டு வருகின்றது.

பிரேதம் மூடப்பட்ட மண்குவியலின் மேல் தலை, நடு, பாதம் ஆகிய மூன்று இடங்களில் நாவிதனால் பிரண்டைச்செடியின் துண்டுகள் முறையே 1,2,3 என்ற எண்ணிக்கையில் வைக்கப்படுகின்றன. பாடையின் நான்கு கால்களிலும் கட்டப்பட்டிருந்த நான்கு இளநீரும் அவிழ்க்கப்பட்டு பிரேத குழியின் நான்கு மூலைகளிலும் முகிழ் திறந்து வைக்கப்படுதல் மரபாகும்.

### பிரேதம் அடக்கம் செய்த பின்னரான நிகழ்வுகள்

உடல் உயிரை விட்டுப் பிரிந்ததும் பிரேதம் சுடலைக்குக் கொண்டு செல்லப்படும் வரை வீடு வாசல் கூட்டித்துப்பரவு செய்யப்பட மாட்டாது. பிரேதம் சுடலைக்குக் கொண்டு செல்லப்பட்டதும் வீடு வாசல் கூட்டித் துப்பரவு செய்யப்பட்டு வீடும் கழுவப்பட்டு தூய்மை செய்யப்படும். வீட்டின் தெருவாயிலில் வளவுக்கு வெளிப்புறமாக உலக்கை ஒன்றைக் குறுக்காகப்போட்டு

மஞ்சள் கலந்த நீர்ப்பாத்திரமொன்று வைக்கப்படும் சுடலையில் இருந்து வருபவர்கள் மஞ்சள் நீரைத் தமது தலையில் தெளித்து உலக்கையைக் கடந்து வளவினுள் செல்ல வேண்டும் என்பது வழக்கமாகும். இதனால் பேய் பிசாசு நோய்க்கிருமிகள் ஆகியவற்றில் இருந்து நீங்கப் பெறுவதாகவும் இப்பிரதேசத் தமிழர்கள் கருதுகின்றனர். ஏனையோர் அண்மையில் உள்ள ஆற்றிலேனும் குளத்திலேனும் நீராடி விட்டு வீட்டிற்குச் செல்லுவர்.

பின்பு வீட்டில் அன்றிரவு பிரேதம் வைக்கப்பட்ட இடத்தில் வெள்ளைத் துணியினால் வாய் மூடப்பெற்ற நீர் நிரம்பிய செம்பு, சுடரேற்றிய குத்து விளக்கு ஆகியவற்றுடன் சுடலையில் குழி வெட்டும் வேலைக்காகக் கொண்டு செல்லப்பட்ட மண்வெட்டி கத்தி ஆகியவற்றைக் கழுவி வைப்பர். அவ்விடத் தில் எட்டாம் நாள் வரை அணையா விளக்காக இருந்து எட்டாம் நாள் தொடக்கம் முப்பதாம் நாள் வரை இரவில் மட்டும் விளக்கு சுடரேற்றப்படும்.

அன்றிரவு மாலை வேளையில் தெரு வாயிலின் வெளிப்புறமாக இளநீர் ஒன்றை மேலும் கீழுமாகச் சீவி முகிழ் திறவாது முகிழின் மேற் பகுதியின் மீது தாம்பூலம் (ஒரு வெற்றிலை, ஐவிரற்பிடியளவு பாக்குச் சீவல், சிறுகடலைப் பருமன் சுண்ணாம்பு) வைப்பர். இதனை விதவையே செய்வார். இது நிகழும் போது ஒப்பாரி அழுகையை ஒரு சில நிமிடங்களுக்கு அவர் செய்வார். சில இடங்களில் மூன்று நாட்களுக்கும் இளநீர் வைக்கும் பழக்கம் இருந்து வருகின்றது.

பின்னர் நறும்புகை ஊட்டி வெற்றிலை, பாக்கு, பழம் ஆதியன கொண்டு மடை ஒன்று வைத்துப் பிள்ளையாரையும் விஷ்ணுவையும் வணங்கி வைகுந்த அம்மானைப் பாடல் பாடுவர். மூன்றாம் நாள் இரவு வரை இவ் அம்மானை பாடப்பட்டு வெண் அரிசிப் பொங்கல் வைத்து வழிபாடு புரிவர். இவ்வழிபாடு காலையில் பறவைகள் கூடுகளில் இருந்து வெளியேற முன் செய்யப்பட வேண்டும் என்பது வழக்காகும். இதனைக் காகம் குருவி நிலத்தில் விழும் முன் செய்ய வேண்டும் என இப்பிரதேசத்திற் கூறுவர். ஆனால் மண்டூர், கல்லடி போன்ற சில இடங்களில் மாலை வேளையில் இவ்வழிபாடு நடைபெறுகிறது. இவ்வழிபாட்டினை புக்கை வைத்தல் எனக்கூறுவர்.

மரணம் சம்பவித்த நாளின் பின் மூன்றாம் நாள் மடையிலிருந்த விபூதி எடுத்து அணியும் பழக்கம் உள்ளது. மரணம் சம்பவித்த நாள் முதல் புக்கை வைக்கும் நாள் வரை விபூதி அணிதல் தடைசெய்யப்பட்டுள்ளது. சிலர் முப்பதாம் நாள் வரை விபூதி அணிவதில்லை. முப்பத்தியோராம் நாள் வழிபாட்டின் போதே விபூதியணிகின்றனர்.

தகனம் செய்யப்பட்ட மூன்றாம் நாளில் எரிக்கப்பட்ட பிரேதச் சாம்பல் எடுக்கப்பட்டு கடல், ஆறு ஆகிய புனித நீர் நிலைகளிற் போடப்பெறும். இதனைக் காடாத்து என்றும் சாம்பல் எடுத்தல் என்றும் கூறுவர். இது ஆன்ம ஈடேற்றம் கருதிச் செய்யப்படுவதாகக் கருதுகின்றனர்.

ஆகக்குறைந்தது எட்டு நாட்கள் வரை உறவினர்களாலும் நண்பர்களாலும் தத்தமது வீடுகளிலிருந்து உணவு சமைத்துக்கொண்டு வந்து கொடுக்கப்படும். அடக்கம் செய்யப்பட்ட மூன்றாம் நாளில் வெண் அரிசிப் பொங்கலும், எட்டாம் நாளில் கல்லையும், முப்பதாம் நாட் கல்லையும், முப்பத்தோராம் நாளில் ஈடேற்றச் சடங்கும் செய்யப்படும். மரண வீட்டில் 31 ஆம் நாள் வரை அக்குடும்பத்தைச் சாராதவர்கள் உணவு அருந்துதல், நீர் பானம் பருகுதல், தாம்பூலம் அருந்துதல் முதலியன தீட்டாகக் கருதப்பட்டு வந்துள்ளன.

### வைகுந்த அம்மானை பாடுதல்

முப்பத்தோராம் நாள் வரை வைகுந்த அம்மானை பாடும் வழக்கம் உள்ளது. வைகுந்த அம்மானைப்பாடல்கள் பஞ்ச பாண்டவர்கள் மண்ணுலக வாழ்வை வெறுத்து வைகுந்தம் சென்ற வரலாற்றைக் கூறுகிறது. இதன்கண் உடல் நிலையாமை, பாவபுண்ணிய பலன்கள், இறைவன் மீது ஆழ்ந்தபக்தி என்பன உணர்த்தப்படுகின்றன. மேலும் வாழ்க்கை நிலையாமை பற்றிய சிந்தனை வலியுறுத்தப்படுகிறது. மரணமடைந்தவரின் ஆன்ம ஈடேற்றத்திற்காக நடாத்தும் வழிபாட்டு அம்சமாக வைகுந்த அம்மானை பாடுதல் கருதப் படுகின்றது.

### எட்டாம் நாள் நிகழ்வு

எட்டாம் நாள் இரவு மரணமடைந்தவருக்கான கல்லை (கல்லை என்பது இறந்தோர்களுக்குப் படைக்கப்படுகின்ற உணவுப்படையல்) வைக்கப்படும். அதற்காக உணவுப்பண்டங்களை வீட்டிற்கு வெளியில் அதே வளவில் பிறரது பார்வைக்குத் தெரியாதவாறு மறைப்புச் செய்து கல்லைக்கான உணவு தயாரிக்கப்படும். பிரேதம் இருந்த இடத்தில் அல்லது அறையுள் வெள்ளைச்சீலை விரித்து சோறு, ஏழு மரக்கறிகள் கொண்டு சமைக்கப்பட்ட கறி, பலகார வகைகள், கூழ், களி, பழவர்க்கங்கள் ஆகியனவற்றைப் படையல் செய்து வைப்பர். இது மூன்று மடைப் பிரிவுகளாகப் படைக்கப்படும். மரணமடைந்தவரின் தாய் தந்தையர் மரணமடையாது இருப்பின் ஒரு படையல்மட்டும் வைக்கப்படும். இப்படையல்கள் படைக்கப்பட்டதும் அனைத்து உணவுகளிலும் சிறிதளவு வாழையிலையில் எடுத்து சுடர்த்திரி

ஒன்றை ஏந்தியவாறு கொண்டு போய் தெருவாயிலின் வெளியில் வைப்பர். வைக்கப்பட்ட உணவுப் படையலின் பக்கலாகத் தாம்பூலம் வைத்து உணவுப் படையலின் முன்பாகச் சிறிதளவு நீரை ஊற்றி விட்டு வருவர். படையல்கள் படைக்கும் போதும், வெளியில் படையல் வைக்கும் போதும் விதவை யானவள் சிரசில் வெண்துணி வைத்தவாறு எவருடனும் பேசாத நிலையில் அக்காரியத்தைச் செய்வார்.

இவர் படையல்களைப் படைத்து தெருவாயிலுக்குப் படையல் கொண்டு செல்லும் போது படையல்கள் படைத்திருந்த இடத்தின் கதவினை மூடிச் செல்வார். தெருவாயிலிலிருந்து வரும் போது வீட்டு வாயில் வரை பாதங் களின் தடம் தெரியாதவாறு நிலத்தைக் கூட்டி விட்டு வருவார். இவ்வாறு கூட்டுவதை அடியழித்தல் என்பர். சில கிராமங்களில் புக்கை, எட்டுக்கு வைத்தல் என்பவை கொள்ளி குடம் உடைத்தவராலேயே மேற்கொள்ளப் படுகிறது. எனினும் விதவையாய் இருப்பவரே இக்காரியத்தைச் செய்ய வேண்டும் என்பது பண்டை நாள் வழக்காகும் என்பது நேர்காணலின் போது பெரும்பான்மையான சைவப் பெரியோர்கள் தமது கருத்தைத் தெரிவித்தனர். அடியழித்தல் செய்த பின்பு அனைவரும் பூட்டப்பட்ட கதவின் பக்கங்களாக வெளியில் சூழ்ந்து அமைதியாக இருப்பார்கள். அடியழித்த பின்பு வெளியில் இருந்து உள் நுழைதலும், அடியழிக்கப்பட்ட இடத்தைத் தாண்டலும் தவிர்க்கப்படும். இதற்காக வீட்டின் நாய் பூனை முதலிய செல்லப் பிராணிகளை அவ்வேளையில் கட்டி வைப்பர். அனைவரும் பூட்டப்பட்ட கதவின் பக்கங்களாக வெளியில் இருந்து கொண்டு பல்லியின் சத்தம் கேட்பதை அவதானிப்பர். பல்லி மூன்று தடவை சத்தம் எழுப்பியதும் கதவைத் திறந்து படையல்களை வணங்கி நிறைவு செய்வர்.

### முப்பத்தியோராம் நாள் நிகழ்வு

முப்பதாம் நாள் மாலையில் எட்டாம் நாள் போன்றே கருமங்கள் நடைபெறு கின்றன. ஆனால் ஐந்து படையல் பிரிவுகள் வைக்கப்பட்டு வழிபாடாற்றப் படுகிறது. நடுப் படையலாகிய கல்லை மரணமடைந்தவருக்கும், அதற்கு வலப்பக்கமான கல்லை தந்தையின் தந்தை வழிப் பிதுர்களுக்கும், அடுத்த தாகவுள்ள கல்லை தந்தையின் தாய் வழிப் பிதுர்களுக்கும் உரியதாகும். இடதுபக்கமாக உள்ள முதற்கல்லை தாயின் தாய் வழிப் பிதுர்களுக்கும், அடுத்ததாகவுள்ள கல்லை தாயின் தந்தை வழிப் பிதுர்களுக்கும் உரியதாக கொள்ளப்படுகின்றது.

இக்கல்லைகளில் நடுக்கல்லை தவிர்ந்த ஏனைய கல்லைகள் குடும்பத்தார் தவிர்ந்த ஏனையவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும். நடுக்கல்லையில் உள்ள

உணவுப் பண்டங்களை மரணமடைந்தவரின் குடும்பமும் நெருங்கிய உறவினர்களும் கல்லை உள்ள இடத்திற்கு வந்து பகிர்ந்து உண்பது வழக்க மாகும்.

முப்பதாம் நாள் இரவு முழுவதும் வைகுந்த அம்மானை பாடப்பெற்று மறுநாள் சூரியோதயத்தில் பொங்கிப் படைத்து வைகுந்த அம்மானை வாழி பாடி முற்றுப்பெறும். முப்பத்தோராம் நாள் நண்பகல் உணவுகள் படைத்து வழிபாடுகள் புரிந்து சங்கொலி எழுப்பப்படும். முப்பத்தோராம் நாள் இவ் ஆன்ம ஈடேற்றக் கருமம் செய்ய முடியாத பட்சத்தில் (அதாவது வீட்டில் அம்மை நோய், பிறப்பு இறப்பு தீட்டுக்கள் ஏற்படின்), நாற்பத்தோராம் நாளில் இக்கருமம் நடைபெறும். பொதுவாக ஒரு ஐயர் மூலமே சங்கொலி வழிபாடு நிகழ்த்தப்படும்.

சில கிராமங்களில் மூன்றுமாத இறுதியில் முப்பதாம் நாளைப் போன்றே கருமம் நடத்தப்படும். இதுவே மரணத்தை அடுத்துச் செய்யப்படும் இறுதிக் கருமமாகக் கொள்ளப்படுகிறது. கொள்ளிகுடம் உடைத்தோர் மூன்று மாதங்கள் வரை ஆலயம் செல்லாமல் இருப்பதை மட்டக்களப்புத் தமிழர் வலுவாகக் கடைப்பிடித்து வருகின்றனர்.

# 5

# கலைகள்

மட்டக்களப்புத் தமிழர்தம் சமூக அமைப்புக்கும், அவர்களிடையே காணப் பட்டுவரும் கலைவடிவங்களுக்கும் இடையே நெருங்கிய தொடர்புண்டு. மட்டக்களப்புத் தமிழர் பழமையைப் பாராட்டியும், போற்றியும் பாதுகாக்கும் பண்புடையவர்கள். கலையானது இன்பப் பொழுதுபோக்குக்காக மட்டு மல்லாது வாழ்க்கையைப் பண்படுத்தவும் உதவவேண்டும். அதுவே சிறந்த கலையின் குணாம்சமாகும்.

மட்டக்களப்புத் தமிழரது மரபுவழிப் பண்பாட்டினைச் சுட்டுகின்ற குறி காட்டிகளில் ஒன்றாகக் கலைகள் உள்ளன. இவை இம்மக்களிடையே காலம் காலமாகப் பேணப்பட்டு வருபவை. இக்கலைகளுள் கூத்துகள், ஆட்டங்கள், விளையாட்டுகள், மருத்துவம், சோதிடம், மந்திரம். கட்டடம், சிற்பம், ஓவியம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவைகளில் நாட்டுக் கூத்து, கொம்பு விளையாட்டு, மந்திரக்கலை போன்றவை விசேடமாகத் தனித்துவம் பெற்ற கலைகளாக மட்டக்களப்புத் தமிழரிடம் காணப்படுகின்றன. அவை மட்டக்களப்புத் தமிழரின் பண்பாடு காட்டும் ஊடகமாக விளங்குகின்றன.

## i. கூத்து

### கூத்துக்கலை

மட்டக்களப்புத் தமிழரது பொழுதுபோக்குகளாக பல இருந்தாலும் அவற்றுள் நீண்டகாலப் பயனுடையதாகக் கூத்துக்கள் விளங்கின. தம் பழமையையும் பாரம்பரியங்களையும் தன்னகத்தே கொண்ட கூத்துக்கலையைப் பேணி வந்துள்ளனர். கூத்தானது பண்பாட்டு அம்சங்களைக் கொண்டுள்ள இராமாயணம், பாரதம் ஆகிய இதிகாச இலக்கியங்களிலுள்ள கதைகள் மூலம் கல்வி அறிவை ஏற்படுத்துகிறது, ஓய்வு நேரத்தைப் பயனுள்ள தாக்குகிறது. அழகியலைப் பேணுவதுடன் கேள்வி இன்பத்தோடு காட்சி

இன்பத்தையும் வழங்குகின்றது. மேலும் புத்தகம் வாசிக்க நேரமில்லாத தொழிலாளர்களுக்கும், படிக்கத் தெரியாத பாமரமக்களுக்கும் நல்லறிவைப் புகட்டுவதுடன், உறவுகளைப் புதுப்பித்தலுக்கும் கூத்துக்கலை வழிவகுத்துள்ளது. மகிழ்வூட்டலுக்கும், அறிவூட்டலுக்கும், மக்கள் ஒருங்கு கூடுவதற்குமான களமாக பாரம்பரிய அரங்கு அமைவதுடன் சடங்கு சார்ந்து பக்திக்குரியதாகவும் அமைகின்றது. உலகியலை உள்ளவாறு உணருமாறு சமூகத்துக்கு எடுத்து உணர்த்துகின்றது. சுருங்கக்கூறின் அது ஒரு சமூக விழுமியமாக இருந்துவருகின்றது. அத்துடன் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழையும் ஒன்றிணைத்த கலையாகக் கூத்துக்கலை மிளிர்கின்றது.

கூத்துக்கள் மட்டக்களப்புத் தமிழரது சமய, சமூக, பண்பாட்டலுவல் களையும் வாழ்வின் முறைகளையும் பிரதி பலித்தன. இதன்கண் காணப்படும் ஆடலும் பாடலும் காட்டும் பொருட் செறிவுகள் கற்றோரையும், மற்றோ ரையும் ஈர்ந்து கவரும் உயர்ந்த தன்மை பெற்றிருக்கின்றன. அதுமட்டு மல்லாமல் கல்லாதவரிடத்தில் இயல்பாக விளங்கும் சமூக கலாசாரப் பற்றுக் களையும் போற்றுவதாகக் காணப்படுகின்றன.

மட்டக்களப்புச் சமுதாயமானது நிலமானிய அமைப்பு முறைச் சமுதாயமாக இருந்து வந்துள்ளது. நிலமானிய சமூக அமைப்பில் உயர்சமூக அமைப்பினர்எனக் கருதப்பட்டவர்களாலே அக்காலத்தில் பெருவாரியாக வடமோடி, தென்மோடிக் கூத்துக்கள் ஆடப்பெற்று வந்துள்ளன. அவை சமூக அமைப்பைக் கட்டிக்காக்கும் தன்மை கொண்டனவாக அமைந்திருந்தன. பின்னர் பல சமூகத்தினராலும் ஆடப்பெறும் தேசியக்கலையாகியது. கூத்துக் கலையில் பண்பாட்டுக் கூட்டுணர்வு முக்கிய அம்சமாகக் காணப்பட்டது. சி. மௌனகுரு அவர்கள் வடமோடிக் கூத்துக்கள் பெரும்பாலும் சகல சாதியினராலும் ஆடியதாகக் கூறுகின்றார். அவர்பட்டியலிட்டுக் காட்டும் விபரம் மேல்வருமாறுள்ளது:

| மட்டக்களப்பிலுள்ள சாதியினர் | தென்மோடி | வடமோடி | வசந்தன் | மகுடி | பறை மேளம் |
|---|---|---|---|---|---|
| வெள்ளாளர் | √ | √ | √ | - | - |
| முக்குகர் | √ | √ | √ | - | - |
| சீர்பாதர் | √ | √ | √ | - | - |
| தட்டார் | √ | √ | - | - | - |
| கரையார் | √ | √ | - | √ | - |
| நளவர் | √ | √ | - | √ | - |
| வண்ணார் | - | √ | - | √ | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அம்பட்டர் | √ | √ | – | √ | – |
| கடையர் | – | √ | – | – | – |
| பறையர் | – | – | – | √ | √ |

(சி. மௌனகுரு, 1998)

பண்டைக்காலத்தில் நாட்டுக்கூத்து எனக் கூறாது கூத்து என்றே கூறி வந்துள்ளனர். உதாரணமாக தரும புத்திர நாடகம், இராம நாடகம் எனப் பெயர்பெற்றிருந்தாலும் அவைகள் எல்லாம் பொதுவாக கூத்து என்றே அழைக்கப்பட்டு வந்துள்ளன. மட்டக்களப்புப் பிரதேசத்தில் மக்கள் மத்தியில் இன்றும் கூத்து எனக் கூறப்படுவதை அவதானிக்கலாம்.

**தமிழகத்தில் கூத்து**

இந்திய சோழப் பேரரசின் கீழ் ஈழம் பத்தாம் மண்டலமாக ஆட்சி நிலவிய காரணத்தால் அங்கு நிலவிய கலை கலாசாரங்களின் தாக்கங்கள் இங்கும் பிரதிபலித்தன. சோழ அரசர்களால் கூத்துக்கள் பெருமைப்படுத்தப்பட்டன. சாக்கைக்கூத்து, சாந்திக்கூத்து போன்றன பிரசித்தி வாய்ந்தவை. ராஜராஜனின் ஒன்பதாவது ஆட்சி ஆண்டு கல்வெட்டில் ராஜராஜசோழன் ஆரியக்கூத்து ஆடிய சிறிகண்ட குமாரனுக்கு நிருத்திய போகம் என்ற நிலத்தைப் பரிசாக வழங்கியதாக அறியமுடிகிறது. (மௌனகுரு. சி., 1992, பக்.25) வடமோடி, தென்மோடிக் கூத்துக்கள் தமிழர்தம் பண்பாட்டை பிரதிபலிப்பனவாய் அமைந்த பல நாடகங்கள் பல நாளில் நடைபெற்று வந்து பின்னர் கால கதியில் அவற்றின் அமைப்பு முறை கூட அறிய முடியாத நிலையில் அழிந்துவிட்டன. தமிழ் நாட்டிலே சில கிராமங்களில் நாடகங்கள் நடிக்கப் படுகின்றன. எனினும் சிறந்த கூத்து முறையில் அவை ஆடப்படுகின்றில. மலையாளக்கரையிலும் மட்டக்களப்புப் பகுதியிலும் நல்லமுறையில் அமைந்த நாட்டுக் கூத்துக்களை ஆடும் பெருவழக்கம் இன்றும் அழியாது நிகழ்ந்து வருதல் இங்கு கருதத்தக்க ஒன்றாகும்.

**மட்டக்களப்பில் கூத்து**

மட்டக்களப்புப் பிரதேசத்தில் வடமோடிக்கூத்து, தென்மோடிக் கூத்து, வசந்தன் கூத்து ஆகிய கூத்துக்கள் அக்காலத்திலிருந்து ஆடப்பெற்று வந்தாலும் வடமோடி, தென்மோடிக் கூத்துக்களே பெரும்பாலும் இன்று ஆடப்பெற்று வருகின்றன (வித்தியானந்தன், சு., 1979, பக்.33). அதனுள்ளும் தென்மோடிக் கூத்தே மட்டக்களப்பின் தேசியக் கூத்தாக இடம் பிடித்தது எனலாம். தோற்றங் களின் வேறுபாட்டைக்கொண்டு வடமோடி, தென்மோடி எனும் பிரிவுகள்

ஏற்பட்டதாகக் கருதமுடிகிறது. மேற்படி இருவகைக் கூத்துக்களினதும் வேறுபாடுகளே இதற்குக் காரணமாகும்.

### வடமோடி, தென்மோடிக் கூத்துக்கள்

இந்தியாவின் வடக்குப்பகுதியில் இருந்து வந்தது வடமோடி எனவும், இந்தியாவின் தெற்குப்பகுதியில் இருந்து வந்தது தென்மோடி எனவும் பெயர்கொண்டதாகக் கூறுவர். வடமோடிக் கூத்தை ஆரியக்கூத்து எனவும், தென்மோடிக் கூத்தைத் தமிழ்க்கூத்து எனவும் கூறும் வழக்கு இருந்து வருகின்றது.

### ஆடப்பெற்ற கூத்துக்கள்

வடமோடி, தென்மோடிக் கூத்துக்கள் அவற்றின் தமது கதைப்போக்கு ஆடல் பாடல், இசை, வசனம், அபிநயம், உடை, நடைமுறை, சுவை, ஆயுதங்கள் என அதன் உட்கட்டமைப்பு, வெளிக்கட்டமைப்பு ஆகிய பலவற்றிலும் வேற்றுமைப்பட்டு விளங்குகின்றன. இவைகளை வைத்தும் வடமோடி, தென்மோடி எனப் பாகுபடுத்தியுள்ளனர். மட்டக்களப்புப் பிரதேசத்தில் தென் மோடிக் கூத்தில் அலங்காரரூப நாடகம், வாளவீமன் நாடகம், வாளஅபிமன்யு நாடகம், இராவண சம்மாரம், அல்லியரசாணி, பவளவல்லி நாடகம், நொண்டி நாடகம், குருக்கேத்திரன் போர் என்பன ஆடப்பெற்று வருகின்றன.

வடமோடிக் கூத்தில் இராம நாடகம், தருமபுத்திர நாடகம், வீர குமார நாடகம், பப்பிரவாக நாடகம், அல்லி நாடகம், சூரசம்மாரம், எனபன பிரசித்திவாய்ந்தவை. அனுருத்திர நாடகம், வடமோடி, தென்மோடி இரண்டிலும் ஆடப்பெற்று வந்துள்ளதாக அறிய முடிகிறது (கணபதிப்பிள்ளை, உ., 2009). சுவாமி விபுலானந்தர் இயற்றிய நாடகத் தமிழ் நூலான மதங்க சூளாமணி என்னும் நூலின் கண் அனுருத்திர நாடகத்தை எடுத்துக்காட்டி யுள்ளார் (விபுலானந்த சுவாமிகள், 1926, பக்.14). மட்டக்களப்புக் கூத்துக்கள் ஆரம்பம், சிக்கல், வளர்ச்சி, உச்சம், முடிவு என்ற ஐந்து நிலைகளைக் கொண்ட அமைப்பைக் கொண்டிருந்தன.

### கூத்துக்களின் அமைப்பு

பண்டைக்காலத்தில் படித்தறிந்த புலவர்களாலேயே கூத்துக்கலை இயற்றப் பட்டுள்ளதை அதன்கண் அமைந்துள்ள வெண்பா, அகவற்பா, விருத்தப்பா முதலிய பல பாவினங்களுடன் கொச்சகம், கந்தார்த்தம், தரு, பரணி போன்ற வகைகளும் வெளிக்காட்டுகின்றன. ஆடவிருக்கும் கதையினை எண்ணக் கருவாகக் கொண்டு மேற்படி பாவினங்களுடன் பிரதேச மொழியினையும்

பயன்படுத்தி இவை சிறந்து விளங்குகின்றன. கதை ஒன்றினைத் தழுவியதாக, ஆடலும் பாடலும் நிறைந்ததாகக் கூத்து ஆடப் பெறும்.

இவ்வாறான சுவைகள் பொருந்திவருவதைப் பார்க்கும்போது பண்டைய இலக்கியங்களில் இடம்பெறுகின்ற அகம், புறம் ஆகிய இரண்டு திணை களையும் சார்ந்த வேத்தியல், பொதுவியல் என்னும் இலக்கியம் காட்டும் பண்டைத் தமிழரின் கூத்துவகைகள் தென்மோடி, வடமோடிக் கூத்துக்களில் இழையோடி அமைந்துள்ளன. பெரும்பாலும் வடமோடிக்கூத்துக்கள் புறப் பொருளையும் (வீரம், சண்டை). தென்மோடிக் கூத்துக்கள் அகப்பொருளையும் (காதல்) கொண்டுள்ளன(விபுலானந்த சுவாமிகள். 1926, பக்.05).

## கூத்திற் கையாளும் சொற்கள்

கூத்தினைப் பழக்கும் ஆசிரியனை அண்ணாவியார் எனவும், கூத்தாடும் அரங்கினை களரி அல்லது வட்டக்களரி எனவும் கூறுவர். கூத்தைப் பழகும் களரியை சதுரக்களரி எனவும் சதங்கை கட்டியபின் ஆடும் களரியை வட்டக் களரி எனவும் கூறுவர். கூத்தாடும் இடமான ஓலைக்கொட்டில் உள்ள இடத் தினை இலங்ககூடம் அல்லது கூத்துக்கொட்டகை எனவும், மத்தளத்தில் ஒலிக்கும் தாளங்களான வாயாற் சொல்லும் சொல்வரிசைகளை தாளக்கட்டு எனவும், கூத்தைப் பழக்கிய அண்ணாவியார், உதவி அண்ணாவியார், பிற்பாட்டுக்காரர், சல்லாரிக்காரர், கூத்துப்பிரதி வாசிப்போர்ஆகியோரை சபையோர் எனவும் பல பாத்திரங்கள் ஒன்றுசேர்ந்து களரியில் தோன்றுவதை கொலு எனவும் அழைப்பர்.

## கூத்துக்களரி

கூத்தாடும் அரங்கு களரி எனவும் கூத்துக்களரி எனவும் பெயர்கொள்ளப் பெறும். ஓலைக் குடிசையால் அமைந்த களரியை இலங்ககூடம் எனவும் களரி வட்டவடிவமாகையால் வட்டக்களரி எனவும் அழைக்கப்படலாயிற்று. அரங்ககூடம் என்னும் செந்தமிழ்ச்சொல் மட்டக்களப்பு வழக்கு மொழியில் திரிபுபெற்று இலங்ககூடம் எனத் தோன்றியது.

அரங்கேற்றம் செய்வதற்காக கோயில் வீதி போன்ற பொது இடத்தில் மண்ணினால் மேடை அமைக்கப்படும். மேடை ஏறக்குறைய இருபது அடி விட்டமும் மூன்று அடி உயரமும் கொண்டதான வட்டவடிவமாக அமைவுறும். மேடையாகப் போடப்பட்டமண் சரியாமல் சுற்றிவரக் கிடுகினால் பாதுகாப்புக் கட்டப்படும். நாலாபக்கங்களிலிருந்தும் பார்வையாளர்கள் பார்ப்பதற்காக மறைப்புக்கள் இல்லாதவாறு மேடை அமைந்திருக்கும். பார்வையாளர்கள் தரையில் அமர்ந்திருந்து கூத்தைப் பார்த்தனர். ஒவ்வொரு பாத்திர வரவுக்கும்

மறைப்பாக சீலையை இருவர்பிடித்து நிற்பர். இதனைத் திரைச்சீலை மறைப்பு என்பர். இத்திரைச்சீலை மறைப்பைச் சலவைத் தொழிலாளரே பிடித்து நிற்பர். மேடையைச்சுற்றி சுமார் எட்டு அடி உயரமுள்ள கம்புகளை நட்டு, அதன் மேற்பகுதியை தடிகளால் வட்டமாக வளைத்து வட்டமாக அமைப்பர். அதன் விளிம்பில் சேலைகளால் விதானமிட்டுக் கட்டி நடுவில் எல்லாச் சேலைகளினதும் தொங்கல்கள் ஒன்று சேர்த்துக் கட்டப்படும். அவற்றில் நீளமான கயிற்றைக்கட்டித் தொங்கவிடுவர். இச்சேலைக் கூரையை குடைபோன்ற வடிவமைப்பில் உயர்த்திக் கட்டுவர். அது கலைநுட்பங்களை வெளிப்படுத்துகின்றது.

## இருமோடிக் கூத்துக்களின் வேறுபாடு

வடமோடிக்கூத்து போர்செய்து வெற்றிபெறுவதைப் பெரும்பாலும் இறுதி யாகக் கொள்வதுடன் துன்பநிலையில் முற்றுப்பெறுவதாக உள்ளது. தென் மோடிக்கூத்து அகப்பொருளையுடையதாய் உவகை, நகை, வியப்பு, போன்ற சுவைகள் அமையப் பெற்றனவாய் மகிழ்ச்சிநிலையில் முற்றுப்பெறுவதாய் உள்ளது.

வடமோடிக்கூத்திலே வீர உணர்ச்சி முதலிடத்தைப் பெறுகிறது. கோபம், முதலியனவும் தோன்றுகின்றன. இது பெரும்பாலும் இராமாயணம், மகா பாரதம் ஆகிய இதிகாசக்கதைகளை கருவாகக்கொண்டு ஆடப்பெற்று வந்துள்ளது. மகாபாரதக் கதையான அல்லி நாடகம் தென்மோடியாடலும் ஆடப்பெற்று வந்துள்ளது. தென்மோடிக்கூத்தானது நாட்டார் வழக்காறுகளும் கற்பனைக் கதைகளும் உடையனவாய்க் கூடியபாங்கு காதலைக் கருவாகக் கொண்டு ஆடப்பெறும். இதன்கண் போர், வீரம் என்பன வரும்பொழுது அவைகளும் பெரும்பாலும் இன்பச் சுவையைத் தருவனவாய் அமைந்து விளங்கும்.

தென்மோடிக்கூத்தின் ஆடல்முறை சுற்றிவரவுள்ள பார்வையாளர்களை நோக்கி ஆடுவதாக அமைய வடமோடிக்கூத்தின் ஆடல்முறை ஒரு சில பார்வையாளர்களை மட்டும் நோக்கி ஆடுவதாக அமைந்துள்ளது. தென் மோடியில் வடமோடியிலும் பார்க்க மிகவும் நுணுக்கம் வாய்ந்த கடினமான தாள ஆட்டங்கள் இடம்பெறுகின்றன. தனியான கதாபாத்திரம் அல்லது கொலு வரும்போது தாள அமைதி பிசகாது மத்தளம் அடிப்பவருடைய (அண்ணாவியாருடைய) திறமைக்கேற்ப சிறந்த ஆட்டம் இடம்பெறும். இவ்வரவு ஆட்டத்தினை முடித்து பாட்டுப் படிக்கவேண்டிய கட்டத்துக்கு வரும்போது ஆடுகின்றவர்சற்று வலிமை குறைந்தவராயின் சோர்வடைந்து விடுவார். வடமோடி ஆட்டத்தில் இவ்வாறான சங்கடமான நிலையில்லை.

மத்தளத்தின் அடியே கதாபாத்திரங்களின் ஆட்டமாற்றங்களையும், இட மாற்றங்களையும், காட்சிமாற்றங்களையும் குறிப்பதாக அறிஞர் கூறுவர் (வித்தியானந்தன், சு., 1979, பக்.33). அரசன் கொலுவரவு, சேனாதிபதி வரவு, இளவரசர்வரவு, முனிவரர்வரவு, தேர்குதிரை போர் முதலியவற்றுக் கெல்லாம் வெவ்வேறான ஆட்டமுறைகளும் தாளங்களும் அமைந்துள்ளன.

**மத்தளம்**

கூத்தின் உயிர் மத்தளம் எனலாம். மத்தளம் இல்லாவிடில் கூத்து இல்லை. மத்தளத்தை பெரும்பாலும் பலா, மஞ்சவணா போன்ற மரங்களால் செய்து பாவித்து வந்துள்ளனர். மத்தளத்தின் இரு பக்கங்களில் ஒன்று ஆட்டுத்தோலும் மற்றது குரங்குத்தோலும் கொண்டு ஆக்கப்பெற்றது. ஆட்டுத்தோல் போடப் படும் பக்கம் ''தொப்பை'' எனவும் குரங்குத்தோல் போடப்படும் பக்கம் ''உச்சம்'' எனவும் கூறப்படும். உச்சப் பக்கத்தின் நடுவில் ஏறக்குறைய மூன்றங்குல விட்டத்தில் ஒருவகைப் பசையாலான கருமை நிறக் கலவையை அரைத்துப் பூசிக் காயவைத்து எடுப்பர். கூத்தின் உயிர்நாடியாக விளங்கும் மத்தளத்தை தூய்மையான வெள்ளைத் துணியாற் சுற்றி அதற்கு திருநீறு சந்தனம் பூசி அதனை வணங்கிய பின்னரே அதனையெடுத்து அடிக்கத் தொடங்குவர்.

**தாளக்கட்டு**

சக்கரவர்த்திகள் போன்ற சாந்தகுணமுள்ள வடமோடிக் கூத்துக் கதாபாத்திரங் களுக்கு தாளக்கட்டடாக

*1)* *தக திக தாம் தெய்யா தெய் தெய்*
*தா தெய்யத் தோம் தகதிக தாம் - தெய்யா தெய்*

*2)* *தக்கச்சணு தக்கத் திமி தாம் - தெய்ய*
*தக்கச்சணு தக்கத்திமி தெய்*

எனவும், விறுவிறுப்பான சேனாதிபதி போன்ற கதாபாத்திரங்களுக்கு தாளக் கட்டாக

*1)* *தத்தித் தாம் தரிகிட*
*தித்தித் தெய்யா தெய் தெய்*
*தத்தித் தாம்*

*2)* *தாந்தெய்யத்தோம் தரிகிட தெய்யத்தாம் - தெய் தெய்*
*தாந்தெய்யத்தோம் தரிகிட தெய்யத்தெய்*

எனவும் தென்மோடிக் கூத்துக்களில் வரும் சாந்தகுணமுள்ள கதாபாத்திரங் களுக்கு தாளக்கட்டாக

*தத்துளா தக ததிங்கிண கிட தக*
*தாதிமி தெத்தா தெய்யே - தாதெய்யே*

எனவும், வீரமுள்ளவர்களுக்கு

*தாதாம் தாதெய்ய*
*தாதாம் தாதெய்ய*

எனவும் வரவுத்தாளக்கட்டுகளாக வரும் என்பதை உதாரணங்களுக்கு எடுத்துக்காட்டியுள்ளார் (கணபதிப்பிள்ளை, மு., 1999, பக். 84). சி. மௌனகுரு (1992, பக்.18) அவர்கள் வடமோடி, தென்மோடிக் கூத்துக்களின் அடிப்படைத்தாளக்கட்டுக்களை மேல்வருமாறு குறிப்பிடுகின்றார்:

வடமோடி
1. *தத்தித்தா தித்தித்தெய்*
2. *தகதிகத திமிதகதெய்*
3. *தித்தித்தா தித்தித்தா*
4. *தா ததிந்தக*

தென்மோடி
1. *தத்துளாத்தக ததிங்கிண திமிதக*
2. *தெய்யத் தாகசந்தத்தும்*

கூத்து அரங்கேற்றத்தின்போது கூத்தின் ஆரம்பத்தில் சபைத்தாளக்கட்டு அடிக்கப்பட்டு பின்பு கொலுத்தாளக்கட்டு நடைபெறும். இத்தாளக்கட்டுகள் அனைவரையும் தன்பால் இழுக்கும் தன்மையைப்பெற்று விளங்கும். அவ்வவ் ஆட்டங்களுக்குரிய மத்தள தாள இசையை வாயாற் சொல்லுதல் தாளக்கட்டு எனப்படும். எனவே ஆட்டங்களுக்குரிய தாளங்களை சொற் களால் இணைத்துப் பாடுதலே தாளக்கட்டு எனக்கூறப்படுகிறது.

**தாளக்கட்டும் ஆட்டமும்**

இவ்வாறு தாளக்கட்டு முடிந்ததும் தரு தொடங்கப்படும். ஆட்டங்களில் ஆண் கதாபாத்திரத்துக்கும், பெண் கதாபாத்திரத்துக்கும் வேறுவேறான ஆட்டங்கள் உள்ளன. ஆண் கதாபாத்திரங்களுக்குரிய ஆட்டங்களாக உலா, பொடியடி, வீசாணம், நாலடி, எட்டடி, குத்திமிதி, பாய்ச்சல் என்பன ஆடப் பெறுகின்றன.

உலா என்பது நின்றும் பக்கவாட்டில் நடந்தும் அபிநயம் பிடித்தலைக் குறிக்கும். பொடியடி என்பது மெல்ல மெல்ல முன்னோக்கி ஆடிப்போ தலையும், வீசாணம் என்பது வளைந்து வளைந்து பக்கமாகச் சென்று ஆடுதலையும், நாலடி என்பது இரு கைப்புறமும் திரும்பிக் குதித்து மிதித்து

ஆடுதலையும், எட்டடி என்பது எட்டு என்னும் இலக்கமிட்டு ஆடுதலையும், குத்திமிதி என்பது பாதத்தின் முன்பகுதியாலும் குதிக்காலினாலும் நான்கு தடவைகளில் மாறி மாறி ஆடுதலையும் குறிக்கும். குத்திமிதித்து ஆடுதல் தெய்யத்தாக சந்தத் துமி என்னும் தாளத்துக்கு உள்ளங்கால் நிலத்தில் மிதித்தாடாதவாறு மேற்படி குத்திமிதித்தாடுதல் தென்மோடிக் கூத்திலும், தித்தித் தா என்னும் தாளத்துக்கு பாதம் முழுவதும் நிலத்தில்படும்படி உரஞ்சி இழுத்தாடுதல் வடமோடிக்கூத்திலும் ஆடப்பெறும். பாய்ச்சல் என்பது முன்னும் பின்னும் பாய்ந்து ஆடுதலைக் குறிக்கின்றன.

பெண் கதாபாத்திரங்களுக்குரிய ஆட்டங்களாக ஒய்யாரம், பொடியடி, வீசாணம், எட்டடி, தட்டடி, அடந்தை, குத்து நிலை என்பன ஆடப் பெறுகின்றன. ஒய்யாரம் என்பது நிற்கும் நிலையில் இருகால்களையும் அகலவிரித்து தாழ்ந்து இருகைகளிலும் முத்திரை பிடித்துக் காட்டி ஆடுதலையும், தட்டடி என்பது இருகால்களாலும் தனித்தனி தட்டி கை அபிநயத்துக்கு உடலை வளைத்து ஆடுதலையும், அடந்தை என்பது அடதாளம் எழுப்பி விரைந்து ஆடுதலையும் குறிக்கும். அடதாளம் சப்த தாளங்களில் ஒன்றாகும். குத்துநிலை என்பது நாலடி போட்டுக் குந்தி எழும்பி ஆடுதலையும் குறிக்கின்றன. கூத்து ஆடுபவர் தாளத்துக்கேற்ப ஆடும் பொழுதுதான் கூத்து சிறப்படைகிறது. ஆடுபவர்தனது பாத்திர ஆட்டம் முடிந்து களரியை விட்டுச் செல்லும் முன்னதாக துரிதமான ஆட்டத்தை விறுவிறுப்புடன் ஆடிய பின்னரே வெளியேறுவார். இது காலமேற்றுதல் எனப்படும். வடமோடிக் கூத்துக்கு இது நியதியாகும். ஆனால் தென்மோடிக் கூத்துக்கு இல்லை. தென்மோடியின் வரவுத்தாளத்தில் ஒவ்வொரு திசைக்கும் கூத்தாடல் நடைபெறும்போது தாளம் தீர்க்கப்பட்டு மீண்டும் ஆடல் தொடரும். வடமோடியின் வரவுத்தாளத்தில் தாளம் தீர்க்கப்பட்டதும் வரவு ஆட்டம் முற்றுப்பெறும். தன்னைத்தானே சுற்றி ஆடும்பொழுது தென்மோடியில் இடப் பக்கமும் வடமோடியில் வலப் பக்கமும் சுற்றி ஆடுவது விதிமுறையாக இருந்து வந்துள்ளது. மட்டக்களப்புக் கூத்தில் ஆடுபவர் களரியைச் சுற்றி யாட அண்ணாவியார், வாத்தியக்காரர் முதலியோர் ஆடுபவருக்கு மத்தியில் நிற்பர்.

### பாடல்களும் கதாபாத்திர அறிமுகம் செய்தலும்

பாடல்களைப் பொறுத்தவரை இரு மோடிகளுக்கும் வெவ்வேறு இசைகள் உள்ளன. தென்மோடியில் கொச்சகம் எனவும், அதனை வடமோடியில் கந்தார்த்தம் எனவும் கூறப்படுகிறது. கொச்சகத்தரு என்பது முதல் மூன்று அடிகளும் தொகையறா போன்று இழுத்து அசைத்துப் பாடுதலாகும்.

மற்றைய அடிகள் தாளத்துடன் பயின்ற இசைப்பாடலாகவும் பாடப் பெறும். விருத்தம் பாடுவதும் இருவகைக் கூத்துக்களிலும் வெவ்வேறு விதமாகவே அமைந்து காணப்படுகின்றன.

வடமோடிக் கூத்தில் வரவு ஆட்டத்தின் பின்னர் வரவைக் குறிக்கும் பாடலை ஆடுபவர் தன்னை யாரென்பதை அறிமுகம் செய்யும் பாடலைத் தானே பாடும் முறையைக் கடைப்பிடிக்க, தென்மோடிக் கூத்தில் அரங்குச் சபையோர் வரவைக்குறிக்கும் பாடலைப் பாடுவதன்மூலம் தன்னை யாரெனக் கூறும்முறை கடைப்பிடிக்கப்படுகிறது. தென்மோடியில் அண்ணாவியார் அறிமுகம் செய்யும் பாடலைப் பாடுபவராகவும் இருந்து வந்துள்ளார். தென்மோடியில் விருத்தப்பாக்களும் வசனங்களும் நீண்ட இன்னிசையுடன் இழுத்துப்பாட, வடமோடியில் அதிகம் இழுக்காது இசைக்காது சாதாரணமாகப் பாடுவதும், வசனங்களாகக் கூறுவதும் பின்பற்றப்பட்டு வருகிறது.

தென்மோடியில் ஆடுபவர் வரவு ஆட்டம் ஆடியதும் களைத்துப் போவதால் வரவைக்குறிக்கும் பாட்டைப் பக்கப்பாட்டுக்காரர் பாடுவர். தென்மோடியில் அப்பகுதியின் கடைசிப் பகுதியினை மட்டும் பிற்பாட்டுக் காரர் தொடர்ந்து பாடிவிட்டு பாடல் முழுவதற்கும் உரிய தருவைப் பாடுவார்கள். ஆனால் வடமோடியில் கூத்தாடுபவர் ஒருபாட்டைப் படித்தால் பக்கப்பாட்டுக் காரரும் அதனைத் தொடர்ந்து பாடுவர். அப்போது பாட்டுக் கேற்ற தாளத்துடன் ஆடுபவர் ஆடுவது மரபாகும். பார்வையாளரது பாராட்டைப் பெறும் நோக்குடன் தாளக்கட்டுக்கேற்ப சிறப்பான ஆட்டம் ஆடப்பெற்றது.

பாட்டுக்கமைந்துள்ள சுரவரிசை போன்று கூத்துப் பாடல்களைப்பாடும் ஒரு வித சொற்கோப்பு முறையே தரு எனப்படும். இதுவும் பாடல்களாக அமைந்து விளங்குகின்றது. தருவுக்கேற்ற தாளத்துக்கே ஆட வேண்டும் என்பது ஒழுங்கு விதியாகும். இசையும் அசையும் கூத்துக்கலையில் பிரிக்க முடியாத தன்மையைப் பெற்றுள்ளன. தருப்பாடுதல் வடமோடியில் பின்பற்றப் படுவதில்லை.

**கட்டியகாரன்**

கூத்துக்களில் கட்டியகாரன் (கட்டியம் கூறுவதால் கட்டியகாரன் என்னும் பெயர்கொள்ளப்படலாயிற்று) முக்கிய பாத்திரமாவான். கட்டியகாரனே கூத்தை ஆரம்பித்து வைப்பவனாகவும் முதலில் வருபவனாகவும், இடையில் வந்து செல்பவனாகவும் உள்ளான். இவன் பாட்டுடைத் தலைவனது சிறப்பைக் கூறுவதுடன் பார்வையாளர்களைக் கூத்தை அமைதியுடன் இருந்து பார்க்குமாறும் கேட்டுக்கொள்வான். சிலவேளைகளில் கூத்தின்

கதைச் சுருக்கமும் அவனால் கூறப்பட்டு வந்துள்ளது. அரசன் வரும் பாதையை அலங்காரம் செய்யுமாறும் பாடலாகப் பாடிக் கேட்டுக்கொள்வான். உதாரணமாக கீழ்வரும் பாடல் மேல் வருமாறு எனக்குறிப்பிடுகின்றது (மூனாக்கானா 2007):

*வாழை கரும்புகள் நாட்டுங்கோ - நல்ல*
*வடிவான பந்தலைப் போடுங்கோ.*

**ஆடை அணிகள்**

தென்மோடிக் கூத்துக்களில் பெரும்பாலும் உடலை வளைத்து ஆடுவதனால் அவர்களது ஆடைகளும் அணிகளும் பாரம் குறைந்தனவாக இருந்துள்ளன. பட்டுக்களாலும், கணோறா மணிகளாலும் வேட்டி, சேலை போன்ற அணியக் கூடியதான ஆடைகளாகவும், முடிகள் பூ முடிகளாகவும் அணியப்பெற்றுள்ளன. பாத்திரங்களுக்குப் பொருத்தமான அணிகலன்களும் அமைந்திருந்தன. வடமோடிக்கூத்துக்களில் பெரும்பாலும் பாரமான, வட்டமான கரப்புப் போன்ற வட்டுடைகளையும் முடிகளையும் (கிரீடம்) அணிந்து வந்தனர்.

வடமோடியில் அவர்களது பூரண முழு உடுப்பானது பெரும்பாலும் எட்டுத்தட்டுக்கள் வரை அமையும். ஆடுபவரின் உயரத்துக்கேற்ப அத் தட்டுக்கள் தீர்மானிக்கப்படும். அரை உடுப்பானது மூன்று தட்டுக்களை உடையனவாக இருந்துள்ளன. ஒவ்வொரு தட்டாகச் செய்து சீலைகளை அதன் மீது ஒட்டுவர். ஒவ்வொரு தட்டுக்கும் பருத்த கொடிகளினால் வளைந்து வரிந்து விரிந்திருக்கச் செய்தனர். இது கீழ்ப்பாகம் விரிந்ததாகவும் மேற்பாகம் ஒடுங்கியதாகவும் கரப்புப் போன்று உள்ளதால் கரப்புடுப்பு எனவும் பெயர்கொள்ளலாயிற்று.

போர்வீரர்களாக வரும் கதாபாத்திரங்கள் முழங்கால் வரை நீண்ட உடுப்புக்களை அணிந்தனர். இது வட்டுடுப்பு எனப்படும். சீவக சிந்தா மணியில் மாற்றார் பசுக்களைக் கவர்ந்து சென்ற வேளையில் சீவகன் மீட்டு வரப் புறப்பட்ட போது வட்டுடை அணிந்து சென்றதாகக் கூறுகின்றது. வட்டுடைப்பொலிந்த தானே வள்ளல் எனக் குறிப்பிடுகின்றது. வட்டுடை முழந்தாள் அளவாக வீரர்உடுக்கும் உடை என நச்சினார்க்கினியர் கூறுகின்றார் (சீவக சிந்தாமணி. பாடல் 468). முழந்தாள் வரை வீரர் உடுக்கும் உடையே வட்டுடை ஆகும். இதில் கூத்துக்கலை பண்டைய அரச ஆடை குறித்துக் காட்டப்படுகின்றது. கத்தாக்கு மரத்தின் இலை போல் தட்டுக்கள் அமைவதால் கத்தாக்கு உடுப்பு என்பதாயிற்று. கிரீடமானது பலா, பூவரசு, மஞ்சவண்ணா, நச்சு முதலிய மரங்களைக் கொண்டு செய்யப்பட்டதாகும்.

பேரரசர்களுக்குப் பெரிய கிரீடமும் சிற்றரசர்களுக்குச் சிறிய கிரீடமுமாக அணிந்து ஆடப் பெற்றன. கிரீடத்தின் உச்சியில் சந்திர வட்டக்குடை என்னும் பெயருடன் குடை ஒன்று அமைக்கப் பெறும். கிரீடத்தில் யானை, அன்னம், என்பவற்றின் தலைகள் உருவமாகச் செய்யப்பட்டு விளங்கும். நெஞ்சுப் பட்டையம் பளபளக்கும் தாளினாலும், கண்ணாடியினாலும் ஒட்டப்பட்டு அழகாக இருக்கும். மேலங்கியும் பளபளப்பாக இருக்கும். அரசர்களுக்கு ஏகாவடமும், தலைப்பாகையும் அணியப்படும். மீசை கரிய மாட்டின் தோலினால் செய்யப்பட்டு பெரிய மீசையாகக் காட்டுவர். ஆண்களுக்கு குண்டலம் காதணியாக அமையும். சன்னியாசிகளின் மரவுரி உடைகள் வடமோடி தென்மோடிக் கூத்துக்கள் இரண்டிலும் ஒற்றுமை கொண்டுள்ளன.

வேடர், பறையர்போன்ற கதாபாத்திரங்களுக்கு வேறு வேறான ஆடை யணிகள் உள்ளன. வடமோடியில் தண்டாயுதம், வில், அம்பு, கட்டாரி (குத்துவாள்), என்பன ஆயுதங்களாக அமைய, தென்மோடியில் வீச்சுவாள் மட்டும் ஆயுதமாகக் கொள்ளப்படுகின்றது. பெண்களில் அரசிகளுக்கான பாத்திரம் ஏற்போர் கூந்தலைப் பின்னி முடித்து நாகபடம் அணிவர். அரசி களின் முடிபோன்ற முடியைச் சூடியிருப்பர். கழுத்தில் நெஞ்சுப்பதக்கமும் மேற்கையில் கைக்கிளியும் அணிவர். ஒரு கையில் வட்டமான விசிறியும் மறுகையில் சவுக்கமும் (கைக்குட்டை) பிடித்திருப்பர். அத்துடன் கை வளையல்கள், காதணிகள் அணிந்தனர். ஒட்டியாணம் பூண்டனர். பளபளப் பான சேலையணிந்தனர்.

### சட்டம் கொடுத்தல்

கூத்தினை ஆடுவதற்கு முன்னர் ஊரில் உள்ள பெரியோர்கள் ஒன்று கூடித் தீர்மானித்ததற்கிணங்க, தீர்மானித்த கூத்தின் பிரதியைப் பெற்ற பின்னர், கூத்தின் கதாபாத்திரங்களுக்குரிய குரல்வளம், ஆடும்திறன், தோற்றஅமைப்பு என்பவற்றிற்கேற்ப பாத்திரங்களைத் தெரிந்து கொள்வதற்கான பயிற்சி சுமார் ஒரு மாத காலத்திற்கு நடைபெறும். அதன் பின்னரே கூத்தாடுவதற்காகத் தெரிவு செய்யப்பட்டு அவரவர்களுக்குரிய பாத்திரங்களைத் தெரியப் படுத்துவர். அதுபற்றி எழுத்தாணி கொண்டு எழுதப்பட்ட ஓலையினை ஊர்ப் பெரியார் ஒருவரினால் பொது மக்களின் முன்பாகக் கொடுபடும். இதனைச் சட்டம் கொடுத்தல் என்பர். சட்டம் கொடுத்தலைச் சுபநேரமொன்றில் பாத்திரங்கள் ஒவ்வொருவருக்கும் வழங்கச் செய்வர். இதனைச் சட்டம் கொடுத்தல் என்பர். பண்டைக்காலத்தில் கூத்துப்பிரதிகளும் ஓலைகளில் எழுதப்பட்டன. கூத்துப் பயிற்சியும் சுபநாள் ஒன்றிலேயே ஆரம்பமாகும்.

### வெளிச்சம்

கூத்துப் பழகுவதற்குரிய காலமாக இரவுக்காலத்தையே பயன்படுத்துவர். இரவுக்காலமாதலால் வெளிச்சத்தை ஏற்படுத்துவதற்காக வாழை மரத்தைக் குற்றியாக வெட்டி களரியின் இரு பக்கங்களிலும் இடைக்கிடையே நட்டு, அவற்றின் மேல் தேங்காய்ப்பாதி, குடைந்தெடுத்த பப்பாசிக்காய் என்பவற்றை வைத்து அவற்றுள் தேங்காய் எண்ணெயை ஊற்றி திரணையாக்கிய சீலைத்துண்டை அவற்றில் தோய்த்து சுடர் ஏற்றினர். அதுமட்டுமன்றி, களுவன் கேணி போன்ற இடங்களில் வாழும் வேட சமூகத்தினர் இரவுக் காலத்தில் நடைபெறும் தமது சடங்குகளின் போது ''பக்ஸிய'' (பக்கினிய) என்னும் ஒரு வகை மரத்தின் பாலை உருட்டி அதனையே எரித்துப் பெரும் வெளிச்சத்தினைப் பெறும் வழக்கம் இன்று வரை இருந்து வருகின்றது (கந்தன் நாகமுத்து, 2009)

சுமார் ஐந்து ஆறு மாதங்கள் கூத்துப்பயிற்சி முடிந்து பின்னர் சதங்கை அணிந்து விழா எடுத்தல் நடைபெறும். கூத்தாடுபவருக்கு அண்ணாவியார் சதங்கை அணிவார். மான், மரை போன்ற மிருகங்களின் தோலில் துவாரங்கள் இடப்பட்டு நார்இழைகளினால் சுமார் எண்பது எண்பத்தைந்து சதங்கைகள் கோர்த்துக் கட்டப்பட்ட சதங்கைக் கூட்டங்கள் இரண்டு, இரு கால்களிலும் கட்டப்படும். கூத்தாடுபவர்கள் சதங்கை கட்டிய காலுடன் ஆடும் பொழுது, சதங்கை ஒலியை எழுப்பும். இச்சதங்கை கட்டும் விழாவில் உற்றார் உறவினர், நண்பர்கள், அயற்கிராமத்தினர் ஆகியோரை இவ் விழாவிற்கு வருமாறு அழைப்பது மரபாகும். இவ்விழா பகற்பொழுதில் நடைபெறும்.

சதங்கை பூட்டியாடிய பின்னர் கிழமைக்கு ஒரு தரம் பகற்பொழுதிற் சதங்கையணிந்து ஆடுவது வழக்காகும். இவ்வாறு கிழமைக்கு ஒரு தரம் ஆடும் கூத்தைக் கிழமைக்கூத்து என்பர்.

### அரங்கேற்றம்

அரங்கேற்றம் நடைபெறுவதற்குச் சில நாட்களுக்கு முன்னர் ஓரிரவில் ஒத்திகை பார்ப்பர். இதனை அடுக்குப்பார்த்தல் எனக் கூறுவர். அடுக்குப் பார்த்தலின் போது பாத்திரங்களிற்கேற்ப ஆடையணிகள் அணியப்படுவதில்லை. அரங்கேற்றல் சுபநாள் ஒன்றில் இறைவழிபாட்டுடன் ஆரம்பமாகும். அரங்கேற்றமானது சமூக சமய விழாவாகக் கோலாகலமாக நடைபெறும். பகல் இரவு எனப்பாராது தொடர்ந்து ஆடப்பெறும். பார்வையாளர்கள் அமர்ந்திருந்தும் படுத்துக்கொண்டும் கூத்தைப்பார்த்து இன்புற்றனர்.

அரங்கேற்றத்தை முதற்களரி என அழைப்பர். கூத்து முடிவுற்றதும் கூத்தாடிய அனைவரும் இறைதோத்திரம் பாடி ஆடிய பின்னர் அண்ணா

வியார் வாழிபாடி முடித்து மத்தளத்தை அடிப்பார். இம்மத்தள ஒலி தொட்டுக் கும்பிடு, தொட்டுக்கும்பிடு எனக் கூறுவது போல இசைக்கும். பின்பு அனைவரும் களரியைத் தொட்டுக்கும்பிட்டுக் கலைந்து செல்வர். அரங்கேற்றும் காலம் இடத்துக்கிடம் வேறுபாடாக இருந்தது. தொழில் நிலை காரணமாக ஓய்வான காலத்திலேயே கூத்து ஆடப்பெற்றது. பெரும்பாலும் சித்திரை, ஆவணி, புரட்டாதி, வைகாசி ஆகிய காலங்களில் கூத்துக்கள் அரங்கேறின. ஆனால் கார்த்திகை, மார்கழி மாதங்களில் கூத்தாடுதல் பெரும் பாலும் தவிர்க்கப்பட்டு வந்தது.

அரங்கேற்றம் முடிவுற்றதும் ஊர்க் கோயில்களுக்குச் சென்று சிறிது நேரம் ஆடி அதன் பின்னர் ஊர்ப் பெரியார்களின் வீட்டிற்குச் சென்று ஆடிய பின்னரே வீடுகள் தோறும் சென்று ஆடுவர். வீடுகள் தோறும் சிற்றுண்டி உபசாரம், சன்மானம் முதலியன வழங்கிக் கௌரவிப்பர். வீடுகள் தோறும் ஆடி முடித்துச் சில நாட்களுக்குப் பின்பு இரண்டாம் களரி ஆடுதல் நடை பெறும். இரண்டாம் களரிக்குப் பின்பு வீடுகளுக்குச் சென்று ஆடுவதில்லை.

கூத்து ஆட்டத்தில் மந்திரப் பிரயோகமும் நடைபெறும். கூத்துக்களரிக்கு அல்லது குறித்த ஒருவருக்கு மந்திரவாதி மூலமாகச் செய்வினை (சூனியம்) செய்யப்படும். இதன் பயனாக அவர்களுக்குக் குரலிலிருந்து ஒலி எழும்பாது தடைசெய்யப்படும். இதனை தொண்டை கட்டுதல் என்பர். அதுமட்டுமன்றி மத்தளம் உடைதல், அண்ணாவியார் ஆட்டக்காரர் முதலியோர் வட்டக் களரியில் மயங்கி விழுதல் என்பனவும் நடைபெறும். அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காகவும், வேறு வினைகள் அணுகாமலும் கூத்துக்களரியையும் தம்மையும் மந்திரங்களின் சக்தியினால் காவல் செய்துகொள்வர் (க. குணரெத்தினம், 2009).

**கூத்தும் திருமணமும்**

கூத்து அரங்கேற்றம் முடிந்ததும் கூத்தாடிய இளைஞருக்குத் திருமணம் நடைபெறுவது வழக்காகும். மட்டக்களப்புப் பிரதேசத்தில் திருமணமானது கூத்தொன்று அரங்கேறி முடிந்ததும் கூத்தில் பாத்திரமேற்றுச் சிறப்பாக ஆடிய இளைஞர்மீது காதல் கொண்டு அல்லது மருமகனாக்க விரும்பி திருமணம் நடந்தேறுவதும் வழக்காக வந்துள்ளது. கூத்து சமூகத்தில் முக்கிய இடத்தைப் பெற்று விளங்கியமைக்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும். கூத்தாடுபவர்கள் கதாபாத்திரமேற்று ஆடிய பெயரிலே அழைக்கப்படுவதும் உண்டு. உதாரண மாக திரௌபதையின் பாத்திரமேற்ற கந்தப்பன் என்பவரைத் ''திரௌபதைக் கந்தன்'' என்றும், துரியோதனின் பாத்திரமேற்ற முருகப்பன் என்பவரை ''துரியோதன முருகன்'' என்றும், வீமனின் பாத்திரமேற்ற கந்தையாவை

''வீமன் கந்தையா'' எனவும் அழைக்கப் பெற்றனர். இவ்வாறு அவர்களுக்கு ஊரவர்கள் குறிப்பிடும் பெயரைப் பேச்சு மொழியால் மட்டும் பாவனையில் வைத்துக்கொள்வர். இவ்வாறு கூத்துக் கலை மக்களின் பண்பாட்டு விழுமியங் களை உள்ளடக்கியதானதாக விளங்கி வந்துள்ளது.

## ii. வசந்தன் ஆட்டம்

மட்டக்களப்புத் தமிழரது பண்பாட்டுப் பழக்கவழக்கங்கள் ,பாரம்பரிய வழக்காறுகள் முதலியவற்றைப் பிரதிபலிக்கின்ற கலையம்சங்களில் ஒன்று வசந்தன் ஆட்டமாகும். அக்காலத்தில் வசந்தன் ஆடலும் பாடலும், மக்களது வாழ்க்கையின் பெருமகிழ்ச்சிக்கும் பக்தியின் வெளிப்பாட்டிற்கும் ஏதுவாய் விளங்கியது. இப்பிரதேசத்தின் பல இடங்களிலும் வசந்தன் ஆட்டம் நடைபெற்றது.

வசந்தன் ஆட்டம் மட்டக்களப்புப் பிரதேசத்தில் ஆரம்பகாலத்தனவாகக் கருதப்படுகிறது. தென்மோடிக் கூத்தின் ஆரம்பத்துக்கு வசந்தன் ஆட்டம் வித்திட்டதாகக் கூறுவர். தென்மோடிக் கூத்து சில அம்சங்களை வசந்தனில் இருந்து பெற்று வளர்ந்து வளர்ச்சியடைந்ததாக பேராசிரியர் சி. மௌனகுரு (2004) அவர்கள் கூறுவார். உழவுத் தொழிலுடனும் கண்ணகி வழிபாட்டுடனும் தொடர்புடையதாக வசந்தன் ஆட்டம் நடைபெற்று வந்துள்ளது. சமயச் சார்பாக இருந்தாலும் பொதுவிழாக்களிலும் ஆடப் பெற்றுவந்துள்ளது. வசந்தன் ஆட்டத்தில் பாடலும் ஆடலுமே உள்ளன. கதையம்சம், நாடகத் தன்மை என்பன இதில் இல்லை எனலாம். ஆனால் மத்தளம், அண்ணாவியார், தரு, பாடல் என்பன கூத்துக்கலையில் உள்ளது போல இடம்பெறுகின்றன. தனித் தனியாக வசந்தன் பாடல்கள் அமைந்துள்ளன. இப்பாடல்கள் பலராலும் காலத்துக்குக் காலம் பாடப் பெற்றிருப்பதாகக் காணமுடிகிறது. அவை காலத்தால் முற்பட்டவைகளாகும்.

வசந்தன் பாடல்களில் பலபாடல்கள் கண்ணகியம்மன் வரலாற்றைக் கூறுவதாகக் காணமுடிகிறது. அப்பாடல்கள் கண்ணகியின் பிறப்பைத் தெய்வீகமான அவதாரப் பிறப்பாகக் குறிப்பிடுகிறது. மிகுதியானவற்றில் பெரும்பான்மை வேளாண்மை பற்றிய வசந்தன் பாடல்களைக் கொண்டவை. சிறுபான்மை வேறு விடயங்கள் பற்றி அமைந்துள்ளன.

மேலும் வசந்தன் பாடல்கள் மட்டக்களப்புப் பிரதேசத் தமிழர்களின் உழவுத் தொழில், பொழுதுபோக்குகள், பழக்கவழக்கங்கள் முதலியன பற்றிய செய்திகளைத் தருகின்றன. மட்டக்களப்புத் தமிழரின் வாழ்வுடன் தொழிலும்

கலையும் பின்னிப் பிணைந்துள்ளதை வசந்தன் ஆட்டம் எடுத்துக்காட்டு கிறது. மட்டக்களப்புப் பிரதேசத்து வசந்தன் பாடல்களை வட்டாரக் கல்வி அதிகாரியாக இருந்த தி. சதாசிவ ஐயர் முதன்முதலாகத் தொகுத்து ''மட்டக்களப்பு வசந்தன் கவித்திரட்டு'' என்னும் நூலை 1938 இல் வெளியிட்டுள்ளார். அதில் அறுபத்திரண்டு வசந்தன் ஆடல்களுக்குரிய பாடல்கள் அடங்கியுள்ளன.

பாடல்களின் தன்மைக்கேற்ப ஆடல்களின் பெயர்கள் அமைந்து விளங்கு கின்றன. வசந்தன் கொலு, தெய்வத் தோத்திரம், வரலாறு பற்றிய வசந்தன், தொழில்சார் வசந்தன், குறவஞ்சி வசந்தன் (குறத்திவசந்தன்), விளையாட்டு வசந்தன் என்னும் வகைகள் காணப்படுகின்றன. அவற்றுள்ளும் பல பிரிவுகள் உள்ளன. இப்பிரிவுகளில் அறுபத்திரண்டு பிரிவுகள் உள்ளதாகவும், அப் பாடல்கள் சுமார் இருநூறு வருடங்களுக்கு முற்பட்டவை எனவும் தி. சதா சிவஐயர் கூறுகின்றார். அவை பற்றி அவர் மேலும் குறிப்பிடுகையில் வசந்தன் கொலுவில் ஒருபாடலும், தெய்வத்தோத்திரத்தில் இருபது பாடலும், வரலாறு பற்றியதில் பன்னிரண்டு பாடலும், தொழில் சார்ந்ததில் பதினொரு பாடலும், குறவஞ்சியில் பதினொரு பாடலும், விளையாட்டு போன்ற சமூக நிகழ்வில் ஏழு பாடலும் உள்ளன எனக் குறிப்பிடுகின்றார் (சதாசிவஐயர், தி., 1938, பக்.06).

இப்பாடல்கள் பிள்ளையார்,முருகன்,சிவன்,கண்ணகி,மாரி,சரஸ்வதி, விஷ்ணு முதலிய தெய்வங்களைப் போற்றுவதாகவும் பக்தி, வீரம், நகை, வியப்பு, உவகை முதலான பலவகைச் சுவைகள் பொருந்தியதாகவும் அமைந்து விளங்குகின்றன. வசந்தன் பாடல்களைப் பாடும் முன்பாக பாடப் படும் பலதருக்கள் பள்ளுப் பாடலின் சந்தத்தைத் தருகின்றன. அவை தருகின்ற ஓசைப்படியே பாடல்கள் அமைந்துசெல்லும். உதாரணங்கள்:

**தோத்திர வசந்தனில்.......**

i) பிள்ளையார் வசந்தனில்.

*தரு-தெந்தினதினன - தினதினதினன*
*தினதினதின்ன - தின்னானா*

*சிந்துர முகனென வந்தாய் சரணம்*
*சீருல வொற்றை மருப்பாய் சரணம்*
*அந்தமும் ஆதியுமானாய் சரணம்*
*ஆறணி வேணிய னருளே சரணம்*

ii) பிள்ளையார் வசந்தனில்.

*தக்கிட தரிகிட கணபதி சரணம்*
*சீரிய யானைக் கன்றே சரணம்*
*விக்கின விநாயக கணபதி சரணம்*
*மைக் கருமேனியன் மருகா சரணம்*

iii) தானானாப் பள்ளு வசந்தனில்.

*தரு - தானானா தானானா தன*
*தானா தந்தனத் தானானா*
*தானா தன் னாதன தந்தன*
*தானா தந்தன தானானா*

*சிவ காம சுந்தரியாகிய*
*தேவிப் பதப்புகழே யுரைக்க*
*தவஞான பரம்பொரு ளாகிய*
*தந்தி முகத்தவன் தாழ்துணையே*
*துணை யான கலைமகளே*
*தாயவளே தமிழ்சொல் லுதற்கு*
*இணையாக என்நாவின் நடந்திசை*
*யேற்றிட உந்தனிரு பதந்தா*

(கவின்மணி. க. அழகரெத்தினம்,1960)

**வரலாறு பற்றிய வசந்தனில்....**

**தரு-தந் தானே தானே தந்த தானின தானா தந்த**
**தானே தானே தந்த தானின தானா னா.**

**சீராரும் தென்னிலங்கை யாளவந்த வீர நரேந்திர**
**சிங்கசாமி மேல் வசந்தன் சிந்து சொல்லவே**
**காராரும் சோணமழைக் கால்விழுந்த போல் வழிந்த**
**கன்னமதத் தண்ணல் பதங் காப்பாமே.**

**தொழில் சார்ந்த வசந்தனில்....**

i) வேளாண்மை வசந்தனில்.

*தரு-தெந்தென்னா தென்னா தினனா*
*தெந்தென்னா தென்ன தெய் தெய்*
*தெந்தென்னா தென்னா தினனா*
*தெந்தென்னா தென்ன தெய் தெய்.*

*சீருலவு மத்தகய மாமுகனை நாமகளைச்*
*சிந்தைசெய்து சென்நெல் வசந்தனிசை பாட*
*ஏருலவு மீசனோ டிமயவரை மங்கையுடன்*

*எங்குமுள்ள தேவர்பதம் என்றும் மறவோம்.*

*வேளாண்மை வெட்டு வசந்தனில்.*

*தரு-தானனா தன தானின தானினா தனம்*
*தானனா தன தானின தானி*

*கொண்டாலே மழையும் வருகுது*
*வாருங்கோ பள்ளர் உப்பட்டி கட்டுவோம்.*

(கவின்மணி. க. அழகரெத்தினம்,1960)

**குறவஞ்சி வசந்தனில்.....**

*தரு- நன்னானே நன்னானே*
*நான நன்ன நன்னானே*

*சீர் புகழும் தென்வெருகல்*
*சேயிழையே செய்தியைக் கேள்*
*பார்புகழும் புவிமீதிற்*
*பசு விருக்கக் கண்டேனே.*

(மு. கணபதிப்பிள்ளை, 2009)

**விளையாட்டு வசந்தனில்.....**

*தரு - நன்ன நன்ன நான நன்ன நான நன்ன நான நன்ன நான*
*நன்ன நன்ன நானன நன்ன நான நன்ன நான நன்ன நான*
*மாடல்- சீருலவு ஸ்ரீ ராமச் செங்கணெடுமாலவனைப் போற்றி- ஒரு*
*சிற்றடியேன் வசந்தன் புகழ்பாடச்*
*சிந்துர மாமுகத் தைங்கரனே துணை- செய்வாய்*
*ஏருலவு மீசனுடனெவ்வுலகுமீன்றவுமைதானும் - நல்ல*
*ஏர்பெறு வெற்றிவேலாயுதரொடு தெய்*
*வானை வள்ளியு மென் மனத்திற் குடி-கொள்வீர்.*

வேளாண்மை வெட்டு வசந்தன் பாடலில் மழை வருவதற்குரிய வானிலை தென்படுவதால் மற்றவர்களைத் துரிதமடைந்து வேலை செய்விக்கும் பாடலாக அமைந்துள்ளது. துரிதமாக வேலை செய்வதற்குரிய தாளக் கட்டும் சொல்லடைவும் அமைந்து காணப்படுகின்றன.

பண்டைய வசந்தன் பாடல்களைக் கொண்டு ஆடப்பெற்று வரும் வசந்தன்களில் கிறுகுவசந்தன் பெரும்பாலான இடங்களில் இன்று வரை ஆடப்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. கிறுகுவசந்தன் ஆடுபவர்கள் சுற்றிச் சுற்றித், திரும்பித் திரும்பி ஆடுவதனால் கிறுகுவசந்தன் எனப் பெயர் கொள்ளலாயிற்று. எனவே, கிறுகுவசந்தன் என்பது திரும்பி ஆடும் பொருளைத் தந்து நிற்கிறது. மட்டக்களப்பில் கிறுகுதல் என்பது திரும்புதலைக் குறிக்கும். கிறுகுவசந்தன் பாடலொன்றில்

தாளம்

*தெந்தின தினனத் தினதின தினன*
*தினதினதினனத் தினனானா*

பாடல்

*சிந்துர வதனச் சுந்தரம் உலவு*
*தேவர்க் கொரு முதல் ஆனவனைப்*
*பந்தனை அகலச் சிந்தனை மகிழப்*
*பாடந டந்திட வாருமடீ*
*மத்தள தாளந் தத்திமித் தாவென*
*வலவைக் குரியம ணாளனென்று*
*தித்தா தித்திமி திமிதா தித்திமி*
*திந்தோ மென்றிட வாருமடீ*

எனவரும் பாடலின்கண் அமைந்துள்ள தாளக் கட்டும் சொல் நடையும், பிரமிக்கச் செய்வதாக உள்ளன. தென்பாங்குச் சந்தங்களில் ஐம்பத்தாறு சந்தங் களைக் கொண்ட ஐம்பத்தாறு வசந்தன் ஆட்டம் ஆடப்படுவதாக அறிய முடிகிறது (தி. சதாசிவஐயர், 1938, ப.05). சிலப்பதிகாரத்தில் சொல்லப்பட்ட பலவகைக் கூத்தாட்டங்களும் அடங்கிய தொகுதியே வசந்தன் ஆட்டம் எனலாம்.

**பாடலும் ஆடலும்**

வசந்தன் ஆட்டங்கள் மட்டக்களப்புப் பிரதேசத்தில் சாதி அடிப்படையில் உயர் வகுப்பினராகக் கருதப்படும் முக்குவர், வேளாளர், சீர்பாதர், கரையார் முதலியோரால் ஆடப் பெற்றுவந்துள்ளதாகக் கூறுகின்றனர். முத்தமிழ் வித்தகர் விபுலானந்தர் வசந்தன் பாடல்களைப் பற்றிக் கூறுகையில் சங்ககால ஒழுக்கங்களும் பாடல்களும், ஆடல்களும் ஈழ நாட்டிலே இன்றும் நின்று நிலவுகின்றன எனக் கூறுகின்றார் (விபுலானந்த அடிகளார், 1953, ப.22). வசந்தன் ஆட்டத்தினை எட்டு அல்லது பன்னிருவர் சேர்ந்து ஆடுவர். இங்கு ஐந்து வயதுக்கும் பன்னிரெண்டு வயதுக்கும் இடைப்பட்ட சிறுவர்களாலே இது ஆடப் பெற்றுவந்துள்ளது.

ஆடுவோர் தமது இரு கைகளிலும் இரு கோல் கொண்டு வட்டவடிவமாக நின்று பாடல்களுக்கும் தாள அமைதிக்கும் ஏற்ப ஆடுவார்கள். பிற்பாட்டுக் காரர்கள் பாடல்களைப் பாடுவர். ஆடுபவர்களது அபிநயம், துள்ளிக் குதித்து ஆடுதல் என்பன இதன் சிறப்பியல்பாகும். வசந்தன் கூத்து சமயச் சார்பானது என்பதனை ஆடலும் பாடலும் காட்டிநிற்கும். சல்லரி, மத்தளம் ஆகியவை வாத்தியக் கருவிகளாய் இடம்பெறும்.

மட்டக்களப்புப் பிரதேசத்தில் மழையின்றி வெப்பமிகுந்த காலத்தில் கூகைக் கட்டு, அம்மை, கொப்பளிப்பான் முதலிய நோய்கள் ஏற்படுகின்றன. இதன் காரணமாக கண்ணகை அம்மன் குளிர்த்தி நடைபெறுகிறது. அக் குளிர்தித் தினத்தில் வசந்தன் ஆட்டம் முக்கிய இடத்தை வகிக்கிறது. அது மட்டுமன்றி கொம்பு முறிவிளையாட்டில் வெற்றி பெற்றோராலும் வசந்தன் ஆட்டம் ஆடப் பெற்றுவந்துள்ளது.

கண்ணகி மதுரையை எரித்து விட்டு சீற்றத்துடன் திரும்பி வருகையில் சிறுவர்கள் வசந்தன் கூத்து ஆடிச் சீற்றத்தை நீக்கியதாகக் கர்ண பரம்பரைக் கதை மூலம் அறியமுடிகிறது. இதனாலே தான் கண்ணகி அம்மன் சடங்கின் இறுதிநாளில் வசந்தன் கூத்து ஆடப் பெறுகிறது.

வசந்தன் கூத்தானது சமூகத்திற்கு இன்பத்தையும் புத்துணர்வையும் தருகின்ற பண்பாடு செறிந்த கலையாக விளங்கியுள்ளது.

### iii. கரகாட்டம்

மட்டக்களப்புப் பிரதேசத்தில் சடங்குகாலத்திலும் பொது வைபவங்களிலும் கரகாட்டம் நடைபெற்று வந்துள்ளன. செம்பு ஒன்றினுள் அரிசி, நீர், மணல், என்பவற்றுள் ஏதாவது ஒன்றைவிட்டு வேப்பங்குழை அல்லது கமுகம் பாளையுடன் வேப்பங்குழையை செம்பின் உள்ளும் வெளியும் அமையுமாறு செம்பினுள் வைத்து கும்பக் கலசத்தைத் தலைமீது வைத்தாடுவர். இதனை, கும்பத்துக்கு வைப்பது போன்று முடியுடனான தேங்காயை, மேலே கூறியபடி வைக்கப் பெற்ற வேப்பங்குழையின் மேல் வைத்தகும்ப கலசத்தைத் தலைமீது வைத்தும், வேப்பங்குழை, கமுகம்பாளை முதலியவற்றால் அலங்கரிக்கப் பட்ட கிளியின் முகம், மயிலின் முகம், பாம்பின் படம் முதலிய முடி வைத்த கும்பக் கலசத்தைத் தலைமீது வைத்தும் ஆடுவர். இத்தகைய முறைகளில் உள்ள கும்பக்கலசம் கரகம் எனப் பெயர் கொள்ளுகிறது.

இக்கரகத்தைத் தலையில் வைத்துக்கரகாட்டம் ஆடப்பெறும். தனி யாகவோ அல்லது குழுவாகவோ ஆடுவர். குழுவாக ஆடும் பொழுது ஐந்து, ஏழு, ஒன்பது, பதினொன்று ஆகிய எண்ணிக்கைகளில் ஒரெண்ணிக்கையை உடையவர்களாக ஆடுவர். கரகாட்டம் கன்னியர்களால் ஆடப்பெற்று வந்துள்ளதாகவும் கூறப்படுகிறது (ஈழத்துப்பூராடனார், 2003, பக்.64). ஆலயங்களில் ஆடும் பொழுது செம்பினுள் நிரப்பப்படும் அரிசி, நீர் முதலிய பொருட்கள் அவர்களின் வேண்டுதலை ஒட்டியே அமையும். அதனைச் சுமந்து சென்று அதனை வழிபட்ட பின்னரே ஆடுவர். கரகாட்டத்தைக் கரகம்

எடுத்தல் எனவும் கூறுவர். ஆரம்பத்தில் சமயம் சார்ந்த கலையாக ஆலயங்களில் விளங்கிப் பின்னர் சமூகத்தின் பொதுவைபவங்களிலும் ஆடப்பெறும் கலையாகவும் மாறியது.

செம்பின் வாய்ப்பக்கம் குவிந்தும் நடுப்புறம் பருத்தும் அடிப்புறம் நடுப்புறத்தைவிடக் குவிந்தும் அமையப் பெற்றிருக்கும். செம்பினுள் பூங் கொத்து வைத்தும் கரகாட்டம் ஆடி வந்துள்ளனர். கரகத்துக்கு மலர் மாலையும் சூட்டப்படும். கரகாட்டம் ஆடுவோர் மார்பில் மலர்மாலைகள் அணிந்து, இரு கைகளிலும் வேப்பங்குழை பிடித்து, கரகத்தைத் தலையில் வைத்து, கரகத்தைப் பிடிக்காமல் ஆடுவர். மத்தள இசைக்கும், பாடலுக்கும் தக்கவாறு உடலை வளைத்துப் பலவிதமான ஆடல்களை ஆடுவர்.

ஆட்டத்தில் ''தீந்தரிகிடதாம்'' என்னும் தாளக்கட்டுக்கு ஏற்பக்கால்களை நிலத்தில் குத்திநடந்து ஆடத்தொடங்குவர். ஆடும்போது கால்களை முன்னும் பின்னும் போட்டு ஆடுவர். கால் மாறிமாறி ஆடுதல், கால்கைகளை பக்க வாட்டிற்கு வீசி ஆடுதல், உட்கார்ந்து எழுந்தாடுதல், குனிந்து நிமிர்ந்து ஆடுதல், கால்கை மாற்றித் தூக்கிப்போட்டு ஆடுதல் எனப் பலவாறு கரகாட்டம் ஆடப்பெறும். ஒருகையில் வீச்சுவாளும் மற்றக் கையில் வேப்பங்குழையும் கொண்டும் ஆடுவர்.

கரகாட்டம் இறைவழிபாட்டுக்காகப் பூங்குடம் எடுத்தாடும் பிரார்த்தனை யாகும். அக்காலத்தில் நேர்த்திக்கடனாகக் கரகாட்டம் ஆடுதல் ஆலயச்சடங்கு காலத்தில் நடைபெற்று வந்துள்ளது. கரகமாடுதல், குடக்கூத்து எனப்பெயர் கொள்ளப்படுகின்றது (மதுரை தமிழ்ப் பேரகராதி பக்.514). சிலப்பதிகாரத்தில் கண்ணகி வழக்குரையில் மாதவி ஆடிய ஆடல் குடக்கூத்து வகையினதாகும். குடக்கூத்தானது வினோதக் கூத்தாறினுள் ஒன்றாகும்.

## iv. இசைகள்

அழகியற் கலைகளுள் இசைக்கலையானது உயர்திணையில் அடங்காத ஏனைய உயிர்களையும் தன்பால் ஈர்த்தெடுக்கும் சக்திவாய்ந்தது. தமிழர் இசையினைத் தமது வாழ்க்கையோடு தொடர்பூட்டி வாழ்ந்து வந்துள்ளனர். மனிதனின் பிறப்புமுதல் இறப்பு வரை தாலாட்டுப் பாடல், விளையாட்டுப் பாடல், மங்கலவாழ்த்துப் பாடல், ஒப்பாரிப் பாடல் முதலியவாறு பாடலிசைகள் வழக்குப் பெற்றிருந்தன.

மகுடி என்னும் குழல் இசையினால் பாம்பினை ஆடவைப்பதும், மதங் கொண்ட யானைகளை இசையினால் அடக்கி ஆளுவதும், வயலில் உழுதும் மாடுகள், மிதிக்கும் மாடுகள், சூடடிக்கும் மாடுகள், கவளை இறைக்கும்

மாடுகள் என்பன விவசாயிகளின் பாடல் இசை கேட்டுத் துரிதகதி பெறுவதுடன் விவசாயி பாடலிசையினால் சோர்வின்றி இருப்பதும், அழுத குழந்தைகள் தாலாட்டிசைகேட்டு அழுகைநீங்கி உறங்குவதும் இசையின் பயனன்றோ.

மட்டக்களப்புத் தமிழர் பாரம்பரிய சுதேச இசை வடிவங்களைப் பயன் படுத்தி வந்துள்ளனர் (மகேஸ்வரலிங்கம், க., 2008). தாலாட்டு, காவடியாட்டம், கரகாட்டம், ஊஞ்சலாட்டம், கூத்து, காவியம், அகவல், அம்மானை, வழக்குரை, குளிர்த்தி, புராணபடனம், எண்ணெய்ச்சிந்து, பறைமேளம், குரவை முதலியவற்றிலே தமது இசையின் தன்மையினைப் புலப்படுத் தியுள்ளனர். இதனால் உளமகிழ்ச்சி, மனித நட்புறவுடன் நல்லாசியையும், இறையருளையும் பெற்று உய்ந்தனர். இவர்கள் தமது பாடலிசைக் கேற்ப அதற்கான வாத்தியக் கருவிகளையும் கையாண்டனர். உடுக்கை, தவில், மணி, சங்கு, குழல், மத்தளம், சல்லரி, சிலம்பு, சதங்கை, அம்மானைக்காய், சேகண்டி முதலியன பயன்படுத்தப்பட்டன. (கீழுள்ள படங்களைப் பார்க்கவும்)



அம்மனைக்காய்களும் சிலம்புகளும்

தாலாட்டுப் பாடல்கள் குழந்தைகள் அழாமல் இருக்கவும், தன்னை மறந்தநிலையில் நித்திரை செய்வதற்கும் பயன்பட்டன. இறைவன் மீது பாடிய தாலாட்டுப்பாடல்கள் பக்திப் பரவசத்தை வழங்கின.

காவடியாட்டம், கரகாட்டம், கூத்து ஆகியவற்றின் பாடல்களின் இசைகளும் அவற்றின் ஆட்டத்தின்போது எழுப்பப்படும் மத்தளம், உடுக்கை, சதங்கை, சல்லரி என்பவற்றின் இசைகளும், கேட்பாரைப் பிணிக்கும் தன்மை கொண்டவை. காவியப் பாடலின் ஓசை நயமும் உடுக்கையின் ஒலித்தாளமும் கலந்து உள்ளத்தைத் தெய்வத்தின்பால் ஈர்ப்பவை. தெய்வமும் அந்த இசைப் பாடலுக்கு இரங்கி அருள் பாலித்தது. அவ்வாறே வழக்குரை, குளிர்த்தி என்பனவும் வரலாறு கூறும் பாடல் வகைகளுக்கேற்ப பலவாறான இசைகள் பொருந்தியனவாகக் காணப்பெற்றன. வைகுந்த அம்மானை, கஞ்சன்

அம்மானை, பாரத அம்மானை முதலான அம்மானை களைப் பாடும் இசையமைவு வெவ்வேறானவையாக உள்ளன. இதனால் மட்டக்களப்பின் சுதேச இசை அமைவுகளைக் கேட்பவர்கள் அதன்வயப்படுவர்.

புராணபடனம் செய்யும் போது ஒருவர் பாடல்களை இசையுடன் பாட மற்றவர் ஒரு வகை இழுவசைவுடன் பயன் (பொருள்) சொல்லுவதும் வழக்காறாகும். எண்ணெய்ச் சிந்து எப்போது, யாராற் பாடப்பெற்றது என அறுதியிட்டுக் கூறமுடியாதுள்ளது. ஆனால் அதில் ஒரு தொடர்ச்சியான மரபுவழியான இசை பரந்துபட்டுச் செல்வதைக் காணமுடிகிறது.

ஊஞ்சலின் வேக அதிகரிப்புக்கேற்ப வெவ்வேறான சந்தங்களில் ஊஞ்சற் பாடல்கள் இசைக்கப்படும். சந்தத் தருக்களை ஊஞ்சலில் ஆடுவோர் அனைவரும் பாட, அதனைத் தொடர்ந்து இருந்தாடுவோருள் ஒருவர் இசையுடன் பாடல்களைப் பாடுவார். ஒவ்வொருபாடலின் பின்பும் சந்தத்தரு இசைப்பர். ஊஞ்சற் பாடல்கள் வரலாற்றுடன் தொடர்புடைய சந்தப்பாடலாகப் பாடப்பெற்று வந்துள்ளன.

இவ்வியலின் ஆரம்பத்திலே கூத்தில் இடம்பெறும் இசைப் பாடல்களைப் பற்றிச் சற்றுவிரிவாகக் கூறப்பட்டுள்ளது. அடுத்ததாகப் பறைமேளமும், குரவையும் இல்லாத வைபவங்கள் இல்லை எனலாம். ஆனால், பறைமேளம் மங்கலகரமான, அமங்கலகரமான இரு வைபவங் களிலும் இடம்பெறுவதும் குரவை மங்கலகரமான வைபவங்களில் மட்டும் இடம்பெறுவதும் மரபாக வந்துள்ளது.

**பறைமேளக் கலை**

மட்டக்களப்புப் பிரதேசத்தில் பறைமேளக்காரரிடையே பறைமேளக் கலை நடைபெற்றுக் கொண்டுவந்துள்ளது. பறைமேளக் கலையின் தலைவர் மூப்பன் என அழைக்கப்பட்டார்.

**வாத்தியக் கருவிகள்**

பறைமேளக் கலையின் பயன்படு கருவிகளாகப் பறைமேளம், தம்பட்டம், சொர்னாழி (குழல்), சிலம்பு என்பன பயன்பட்டு வந்துள்ளன. பறைமேள மானது மத்தளம், தவில் என்னும் பெயர்களாலும் அழைக்கப்பட்டு வந்துள்ளது. பறைமேளகாரரிடம் இருப்பின் பறைமேளம் எனவும் ஏனைய வர்களிடம் அதுபாவனையில் இருக்கும் போது மத்தளம், தவில் எனவும் பெயர் பெறுகிறது. பறைமேளத்தில் இராஜமேளம் முதன்மை மேளமாகக் கருதப்படுகிறது.

சொர்னாழி நீண்டநேரம் மூச்சை உள், வெளி இழுத்து சில நிமிடங் களுக்கு இசைதரக் கூடியதாகும் (பரசுராமன் மூப்பன், 2009). சொர்னாழி சுமார் ஒரு அடி நீளத்தைக் கொண்டதாகும். பறைமேளக்காரர் ஆடும் பொழுது தவில்களை அடித்துக் கொண்டே ஆடுவர். கோணங்கித் தாளம், இராசவரவுத் தாளம் முதலியவற்றின் பல்வேறுபட்ட தாளங்களுக்கேற்ப பாவனை செய்து ஆடல் புரிவர் (பாலசுகுமார், 1996). தாளச் சேவிப்பு (தவில் அடி)க்கு ஏற்ப சொர்னாழி ஊதப்படும். (கீழுள்ளபடத்தைப் பார்க்கவும்)



கோயிலில் பறைமேளம் அடித்தல்

பத்ததி முறையிலான ஆலயச் சடங்குகளில் இக்கலை முதனிலை வகித்து வருகிறது. சக்தி வழிபாட்டிற்கு நடைத் தாளமிடும் பறை ஒலியே உரித்தாகும். ஆனால் வழிபாட்டின் போது ஆட்டம் ஆடுவதில்லை. வாத்தியக் கருவிகள் மட்டுமே இடம் பெறும். மட்டக்களப்புப் பிரதேச சக்தி வழிபாட்டில் பறை ஒலி, குழல் ஒலி, குரவை ஒலி, சங்கு ஒலி, மணி ஒலி, சிலம்பு ஒலி, உடுக்கு ஒலி, சேகண்டி ஒலி என்பன முக்கியமாக இருந்தாலும் பறைமேள ஒலியே இன்றியமையாததாக வந்துள்ளது.

### தாளம்

பறைமேளத்தைச் சேவிக்கும் போது பலவகையான தாள ஒலியைத் தோற்று விக்கின்றனர். ஆலயநிகழ்வில் அபிஷேகத் தாளம், அரட்டுத் தாளம் (அழைப்புத் தாளம்), சுற்றுலாத் தாளம், பெரியபூசைத் தாளம் எனவும் திருமண நிகழ்வில் வரவுத் தாளம், கோணங்கித் தாளம், இராசதாளம், பல்லாக்குத் தாளம், நாலடித் தாளம், ஆறடித் தாளம், ஏழடித் தாளம், எட்டடித்

தாளம், பூட்டுத் தாளம், தட்டுமாறும் தாளம் எனவும் மரண நிகழ்வுகளில் ஆரம்பத் தாளம், தெரியப்படுத்தும் தாளம், எடுத்துச் செல்லும் தாளம், சந்தி கூடும் தாளம் எனவும் தாளங்கள் வழக்கிலுள்ளன (தேனூரான், 1976).

**பாத்திரங்கள்**

பறைமேளக் கலையில் பறைமேளத் தாளம் சேவிக்க இருவரும், சொர்னாழி வாசிக்க ஒருவரும், தம்பட்டம் சேவிக்க ஒருவரும் பாத்திரங்களாக விளங்கிவந்துள்ளனர். தம்பட்டம் சேவிப்பவர் சில வேளையிலேயே இணைந்து கொள்வார். ஆலயங்களில்

*டாங்கிடுங் கிட்டணம்*
*தெய்யிட்டுக் கேட்டாம்*
*டாங்குக் கேட்டாம்*
*டாங்குகேட்டாம்*

எனவும்

*டாங்கிடுடண்டாங். கிடு.. டண்டா*
*டாங்கிடு-கிடுகிடு*
*கேகிடுடண்டா*

எனவும் தாள இசை எழுப்பப்படும். மட்டக்களப்பில் பறைமேளக் கலை இசையும் அசையுமாகவும், இசைமட்டும் தனியாகவும் பயின்றுவரும் கலையாக தமிழர் சமூகத்தில் இன்பதுன்ப நிகழ்வுகளில் எல்லாம் விளங்கி வருகிறது.

**குரவை**

பழந்தமிழ் இலக்கியங்களில் கூறப்படும் குரவை கூத்துவகையினைச் சேர்ந்த தாகும். ஆனால் மட்டக்களப்புப் பிரதேசத்தின் குரவை ஒலியானது இனிய ஒலி எழுப்பும் செயலாகக் கொள்ளப்படுகின்றது. குரவையைக் குலவை எனவும் அழைப்பர்.

பழங்காலத்தில் ஆலயச்சடங்குகளிலே குரவை ஒலி எழுப்பப் பெற்றது. பின்னர் சாமர்த்தியம், திருமணம் முதலிய சமூக நற்காரியச் சடங்குகளிலும் இடம்பிடித்துக் கொண்டது. அக்காலத்தில் ஆலயச் சடங்குகளில் குரவையிடு வோர் கதவுதிறத்தல் நாள் முதலாக சடங்கின் நிறைவு நாள் வரையும் அந்த ஆலயங்களில் தங்கியிருத்தல் மரபாகும். இவ்வாறு தங்கியிருத்தலைக் ''கோயில் காத்தல்'' எனக் குறிப்பிட்டனர்.

ஆலயச் சடங்குகளில் பூசை வேளைகளில், ஊர்வலம், வீதியுலா என்ப வற்றின் போதும் திருக்கலியாணச் சடங்கு சாமர்த்தியச் சடங்கு போன்ற

சமூக நிகழ்வின் போதும் குரவை சிறப்பான இடத்தைப் பெற்றது. ஆலயங்களில் நேர் கடனைச் செலுத்துவதற்காகவும் குரவையிடுதல் நடைபெற்றது. பண்டைக்காலத்தில் குரவையிடுதலானது நடைபெற்றுக் கொண்டிருக்கும் நற்காரியச் செய்திகளை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கும் முறையாகவும் கைக் கொள்ளப்பெற்றது.

பெண்கள் குழுவாக நின்று தத்தமது வாய் இதழ்கள் இரண்டையும் குவித்து, நாக்கினை ஒடுக்கிச் சுருட்டி, மேனோக்கி வளைத்து, நாக்கின் நுனியால் நுனி அண்ணத்தையும் வாயின் இரு பக்கங்களையும் தடவும் போது உள்ளிருந்து வரும் வளியானது ஒருவகை ஒலியுடன் வெளியேறுகிறது. இது குரவை எனப் பெயர்பெறுகிறது. குரவையிடும் பொழுது மேல் உதட்டின் மீதுகையை வைத்துக்கொண்டு மடித்து நிற்கும் முழங்கைப் புறமாக இடது கையால் தொட்டவாறு நின்றிசைத்தல் இதன் ஒழுங்கு முறையாகும்.

இப்பிரதேச ஆதிவாசிகளான வேடர்களிடத்தும் குரவை நிகழ்வு காணப் பெற்றது. அவர்கள் இருபாலாரும் சேர்ந்தே குரவையை நிகழ்த்தினர். அவர்கள் தத்தமது தலைகளில் கலசம், வில், அம்புகள் என்பவற்றை வைத்துக் கொண்டு ஆடியதாக அறியமுடிகிறது (எதிர்மன்னசிங்கம், செ., 1976, பக்.57). குரவையானது மட்டக்களப்புப் பிரதேசத்தில் ஒலி எழுப்புதலையே குறித்து நிற்கிறது. பண்டைக்காலந் தொடக்கம் நடைபெற்றுவரும் குரவையானது மட்டக்களப்புப் பிரதேசத்தின் தனித்துவமும் சிறப்பும் மிக்கதான இசைக் கலையாக இருந்துவருகிறது.

## v. விளையாட்டுக்கள்

விளையாட்டுக் கலையானது மனித தோற்றத்தோடு ஆரம்பித்ததாகும். அது உள்ளத்துக்கும் உடலுக்கும் இன்பமும் ஆரோக்கியமும் வழங்குவதாக அமைந்தது. அது காலத்துக்கேற்ப விருத்தி பெற்றுள்ளது, பிரதேசத்துக்குப் பிரதேசம் வேறுபட்டும் அமைந்துள்ளது. மட்டக்களப்புப் பிரதேசத்தில் பாரம் பரியமாக நடைபெற்றுவரும் விளையாட்டுக்களிற் பல விளையாட்டுக்கள் தனித்துவமான பண்பாட்டு அம்சங்களைக் கொண்டமைந்துள்ளன.

### கொம்பு விளையாட்டு

மட்டக்களப்புத் தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுக் கலைகளில் ஒன்றாக கொம்பு விளையாட்டு காணப்படுகிறது. இது விளையாட்டாக மட்டுமன்றி கண்ணகி வழிபாட்டுடன் தொடர்புடைய சமய வழிபாட்டு முறையாகவும் இருந்து வருகிறது. இவ்விளையாட்டு மட்டக்களப்புப் பிரதேசத்தில் இடத்துக்

கிடம் சிறு மாற்றங்களுடன் நடைபெற்று வருகிறது. இக்கொம்பு விளையாட்டு எக்காலத்தில் தோற்றம் பெற்றதென்பதற்கான குறிப்புகள் எதுவும் இலக்கியங் களிலோ அல்லது வரலாற்று ஆய்வுகளிலோ காணப்படவில்லை. எனினும் Rober Knox அவர்கள் 1681 இல் இலங்கையின் வரலாற்றைப் பற்றி எழுதிய நூலில் இவ்விளையாட்டு கண்டியில் விளையாடப்பட்டதாகவும் பின்னர் கண்டியரசனால் அது தடைசெய்யப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். இவ் விளையாட்டைப் பற்றி சிறு விவரணம் குறிப்பிட்டாலும் இதற்கு வழங்கிய பெயர்பற்றிக் குறிப்பிடவில்லை.

### கட்சிப் பிரிவு

கொம்பு விளையாட்டு தமிழர்களின் பொழுது போக்கு மட்டுமல்லாது கலைப் பண்புகளைப் பாதுகாக்கும் ஊடகமாகவும் விழுமியங்களையும் சமயச் சார்புகளையும் கொண்டதாகவும் அமைந்துள்ளது. கொம்பு விளையாட்டில் வடசேரி தென்சேரி என இரு கட்சிகள் பங்கு பெறுகின்றன. கட்சியானது வாரம், சேரி ஆகிய சொற்களில் வழங்குகின்றது. தாய் வழியைக் கொண்டு தன் குடி கோத்திரத்தைப் பின்பற்றும் மட்டக்களப்புத் தமிழர் சமுதாயம் அனைத்துச் செயற் தன்மையிலும் தாய் மொழி மரபையே கைக்கொள்கிறது. ஆனால் கொம்பு விளையாட்டின் போது மட்டும் தந்தை வழியைப் பின்பற்றி வருகிறது. தந்தை எக்கட்சியோ பிள்ளைகளும் அக்கட்சியே. கொம்பு விளையாட்டுக் காலத்தில் தங்களது குலம் குடிகளை மறந்து, சண்டை சச்சரவுகளை மறந்து சேரி வழியில் ஒன்று பட்டு நின்று விளையாடும் பண்பாட்டைக் காணமுடிகிறது.

### ஆரம்ப நாளும் போர்த்தேங்காய் உடைத்தலும்

கொம்புவிளையாட்டு பெரும்பாலும் கோயில் வீதிகளில் சுபவேளையில் ஆரம்பமாகும். கொம்பு விளையாட்டின் ஆரம்ப நாளில் எதிரெதிராக இரு சேரிகளில் இருந்தும் தலா ஒருவர் வீதம் இருபிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவர். அன்று மாலை வேளையில் விசேட பூசையின் போது இரு சேரிகளும் ஒவ்வொரு கொம்பெடுத்து ஆலயக் கருவறையில் நேர்த்தியாக வைப்பர். மேற்படி இருவரும் தங்கள் கைகளினால் வலுவான சிரட்டையை உடைய இரு தேங்காய்களை உருட்டி அனுப்புவதன் மூலம் ஒவ்வொன்றாய் உடைப்பர். எக்கட்சியினர் கூடிய எண்ணிக்கைத் தேங்காய்களை உடைக் கின்றார்களோ அக்கட்சி வெற்றியடைந்தவர்களாவர். இது போர்த்தேங்காய் உடைத்தல் எனப்படும்.

இதன் பின்னர் முதற்படியாக இருகொம்புகள் எடுத்து ஒன்றோடு ஒன்றுடன் கொழுவி கொம்புமுறித்தல் நடைபெறும். கொழுவி முறிப்பதால் கொழுகொம்பு எனப் பெயர்பெறும். இக்கொழுகொம்பு விளையாட்டுக் கொம்பு எனவும் அழைக்கப்பெறும். முதலாம் நாளில் அம்மனின் கட்சிக்கு வெற்றி கொடுப்பதற்காக கோவலன் கட்சிவிட்டுக் கொடுப்பது மரபாக இருந்து வருகிறது. இதன் பின்னர் நடைபெறும் விளையாட்டுக் கொம்பு முறிவில் தினமும் முறையே கொம்புத்தட்டுக் கொம்பு, கூடாரக் கொம்பு, ஏடகக் கொம்பு, தண்ணீர்க் கொம்பு என்னும் பெயர்களை உடையதாய் கொம்பு முறித்தல் நடைபெறும்.

### ஊருலா

இரண்டாவது நாள் முதலாக கொம்பு முறித்தல் போட்டி மனப்பான்மையில் நடைபெறும். வெற்றி பெற்ற சேரியினர் தமது சேரியின் பெயரைச் சொல்லி அது வெற்றி பெற்றதாகக் கூறிச் சத்தமிடுவர். வெற்றியின் மகிழ்வினால் ஆடிப்பாடிச் செல்வர். தினமும் கொம்பு முறிந்த பின்பு இரவுதோறும் இரண்டு சேரிக்கும் பொதுவாக அலங்கரிக்கப்பட்ட பூம்பந்தல் தட்டில் (கொம்புத் தட்டில்) கொம்புகளை வைத்து ஊருலாச் செல்வர். ஒரு வாரத்தின் பின்னர் தனித்தனியாக ஊருலா நடைபெறும். ஊருலாவில் கண்ணகி சிலையும் இடம்பெறும். ஊருலாவின் போது வெற்றிப்பாடல்கள் கண்ணகி அம்மன் அகவல்கள், உடுக்குச்சிந்து முதலான காவியங்கள் பாடப்பெறும். உடுக்கு, சங்கு, மத்தளம் முதலிய வாத்தியங்கள் இசைக்கப்படும். வினோத உடைகளிற் பல வேடங்களைத் தாங்கியும் வருவர். சன்னதம் கொண்டு ஆடுவோரும் பூசாரிமாரும் சூழ்ந்துவருவர். ஊரின் முக்கிய சந்திகளில் பூந்தட்டை வைத்து சிறிது நேரம் வசந்தன் ஆடல், கும்மி, கரகாட்டம் முதலியவை நடைபெறும். கொம்பு விளையாட்டுக் காலத்தில் வசந்தன் ஆட்டம் முக்கிய பங்கு வகிக்கிறது. கொம்பு விளையாட்டும் வசந்தன் ஆட்டமும் பின்னிப் பிணைந்ததாகக் கூறப்படுகின்றது.

### தேரும் தேர்ப்புரையும்

கொம்பு விளையாட்டைத் தொடர்ந்து பத்தாவது நாளன்று ஏடகக்கொம்பு முறித்தல் நடைபெறும். அதற்கு முன்பாக இரு சேரியாரும் தத்தம் கொம்புகளை வைத்துப் பூசை செய்வதற்காகத் தேர், அத்தேரினை வைப்பதற்கான கூடம் ஆகியவற்றை அமைப்பர். கூடம் தேர்ப்புரை எனப்படும். தேர்ப்புரை என்பது தேர் இருக்குமிடம். தத்தமது தேரையும் தேர்ப்புரையையும் அழகுறச் செய்வர். வடசேரியினுடைய தேர்ப்புரை, ஏடகம் ஆகியவற்றின் முடிகள்

தென்சேரியினுடைய முடிகளிலும் பார்க்க உயர்ந்திருக்க வேண்டும் என்பது ஒழுங்குவிதியாகும்.

**ஏடகக் கொம்பு முறிப்பு**

பலகையினாற் செய்யப்பெற்ற சிறுதேர் ஏடகம் எனப்படும். கொம்பு முறித்தலில் பயன்படுத்தப்படும் ஐந்து வகையான கொம்புகளில் ஒன்றான கொம்பை ஏடகத்தில்வைத்து பூசைசெய்வதனால் அக்கொம்பு ஏடகக்கொம்பு என அழைக்கப்பெறலாயிற்று. கொழுக்கொம்பு, கொம்புத் தட்டுக் கொம்பு, கூடாரக் கொம்பு, தண்ணீர்க் கொம்பு என்பனவும் காரணம் பற்றியெழுந்த பெயர்களேயாகும். ஏடகக் கொம்பு முறிக்கும் நாளன்று பெரும்பாலான மக்கள் கூடுவர். ஏடகக் கொம்பு ஏனைய கொம்புகளிலும் இருமடங்குக்கு குறையாத பருமனுடையதாக அமையும். ஏடகக் கொம்பை முறிப்பதற்கு முன்னர் பூசைவழிபாடு நடைபெறும். பின்னர் ஏடகக் கொம்பு வடத்தில் பூட்டப்படும். பூட்டப்பட்டு இழுக்கும்போது கொம்பு முறிந்தால் அவர்கள் காட்டும் வெற்றிப் பெருமிதம் சொல்லுந்தரமன்று. அன்றிரவு முழுவதும் ஆடலும் பாடலும் நிறைந்து விளங்கும்.

கொம்பு முறித்தலுக்கு மந்திரப் பிரயோகமும் நடைபெற்று வந்துள்ளது. வடசேரியைச் சேர்ந்த மந்திரவாதி தென்சேரிக் கொம்பை முறிப்பதும் தென் சேரியைச் சேர்ந்த மந்திரவாதி வடசேரிக் கொம்பை முறிப்பதும் வழக்காகும். பிரதானமான தத்தம் தாய்க் கொம்புகளுக்குப் பல மந்திரவாதிகள் கூட்டாகச் சேர்ந்து மந்திர உச்சாடனம் செய்வர். மந்திரப் பிரயோகச் சக்தியினால் கொம்பு குதித்தெழும்புவதாக இப்பிரதேச பெரியவர்களுடனான நேர்காணலில் தெரிவித்தனர். மந்திரவாதிகளின் வித்தாண்மையை அறியும் பரீட்சைக் களமாகவும் அமைந்துவிடுகிறது.

தாய்க்கொம்புகளுக்கான மந்திர ஆராதனை முற்றுப்பெற்றதும், பில்லியுடன் இணைத்துக் கட்டுவதற்காகத் தாய்மரத்தடிக்கு அக்கொம்பைக் கொண்டுவருவர். இது எழுந்தருளப்பண்ணல் எனப்படும். கொம்பைக் கொண்டுவருதலுக்கு தாய்க்குத் தலைமகனாகப் பிறந்த வாலிபன் தகுதி யுடையவன் என்னும் விதி கடைப்பிடிக்கப்பட்டது. அவ்வாலிபன் தலைப் பாகையுடன் வாய்ச்சீலை கட்டியநிலையில் அதனைத் தூக்கி வருவார். இவருக்கு இருபக்கங்களிலும் சமவயதொத்த இரண்டு வாலிபர்கள் பில்லியைப் பிடித்துவர முன்னாக மூன்று வாலிபர்கள் மடைகள் வைக்கப் பெற்ற மூன்று வட்டாக்களுடன் செல்வார்கள். இவர்களைச் சுற்றி அச்சேரியைச் சேர்ந்த பெருந்தொகையான மக்கள் சூழ்ந்து வருவர். இவ்வேளையில் குரவை ஒலிகளும் பாடல் ஒலிகளும் இடம்பெறும்.

முதலாம் நாளில் கொம்பு முறித்தலைப் போன்று இறுதிநாளும் அம்மனின் கட்சியான தென்சேரி வெற்றியடையும் பான்மையில் கோவலன் கட்சியான வடசேரிக் கட்சி விட்டுக்கொடுப்பது மரபாக இருந்து வந்துள்ளது. இறுதியாக வெற்றிபெற்ற தாய்க் கொம்பை கண்ணகை அம்மனாகப் பாவனை செய்து இரு சேரியாரும் ஒன்று சேர்ந்து வகுத்துக் கொண்டதற்கேற்ப தத்தமது வீதிகளின் ஊடாக உலா வந்து குறித்த இடத்தில் ஒன்று சேர்வர். பின்னர் ஒன்று சேர்ந்து தமது தேர்ப்புரை நோக்கிச் செல்வர்.

உலாவின்போது வீட்டுத்தெரு வாயிலில் (கடப்படியில்) அவ்வீட்டினரால் வைக்கப்பெற்ற கும்பநீரைக் கொண்டும் மஞ்சள்நீரைக் கொண்டும் அக் கொம்பை நீராட்டுவர். இறுதியாகக் கண்ணகிக்கு விசேட பூசைவழிபாடு புரிந்து குளிர்த்திப் பாடல் இடம்பெறும். அப் பாடல்கள் கண்ணகியம்மனை உலகம் நல்லமுறையில் இயங்க அருள் வழங்குபவளாகக் காட்டுகின்றன. பல வருடங்களில் வெற்றிபெற்ற பல கொம்புகளையும், வெற்றிபெற்ற தாய்க்கொம்புகளையும் பூசையில் வைத்து பூசைசெய்து வழிபடுவர்.

இத்தகைய கொம்பு விளையாட்டானது மண்டூர், தம்பிலுவில், காரைதீவு, களுதாவளை, கல்லாறு, தேற்றாத்தீவு, வந்தாறுமூலை, சித்தாண்டி, மகிழடித் தீவு போன்ற பல கிராமங்களில் சிறப்பாக நடைபெற்று வந்துள்ளன. கொம்பு விளையாட்டுக் காலத்தில் தெருக்களெல்லாம் புனிதப்படுத்தப்படும். சைவ உணவருந்தி உள்ளமும், உடலும் தூய்மை பொருந்திக் காணப்படுவர். இவ்வாறு கொம்பு விளையாட்டானது மட்டக்களப்புத் தமிழரின் பாரம்பரிய பண்பாட்டைப் பேணிப் பாதுகாக்கும் கலைகளில் ஒன்றாக இருந்து வந்துள்ளது.

கொம்பு விளையாட்டின் போது கொம்பு, பில்லி, அடை, ஆப்பு, நெஞ்சடிப் பலகை, தாய் மரம், செவ்வாய்க் குற்றி, தாய்மர வளையம், செவ்வாய்க் குற்றி வளையம், அரிப்பு, வடம்,வடம் தாங்கி, தேர் என்பன பிரதான உபகரணங்களாக உள்ளன. இவ்வுபகரணங்களின் மூலங்களாக மரங்களும் கொடிகளும் நார்களும் விளங்குகின்றன.

### கொம்பு

கொம்பு என்பது மரத்தில் வளைந்த பகுதியைக் குறிக்கும். இது ''ட'' வடிவில் அமைந்திருக்கும். கொம்பு விளையாட்டுக்காக கரையாக்கு (கரு வீரம்), விழினை, விடத்தல் முதலிய மரங்களில் வைரம் செறிந்த பகுதிகளிலுள்ள கொம்பை வெட்டி எடுப்பர். கொம்பின் பகுதிகளை தலை, கழுத்து, மார்பு, கடைக்கால் என நான்காகக் கொள்வர். அதாவது

மேற் பகுதி - தலை
வளைவுப் பகுதி - கழுத்து
கொம்புகள் பொருந்துகின்ற பகுதி - மார்பு
அதன் கீழ்ப் பகுதி - கடைக் கால்

எனக் கொள்ளப்படும். வெட்டி எடுத்த கொம்பின் தலைப்பகுதியைச் சுமார் ஒரு அடி நீளமுள்ளதாகவும், கடைக் காலை சுமார் ஒன்றரை அடி நீளமுள்ள தாகவும் வெட்டி எடுப்பர்.

வட சேரியார்கொம்பு சுமார் 90 பாகைக்கு மேற்பட்ட வளைவுடைய தாகவும், தென் சேரியார் கொம்பு வட சேரியாரது கொம்பிலும் ஒடுங்கிய தாகவும் இருக்க வேண்டுமென்பது விளையாட்டு விதி முறையாகும். தென்சேரிக் கொம்பு உள் வளைந்ததாக இருக்க, வடசேரிக் கொம்பு தென்சேரிக் கொம்பிலும் பார்க்க சற்று நிமிர்ந்து இருத்தல் வேண்டுமென்பது நியதியாகும்.

விளையாட்டுக்கேற்றவாறு செய்து அமைத்த கொம்பை நெற் பட்டறை யினுள் அல்லது கொம்புப் பெட்டியுள் (கொம்பு வைக்கும் பெட்டி) வைத்து விளையாட்டுக் காலம் வரும் வரையிலும் பேணி வருவர். நெற் பட்டறை யினுள் வைக்கும் போது கொம்பு விளையாட்டுக் காலம் வரையிலும் பிரிக்கப்படாத நெற் பட்டறையாகத் தெரிந்து அக்கொம்புகளை வைத்துப் பேணுவர். நெற் பட்டறையினுள் வைப்பது சாலச் சிறந்ததாகக் கருதப்பட்டது.

கொம்பு முறித்தலில் கொழுகொம்பு (விளையாட்டுக் கொம்பு), கொம்புத் தட்டுக்கொம்பு, கூடாரக்கொம்பு, ஏடகக்கொம்பு, தண்ணீர்க்கொம்பு என்ற பெயர்களையுடையதாய் கொம்பு விளையாட்டில் கொம்பு இடம்பெற்று வந்துள்ளது.

### பில்லி

கொம்பின் இரு புறமும் அணைத்துக் கட்டும் கம்பு பில்லி என அழைக்கப் பட்டது. இது சுமார் நாலு அல்லது நாலரை அடி நீளமும் சுமார் ஒன்பது அல்லது பத்து அங்குலம் கொண்ட மரமாகும். பில்லிக்குரிய மரங்களாக கரையாக்கு, விளினை, முதிரை, விடத்தல் முதலியன பயன்படுத்தப்பட்டன.

### அடைகளும் ஆப்பும்

பில்லியுடன் சேர்த்துக் கட்டப்படும் கம்புக் கட்டு அடை எனப்படும். பில்லியின் நீளத்தை விட ஏறத்தாழ சுமார் ஆறு அங்குலம் குறைந்ததாக இருக்கும். இவை தாயடை, முதலாம் அடை, இரண்டாம் அடை எனக் கொம்பின் பருமனுக்கு ஏற்பப் பருமனைக் கொண்டிருக்கும். தாயடைக்கு நான்கு அங்குல அகலமும் நான்கு அங்குல நீளமும் உடைய நான்கு மரக்

குற்றிகள் சேர்த்துக் கட்டப்படும். அடைகளுக்காக முதிரை, கருங்காலி, காட்டுக் கொக்கட்டி, வெடுக்குநாறி முதலிய மரங்கள் பயன்படுத்தப்பட்டன. கொம்புகளுக்கேற்ப அடைகளின் நீளம் அதிகரித்து அமையும்.

உறுதி கொண்ட கருந்தெகிழங்கொடி, ஆத்திப் புரி போன்றவற்றினால் வரிந்து கட்டிய அடையை மேலும் உறுதியாகச் செய்யும் பொருட்டு ஒரு பக்கமாக கூராக்கிய ஆப்பினை இடையில் புகுத்தி தட்டுக் குற்றியினால் அடித்து இறுக்குவர்.

**நெஞ்சடிப் பலகை**

பின்னர் தாயடையை பில்லியுடன் சேர்த்துக் கட்டிய பின்பு பில்லியின் கீழும் மேலும் பலகை செருகப்படும். செருகப்படும் பலகையை நெஞ்சடிப் பலகை என்பர். இதற்குரிய பலகையை முதிரை, திருக்கொன்றை போன்ற வைரம் பொருந்திய மரங்களில் இருந்து செய்து கொள்வர்.

**தாய் மரமும் செவ்வாய்க் குற்றியும்**

பொது இடமொன்றிலுள்ள வயது முதிர்ந்த சுமார் ஆறு அல்லது ஏழு அடி சுற்றுக்குக் குறைவில்லாத பொருத்தமான மரத்தைக் கொம்பு கட்டுவதற்கு உரிய மரமாகக் கொள்வர். விளையாட்டு இடமும் மரமும் ஊரின் பெரியோர்கள் கூடிய பொதுக் கூட்டமொன்றில் தீர்மானித்ததாகும். கொம்பு கட்டும் இம்மரத்தை தாய் மரம் என அழைத்தனர். இம்மரங்கள் வம்மி, வாகை, ஆல், அரசு முதலிய மரங்களில் ஒன்றாக இருக்கும்.

அக்காலத்தில் கொம்பு விளையாடிய கிராமங்களில் கொம்புச் சந்தி, கொம்பு வம்மி என்னும் பெயர்கள் இன்றும் நிலைத்துள்ளன. உதாரணமாக காரைதீவுக் கொம்புச்சந்தி, களுதாவளைக் கொம்புச்சந்தி, மண்டூர்க் கொம்பு வம்மி போன்ற பெயர்களைக் குறிப்பிடலாம்.

பெரியகொம்புகளை முறிப்பதற்குப் பயன்படுத்தும் குற்றி செவ்வாய்க் குற்றி என அழைக்கப்பெற்றது. இறாணை, பனை போன்ற மரங்களின் குற்றியை ஆழமாக நட்டுப் பயன்படுத்தினர். சாயாதவாறு குற்றி நடப்படும். சில கிராமங்களில் செவ்வாய்க் குற்றி நடாமலே விளையாட்டு மேற் கொள்ளப்பட்டன.

**வளையம்**

மரவளையம், செவ்வாய்க்குற்றி வளையம் என இருவகையான வளையங்கள் பிரதானமாக பயன்படுத்தப்படுகின்றன. தாய்மரத்தைச் சுற்றிக் கொம்பு இழு வைக்காக வளையமாக போடப்படும் வளையம் மரவளையம் எனப்படும். கருந்தெகிழம் கொடிகள் பலவற்றை ஒன்றாகப்பின்னிப் பருமன் கூடிய

நிலையில் தாய்மரத்தைச் சுற்றிப்போடுவர். செவ்வாய்க்குற்றியைச் சுற்றி கொம்பு இழுவைக்காக மரவளையம் போல் போடப்படும் வளையம் செவ்வாய்க்குற்றி வளையம் எனப்படும். செவ்வாய்க்குற்றி வளையமானது மர வளையத்தின் உயரத்திற்குச் சமனாக இருத்தல் வேண்டும்.

### அரிப்புக்கள்

தென்சேரிக் கொம்பை தாய்மரத்தின் வளையத்துடனும் வடசேரிக்கொம்பை செவ்வாய்க்குற்றியுடனும் சேர்ப்பதற்கு அரிப்புக்கள் பயன்படுத்தப்படும். நறுவிளி, ஆத்தி போன்ற உறுதியான மர நார்களினால் திரிக்கப்பட்ட கயிற்றினால் அரிப்புக்கள் வளைக்கப்படுகின்றன. இது பல சுற்றுக்களை உடையதாகும்.

### வடந்தாங்கி

மரவளையத்திலும் செவ்வாய்க்குற்றி வளையத்திலும் உட்பக்கமாக இரண்டு அரிப்புக்களையும் கீழிருந்து மேல்நோக்கி எடுத்து இழுபடாதபடி மாட்டிவிடும் தடிகள் வடந்தாங்கி எனப்படும். செவ்வாய்க் குற்றியில் மேற்பகுதியில் துளையிட்டுச் செலுத்திய ஆப்பில் இரண்டுபக்கமும் கொழுவி இருகட்சி யாரும் தனித்தனியாக இழுக்கும் கயிறு ''கொம்பு வடம்'' எனப்படும்.

### கொம்புத் தூது பிடித்தல்

இரண்டு கொம்புகளும் சம அளவினதாகவும் ஒரே இன மரமாகவும் இருக்கப் பெறுவதுடன், பழைய கொம்புகளுடன் பழைய கொம்புகளையும் புதிய கொம்புகளுடன் புதிய கொம்புகளையும் உபயோகிக்க வேண்டும் என்னும் விளையாட்டு விதிக்கமைய இரு கட்சிகளின் கொம்புகளையும் போட்டிக்கு வைப்பதற்குத் தேர்ந்தெடுப்பர். இவ்வாறு பொருந்து நிலை பார்த்துப் போட்டிக்குத் தேர்ந்தெடுப்பதை கொம்புத் தூதுபிடித்தல் எனக் கூறுவர். ஒரு கொம்புத் தூதுபிடித்து விளையாடி முடிந்த பின்னரே அடுத்த கொம்புத் தூதுபிடிக்கப்படும்.

### விளையாடும் கொம்பின் பருமன்

கொம்பு விளையாட்டு ஆரம்பமாகி தாய்க்கொம்புவரை கட்டப்படும். கொம்புகள் எட்டுவிரலிடை அளவிலிருந்து அதிகரித்துச் செல்வதும் இருபது விரலிடையளவுக்குக்கூடிய கொம்பை தாய்க்கொம்பாகக் கொண்டு விளையாடுவதும் மரபாகும் (3 விரலிடை = 2 அங்குலம்).

### பசையும் பில்லி கட்டுதலும்

புரி வழுவாது இருப்பதற்காகப் புரிக்கும் பசை பூசப்படுகின்றது. கொம்பு, புரி ஆகியவற்றிற்குப் பூசப்படும் பசை பனிச்சங்காய் அல்லது பச்சைக் கடுக்காய், பச்சையரிசி, மஞ்சள் ஆகியவற்றை அரைத்துப் பெறப்பட்டதாகும். ஒருவர்புரியை இழுத்துப்பிடிக்க இன்னுமொருவர் பசை பூச மற்றவர் முறுக் கேறிய புரியால் வரிந்து இறுக்குவார். பசை பூசிக் காயவைத்த கொம்பினை நடுவில் வைத்துப் பசை பூசிய புரியால் சுற்றப்பட்ட பில்லியை அணைத்துக் கட்டுவர். அவ்வேளை ஒருவர் கொம்பையும் இருவர் பக்கங்களிலுமாகப் பில்லியைப் பிடித்திருப்பார்கள். இவ்வாறு வரிந்தெடுப்பதற்கு சில வேளை காலை எட்டுமணிக்குத் தொடங்கி பகலுணவு வேளை வரையும் நேரம் செலவாகும். கொம்பு வரிந்து இறுக்கியபின் அரிப்பு வளைத்தல் நடைபெறும்.

### அரிப்பு வளைத்தலும் கொம்பு பூட்டுதலும்

அரிப்பு சிறுவடம் எனவும் கூறப்படும். இவ்வரிப்பு என்னும் கயிற்று வளைவுகள் இருதட்டுக்களாக ஒன்றின் மேல் ஒன்றாக வைத்து வளைந்து அரிப்பு விலகாதிருக்க இடைக்கிடை ஐந்து அல்லது ஆறு கட்டுப்போடுவர். இந்த அரிப்பிலே தென்சேரிக் கொம்பு இணைக்கப்படும். இக்கொம்பிற் கொழுவிய வடசேரிக்கொம்பிலே இன்னோர் அரிப்பினைப் பிணைத்த இவ்வரிப்பிலே பெரிய வடம் ஒன்றினை மாட்டுவர். அரிப்பைக் கொம்புகளில் பூட்டுவதற்கு ஒவ்வொரு சேரியிலும் குறைந்த பட்சம் ஆறுபேர்வீதம் செயற்படுவர். இவர்களால் இறுக்கமாகப் பூட்டும் தன்மையைப்பொறுத்தே கொம்புமுறிதல் நிகழும் எனலாம். கொழுகொம்பு முதலிய ஐந்துவகைக் கொம்புகளும் முறையே ஒன்று, மூன்று, ஐந்து, ஏழு ஆக பதினேழு இணைக் கொம்புகள் பூட்டி இழுக்கப்படுதல் கொம்புவிளையாட்டின் முறைகளுள் ஒன்றாகும். (வி.சீ. கந்தையா, 1964).

### அடைகளும் ஆப்புக்களும்

இருகொம்புகளும் பூட்டப்பட்ட பின் அடைகட்டுவர். இப்பூட்டுகள் விலகாது இருப்பதற்காகவே அடை கட்டப்படுகிறது. முதற்கண் தாய் அடையைப் பில்லியுடன் சேர்த்து இறுக்கி திருக்குவைத்துக்கட்டப்படும். பின்னர் நெஞ்சடிப்பலகை புகுத்தப்படும். அதன் பின் அடைக்கம்புகளைத் தாய் அடையைச் சுற்றி மேலும் அடைகளை வைத்து இறுக்கித் திருக்கு வைப்பர். அதன் பின் இறுக்கப்பட்ட எல்லா அடைகளையும் வரிந்து திருக்குவைத்துக் கட்டுவர். இவை நெகிழாதிருக்க ஆப்புகளை வைத்து இறுக்கி அடிப்பர்.

### கொம்புகளைப் பொருத்துதலும் வடம் பூட்டுதலும்

அடைகளுடன் இணைக்கப்பட்ட கொம்புகளை இரண்டு சேரியினரும் தூக்கிச் சென்று மரவளையத்துடனும் செவ்வாய்க்குற்றி வளையத்துடனும் அரிப்பைத் தொடுத்து வடந்தாங்கிப் போடுவர். இதற்கு முன்பாகவே பத்துப் பன்னிரண்டு அடி அளவில் செவ்வாய்க்குற்றியை நட்டு தாய்மரத்தில் சரித்து வைத்திருப்பர். தாய் மரத்திற்கும் செவ்வாய்க் குற்றிக்குமிடையில் கொம்புகள் பொருத்தப்பட்ட பின்பு செவ்வாய்க்குற்றியின் மேற் கொழுவி இருக்கும் வடத்தைப்பிடித்து இரண்டு சேரியாரும் தனித்தனியாக முன்நோக்கி இழுப்பர். தாய்மரத்தின் இடப்பக்கமாக உள்ள வடத்தை வடசேரியாரும், வலப்பக்கமாக உள்ள வடத்தைத் தென்சேரியாரும் பிடித்து இழுப்பது விளையாட்டின் ஒழுங்கு விதியாகும்.

### அடை பிடித்தலும் விளையாட்டின் வெற்றியும்

இழுக்கும் போது நேர்நோக்கியதாக இழுக்க வேண்டும். அரிப்பில் பிணைத்த பெரு வடத்தினை இருசேரி மக்களும் இழுக்கும்போது பலரது இழுவைப் பொறுப்பினால் இரு கொம்புகளில் ஒரு கொம்பு முறிகின்றது. முறியாத கொம்பு வெற்றிக் கொம்பாகின்றது. கொம்பு இழுக்கும்போது தமது அடைகளைப் பிடித்து நின்று கொம்புகளை விலகாதிருக்குமாறு செயற்படுவர். அடைபிடிப் பதற்காக ஒவ்வொரு சேரியிலும் இருந்து குறைந்தது எட்டுப்பேர் வீதம் செயற்படுவர். தாய் மரத்தை அடுத்து மேல்கீழாகக் கொழுவப்பட்டிருக்கும் தென்சேரி அடையை உயர்த்திக் கொடுப்பதிலும், செவ்வாய்க்குற்றியின் அருகில் பக்கலாக கொழுவப்பட்டிருக்கும் வடசேரி அடையை அமர்த்திப் பிடிப்பதிலும் அடைபிடிப்போர் கண்ணும் கருத்துமாக இருப்பர். கொம்பு முறித்தலில் வெற்றி தோல்விகளை நிர்ணயிப்பவை:

i. முறியாத கொம்பு வெற்றிக்கொம்பாக விளங்க அச்சேரியினர் வெற்றியைக் கொண்டாடுவர்.

ii. எச்சேரிக்கொம்பு முறிகின்றதோ அச்சேரி தோல்வியடைந்ததாகக் கொள்ளப்படுகின்றது.

iii. தென்சேரியாரது அரிப்பு அறுதல், கொம்பிலிருந்து பில்லி நழுவுதல், மரவளையம் ஒடிதல் ஆகிய காரணங்களால் கொம்பு முறியாதுவிடில் தென்சேரி தோல்வியடைந்ததாகக் கொள்ளப்படுகின்றது.

iv. வடசேரியாரது அரிப்பு அறுதல், பில்லி நழுவுதல், செவ்வாய்க் குற்றியிலிருந்து வளையம் ஒடிதல் ஆகிய காரணங்களினால் கொம்பு முறியாது விடில் வடசேரி தோல்வியடைந்ததாகக் கொள்ளப்படுகின்றது.

v. செவ்வாய்க்குற்றி நிலத்தில் விழுவதற்கு, கொம்பு முறிதல், கொம்பு விலகல், அரிப்பு அறுதல் ஆகிய சந்தர்ப்பங்கள் காரணமாகின்றன. செவ்வாய்க்குற்றி நிலத்தில் விழுந்தால் செவ்வாய்க்குற்றியை மீளவும் நட்டுக் கொம்பு கட்டுவதில்லை. எனவே செவ்வாய்க்குற்றி நிலத்தில் விழுவதற்கு எச்சேரியினர் காரணமாய் இருந்தனரோ அச்சேரி தோல்வி யடைந்ததாகக் கொள்ளப்படுகின்றது.

vi. கொம்பு விளையாட்டின் போது இருகொம்புகளும் முறிவடையாத சந்தர்ப்பத்தில் அந்நிலை ஏற்படுவதற்குக்காரணமாய் இருந்த சேரி தோல்வியடைந்த சேரியாகக் கொள்ளப்படுகின்றது.

கொம்பு விளையாட்டு பெரும்பாலும் மூன்று வாரங்கள் கொண்டதாக நடப்பது வழக்கமாக இருந்து வருகின்றது.

கொம்பு விளையாட்டு இருகட்சிகளாகப் பிரிந்து விளையாடுகையில் ஒன்று கண்ணகி கட்சியாகவும் மற்றது கோவலன் கட்சியாகவும் கொள்ளப் பெறும். இதனை அம்மன் வாரம் எனவும், சுவாமி வாரம் எனவும் அழைப்பர். எனவே கண்ணகிக் கட்சி தாய்வழிக்கட்சியான தென்சேரி எனவும், சுவாமி - கோவலன் கட்சி தந்தைவழிக்கட்சியான வடசேரி எனவும் அழைப்பர்.

கொம்பு விளையாட்டுக்காகச் சேகரிக்கும் கொம்புகளை நெற்பட்டறை களில் வைத்து விளையாட்டுக்காலம் வரையும் பேணுவர். கோயில்களுக்குப் புதிதாகக் கொண்டுவரும் விக்கிரகங்களைக் கோயில் அல்லாத வீடு போன்ற பிற இடங்களில் வைப்பதானால் நெற்குவியலில் வைப்பது மரபாகும். அதனைப்போன்றே கொம்புகளையும் நெற்பட்டறையினுள் வைப்பர். இது மட்டக்களப்புத் தமிழர்கள் கொம்பை அம்மனின் குறியீடாகக் கொள்வதை உறுதி செய்கின்றது.

கொம்புவிளையாட்டில் போர்த்தேங்காய் உடைத்தல், கொம்பு முறித்தல், கொம்புத்தட்டு எடுத்தல், தேர்கட்டல், தேர்க்கலியாணம், குளிர்த்திபாடுதல் என்பன சமயம் சார்பான அம்சங்களாக விளங்குகின்றன.

**ஊஞ்சல் ஆடுதல்**

தமிழர்களுக்குச் சித்திரை வருடப்பிறப்பு, தைப்பொங்கல் என்பன குதூகல நாட்களாகும். தைப்பொங்கலைத் தை வருஷம் என்று கூறுவதே இப்பிரதேச வழக்காகும். சித்திரை வருடப்பிறப்பன்று சிறியவர் முதல் பெரியவர்கள் வரை காளையர் கன்னியர் எனப் பேதம் பாராது ஊஞ்சல் ஆடுவார்கள்.

வீடுகளிலும் பொது இடங்களிலும் ஊஞ்சல் ஆடல் நடைபெறும். பெருமரங்களில் உள்ள வடக்கு அல்லது தெற்கு நோக்கிச் செல்லும் பருத்த கிளைகளில் ஊஞ்சலுக்கான கயிறுகளை இரண்டாக மடித்து மேலும் இரண்டு

சம பங்குகளாகமடித்து மரக்கிளையில் இரண்டு மூன்று தடவைகள் சுற்றி நிலத்தை நோக்கி கயிறைத் தொங்கப் போடுவார்கள். இக்கயிறுகள் திருவாத்தி மரத்து நார், நறுவிலி மரத்து நார் ஆத்திமரத்து நார் முதலிய வயிரம் பொருந்திய நார் கொண்டு திரிக்கப்பட்ட சுமார் ஆறு அங்குலத்துக்கு மேற்பட்ட சுற்றளவையுடையதாக இருக்கும். நிலத்தை நோக்கிப் போடும் போது சுமார் பத்து அடி நீளத்தில் நிலத்தைத் தொடும்படி போடப்படும். அதில் ஒரு பக்கமாகத் தொங்கும் இருபகுதிக் கயிற்றையும் அடுத்த பக்கத்தில் தொங்கும் இருபகுதிக் கயிற்றையும் சம நீளமாகத் தொங்கவிடுவர். இவ்விரு பக்கங்களிலும் தொங்கும் கயிறுகளுக்கு ஆறு அல்லது எட்டுப்பேர் இருக்கும் அளவுடையதும் பாரம் தாங்கும் தன்மையுடையதுமான தடித்த முதிரை, பாலை போன்ற வயிரம் பொருந்திய ஒருபலகையை மாட்டுவர். பலகை நழுவாதிருக்க இருமுனைகளிலுமுள்ள இருபக்க கயிறுகளாலும் சுற்றப்படும்.

கயிற்றுக்கு வெளியே கால்வைக்கும் அளவில் உள்ள பலகையின் இருபக்க முனைகளிலும் இருவர் ஏறி கயிறைப் பிடித்து நிற்க ஏனையோர் பலகையில் இருப்பர். இருவர் நிற்கும் இருபக்க முனைகளும் ''முகரி'' என அழைக்கப்படும். அடுத்த சுற்றில் ஆடவுள்ளவர்களில் இருவர் ஊஞ்சலை நகர்த்துவர். அவ்வேளையில் முகரியில் உள்ள இருவரும் தமது கால்களால் உந்துவார்கள். உந்துதலை உன்னுதல் என்று அழைப்பர். இவ்வுந்துதலால் ஊஞ்சல் உயர்ந்து முன்னும் பின்னுமாகச் செல்லும். இவ்வேளையில் ஊஞ்சல் பாட்டுக்களைப் பாடிக் குதூகலிப்பர். உந்தி ஆடுதல் தொடரத் தொடர வேகமும் அதிகரிக்கும்.

அதற்கேற்ப வெவ்வேறு பட்ட சந்தங்களில் ஊஞ்சற் பாடல்கள் பாடப் படும். அப்பாடல்கள் பெரும்பாலும் ஒரு வரலாறு தழுவிய அந்தாதிப் பாடல்களாக அமைந்திருக்கும். சந்தத் தருக்கள் பாடலின் ஆரம்பத்திலும் இறுதியிலும் பாடப் பெறும் பாடல்களை ஊஞ்சலாடுவோரில் ஒருவர்பாட ஏனையோர்கள் சந்தத்தருக்களைப் பாடுவர். பெரும் பாலான பாடல்களில் பின்வருமாறு பாடப்பட்டு வந்துள்ளன.

i. *தனதன தந்தோம் தான தான தனந்தோம் தான*
*தான தெனாதன தான தெனாதென*
*தானே தந்தோம் தன தானினா.*
*வலிமிகு கண்டி ராசன் மாண்டுறு ஏலப்பிள்ளை மற்று*
*இனிய நல்முள்ளிக் கொடையுடன் இன்னும் பல வீரரோடு*
..........................................................................

ii. தந்தன தனாதன தனாதன
தானா தனாதந்த னாதந்த னானே.
வாருமடி தோழியரே நாங்க ளிருபேரும்.
வந்த சிவராத்திரியை சிந்தையுடன் நோற்போமே

iii. தந்தனத்தோம் தானத்தோம் - தான
தானத்தோம் தானானே.
சுந்தரஞ் சேர்ஐந்துகரத் - துங்கக்
கோமகனே வந்தருள்வார்.

என பாடப்பட்டு வந்துள்ளன.

## கழங்காடல்

கழங்காடல் பெண்களுக்குரிய விளையாட்டாகும். பண்டைக்காலத்தில் திருமணம் செய்யாத மட்டக்களப்புத் தமிழ் மகளிரிடத்தே காணப்பெற்ற விளையாட்டுக்களிற் தலைசிறந்த விளையாட்டாக இவ்விளையாட்டு விளங்கியது.

## விளையாட்டு உபகரணம்

இது அம்மானைக் காய்களைக் கொண்டு விளையாடப்பெற்றது. பெரும்பாலும் இத்தி மரத்தின் விழுதினாற் செய்யப்பெற்ற இருபந்துகளை அம்மானைக் காய்களாகப் பயன்படுத்தினர். இவற்றிற்கு வெவ்வேறு வர்ணங்கள் தீட்டப் பெறும். வர்ணங்கள் வெள்ளை, நீலம், மஞ்சள் நிறங்களால் அமைந்திருந்தன. இதனைப் பந்தாட்டம் எனக் கொள்ளலாம்.

## விளையாட்டு

இரண்டு விதமாக விளையாடப்படுகிறது. ஒருவிதமானது, இரு கைகளிலும் ஒவ்வொரு பந்தினை வைத்துக்கொண்டு ஒரு கையிலிருக்கும் பந்தை மேலெறிந்து, எறிந்தபந்து திரும்பி வரும்போது பிடிக்கப்படும். மேலெறிந்த பந்து திரும்பி வருவதற்குள் மற்றக் கையிலிருக்கும் பந்தையும் மேலேறிவர். இவ்வாறு இரு கைகளும் எறிதலும் பிடித்தலுமாக மாறி மாறிச் செயற்படும்.

மற்றையது, மூன்று பந்துக்களைக்கொண்டு விளையாடுவதாகும். ஒரு பெண் தனது இருகைகளிலும் இரு பந்துகள் இருக்கவும் ஒருபந்து மேலே சென்றுவரத்தக்கதாக விளையாடுவர். இங்ஙனம் மூன்று பந்துகளும் சுழற்சி முறையில் விளையாட்டில் பயன்படும்.

கையிலிருக்கும் பந்தில் ஒன்றை மேலே வீசி எறிந்து பிடிக்கும்போது பந்து கீழே விழுந்தால் அவர் ஆட்டமிழப்பார் மற்றவர் விளையாடுவார், மூன்று மகளிர்சேர்ந்த குழுவாக ஒருவர்பின் ஒருவராக விளையாடுவது

வழக்கமாகும். ஒவ்வொருவரும் தனது ஆட்டத்தில் எத்தனை தடவைகள் பந்தை வீசி கைக்கொண்டார்களோ அவை ஆட்ட எண்ணிக்கையாகும். கூடிய எண்ணிக்கையைப் பெற்றவர் வெற்றி பெற்றவராகக் கருதப்படுவார்.

கழங்காடுதலை பண்டைத் தமிழரின் வரிக்கூத்தின் இனமாகக் கொள்ளப் படுகிறது. அது சில மாற்றங்கள் பெற்று கழங்காடுதலாக விளையாடப்பட்டு வருகிறது. எடுத்துக்காட்டாக சீவக சிந்தாமணியில் விமலையார் இலம்பகத்தில்

*அங்கையந் தலத்தகத்த ஐந்து பந்தமர்ந்தவை*
*மங்கையாட மாலைசூழும் வண்டுபோல வந்தவுடன்*
*பொங்கி மீதெழுந்து போய்ப்பிறழ்ந்து பாய்தலின்றியே*
*செங்கயற்கண் புருவந்தம்முள் உருவஞ்செய்யத் திரியுமே.*

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு பண்டைக்காலத்து தமிழ் மகளிர்ஆடிய விளையாட்டு மட்டக் களப்புத் தமிழ் மகளிரிடத்தே தொடர்ந்து ஆடப்பெற்று வந்துள்ளதாக அறிய முடிகிறது.

## மொச்சல் விளையாட்டு

மொச்சல் விளையாட்டைச் சிறுமியர் முதல் வளர்ந்தோர் ஈறாகப் பெண்கள் விளையாடிவந்தனர். மொச்சல் விளையாடலை மொச்சையடித்தல் எனவும், கல்லுக்கொத்தி எனவும் கூறுவர். மொச்சை, மொச்சல் என மருவி வழங் கலாயிற்று எனக்கூறுவாரும் உளர் (முருகேசு, ப., 1976, பக்46). பெண்கள் நிலத்தில் அமர்ந்திருந்து விளையாடும் விளையாட்டுக்களில் இதுவும் ஒன்றாகும். குறைந்தது இருவராகவும், கூடியது நால்வராகவும் கொண்டு விளையாடுவோரின் எண்ணிக்கை அமையும்.

ஐந்து, ஏழு, ஒன்பது, பதினொன்று என்னும் எண்ணிக்கையில் ஒன்றைக் கொண்டதான புளியம்பருப்புக்கள், முள்முருக்கம்பருப்புக்கள் போன்ற பருப்புக்கள் அல்லது அப்பருப்புக்களின் பருமனை ஒத்ததான சிறியகற்கள் கொண்டு விளையாடுவர். பெரும்பாலும் ஐந்து கற்களை கைக்கொள்வர். பதினொரு கற்கள் விளையாட்டில் முதிர்ச்சியடைந்தவர்களால் மட்டும் கைக்கொள்ளப்படும்.

விளையாட்டுக் குழுவில் ஒருவர்தனது விளையாட்டுக்காக வசதியான கையினால் அக்கற்கள் அனைத்தையும் சேர்த்து எடுத்து சுமார் ஒரு அடி உயரத்துக்கு மேற்படாதவாறு மேலே வீசி எறிவார். அக்கற்கள் திரும்பி வரும்பொழுது அப்புறங்கையில் அவற்றைத் தங்கவைப்பார். தங்கவைக்கும் வேளையில் சில கற்கள் கீழே விழ, சில கற்கள் புறங்கையில் இருக்கும். புறங்கையில் உள்ளஅதனை புறங்கையால் மேலே வீசி அவற்றை உள்ளங்

கையால் பிடிப்பார். பிடிபட்டவற்றுள் ஒன்றைக் கையில் வைத்துக்கொண்டு ஏனையவற்றை நிலத்தில் வேறாக வைப்பார்.

பின்னர் கையில் வைத்துக்கொண்ட ஒரு கல்லை மேலே எறிந்து, அதுதிரும்ப பிடிப்பதற்கு முன் நிலத்திற் கிடந்த கல்லை எடுத்து, திரும்பிவரும் கல்லைப் பிடிப்பார். நிலத்திற் கிடந்த கல்லைக் கொத்தி எடுக்கும்போது ஒவ்வொன்றாகக் கொத்தி எடுப்பார். இவ்வாறு கொத்தி எடுக்கும் கற்கள் நிலத்தில் வேறாக வைக்கப்படும். ஒவ்வொரு தடவையும் ஒருகல் எறிவதும் கீழே கிடப்பவற்றைக் கொத்தி எடுப்பதும், எறிந்தகல்லைப் பிடிப்பதுமாக விளையாட்டு நடைபெறும்.

அக்கற்களைக் கொத்தி எடுக்கும்போது மற்றக் கல்லில் கைபடாதவாறு ஒவ்வொன்றாய் எடுப்பதும் வாரியெடுப்பதும் வழக்கமாகும். வாரியெடுப்பது விளையாட்டில் நன்கு பயிற்சி பெற்றவராலேயே சரியாக எடுக்கமுடியும். ஒன்றுடன் ஒன்று சேர்ந்துகிடக்கும் கல்லை எடுக்கும் போதுதான் பெரும் பாலும் இவ்வாறு நடைபெறும்.

இம்முறையில் விளையாடும் மொச்சல் விளையாட்டு சற்றுவேறுபாடுடன் வேறுமுறையிலும் விளையாடப்படுகிறது. அதாவது, நிலத்திற் கிடக்கும் கற்களை முதலில் ஒவ்வொன்றாக மூன்று கற்களைக் கொத்தி எடுக்கப்பட்ட பின்பு ஏனைய கற்களைச் சேர்த்து வாரியெடுக்கும் நிலை காணப்படுகிறது. இம்முறையில் வாரியெடுக்கும் நிலை கடைப்பிடிக்க வேண்டிய நியதியாகும். முதற் கூறப்பட்ட முறையில் வாரியெடுக்கும் நிலை விளையாடுபவரின் விருப்பத்தைப் பொறுத்ததாகும். பெறப்படாத கல்லில் கைபட்டால் அல்லது மேலெறிந்த கல் பிடிபடாது கீழே விழுந்தால் அவர்தனது ஆட்டம் இழந்த வராகக் கருதப்படுவார். இவ்வாறு மூன்று தடவைகள் ஆட்டம் இழக்கப் பட்டதும் மற்றவர் விளையாடுவார்.

## கிட்டிப்புள்ளு

ஆண்களுக்குரிய விளையாட்டாகக் கிட்டிப்புள்ளு இருந்து வருகிறது. இது கிட்டியடித்தல் எனவும் சொல்லப்படுகிறது. இவ்விளையாட்டை இரண்டு கட்சிகளாகப் பிரிந்து விளையாடுவர். ஒரு தடியை சுமார் ஒருமுழ நீளமான தாக வெட்டி எடுத்து, உருளை வடிவாகச் செய்து, ஒருபக்க அந்தத்தைச் சீவிக் கிட்டியாகவும் இன்னுமோர்தடியை சுமார் நான்கு அல்லது ஐந்து அங்குல நீளமானதாக வெட்டி எடுத்து, உருளை வடிவாகச் செய்து, இருபக்க அந்தத்தையும் கூராக்கிப் புள்ளாகவும் எடுத்துக்கொள்வர். கிட்டியை கிட்டிப்பொல்லு எனவும் கூறுவர்.

நிலத்தில் சுமார் ஆறு அங்குல நீளமானதும் அரை அங்குல ஆழமானது மான குழியில் குறுக்காகப் புள்ளை வைத்து கிட்டியால் ஒருவர் உந்துவார். உந்தப்பட்டுச் செல்லுகின்ற புள்ளை எதிர்க் கட்சியிலுள்ள ஒருவர் தடுத் தெடுத்து உந்துக்குழியை நோக்கி எறிவார். குழியை நோக்கி வருகின்ற புள்ளை உந்தியவர் தனது கையிலுள்ள கிட்டியால் அடிப்பார். குழியில் அப்புள்ளு விழுந்தால் அல்லது கிட்டியில் பட்டுவிழுந்தால் அல்லது வருகின்ற புள்ளு கிட்டியால் அடித்துச் செல்லுகின்ற வேளை அது நிலத்தில் விழுமுன் எதிர்க்கட்சியிலுள்ள ஒருவரால் பிடிக்கப்பட்டால் உந்தியவர் ஆட்டம் இழப்பார்.

குழியில் நின்று அடித்துத் தடுத்த புள்ளை நிலத்தில் வைத்து அதன் ஒரு முனையைக் கிட்டியால் அடித்துயர்த்துவார். அது உயரும்போது அது தூரத்தில் செல்லத்தக்கவாறு மீண்டும் அதனை அடிப்பார். உயர்ந்த நிலையில் அடிக்கப்படாது விட்டால் மீண்டும் அவ்வாறே முனையில் அடித்து உயர்த்துவார். இவ்வாறு அவர்அடிப்பதற்கு மூன்று தடவைகள் சந்தர்ப்பம் வழங்கப்படுவது நியதியாக உள்ளது. மேற்படி அடிக்கப்பட்ட புள்ளு சென்று விழுந்த தூரத்திலிருந்து உந்துகுழி வரையும் கிட்டியால் அளப்பர். இவ்வாறு புள்ளை உந்தும் கட்சியிலுள்ள அனைவரும் உந்தி விளையாடி அளந் தெடுத்த எண்ணிக்கைகளைக் கூட்டி மொத்தம் காண்பர். கிட்டியின் மொத்த எண்ணிக்கையின்படி உந்துகுழியிலிருந்து கிட்டியால் புள்ளை அடித்துச் சென்றுமுடிப்பர். ஒவ்வொரு அடியின் போதும் புள்ளு விழும் இடத்திலிருந்து தொடர்ந்து அடித்துச்செல்லப்படும். உதாரணமாக நூறு மொத்த எண்ணிக்கை யாயின் நூறு தடவைகள் கிட்டியால் அடித்துச் சென்று முடிவெய்துவர். முடித்த இடத்திலிருந்து உந்துகுழி வரை எதிர்க்கட்சியினரில் ஒருவர் மூச்சை விடாது பாடிக்கொண்டு வருவார். பாடும் பாடல் அதற்கேற்றவாறு அமைந் திருக்கும். அவர்மூச்சை விட்டதும் அவரது கட்சியிலுள்ள மற்றவர்பாடுவார். இவ்வாறு உந்துகுழி வரை பாடிச்செல்வர். உதாரணமாக அவர்கள் பாடுகின்ற பாடல்கள்:

i) ஆலையிலே சோலையிலே
ஆலம்பாடிய சந்தையிலே
கிட்டிப்புள்ளும் பம்பரமும்
கிறுக்கியடிக்கப் பாலாறு
பாலாறு பாலாறு. (முருகேசு, 1976, பக்.48).

ii) கீழாறோலை மேலாறோலை எண்ணிப் பார்த்தால் பதினாறோலை
கிட்டிப் புள்ளும் பம்பரமும் கிறுகியடிக்கப் பாலாறு பாலாறு.
(நாட்டார்பாடல்கள், 1984, ப.37).

**புள்ளுக்கிட்டி**

ஆண்கள் இரு கட்சியாகப் பிரிந்து புள்ளுக்கிட்டி விளையாடுவர். பூவரசு, முதிரை, விண்ணாங்கு போன்ற மரங்களில் ஒன்றிலிருந்து சுமார் ஒரு முழ நீளமான பொல்லின் வடிவமைப்பில் கிட்டியையும், இத்திமரத்தின் விழுது கொண்டு செய்யப்பட்ட பந்து போன்ற வடிவமைப்பில் புள்ளையும் கொண்டு விளையாடுவர்.

கிட்டியின் சுற்றிலும் சற்றுப் பெருத்த குழியொன்றை அமைத்து அதில் புள்ளை வைத்து முன்னோக்கி உந்துவர். உந்தப்பட்ட புள்ளு செல்லும் பொழுது எதிரணியினர் அதனைப் பிடிப்பர். பிடிபட்டதும் உந்தியவர் ஆட்டம் இழப்பார். இதனால் புள்ளு பிடிபடாமல் செல்லுதலுக்காக, உந்துபவர் புள்ளு மேலெழும்பாது நிலத்தில் மருவிச் செல்லத்தக்கவாறு உந்துவார். புள்ளை எடுத்துக் கிட்டியில் எறிய, எறி தவறும் பட்சத்தில் உந்திய அணியினர் கிட்டிபோடும் நிலையைப் பெற்றுவிடுவார்கள். கிட்டி போடுதல் என்பது கிட்டியைத் தூரத்துக்கு எறிந்து, அக்கிட்டிக்குப் புள்ளால் எறிதலாகும்.

கிட்டிபோட்டு செல்லும்பொழுது கிட்டியிற்பட்ட புள்ளு மேலெழும் பினால் எதிரணியினர் புள்ளைப்பிடித்து உந்துகுழியை நோக்கி எறிவர். எறிந்தபுள்ளு விழுந்த இடத்திலிருந்து உந்தும் அணியினர் மீண்டும் கிட்டி போட்டுச் செல்வார்கள். உந்தும் அணியிலுள்ள அனைவராலும் கிட்டி போடப்படும். இறுதியாகக் கிட்டிபோட்ட இடத்திலிருந்து எதிரணியினர் ''ப்பூ ப்பூ'' என்னும் சத்தத்துடன் மூச்சுவிடாமல் ஓடிச்சென்று உந்து குழியை அடையவேண்டும். ஓடிச்செல்பவர் இடையில் மூச்சை விட்டால் விட்ட இடத்திலிருந்து மற்றவர் ''ப்பூ ப்பூ'' என்ற சத்தத்துடன் மூச்சைவிடாது ஓடிச்செல்லவேண்டும். அவரும் மூச்சைவிட்டால் அடுத்தடுத்து வருபவரும் அவ்வாறே ஓடிச்சென்று உந்து குழியை அடைவர்.

**வட்டக்காவடி**

ஆண்களுக்குரிய விளையாட்டுக்களில் இதுவும் ஒன்றாகும். இது வட்டக் கோடு எனவும் கூறப்படும். இரு அணிகளாகப் பிரிந்து விளையாடுவர். அணியிலுள்ள தொகையினருக்கு ஏற்றவாறு விளையாடத்தக்க வட்டம் ஒன்றை அமைத்து ஒரு அணியினர் வட்டத்தினுள்ளும் மற்ற அணியினர் வட்டத்தின் வெளியிலும் நிற்பர். வட்டத்தின் வெளியிலுள்ள அணியினரில் ஒருவர் வட்டத்திற்குள் சென்று அங்குள்ள ஒருவருக்கு அடிப்பார். அவ் வேளையில் அவர்கள் சேர்ந்து பிடித்து வட்டத்துள் வைக்க முயலுவார்கள். பிடிபடாமல் அடித்துவிட்டு வெளியேறினால் அடிபட்டவர் வெளியேற்றப் படுவார்.

அடிக்கச் சென்றவர் பிடிபட்டால் வெளியேற அல்லது வட்ட எல்லையைத் தொடுவதற்கு அவர்முயலுவார். அம்முயற்சியில் அவர்வெற்றி பெற்றால் அவர்மீண்டும் சென்று அடிப்பார். பிடிபட்டவரின் முயற்சி பலிதமாகாவிடில் பிடிபட்டவரோ அல்லது அவரின் அணித்தலைவரோ ''விடு'' என்று கூறும்வரை அவரை அமுக்கிவைத்திருப்பர்.

**கிளித்தட்டு**

இளைஞர்களால் இரண்டு பிரிவுகளாகப் பிரிந்து கிளித்தட்டு விளையாடப் பெற்று வந்துள்ளது. ஐந்து கோடுகள் கீறி, நான்கு அறைத்தட்டுக்கள் அமைக் கப்படும். கிளித்தட்டு விளையாட்டை தட்டுக்கோடு எனவும் கூறப்படும்.

இத்தட்டுக்களின் எல்லைகளாகப் பிரித்துச்செல்லும் நடுக் கோட்டில் தலைவர் நிற்பார். இவர் கிளி எனக்கொள்ளப்படுவார். தட்டுக்கள் கிளியினுடைய தட்டுக்களாகும். அதனால் அத்தட்டு கிளித்தட்டு எனலாயிற்று. மற்றப் பிரிவினர் வெளியில் நிற்பர். விளையாட்டுத் தொடங்கியதும் வெளியில் நிற்பவர்கள் கிளித்தட்டுக்குள் செல்ல எத்தனிப்பர். உள்ளே நிற்பவர்தடுப்பர். ஊடுருவிச் செல்லும் சந்தர்ப்பத்தில் தடுப்பவரால் அடிக்கப் பட்டால் அவர்கள் ஆட்டம் இழந்தவராகக் கருதப்படுவர். பின்னால் இருந்து முன்னோக்கி வந்து கிளியைத் தாண்டிச் சென்றுவிட்டால் தாண்டியவர்களது பிரிவு வெற்றி பெற்றதாகக் கொள்ளப்படும்.

பின்னாலிருந்து முன்னோக்கி வருவோர் பழம் எனவும், முன்னாலிருந்து பின்னோக்கிச் செல்வோர் காய் எனவும் அழைப்பர். உட்கோடு ஒன்றில் பழமும் காயும் சந்தித்தல் விளையாட்டு நியதிக்கு முரணாகும். அக்காலத்தில் கிராமங்கள் தோறும் இவ்விளையாட்டு பிரபல்யம் அடைந்திருந்ததாக அறியமுடிகிறது (ஆ. நாகமணி, 2007).

**பிள்ளையார் கட்டை**

பிள்ளையார்கட்டை இளைஞர்களால் இரு பிரிவினர்களாகப் பிரிந்து நின்று விளையாடும் விளையாட்டாகும். ஒரு செங்கல்லை நிலத்தில் செங்குத்தாக நிறுத்தி அதன்மேல் வட்டமான ஏழு, அல்லது ஒன்பது ஓட்டுத்துண்டுகளை (ஓட்டுச்சில்லிகளை) அடுக்குவார்கள். செங்கல்லும் ஓட்டுத்துண்டுகளும் சேர்ந்திருக்கும் பொழுது அது பிள்ளையார்கட்டை அல்லது சில்லுக்கட்டை என்னும் பெயரை ஏற்கிறது.

எறி நிலைய எல்லையிலிருந்து பிள்ளையார் கட்டைக்குப் பந்தை எறிவதற்கு முதலில் பந்தை எறிவதற்குத் தெரிவான பிரிவிலிருந்து ஒருவர் பந்தைக் கட்டைக்கு எறிவார். இந்த எறிநிலை எல்லைக்கும் பிள்ளையார்

கட்டைக்கும் இடைத்துரத்தை இருபகுதியினரும் சேர்ந்து ஏலவே தீர்மானித்துக் கொள்வர். எறிபட்டதும் பிள்ளையார் கட்டை சாய்ந்துவிழ ஓட்டுச் சில்லுகள் நிலத்தில் சிதறும். மற்றப் பிரிவினர் பழையபடி பிள்ளையார் கட்டையை அமைக்க வேண்டும்.

எனவே, அவர்கள் முன்பிருந்தபடி அமைக்கும் பொழுது எதிர்ப் பிரிவினர் அவர்களுக்குப் பந்தால் எறிவார்கள். அமைத்து முடிக்கும் வரை பந்தால் எறிதல் நடைபெற்றுக்கொண்டே இருக்கும். எறியும் பந்தை எறி வாங்கும் பிரிவினருள் ஒருவர் பிடித்துக்கொண்டால் கட்டையை அமைக்கும் செயல் நிறுத்தப்படும். ஏனெனில் பந்தைப் பிடித்ததும் பிள்ளையார் கட்டையை முன்பிருந்தவாறு அமைத்துவிட்டதாகக் கருதப்பட்டு விடுகிறது. பிள்ளையார் கட்டையை முன்பிருந்தவாறு அமைத்துவிட்டாலும் அல்லது பந்தைப் பிடித்துவிட்டாலும் அவர்கள் கூக்குரலிட்டு மகிழ்ச்சி ஆரவாரம் செய்வர்.

**கண்கட்டிப் பிடித்தல்**

விளையாடுபவர்கள் வட்டமாக நின்றுகொண்டு தம்மில் ஒருவரை வட்டத்தின் நடுவில் நிறுத்துவர். விளையாடுவோர் அனைவராலும் கொள்ளப்பட்ட ஒழுங்கின்படி இவர் முதலாவதாக கண்களைக் கட்டுவதற்கு உரியவராகின்றார். இவர் கண்களைக் கட்டிக்கொள்ள வேண்டும். வட்டத்திலிருப்பவர்கள் வெவ்வேறு விதமான ஒலிகளை எழுப்புவர்.

கண்கட்டப்பட்டிருப்பவர் சத்தம் வருமிடத்திற்கு ஓடிப்போய் ஒருவரைப் பிடிக்கவேண்டும். அவர்கள் பிடிபடாது தப்பித்துக் கொள்வார்கள். பிடிபட்டால் பிடிபட்டவர் கண்களைக் கட்டிக்கொண்டு மற்றவர்களைப் பிடிக்கவேண்டும். முதலில் கண் கட்டப்பட்டவர் மற்றவர்களுடன் தானும் ஒருவராகச் சேர்ந்து விடுவார். இவ்விளையாட்டு பார்ப்போருக்கு மகிழ்ச்சியைக் கொடுப்பதாக இருந்து வந்துள்ளது.

## vi. மகிடி நாடகம்

மட்டக்களப்புப் பிரதேசத்தில் சமயச்சடங்குகளையும், புராண இதிகாசங் களையும் நடித்து வருகின்ற பாங்கில் மகிடி நடிக்கப்படுகின்றது. இதனைக் கூத்து எனவும், நாடகம் எனவும், பலவாறு கூறுகின்றனர். நாடகத்தினை ''மகிடிஎடுத்தல்'' என்னும் பொருளிலேயே நடிக்கின்றனர். மகிடி எடுத்தல் என்பதற்கு மறைந்த பொருளைக் கண்டு எடுத்தல் என்பது பொருளென மதுரைத் தமிழ் பேரகராதி குறிப்பிடுகின்றது (பக்.230). மகிடி என்பதை

மட்டக்களப்பில் வஞ்சனை, மாயவித்தை என்னும் பொருள்படப் பேசப்பட்டு வருகின்றது.

நகைச்சுவை மிகுந்த மகிடி நாடகமானது பண்டைக் காலத்தில் சித்திரை வருடப்பிறப்பு அன்று ஆரம்பமாகி ஏறத்தாழ ஆறு ஏழு நாட்களுக்கு நடைபெற்று வந்ததாகக் கூறுவர். முன்னர் திருக்கோயில், அக்கரைப்பற்று, வெல்லாவெளி, தேற்றாத்தீவு, களுதாவளை, அமிர்தகழி, சித்தாண்டி முதலிய இடங்களில் நாடகமாக நடைபெற்று வந்துள்ளதாக இப்பிரதேசத்து முதிய வர்கள் கூறுகின்றனர். மந்திரக்கலையின் உறைவிடமாக விளங்கும் மட்டக் களப்புப் பிரதேசத்தின் மந்திரவழக்கும், பூதங்களின் வேலைகளும், மட்டக் களப்புப் பிரதேசப் பேச்சுவழக்கும் இந்நாடகத்தில் பிரதிபலிக்கின்றது. மகிடி நாடகப் பொருள் விளங்க புத்திசாதுரியம் படைத்தவர்களால் நடிக்கப்பெற்று வந்துள்ளது. இந்நாடகம் பலவகைகளில் நிகழ்த்தப்படுகிறது. மலையாள நாட்டிலிருந்து வந்த ஒரு தம்பதியினரும் அவரது சகாக்களும் மட்டக் களப்பிற்கு வந்து அங்குள்ள மந்திரவாதிகளுடன் போட்டியிட்டு அப்பிர தேசத்திற் குடியேறியதனை நிகழ்த்திக் காட்டுவது ஒரு வகையாகும்.

இன்னுமொரு வகையாக மகிடியை வேடன், வேடுவிச்சி, வெள்ளைக் காரன், வெள்ளைக்காரி, முதலியோர் பார்க்க வருவதாகவும் மூன்றாவதாக கம்பகாமாட்சி, மீனாட்சி, வசிட்டர், முதலியோர் சம்பந்தமான கதையும். குறவர் குறத்திகதையும், மந்திரவித்தாண்மையும் நாடகமாக நடித்துக் காட்டப்படுகின்றன.

கம்பகாமாட்சி, மீனாட்சி, வசிட்டர் முதலியோர் சம்பந்தமான கதை பற்றிய மகிடி நாடகத்தில் எழுத்து வடிவில் அமைந்த பிரதிகள் காணப் படுகின்றன. ஏனைய இரண்டு வகைகளுக்கும் எழுத்துவடிவில் அமைந்த பிரதிகள் இல்லை எனலாம்.

மகிடி நாடகங்கள், சத்தியவாழ்வு, கற்புநிலை, தீயவழித்துன்பம் முதலியனவற்றை உணர்த்தும் பாங்கில் அமைந்து காணப்படுகின்றன. இப்பிரதேசத்தின் மந்திரக் கலையைப் பிரதிபலிப்பதாகவும் அமைந்துள்ளன. அதில் இடம்பெறும் வழிபாட்டு அம்சம், தெய்வமாடுதல், நோய்க்குக் குழை யடித்தல் முதலியன மட்டக்களப்பு வாழ்க்கை அம்சத்தினைக் காட்டுகின்றன. இந்நாடகத்தில் கதையம்சம் இல்லை.

மகிடி நாடகத்தில் பாத்திரங்களாக, பிராமணத்தம்பதியினர், மந்திரவாதி, குருக்கள், பூதங்கள், வேடுவர், வேடுவிச்சி, குறவர், குறத்தி, மலையாள வேலைக்காரன் முதலியோர் வருகின்றனர். பிராமணத்தம்பதிகள் பாத்திர மேற்று நடிக்கும் போது பிராமணக்கணவன் கண்ணகியாகவும், பிராமண மனைவி கோவலனாகவும் பண்பு கொண்ட பாத்திரங்களாகின்றனர். காவியத்

திற்கும் இதற்கும் பாத்திர ஒழுங்குமுறையில் முரண்பாடு காணப்படுகின்றது. பாத்திரங்களாகவரும் பூதங்கள் வேடர்கள், குறவர்கள் ஆகியோர் உடல் எங்கும் மாவாக்கிய கரியைப் பூசிக்கொள்வர். குறவர்களாக வருவோர் முதுகில் பாம்புப் பெட்டியைச் சுமந்தவாறும், தடியால் கட்டிக்கொண்ட நாயை ஒருகையால் பிடித்தவாறும் வருவர்.

இந்நாடகம் பகல் வேளையில் சமதளத்தரையில் நடிக்கப்பட்டு வந்துள்ளது. சுமார் நாலடி சற்சதுரமான மண்மேடை தயாரித்து நடுவில் ஏறத்தாழ இருபத்தைந்து அல்லது முப்பது அடிஉயரமான மூங்கில், கமுகு, சமுளை போன்ற மரங்களில் ஒன்றைநட்டு தென்னம்பாளை, தென்னங் குருத்தால் ஆக்கப்பட்ட பறவை முதலிய உருவங்கள் வேப்பங்குழை, மாவிலை போன்றவற்றால் அலங்காரம் செய்வர். அம்மேடையில் நான்கு மூலைகளிலும் நான்கு கும்பங்கள் வைக்கப்பட்டு அதனுள் ஈசானிய மூலை (வடகிழக்குத் திசை) தவிர்ந்த ஏனைய மூன்று மூலைகளிலும் வைக்கப்பெற்ற மூன்று கும்பங்களிலும் தலா மூன்று கோழி முட்டைகள் வீதம் ஒன்பது முட்டைகள் வைக்கப்படும். இக்கோழி முட்டைகளே மகிடிப்பொருள்களாகப் பாவனையில் இடம் பெறுகின்றன. இந்த நான்கு கும்பங்களுக்கும் அருகில் நான்கு குத்துவிளக்குகள் வைக்கப்படும். கிழக்கு நோக்கியதாக சீலைவிரித்து அதன் மேல் வாழையிலை வைத்து அதன் மீது வெற்றிலை, பாக்கு, பழம், பூக்கள் என்பன அடங்கியமடையும் வைக்கப்படும். அவைகளில் முடியுடனான தேங்காய் ஒன்றும் இருக்கும்.

இதற்கு அப்பால் ஏறத்தாழ 50 x 25 சதுர அடிபரப்புள்ள இடத்தில் தென்னங் குருத்துக்களாலும், இலைகளாலும் அலங்காரம் செய்யப்படும். அலங்காரம் செய்யப்பட்ட இடத்தின் வடக்கு அந்தத்திலும் தெற்கு அந்தத் திலும் இரு கொட்டில்கள் கட்டப்பட்டு வடக்குக் கொட்டிலில் பிராமணரும், தெற்குக் கொட்டிலில் குருக்கள், மந்திரவாதி, வேடத்தம்பதியினர், குறத் தம்பதியினர் முதலியோரும் இருப்பர்.

கிழக்கிலும், மேற்கிலும் இரண்டு சிறுகுடிசைகள் சிறிய வாசலுடன் அமைக்கப்படும். அவைகளில் பூதங்கள் இருக்கும். புதங்களுக்கு உணவாக சிறிய நெற்குவியல், கள்ளுமுட்டி என்பன வைக்கப்பட்டிருக்கும். தெற்குப் புறக் கொட்டிலுக்கு முன்பாக ஒரு பந்தலிட்டு அதில் மடைபரவி பழவர்க்கம், கஞ்சாரொட்டி, கள்ளு, சாராயம், என்பன வைக்கப்படும். வடபுறக் கொட்டிலுக்கு முன்னால் ஒருபந்தலிட்டு பிராமாணக் கலாசாரத்துக்கு உரியதாக நவகும்பங்கள் வைத்துக் குத்து விளக்குகளும் வைக்கப்பட்டிருக்கும்.

வடபுறத்தில் உள்ள பிராமணக் குழுவினரின் செயல்களுக்கு எதிராக தென்புற மந்திரவாதிக் குழுவினர் செயற்படுவர். பிராமணக் குழுவினர்

கம்பத்தின் அடியில் வைக்கப்பட்டுள்ள மகிடியை எடுப்பதற்காக அவை இருக்குமிடத்திற்கு வருவதும், எதிரணியினரான மந்திரவாதிக் குழுவினர் பூதங்களின் உதவிகொண்டு அவர்களைத் தடுத்துத் துரத்துவதும் சுவை பொருந்த நடித்துக் காட்டப்படுகின்றது.

ஈற்றில் பிராமணனின் திறமையால் மந்திரவாதிக் குழுவினர் தோல்வி யுறுவதும், மகிடி எடுக்கப்படுவதும் காண்பிக்கப்படுகின்றது. இவ்வாறு நடைபெற்று வந்துள்ள மகிடி நாடகமானது உருமாற்றங்கள் பலவற்றைப் பெற்றுவந்துள்ளது (கதிராமத்தம்பி, K.O.V., 2009). இந்த நாடகத்தின் மூலம் இப்பிரதேச மக்களின் வாழ்க்கைமுறை, சமய வழிபாட்டுச் சடங்கு முதலியன சித்தரிக்கப்படுகின்றன.

## vii. மருத்துவம்

### சித்தமருத்துவம்

உலகின்கண் தோற்றம்பெற்ற கலைகளில் தலையாயதாக மருத்துவக் கலை விளங்குகின்றது. உலகிலுள்ள உயிர்களின் பிணியை நீக்கி நோயற்ற வாழ்வு வாழ வைப்பதே சித்த மருத்துவ நோக்கமாகும். இதனை உலகுக்கு உணர்த்தி யவர்கள் சித்தர்கள். சித்தர்களால் உணர்த்தப்பட்டபடியால் சித்த மருத்துவம் எனப் பெயர் பெறலாயிற்று. சித்தமருத்துவத்தைப் பொதுவாக அகத்தியரோடு தொடர்புபடுத்திக் கூறப்பட்டு வருகிறது.

சித்தமருத்துவ நூல்கள் திருமூலர், அகத்தியர் முதலிய முனிவர்களாலும், தென்முகக்கடவுள் முதலிய தெய்வங்களாலும், நந்தியம் பெருமானாலும், இயம்பப்பெற்று வந்த அரும்பெரும் நூல்கள் எனக் கூறப்படுகிறது (சேதுரகுநாதன், ந., 1961, பக்.117).

சித்தமருத்துவம் பரப்பப்பட்ட வரலாறுபற்றி யூகிமுனி எழுதிய வைத்திய சிந்தாமணி மேல்வருமாறு கூறுகிறது.

*சொல்லிடவே தேவிக்கு சதாசிவன் றான்*
*சொல்லவே தேவியும் நந்திக்குச் சொல்ல*
*நல்கிடவே நந்திதன் வந்திரிக்குச் சொல்ல*
*அல்லிடவே யசுவனியாந் தேவர்தாமும்*
*அகத்தியற் குரைத்திடவே யம்முனீந்திரன்*
*புல்லிடவே புலத்தியர்க் குபதேசிக்க*
*புலத்தியரும் தேரையற்கும் பகன்றிட்டாரே.*

(யூகிமுனி வைத்திய சிந்தாமணி, பாடல் 800.)

இச்சிந்தாமணிப் பாடலின்படி சிவபிரான் பார்வதிக்கும், பார்வதி நந்திதேவருக்கும், நந்திதேவர் தன்வந்திரிக்கும், தன்வந்தரி அசுவனி தேவர்களுக்கும், அசுவனி தேவர்கள் அகத்தியர்க்கும், அகத்தியர்தம் சீடர்வழியே தேரையற்கும் தேரையரால் மண்ணுளோர்க்கும் பரப்பப்பட்டதாக அறியமுடிகிறது. சித்தர் கணத்தின் தலைவர் அகத்தியர் எனக் கூறப்படுகிறது (கோவேந்தன், த., 1976, பக். VII).

மட்டக்களப்புப் பிரதேசத்தில் காணப்பெறும் மருத்துவ வாகடங்களில் பதினெண் சித்தர்களால் இயற்றப்பெற்ற ஆத்மரட்சாமிர்தம் என்னும் வயித்திய சாரசங்கிரகம் இன்றுவரை பேணப்பட்டு வருகிறது. எனினும் அகத்தியர், புலிப்பாணி, தேரையர், யூகி, பதஞ்சலி போன்றவர்களது தனித்துவமான வைத்திய வாகடங்களும் பயன்படுத்தப்படுகின்றன.

பண்டைக் காலம் முதலாக மட்டக்களப்புப் பிரதேசத்தில் சித்தமருத்துவம் தமிழர்களின் மேன்மையை நிலைநாட்டற்குத் துணைபுரிந்துள்ளது. சித்த வைத்தியமானது விஷவைத்தியம், முறிவுவைத்தியம், சர்வாங்கவைத்தியம் (உடல் சம்பந்தமான நோய்களுக்கு) எனப் பிரிவுகளாக உள்ளன. மட்டக்களப்புப் பிரதேசத்தில் மருத்துவத்தை வைத்தியம், பரிகாரம் என அழைக்கும் வழக்கமும் உள்ளது. ஆதலினால், மருத்துவம் செய்பவரை மருத்துவர், வைத்தியர், பரிகாரியார் என்னும் சொற்களில் அழைப்பர்.

இம்மருத்துவர்களிற் பெரும்பாலானோர் பின்வரும் மூன்று விடயங்களைக் கடைப்பிடித்து வருகின்றனர்.

1. நோயாளியிடம் பகைமை பாராட்டக்கூடாது.
2. ஏழைகளுக்கு இலவச மருத்துவம்.
3. பட்டோலை (வாகடத்தில் உள்ளபடி மருந்து விபரப்பட்டியல்) கொடுக்கக்கூடாது.

பட்டோலை கொடுப்பதனால் பெருந்தீமைகள் ஏற்பட்டுவிடுவதாகக் கூறப்படுகிறது. உதாரணமாக குகநீறு என்பதன் பொருள் நீறு (சிப்பியால் ஆக்கப்படுவது) எனவும் கூகைநீறு என்பது அருளோட்டுமாவின் ஒருபகுதி அல்லது காட்டெருமைப் பால் எனவும் குறிப்பிடப்படுகிறது. பட்டோலையை வாங்கிச் செல்பவரது மருந்தின் மீதுள்ள அறிவின்மை காரணமாக பிழையான மருந்துப் பிரயோகத்தினால் தீமையான விளைவுகளும் ஏற்பட்டுவிடுகின்றது (வை.க. விநாயகமூர்த்தி, 2010). எனவே இப்படியான சில தீமை விளைவிக்கும் செயற்பாடுகளினாற்தான் பட்டோலை வழங்குதல் தவிர்க்கப்பட வேண்டிய தொன்றாகி விட்டது எனலாம்.

உடம்பினிலுள்ள வளி, தீ, நீர் (வாத, பித்த, கபம்) ஆகிய மூன்றும் தத்தம் இயல்பான நிலையினின்றும் கூடியும் குறைந்தும் மாற்றமுறும் போது நோய் தோன்றுவதாக அறியமுடிகிறது (ஆனந்தம், எஸ்., 1954, பக்.36). சித்தமருத்துவத்தில் இலை, வேர், கிழங்கு, கொடி, பூ, காய், கனி, வித்து, முதலியவற்றால் ஆக்கப்பெற்ற சாறு, எண்ணெய், இலேகியம், ரசகந்தகம், ரசமணி, நீறுசெந்தூரம் போன்றவற்றால் நோய் தீர்க்கும் மருந்துகளைச் செய்தனர். மட்டக்களப்புத் தமிழரிடத்து மருத்துவக்கலையானது காலத்தால் முற்பட்டதாகவும், அவர்கள் அத்துறையில் திறமை மிகுந்தவராயும் கொள்ள முடிகிறது (நாராயணபிள்ளை, கோ., 2010). அதுமட்டுமன்றி அறுவைச் சிகிச்சை முறையையும் மேற்கொண்டதாக அறியமுடிகிறது.

**விஷவைத்தியம்**

மட்டக்களப்புத் தமிழர்களிடையே விஷவைத்தியத்தை பெரும்பாலும் சர்ப்பசாத்திரம் எனக்கூறும் வழக்கு காணப்படுகிறது. இப்பிரதேசத்தில் விஷவைத்தியர்கள் இலவசமாகவே மருத்துவம் செய்துவந்துள்ளனர். விஷந் தீண்டியவரின் வீட்டிற்கு அதன் மருத்துவத்திற்காக வைத்தியர் செல்லும்போது தான் அருந்தும் தாம்பூலத்தைத் தானும் அவர்களிடமிருந்து பெறக்கூடாது என்பதற்காக தானே அதனைக் கொண்டு செல்வது வழக்காக இருந்து வருகிறது.

**மருந்தும் மந்திரமும்**

இப்பிரதேசத்தில் விஷவைத்திய முறையில் மருந்தும் மந்திரமும் இரண்டறக் கலந்து காணப்படுகிறது. விஷம் பரவாது ஓரிடத்தில் நிற்கும் பொருட்டுச் செய்தலை தவணைபோடுதல் என்பர். தவணைபோடுதல் மந்திரப் பிரயோகத் தினால் நடைபெறுவதாகும். கெருடபார்வை, குழையடித்தல் போன்ற மந்திரச் செயற்பாடுகளால் விஷம் நீங்கப் பெறுகின்றன. இவ்வாறு இதன் மருத்துவ முறையானது மருந்தும், மந்திரமும் இரண்டறக் கலந்து பயன்படுகிறதென் பதற்குச் சான்றாக விஷ வைத்தியப் பாடலொன்று

*அன்னை வயிற்றி லவதரித்து அடியேன் பிறந்தே னிறவாமல்*
*என்னை வளர்த்துப் பால்புகட்டி ஏற்கும் மருந்து மந்திரமும்*
*தன்னைச் சரியா தெனப்புகலத் தந்தார்குருவிற் கிளையோனும்*
*பின்னர்ச் சித்தர்திருநாமம் பொருந்தத் திருந்தப் புகன்றீரே.*

(ஆறுமுகபிள்ளை, வீ.தோ.பொ.த., 1868). எனத் தெளிவாகக் குறிப்பிடுகிறது.

### சர்ப்பசாத்திர அறிவு

சர்ப்பசாத்திரம் கற்பவர்கள் விஷத்தினையுடைய நாகமோர் எட்டுச்சாதி, மண்டெலி பதினாறுவகை, வழலை சாதி ஒருநான்கு, தேள் வகை பன்னிரண்டு, சிலந்தி வகை இருபது, பூரான், பச்சோந்தி, நாய், நரி, பூனை, தவளை, அரணை, அட்டை, குளவி முதலிய பல்வேறானவற்றின் விஷம் போக்கும் ஆற்றலைப் பெறுகின்றனர். சர்ப்பத்தின் பெயர்வகையும், வாழும் இடமும், வயதுக் காலமும், நாற்றமும், நிறமும், ஊணும், ஆட்டமும், பற்குறியும், கடிவாய்க்குறியும், விஷத்தின் அளவையும் குணமும், திசையின் குறிப்பும், அவை எவ்வெக்காலத்தில் இரைதேடும், கருக்கூட்டும் என அவற்றின் தன்மையை ஐயம் திரிபின்றி அறிந்துகொள்வர்.

அத்துடன் தூதன் குறியும், வேகலட்சணமும், மருந்தும் குணமும் என அவற்றை நன்றாய் அறிவர். இவ்வைத்தியத்தை ஒரு குருவின் மூலமாகப் பயிற்சியும் தேர்ச்சியும் கைவரப்பெற்று, அவரின் நல்லாசியையும் பெற்றதன் பின்பே செய்ய ஆரம்பிப்பர். எனவே, மட்டக்களப்புத் தமிழர் சர்ப்ப சாத்திரத்தைத் துறைபோகக் கற்றுமுடித்தாலும் கற்பித்த ஆசானின் நல்லாசி கிடைக்கும்வரை ஆசானிடம் சீடனாகவே இருந்து ஒழுகுவர். இவ்வாறு ஒழுகுவது விஷவைத்தியக் கலையினதும், அவர்களினதும் தனிச்சிறப் பம்சமாகும்.

### விஷநீக்கிகள்

மட்டக்களப்புப் பிரதேசத்தில் விஷநீக்கிகள் கல், மரக்குற்றி, வேர் எனபனவாக உள்ளன. இவை வைத்தியரிடம் இருக்கப்பெறுவதுடன் கல், மரக்குற்றி என்பன பொது இடங்களிலும் அமைந்துள்ளன. விஷக்கல்லில் கடிவாயைப் பொருந்தி வைக்கும்பொழுது அக்கல்லானது தன்பால் பிடித்துக் கொள்வதை உணர்ச்சி மூலம் தெரியக்கூடியதாக உள்ளது. கல்லோ மரக்குற்றியோ வேரோ விஷத்தை இழுத்துப்பெற்றதன் பின்னர் அப்பொருளுக்கு பாலினைச் சொரிந்து அதனைத் தூயதாக்கி வந்துள்ளனர். திருக்கோயில், கல்முனை, கதிரைவெளி முதலிய கிராமங்களின் பொது இடங்களில் விஷக்கல் அமைந்திருந்தன.

### அடக்கம் எழுப்புதல்

விஷம் தீண்டப்பெற்று மரணதறுவாயில் உள்ளவரை மந்திர சக்தியினால் கடித்தபாம்பை வரவழைத்து கடிவாயிலிருந்து விஷத்தை மீளப்பெறச் செய்து விஷத்தைப்போக்கும் ஆற்றல்மிக்க வைத்தியர்கள் வாழ்ந்துவந்துள்ளனர். இதனாற் போலும் கடித்த பாம்பைக் கொல்லாத வழக்கு இன்றும் இருந்து வருகிறது. அதுமட்டுமன்றி கெருடபார்வை, நகுலபார்வை, முதலியவற்றின்

மூலமாக விஷம் போக்கப்பட்டது. இவற்றிற்கு முன்னதாக கண்களில் கலிங்கமிடுதல், தலையில் புடம் வைத்தல் முதலிய மருந்துமுறையினாற் செய்தும் பயனளியாவிடின் மேற்காட்டிய மந்திரசக்தியால் அடக்கமெழுப்பும் முறையை மேற்கொள்வர் (ஆறுமுகபிள்ளை, வீ.தோ.பொ.த., 1868). இத்தகைய அறிவும் ஆற்றலும் மிக்கவர்கள் மட்டக்களப்புப் பிரதேசத்தில் அக்கரைப்பற்று, கோளாவில், தம்பிலுவில், வீரமுனை, துறைநீலாவணை, குறுமண்வெளி, மண்டூர், போரதீவு ஆரைப்பற்றை, சித்தாண்டி, திமிலைதீவு, கதிரவெளி முதலிய பல தமிழ்க் கிராமங்களில் வாழ்ந்திருக்கின்றனர். திமிலை தீவில் அண்மைக் காலத்தில் வாழ்ந்த வே.கி.த. சின்னையா இத்துறையில் பிரசித்தி பெற்று விளங்கியவர். இவரது ஆற்றலை இந் நூலாசிரியர் பல தடவைகளில் நேரிற் கண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### முறிவு வைத்தியம்

மட்டக்களப்பில் உள்ள மருத்துவக் கலைகளில் முறிவு வைத்தியம் நீண்ட காலமாக இப்பிரதேச மக்களிடம் இருந்து வந்துள்ளதாகவும் அது பரவலாக நடைமுறையில் இருந்தாலும் பெரும்பாலும் மந்தை வளர்ப்போரிடம் பேணப்பட்டு வந்துள்ளதாகவும் நேர்காணலின் மூலமாக அறியமுடிந்தது. அவர்கள் மந்தைகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர்களாதலால், அவற்றுடன் ஓடுதல் அவைகளைக் கயிறுகொண்டு இழுத்தல் முதலானவை பெரும்பாலும் தினசரி நடைபெறுவன. அச்செயற்பாடுகளின்போது சுளுக்கு, முறிவு, எலும்பு விலகுதல் முதலியன அவர்களுக்கு ஏற்படுதல் சகசமாயிருந்தன. அதன் காரணமாக அவர்களிடம் முறிவு வைத்தியம் இன்றியமையாததாய் இருந்ததாகக் கருதமுடிகிறது.

எலும்பு முறிந்தோ அல்லது வெடித்தோ நெரிந்தோ இருப்பின் அது எலும்பு முறிவு அல்லது எலும்பு உடைவு என்றழைக்கப்படுகிறது. முறிவு வைத்தியத்தில் சுளுக்குகள், மூட்டுக் களர்தல், முறிவுகள் அடங்குகின்றன.

### சுளுக்குகள்

ஒரு மூட்டைச் சுற்றியிருக்கும் சவ்வுப் பந்தனங்கள் சடுதியாய் தாக்கத்து க்குள்ளாவதால் சுளுக்குகள் உண்டாகின்றன. சிறிய குருதிக் குழாய்களும் மூட்டுகளுக்குரிய எண்ணெய்ச் சுரப்பிக் குழாய்களும் அறுந்து போவதால் குறித்த இடத்தில் அதிகநோவும் வீக்கமும் தோன்றுகின்றன.

### மூட்டுக் களர்தல் அல்லது கீல் பிறழ்தல்

ஒரு எலும்பின் கொண்டையானது தனக்குரிய இடத்தை விட்டுவிலகினால் அது மூட்டுக் களர்தல் எனப்படும். இவ்வாறு சம்பவிக்கையில் மூட்டில்

இயல்பாக இயங்கும் தன்மை தடைப்பட்டு அதனது உருவமும் மாற்ற மடைகிறது. இது உடனடி வைத்தியத்தின் பயனாகக் குணமடைகிறது.

### முறிவுகள்

எலும்பு மாத்திரம் முறிந்திருந்தால் அது தனிமுறிவு அல்லது சாதாரண முறிவு எனப்படும். அதனைச் சூழ்ந்த மெல்லிய பாகங்களும் சருமமும்கூடக் கிழிபடின், அது திரண்ட முறிவு அல்லது கலப்பு முறிவு எனப்படும். முறிவு ஏற்பட்ட இடங்களில் நுனிகளின் மூலமாகக் கிருமிகள் நுழைந்து தீமையை விளைவித்துவிடும் தன்மையைத் திரண்டமுறிவு கொண்டுள்ளது. எலும்பு முறிவோடு, உள்ளுறுப்புக்களில் ஒன்று சேதப்பட்டாலும் அல்லது குருதிக் குழாயோ நரம்போ சேதப்பட்டாலும் அது சிக்கல் முறிவு எனப்படும் (சுசிலாதேவி மனோகரன், 2010).

### மருந்து வகைகள்

உடலின் தசைகள், எலும்பு முதலானவற்றின் தாக்கத்தின் அளவுப் பரிமாணத் திற்கேற்ப மருத்துவம் செய்யப்படுகின்றன. மருத்துவமானது பச்சிலைத் தாவரப் பகுதிகளைக் கொண்டு கட்டுவதனாலும், பூச்சுமருந்துகளாலும், ஒத்தணங்களாலும், எண்ணெய்களாலும், பற்றுக்களாலும் மருத்துவம் செய்யப் பட்டு வருகின்றன.

இம்மருத்துவ முறையினைக் கற்போர் குருவிடம் கைபாகம் செய்பாகம் கற்றால் மட்டும் போதாது. குருவினது மனத்தால் பூரணமாக ஏற்றுக் கொள்ளப் பட்டதன் பின்னரே பச்சைவெட்டு முதலான இரகசியமாகப் பேணிவரும் மூலிகைகளையும் ஏனைய வாகட மருந்துகளையும் மாணவன் அறியும் பொருட்டுக் கற்பிப்பர்.

### மாட்டு வைத்தியம்

மட்டக்களப்புத் தமிழர் மாட்டைச் செல்வமெனக் கொண்டவர்கள். அதில் பற்றும் பாசமும் வைத்திருந்தனர். அதனைத் தொழிலுக்காக மட்டுமன்றி தமது வாழ்வுடன் இணைந்த பலவற்றுக்கும் பெரும்பாலும் பயன்படுத்தினர். எனவே அவற்றைக் கண்ணெனக் கொண்டு பேணிப் பாதுகாத்தனர். அதற்கு நோய் தோன்றிடினில் தக்கவைத்தியத்தைச் செய்து குணப்படுத்தினர். அதற்கான மாட்டுவைத்தியர்கள் இருந்துவந்துள்ளனர். பெரும்பாலும் மாட்டுப் பட்டிச் சொந்தக்காரர்களும் மாட்டு வைத்தியம் தெரிந்தவர்களாகவே இருந்துள்ளனர். அவர்கள் அதற்கான மருத்துவத்தை அனுபவக் கற்றல் மூலமும், மாட்டுவாகட அறிவின் மூலமாகவும் மேற்கொண்டு வந்துள்ளனர்.

### மாட்டு வாகடம்







மாட்டு வாகடமானது மாடுகளுக்கு ஏற்படும் நோய்கள், அதன் குணங்குறிகள், அதற்கான பரிகாரங்களான மருந்துகள் கோல்ச்சூடுகள் மந்திரங்கள் என்பவற்றைக் கூறுகிறது. மாட்டுவாகடங்கள் ஓலைச் சுவடிகளாகிய ஏடுகளில் பொதிந்திருந்தன. அதனால் அதனை ''மாட்டு வாகட ஏடு'' என அதனைக் கூறினர்.

### நோய்கள்

மாட்டு வாகடத்தில் மாடுகளுக்குக் காணப்படும் நோய்கள் குறிப்பிடப் பட்டுள்ளன. அவைகள் சில மேல்வருவனவாகும்:

> கொதி வியாதி, தெறியன் நோய், கண்டவாய் நோய், இளைபடுவன் நோய், கல்லெரிப்பு நோய், அழகன் நோய், இரதன் நோய், கத்தாளை நோய், சாரைநோய், வெக்கை நோய், நரைகாலி நோய், ஆட்டுச்சுளத்தி நோய், ஆட்டுப்படுவன் நோய், கருவளை நோய், பல்லரணை நோய், விஷக்கடி நோய், குடல்வாதம், நார்நோய், குட்ட நோய், பிரமி நோய், குதமுதி நோய், மாரி நோய், தலைப்பற்று நோய், குதிரை நோய், ஊதுவலி, காதுக்கட்டு, உள்வெக்கைப் பெருநோய், சீதவலி நோய், முன்னடைப்பன் பின்னடைப்பன், சந்தடைப்பன், முன்மூக்கன், தாளடைப்பன், உள்ளடைப்பன்,நீரடைப்பன், சிற்றடைப்பன், சூலப்படுவன், சூரநோய், பூதமுகறி, கழல்தாமரை, மலைமண்டெலி, பண்டி நோய், நெய்யரி நோய், சந்து நோய், கண்ணோய். கண்டமாலை, சிங்க நோய், கொள்ளிநோய், செந்தழல் நோய், எனப் பலவாறு காணப்படுகின்றன (வீ.தோ.பொ.த. ஆறுமுகபிள்ளை, 1863).

மாட்டுவாகடங்களில் மாடு காவற்பண்ண, குழையடிக்க, வெளுவறுக்க, புழுவுக்கு ஓத, மாட்டைப் புலி பிடியாதிருக்க போன்றவற்றுக்குரிய மந்திரங்களும் பிரயோகமுறையும் குறிப்பிடப்பட்டுள்ளன. மாடுகளுக்கு ஏற்படும் நோய்களுக்கு நெருப்பில் பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பியொன்றினால் (கோல்) மாட்டினது உடலின் மேற்பகுதியில் வாகடம் சுட்டிக் கூறப்படும் இடத்தில் சுடப்படும். ஆனால் எல்லா நோய்களுக்கும் சூடுகள் இடப்படுவதில்லை. இச்சூடுகள் நோய்களுக்கேற்ப வேறுபட்டுள்ளன (உ+ம் கீழ்வரும் அட்டவணையைப் பார்க்க).

| நோய் | சுடு குறி | சூடு இடும் பகுதி |
|---|---|---|
| கொதி வியாதி |  | மாட்டின் ஏதாவது ஒரு பகுதியில் இடப்படும் |
| சாரை நோய் |  | மாட்டின் ஏதாவது ஒரு பகுதியில் இடப்படும் |
| இளைபடுவன் நோய் |  | தலையைக்கட்டி இடும் சூடு. அதாவது தலையில் இடும் சூடு. |
| |  (வலது பக்க விலாப்பகுதி) | முதுகைப் பிளந்து இடும் சூடு அதாவது முதுகின் இரு மருங்கிலும் இடும் சூடு. |
| |  (இடது பக்க விலாப்பகுதி) | |
| கல்லரிப்பு நோய் |   | இவை மாட்டின் பின்னங்கால் காற்சந்து, விலாப்பக்கங்கள் போன்ற இடங்களில் இடப்படும். |
| கல்லரிப்பு நோய் |   | இவை மாட்டின் பின்னங்கால் காற்சந்து, விலாப்பக்கங்கள் போன்ற இடங்களில் இடப்படும். |

*மாட்டின் நோய்களும் அவற்றிற்கான சுடு குறிகளும்*

## viii. கட்டடக்கலையும் கண்கவர்கலையும்

### கட்டடக்கலை

கட்டடக் கலையானது கண்ணாற் கண்டு மகிழ்வடைவது. மட்டக்களப்பைப் பொறுத்தவரை கட்டடக் கலையில் வீடுகளும், கோயில்களும், ஏனைய பொதுவான கட்டடங்களும் அடங்குகின்றன. இவை பருத்தும் சிறுத்தும் உயர்ந்தும் காணப்பெற்றன. ஆரம்ப காலம் முதலாக இலைகுழை, புல்

வைக்கோல், ஓலை, களிமண் அல்லது புற்றுமண், நிலத்தில் தோண்டி எடுத்த சொறிக்கல், சுடாதகல், கருங்கல், தேன், நீறு, சுண்ணாம்பு, மருதமரச் சாம்பல் என்பனவற்றாற் கட்டடங்கள் அமைந்தன.

களி மண்ணாலாகிய வீடுகள் பதினேழாம் நூற்றாண்டு வரையும் முக்கியம் பெற்றிருந்ததாக அறியமுடிகிறது (மகேஸ்வரலிங்கம், க., 2008, பக்.132). ஆரம்பகாலத்தில் வாடி, பரண், அட்டாளை போன்றவற்றில் இருந்து வீடமைப்பு வளர்ச்சி பெற்று வந்துள்ளதாகக் கொள்ள வேண்டியுள்ளது. பெரும்பாலான வீடுகள் இரண்டு அறைகளையும் சுற்றிவரத் திண்ணை களையும் கொண்டதாக அமைக்கப்பட்டிருந்தன. அரிதாக மூன்று அறைகளைக் கொண்ட வீடுகளும் இருந்தன.

### மச்சுவீடு

பெரும்பாலும் பெரிய வீடொன்றின் ஒரு அறையின் மேற்பகுதி, சுவர்களின் வளைகளுக்கு சமாந்தரமாகக் குறுக்காக கட்டிமரங்கள் போடப்பட்டு பலகைகள் பரவப்பட்டிருந்தது. இதனை ''மச்சு'' என அழைத்தனர். இம்மச்சுக்கும் கூரைக்கும் இடையில் உள்ள பகுதி பொருட்கள் வைக்கும் இடமாக இருந்தது. மச்சுவுக்குரிய வழி மற்ற அறையில் இருந்தது. அதாவது மற்ற அறையின் மச்சுப் பக்கமாகவுள்ள சுவர்பரவிய மச்சுப் பலகையின்மேல் கட்டாது விடுவதனால் அது திறந்ததாக இருக்கும். இவ்வறைச் சுவரின் அகலம் சுமார் ஒரு முழம் கொண்டதாகக் கட்டப்பட்டிருக்கும்.

### விளக்கு மாடம்

திண்ணைச் சுவரில் ஒரு இடத்தில் விளக்கு வைப்பதற்காக, ஏறக்குறைய சுவரின் நாலு அடி உயரத்தில் மாடம் ஒன்று முக்கோண வடிவ அமைப்பில் ஒரு அடி சதுர அளவுக்குள் அமைந்திருந்தது. இது ''விளக்கு மாடம்'' எனவும், அதனுள் வைக்கப்படும் விளக்கு ''மாடவிளக்கு'' எனவும் அழைக்கப்பெற்றது.

### கூரையும் பிறவும்

இங்கு காணப்பெற்ற சில கல்வீட்டுத் திண்ணைகளின் வளைகளும், கதவுகளும் சித்திரவேலைப்பாடு உடையனவாகக் காட்சியளித்தன. வீட்டுக் கதவுகளும் திண்ணைக் கூரையும் குனிந்து செல்லும் தன்மையில் அமைக்கப்பட்டிருந்தன.

வீட்டுக் கூரைகள் புற்களினாலும், வைக்கோலினாலும் ஓலைகளினாலும், கிடுகுகளினாலும், சிப்பி ஓடுகளினாலும் (நாட்டோடுகள்) வேயப்பட்டிருந்தன. சில வீடுகளில் கிடுகுகளினால் வேயப்பட்ட கூரைகளுக்கு மேல் வைக்கோல் கொண்டும் வேயப்பட்டிருந்தன. வைக்கோலினால் வேயப்பட்ட கூரையினது கிடுகுகள் நீண்ட நாட் பாவனைக்கு உதவின.

கி.பி 14ஆம் நூற்றாண்டளவில் இலங்கையில் நிலவிய தென்னிந்திய கட்டடக்கலையின் செல்வாக்கு மிகுந்து காணப்பட்டது. கி.பி. 18 ஆம் நூற்றாண்டிலும் பின்னரும் போர்த்துக்கீச, ஒல்லாந்த ஆங்கிலக் கட்டடக் கலையின் செல்வாக்கு காணப்படுகிறது. ஒல்லாந்தராற் கட்டப்பட்ட கோட்டை (தற்போது மட்டக்களப்புக் கச்சேரி), ஆங்கிலேயரால் முதன்முதலாக திருக் கோயிலில் நிறுவப்பட்ட வாடிவீடு போன்றவற்றின் கட்டுமானப் பணி இதனைப் புலப்படுத்துகிறது.

**கோயில்கள்**

ஆரம்பத்தில் மரங்களின் கீழும் கொத்துப் பந்தலிலும் மேடைகளிலும் நடைபெற்ற வழிபாடுகள், பின்னர் கட்டடங்களை அமைத்து கோயிலாக வழிபடும் வளர்ச்சிநிலையைப் பெற்றது. ஆரம்பகாலத்தில் கட்டடங்கள் அழியும் பொருட்களான கம்பு, தடி, ஓலை, கிடுகு போன்றவற்றினால் அமைக்கப்பட்டன. பின்பு களிமண், சுடாதகல், செங்கல், கருங்கல் என்பவற்றால் அமைக்கும் நிலை தோற்றம் பெற்றன.

பெரும்பாலும் ஆகமமுறை சார்ந்த திருக்கோயில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயம், கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயம், அமிர்தகழி ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலயம், கோயிற்போரதீவு ஸ்ரீ சித்திர வேலாயுதசுவாமி கோயில் முதலான சில கோயில்களின் கட்டுமானப் பணிகள் மட்டக்களப்பில் அபிவிருத்திப் பாதையில் கற்கட்டடக் கலையை ஆரம்பித் தமை புலப்படுகிறது. அவைகளில் ஒன்றாக அடித்தளம் தொடக்கம் ஸ்தூபி வரை அமைந்த கட்டட அம்சங்களைக் குறிப்பிடலாம். திருக்கோயில் மூன்று கோபுரங்களைக் கொண்டு விளங்கியதென்றும் அவைகள் போர்த்துக்கீசரால் அழிக்கப்பட்டன என்றும் கூறப்படுகிறது (நடராசா, F.X.C., 1980, பக்.130).

கட்டடம் கட்டுவதற்கு முன் அத்திவாரக் குழி தோண்டப்படும். குழியில் நிற்கும் மனிதன் தன் கையை உயர்த்தி நீட்டின் அது மேற்பரப்பைத் தொடக் கூடியவாறு ஆழமாகத் தோண்டப்படல் வேண்டும். இக்குழி, கல் கீழே தெரியும் வரையாவது அல்லது நீர்மட்டம் வரையாவது நிலத்தின் இயல்புக்கு ஏற்றவாறு ஆழமாக இருக்கலாம். குழி தோண்டப்பட்டபின் அதனுள் எட்டு அங்குல உயரத்திற்குச் சுத்தமான களிமண்ணையிட்டு அதன்மேல் ஒரு முழ உயரத்திற்கு கனமான கற்களால் நிரப்புதல் வேண்டும். இவ்வாறு நிரப்பும் பொழுது ஒவ்வொரு கல்லின் அடியிலும் இரு கற்களுக்கு நடுவிலும் களிமண் சுவறக்கூடிய வாய்ப்பு உண்டாகும். ஒரு முழ உயரம் வாய்ந்த கற்றளம் இங்ஙனம் அமைக்கப்பட்ட பின் நீரினால் அதை மிகுதியாக நனைத்து அதன் மீது யானைகளை நடப்பிப்பதனாலும், பாரம்மிகுந்த ''மொங்கான்'' குற்றி

களால் அடிப்பதனாலும் அத்திவாரம் மட்டமாக்கப்படும். அதன்பின் குழியின் நான்கில் ஒரு பங்கு இன்னும் மூடப்படாது இருக்கும். இதன்மேல் முதல் வரிசைச் செங்கற்கள் பொருத்தப்படும் எனச் சைவத் திருக்கோவிற் கிரியை நெறி குறிப்பிடுகிறது(கா. கைலாசநாதக்குருக்கள், 1963, ப.81). சுமார் மூன்று நூற்றாண்டுக் கட்டடப் பழமை வாய்ந்ததாகக் கருதப்பட்ட துறைநீலாவணைக் கண்ணகியம்மன் ஆலய புனர்நிர்மாண வேலையை மேற்கொண்டபோது அவ்வாலயத்தின் அத்திவாரம் மேற்கூறப்பட்ட முறையிற் செய்யப்பட்டிருந் தமை இவ்வாய்வாளரினால் அவதானிக்கப்பட்டது நோக்கற்பாலது.

**கண்கவர்கலைகள்**

பொதுவாக கண்கவர்கலைகளான ஓவியம், சிற்பம் என்பன ஒரு பிரதேசத் தினது இயற்கையமைப்பு, சமயக்கொள்கை, மொழி இயல்பு, சமூகப் பண் பாட்டுப் பழக்க வழக்கங்கள் முதலியவற்றின் அடிப்படையில் வெவ்வேறு தன்மையில் வளர்ச்சியடைந்து வந்துள்ளன. இவற்றுள்ளும் தமிழர்தம் அழகுக் கலைகள் தனித்துவமானதாகக் கொள்ளமுடியும். மட்டக்களப்புத் தமிழரிடம் காணப்பெற்ற அழகியற் கலைபற்றி நோக்குவதே சிறப்பான தாகும்.

**சிற்பக்கலை**

சிற்பக்கலையின் உருவங்களைத் தெய்வத்தின் திருவுருவங்கள், இயற்கை உருவங்கள், கற்பனை உருவங்கள், பிரதிமை உருவங்கள் என நான்கு பிரிவுகளாக பிரித்துக் கூறப்படுகிறது (மயிலை சீனி வேங்கடசாமி, 2001, பக்.28). சிற்பக்கலையானது பண்டைக்காலம் முதலாக கல், மண், மரம், தந்தம், சுண்ணாம்பு, நீறு, உலோகங்கள், முதலியவற்றிலுமாக விளக்க முற்றிருந்தது. சிற்பக்கலை இடத்துக்கு இடம் வேறுபாட்டுடன் காணப் பெற்றாலும் அவையனைத்தும் உயிர் உள்ளன போன்ற பான்மையை நல்கின.

சிற்பக்கலையின் அம்சங்களைக் கோயில்களிலே காணலாம். தெய்வங் களின் உருவங்களைச் சிற்பமாகச்செய்து அவற்றைத் தெய்வங்களாக மதித்து வழிபாடாற்றினர். கோயில்களின் கடவுட் படிமங்கள், தேர்கள், விமானங்கள், கோபுரங்கள் சிற்பக் கலையின் உறைவிடமாகத் திகழ்கின்றன. உதாரணமாக கொக்கட்டிச்சோலை ஸ்ரீதான்தோன்றீஸ்வரர் கோயிலின் தேர்களிற் காணப் பெறும் சிற்பக் கலைபற்றிக் குறிப்பிடலாம்.இங்கு மரச்சிற்பங்களையுடைய இரு தேர்கள் உள்ளன. ஒன்று சித்திரத்தேர் எனவும் மற்றது பிள்ளையார் தேர் எனவும் கூறப்படுகிறது. சித்திரத்தேர் ஆறு சில்லுகளைக் கொண்டது. அவை ஒவ்வொன்றும் ஆறடி விட்டங்களையுடையவை. இது பதினாறடி நீளமும்

பதினாறடி அகலமும் அறுபது அடி உயரமும் கொண்டு ஐந்து தளங்களில் பல சிற்பங்களைக் கொண்டு விளங்குகின்றது. இத்தேரின் முன் பக்கமாகிய மேற்குத் திசையில் ஐந்து யாளி உருவங்கள் அமைந்துள்ளன. சிறிய யாளி உருவம் நடுவில் அமைய அதன் இரு பக்கங்களிலும் பெரிய யாளி உருவங்கள் இவ்விரண்டாக நான்கு யாளி உருவங்களும் அமைந்துள்ளன. சிறிய யாளியின் தலைமீது அம்பு தாங்கிய மனித உருவம் மேற்குத் திசையை நோக்கியபடி கண்கள் நிலத்தைப் பார்த்தவாறு உள்ளது.

தெற்குப் பக்கத்தில் குதிரைப்படை, யானைப்படை, காலாட்படை என்பன போர்ச் சம்பவங்களைக் காட்சிப்படுத்துகின்றன. தேரில் பூட்டப் பட்ட கடிவாளம் அணிந்த குதிரைகள் கம்பீரமான தோற்றத்துடன் முன்னங் கால்களை உயரத்தியவாறு அணிவகுத்து நிற்பது போன்றும் யானைகள் தும்பிக்கையைத் தூக்கியும் இலைகுழையுடைய மரங்களைத் தூக்கியும் அணியாகச் செல்வது போன்றும் காலாட்படை வீரர்கள் போர்வீரருக்கான உடையணிந்து, ஈட்டி வாள் கேடயம் போன்றவற்றைக் கைகளில் தாங்கி யுள்ளனர். அவர்கள் தலையில் மகுடம் அணிந்து போரில் கோப உணர்வைக் காட்டும் முகபாவனையில் காணப்படுகின்றனர். இவை போர்ப்படையின் அம்சங்களை அப்படியே பிரதிபலிக்கின்றன.

இத்தேரின் தென்மேற்கு மூலையில் தளர்கின்ற தனது ஆடையை இடது கையாற் தாங்கியும் வலது கையில் மலர் ஏந்தியும் ஒரு பெண் நிற்கின்றாள். இப் பெண்ணின் கீழ் ஒரு ஆண் நிர்வாண கோலத்தில் கரங் களைக் கூப்பியபடி நிற்கும் நிலை காணப்படுகிறது.

இத்தேரின் வடக்குப் பக்கத்தில் சிவன், திருமால் தெய்வங்களின் வடிவ பேதங்களையும், சிவனின் திருவிளையாடல்களையும், நடராசர் வீரபத்திரர் மூர்த்தங்களையும் அவற்றின் நடனக் கோலங்களையும், குதிரை யானை சிங்கம் என்பவற்றின் முகயாளிகளையும் சிற்பத்தின் ஊடாகக் காட்டப் படுகிறது.

தேரின் மேற்குப் பக்கத்தில் நாராயணர் நரசிங்க உருவங்கொண்டு இடது கையால் இரணியனின் வயிற்றைப் பிளந்து வலது கையால் குடலை எடுத்த அகோரக் காட்சி காட்டப்பட்டுள்ளது.

இச் சித்திரத் தேரின் கிழக்குப் பக்கத்தில் இலக்குமி சமேதரான விஷ்ணு, நடனமாதர்கள், தேரின் பகுதிகளைத் தாங்கிய பல சிறிய உருவங்கள் என்பன சிற்பமாக செதுக்கப்பட்டுள்ளன. கிருஷ்ணரின் நரசிங்க அவதாரம், கிருஷ்ணர் - மாபலி கதை, நடனமாதர், பூவலங்காரங்கள் போன்றவை சித்தரிக்கப் பட்டுள்ளன. இத்தேர் சிறிய பெரிய அளவிலான சிற்பங்களால் கடவுளின் பல்வேறு மூர்த்தங்களையும் சம்பவங்களையும் வெளிப்படுத்துகின்றது.

மற்றைய தேர் பிள்ளையார்தேர் என அழைக்கப்படுகிறது. இது பன்னிரண்டு அடி நீளமும் பன்னிரண்டு அடி அகலமும் பதினாறடி உயரமும் உடையது. மேல் மூன்று விதானங்களைக் கொண்டுள்ளது. இத்தேர் சோடனைகளால் அலங்கரிக்கப்பட்ட நிலையில் உயரத்தில் விமானத்தை ஒத்திருக்கிறது. இத்தேர் எண்கோண வடிவத்தில் அமைந்துள்ளது. ஒவ்வொரு திசையையும் பிரிப்பனவாய் யாளி உருவங்கள் இடம்பெற்றுள்ளன.

தெற்குப் பக்கத்தில் இலக்குமி கணபதி ஆறு கரங்களை உடையவராயும் சிவன் நான்கு கரங்களையுடையவராயும் காணப்படுகின்றனர். சிவன் இடப வாகனம்மீது ஆசனமிட்டு அமர்ந்தவராய் உமாதேவியை ஒரு கரத்தால் அணைத்தவாறு காட்டப்பட்டுள்ளது. உமாதேவி மலரேந்தியபடி அபய கரத்துடன் காணப்படுகின்றாள். இதன் தெற்குப் பக்கத்தில் பிள்ளையார், திருமால், ஆண்டாள், முனிவர் ஆகியோரின் வடிவங்கள் தத்துவ ரூபமாக அமைந்துள்ளன.

தென் கிழக்குப் பக்கத்தில் முருகன் நான்கு கரங்களை உடையவராய் மயிலின் மீது இருக்க மயிலின் காலின் கீழ் நாகபாம்பு ஒன்று படம் விரித்த நிலையில் காணப்படுகிறது. முருகனுக்கு வலப்பக்கத்தில் ஒரு முனிவரின் உருவம் உள்ளது. முருகனுக்கு இடப்பக்கமாக வலதுகாலை மடக்கி இடது காலை மடித்து ஊன்றியவாறு ஒரு உருவம் அமைந்துள்ளது. சிங்கத்தின் மீது நடனமாடும் காளியின் உருவம் அச்சுறுத்தும் தன்மையைக் காட்டி நிற்கிறது.

கிழக்குத் திசையில் விஷ்ணுவின் கிருஷ்ணாவதாரத்தின் பாலகிருஷ்ண வடிவம், காளியன் (பாம்பு) யுத்தம் ஆகிய காட்சிகள் காணப்படுகின்றன. கோகுலப் பெண்கள் சூழ்ந்து நிறக, பாலகிஷ்ணனின் புல்லாங்குழலின் இசையினாற் கவரப்பட்ட ஒரு பசுக்கன்று தனது நாவை நீட்டியவாறு அவரின் முகத்தை அண்ணாந்து பார்த்து நிற்பது வனப்பு மிகுந்த காட்சியாய் அமைந் துள்ளது. பாலகிருஷ்ணர் பாம்பின் வாலைக் கையாற் பிடித்து வலதுகாலைப் பாம்பின் தலையிலும் இடதுகாலைப் பாம்பின் முதுகிலும் ஊன்றி நடன மாடுவது சிற்பக்கோலத்தில் காணப்படுகின்றது.

வடகிழக்குத் திசையில் நடராசரின் ஆனந்தத் தாண்டவமும் அருகில் தனது தலையின் மேல் இருகரம் கூப்பிய முனிவர் உருவமும் அமைக்கப் பட்டுள்ளது. வடக்குத்திசையில் அபஸ்மார புருஷன்மீது வலக்காலை ஊன்றி இருக்கும் நிலையில் பிள்ளையார், கௌரி சகித மூர்த்தியாய் சிவன், மரத்தின் கீழ் யோகநிலையில் தட்சிணாமூர்த்தி ஆகியோரின் வடிவங்கள் தோற்றத் தன்மைகளுடன் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

வடமேற்குத் திசையில் கிருஷ்ணாவதாரத்தில் நச்சுப்பாலூட்டிய பூதகி வதைக் காட்சி சித்தரிக்கப்பட்டுள்ளது. பூதகியின் பக்கத்தில் காளிதேவியின் இடதுபக்கத்திலுள்ள யாளியின் இடதுபக்கமாக வைரவ மூர்த்தியின் வடிவம் நிர்வாணக் கோலத்தில் அமைந்துள்ளது. இதற்குப் பக்கத்தில் கூப்பின கையின ராயுள்ள ஆண் பெண் வடிவங்களும் தியான நிலையிலுள்ள முனிவரது வடிவங்களும் செதுக்கப்பட்டுள்ளன.

தென் மேற்குத் திசையில் வலப்பக்கம் தலையைச் சரித்துப் படுத்திருக்கும் உருவமும் குந்திய நிலையில் நிர்வாணமாக விலா எலும்புகள் புடைத்துக் காட்டப்பட்டுள்ள பெண்ணின் உருவமும் உள்ளன. இதன் இடப்பக்கமாக இன்ப உணர்வைக் காட்டியநிலையில் ஆணும் பெண்ணும் காதல்லீலை புரியும் காட்சியும் காணப்படுகிறது. இதன் இடப்பக்கமாக யாளியின் உருவமும் அதனின் இடது பக்கத்தில் யோக நிலையில் ஒரு உருவமும் அவற்றிலே காணப்படுகின்றன.

சித்திரத்தேரில் அதிக அளவு மிகச்சிறிய உருவங்களும் உடலால் கரங் களால் பாரம் தாங்கும் உருவங்களும் சிற்பமாக உள்ளன. இரு தேர்களிலும் உயர்புடைப்புச் சிற்பங்களாகவே பெரும்பாலும் அமைக்கப்பட்டுள்ளன. இத்தேர்களில் செதுக்குவேலைகளும் அலங்காரங்களும் மிகையாக விளங்கு கின்றன. இரு தேர்களிலும் பாலுணர்வுச் சிற்பங்கள் தென்மேற்குத்திசை நோக்கியே அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கன. இவற்றின் கண் அமைந் துள்ள சிற்பங்களில் சிற்ப உருவங்களுக்கேற்ப அவற்றின் உணர்வை வெளிப் படுத்தும் பாங்கு சிறப்பிடம்பெறுகிறது.

மட்டக்களப்புப் பிரதேசத்தின் ஏறாவூர், புளியந்தீவு, புதுமுகத்துவாரம், போரதீவு, முனைத்தீவு, ஓந்தாச்சிமடம், கல்லாறு, அன்னமலை, பாண்டிருப்பு, அக்கரைப்பற்று முதலிய இடங்களில் நகைவேலை, சிற்பவேலை செய்யும் ஆச்சாரியர்கள் பிரசித்தி பெற்று வாழ்ந்துள்ளனர். அவர்கள் கல், மரம், இரும்பு, செம்பு, வெள்ளி, பித்தளை, பொன் முதலியவற்றால் அணிகலன் களையும், தளபாடங்களையும், வழிபாட்டு உருவங்களையும், ஏனைய உபயோகப் பொருட்களையும், சிற்பக்கலை விளங்கிடச் சமூகத்துக்கு வழங்கினர்.

சிற்பங்கள் மண்ணினால் மாத்திரமன்றி வெண்கலம், பித்தளை போன்ற உலோகங்களினாலும் செய்யப்பட்டன. நான்கு பங்கு செம்புடன் ஒரு பங்கு வெள்ளீயம் சேர்த்து உருக்கி சுத்தமான வெண்கலம் பெறப்படும். இரண்டு பங்கு செம்புடன் ஒரு பங்கு நாகத்தைச் சேர்த்து உருக்கி சுத்தமான பித்தளை பெறப்படும். தற்காலத்தைப் போன்று நவீன முறையில் செய்யப்பட்ட அச்சுக்கள் அக்காலத்தில் இல்லை. இதற்குப் பதிலாக அவர்கள் பின்வரும் பாரம்பரிய முறையினால் வெண்கல அல்லது பித்தளச் சிலைகளை உருவாக்கினர்:

i. செய்யப்பட வேண்டிய பொருளுக்கான அச்சு புற்றுமண்ணினால் செய்யப்படும்.
ii. இவ்வச்சின் மேல் மெழுகினைக் கட்டுதல் (பூசுதல்) வேண்டும்.
iii. கட்டப்பட்ட மெழுகின் மேல் புற்றுமண்ணை அரைத்து மாவாக்கிப் பூப்படும்
iv. இதற்கு மேற்படையாக களிமண் கட்டுப்படும்
v. பின் இவ்வச்சினைச் சூடேற்றி மெழுகு வெளியேறச் செய்யப்படும்.
vi. நான்கு பங்கு செம்பையும் ஒரு பங்கு வெள்ளீயத்தையும் ஒரு குவை யினுள் இட்டு குவையை நன்கு சூடேற்ற வேண்டும். உருகிய நிலையில் வெண்கலம் பெறப்படும்.
vii. பூசப்பட்ட மெழுகு வெளியேற்றப்பட்ட அச்சினை பழுக்கக் காச்சுதல் வேண்டும்.
viii. உருக்கிய வெண்கலத்தை மெழுகு எடுக்கப்பட்ட அச்சின் உள்ளே வார்த்தல் (ஊற்றுதல்) வேண்டும்.
ix. தற்போது தேவையான பொருளைப் பெற்றுக் கொள்ளலாம்.

தற்போது நவீன முறையில் செய்யப்பட்ட அச்சுகள் மூலமாக பொருட்கள் செய்யப்பட்டு வருகின்றன.

**ஓவியக்கலை**

ஓவியக் கலை நீண்ட காலமாக இந்துசமுத்திரத்தில் போற்றப்பட்டு வந்துள்ளமையை இலக்கியக் குறிப்புக்கள், சித்திரைக்கலை நூல்கள், குகை ஓவியங்கள், கோவிற்சுவர் ஓவியங்கள், சிற்றோவியங்கள், ஏட்டுச்சுவடிகள் என்பவற்றில் வரையப்பட்ட உருவங்கள் மூலமாக அறிந்து கொள்ளலாம். ஓவியங்களில் இயற்கை வனப்பும், சமய சிந்தனைகளும், கலாதத்துவக் கோட்பாடுகளும் விரவி வருவதைக் காணலாம். இயற்கையான கோலங்கள், மனோபாவங்கள், இன்பதுன்பங்கள், செய்கருமங்கள், வழிபாடு, போதனை, வாழ்க்கைத் தத்துவம் பற்றிய உணர்வுகள், அழகியற் கோட்பாடுகள், பண் பாட்டுக் கோலங்கள் முதலியவற்றைப் புரிந்து கொள்வதற்கு ஏதுவான சாதனங்களாகச் சித்திரக்காட்சிகள் அமைந்து விடுகின்றன(சி. பத்மநாதன், 2002, ப. XXVI).

ஓவியத்தை வரைபவர் முதலில் தான் வரையவிருக்கும் ஓவியம் இன்ன தென உள்ளத்தின்கண் நிலைநிறுத்தி வைத்தல் வேண்டும். பின்னர் வண்ணங் களைத் தேர்ந்தெடுத்த பின்பே வரையவேண்டும். முதலில் நினப்பதைப்

புனையா ஓவியம் என அழைத்தனர். புனையா ஓவியம் என்றால் வண்ணம் தீட்டாத ஓவியம் என்பது பொருள். முதலில் நினைத்ததை புனையா எழுத்து எனவும் கூறப்படும் (சுப்பிரமணியபிள்ளை, பொன்., 1956, பக்.45). புனையா ஓவியம் கறுப்பு அல்லது சிவப்பு வர்ணத்தால் வரையப்படும் (மயிலை சீனி வேங்கடசாமி, 2001, பக்.28). ஓவியங்களுக்குப் பலவகை வண்ணங்களைத் தீட்டிப் பேதங்களைக் காட்டுவது பண்டைத்தமிழரது கலை நுட்பமாகும்.

மட்டக்களப்பில் கோயில்களிலும், வீடுகளிலும், பொது இடங்களிலும், ஓலைச்சுவடிகளிலும் ஓவியங்கள் வரையப்பட்டன. பலவகைப்பட்ட கோலங்களிலும், பாவங்களிலும் வரைந்துள்ளதை மட்டக்களப்புக் கோயில்கள் தோறும் காணமுடிகிறது. தமிழரது பண்பாட்டைக் காட்டி நிற்கும் ஊடகமாக ஓவியக் கலை விளங்குகின்றது.

பழம்பெரும் கோயில்களிலெல்லாம் பெருமளவான ஓவியங்கள் சிறப்புற்று விளங்கின. கோயில்களில் தேர்கள், வாகனங்கள், கொடியேற்றச் சீலை, திரைச்சீலை, சுவர்கள், நிலைகள், கதவுகள் முதலிய பொருட்களில் எல்லாம் ஓவியக்கலையின் மகத்துவத்தன்மை வெளிப்பட்டன. சிறிய அமைப்புடைய ஆலயங்களிலும் தக்கவாறு ஓவியங்கள் விளங்கின.

## ix. ஓலைச் சுவடியாக்கல்

### ஓலைகளைப் பதமாக்குதல்

மட்டக்களப்புப் பிரதேசத்தில் ஓலையில் எழுதுவதற்கு உபயோகமான வகையில் ஓலைகளைப் பதமாக்கி எடுக்கும் முறை மிகவும் சிரமமான பணியாகும். எழுதுவதற்கு உபயோகப்படும் சாதனமாகிய ஓலை, பனையோலைக் குருத்துக்கு முந்திய பனையோலையில் இருந்து பெறப்படும். பெறப்பட்ட ஓலையின் ஈர்க்கிலை வார்ந்தெடுத்து பின்பு அவ் ஓலைச் சட்டங்களைச் சுருட்டி எடுப்பர். இச் சுருள் "வட்டு" எனப் பெயர்பெறும். அவற்றைப் பெரிய பாத்திரமொன்றில் இட்டு நீரில் இளஞ்சூட்டில் அவித்து எடுப்பர். அவித்தெடுக்கப்பட்ட ஓலைச் சுருள்களைச் சுமார் ஒரு வார காலத்துக்கு அரிவெயிலிற் காயவைப்பர். அதாவது சூரியக்கதிர் நேரே படாதவாறு காயவைத்து எடுப்பர். காய்ந்த ஓலைகளை மரக்குற்றியினால் பாரமேற்றிச் சுருட் தன்மை இல்லாதவாறு பெறப்படும்.


பின்னர் இதனை ஏட்டின் அளவுக்குரிய நீள அகலங்களில் வெட்டிச் சீராக்கி எடுப்பர். இதன் சிறிய ஏட்டுச் சுவடிக்குரிய ஓலையானது ஏறத்தாழ இரண்டு அங்குல அகலமும், ஆறு அங்குல நீளமும் உடைய அளவாக

எடுக்கப்படும். பெரிய ஏட்டுச் சுவடிக்காக ஏறத்தாழ மூன்றங்குல அகலமும், இருபத்தினான்கு அங்குல நீளமும் கொண்ட அளவினதாகச் சீராக்கி அமைத்துக் கொள்வர்.

**எழுத்தாணி**

மேற்காட்டியவாறு சீராக்கி அமைத்துப் பெறப்பட்ட ஓலையில் எழுத்தாணி என்னும் எழுதுகருவி கொண்டு எழுதுவர். எழுத்தாணியானது குடை எழுத் தாணி, எழுத்தாணிக் கத்தி என இரு வகைகளில் உள்ளன. குடை எழுத்தாணி என்பது உருக்கால் செய்யப்பட்டது. அது ஒரு பக்கத்தில் கூரான முனை யையும், அம் முனையிலிருந்து சற்றுப் பெரிதாகிச் சென்று முடிவடையும் மறுமுனையையும் கொண்ட அமைப்பை உடையது. அதாவது முடிவடையும் பகுதி சற்று பெருத்துக் குடை போன்ற அமைப்பில் காணப்படும். அதனாலே தான் குடை எழுத்தாணி எனப் பெயர்பெற்றது. இதனைப் பெரும்பாலும் ஓலையில் எழுதிப் பழகுவோரே பயன்படுத்துவர். குடை எழுத்தாணி ஏறத்தாழ ஆறு அங்குலத்துக்கும், ஒன்பது அங்குலத்துக்கும் இடைப்பட்ட நீளமுடையதாக இருக்கும்.

இரண்டாவது வகையான எழுத்தாணி எழுதுவதற்கு இலகுவாக இருக்கும். அதற்கேற்ப உருவம், நீளம், பாரம் என்பன அமைந்திருக்கும். உருக்கினாற் செய்யப் பெற்ற எழுத்தாணியும் கத்தியும் மரத்திற் பொருத்தப் பட்டுப் பயன்படுத்தப்படும். மரத்திற்குப் பதிலாகப் பெரும்பாலும் யானைத் தந்தத்தில் பொருத்தியும் பயன்படுத்துவர். இவற்றைப் பொருத்துவதற்கேற்ப மரமோ யானைத் தந்தமோ சற்று உருளை வடிவினதாய் அழகுற வடிவமைப்புச் செய்யப்படும். எழுத்தாணி எழுதுவதற்கும் கத்தி ஓலையை வெட்டிச் சீரமைக் கவும் பயன்படும். இதனை எழுத்தாணிக் கத்தி எனக்கூறுவர். (கீழ்வரும் படங்களைப் பார்க்கவும்)



எழுத்தாணி

## எழுதும் முறை


எழுத்தாணியை வலதுகையாற் பிடித்து எழுதும் கூரின் சற்றுமேற் பகுதியை இடக் கையின் பெருவிரல் தாங்கிக் கொள்ளுமாறு வகைசெய்வர். அதாவது இடதுபெருவிரலின் நகப்பகுதிக்கும் மொளிப்பகுதிக்கும் இடையில் கூர்ப் பகுதிதாங்கும்.



## ஏடு எழுதுதல்

எழுதப்படும் ஓலையில் இரு அந்தங்களும் சுமார் ஓர் அங்குலம் எழுதாது வெற்றிடமாக விடப்படும். ஓலையின் இருபக்கமும் பயன்படுத்தப்படும். ஓலையில் எழுத்தாணியால் எழுதுவதற்கு போதிய பயிற்சியும் நீண்டகால அனுபவமும் தேவை. இதில் எழுதப்படும் எழுத்துக்கள் மேற்புள்ளி, முற்றுப் புள்ளி, அரைப்புள்ளி, காற்புள்ளி முதலிய குறிகளைக் கொண்டிருக்கவில்லை. அத்துடன் சொற்களைத் தனித் தனியே பிரித்தெழுதாமல் வரிகளாக எழுதப் பட்டன.


ஓலையில் வெற்றிடமாகவிடப்பட்ட முன் அந்தத்தில் பக்கஎண்களும் விடயத்துக்கான தலையங்கமும் எழுதப்பட்டுவந்துள்ளன. பக்கஎண்கள் தமிழ் எழுத்துக்களாலேயே எழுதப்பட்டன. உதாரணமாக பக்கம் 1,2,3 க்குப் பதிலாக முறையே க,உ,ங என எழுதப்படும் முறையே வழக்கிலிருந்தது.



அது மட்டுமின்றி எழுத்துக்கள் ஒரே அளவுடையதாகவும் குற்றுக்கள் வையாமலும் எழுதப்பட்டன. பெரும்பாலும் சொற்களிற்கிடையில் இடைவெளி இல்லாமல் எழுதப்பெறும்.

**முடிவுரை எழுதுதல்**

விடயம் எழுதிமுடிக்கப் பெற்றதும் முடிக்கப்பட்ட ஆண்டு, மாதம், திகதி, நாள், நட்சத்திரம் என்பவற்றைக் கூறி முதன் நூல் எழுதியவரது பெயரையும் குறிப்பிட்டு இப் பிரதிசெய்தவற்றில் ஏற்பட்டகுற்று, கிறுக்கு, வரிமாறாட்டம் என்பவற்றைப் பொறுத்துத் திருத்தி வாசிக்குமாறும் வேண்டுவதாக குறிப்பிடப்படும். ஏடு வாசிப்போர் ஏடு வாசித்து இதனையும் வாசிப்பது வழக்காக இருந்து வருகிறது. பெரும்பாலும் முடிவுரை எனத் தலைப்பிட்டு எழுதப்பட மாட்டாது.



**துளையிடுதல்**

இவ் ஓலையில் இரும்பினால் தயாரிக்கப்பட்ட துளைகருவி மூலம் இரு துளைகள் போடப்படும். இத்துளைகள் பெரும்பாலும் கோவையை நாடாவினாற் கட்டுவதற்கு தற்காலத்து ''பஞ்சர்'' கொண்டு துளையிட்டதைப் போன்றதாக இருக்கும்.

**கறுப்புமை பூசுதல்**

ஓலையில் விடயம் எழுதி முற்றுப் பெற்றதும் கையாந்தகரை போன்ற தாவரங்களின் சாற்றினையும் முட்கிளுவை மரத்தின் கரியையும் சேர்த்துக் கரியமை தயாரிக்கப்படும். தயாரித்த கரியமையை ஓலையின் இரு பக்கமும் பூசிய பின்னர் அரிசித் தவிடுகொண்டு அல்லது வெள்ளைத் துணியினால் உரைத்துத் துடைத்து துலங்கச் செய்யப்பெறும். நீண்டகாலப் பயன்பாட்டிற்கும் பூச்சிகளின் தாக்கத்திற்கும் உட்படாமல் இருப்பதற்கும் எழுத்துக்கள் துலங்கித் தெரிவதற்கும் கரியமை பூசப்படும்.

## ஓலைச் சுவடி [ஏட்டு உரு]

விடயம் எழுதப்பட்டு முடிவுற்றதும் ஓலையின் நீளத்துக்கும் அகலத்துக்கும் அமைய மரத்தினால் இரு பலகைத் தடிகள் செய்யப்படும். இப்பலகைத் தடியினை "கம்பை" என அழைப்பர். இக் கம்பைகள் இரண்டுக்கும் இடையில் எழுதிய ஓலைகளை இலக்க ஒழுங்குமுறையுடன் வைத்து மேற் கூறப் பட்டவாறு துளையிடப்பட்ட இரு துளைகளில் ஒன்றினூடாக முற்றிய துவரங் கம்பினை அத்துளையின் அளவுக்குசீவி எடுத்த அக்கம்பினைச் செலுத்தியும் அத் தடியின் பருத்ததலைப் பகுதியில் கட்டிய நூற் கயிற்றை மறு துளை யினூடாகச் செலுத்தி அந் நூற் கயிற்றினால் கம்பைகளுக்கு இடையிலுள்ள ஓலைகளைக் கம்பைகளுடன் சேர்த்துச் சுற்றிக் கட்டுவர். இவ்வாறு கட்டப் பட்டு ஏட்டுருப் பெற்ற பின்னர் ஏடு எனப் பெயர் பெறுகிறது.

## பெட்டகமும் நாற்காலியும்

ஏடுகள் வீடுகளிலும் கோயில்களிலும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. கோயில்களில் பயன்படுத்தும் ஏடுகளைத் தெய்வீகப் பொருளாகக் கருதி வருகின்றனர். வீடுகளிலும், கோயில்களிலும் ஏடு பாவனைக்குப் பயன் படுத்தாத வேளைகளில் மரத்தினால் அழகுறச் செய்யப்பெற்ற பெட்டியிலோ பெட்டகத்திலோ வைத்துப் பேணிப் பாதுகாத்து வந்துள்ளனர். கோயில்களில் படிக்கப்படும் போது நாற்காலியை ஆசனமாகக் கொண்டு தூய துணி விரித்து அதன் மேல் பாடப்பெறும் ஏட்டினை வைத்து அதற்கு மடைவைத்துத் தூப தீபங்காட்டி வழிபாடு செய்தே படிக்கத் தொடங்குவர். நாற்காலி என்பது சுமார் ஒரு முழ உயரமான நான்கு கால்களைக் கொண்ட ஒரு முழ அகலமுடைய பலகையினாற் செய்யப் பெற்றதாகும். சுருங்கக் கூறின் மிகச் சிறிய மேசைபோன்று காணப்பெறும்.

மட்டக்களப்பில் ஓலைச்சுவடிகளிலும் கையேட்டுப் பிரதிகளிலும் கல்வெட்டுகள், கண்ணகி வழக்குரை, மகாபாரதம், சோதிடங்கள், வைத்திய வாகடங்கள், அம்மானைகள், பத்திகள், புராணங்கள், தோத்திரப் பாடல்கள், நிகண்டுகள் முதலியன செய்யுளாகவும் வசனமாகவும் அமைந்து காணப் பட்டுள்ளன.

# 6

# தமிழ்மொழியும் இலக்கியமும்

மட்டக்களப்புப் பிரதேசம் வாவி, ஆறு, காடு, மலை ஆகிய இயற்கை அமைப்புக்களால் பிரிக்கப்பட்டிருந்தலால் வேறு பிரதேச மக்களுடன் தொடர்புகொள்ள இயலவில்லை. அதன் காரணமாக மட்டக்களப்பு மொழி வழக்கு தனித்துவமான பண்புகள் பலவற்றைக் கொண்டு விளங்குகின்றது. அவர்களது பேச்சு மொழிவழக்கில் பழந்தமிழ்ச் சொற்கள் சில ஒலி மாறு பட்டும் சில மாறுபடாதும் இடம்பெறுவதைக் காணமுடிகிறது. இப்பிரதேச மொழியியல் வழக்கானது வாய்மொழி இலக்கியங்களிலும் எழுத்து இலக்கியங்களிலும் இடம்பெற்றுள்ளன. தொழில் நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படும் சொற்களும் குறிப்பிடத்தக்கன. எழுத்திலக்கியங்கள் ஓலைச் சுவடிகளிலும் கையேட்டுப் பிரதிகளிலும் அச்சுருப்பெற்றவைகளிலும் செய்யுளாகவும் வசனமாகவும் உள்ளன. இப்பிரதேசத்தின் இவ்விருவகை இலக்கியங்கள் பற்றி இவ்வியலில் ஆராயப்பட்டுள்ளன. ஆய்வுக்குட்பட்ட காலத்துள் மட்டக்களப்புப் பிரதேசத்தில் தமிழ்ப் பணிபுரிந்த இப்பிரதேசத் தமிழ்ப் பெரியார்களது கிடைக்கப்பெற்ற தரவுகளை ஆதாரமாகக் கொண்டு அவர்களது விபரங்கள் இவ்வியலில் இடம் பெறுகின்றன.

## i. தமிழ்மொழி வழக்கு

மட்டக்களப்புப் பிரதேசம் ஏனைய பிரதேசங்களிலிருந்து ஆற்றாலும் காட்டாலும் மலையாலும் பிறபகுதி மக்களோடு நெருங்கிய தொடர்பு கொள்ள இயலாதவாறு அண்மைக் காலம் வரை பிரிக்கப்பட்டிருந்தது. இங்ஙனம் வாழ்வியல் அமைந்திருந்ததால் அவர்களது தமிழ்மொழி வழக்கு தனித்துவமான பல பண்பியல்புகளைக் கொண்டு விளங்குகிறது. யாழ்ப்பாண வழக்குத் தமிழோடு சில பண்பியல்புகள் ஒன்றித்தும், மலைநாட்டு வழக்குத் தமிழோடு வேறாயும் காணப்பெறுகிறது.

யாழ்ப்பாணத்துத் தமிழே மிகவும் செந்தமிழ்ப் பண்புடைய தென்ற கருத்து 1918 ஆம் ஆண்டில் ஹோர்ணல் (Hornell) என்பவரால் வெளியிடப் பட்டதாக கூய்ப்பர் (Kuiper) தெரிவித்துள்ளார். மட்டக்களப்புத் தமிழே மிகவும் செந்தமிழ்ப் பண்புடையதென்ற கருத்து 1966 ஆம்ஆண்டில் கமீல் சுவெலபில்லினால் (Kamil Zvelebil, 1996, pp 113-138) வெளியிடப்பட்டது. கமீல் சுவெலபில்லின் கருத்துப்படி மட்டக்களப்புப் பேச்சுத் தமிழ், பேசப்படும் எல்லாத் தமிழ் வழக்குகளிலும் அதிகம் இலக்கியத் தன்மை வாய்ந்ததாக உள்ளது. இது சில பழைய பண்புகளைப் பாதுகாக்கின்றது. சில கவர்ச்சியூட்டும் மாறுதல்களை மேம்படுத்துகையில் தமிழின் ஏனைய வழக்குகளை விட இது உண்மைத் தன்மையான இலக்கிய விதிமுறைகளைத் தக்க வைத்துள்ளது. அத்துடன் மட்டக்களப்புப் பேச்சுத் தமிழ் சில மிகவும் குறிப்பிட்ட சொற் களஞ்சியப் பண்புகளைக் கொண்டு அதன் ஒலியியல் தன்கூறுதொடர்பால் ஏனைய இலங்கைத் தமிழ்ப் பேச்சு வழக்குகளுடன் வகைப்படுத்தப் பட்டுள்ளது. இத்தகைய பெருமையுடையது மட்டக்களப்புத் தமிழ் என்பது தமிழ் ஆய்வியலாளர் பலரின் கருத்தாகும்.

வழக்குமொழி எழுத்துத் தொகையிலும் மாத்திரையளவிலும் சுருங்கி நடத்தலை விரும்பும் (விபுலானந்த அடிகள், 1973). இங்ஙனம் சுருங்கியோ திரிந்தோ மொழியில் இடம்பெறுதலுக்குரிய ஏதுக்களாக நேரச்சுருக்கம், விரைவு, அவலம், குதூகலம், பயம், அறியாமை முதலியவற்றைக் கூறலாம். உதாரணமாக தேவையில்லை - தேவல, வாருங்கள் - வாங்க, திறவுங்கள் - திறங்க, அருமருந்தன்ன - அருமந்த, மைத்துனி - மதனி, தம்பி - எம்பி, மறுகால் - மறுகா போன்றதான சொற்களைக் காணலாம்.

## ஒலி மாற்றங்கள்

மேற்கூறியவாறு மட்டக்களப்பில் ஒலி மாறுபாடுற்றுத் தோன்றிய சொற்கள் சிலவற்றுக்கு மேல் வரும் எடுத்துக்காட்டுகள் உதாரணங்களாகும்.

1. டகரம் றகரமாகவும், றகரம் தகரமாகவும், தகரம் சகரமாகவும் வழங்குகின்றன.

   எடுத்துக்காட்டு : போய்விட்டது- போயிற்று, ஆகிவிட்டது- ஆயிற்று.
   வெற்றிலை- வெத்திலை, நாற்பது- நாப்பது,
   காய்த்தது- காய்ச்சது, உரித்தது- உரிச்சது.

2. வருமொழி வல்லொற்றுக்கு இனமாக ஈற்றில் நிற்கும் மெல்லொற்றுத் திரியும்.

   எடுத்துக்காட்டு : ஆண்பிள்ளை - ஆம்பிளை, பெண்பிள்ளை - பெம்பிளை

3. மொழி முதல் வகரம் உகரமாகவும் திரியும்.
எடுத்துக்காட்டு : வீடு - ஊடு, விழுந்து - உழுந்து

4. எகரம் ஒகரமாதலும் உண்டு.
எடுத்துக்காட்டு : பெண்பிள்ளை - பொம்பிளை

5. ஐகாரம் அகரமாய்த் திரியும்.
எடுத்துக்காட்டு : எங்களுடைய - எங்கட, ஐம்பது- அம்பது

6. ஏன் என்னும் விகுதி அன் எனத் திரிந்து ஒலிக்கும்.
எடுத்துக்காட்டு : அடித்தேன் - அடிச்சன், படிக்கிறேன்- படிக்கிறன்

7. ஏகார உயிர் ஆ, ஓ என மாற்றமுறும்.
எடுத்துக்காட்டு : சேவல்- சாவல், பேடு- போடு

8. மொழி இடையில் ரகரம் லகரமாகத் திரிந்து வரும்.
எடுத்துக்காட்டு : குரவை - குலவை, சரவை- சலவை

9. யகரம் சகரமாகவும் திரிந்து வழங்கும்.
எடுத்துக்காட்டு : வியளம்- விசளம், குயவன்- குசவன்

10. எண்ணுப் பெயரில் னகரம் மகரமாகவும், மகரம் னகரமாகவும், றகரம் பகரமாகவும் மாற்றம் பெறுகிறது.
எடுத்துக்காட்டு : ஒன்பது - ஒம்பது, ஐம்பது - அன்பது, நாற்பது - நாப்பது

மட்டக்களப்பில் எண்கள் ஒண்டு, ரெண்டு, மூணு, நாலு, அஞ்சி எனவும் வழக்குத் தமிழில் வழங்குகின்றன.

## பழந்தமிழ் சொற்கள்

பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்பெறும் தமிழ்ச் சொற்கள் மட்டக்களப்பு வழக்குத் தமிழிலும் இடம் பெறுகின்றன. உதாரணமாக, மட்டக்களப்பில் வழங்கும் பேச்சுத்தமிழில் பயன்படும் ''கா'' என்னும் அசைச்சொல் தொல் காப்பியர் சொல்லதிகாரம் - இடையியலில் கூறிய

*யா,கா,பிற,பிறக்கு,அரோ, போ, மாது என வரூஉம்*
*ஆயேழ் சொல்லும் அசை நிலைக் கிளவி*

எனக்கூறிய ஏழுவகை அசைச் சொற்களில் ''கா'' ஒன்றாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. கா என்னும் அசைநிலை இடைச்சொல்லாகும். இவ் அசைச் சொல் கலித்தொகையில் மேல்வருமாறு இடம் பெற்றுள்ளது:

*................ இவண் காண்டிகா*
*வேய் நலம் இழந்த தோள் கவின் வாட இழப்பாளை*
(கலி பாடல் 99. வரி 14-15)

அது மட்டக்களப்பில் என்னகா, ஏங்கா, எலக்கா, வாகா, இருகா, போகா, நடகா எனப் பேசப்படுகின்றன. மட்டக்களப்பில் தனது சமவயதொத்த அல்லது வயதிலும் கூடிய பெண்ணின் மனம் கோடாமல் கூறும் அன்பிற் பாற்பட்ட சொல்லாகக் கொள்ளப்படுகிறது. அது நாட்டார் இலக்கியத்திலும் இடம்பிடித்துள்ளது.

உதாரணமாக,

*புள்ளலெக்கா புள்ளலெக்கா- உன்ர*
*புருசனெங்க போனதுகா*
*கல்லூட்டுத் திண்ணையில*
*கதை பழகப் போனதுகா.*

என இப்பாடலில் காணப்பெறுகிறது.

மட்டக்களப்பு மொழி வழக்கில் வருகின்ற எலக்கா என்பது கலித் தொகையில் வருகின்ற எல்லா என்பதன் திரிபாகும். எலுவன், எல்லா, எலா போன்ற பழந்தமிழின் விளிப்பெயர்ச் சொற்களின் திரிபான ''இல'' என்ப தனுடன் ''கா'' என்னும் அசைச் சொல்லும் சேர்ந்து இலக்கா என்னும் விளிச்சொல்லாகி மட்டக்களப்பின் வழக்கு மொழியாக விளங்குகிறது. மட்டக்களப்புப் பேச்சு மொழி வழக்கானது பண்டைய தமிழ்ச் சொற்களின் பொருள் சார்ந்த தோற்ற வடிவங்களாகும்.

இன்னுமோர் உதாரணத்திற்கு அதர் என்னும் சொல்லை எடுத்துக் காட்டலாம். மட்டக்களப்பு மொழி வழக்கில் அதர் என்பது ஒற்றையடி வழிப்பாதையைக் குறிக்கும் சொல்லாகும். அதர் எனும் சொல்லானது மருதன் இளநாகனார் பாடிய புறநானூற்றில்

*ஆனினங் கலித்த அதர் பல கடந்து*
*மானினங் கலித்த மலைபின் னொழிய*

(பாடல் 138 - பாடல்வரி1-2) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு நோக்கத் தக்கது. மேலும்

*ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா*
*ஊக்கம் உடையானுழை*

(பொருட்பால் - ஊக்கமுடைமை பாடல் 4) எனத் திருக்குறளிலும் வருகின்றது. மேலும் நற்றிணை, கலித்தொகை, பரிபாடல் முதலிய பழந்தமிழ் இலக்கிய நூல்களிலும் இச் சொல் இடம் பெறுகின்றது.

மட்டக்களப்பு மொழி வழக்கில் பழந்தமிழ் இலக்கியச் சொற்கள் திரிபடைந்து வந்தமைக்கு உதாரணமாக பூவல் என்னும் சொல்லைப் பார்க்கலாம். மட்டக்களப்பில் ஆற்றங்கரையிலும் பள்ளப்பாங்கான இடங்களிலும் பாவனைக்காகத் தோண்டப்படும் மடு வழக்கு மொழியில் பூவல் என்றழைக்கப்படும். பண்டை இலக்கியங்களில் அது கூவல் என்றழைக்கப் பட்டது. கூவல் திரிபடைந்து பூவல் எனலாயிற்று. உதாரணமாக,

*களர்ப்படு கூவல் தோண்டி நாளும்,*
*புலைத்தி கழிஇய தூவெள அறுவை*

(ஔவையார் பாடியது. பாடல்311. பாடல் வரி 1-2) எனப் புறநானூற்றிலும்

*வெயில் வெய்துற்ற பரல் அவல் ஒதுக்கில்*
*கணிச்சியில் குழித்த கூவல் நண்ணி*

(நற்றிணைப் பாடல் 240. பாலை. பாடல்வரி 6-7) என நற்றிணையிலும் உள்ளன. கூவல் என்பது பூவல் எனத் திரிபு பெற்றுப் பேசப்படுகிறது.

திரிபடைந்து பேசப்படும் மட்டக்களப்பு மொழி வழக்குக்குச் சொல்லுக்கு இன்னுமோர் உதாரணம் எடுத்துக்காட்டலாம். ஆலயங்களிலும் வீடுகளிலும் பொங்கல் செய்வது வழக்காறு. அப்பொங்கலை புக்கை என்பது மட்டக் களப்புத் தமிழரது மொழி வழக்கு. புற்கை என்னும் பழந்தமிழ் இலக்கியச் சொல் மட்டக்களப்புத் தமிழரிடம் புக்கை எனப் பயின்று வருகிறது. பழந்தமிழ் நூலாகிய புறநானூற்றில்

*என்ஐ புற்கை யுண்டும் பெருந்தோ ளன்னே*

(சாத்தந்தையார் பாடியது. பாடல் 84. பாடல்வரி -1) எனக் குறிப்பிடப் பட்டுள்ளது.

இவ்வாறு அப்புதல் (பூசுதல்), முடுகு (அண்மை), முடுகடி (கிட்டடி), கொள்ளி (விறகு), பௌவல் (பௌவம்), குலவை (குரவை), செக்கர் (சிவந்த), குடி (குலம்), கொண்டல் (காற்று), உணத்தல் (நெருப்பிலோ வெயிலிலோ வாட்டுதல் அல்லது காயவைத்தல்), ஒண்ணா (முடியாது), விரசு (துரத்து), மறுகா (மறுகால்), மப்பிலி (மயிற்பீலி), கிறுகு (திரும்பு), கொள்ளை (அதிகம்) போன்ற பல நூற்றுக்கணக்கான மட்டக்களப்புச் சொற்கள் பழந்தமிழ் சொற்களிலிருந்து இயல்பாயும் திரிபடைந்தும் அமைவுற்றதைக் காணலாம். இவ்வாறு தாவர விலங்குகளுக்குரிய பெயர்களும் திரிபடைந்துள்ளன.

மட்டக்களப்பிற்கே உரியதான சிறப்புச் சொல்லாக ''கிறுகி'' என்னும் வழக்குத் தமிழைக் கொள்ளுதல் வேண்டும். திரும்புதல் என்பதற்கு கிறுகுதல் என்பது மட்டக்களப்புத் தமிழ் வழக்கு. வீட்டின் கதவுகளுக்கு உட்பக்கத்தால்

தாழிடும் மரத்தினால் செய்யப்பெற்ற மரக் கட்டைக் கருவியே கிறுக்கியாகும். மட்டக்களப்பு மக்கள் மட்டுமன்றி ஏனைய தமிழர்களும் பெரும்பாலும் இதனைக் கிறுக்கி என்றே கூறுகின்றனர்.

மட்டக்களப்பில் உள்ள தொழில் முறமைகளுக்கேற்ப சிறப்பான சில சொற்களும் வழக்கில் உள்ளன. இச்சொற்கள் சிலவற்றைக் மேலே காணலாம்.

| | | |
|---|---|---|
| அவரி | - | காற்றிலே பொலி தூற்றுவதற்கு ஏறி நிற்கும் உயரம் |
| அட்டாளை | - | மிக உயரமான பரண். |
| அணியம் | - | தோணியின் முன்புறம். |
| அத்தாங்கு | - | மீன்பிடி கருவி. |
| அரக்குமாடு | - | சூடு மிதிக்கும் மாடுகளின் முதன்மைமாடு. |
| அரக்குச் சிமிழ் | - | களவட்டியில் காவலுக்குப் புதைக்கும் சிமிழ் |
| அல்லை | - | வாவியின் ஓரமாக உன்ன வரவை |
| அளைகள் | - | சிறு நீர்க்கால்கள் |
| ஆணம் | - | நீர்த்தன்மையான ஒருவகைக்கறி (சொதி) |
| ஆயம் | - | காணிக் குத்தகை. |
| இரட்டிப்பு | - | இரண்டாம் உழவு, இரண்டாம் மிதிப்பு. |
| இலவிசம் | - | போடியார் முல்லைக்காரன் ஆகியோருக்கு வேளாண்மைக் காரரினால் வேதனமெதுவுமின்றி செய்து கொடுக்கும் வயற்பகுதி. |
| உப்பட்டி | - | அரிந்த ஒரு கைப்பிடிக் கதிர்கற்றை சில சேர்ந்தது. |
| உப்பட்டிக் கட்டு | - | உப்பட்டிகள் சிலசேர்ந்நது. |
| உமல் | - | பன் புல்லினால் செய்யப்பட்ட (சுமார் ஒரு மரக்கால் அரிசி கொள்ளளவு) ஒரு வகைப்பை. |
| எழுவான் | - | கிழக்குத் திசை. |
| ஒட்டுத்தாள் | - | கதிர் அரிந்தபின் எஞ்சிநிற்கும் வேளாண்மையின் அடிப் பகுதி. |
| கங்களவு நீர் | - | பயிருக்கு முதற்றடைவையாகப் பாய்ச்சும் நீர். |
| கடற்கரும்பு | - | மீன். |
| கடற்குதிரை | - | தோணி. |
| கணக்கன் | - | மரக்கால் |
| கட்டுதல் | - | பொலிஅள்ளுதல். |
| கந்து | - | சிறிய சூடு. |
| கந்துமுறி | - | மூன்றாம் தரநெல். |
| கரப்பு | - | மீன்பிடிகருவி. |

கருங்காய் - நெல்லிற் கிடக்கும் மண் கட்டிகள்.

கலப்பை - வயலை உழவப் பயன் படுத்தும் உபகரணம். இது நுகம் நுகக்கால் (ஏர்க்கால்), மேழி, கடைகால் முதலிய பகுதிகளை உடையது.

கலப்பைச் சார் - உழவின் போது கலப்பை சென்றவழி.

களவட்டி - சூடடிக்கும் களம். (சூடடிக்கும் இடம், நெற்களம்).

கள்ளன் - உள்ளீடற்ற நெல் (பதர்)

கறவைமாடு - பால் கறக்கும் மாடு.

கறவைமுட்டி - பாலைக் கறந்தெடுக்கும் முட்டி.

கன்னட்டி - சிறிய வரவை

கால்வாங்குதல் - விதை முளைத்தல்.

காலையடி - மாடுகளை ஒன்று சேர்க்கும் இடம்.

குருவிக் காரன் - வயலில் விளைந்த நெற்கதிர்களை குருவிகளிடமிருந்து காப்பவனும் போடியாரின் குற்றேவல் செய்யும் சிறுவனுமாய் உள்ளவன்.

குருவிக்காரன் மூலை - குரவிக்காரனுக்கு இலவசமாகக் கொடுக்கும் வயலின் சிறுபகுதி.

குஞ்சுவாயன் - கைப்பெட்டி.

குழு மாடு - மாட்டுக்காரனுக்கு கட்டுப்படாது காட்டில் வாழும் கொழுத்தமாடு.

கூழக்கையன் - பேய்.

கெழுத்திமீன் - கெளிறு மீன்

கொண்டடி - மீன்பிடிகருவி

கொல்லன் - கத்தி

கோட்டை - வைக்கோலால் அழகாகச் செய்யப்பெற்றதும் தூக்கிச் செல்லக் கூடியதுமான சிறு நெற்கூடு.

கோல் - மாட்டின் சாணம்.

சம்பாப்பால் - கன்றையிழந்த மாட்டிலிருந்து பெறப்படும் பால்.

சிறப்பை - மாடுகளின் (பட்டி) முதன்மை (தலையாரி) மாட்டின் கழுத்திற் கட்டப்படும் மரத்தாலாகிய மணி. இம்மணி பறவைகளைத் துரத்துவதற்கும் சோழன், தினை முதலிய சேனைகளில் உபயோகப்படுத்தப்படும்.

சிறாம்பி - சிறிய பரண்.

| | | |
|---|---|---|
| சூடு | - | நூற்றுக் கணக்கான பலகட்டுகள் சேர்ந்த நெற்கதிர்க் குவியல். |
| தண்ணீர்ச்சோறு | - | பழஞ் சோறு. |
| தாள் | - | நெற்பயிரின் கீழ்ப்பகுதி. |
| தாறாப் புட்டி | - | வயலில் வேலை செய்வோர் அமருவதற்காக வயலின் நடுவில் அமைக்கும் மேடை. |
| நட்டுமை | - | நீர்க்கசிவினால் வரம்பில் உண்டாகும் சிறுதுவாரம். |
| நிலையெடுப்பு | - | முதல் உழவு. |
| நெடுமுழவன் / நெடுவாயன் | - | கயிறு |
| படிநெல் | - | போடியாரால் உழவனுக்கு வாராந்தமோ மாதாந்தமோ தா பரிப்புக்காக வழங்கும் நெல். |
| படுவான் | - | மேற்குத்திசை. |
| பட்டறை | - | வைக்கோலால் செய்யப்பெற்ற பெரிய நெற்கூடு. |
| பட்டி | - | பலமாடுகள் சேர்ந்தது. |
| பட்டிக்காரன் | - | மாடுகளின் மேற்பார்வையாளன். |
| பதக்கடை | - | மிகக்குறைந்த உள்ளீடுள்ள நெல். |
| பல்லுவாயன் | - | வேலைக்காரக் கம்பு. |
| பால்முட்டி | - | பாலைக் கறந்து சேகரிக்கும் முட்டி |
| பாவறை | - | முதலை வாழுமிடம். |
| புறகம் | - | தோணியின் பிற்பகுதி (கடைசால்) |
| பெருமிதி | - | நிலையெடுப்புக்குப் பதிலாக எருமை மாடுகளைக் கொண்டு மிதிக்கும் முதலாவதுமிதி. |
| பெருவாயன் | - | கடகம் |
| பொலி | - | நெல் |
| பொலிக்கொடி | - | வைக்கோல். |
| போடியார் | - | பல ஏக்கர் வயல்களின் உரிமையாளன். |
| போரேற்றுதல் | - | சூடு மிதிப்பதற்காக நெற்கதிர்த்தாள் குவியலின் மீது வாரிக்காலன் நிரைகளை ஏற்றுதல் |
| மாவக்கை | - | அரிந்த ஒரு கைப்பிடிக் கதிர்க்கற்றை. |
| மயன்டை | - | அந்தி நேரம். |
| மிதியான் கன்று | - | பால்குடி மறக்கும் நிலையிலுள்ள பெருங்கன்று. |
| முல்லைக்காரன் | - | வயற்செய்கையாளருள் முதல்வன். |
| வக்கடை | - | ஒரு வரவையிலிருந்து நீர் வெளியில் செல்வதற்கான வழி |

வந்தை - விதைப்பதற்காக முளை தயாரித்தலின் போது முளைக்காத நெல்.
வரவைகள் - ஒருவயலின் சிறுசிறு பகுதிகள்.
வருணன் - மழை.
வலிச்சான் - ரொட்டி
வலை - மீன்பிடிகருவி.
வாடி - பட்டிக்காரன் மாடுகளை வளர்ப்புச் செய்வதற்காக தங்கி வாழும் இடம்
வாட்டி - சூடுமிதிக்கும் மாடுகளின் வரிசையின் கடைசிமாடு/ களவட்டியின் முடிவுப் பகுதி.
வாட்டுதல் - நெற்கதிர்த்தாளிலிருந்து நெல்லை வேறாக்குதல்.
வாய்க்கால் - வயலுக்கு நீர்செல்லும் வழி.
வாரிக்காலன் - சூடு மிதிக்கும் மாடு.
விசுக்குவாயன் - கம்பு
விரிஞ்சான் - புகையிலை.
வெட்டுத்தத்தி - வேளாண்மை அறுவடை செய்யும் குழு.
வெள்ளம் - தண்ணீர்.
வெள்ளோடன் - தேங்காய்.
வைரப்பொலி - தூற்றிய முதலாம்தர நெல்

தமிழ் மொழி மேலும் செம்மை பெற்றோங்க தூயநெறியில் இலக்கணம் வகுத்த தொல்காப்பியர் சொல்லதிகாரத்தை நிறைவு செய்யும்போது தான் கூறாதுள்ள இலக்கணம் உளவெனில் பல்வேறு நூல்களை ஆராய்ந்து செய்யுள் வழக்கிலும் உலக வழக்கிலும் அமைத்துக் கொள்ளுமாறு சான்றோர்களைக் கேட்டுக் கொள்ளுகிறார். அப்புறநடைச் செய்யுள் மேல்வருமாறு.

*செய்யுள் மருங்கினும் வழக்கியல் மருங்கினும்*
*மெய்பெறக் கிளந்த கிளவி எல்லாம்*
*பல்வேறு செய்தியின் நூல்நெறி பிழையாது*
*சொல் வரைந்து அறியப் பிரித்தனர் காட்டல்*

தொல்காப்பியர் கூற்றுக்கு மட்டக்களப்பு வழக்கிலுள்ள சில சொற்கள் பொருந்துவனவாகும்.

## ii. இலக்கியங்கள்

மட்டக்களப்பு இலக்கியங்களிற் பிரதேசத் தமிழ் மொழி வழக்கு (பிரதேசச் சொல் வழக்கு) வடிவும் மரபும் கொண்டு உருப்பெற்று நிற்பதைக் காணலாம். இவை பொதுவாக அம்மானை, காவியங்கள், இதிகாசங்கள் ஆகியவற்றிலே அடங்கியுள்ளன. இவ்வாறான மட்டக்களப்புப் பிரதேசத் தமிழரது பண்பாடு தொடர்பான இலக்கிய வடிவங்கள் மரபு வழியாகப் பேணப்பட்டு வந்துள்ளன. அவற்றை மேல்வருமாறு வகைப்படுத்தலாம்:

1. பண்டைக்காலம் முதலாக எழுத்து வடிவத்தைப்பெறாது வாய் மொழியாக இருந்து வந்துள்ளவை (வாய்மொழி இலக்கியங்கள்).
2. ஓலைச்சுவடிகளிலும், கையேட்டுப் பிரதிகளிலும் செய்யுளாகவும் வசனமாகவும் இருந்து வந்துள்ளவை.
3. அச்சிட்டு நூலாக வெளிவந்தவை.

### வாய்மொழி இலக்கியங்கள்

தனிமனிதனுக்கோ குழுவுக்கோ மகிழ்ச்சி, துன்பம், சோர்வு போன்றன ஏற்படும்பொழுது உணர்ச்சிகள் உள்ளத்திலிருந்து வாய்வழியாக வெளிக் கொணரப்படுகின்றன. இந்த உணர்ச்சி வெளிப்பாடானது பகலிலும், இருளிலும், விருப்பிலும் வெறுப்பிலும், காதலிலும் எனப் பலவாறு பாடல் களாகத் தோற்றம்பெறுகின்றன.

இவ்வாய்மொழி இலக்கியங்கள் மட்டக்களப்புப் பிரதேசத்திற் பொது வாகப் படுவான்கரைப் பகுதியிலேயே பெரும்பாலும் இன்று வரை நிலவி வருகின்றன. எழுவான்கரைப் பகுதியிற் குறிப்பாக நகரப்பகுதிகளிற் புதுவித நாகரிகப் போக்கினால் அருகிச் செல்லுகின்றன. இவை ஏட்டில் எழுதாத வாய்மொழி இலக்கியங்களாகப் பாடல்களிலும் கதைகளிலும் பழமொழி களிலும் தமிழ் மொழியின் சால்பு காட்டி நிற்கின்றன.

### வாய்மொழிப் பாடல்கள்

வாய்மொழி மரபில்வரும் நாட்டார் இலக்கியம் பாமர மக்களின் வாழ்க்கையிற் தோன்றுவது. கற்றோரால் ஆக்கப்படும் ஏட்டிலக்கியத்தை (செந்நெறி இலக்கியத்தை)விடத் தொன்மை வாய்ந்ததாகும். சகல மொழிகளிலும் செந்நெறி இலக்கியம் தோற்றம் பெறுவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே நாட்டார் இலக்கியம் தோன்றி வளர்ந்து மக்கள் வாழ்க்கையுடன் வளம் பெற்றுவந்துள்ளது. அத்துடன் அம்மொழிகளிற் செந்நெறி இலக்கியம் தோன்றுவதற்கும் அவற்றின் வளர்ச்சிக்கும் நாட்டார் இலக்கியம் முன்னோடி

யாகவும் கருவூலமாகவும் அமைந்தது என்பதை சாட்விக், குமுறே, மில்பன், பரி முதலிய அறிஞர்கள் இலக்கிய வளர்ச்சியின் மூலம் நிறுவியுள்ளனர் (பாலசுந்தரம், இ., 1974).

நாட்டர் வழக்காற்றியலின் ஒருபகுதியான வாய்மொழிப்பாடல்கள் மருத்துவிச்சிப்பாடல், தாலாட்டுப் பாடல், தொழிற் பாடல், காதற் பாடல், ஒப்பாரிப்பாடல், வசந்தன் பாடல், வேடிக்கைப் பாடல், ஊஞ்சற் பாடல், அம்மானைப் பாடல், சமய வழிபாட்டுப் பாடல், சிந்துப் பாடல், விளையாட்டுப் பாடல் எனப் பலவகைப்படும். இவை எளிமை, இனிமை, தூய்மை முதலிய பண்புகளைக் கொண்டவையாகும். மனதிலே தோன்றுவதை உள்ளவாறே தெளிவாக வெளிக்கொணரும் பண்பினை அவற்றிலே காணலாம்.

எழுத்து வடிவம் வழக்கிற்கு வருமுன் எல்லா இலக்கியங்களும் வாய்மொழியாகவே வழங்கின என்பதையும் பழைய வீரயுகப் பாடல்கள் அனைத்தும் வாய்மொழியாகவே விளங்கின என்பதையும் ஆய்வாளர்கள் நிறுவியுள்ளனர் (Kailasapathi,K., 1968). நாட்டார் இலக்கியங்கள் செந்நெறி இலக்கியங்கள் சொல்லாத பல செய்திகளைச் சொல்லுகின்றன. நாடுகளின் இனக் குழுமங்களின் எழுதாத வரலாறுகள், சிந்தனை முறைகள், பழக்க வழக்கங்கள், பண்பாட்டு நடைமுறைகள், மொழி நடைகள் என்பவற்றை நாட்டார் இலக்கியங்கள் புலப்படுத்துகின்றன. (அம்மன்கிளி முருகதாஸ், 2007). இதனை யார்? எப்பொழுது பாடினார்? என்பதை அறியமுடியாதுள்ளது. ஏட்டிலக்கியம் வாய்மொழி இலக்கியமான நாட்டுப்பாடல் ஆகியவற்றுள் எது முந்தியது எனச் சந்தேகம் எழுவதற்கு இடமே இல்லை. வாய் மொழி இலக்கியமான நாட்டுப்பாடல்களே முதற்கண் தோன்றியுள்ளன (சுசீந்திர ராசாவும், க., குழுவினரும், 1984). இவை பெரும்பாலும் அகப்பொருள் துறையைச் சார்ந்தவைகளிலே தோன்றின.

மட்டக்களப்புத் தமிழரிடையே விளங்கிய வாய் மொழிப்புலவர்களின் விபரங்கள் பற்றிய விபரங்களைப் பூரணமாக அறிய முடியாவிட்டாலும் 19 ஆம் நூற்றாண்டு முதலாக வாய்மொழிப் புலவர்களைப் பற்றி ஓரளவு அறியமுடிகிறது. அவர்களுள் கணிசமானோர் கல்வி அறிவு பெறாதவர்கள். சிலர் ஆரம்பக் கல்வி அறிவுடையவர்கள். சமூகத்திற் பல்வேறு தொழில் செய்பவர்கள். சிலர் தொழிலற்றோர். சமூக அந்தஸ்தில் ஏற்ற இறக்கமுடையவர்கள். சிலர் சமூகத்தில் மதிப்பிற்குரியவர்கள் (யோகராசா, செ., 2002). வாய்மொழிப்பாடல்கள் வரலாற்றுச் செய்திகளை எடுத்துரைப்பது மட்டுமல்லாது பண்பாட்டு முறைமையினைத் தந்துதவும் ஆவணப் பதிவுகளாகவும் விளங்குகின்றன.

மட்டக்களப்புப் பிரதேச நாட்டார் பாடல்களில் பிரதேச மொழி வழக்குச் சொற்கள் விரவி வந்துள்ளன. மட்டக்களப்பு மக்களின் பேச்சு மொழியில் இயல்பாகவே பழந் தமிழ்ச் சொற்கள் இயன்றுள்ளன. இந்த மக்கள் இயல்பாகவே பாடுந்திறன் கொண்டவர்களென்பதை இவர்களின் நாட்டுப் பாடல்கள் புலப்படுத்துகின்றன. அவற்றில் மொழிவழக்கு மட்டுமன்றி வாழ்வியல் பழக்க வழக்கங்கள், பண்பாட்டுப் பாரம்பரியங்கள், கலை அம்சங்கள் என்பனவும் புரையோடியுள்ளன. அவை ஓசைச் சிறப்பாலும் பொருள் நயத்தாலும் பிறரது உள்ளங்களைத் தன்பால் இழுக்கும் சக்தி வாய்ந்தவை. அவற்றுட் சில உதாரணங்களாக இங்கு மேலே தரப்படுகின்றது. தாலாட்டுப் பாடலில் ஒன்று

*ர்ர்ர்......ஆஆஆஆஆ.ர்ர்ர்ர்.*
*ஆராரோ ஆராரோ ஆரிவரோ ஆராரோ*
*ஆரடித்து நீ அழுதாய் அம்புயமே சொல்லியழு*
*ஆராரோ ஆராரோ ஆரிவரோ ஆராரோ*
*ர்ர்ர்..ஆஆஆஆ. ர்ர்ர்*

இத்தகைய பாடல்களால் அழுத குழந்தை அழுகையை நிறுத்துகிறது. மகிழ்வுடன் தூங்குகிறது.

விளையாட்டுப் பாடலில் ஊஞ்சற் பாட்டின் வெவ்வேறு சந்த வகையிலிருந்தும் ஒவ்வொரு பாடல் கீழே தரப்படுகின்றன.

அரிமிளகு திரிமிளகு அண்டம் பிலாக்காய்
அம்பிட்ட வண்ணானைக் கும்பிட் டழைத்து
ஆறுமுக சாமியைக் கயிறாய்த் திரித்துப்
போகுதாம் கப்பல் பெரியதுறையைப் பார்க்க

(அக்கரைப்பற்றுப் பகுதியில்).

கொக்குப் பறக்குது
கொக்குப் பறக்குது
கோயில் வாசலிலே
கட்டுச் சதங்கையும்
கட்டி ஆடுது
எங்கட வாசலிலே

(கொக்கட்டிச்சோலைப் பிரதேசத்தில்).

ஆலயத்திற் பாடப்பெற்ற ஊஞ்சற் பாடல்களில் ஒன்று மேல் வருவது,

பலனோங்கு செம்பவளங் கால்க ளாக
பகர்வயிர ரத்தினமே விட்ட மாக
குலனோங்கு வெண்டரளங் கயிற தாக
கூறரிய மாணிக்கம் பலகை யாக

வலனோங்கு முஞ்சன்மிசை யினிது வைகி
மலர்மகளுங் கலைமகளும் வடந்தொட் டாட்ட
நலனோங்கு சிங்கார நகரில் வாழும்
நாயகி மகாமாரி யாடீ ரூசல்

(மகாமாரிதேவி திவ்விய கரணி - பக் 41)

வசந்தன் பாடலில் கிறுகு வசந்தனில் ஒரு பாடல் மேல் வருவது,

வடவரை மீதிலோர அங்கதில் மா
பாரத மெங்களுக் குலகினில் தந்திட
திடமுட னேடாய் எழுதிய குஞ்சர
மாமுக னடி போற்றியே நாமாட

(தம்பிலுபில் பிரதேசத்தில்)

முயிற்று வசந்தனில் ஒரு பாடல்:

மந்தி யெனும்படி சென்றே - நல்ல
முந்திரி கைக்கனி ஆய்ந்திடப் போனேன்
பந்தியாய் வருகுது முயிறு - என்
பழுவைத் துறையடி பைந்தொடியாரே

(செட்டிபாளையப் பகுதியில்)

தொழிற் பாடல்களில் எருமை மாடுகளினால் சூடடிப்பு நடைபெறும் பொழுது பாடும் பாடலில் ஒன்று பின்வருமாறு:

பொலி பொலி தாயே பொலி
மண்ணும் களமும் பொலி பொலியோ.
தாயே பொலி தம்பிரானே பொலி பொலி
மண்ணின் களமே மாதாவே பொலி பொலியோ..
பொலி பொலி நிறைகுடமே பொலி பொலி
பொன்னின் களமே பூமாதேவி பொலி பொலியோ.

(வாழைச்சேனைப் பிரதேசத்தில்)

காதற் பாடலில் ஒன்று மேல்வருவது:

ஆண்: குஞ்சி முகத்தழகி கூரான மூக்கழகி
வஞ்சி இடையழகி மாதுளம்பூத் தோலழகி - இப்ப
பஞ்சி படாப்பாடாய்த் துடிக்கிறண்டி உன்னால.
சுந்தரியே அம்புயமே சொல்லுக்கொரு நங்கணமே
அந்தரித்த என்னை அழைத்தாதரிக்க மாட்டாயோ

பெண்: மாமிமகனே என்ர மருக்கொழுந்தே வெற்றிலையே
இன்பக்கடலே எனக்கிரக்க மெல்லாம் உன்மேலே

(மண்டூர்ப் பிரதேசத்தில்)

திருமணப்பாடலில் ஒன்று மேல்வருமாறு அமைந்துள்ளது:

*கொட்டு மேளம் கொட்டிவர*
*குரவைச் சத்தம் கூடவர*
*பட்டு வெள்ளைக் குடைபிடித்து*
*வருவேன் உன்னைத் தாலி கட்ட*

(கொக்கட்டிச்சோலைப் பிரதேசத்தில்).

விரும்பாத திருமணப் பாடலில் ஒன்று:

*நாரைப் பூப்போல*
*நரைத்த கிழவனுக்கு*
*வாண்டு வடுப்பட்டேன்-என்ர*
*வயிற்றுக் கொடுமையாலே*

(சங்கரலிங்கம், மு., மண்டூர்)

**ஒப்பாரிப் பாடல்கள்**

ஒப்பாரி என்பது சாவீட்டில் தமது உள்ளத்துத் துயர உணர்வுகளை வெளிக் காட்டிப் பெண்கள் பாடி அழுவதைக் குறிக்கும். பெண்களிலும் பெரும்பாலும் வயதில் முதிர்ச்சியடைந்தவர்களாலேயே பாடப்பெற்றுள்ளன. அவர்களிலும் மரணமடைந்தவரின் பாசத்திற்குட்பட்டவர்கள் ஒப்பாரி சொல்லி அழுவது வழக்காகும். மட்டக்களப்புத் தவிர்ந்த யாழ்ப்பாணம் போன்ற தமிழ்ப் பிரதேசங்களில் கூலிக்காக ஒப்பாரி பாடி அழுகின்ற குழுவினரும் இருந்துள்ளனர்.

ஒப்பாரிகள் தாய் ஒப்பாரி, மனைவி ஒப்பாரி, புத்திர சம்பத்துக்களின் ஒப்பாரி என்பனவாக உள்ளன. மேற்படி ஒப்பாரிகள் கிராமப் பகுதிகளில் இன்றுவரை நடைமுறையில் இருந்துவருவதைக் காணலாம். அவற்றின்கண் இறந்தவரின் தோற்றம், நற்குணங்கள், செயற்பாடுகள், அவரின் இறப்பால் ஏற்படவிருக்கும் கஷ்ட நஷ்டங்கள் முதலியன விளக்கப்படும். மனைவி ஒப்பாரிப் பாடல் ஒன்று மேல்வருவது:

*"என்ர ராசாவே ராசாவே அழகுதுரை ராசாவே*
*சொல்லாமக் கொள்ளாமப் போனீரே ராசாவே*
*உன்ர தங்கம் பதிச்சமுகம் பொய்யுறக்கம் கொள்ளுமாப்போ*
*என்ர தங்கக்குடமே என்னைவிட்டு நீ பொன்னுலகம் போனதென்ன"*

**கண்டிராஜன் ஒப்பாரி [கதைப்பாடல்]**

சமூக அரச சார்பான வரலாற்றுக் கதைப் பாடல்களும் ஒப்பாரிப் பாடல்களாக விளங்கின. பறையன் ஒப்பாரி சமூகம் சார்பான ஒப்பாரியாகவும் கண்டி ராஜன் ஒப்பாரி அரசர்சார்பான ஒப்பாரியாகவும் இருந்துவந்ததாகவும் கூறப்படுகிறது. பறையன் ஒப்பாரி ஆய்வாளருக்குக் கிடைக்கப்பெற்றிலது. கண்டிராஜன் ஒப்பாரி பற்றிய அரிய தேடுதல் முயற்சியின் பயனாக ஏட்டுப் பிரதி கிடைக்கப்பெற்றது. அப்பிரதி சிதைந்த நிலையிற் கன்னன்குடாவைச் சேர்ந்த க. குணரெட்ணம் என்பவரிடமிருந்து கிடைக்கப்பெற்றது. கண்டிராஜன் ஒப்பாரி ஏட்டின் முடிவுரைப் பகுதி முற்றாகச் சிதைந்துள்ளபடியால் பிரதி செய்தவரின் பெயர், பிரதி செய்த ஆண்டு திகதி என்பனபற்றி அறிய முடியவில்லை.

கண்டிராஜன் ஒப்பாரி மேற்கூறிய ஒப்பாரிகளிலும் வேறுபட்டது. கண்டி ராஜன் ஒப்பாரியானது மட்டக்களப்புத் தமிழரிடையே ஒரு வரலாற்றை அடிப்படையாகக் கொண்டெழுந்த வாய்மொழி வரலாற்றுப் பாடல் இலக்கிய மாகும். இவ்வாய்மொழி ஒப்பாரிப் பாடல் இலக்கியமானது 903 பாடல் வரிகளாலானது. இந்நூலுக்குக் காப்புச் செய்யுள் இல்லை கண்டிராஜன் ஒப்பாரியாரால் எப்போது பாடப்பெற்றது என்பதனை அறியமுடியாதுள்ளது.

இதன் தோற்றக் காலத்தை ஆண்டு ரீதியில் கூற முடியாவிட்டாலும் கண்டிக் கடைசி அரசனாகிய ஸ்ரீ விக்கிரம இராசசிங்கனின் ஆளுகைக்குப் பின்னர் ஆங்கிலேயரின் ஆட்சியின் ஆரம்பகாலத்தில் பாடப்பட்டுள்ள தென்பதை அந்நூல் மூலம் அறிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது. அதனை மேல்வருவன வெளிவுபடுத்துகின்றன.

*இங்கிலிஷார் இந்த இலங்கைமுற்றும்*
*தப்பாமலே பிடித்துத் தானாண்டு வாறார்கள்*

(பாடல் வரி 900-901)

எனவும்,

*விக்கிரமசிங்க ராசனென்று என்பெயர் சொன்னாலுமடி*
*உக்கிர பூதப்பிசாசு பிடித்தசனி போயொளிக்கும்*

(பாடல் வரி 51-52)

எனவும் காணமுடிகிறது.

**கதைச்சுருக்கம்:** கண்டி அரசனாகிய இராசசிங்கன் ஒருநாள் உலாச் சென்று கொண்டிருக்கும் வேளையில் பூவெடுக்கத் தோட்டம் போய் பூக்கொய்து கொண்டுவந்து தன் புறக்கதவில் வந்துநின்ற அழகிய பெண் ஒருத்தியைக் கண்டு அவள் மீது காதல் வயப்படுகின்றான். அவளின் பெயர் பூசணி.

ஏலவே, பட்டத்து அரசியாகிய இராசசிங்கனின் மனைவி எதிர்காலம் பற்றிய கெட்ட கனாக் கண்டு அரசனிடம் கூறியுள்ளாள். அவள் அக்கனாவில் அரசனின் வன்னரெத்தின முடிசரிந்து மண்ணில் விழவும், இங்கிலிசார் அரசனைப் பிடித்துக் கட்டவும், நாட்டைப்பிடிக்கவும், அரசன் படுக்கும் மெத்தையிலே நாய் படுத்துறங்கவும், தன்தாலி அறுந்து தணலில் விழவும், அரண்மனை வாசல்தனிலே நிற்கும் மரமொன்று முறிந்து விழவும் கனாக் கண்டாள்.

அரசன் உலாவை முடித்து காம இச்சையின் பாற்பட்டு அவளையடை வதற்கான முயற்சியில் இறங்கினான். அப்போது தாதியர், மந்திரி முதலியோர் அரசனுக்குச் சீதையினால் இலங்கை திசையழிந்து போனதுவும், கண்ணகியால் மதுரை கட்டழிந்து போனதுவும், துரோபதையால் குருநாடு சோரமாய்ப் போனதுவும் எடுத்துக்கூறியதுடன், பூசணியினால் கண்டியிடுபடுங்காண் (அழியும்) எனவும் அறிவுரை பகன்றனர். அவ்வறிவுரைகள் ஒன்றினையும் அவன் ஏற்குமாறின்றி பூசணியை அடைவதையே நோக்கமாகக் கொண்டான்.

அரசன் பூசணியின் தாய்மாமனான படைத்தலைவன் ஆலப்பிள்ளையைக் கடமையின் நிமித்தமாக பலமைல்களுக்கு அப்பால் அனுப்பி விட்டுப் பூசணியை அடைய முயற்சிக்கிறான். ஈற்றில் அவள் கங்கையில் விழுந்து தற்கொலை புரிகின்றாள். பின்னர் அரசனால் ஆலப்பிள்ளையின் மனைவி மங்கிலியத்தின் கையால் ஏழு பிள்ளைகளையும் உரலிற் போட்டுக் கொலை செய்விக்கின்றான். மங்கிலியத்தையும் தனது வீரவாள் தன்னாலே இரண்டு துண்டாய் வெட்டிவிடுகின்றான்.

இறுதியாக ஆலப்பிள்ளை ஆங்கிலேயரின் உதவியுடன் கண்டிய ரசனைக் கொலை செய்கின்றான். கண்டி அரசும் ஆங்கிலேயரசன் வசமாகிறது. சில நாட் கழிந்தபின்னர் ஆங்கிலேயர் ஆலப்பிள்ளையை வைத்திருந்தால் தமக்கும் கேடு விளைவிப்பான் எனக்கருதி ஆலப்பிள்ளையை சூழ்ச்சியினாற் கடற்பிரயாணத்தின்போது நடுக்கடலில் கப்பற்சூத்திரத்தின் பொறியினால் இறக்கச் செய்கின்றனர்.

**உட்கிடக்கை:** கண்டிராசன் ஒப்பாரி மூலமாக ஒழுக்கம், அரசநீதி, தமிழரின் நம்பிக்கைகள், காம குரோதத்தின் கெடுதிகள், ஒற்றுமைப் பலவீனத்தால் ஏற்படும் விளைவுகள், அரசியல் ஆதிக்கம், கண்டியரசின் வீழ்ச்சி, கண்டியரசு ஆங்கிலேயரின் வசமாகியது முதலியன வெளிப்படுகின்றன. இந்நூலின்கண் ஆட்சிமுறை இடைச் செருகலுடனும் அரசியல் வரலாறு திரிபுடனும் கூறப்பட்டுள்ளன.

மொழியமைப்பில் காணப்படுகின்ற சொற்களான கெதியாய்க் கடந்து, பட்டாணிகர், பாவாடை விரித்தல், சோட்டையா இருக்கு, வில்லம்புக்காரன், திருநீற்றுக் காப்பிடுதல் (மாந்திரீக முறை), இருத்தை, அமாவாசை, பூந்து புறப்படுதல், சுருக்கா யெழுந்திருந்து, வருகுது போன்ற மட்டக்களப்புத் தமிழரின் வாய்மொழிச் சொற்கள் பல விரவி வருகின்றன.

**சிந்துப்பாடல்**

இது இசைப்பாடல் வகைகளில் ஒன்று. சிலப்பதிகார உரையாசிரியர் பஞ்ச மரபுடைய அறிவனார் சிந்து, திரிபதை, சவலை, சமபாத விருத்தம், செந்துறை, வெண்டுறை, பெருந்தேவபாணி, சிறுதேவபாணி, வண்ணம் என்னும் ஒன்பது வகையான இசைப்பாடல்கள் பற்றி மேல்வருமாறு குறிப்பிட்டுள்ளதாக அறிய முடிகிறது:

*செப்பரிய சிந்து திரிபதை சீர்சவலை*
*தப்பொன்று மில்லாச் சமபாதம் - மெய்ப்படியும்*
*செந்துறை வெண்டுறை தேவபாணி வண்ணமென்ப*
*பைந்தொடியா யின்னிசையின் பா* (சாமிநாதையர், உ.வே., 1927).

பழந்தமிழ் இலக்கியங்களுக்குப் பின்னர் முறையே காப்பியங்கள், புராண இதிகாசங்கள், பிரபந்தங்கள் ஆகியன தோன்றின. பின்னர் தொண்ணுற்றாறு பிரபந்தவகையுள் அமையாத சிற்றிலக்கிய வகையினதாகிய சிந்து, ஒப்பாரி என்பனவும் தோன்றி வளர்ச்சியடைந்தன. பெரும்பாலும் மூன்று சீர்களை யுடைய சிந்தடிகளால் ஆக்கம் பெற்றதால் சிந்து எனலாயிற்று. சிந்துப் பாடல்கள் ஐந்து உறுப்புள்ள இசைப்பாடலெனக் கூறப்படுகிறது (Rev. Winslaw, M., 1862). இவ்வகைச் சிந்துப்பாடல்கள் நாட்டுப் பாடல்களையும் தெம்மாங்குப் பாடல்களையும் அடிப்படையாகக் கொண்டு சில மாற்றங்களுடன் பிற் காலத்தில் மக்களிடையே பாடப்பெறத் தொடங்கின. இவை இலங்கையில் நொண்டி நாடகம், பள்ளு, குறவஞ்சி, பதினெண் சித்தர்பாடல்கள் முதலான வைகள் நாட்டார் பாடல்களின் இயல்பினை உடையனவாக அமைந்திருப் பதைக் காணமுடிகிறது.

மட்டக்களப்புப் பிரதேசம் முழுவதும் பரவியிருந்த சிந்துப்பாடல்களை எண்ணெய்ச் சிந்து, உடுக்குச் சிந்து, காவடிச்சிந்து, நொண்டிச் சிந்து, வழிநடைச் சிந்து எனப் பல பிரிவுகளாக வகுக்கலாம். இவற்றினுள் பின்வரும் சிந்துப்பாடல்கள் மட்டும் இங்கு நோக்கப்படுகின்றன.

**எண்ணெய்ச் சிந்து**

பண்டைய நாளில் மாணவர்கள் ஆசிரியரிடம் தங்கியிருந்து கல்விகற்கும் முறை காணப்பெற்றது. அவர்களது இரவு விளக்கெண்ணெய்க்காகவும் ஆசிரியரது கூலியின் பொருட்டும் அவர்கள் ஊரில் வீடு வீடாகச் சென்று பொருளாயினும் நிதியாயினும் கேட்டுப் பெறுவது வழக்காயிருந்தது. அதனை அவர்களிடம் கேட்கும்போது பாடப் பெறும் பாடலை எண்ணெய்ச் சிந்து என அழைத்தனர். இதன் கருப்பொருள் எண்ணெய் என்பதனாலும், அப் பாடல் சிந்து வகையைச் சேர்ந்திருத்தலாலும் எண்ணெய்ச் சிந்து எனப் பெயர் கொள்ளலாயிற்று. சிந்துப்பாடல்கள் இலங்கையின் பலபாகங்களிற் பயிலப்பட்டு வந்துள்ளன.

அவ்வெண்ணெய்ச்சிந்துப் பாடலில் மட்டக்களப்புத் தமிழர்களின் பண் பாட்டுப் பாரம்பரியங்கள், சொல் வழக்குகள் முதலியன காணப்பெற்றுள்ளன. இச்சிந்துப் பாடலின்கண் மேல்வருவன பொதிந்துள்ளன:

1- பிள்ளை கருவுயிர்த்தலும் பிரசவமும் 2- பிரசவத்தின் போது நடைபெறும் சம்பிரதாயங்கள் (மருந்துவழக்கு, மந்திர வழக்கு, உலக்கை எறிதல் முதலியன)

3- கண்ணூறு நாவூறு வராமல் தடுத்தல் 4 - மருங்கை செய்தல் 5 - துடக்கு மயிர் களைதல் 6- தாலாட்டுப் பாடல் 7- விடிவிளக்கு வைத்தல்

8- அமுதூட்டல் 9- சாய்ந்தாட்டுப் பாடல் பாடும் வழக்கு 10 - குழந்தைகளின் அணிகலன்கள் 11- ஏடு தொடங்குதல் (சுபமுகூர்த்தம் பார்த்தல், இறை வழிபாடு. அரிச்சுவடி எழுதுதல்) 12- பாடவிதானம் 13- கல்வியின் மேன்மை 14- தீய நெறிகள் 15- ஆசிரியர், சட்டம்பி குணவியல்புகள் 16- கூலி கொடுத்தலின் முக்கியத்துவம் என்பனபற்றிக் கூறப்பட்டுள்ளன.

எண்ணெய்ச்சிந்துப் பாடல்கள் பேச்சு வழக்குச் சொற்கள் பெரும்பான்மை பெற்று இலகுவான நடையில் வாய்மொழி இலக்கியமாகத் தோற்றம் பெற்றுள்ளன.

இது மட்டக்களப்பில் வெருகல் முதல் பாணகம வரை பாடப்பட்டுள்ள தாக அறியமுடிகிறது (விவேகானந்த முதலி, 1988). எண்ணெய்ச்சிந்து ஆசிரியருக்காக வீடுதோறும் சென்று இரந்து வேண்டிப்பெற்றதை

*இஞ்சி மிளகுடனே ஈருள்ளி வெங்காயம்*
*மஞ்சளிரு சீரகமும் மணக்கும் பெருங்காயம்*
*பாகற்காய் தேங்காய் பயத்தங்காய் கத்தரிக்காய்*
*ஆகவிவை முதலாய் அன்பான பூசணிக்காய்*
*உப்பு மிளகாயும் ஊறுகாய் தன்னுடனே*

*குப்பியில் எண்ணெய் கொடுவந்து வார்த்துவிடீர்*
*வேட்டி சவுக்கம் விதமான வத்திரங்கள்*
*நாட்டமுடன் ஈந்தால் நயமுண்டு மாதாவே*

எனவும்,

*வீட்டிலெண்ணெ யில்லாவிட்டால் விடுகாசு மில்லாவிட்டால்*
*கேட்டுக் கடன்வாங்கிக் கிருபையுடன் தாருமம்மா''*

எனவும் கூறுகிறது (மட்டக்களப்பு இந்துசமய விருத்திச் சங்கம், 1983). அக்காலத்தில் காசினை இறைசால் என்று சொல்வது வழக்கம். இறைசால்/ இறையால் ஒல்லாந்தரின் காசு வடிவமான Rix Dollar என்பதன் தமிழ்ச் சொல்லாகும். (ஒரு இறைசால் - 75 சதம்). மேலும் கல்வியின் மேன்மை, கல்வியின் நோக்கம், கற்பித்த பாடங்கள், உபாத்தியாயர், சட்டம்பியாரின் குணநலன்கள் என்பன பற்றி விரித்துக் கூறப்பட்டுள்ளன.

**உடுக்குச் சிந்து**

இது பொழுது போக்காகவும் பக்திப்பனுவலாகவும் பாடப்பெற்றது. பொழுது போக்குக்காக ஆரவல்லி சூரவல்லி போன்ற பொழுதுபோக்குக் கதைகளையும் நாட்டு விவகாரங்களையும் வீட்டுக்கு வீடாகச்சென்று உடுக்கடித்துப் பாடி வந்துள்ளனர். பக்திப் பனுவல்களாகப் பிள்ளையார், முருகன், கண்ணன், தான்தோன்றீஸ்வரர், மாரியம்மன், கண்ணகியம்மன் முதலிய தெய்வங்களின் மீது உடுக்கடித்துப் பாடப்பெற்றுள்ளன. உடுக்குச்சிந்தை ஊர் சுற்றுக்காவியம் எனவும் அழைப்பர். கண்ணகி அம்மனின் ஊர்சுற்றுக் காவியத்தை உதாரணத்துக்குக் குறிப்பிடலாம். அப்பாடலில் ஒன்று பின்வருமாறு

*திருமருவு பூலோக மெங்கணும் வாழ்கின்ற*
*செல்வி கண்ணகை மீது சிந்து தமிழோத*
*தருமருவு தந்திமுகனும் குமரவேளும்*
*சடையதனில் அம்புலியை வைத்த சங்கரனும்*
*மருமருவு வாலை சரசோதியும் மாலயனும்*
*வடதேச முறை மதுரை மீனாட்சியம்மனும்*
*அருமருவு வள்ளி தெய்வானையுடனே நாளும்*
*மலரடிகள் ஒரு போதிலும் என் மனதில் மறவேனே.*

(வீ.தோ.பொ.த.ஆறுமுகபிள்ளை, 1845).

மேற்படி ஏட்டுப்பிரதியின் மூலமாக உடுக்குச்சிந்து பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஓலைச்சுவடியில் எழுத்துருப் பெற்றமையை அறியமுடிகிறது.

## வழிநடைச் சிந்து

சிந்துப் பாடல்களில் வழிநடைச் சிந்துப் பாடல்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. நீண்ட தூரப்பயணத்தின் போது பயன்படுத்தப்பட்ட சிந்துவகைப் பாடல்கள் வழிநடைச் சிந்து எனலாயிற்று. தலயாத்திரையின் போது அல்லது வேறு விடயம் காரணமாக நீண்ட தூரப் பயணம் செய்யும் போது தூர நடைக்குத் துணையாக இவ்வகைப் பாடல்கள் அமைந்தன. பிரயாணம் செய்யும் நோக்கமும், வழியிற் காணும் காட்சியும், மனத்தின்கண் எழுகின்ற உணர்வுகளும் பாடலுக்கு வளம் சேர்த்துள்ளன. உதாரணமாகக் கதிர்காமத் தல யாத்திரிகரால் கதிரைமலையில் ஏறும்போது பாடப்பெற்ற வழிநடைச் சிந்துப் பாடலின் சில வரிகள் மேல்வருவனவாகும்:

*சீராரும் தென்கதிரைச் செவ்வே ளருளாலே*
*பாராரும் காதலிசை பாடத் துணிந்தேனே*
*வேதக் கதிரைமலை வேலவனைப் போற்றாது*
*மாபாவி யாகிவலு நரகுக் காளானேன்*
*முத்திகொடுக்கும் மலை மூவுலகோ ரேத்தும்மலை*
*சித்திகொடுக்கும் மலை தென்கதிரை மாமலையே.*

## காவடிச் சிந்து

மட்டக்களப்புத் தமிழர் வழிநடைச்சிந்து பாடும் வழக்கு இருந்து வந்துள்ளது. அவர்கள் தலயாத்திரையின்போது வழிநடைச்சிந்துப் பாடலுடன் காவடிச் சிந்துப் பாடலும் பாடுவது வழக்காகும். மட்டக்களப்பில் படிப்பறிவில்லாத பாமர மக்களின் வாய்களிற்கூட இவ்விருவகைச் சிந்துப் பாடல்களும் இசைத்து நிற்பதைக் காணலாம். ஆலயங்கள்தோறும் காவடி எடுக்கும் போதெல்லாம் காவடிச்சிந்து பாடப்பெறும். மண்டூர், சிற்றாண்டி, திருக்கோயில், கொக்கட்டிச்சோலை முதலிய ஆலயங்களின் திருவிழாக் காலத்தின் போது நடைபெறும் காவடியாட்டத்தைப் பார்ப்பதற்கென்றே மக்கள் அணிதிரண்டு நிற்பது வழக்கமாகும்.

இப்பாடல்கள் பத்து முதல் இருபத்திரண்டு பாடல்களைக் கொண்டனவாகக் காணப்படும். இத்தகைய பாடல்கள் இறையருளை வேண்டி இரந்து நிற்பதாக அமையும். மேல்வரும் ஒரு பாடல் எடுத்துக்காட்டாகும்:

*வருந்து மடியாருயிரைக் காக்குந் தெய்வம்*
*வையகத்தில் வேறொருவ ரில்லையென்று*
*அறிந்து நானுனைப் பணிந்தேன் சுப்பிரமணியா*
*ஆதரித்துப் பிராணபயம் தீருமையா*
*திரிந்து அலைந்து அறுமூன்று திங்களாக*

*சிறையிருந்து தனைப்பூண்டு சின்னமானேன்*
*பறந்துவரும் மயிலேறும் கதிர்வேலா*
*அன்பாக வுயிர்காத்து ரட்சிப்பாயே*

**வாய்மொழிக் கதைகள்**

தெய்வீகக்கதைகள், பேய்பிசாசுக்கதைகள், வரலாற்றுக்கதைகள், விநோதக் கதைகள், என வகைப்படுத்திக் கூறலாம். தெய்வீகக் கதைகள் பெரும்பாலும் சமய வழிபாட்டில் நம்பிக்கையை ஏற்படுத்தும் நோக்கிற் கூறப்பட்டு வந்துள்ளன. இவற்றிற் சில ஆப்த வாக்கியங்களை அடியொற்றியனவாகவும், சில கற்பனையில் உருவாகியனவாகவும் மக்கள் மத்தியில் இருந்தன. திருக்கோயில் சித்திரவேலாயுதசுவாமி கோயில் வேலின் வரலாறு, மண்டூர்க் கந்தசுவாமி ஆலய வேலின் வரவாறு, மாமாங்கேஸ்வரர் ஆலய இலிங்க வரலாறு முதலிய பல ஆலயங்களின் தோற்றம் பற்றியவை ஆப்த வாக்கியங் களிலிருந்து பெறப்பட்ட வரலாற்றுக் கதைகளாகவும் கர்ண பரம்பரைக் கதைகளாகவும் விளங்குகின்றன.

பேய் பிசாசுக் கதைகள் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண் டெழுந்தவை. அவை மந்திரங்களின் பாற்பட்டதாகவும் இறந்தவர்களின் ஆவிகளின் பாற்பட்டதாகவும் பேச்சிபிச்சி, பிணந்தின்னி, பிள்ளைகொல்லி, கொள்ளிவாற்பேய், குறளைப்பேய் முதலான பல பேய்கள் பற்றியதாகவும் உள்ளன. நித்திரையில் இருப்பவரை அழைத்துச் செல்வதாகவும், பல உருவங்களைத்தாங்கி நடமாடும் இயல்புகளைக் கொண்டதாகவும், வியத்தகு கருமங்களைச் செய்வதாகவும் கூறப்படுகின்றன.

**வரலாற்றுக் கதைகள்**

வாய்மொழி இலக்கியத்தில் அமைந்துள்ள கதைகளில் சில இடப்பெயர்கள் தோன்றியதற்கான காரணம் பற்றியும், சில ஆலயங்கள் தோன்றிய வரலாறு பற்றியும் கூறுகின்ற வரலாற்றுக்கதைகளாக அமைந்துள்ளன.

சந்திவெளி, வந்தாறுமூலை, துறைநீலாவணை, குருக்கள்மடம், பாண் டிருப்பு, வீரமுனை, திருக்கோயில், புளியந்தீவு, வலையிறவு, திமிலைதீவு, செட்டிபாளையம் முதலிய பல கிராமங்களின் தோற்றங்களும், வீரமுனை சிந்தாயாத்திரைப் பிள்ளையார் ஆலயம், மண்டூர்க் கந்தசுவாமி ஆலயம், களுதாவளை சுயம்பு லிங்கப் பிள்ளையார் ஆலயம், மாமாங்கேஸ்வரர் ஆலயம், பெரியபோரதீவு காளிகோயில், சித்தாண்டி சித்திர வேலாயுதசுவாமி கோயில், பாண்டிருப்பு தாதன் கோயில் (திரெளபதையம்மன் கோயில்) அமிர்தகழிக் கப்பலேந்தி மாதா கோயில் முதலிய அனேகமான ஆலயங்களின்

வரலாறுகளும் வாய்மொழி இலக்கியத்தில் வரலாற்றுக் கதைகளாகவும் கூறப் பட்டு வந்துள்ளன.

### விநோதக் கதைகள்

வினோதக் கதைகளை அம்மன்கிளி முருகதாஸ் (2007) அற்புத மாயாஜாலக் கதைகள் எனக் குறிப்பிட்டுள்ளார். நம்பகத்தன்மை அற்றதும் நடக்கமுடியாதது மான நிகழ்வுகளைச் சித்தரித்துக்கூறும் கதைகளாகக் கூறப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, எலுமிச்சம்பழம் பெண்ணாதல், உலக்கை குழந்தையாதல், பனங்கொட்டை பேசுதல், ஆலாவும் நரியும் சேனைப் பயிர் செய்தல், ஆசானுக்கு எருமைமாடு உபதேசம் செய்தது போன்ற கதைகளைக் கொள்ளலாம்.

### பழமொழிகள்

பழமொழிகளை முதுமொழிகள் என்றுஞ் சொல்வர். தான் கூறவந்த கருத்தைச் சுருக்கமாயும், எளிதாயும், சிலவேளைகளில் நகைச்சுவையாகவும் உணர்த்து வதற்குப் பயன்படுத்தும் மொழி பழமொழியாகும். வாய்மொழி இலக்கி யத்தில் பழமொழிகள் பல்வேறு நோக்கங்களுக்கு நன்கு கையாளப்பட்டு வந்துள்ளன. பெரும்பாலும் உடன்பாடு, எதிர்மறை ஆகிய இரண்டில் ஒன்றினை வெளிக்காட்டுவதற்காக அல்லது கூறும் கருத்தை வலியுறுத்து வதற்காகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன.

மட்டக்களப்புத் தமிழரிடத்தும் பழமொழிகள் பயின்று வந்துள்ளன. அவற்றின்கண் தமிழர் வாழுமிடமெல்லாம் சில வேறுபாடின்றியும் சிற்சில வேறுபாட்டுடனும் உள்ளன. மட்டக்களப்புத் தமிழரிடையே பயன்பட்டுவரும் பழமொழிகள் பெரும்பாலும் சாதி, சமயம், தொழில் என்பவற்றினிடையே தோன்றியவையாகக் காணப்படுகின்றன. அவ்வாறு உண்டானவற்றுட் சில இடத்துக்கு இடம் பெருவழக்காயும், சொல் வேறுபாடாயும் நடைமுறையில் இருந்துவருகின்றன. இம்மொழிகள் காலம் காலமாக வாய்மொழியாகப் பயின்று வந்து பின்னர் பழமொழிகள் எனக்கூறும் நிலையைப் பெற்றன. அவற்றுட் சிலபழமொழிகள் மேல்வருவனவாகும்:

#### சாதி

''அரபிக் குதிரைக்குப் பிறந்தாலும் பிறவிக்குணம் போகாது.''

''அள்ளாத கையே அள்ளு தின்னாத வாயே தின்னு.''

''குப்பையில் கிடந்தாலும் குண்டுமணி மங்காது.''

''குலத் தளவே ஆகுமாம் குணம்.''

''குலவித்தை கற்றுப்பாதி கல்லாமல் பாதி.''

''சந்நியாசிக்கும் சாதிப்புத்தி போகாது.''

''வைக்கோலில் விளைந்ததை வைக்கோலில் கட்டவேணும்.''

**சமயம்**

''அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுக்கும்.''

''அரச மரத்தைப்பிடித்த சனியன் பிள்ளையாரையும் பிடித்ததாம்.''

''அவன் அவள் என்பதை விட அரி அரி என்பது மேல்.''

''கழுத்திற் செபமாலை கக்கத்தில் கன்னக்கோல்''

''திக்கற்றவனுக்குத்-தெய்வம் துணை.''

''திரு விளக்கிட்டவரைத் தெய்வம் அறியும்.''

''படிக்கிற தேவாரம் இடிக்கிற சிவன்கோயில்.''

**தொழில்**

''அடியாத மாடு படியாது.''

''ஆடி உழவு தேடி உழு''

''ஆடிக்கறக்கிற மாட்டை ஆடிக்கறக்க வேண்டும் பாடிக்கறக்கிற மாட்டைப் பாடிக் கறக்க வேண்டும்.''

''ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி பிரை.''

''சிறு பிள்ளை வெள்ளாமை விளைஞ்சாலும் வீடு வந்து சேராது''

''சூட்டுக்கு மிஞ்சிய பரிகாரமில்லை.''

''தூண்டில் போட்டால் மப்பிலியில் கண்ணாயிருக்க வேணும்.''

''தென்னை நடுகிலும் தெரிய நடு.''

''பட்டிக்காரன் கையில் சாரைப் பாம்புபட்டாப் போல.''

''வாழை வைத்தாலும் தாழ வைக்கவேணும், தாழ வைத்தாலும் தள்ளி வைக்கவேணும்''

**பொது**

''ஆத்திக் காய்ச்சாத பாலும் கேட்டுப் பாராத கலியாணமும் நிலைச்சிநில்லா''

''ஈட்டி எட்டுமட்டும் பாயும் பணம் பாதாளம்மட்டும் பாயும்.''

''உப்பிட்டாரை உள்ளளவும் நினை.''

''உலைவாயை மூடினாலும் ஊர்வாயை மூடமுடியாது.''

''ஊசி போற ஓட்டையைக் கண்டால் உலக்கையை ஓட்டுவாங்க''

''ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன்பிள்ளை தானே வளரும்''

''எலி வளையானாலும் தனிவளை வேணும்.''

''ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவுமா?''

''ஓணானுக்கு வேலி சாட்சி.''

''கண் கண்டது கை செய்யும்.''

''குட்டக்குட்ட குனிபவனும் மடையன், குனியக் குனியக் குட்டுபவனும் மடையன்''

''குரு இல்லா வித்தை பாழ்.''

''சீலம் பாய் போய் சீனி சக்கரக் கட்டி வாங்குமா?''
''சேனையும் முடியப் புட்டுப் பானையும் இறக்குவது போல''
''சோத்துக்கு முந்து கூத்துக்குப் பிந்து''
''தலைக்கு மேல வெள்ளம் போகுது சாணென்ன முழமென்ன.''
''தனக்கெனச் சுளகுயில்லாதவன் தவிட்டுருசி அறியமாட்டான்''
''தாரமும் குருவும் தலைவிதிப்படி.''
''தான் போக வழியில்லையாம் தலைமேல மாராப்பு''
''நிழலின் அருமை வெயிலிற் போனாற் தெரியும்.''
''பண்டியோடு கூடியகன்றும் மலந்தின்னும்''
''பார்க்காமற் கெட்டது மாடு கேட்காமற் கெட்டது கடன்''
''பந்திக்கு முந்து படைக்குப் பிந்து.''
''மண்ணை ஆண்டவர் மண்ணிலும் கோடி.''
''மாமியார் தலையிற் கையும் வேலிக்குப் புறத்தியிற் கண்ணும்''
''மருந்தும் விருந்தும் மூன்று வேளை''
''வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.''
''வேண்டாப்பொண்டாட்டி கைபட்டாலும் குற்றம் கால்பட்டாலும் குற்றம்.''

என இவை மட்டக்களப்புத் தமிழரிடையே எழுதப்படாத வாய்மொழி இலக்கியமாக நீண்டகாலத்திற்கு இருந்துவந்துள்ளன.

## ஓலைச்சுவடிகளிலும் கையேட்டுப் பிரதிகளிலும் செய்யுளாகவும் வசனமாகவும் உள்ளவை

போர்த்துக்கீசர் 1505ஆம் ஆண்டு இலங்கைக்கு வருமுன்னர் எழுத்துச் சாதனமாக காகிதத்தை இலங்கை மக்கள் அறிந்திருக்கவில்லை (சீ.எம். ஒஸ்டின் த சில்வா, 1969). ஓலையில் எழுதிக் கொள்வதே வழக்காக இருந்து வந்துள்ளது. ஓலைச் சுவடிகளை மட்டக்களப்பில் பெரும்பாலும் ஏடு என அழைப்பது வழக்காகும்.

### கண்ணகி வழக்குரை

கண்ணகி கோயில்களில் யாழ்ப்பாணத்தில் கோவலனார் கதை எனவும் முல்லைத்தீவில் சிலம்பு கூறல் எனவும் மட்டக்களப்பில் கண்ணகி வழக்குரை எனவும் பக்திப் பனுவலாகப் படிக்கப்பெற்று வருகிறது. இவை சிலப்பதிகாரத் தழுவலாய் அமைந்துள்ளன. கண்ணகி வழக்குரை மட்டக்களப்பில் ஆண்டு தோறும் நடைபெறும் கண்ணகியம்மன் சடங்குகாலத்தில் படிக்கப்பட்டு வருகிறது.

கண்ணகி வழக்குரையானது வாழ்த்து, வணக்கம் என்பவற்றுடன் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நாற்பொருளையும் விரவி, தன்னிகரில்லாத் தலைவி, நன்மணம் புரிதல், புலவி, கலவி, தூது, செலவு, இகல், வென்றி ஆகியவற்றுடன் அமைந்து, பல வர்ணனைகளையுங் கொண்டு கதை தழுவி விளங்குதலாற் காப்பியம் எனக் கொள்ளப்படுகிறது. மட்டக்களப்பில் இக் காப்பியம் ஓலைச்சுவடியாகிய ஏட்டிலேயே பொதிந்துள்ளது. ஏட்டிலிருந்து படிப்பதனாலே இதனை ''வழக்குரை ஏடு படித்தல்'' எனக்கூறும் வழக்கம் இங்கு தொடர்ந்து வருகிறது.

இலங்கையில் முதல் எழுந்த காப்பியம் கண்ணகி வழக்குரை என அறியமுடிகிறது (க.செ. நடராசா, 1982). வழக்குரையின் ஆசிரியரை அறுதியிட்டுக் கூறமுடியாதுள்ளது. சிலப்பதிகாரத்தைத் தழுவியதாக அமைந்து காப்பியமாக அமைந்து விளங்குகின்றது. சிலப்பதிகாரத்தைப் போன்று தன்னிகரில்லாத் தலைவியினுடைய வாழ்க்கை வரலாற்றைக் கருப்பொருளாகக் கொண்டு வாழ்த்து வணக்கம் ஆகியவற்றுடன் நாற்பொருளையும் கூறுவதனால் அது காப்பியமாகக் கருதப்படுகிறது. கண்ணகியை சிலப்பதிகாரம் தெய்வ மாகவும் வழக்குரை தெய்வமகளான மானிடப் பெண்ணாகவும் காட்டுகிறது. சிலப்பதிகாரத்தின் போக்கிற்கும் வழக்குரைக்கும் வேறுபாடுகள் உள்ளன.

**கண்ணகி வழக்குரை ஏடு**

கண்ணகி வழக்குரை ஆரம்பகாலத்தில் செவிவழியாக வந்த வாய்மொழிக் காப்பியமாகவே இருந்திருக்கவேண்டும் எனக் கருதமுடிகிறது. வாய்மொழிக் காப்பியமாக வழக்குரை வந்ததென்பதை அதனது நடை, சொல்லாட்சிகள், பொருட்செறிவு முதலியன புலப்படுத்துகின்றன. ஏடுகளில் வழக்குரைக் காதையானது வெண்பா, நடை, கலிப்பா, விருத்தம், அகவல் முதலியன வற்றில் அமைந்து காணப்பெறுகிறது. பெரும்பாலான கண்ணகி வழக்குரை ஏடுகளில் அதன் அத்தியாயங்கள் காதை என்னும் சொல்லில் வந்துள்ளன. கதை என்னும் சொல் காதை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. உதாரணமாக அடைக்கலக்காதை, வழக்குரைத்தகாதை, குளிர்ச்சிக்காதை என அவை வந்துள்ளன. கண்ணகி வழக்குரை ஏடுகளில் அவை பதினொன்று முதல் இருபத்துநான்கு வரையில் மாறுபாடுற்றுக் காணப்படுகின்றன.

**கண்ணகி வழக்குரையும் மட்டக்களப்பும்**

மட்டக்களப்புப் பேச்சு மொழிச் சொற்களான அடசுதல், விடுப்புப்பண்ணுதல், கிளப்பிவிடல், கழிசறை, செம்முதல், வாண்டு இச்சைப்பட்டிருத்தல், தீர்த்தக்கரை, போன்ற அனேக சொற்கள் கண்ணகி வழக்குரையில் விரவி வருகின்றன.

வழக்குரைக் காப்பியத்தின் தூரியோட்டுக் காதையில் மட்டக்களப் பிலுள்ள ஊர்ப் பெயர்கள் இடம்பெறுகின்றன. அதன்கண் பாலமுனை, பாசிக்குடா, ஏறாவூர், புளியந்தீவு, மட்டக்களப்பு, கண்டபாணம் (திருக் கோயில்), பாணமை, முதலிய மட்டக்களப்பின் இடப்பெயர்கள் குறிப்பிடப் பட்டுள்ளன.

மட்டக்களப்புத் தமிழரிடம் காணப்படும் மருந்து மந்திரக் கலை அம்சங்கள் வழக்குரையின் சிலம்பு கூறற் காதையில் உள்ளன. இவர்களிடம் கையாளப்படுகின்ற பெரும்பாலான வசியமருந்துகள் அவ்வாறே வழக்குரை யில் வெளிப்படையாகக் குறித்துரைக்கப்பட்டுள்ளன. அத்துடன் இவர்களிடம் காணப்படும் சோதிடம் பார்த்தல், சகுனநம்பிக்கை, உணவு வகைகள், விருந்து பசாரம், வரவேற்று உபசரித்தல் போன்ற பல பண்பாட்டு அம்சங்கள் கண்ணகி வழக்குரையில் பரந்துபட்டுக் காணப்பெறுகின்றன. இவ்வாய்வுக்கு எடுத்துக் கொண்ட கண்ணகி வழக்குரை ஏடானது துறைநீலாவணை கண்ணகியம்மன் ஆலயத்திற் படிக்கப்பெறும் 1885 ஆம் ஆண்டில் பிரதி செய்யப்பட்ட ஏடாகும்.மட்டக்களப்பிலுள்ள சில கண்ணகி வழக்குரை ஏடுகளைக் கொண்டு வி.சீ. கந்தையா 1968 ஆம் ஆண்டு பதிப்பு நூலாக்கம் செய்துள்ளார்.

### குளிர்ச்சிக் கதை

பெரும்பாலான கண்ணகி வழக்குரை ஏடுகளின் கடைசி அம்சமாகவுள்ள குளிர்ச்சிக் கதைக்கும் சடங்கின் கடைசிநாளில் பாடப்பெறும் குளிர்ச்சிக் கதைக்கும் வேறுபாடு உண்டு. கருத்துப் பொருள் ஒன்றாயினும் கூறும்பாணி மாற்றம் பெற்றுக் காணப்படுகின்றது. குளிர்ச்சியை குளுத்தியெனக் கூறுவதே பெருவழக்காக இருந்து வருகின்றது. இக்குளிர்த்திக் கதை தனி ஏடாக உள்ளது. அதனைக் குளுத்தி ஏடு எனக் கூறுவர்.

### நூற் பயன்

*கல்லனைய கனதனத்தாள் கண்ணகையார் தன்கதையை*
*நல்லதென வுரைத்தவரும் நாடிமிகப் படித்தவரும்*
*செவியுற்றுக் கேட்டவரும் கதித்தவிசை பாடுவாரும்*
*விரியாழி நீர்நிறைந்த மேதினியில் நீடூழி வாழ்வாரே*
*கண்ணகையார் வழக்குரையைக் காதலித்துக் கேட்போரும்*
*பன்னுதமிழ் இயலிசையின் பலகலையாய்ப் பாடினோரும்*
*மன்னவரும் மறையவரும் மனமகிழ்ந்து கேட்பவரும்*
*திண்ணமுடன் நாள்தோறும் தீதகல வாழ்வாரே.*

எனக் கண்ணகி வழக்குரையில் குறிப்பிடப்படுகிறது.

**மகாபாரதம்**

மட்டக்களப்புத் தமிழரிடையே கண்ணகி வழிபாட்டினால் வழக்குரைக் காப்பியமும் திரௌபதி வழிபாட்டினால் மகாபாரத இதிகாசமும் நிலை கொண்டுவிட்டன. வடமொழியில் தோன்றிய மகாபாரதத்தைத் தமிழில் மொழி பெயர்த்துப் பாரதம் பாடிய பெருந்தேவனார், வில்லிபுத்தூராழ்வார், அட்டாவதானம் அம்பலத்தாடுமையர், நல்லாப்பிள்ளை, அரங்கநாதக் கவிராயர் முதலியோர் வழிநூலாகப் பாடியுள்ளனர் (சி. கணேசையர், 1939). அவற்றுள்ளும் வில்லிபுத்தூராழ்வார் இயற்றிய மகாபாரதம் சொற்சுவை, பொருட்சுவை முதலானவற்றால் சிறப்புற்று விளங்குவதனால் யாவராலும் படிக்கப்பட்டுப் பேணப்படுகின்றது. இதனை வில்லிபாரதம் எனவும் கூறுவர்.

மகாபாரதம் அன்பு, மனிதநேயம், ஒப்புரவு நோக்கு, சான்றாண்மை என்னும் பண்புகளை மனித உள்ளங்களில் விருத்தி செய்கிறது. மட்டக் களப்பில் இப்பண்புகள் குடிகொண்டுள்ளன. ஆதலினாற்றான் மட்டக்களப் பினை மகாபாரதப் பண்புகளைக் கொண்ட பிரதேசமாகக் கூறப்படுகிறது (புலவர்மணி, 1982). மகாபாரதத்தைச் சொல்லக் கேட்டோ, வாசித்து அறிந்தோ அதன் உட்பொருளை அனுபவிப்பவர்கள் அறிவும் அடக்கமும் ஆன்ம சக்தியும் அடைவார்கள் என்பது மட்டக்களப்புத் தமிழரது நம்பிக்கை யாகும். பாரதம் பொறாமையும் துவேஷமும் கோபமும் கொண்ட வாழ்வு பொல்லாதது என்பதைப் போதிக்கிறது. அப்போதனையை இங்குள்ள தமிழர் தாரக மந்திரமாகக் கொண்டு வாழ்பவர்கள். தமிழரது ஐந்தாம் வேதமாக மகாபாரதம் கொள்ளப்பட்டுள்ளது. மகாபாரதத்தில் காப்புச் செய்யுள்கள் இரண்டு உள்ளன. ஐந்தாம் வேதம் பற்றிய செய்தியை அதன் முதலாவது காப்புச் செய்யுள் மேல்வருமாறு:

*நீடாழி வுலகத்து மறைநாலொ டைந்தென்று நிலைநிற்கவே*
*வாடாத தவவாய்மை முனிராசன் மாபாரதஞ் சொன்னநா*
*ளேடாக மாமேரு வெற்பாக வங்கூ ரெழுத்தாணிதன்*
*கோடாக வெழுதும்பி ரானைப் பணிந்தன்பு கூர்வாமரோ.*

அதன்கண் பாயிரவியலில் மகாபாரத நூலாசிரியர் வில்லிபுத்தூராழ் வாரின் கவிப்புலமையைப் பின்வருமாறு கூறுகிறது:

*ஐந்து பாவுடை நால்வகைக் கவிக்கதிபதியாய்*
*வந்து வட்டமாமணியினன் மணிமுடி புனைந்து*
*பைந்துளாய் முடிப்பரமனைப் பலகவித் துறையுஞ்*
*சிந்தையான் மொழிந்தன்பர் தந்திருவும் பெற்றோன்*

(பாயிரம: செய்யுள் 15)

மட்டக்களப்பில் திரௌபதியைத் துரோபதை எனவும், மகாபாரதத்தை பாரதம் எனவும் கூறுவது பெருவழக்காகும். பாரதம் என்பது வில்லிபுத்தூராழ்வார் இயற்றிய மகாபாரதத்தையே குறிக்கும். ஏனெனில் இங்கு கைக்கொள்ளப்படும் பாரத ஏட்டுப் பிரதிகள் வில்லிபுத்தூராழ்வாரால் இயற்றப்பட்டதனாலேயே. இது ஓலைச் சுவடியாகிய ஏடுகளில் எழுதிப் பேணப்பட்டு வருகிறது. ஆய்வாளர் ஆய்வுக்கு ஆதாரமாக எடுத்துக் கொண்ட மகாபாரத ஏடு துறைநீலாவணையைச் சேர்ந்த வீ.தோ.பொ.த. ஆறுமுகபிள்ளையினால் 1888 ஆம் ஆண்டில் பிரதி எழுதி முடிக்கப்பட்ட ஏட்டுப் பிரதியாகும். மகாபாரதம் மட்டக்களப்பில் தமிழ்மொழி இலக்கியமாகவும், சமய இலக்கிய மாகவும், பண்பாட்டுக் களஞ்சியமாகவும் விளங்கி வந்துள்ளது.

## நூலும் பெயரும்

துஷ்யந்த மகாராசனுக்கு சகுந்தலையிடத்துப் பிறந்தவன் பரதன். மகா ராசாவாக விளங்கிய இப்பரதனது வம்சத்திற் பிறந்தவராகிய பாண்டவர் துரியோதனாதியரது வரலாற்றைக் கூறும் இதிகாசம் வம்ச முதல்வனின் பெயரால் பாரதம் என அழைக்கப் பெறலாயிற்று எனவும் மகா என்னும் சொல் நூலின் பெருமையைப் புலப்படுத்தும் அடைமொழியாக வந்துள்ளது எனவும் கூறுவர்.

திரௌபதையம்மனின் ஆலயம்தோறும் சடங்கு காலங்களில் பாரத ஏடு படிப்பதும் பயன்சொல்வதும் முக்கிய அம்சமாக விளங்குகிறது. சில ஆலயங்களில் பாரதத்தைத் தழுவியதான பாரத அம்மானை ஏடு படித்துப் பயன் சொல்லப்பட்டு வருகிறது. புராணபடனத்தின் மூலமாக படிப்பறிவற்ற பாமரமக்கள் சமய, மொழி அறிவைப் பெற்றுவந்துள்ளனர்.

மட்டக்களப்பில் பாரதத்தை நிலைக்களனாகக் கொண்டுள்ள ஆலயங் களில் பழமை பொருந்திய பாண்டிருப்புத் திரௌபதை அம்மன் ஆலயம் தனியிடத்தைக் கொண்டுள்ளது. அவ்வாலய உற்சவகாலம் பதினெட்டு நாளும் பாரதம் படித்துப் பயன் சொல்லியும் பாரதக் கதையை வரலாறாகக் காட்டிப் பூசை வழிபாட்டை மேற்கொண்டும் வருகின்றனர். இவ்வாறு பாரத இலக்கியம் மட்டக்களப்புத் தமிழரது பண்பாட்டை வளர்க்கும் களமாக நிலைத்து நிற்கிறது. பாரத வரலாறு வியாசர் பாரதத்தில் ஆதிபருவம் முதல் சுவர்க்காரோகண பருவம் ஈறாக பதினெட்டுப் பருவங்களாக வகுக்கப் பட்டுள்ளது. வில்லிபாரதம் வடமொழியில் அகஸ்திய பட்டர் இயற்றிய பாரதத்தைத் தழுவிப் பல விகற்பங்கள் பொருந்த பத்துப் பிரிவுகளாக வகுத்துக் கூறப்பட்டுள்ளது. அதனை மட்டக்களப்பு ஏடுகள் காண்பிக்கின்றன. அவை அப்பிரிவுகளை பருவங்கள் எனக் குறிப்பிட்டுள்ளன. அவை

1. ஆதி பருவம்
2. சபா பருவம்
3. ஆரணிய பருவம்
4. விராட பருவம்
5. உத்தியோக பருவம்
6. வீட்டும பருவம்
7. துரோண பருவம்
8. கன்ன பருவம்
9. சல்லிய பருவம்
10. சௌப்திக பருவம் என்பனவாகும்.

இப்பருவங்களில் சல்லிய பருவம் சௌப்திக பருவம் ஆகிய பருவங்கள் தவிர்ந்த ஏனைய பருவங்கள் ஒவ்வொன்றும் பல உட்பிரிவுகளைக் கொண்டவை. உட்பிரிவுகள் சருக்கங்கள் எனப் பெயர் கொண்டுள்ளன. ஆதிபருவம் முதலாக சௌப்திக பருவம் ஈறாக நாலாயிரத்து முன்னூற்று ஐம்பத்தொரு (4351) பாடல்கள் உள்ளன.

### பிறவழிகளில் பாரத இலக்கியம்

பழங்காலத்தில் வீடுகளிலும் பாரதக்கதைகள் சொல்லப்பெற்றன. இரவுக் காலத்தில் பாட்டன், பாட்டி தமது பேரப்பிள்ளைகளுக்குப் பாரதக்கதைகளைச் சொல்லி வந்துள்ளனர். இவ்வழக்கம் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றமை யைக் காணமுடிகின்றது (எஸ். தில்லைநாதன், 2008). இவை வாய்வழியாகக் கேட்கப்பெற்று பின்னர் ஓலைச்சுவடிகளிலும் எழுத்துருப்பெற்று மக்கள் மத்தியில் வழங்குகின்றன.

பாரதம் மட்டக்களப்பில் நீண்ட காலமாக கூத்து வடிவிலும் ஆடப் பெற்றுக் கலாசார பண்பாடுகளை வளர்த்து வந்துள்ளது. உதாரணமாக தருமபுத்திரன் நாடகம், குருஷேத்திரப்போர், வாளவீமன் நாடகம், முதலான கூத்துக்களைக் கூறலாம். கூத்துக்களின் கதையம்சங்களும் அதில்வரும் பாத்திரங்களுக்குரிய பாடல்களும் வசனங்களும், ஓலைச்சுவடிகளிலும் கையேட்டுப்பிரதிகளிலும் எழுதப்பெற்று அவற்றுக்கேற்பக் கூத்துக்கள் ஆடப்பெற்றன. மட்டக்களப்பில் மகாபாரதம் தெரியாதவர்கள் இல்லை எனலாகும் வண்ணம் விளங்குகின்றது.

### அம்மானை

அம்மானை என்னும் இலக்கிய வடிவம் முதன் முதலாகச் சிலப்பதிகாரத்திற் காணப்படுகிறது. அது சோழர் காலம் வரை பிரபந்தங்களிலும் தொடர்நிலைச் செய்யுள்களிலும் ஓர் உறுப்பாக அமைந்திருந்தது. பின்னர்தான் தனிப் பிரபந்தங்களாகவும் நூற்றுக்கணக்கான வரிகளைக் கொண்ட நெடும்பாட லாகவும் தோன்றின. விருத்தப்பாவிலும் கலிப்பாவிலும் அம்மானைப் பாடல்கள் அமைந்துள்ளன.

அம்மானையானது கிராமியப் பாடல்களின் பண்புகளுடன் பேச்சு வழக்குச் சொற்களும் இயையப் பாடப் பெற்றதாகும். அது ஒரு செய்தியைத் திரும்பத் திரும்பக் கூறுவதுடன் இலகுவில் விளங்கும் உவமைகளுடனும் பாமரமக்களும் விளங்கிக் கொள்ளுமாறு இலகு சொற்களுடனும் அமைந் துள்ளது. அம்மானை என்னும் சொல் பல தாளிசைகளுக்குப் பின்னதாக வருவதுடன் பெரும்பாலும் பாடல் வரிகளின் ஈற்றிலும் சிறுபான்மை இடையிலும் வருவதாக அமைந்து காணப்பெறுகின்றது.

மட்டக்களப்புத் தமிழரிடத்தே வழங்கும் இப்பண்புகளைக் கொண்டுள்ள அம்மானைகளில் பாரத அம்மானை, கஞ்சன் அம்மானை, வைகுந்த அம்மானை (மகாவிந்தக்கதை), வள்ளியம்மானை போன்றன மக்கள் மத்தியில் நிலையான இடத்தைப் பிடித்துள்ளன. இவைகள் சமயம் சார்ந்தன வாகவும் விளங்குகின்றன.

### பாரத அம்மானை

பாரத அம்மானை நீண்ட காலமாக வாய்மொழி இலக்கியமாக விளங்கிப் பின்னர் ஓலைச்சுவடிகளில் எழுத்துருப் பெற்றது. வில்லிபுத்தூராழ்வாரின் மகா பாரதத்தையும் வியாசரின் மகாபாரதத்தையும் தழுவித் தோற்றம் பெற்றுள்ளது. ஆயினும் இவைகளிலிருந்து பாரத அம்மானை வேறுபட்டும் செல்கிறது. சிற்சில பாத்திரங்களின் தோற்றம், வரலாற்று நிகழ்வுகள் குணாம்சம் முதலியனவற்றில் வேறுபாடுகள் காணப்பெறுகின்றன. உதாரணமாக வியாச முனி கொடுத்த பிண்டங்களிலிருந்து திருதராட்டினன், பாண்டு, விதுரன் தோற்றம் பெற்ற வரலாறும், துருவாச முனி கொடுத்த பிண்டங்களிலிருந்து பாண்டவர் தோன்றிய வரலாறும் பாரத அம்மானையில் மட்டுமே காணப் படுகின்றன. வில்லி, வியாசர் பாரதங்களில் அதனைக் காண முடியவில்லை. மேலும் அருச்சுனன் சிவனிடம் பாசுபதம் பெறும் பொருட்டுத் தவநிலை மேற்கொள்வதை அம்மானையானது வனவாசத்தின் இறுதி நிகழ்வாகக் குறிப்பிட, வில்லி வியாச பாரதங்கள் வனவாசத்தின் முதல் நிகழ்வாகக் குறிப்பிடுகின்றன. இது வாய்மொழி இலக்கியமாக வந்துள்ளதனால் இடைச்

செருகல்கள் ஏற்பட்டுள்ளதைக் காண முடிகிறது. மகாபாரதத்திலும் அம்மானையிலும் இரண்டு காப்புகள் உள்ளன. இரு ஏடுகளிலும் அமைந்துள்ள முதலாவது காப்புச் செய்யுள்கள் வேறுபாடின்றியும் இரண்டாவதாக உள்ள காப்புச் செய்யுள்கள் பூரணவேறுபாட்டுடனும் அமைந்துள்ளன.

கங்கை சந்தனுவிற்குப் பிறந்த ஏழு குழந்தைகளையும் நதியிற்போட்டு இறக்கச் செய்ததாகவும் எட்டாவது குழந்தையைக் கொண்டு சென்று வளர்த்து உரிய பருவம் எய்தியதும் சந்தனுவிடம் ஒப்புவித்ததாகவும் மகாபாரதம் கூறுகிறது. ஆனால் பாரத அம்மானையில் சந்தனுவைக் கொண்டு ஏழு பிள்ளைகளையும் இறக்கச் செய்ததாகவும் எட்டாவது குழந்தையை இறக்க விடாது தானே வளர்த்ததாகவும் கூறப்படுகிறது. இங்ஙனம் பல வரலாற்று அம்சங்களில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. இது வாய்மொழி இலக்கியமாக வந்துள்ளதனாற் போலும் இடைச் செருகல்கள் ஏற்பட்டுள்ளதைக் காண முடிகின்றது.

பாரத அம்மானை யாரால் எப்போது ஆக்கப்பட்டது எனக்கூற முடியாதுள்ளது.

**நூற் பயன்**

*பஞ்சவரும் நூற்றுவரும் பாராண்ட தன்கதையை*
*இன்பமுடன் கேட்டோரு மெழுதிப் படித்தோரும்*
*வாசமுள்ள பூவுலகில் மனதன்பாய்க் கேட்டோரும்*
*காசினியோர் தங்கள்முன்னே கற்றறிந்து ஓதினோரும்*
*சேரவரிதாம் ஈசரிடஞ் சேருவா ரம்மானை.*

..................................................................

*செய்ய பகைதொலையும் செகமுழுதும் ஈடேறும்*
*வையம் செழித்து வாழ்வு மிகவோங்கும்*
*முந்நாளி னூழ்வினைகள் முன்னெரிந்து தானகலும்*
*இந்நாளிற் செல்வ மென்றுந் தழைத்தோங்கும்*
*தீரா வினைதீரும் செகமுழுது மாண்டிருப்பார்*
*நாராயண னுறையும் நல்ல வைகுண்டம் பெறுவார்.*

எனப் பாரத அம்மானை குறிப்பிடுகின்றது.

இவ்வாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்ற பாரத அம்மானை ஏடு பழுகாமத்தைச் சேர்ந்த வே.வ.வி. சீனித்தம்பி அவர்களால் 1905 ஆம் ஆண்டில் பிரதி செய்யப்பட்டதாகும். பழுகாமம் திரௌபதை அம்மன் ஆலய சடங்குகால பயன்பாட்டிற்குரியதாக இருந்துவருகிறது. அப்பாரத அம்மானை ஒன்பதாயிரத்து ஐந்நூற்று இருபத்து மூன்று(9523) வரிகளால் அமைந்துள்ளது.

வித்துவான், சா.இ. கமலநாதனால் மட்டக்களப்புப் பிதேசத்திலுள்ள ஆறு பாரத அம்மானை ஏடுகளைக் கொண்டு சீராக்கம் செய்து 2002 ஆம் ஆண்டில் பதிப்பு நூலாக்கம் செய்யப்பெற்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

**கஞ்சன் அம்மானை**

மட்டக்களப்பில் சைவமக்கள் விஷ்ணுவையும் வழிபட்டு வந்துள்ளனர். விஷ்ணு கோயில் தோறும் கம்சன் அம்மானை பாடும் வழக்கம் இருந்து வருகின்றது. அக்கோயில்களின் வருடாந்த உற்சவ காலத்தைச் சடங்கு எனக் கூறுவது வழக்கம். அச்சடங்கு காலத்தில் கதவு திறந்த நாள் முதலாக நிறைவு நாள் வரையும் கஞ்சன் அம்மானை பாடப்பெறும். மட்டக்களப்பில் உள்ள விஷ்ணு கோயிலைக் கிருஷ்ணன் கோயில், கண்ணன் கோயில் எனவும் அழைக்கப்பட்டு வருகின்றன. அக்கோயில்கள் திமிலைதீவு, வந்தாறுமூலை, கல்லடி, குருக்கள் மடம், மண்டூர், களுவாஞ்சிக்குடி, பழுகாமம், பெரிய நீலாவணை, காரைதீவு, தம்பிலுவில் முதலான பல இடங்களில் அமைந்துள்ளன. கஞ்சன் அம்மானையின் நூலாசிரியரையும் அது தோன்றிய காலத்தையும் அறுதியிட்டுக் கூறமுடியாதுள்ளது. இந்த ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட ஏடு குறுமண்வெளியைச் சேர்ந்த தோ.ஆ.வ.வி.சாமித்தம்பி அவர்களால் 1888 ஆம் ஆண்டிற் பிரதிசெய்யப்பெற்ற ஏடாகும்.

**கஞ்சன் அம்மானையின் பொருளமைதி**

மதுரையை ஆண்ட உக்கிரசேனன் என்பவனது மகன் கஞ்சன். கஞ்சனால் தனக்குத் தீமையேற்படும் என்பதை சோதிடர்கள் மூலமாக அறிந்து, அவர்களின் அறிவுரையின் படி அக்குழந்தையைக் கஞ்சப் பாத்திரத்திலிட்டு, ஒரு பேழையில் அடைத்து, யமுனை ஆற்றிலே விட்டனன். யமுனை ஆற்றில் நீராடிக் கொண்டிருந்த மந்தாகினி நகரத்து ஆனையரசனின் மனைவி மிதந்து வந்த பேழையை எடுத்து, அதனுள் பிள்ளையைக் கண்டு மகிழ்ச்சியுடன் வீட்டிற்குக் கொண்டுசென்று மகனென வளர்த்து வரலாயினர். கஞ்சப்பாத் திரத்தில் குழந்தை இருந்தமையால் கஞ்சன் என நாமமும் சூட்டினர்.

கஞ்சன் வளர்ந்து பின்னர் உக்கிரசேனனைச் சிறையிலிட்டான். தன் தங்கையின் வயிற்றில் தோன்றும் சந்ததியினால் தனக்கு அழிவு என்னும் சாபத்தை அறிந்த கஞ்சன் தனது தங்கைமார் இருவரையும் சிறைப்படுத்தினான். அவர்கள் பிள்ளைகளைப் பெற அப்பிள்ளைகளைக் கொன்றுவந்தான். அவ்வேளை தனது தங்கையருள் ஒருத்தியான தேவகியிடம் கிருஷ்ணன் கண்ணனாகப் பிறந்து ஆயர்பாடியிலே யசோதையிடம் வளர கஞ்சன்

கண்ணனைக் கொல்ல எடுத்த முயற்சிகளையும் கண்ணன் துட்டர்களை வதைத்தமையையும், ஈற்றில் கஞ்சனை வதைத்தமையையும் கண்ணனது அரசாட்சியையும் பற்றி எடுத்துக் கூறுவதே கஞ்சன் அம்மானை.

**தோஷ நிவர்த்தி**

மட்டக்களப்பின் பெரும்பாலான தமிழர் கஞ்சன் அம்மானையில் வருகின்ற கரடியர்கோன் கதையை ஆவணி மாத சதுர்த்தியில் இராக்காலத்தில் படிப்பர். சோற்றுப்பானையை (சோற்றுடன்) வைத்து அதன் முன்னால் ஒருவர் நின்றபடி கரடியர்கோன் கதையைப்படிக்க மற்றையோர் அதனைக் கேட்டுக் கொண்டிருப்பர். பெரும்மாலும் சதுர்த்திப் பிறைகண்டவர்களே இவ்வாறு செய்வதில் அக்கறை காட்டி வந்துள்ளனர். இங்ஙனம் செய்வதனால் சதுர்த்திப் பிறை கண்ட தோஷம் நீங்கி விடுவதாக இம் மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். நம்பிக்கையை ஊட்டுகின்ற பாடல் வரிகள் ஏடுகளில் மேல்வருமாறு காணப் படுகின்றன.

*சதுர்த்திப் பிறைகண்ட தக்கோர்க ளிக்கதையை*
*துதித்துப் புகழத் தொலைந்திடுங்கா ணம்மானை.*

**நாகசாதிப் பாம்பும் சங்கு சக்கரமும்**

கஞ்சன் அம்மானையில் இடம்பெறுகின்ற காளியன் யுத்தம் என்றகாதை கிருஷ்ணனுக்கும் கொடிய விஷப்பாம்புக்கும் இடையே நடந்த போரைப் பற்றிக் கூறுவதாகும். இந்தப் போரின் பின்னரே நாகசாதிப் பாம்புகளின் விரித்தாடும் படத்தில் கண்ணனுடைய சங்கு, சக்கரம் தரிக்கப்பட்டதாக மட்டக்களப்புத் தமிழரிடையே ஐதீகமான செய்தி இருந்து வருகிறது.

பரத ராஜ முனிவரால் இயற்றிய எண்பத்தெட்டு பக்கங்களைக் கொண்ட கஞ்சன் அம்மானை கொழும்பு கலாநிலையத்தால் பதிப்பு நூலாக வெளியிடப் பெற்றுள்ளது. அதன் ஆண்டு பற்றிக் குறிப்பிடப்படவில்லை, இன்னுமோர் பதிப்பு நூல் மட்டக்களப்பு அமிர்தகழியைச் சேர்ந்த ம.அ.உ. கந்தையா வைத்தியனால் 1933ஆம் ஆண்டிற் பதிப்பிக்கப்பட்டது (இவை இரண்டும் கிடைக்குமாறில்லை. தற்போது காணக்கூடியதாக சு. வித்தியனந்தனால் 1970 ஆம் ஆண்டிற் பதிக்கப்பெற்ற இருநூற்று நாற்பத்தெட்டுப் பக்கங்களைக் கொண்ட கஞ்சன் அம்மானை உள்ளது. இப்பதிப்பு நூல் மட்டக்களப்பு திமிலைதீவு கிருஷ்ணன் கோயிலுக்குரிய ஏட்டினது பிரதியாகும்.

**நூற்பயன்**

கஞ்சன் அம்மானையைப் படிப்பதால் ஏற்படும் பலாபலன்கள் பற்றி

*பூமண்டலத்திற் புகழ்ந் தெழுதினோர் படித்தோர்*
*பூபாரந் தீர்த்தோன் திருக்கதையைக் கேட்டோருந்*
*திருமால் வைகுந்தம் தான்பெறுவார் அம்மானை*
*செங்கோல் விளங்க செகத்திலுள்ளோர் தான்வாழப்*
*பொன்மாரி பெய்து பூதலமெல்லாம் விளையத்*
*திருநீறு மஞ்செழுத்துஞ் சீர் உருத்திராக்கமுமாய்த்*
*திருவரங்கிற் கண்துயிலும் செல்வ னருளாலே*
*கலியுகங் கண்டுங் கனம் பெருகி யுண்டாகி*
*நீடூழி காலம் நிறைந்திருப்பார் அம்மானை*

எனக் கஞ்சன் அம்மானை கூறுகிறது.

**வைகுந்த அம்மானை**

பஞ்சபாண்டவர்கள் வைகுந்தம் சென்ற வரலாற்றைச் சித்தரித்துக் கூறுவது வைகுந்த அம்மானை ஆகும். இதன்கண் உடல் நிலையாமை, இறைவன் மீது ஆழ்ந்த பக்தி என்பவற்றை உணர்த்துகின்றது. ஒருவர் இறந்து பிரேதம் அடக்கம் செய்யப்பட்ட நாள்முதலாக முப்பது நாள் முடியும் வரை மரண வீட்டில் வைகுந்த அம்மானை பாடப் பெறும். முப்பதாம் நாளிரவில் பாடி முப்பத்தியோராம் நாள் ஆரம்பமாகும் விடியற் காலையில் வாழிபாடப் பெறும். ஏனைய நாளில் வாழிபாடக்கூடாது என்பது இங்கு மரபாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. சுருங்கக்கூறின் வைகுந்த அம்மானை பாடுவது ஒரு கூட்டு வழிபாடாகும். மரணமடைந்தவரின் ஆன்ம ஈடேற்றங் கருதி நடைபெறும் நிகழ்ச்சியாகும்.

மட்டக்களப்பில் வைகுந்த அம்மானையைச் சாதாரண காலங்களில் பாடுவதைத் தவிர்த்துக் கொள்வர். அவ்வாறன்றி பாடும்பயிற்சியின் நிமித்த மாகப் பாடினாலும் முற்றோதுதலும் வாழிபாடுதலும் நடைபெறுவதில்லை. வைகுந்த அம்மானையை மகாவிந்தக் கதை எனவும் அழைக்கின்றனர். வைகுந்த அம்மானை ஏட்டின்கண் அமைந்துள்ள காப்புச் செய்யுள் மேல்வருமாறு உள்ளது:

*வாரி சூழுலகந் தன்னில் மகாவிந்தக் கதையை நன்றாய்ச்*
*சீரிய தமிழினாலே சிறந்த அம்மானை பாட*
*ஆரியக் கமலக் கண்ணன் அச்சுதன் பாதம் போற்றி*
*பாரிய மேகமேனி பச்சைமால் மருகன் காப்பு."*

என்று காணப்பெறுவதோடு

மேலும் மகாவிந்தக்கதை என்னும் நாமத்தையும் குறிப்பிடுகின்றது. அதன் முற்றுச் செய்யுள் மேல்வருமாறு காணப்படுகிது:

*இப்புராண மிசைந்துடன் கேட்பவர்*
*தப்பிலாது படிப்பவர் தாமெல்லாம்*
*முப்புராரி முதல்வ னருளினால்*
*செப்பரேத்தச் சிவபதம் சேர்வரே*

இவ்வாய்வுக்குரிய ஏடு துறைநீலாவணையைச் சேர்ந்த தோ.வே.கி.த. மார்க்கண்டுவினால் 1943 ஆம் ஆண்டில் பிரதி செய்யப்பட்டதாகும். இவ்வேடானது 1832 இல் பிரதி செய்யப்பட்டிருந்த ஏடு சிதைவுற்ற காரணத்தால் பிரதி எழுதி நிறைவுற்றதாகக் குறிப்படப்பட்டுள்ளது. இவ் வேட்டில் காப்புச் செய்யுளும் முற்றுச் செய்யுளும் வெண்பாவில் அமைய, ஏனைய துதிகளும் கதை வரலாறும் அகவலில் அமையப் பெற்று நடை என்னும் பெயரில் காணப்படுகின்றன. அதன் காப்புச் செய்யுள் மேலே காட்டப் பட்டுள்ளது.

தற்காலத்தில் பதிப்பு நூலாக வெளிவந்துள்ள வைகுந்த அம்மானையில் வெண்பா, விருத்தம், அகவல், கொச்சகம் முதலியன விரவி வருகின்றன. காப்புச் செய்யுள் வெண்பாவிலும் முற்றுச் செய்யுள் விருத்தத்திலும் அமைந்துள்ளன (செல்லத்துரை முரளிதரன், வெளியீடு, அஷ்டலட்சுமி பதிப்பகம் கொழும்பு - 11. நூலில் ஆண்டு குறிப்பிடப்படவில்லை.) அதன் காப்புச் செய்யுளுக்கும் இவ்வாய்வின் ஆதாரத்திற்கு எடுத்துக் கொண்ட ஏட்டின் காப்புச் செய்யுளுக்கும் வேறுபாடு உண்டு. நூலின் காப்புச் செய்யுள் மேல்வருவது:

*தக்க புகழ்நெறியுந் தருமரவர் வைகுந்தம்*
*புக்க பெருங்கதை புகலவே - மிக்க*
*வியமுகத்தான் பாரதத்தை மேவிக்கூத்தாடும்*
*கயமுகத்தான் பங்கயத்தான் காப்பு*

என அமைந்துள்ளது. இந்நூலின் முற்றுச் செய்யுள்

*அரிகரி ராமா வென்றால் அநேகமாஞ் செல்வமாகும்*
*அரிகரி ராமா வென்றால் அனேகமாய் பொருளுஞ்சேரும்*
*அரிகரி ராமா வென்றால் அறங்களு மிகுந்துவாழும்*
*அரிகரி ராமா வென்றால் அவர்கள் மெய்ஞ்ஞானியாமே.*

என்பதாகும். இந்நூலின் மேற்படி பாடல்வரிகளின் சொல்லும் பொருளும் ஒத்ததான வரிகள் ஏட்டின் இறுதிப் பகுதியில் முற்றுச் செய்யுளுக்கு முன்பாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆவை

*அரிகரி என்னும் அருளை நினைந்தவர்கள்*
*பரிவுடனே பூவுலகில் பச்சைமால் தன்னருளால்*
*அங்கச் சொறியகலும் ஆனகலி யகலும்*
*மங்காப் பவுசும் வாழ்வு மிகவுண்டாகும்*
*நல்ல தவஞ்சேரும் நற்கருணையும் பெறுவார்*
*கல்வி தளைக்கும் கலியும் பிறஞ்சாயும்*
*சிறிகரி யென்று தினமும் துதித்துவர*
*மறிமாடு காலி மகிழ்ந்து மிகப்பெருகும்*
*சொல்லரிய நல்ல சுகபாக்கியங் கிடைக்கும்* எனவாகும்.

**புராணங்கள்**

புராணம் என்பது பழமை என்னும் கருத்தைத் தருவது. அது பூர்வ காலத்திற் தோன்றியது. புராணங்களை மகாபுராணங்கள் உபபுராணங்கள் என இரு வகையாக வகுத்துள்ளனர். புராணங்களை உலகத்தோற்றம், ஒடுக்கம், மனுவந்தரம், முனிவர் அரசர் மரபு, அவர்களது சரித்திரங்கள் என ஐந்தாக வகுத்துக் கூறப்படும். பிற்காலத்தில் எழுந்த புராணங்களில் இவ்வகுப்புமுறை பின்பற்றப்படவில்லை. எடுத்துக்காட்டாக சீமந்தனி புராணம், ஏகாதசிப் புராணம், சிவராத்திரி புராணம், தக்கிண கைலாச புராணம் ஆகியவற்றைக் கூறலாம்.

சில புராணங்கள் அடியார்களது வரலாறு, தல மகிமை என்பவற்றைக் கூறுவதாகவும் அமைந்தன. புராணம் என்ற பெயர் மேற்படி சமய இலக்கிய நூல்களைத் தவிரப் பழங்காலத்தில் சில இலக்கண நூல்களுக்கும் சூட்டப் பெற்றுள்ளது. யாப்பருங்கல விருத்தியுரையில் மாபுராணம், பூதபுராணம் என்னும் இரண்டு நூல்கள் மேற்கோளாக வருகின்றன. பக்திநெறிக் காலத்திற்குப் பின்புதான் ஏராளமான புராண இலக்கியங்கள் தோற்றம் பெற்றதைக் காணலாம். புராணங்களிற் காணப்படும் வழிபாட்டு முறைகள் வேள்வி, தவம், விரதம், பூசை, தீர்த்தம், தோத்திரம், தியானம், எனப் பல்வேறு வகையினதாக உள்ளன.

**மட்டக்களப்பிற் புராணப் படிப்பு**

மட்டக்களப்பிலே கந்தபுராணம், திருவிளையாடற் புராணம், பெரிய புராணம், திருச்செந்தூர்ப் புராணம், சிவராத்திரி புராணம், ஏகாதசிப் புராணம் முதலிய புராணங்கள் மக்களிடத்திற் பயிலப்படுவன. திருவிளையாடற் புராணம் சிவபிரானின் திருவருட் சிறப்புக்களையும், பெரிய புராணம் சிவனடியார்களின் பக்தி நெறியையும் புலப்படுத்துவன. சிவராத்திரி புராணமும், ஏகாதசிப் புராணமும் விரத மகிமை பற்றியவை. திருச்செந்தூர்ப் புராணமும் கந்த

புராணமும் மட்டக்களப்புத் தமிழர்களின் வாழ்வியலில் இணைந்துள்ளன. புராணங்களில் எந்த மூர்த்தியைக் காப்பியத் தலைவனாகக் கொண்டுள்ளதோ அம்மூர்த்தியின் மீதான சிறப்புக்கள் மிகுதியாக இருக்கும். ஏனைய மூர்த்திகள் அம்மூர்த்தியை வந்து போற்றி வழிபடுவதாக அமையும்.

இப்புராணங்கள் மக்களுக்குப் பக்தி உணர்வை ஊட்டுவதாக விளங்கு கிறது. அதுமட்டுமன்றி தமிழிற் புலமை மிக்க புலவர்கள் தமது புலமையை வெளிக்காட்டிப் புராணங்களை இயற்றினார்கள். இதனால் தமிழ் அறிவைப் பெற விளைந்தோர் புராண இலக்கியத்தையும் கற்றனர். எனவே புராணங்கள் சமய அறிவை மட்டுமல்லாது மொழி அறிவையும் வழங்கின. புராணங்களில் இடம்பெறுகின்ற கதைகள், சம்பவங்கள் மூலமாகத் தமிழரது பண்பாட்டு விழுமியங்களையும், அவ்வப் பிரதேச மக்களின் மனோபாவங்களையும் அறிந்துகொள்ள ஏதுவாகின்றன.

எனவே தமிழரது மொழி, சமயம், பண்பாட்டுப் பழக்க வழக்கங்களை அறிந்து கொள்வதோடு இறைபக்தியை வளர்த்துக் கொள்வதற்கும் புராணங்கள் நன்கு உதவுகின்றன. இவ்விரண்டு புராணங்களும் வாழ்வியலுக்கு வழி காட்டுவனவாக அமைந்துள்ளன. திருச்செந்தூர்ப் புராணத்திலும் கந்தபுராணத் திலும் மேற்காட்டிய பண்புகள் நிறைந்து விளங்குவதை அப்புராணங்களை நன்றாக அறிந்துணர்ந்தவர்கள் தெரிந்து கொள்வர்.

## திருச்செந்தூர்ப் புராணம்

முருகக் கடவுளின் ஆறுபடை வீடுகளில் ஒன்றான திருச்செந்தூர் தலத்தின் மீது பாடப்பெற்ற தலபுராணம் திருச்செந்தூர்ப் புராணமாகும். திருச்செந்தூரில் எழுந்தருளியிருக்கும் முருகக் கடவுளின் கட்டளைப்படி வடமொழியில் அமைந்துள்ள அத்தல மகிமையை அவனருள்பெற்று விளங்கிய செவ்வலூர்க் கிருஷ்ண சாஸ்திரி மூலமாகக் கேட்டதும் வென்றிமாலைக்குப் பாடும் வல்லமை தோன்றியது. அதன் நிமித்தம் தமிழிலே திருச்செந்தூர்த் தல புராணத்தை அவர் பாடினார். அதனால் வென்றிமாலைக்குக் கவிராஜர் என்னும் சிறப்பும் கிடைக்கலாயிற்று என்பதை அப்புராணத்தின் சிறப்புப் பாயிரம் தெரிவிக்கிறது.

ஐப்பசி மாதக் கந்தசஷ்டி விரத காலத்தின்போது மட்டக்களப்பில் உள்ள ஆலயங்கள் சிலவற்றிலே திருச்செந்தூர்ப் புராணமும் சிலவற்றில் கந்த புராணமும் படிக்கப்படுகின்றன. சில ஆலயங்களில் படிப்பதும் சில ஆலயங் களில் படிப்பதுடன் பயன் சொல்லுதலும் (புராணபடனம்) வழக்காகும்.

### மண்டூரில் திருச்செந்தூர்ப் புராணம்

கந்தசஷ்டி விரதகாலத்தின்போது புராணபடனம் நடைபெறுகின்ற ஆலயங்களிற் பழமைமிக்க மண்டூர் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயமும் ஒன்றாகும். அவ்வாலயத்தில் நீண்ட காலமாகத் திருச்செந்தூர்ப் புராணமே புராணபடனமாக நடைபெற்று வருகிறது.

இவ்வாலயத்திற் திருச்செந்தூர்ப் புராணம் ஓலைச்சுவடியிலேயே உள்ளது. ஓலைச் சுவடியாகிய ஏட்டைப் படித்தே புராணபடனம் நடைபெற்று வருகிறது. இங்கு சிதைந்த நிலையில் இரு ஏடுகளும் பாவனையில் உள்ள ஒரு ஏடுமாக மூன்று ஏடுகள் உள்ளன. இவ்வேடு பழமைநிலை பெற்ற ஒன்றுடன் பார்த்துப் பிரதி செய்யப்பட்டதான வழிமுறையில் வந்துள்ளது. அவ்வாலயத்திற் பாவனையில் உள்ள திருச்செந்தூர்ப் புராண ஏடு இந்த ஆய்வின் துணைக்கு உதவியது.

மட்டக்களப்பிற் கந்தபுராணம் படிக்கப்படும் கோயில்களிற் பெரும்பாலும் முருகன்-தெய்வயானை திருமணமும் திருச்செந்தூர்ப் புராணம் படிக்கப்படும் கோயில்களிற் பெரும்பாலும் முருகன்-வள்ளி திருமணமும் நடைபெறுவது வழக்கம். திருச்செந்தூர்ப் புராணம் படிக்கின்ற அல்லது புராணபடனம் நடைபெறும் கோயில்களில் பெரும்பாலும் சூரன்போர் நடைபெறுவதில்லை. புராணங்கள் பெரும்பாலும் படலம் அல்லது சருக்கம் என்று தான் வகுக்கப் பட்டிருக்கும். திருச்செந்தூர்ப் புராணத்தில் அத்தியாயங்கள் என்று வகுக்கப் பட்டிருக்கிறது. இப்புராண மண்டூர் ஏடானது பதினெட்டு அத்தியாயங்களைக் கொண்டுள்ளதாகக் காணப்படுகின்றது. அவை

1. நைமிசாரணியத்திற்குச் சூதமுனி சென்ற அத்தியாயம்.
2. வியாசர் சுகருக்கு உபதேசித்த அத்தியாயம்.
3. செந்தூர் வைபவம் உரைத்த அத்தியாயம்.
4. திருவவதார அத்தியாயம்.
5. செயந்திபுர அத்தியாயம்.
6. வள்ளியம்மை திருவவதார அத்தியாயம்.
7. கந்தசுவாமி வள்ளியம்மையிடத்திற் சென்ற அத்தியாயம்.
8. வள்ளியம்மை திருக்கலியாண அத்தியாயம்.
9. பிரம்மாவுக்கு வரம் கொடுத்த அத்தியாயம்.
10. திரிசுவதந்திரர் வரலாறு உரைத்த அத்தியாயம்.

11. மாத பூசைவிதி உரைத்த அத்தியாயம்.
12. விபூதி அத்தியாயம்.
13. விசுவரூப அத்தியாயம்.
14. சுவாமியின் மந்திர மகிமையுரைத்த அத்தியாயம்.
15. பல கதை உபதேசித்த அத்தியாயம் (நாரத ரயிராவதத்திற்கு உப தேசித்த அத்தியாயம்)
16. இயமனுக்கு சிந்துபுர வைபவம் உரைத்த அத்தியாயம்.
17. பிரமன் உபதேசித்த அத்தியாயம்.
18. சுகப்பிரமரிஷி பூசை செய்த அத்தியாயம்.

எனக் காணப்பெறுகிறது. திருச்செந்தூர்ப் புராணம் காப்பு முதல் வாழி ஈறாகத் தொள்ளாயிரத்து தொண்ணூற்றெட்டுப் (998) பாடல்களால் அமைந்துள்ளது.

**நூற்பலன்**

இப்புராணத்தைத் தினமும் படிப்பவர்களும், சந்நிதியின்கண் இருந்து குரு முன்னிலையில் ஒருதடவை முற்றாகக் கேட்போர்களும் மூன்றுதடவை முற்றாகக் கேட்போர்களும் பெறும்பயனைத் திருச்செந்தூர்த் தலபுராணம் மேல்வருமாறு கூறுகிறது.

*சிந்துபுர மான்மியத்தைத் தினஞ் சொல்வோர்கள்*
*சிறந்தநிதி மக்களுட னெடிது வாழ்வார்*
*முந்துகதை சந்நிதியிற் குரு முன்னாக*
*முற்றவத் தியாயமொன்று கேட்போரெல்லாஞ்*
*சுந்தரவாம் புரவிமகக் கதியிற் சார்வார்*
*தூயகதை சந்நிதியின் முக்காற்கேட்போ*
*ரெந்த மலடானாலு மகப் பெற்றுய்ந்தே*
*யிருநிலத்தி லளகையர் கோனென்ன வாழ்வார்.*

**கந்தபுராணம்**

கச்சியப்ப சிவாச்சாரியாராற் கந்தபுராணம் தமிழிற் பாடப்பெற்றது. அது கந்தக்கடவுளுடைய உற்பத்தியும் பெருமையும் பற்றிக் கூறுகிறது. கந்த புராணம் பக்திச் சுவையுடன் இலக்கியச் சுவையும் நிறைந்தது. அப்புராணம் வடமொழியில் பதின்மூவாயிரம் கிரந்தங்களையுடையதாய் சிவரகசிய காண்டத்தில் உற்பத்தி காண்டம், அசுரகாண்டம், மகேந்திரகாண்டம், யுத்த காண்டம், தேவகாண்டம், தட்சகாண்டம் என ஆறு காண்டங்களை உடைய தாகவும் அமைந்துள்ளது. 10, 345 விருத்தப்பாக்களால் ஆனது.

### தமிழில் கந்தபுராணம்

கச்சியப்பர் காஞ்சி மாநகரிலுள்ள குமரகோட்டம் என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் குமாரக் கடவுளை மெய்யன்புடன் பூசித்து வந்தார். ஒரு நாள் குமாரக்கடவுள் அவர் கனவிலே தோன்றிச் சிவரகசிய காண்டத்திலுள்ள தமது சரித்திரத்தைத் தமிழிற் பாடிக் கந்தபுராணம் எனப் பெயரிடுமாறு கூறியருளினார் என்பர். கச்சியப்பர் அதனை எங்ஙனம் பாடுவேன் எனக் கேட்டலும் கந்தக்கடவுள் ''திகட சக்கரச் செம்முக மைந்துளான்'' என முதலடியை எடுத்துக்கொடுத்து மறைந்தருளினார். அதன் பொருட்டு எழுந்ததே கந்தபுராணம். அதன் சிறப்பினால் தமிழர்களின் கோயில்களிலும் புனிதத்தானங்களிலும் கந்தபுராணப் படிப்பு நடைபெற்று வந்துள்ளது.

### கந்தபுராண உட்கிடக்கை

தேவர்களின் துன்பம் நீக்கற்பொருட்டு சிவபிரானால் தோற்றுவிக்கப் பெற்றவரே முருகக்கடவுள் எனவும் சிவபிரானின் அம்சமான முருகக்கடவுள் தோன்றிச் சூரசங்காரம் புரிந்து தேவர்களின் துன்பத்தைப் போக்கினார் எனவும் கூறுகிறது. தக்கன் மற்றும் அவுணர்கள், தேவர்கள், முனிவர்கள், முதலிய பலரது வரலாறுகளும் தத்துவங்களும் இடம்பெறுகின்றன. பின்னர் தெய்வயானை, வள்ளி ஆகிய மகளிரை மணம் செய்து உலகை இரட்சித்த தோடு கந்தபுராணம் முற்றுப்பெறுகிறது.

### மட்டக்களப்பில் கந்தபுராணம்

மட்டக்களப்புக் கோயில்களில் கந்தசஷ்டி விரத காலத்திலே திருச்செந்தூர்ப் புராணம் படிக்கப்பெறாத ஏனைய பழமை வாய்ந்த திருக்கோயில் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோயில், கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் கோயில், கோயிற்போரதீவு ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி கோயில், அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் கோயில், வீரமுனை ஸ்ரீ சிந்தாயாத்திரைப் பிள்ளையார் கோயில் முதலான ஆலயங்களிலும் கந்தபுராணம் தொன்று தொட்டுப் படிக்கப்பெற்று வருகிறது. அவற்றுள்ளும் யுத்த காண்டமும் தேவ காண்டத்தில் தெய்வயானையம்மை திருமணப்படலமும் படிக்கப்பெற்றும் புராணபடனம் செய்யப்பெற்றும் வருகின்றன.

ஏனைய காண்டங்களைத் தத்தம் இல்லங்களில் ஓய்வு நேர காலங்களிற் படிக்கும் பழக்கத்தைக் கொண்டுள்ளனர். கந்தபுராணத்தில் யுத்தகாண்டம் விசாலமானது. கந்த சஷ்டி விரத காலத்தில் பெரும்பாலும் யுத்த காண்டத்திலுள்ள ஆயிரத்து ஐம்பத்தொரு (1051) பாடல்களும் படித்து முற்றோதுதல் செய்வது வழக்கம். இப்பாடல்களின் எண்ணிக்கையானது துறைநீலாவணை

யைச் சேர்ந்த தோ.வே. மார்க்கண்டுவினால் 1818 ஏட்டின் 1925 இல் பிரதி செய்யப்பட்டுள்ள ஓலைச் சுவடியில் உள்ளவாறு பெறப்பட்டதாகும்.

**நூற்பயன்**

*இந்திர ராகிப் பார்மே லின்பமுற் றினிது மேவிச்*
*சிந்தையி னினைந்த முற்றிச் சிவகதியதனிற் சேர்வர்*
*அந்தமி லவுணர் தங்க ளுடல்கெட முனிந்த செவ்வேற்*
*கந்தவேள் புராணந் தன்னைக் காதலித் தோதுவோரே*

## தோத்திரப் பாடல்கள்

முற்காலத்தில் கடவுளர்மீது பாடிய தோத்திரப்பாடல்கள் வாய்மொழி இலக்கிய மாகவே அமைந்தன. சடங்குகளிலும், இறைவழிபாட்டின் போதும், ஓய்வு நேரங்களிலும் தோத்திரப்பாடல்கள் பாடப்பெற்றன. அவை காவியங்கள், அகவல்கள், பிரார்த்தனைகள், தாலாட்டுகள் போன்ற பல்வேறு வகையான அமைப்புக்களிற் காணப்பெற்றன.

காவியங்கள் மாரியம்மன் காவியம், காளியம்மன் காவியம், கண்ணகை யம்மன் காவியம், பேச்சியம்மன் காவியம், ராமர் காவியம், திரௌபதியம்மன் காவியம், வயிரவர் காவியம், வதனமார் காவியம் முதலியனவாகப் பாடப் பெற்றன. அவ்வாறே ஏனைய தோத்திரவகைகளும் வழிபடும் தெய்வ மூர்த்தங்களுக் கேற்ப நிலவின. அவைகள் ஏட்டிலக்கியமாக நின்று பக்தி உணர்வை வளர்த்துவந்துள்ளன.

**காவியப் பாடல்**

மாரியம்மன் காவியத்திலிருந்து ஒருபாடல் எடுத்துக்காட்டாக இங்கு தரப் படுகிறது:

*அமிர்தபரி பூரணி நளினவிழி காரணி*
*அன்னபரி பூரணி சொர்ணமருள் பாகரி*
*திமிர்ததிமி திமிதியென நடனமிடு மகமாரி*
தேவர்தொழு தேவிதன் தாளிணை வழுத்தக்
*குமிர்தநல் வாயுமும் மதமுமிரு புயமும்*
*குடவயிறு நுதல்விழியு முடையமார் பழகும்*
*திமிர்தமா மும்மதத் தைந்துகர முடையதொரு*
*தொந்திவயி றன்சரண மென்றுநற் றுணையே.*

ஒரு காவியமானது மேற்கண்டவாறு சில பாடல்களைக் கொண்டு அமைவுறும்.

### அகவற் பாடல்

அகவற் பாடலுக்கு எடுத்துக்காட்டாகப் பராசக்தி அகவற்பாடலிற் சிலவரிகள் மேல் வருவனவாகும்:

*பூவினில் வாழும் பொன்னே மின்னே*
*மூவர்கள் முதல்வி தேவர்கள் தலைவி*
*சதுர்மறை யறிவி தலைதனை யறிவி*
*பசுபதி நிறைவி பார்தனி லுறைவி*
*..........................................*

இவ்வாறு ஒருஅகவல் அமைவுறும்.

### பிரார்த்தனைப் பாடல்

பிரார்த்தனைப் பாடலுக்குக் கண்ணகையம்மன் பிரார்த்தனைப் பாடலின் மேல்வரும் சில வரிகள் உதாரணமாகும்:

*சீர்வளரும் பூவிலுறைச் செல்வியே தெள்ளமுதே*
*ஏர்வளரும் பூலோகத் தீஸ்வரியே எண்ணமுதே*
*கார்வளரும் காவிலுறைக் கன்னியே காரிகையே*
*பார்வளரும் பைந்தமிழ்சேர் பைங்கிளியே பார்பதியே*
*தத்துபரி மீனவனை வெல்லவென்று மேதினியில்*
*...................................................*

ஒரு பிரார்த்தனைப் பாடலானது மேற்காட்டியவாறு அமைவுறும்.

### இறைவன் மீது பாடப்படும் தாலாட்டுப் பாடல்

தாலாட்டுப் பாடலுக்கு எடுத்துக்காட்டாகத் திரௌபதியம்மன் தாலாட்டுப் பாடலிற் சில வரிகள் மேல்வருவனவாகும்:

*ஓங்கார முக்கோணம் வண்ணமகளே*
*துரோபதை நாயகமே ஓம்நமசிவாய மென்று.*

*பங்கயாசன மிருந்து வண்ணமகளே*
*துரோபதை நாயகமே பறந்தோடி வாதாயே.*

*ஐவருக்குந் தேவியல்லோ தாயே வண்ணமகளே*
*துரோபதை நாயகமே அழியாத பத்தினியே.*

*பாஞ்சாலன் பெற்றபிள்ளை வண்ணமகளே*
*துரோபதை நாயகமே பசுங்கிளியே பத்தினியே.*

*ஐவரையுங் காத்ததுபோல் தாயே வண்ணமகளே*
*துரோபதை நாயகமே அனைவரையும் காருமம்மா.*

ஒரு தாலாட்டுப் பாடலானது மேற்காட்டியவாறு அமைவுறும்.

சி. கணபதிப்பிள்ளையினால் 1970ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்ட மகா மாரி தேவி திவ்விய கரணி என்னும் நூல் பிள்ளையார் பிரார்த்தனை முதல் தேவி திருப்புகழ் ஈறாக எண்பத்தேழு (87) விடயப் பாடல்களைக் கொண்டது. அந்நூலின்கண் காவியம், அகவல், தோத்திரம், தாலாட்டு, துதி எனப் பல தெய்வச்சுட்டிப் பாடல்கள் அமைந்துள்ளன. இப்பாடல்கள் பலரிடமிருந்து ஏடுகளைப் பெற்று ஒப்புநோக்கிச் சீர்செய்து அச்சுருச்செய்ததாகத் தனது முகவுரையில் பதிப்பாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

### அச்சுருப்பெற்றவை

மட்டக்களப்பில் வாய்மொழி, ஓலைச்சுவடி என்பவற்றில் உள்ள இலக்கியங்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதி தொடக்கம் அச்சுருப்பெற ஆரம்பித்தன. எனினும் சில இலக்கியங்கள் இக்காலத்திலே உருவாக்கப் பெற்று, நேரடியாக அச்சுருப்பெற்றன. இவ்வியலின் இப்பகுதி நேரடியாக அச்சுருவில் எழுந்த இலக்கியங்கள் பற்றிக் குறிப்பிடுகிறது.

#### 1. சீமந்தினி புராணம்

சீமந்தனி புராணம் உலகினர் பக்தியால் முக்தியைப் பெறலாம் என்பதை உணர்விக்கும் பொருட்டு சோமவாரத்தின் மகிமையைக்கூறும் புராணமாகும். இந்நூல் மட்டக்களப்பு புளியநகர் வித்துவான் சதாசிவப்பிள்ளை பூபாலபிள்ளையினால் இயற்றி 1894 ஆம் ஆண்டு பதிப்பிக்கப் பெற்றது. பிரமோத்திர காண்டத்திற் கூறப்பட்ட சீமந்தனியின் வரலாற்றை வழிநூலாகக் கொண்டே இந்நூல் செய்யப்பட்டதென்பதை ச. வயித்தியலிங்கம்பிள்ளை யினால் (வல்வை இயற்தமிழ்ப் போதகாசிரியர், யாழ்ப்பாணம்) வழங்கப் பெற்ற மேல்வரும் அதன் சிறப்புப் பாயிரச் செய்யுள் குறிப்பிடுகிறது:

*பெருந்தகையென் னுலகுபுகழ் குமாரசாமிப் பிள்ளைப் பெயரினான்றன்*
*அருந்தகைய மருமகன் பூபாலபிள்ளை யெனுநாம னறிவான்மிக்கான்*
*திருந்தவறன் மொழிபிரமோத் தரகாண்ட முதலபன்னூல் செப்பிநின்ற*
*மருந்தன்சீ மந்தனிதன் சரிதமற வகையிசைத்து வகுத்தான் மாதோ*

#### கதைச்சுருக்கம்

சீமந்தனி ஆரியவர்த்தமா நாட்டின் மன்னன் சித்திரவர்மனுடைய மகள். இவளுடைய பிறந்த நாட் சோதிடக் குறிப்பை ஆராய்ந்து பார்த்த சோதிட வல்லுனர் ''இவளது பதினான்காண்டில் தாலி இழப்பாள்'' எனக்கூறினர். இதனாற் தந்தை சித்திரவர்மன் மிகவும் துயரடைந்தான்.

அதனை அறிந்த சீமந்தனி ஞாக்ஞவல்கிய முனிவரின் மனைவியாகிய மைத்திரியிடம் சொல்ல, அவள் சோமவார விரதத்தைக் கடைப்பிடிக்குமாறு

சீமந்தனிக்குக் கூறினாள். சீமந்தனியும் அவ்வாறே அவ்விரதத்தைக் கடைப் பிடித்துக்கொண்டிருந்தாள். நிடததேச மன்னன் சந்திராங்கதனைத் திருமணம் செய்து கொண்டாள். ஒருநாள் சந்திராங்கதன் யமுனை ஆற்றிலே தோணி யேறிச் சென்று கொண்டிருக்கும்போது தோணி கவிழ்ந்தது. சந்திராங்கதன் தப்பிப் பிழைத்து நாகலோகம் சென்று நாகராசனாற் காப்பாற்றப்பட்டு அங்கே இருந்தான். ஆனால், சீமந்தனி தனது கணவன் ஆற்றில் இறந்தான் என்ற செய்தியினாற் கைமை பூண்டு வாழ்ந்து வந்தாள்.

சில காலங் கழிந்த பின்னர் சந்திராங்கதன் நாகலோகம் விட்டு வந்து சீமந்தனியைக் கண்டு மறுமணம் செய்து இருவரும் இன்புற்று வாழ்ந்தனர். சீமந்தனி தனது கணவனோடு சோமவார விரதத்தை அனுட்டித்து வருகையில் விரதநாளன்று வைதருப்ப நாட்டு மன்னனின் சூழ்ச்சியினால் மறையவர் இருவர் கணவனும் மனைவியுமாக மாறுவேடத்திற் சென்று சீமந்தனியிடம் பொருள் கேட்டனர். அவள் அவ்விருவரையும் உமாமகேசுவரராகப் பாவித்துப் பூசித்து வணங்கி அவர்கள் விரும்பியவாறு பொருள் வழங்கி அனுப்பினாள்.

இருவரும் பொருள் பெற்றுத் திரும்புகையில் பெண்ணாக வேடந் தரித்தவன் பெண்ணுக்குரிய உறுப்புக்கள் தோன்றிப் பெண்ணானாள். தனது முன்னைய ஆண் உருவைப் பெற முயன்றும் முடியாமற் போயிற்று. இறுதியாக இருவருக்கும் திருமணம் செய்து வைக்கப்பட்டது.

பரத்துவாச முனிவரின் ஆலோசனைப் பிரகாரம் வைதருப்பநாட்டு மன்னன் சக்தி வழிபாடாற்றித் தான் செய்த சூழ்ச்சிக்குப் பரிகாரம் செய்து கொண்டான். புராணத்தின் இறுதியம்சமாகச் சோம வார விரத மான்மியம் கூறப்பட்டுள்ளது. மங்கல வாழ்த்துப்பாடல்கள் இரண்டுடன் முற்றுப் பெறுகின்றது.

**நூல் அமைவு**

சீமந்தனி புராணம் காப்புச் செய்யுள் பாயிரச் செய்யுட்கள் நீங்கலாக ஆரிய வர்த்தச் சருக்கம், உற்பவச் சருக்கம், விரதச் சருக்கம், சந்திராங்கதச் சருக்கம், விவாகச் சருக்கம், சூழ்வினைச் சருக்கம், நிடதச் சருக்கம், நாகலோகச் சருக்கம், மீட்சிச் சருக்கம், பாவனைச் சருக்கம் என பத்துச் சருக்கங்களைக் கொண்டுள்ளது. எண்ணூறு விருத்தப் பாக்களால் காப்பியச் சுவையுடையதாய் ஆக்கப்பெற்றது.

இந்நூற்பதிப்பில் வல்வை இயற்றமிழ் போதகாசிரியர் ச. வைத்திலிங்க பிள்ளை, திருமயிலை வித்துவான் சண்முகம்பிள்ளை, பூவை அட்டவதானம் கலியாணசுந்தரம் முதலியார், வல்வை சண்முகசுந்தரமுதலியார் ஆகியோர்

சிறப்புப் பாயிரங்கள் பாடியுள்ளனர். இந்நூல் சென்னையில் 1894 ஆம் ஆண்டு சென்னை - இட்டா, நாராயணசாமிநாயுடு ஸ்ரீ பத்மநாபவிலாச அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

**நூலின் ஆசி**

சீமந்தனி புராணத்தைக் கேட்டு மங்களகரமான நல்வாழ்வைப்பெற்று வாழு மாறு அப்புராண நூலாசிரியர் வாழ்த்துகிறார். அதனை மேல்வரும் செய்யுள் காண்பிக்கிறது:

*பொருவிறவ வியாசன்முன முரைப்பக் கேட்டுப்*
*புராணமுனி புகன்ற சிவகதை தம்மிற்*
*சுருதிமுத லாகமங்க ளனைத்துங் கூறுஞ்*
*சுடர்மதிநாள் விரதமதை மேனா ளோற்றுப்*
*பெருகுநலம் படைத்தவரிற் பெரும்பேறுற்ற*
*பெட்புயர்சீ மந்தனியின் பிறங்குகாதை*
*வருமுறைமற் றறிந்தளவி லுரைப்பாங் கேண்மின்*
*வையகத்தீர் மங்களம்பெற் றிதமாய் வாழ்வீர்*

**நூற்பயன்**

நல்லதவ விரதங்களை முறையாக அனுட்டித்து வாழ்ந்திடின் இம்மையிலும் மறுமையிலும் மேன்மை பெறலாம் என்ற ஆப்தவாக்கியத்துக்கு எடுத்துக் காட்டாக வாழ்ந்த சீமந்தனியின் புராணத்தை எத்தொழில் புரிவாரேனும் உள்ளன்போடு கேட்பின் தமக்குறும் துயர் அகன்று இன்பம் பெற்றுய்வர் எனக் கூறப்படுகிறது. அதன் செய்யுள் மேல்வருமாறு உள்ளது:

*இவ்வகைநற் றவவலியா லிகபரத்துச்*
*சுகமனைத்து மினிதாய்ப் பெற்ற*
*கொவ்வையிதழ்க் கனிமொழிப்பூங் கொம்பனசீ*
*மந்தனியின் குறைவி லாத*
*செவ்விதநற் சரிதையிதை யுரையில்வழுத்*
*தேடிலராய்ச் சிந்தை நாடி*
*யெவ்வருணத் தவரெனினுங் கேட்பினுறு*
*துயர்நீக்கி யிதங்கண் டுய்வார்.*

**பெரியதுறை திருமுருகர் பதிகம்**

பெரியதுறை திருமுருகன் பதிகம் மட்டக்களப்பு பெரியதுறையில் எழுந் தருளியுள்ள முருகக் கடவுளின் மேல் பாடப்பெற்றதாகும். இப்பதிகமானது கலிவிருத்தத்தால் ஆகிய காப்பையும், ஆசிரிய விருத்தப்பாவால் ஆகிய

பத்து ஆசிரிய விருத்தங்களையும் கொண்டுள்ளது. அது வித்துவான் ச. பூபாலப்பிள்ளை அவர்களால் 1882 ஆம் ஆண்டு பாடப் பெற்ற செய்யுள் நூலாகும்.

## iii. தமிழ் வளர்த்த பெரியார்கள்

இவ்வாய்வுக்குட்பட்ட காலத்துக்குள் குறிப்பிடத்தக்க தமிழ்ப்பணியாற்றிய பெரும்பாலான பெரியார்களின் வாழ்க்கைக் குறிப்புக்களோ படைப்புக்களோ இந்நூலாசிரியருக்குப் பூரணமானநிலையில் கிடைக்கப்பெற்றில. அக் காலத்தில் எழுந்த இலக்கிய ஆக்கங்கள் நூலுருப்பெறாது ஓலைச்சுவடிகளிலே பொதிந்திருந்தன. ஓலைச்சுவடிகளைப் பிரதி எழுதிப் படிப்போர் தொகையும் மிக அரிதாகவே இருந்தது. அத்தகைய படைப்புக்களிற் பெரும்பான்மை அவர்களது சந்ததியினரது பேணற் குறைபாட்டினாலும், பெருவெள்ளம் (1910, 1957), சூறாவளி (1978), அண்மைக்காலத்தில் ஏற்பட்டத போர்ச் சூழல், சுனாமி (2004) போன்றவற்றினால் அழிந்துவிட்டன. எனினும் இவை களிலிருந்து தப்பிப்பிழைத்த ஓலைச் சுவடிகளிலிருந்தும், நூல்களிலிருந்தும், கையெழுத்துப் பிரதிகளிலிருந்தும் தரவுகளைப் பெறமுடிந்தது. பலரது பெயர்கள் மக்கள் மத்தியில் நிலவினாலும் அவர்களது படைப்புகள் பற்றிய ஆதாரங்கள் எதுவும் எமக்குக் கிடைக்கப் பெற்றில. அத்தகையவர்களைப் பற்றி இந் நூலில் எடுத்தாளப்படவில்லை.

கிடைக்கப்பெற்ற தரவுகளைஆதாரமாகக் கொண்டு மட்டக்களப்பில் தமிழ் வளர்த்த பெரியார்கள் பற்றியவிபரங்கள் குறிப்பிடப்படுகின்றன. இவற்றின் கண் அவர்களது தமிழ்ப்பணி தொடங்கிய காலத்தைக் கருத்திற் கொண்டே அவர்கள் பற்றியதரவு காட்டப்பெறுகிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டுக்குரியவர்களான சின்னவப்புலவர் (1877), சி. குமாரசாமிஐயர் (1879), இ.வ. கணபதிப்பிள்ளைப் புலவர் (1884), சோமசுந்தரம்தேசிகர் (1885), புலவர் வினாசித்தம்பி (1887), அருணாசலம் தேசிகர் (1888), வித்துவான் அ. சரவணமுத்தன் (1890), உவில்லியம்பிள்ளை (1891), விபுலானந்த அடிகள் (1892), வைத்தியர் இ. அருணாசலம் (1894), புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை (1899) முதலிய பல அறிஞர்களது தமிழ்ப்பணிகள் பத்தொன்பதாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டதாகையால் ஆய்வுக்காலத்தைக் கருத்திற்கொண்டு அவர்களைப்பற்றி இதனுட் குறிப்பிட முடியவில்லை.

இங்கு தமிழ் வளர்த்த மட்டக்களப்பு தமிழ்ப்பெரியார்கள் பாரம்பரியக் குருகுலக் கல்விமுறையில் இலக்கண இலக்கியங்கள், வைத்தியங்கள், சோதிடங்கள், மந்திரங்கள் முதலிய இன்னோரன்னவைகளைப் பயின்று தமிழ்ப் பணியாற்றியமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

**வித்துவான் ச. பூபாலபிள்ளை**

இவர் தனது இறுதிக் கால கி.பி. 20 ஆம் நூற்றாண்டில் மேலும் பல அரிய நூல்களையும் ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் ஆக்கித் தமிழ்ப்பணி புரிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவர் இயற்றிய நீண்ட ஆசிரியவிருத்தங்கள் தாயுமானவரது விருத்தங் களைப் போன்றே செந்தமிழ் வளங்கொழித்து ஒழுகுபவை.

காலம் - 1856-1921
பெற்றோர் - தாய்- வள்ளிப்பிள்ளை,தந்தை-சதாசிவப்பிள்ளை
பிறந்த இடம் - புளியன்தீவு
தமிழ்ப்பணி - பெரியதிருத்துறைத் திருமுருகன் பதிகம் (1882)
சீமந்தனிபுராணம்(1894),
உலகியல் விளக்க உரை, புளியநகர் ஆனைப்பந்தி
சித்திவிக்கினேஸ்வரர் பதிகம்

முதலியவற்றை கி.பி.19ஆம் நூற்றாண்டில் இயற்றியுள்ளார்.

**மகிட வேலாப்போடியார்**

காலம் - 1804-1880
பெற்றோர் - தாய்-கெங்காத்தை, தந்தை-சின்னத்தம்பிப்போடியார்
பிறந்தஇடம் - கோளாவில், அக்கரைப்பற்று.
தமிழ்ப்பணி - தம்பிலுவில் பள்ளு,
திருக்கோயில் ஊஞ்சல், பலவகையானதனிப்பாடல்கள்

என்பன இவராற் பாடப்பட்டுள்ளன. இப்பாடல்களின் பாடியகாலம் குறிப் பிடப்படவில்லை.

மட்டக்களப்புத் தமிழர்மத்தியிலே இவரைக் கோளாவில் வேலாப் போடியார் எனவும், மொட்டை வேலாப்போடியார் எனவும், வசைக்கவிப் புலவர் எனவும் பரவலாகப் பேசப்பட்டு வருவதைக் காணமுடிகிறது.

**வீ.தோ.பொ.த. ஆறுமுகபிள்ளை**

காலம் - 1822 - 1908
பெற்றோர் - தாய்-கண்ணம்மையார், தந்தை-சாஸ்திரிவீமாச்சியார்

பிறந்த இடம் - துறைநீலாவணை.

தமிழ்ப்பணி - துறைநீலாவணை கண்ணகையம்மன் ஊர் சுற்றுக் காவியம் (1845)

வயிரவர் தோத்திரம் (1840)

மண்டூர் முருகன் காவடிவிருத்தம் (1848),

துறைநீலாவணை கண்ணகையம்மன் சின்னக் காவியம் (1852)

வதனமார் தோத்திரம் (1850)

சோதிடமாலை (1860)

கதிர்காமக் கந்தன் மீதுபாடிய பேரின்பக்காதல் (1862)

விஷ வைத்தியத் தொகுப்பு (1868)

என்பவைகளை ஆக்கியும் வைத்தியவாகடங்கள், சோதிடங்கள், காசிகாண்டம், நைடதம், பத்ததிகள், துறைநீலாவணை கண்ணகையம்மன் வழக்குரை, குளிர்ச்சிக்கதை, கஞ்சன் அம்மானை, வைகுந்தஅம்மானை, மகாபாரதம், திருச்செந்தூர்ப்புராணம், கந்தபுராணம், நிகண்டு கல்வெட்டுகள் முதலான பலசிதைந்த ஓலைச்சுவடி களை மீளவும் ஓலைச்சுவடிகளிற் பிரதியாக்கங்கள் செய்து பாதுகாத்து மட்டக்களப்பில் தமிழ்ப் பணிபுரிந்தார்.

சிறந்த கல்விமானாக விளங்கிய இவர் சித்த வைத்தியம், விஷ வைத்தியம், முறிவு வைத்தியம் ஆகியவைத்தியத் துறையிலும் பிரபல்யம் பெற்றவராவார்

துறைநீலாவணை ஆலயங்களில் இன்றுவரை படிக்கப்பெறுகின்ற ஓலைச் சுவடிகள் அன்னாரின் பிரதியாக்கங்களேயாகும். அவைகள் பாதுகாப்பாகப் பேணப்பட்டு வருகின்றன.

**சண்முகச் சட்டம்பியார்**

காலம் - 1831 - 1885

பெற்றார் - தந்தை-வல்லிபுரம்

பிறந்த இடம் - தாமரைக்கேணி(கோட்டைமுனை)

தமிழ்ப்பணி - கந்தபுராணம், நைடதம் ஆகியவற்றிற்கு ஓலைச் சுவடிகளில் விருத்தி உரைகளை எழுதியுள்ளார்.

கந்தபுராணம், இராமாயணம், பாரதம், நைடதம் முதலிய இலக்கியங்களிலும் தமிழ் இலக்கணத்திலும் பாண்டித்தியம் பெற்றுவிளங்கினார்.

இவரிடம் தமிழ் கற்றுத் தமிழறிவுபெற்றவர்கள் பலர். அவர்களில் ஆர். டபிள்யூ. சேதுகாவலர், சோமநாத முதலியார் என்போர் குறிப்பிடத்தக்கோர் (வி.சீ. கந்தையா, 1964).

**மூத்ததம்பி (வேடப்பிள்ளை) வைத்தியர்**

| | | |
|---|---|---|
| காலம் | - | 1836 - 1906 |
| பெற்றார் | - | தந்தை வேலாயுதர் |
| பிறந்த இடம் | - | கோட்டைமுனை |
| தமிழ்ப்பணி | - | கோட்டைமுனை, வைரவர் காவியம்<br>கொத்துக்குளம் மாரியம்மன் பதிகம்<br>தாமரைக்கேணி மாரியம்மன் பதிகம்<br>விஷ்ணுபதிகம் ஆரைப்பற்றை, திருநீலகண்ட விநாயகர் பதிகம்<br>கண்டிராசன் ஊஞ்சல்<br>வள்ளியம்மன் ஊஞ்சல்<br>சிலதனிப்பாடல்கள் |

முதலியவற்றை இயற்றியுள்ளார். இவர் சந்தப்பாடல்களைப் பாடுவதில் சிறந்த புலமையாளரென அறிய முடிகிறது. பாரம்பரியக் கல்விமுறையில் சித்தவைத்தியத்தைக் கற்று அத்துறையிலும் சிறந்த வைத்தியராகப் பிரபல்யம் பெற்றுவிளங்கினார்.

# 7

# முடிவுரை

இந்நூல் மட்டக்களப்புத் தமிழரின் மரபுவழிப் பண்பாடு பற்றியதாகும். பண்டைக்காலம் முதல் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் காலம் வரை மட்டக்களப்புத் தமிழரிடையே காணப்பட்ட பண்பாடு பற்றி எழுதப்பட்டுள்ளது. பல அம்சங்களைத் தழுவிய முறையிலேயே எழுதப்பட்டுள்ளது. இப்பண் பாட்டுக் கூறுகளை பல்வேறு அம்சங்களினூடாக ஆறு இயல்களாகப் பகுக்கப்பெற்று நோக்கப்பெற்றுள்ளன.

மட்டக்களப்புத் தமிழரின் தொன்மை,சைவசமய வளர்ச்சி, சாதிகளும் அவற்றின் உட்பிரிவுகளும், போடி நிருவாகமுறை, ஆலய வழிபாட்டுக் காலத்தில் சமூகத்தை கௌரவிக்கும் பாங்கு, ஒவ்வொரு சாதிக்குமுரிய சமூகத் தொண்டூழியங்கள், சாதியினருக்குரிய கோயில்த் தொழும்புகள், ஒவ்வொரு சாதிக்குமுரிய விருதுகள், அவர்களுக்கான தனித்துவமான வழிபாட்டுத் தெய்வங்கள் என்பனவற்றை ஆய்வு செய்வதற்கு இப்பிரதேசம் பற்றி எழுதப்பெற்ற ஆக்கங்கள், வாய்மொழி சார்ந்த வரலாறுகள், கர்ண பரம்பரைக் கதைகள், கல்வெட்டுகள், செப்பேடுகள் பெரிதும் துணை புரிந்தன.

மட்டக்களப்பில் கல்வெட்டுகள் என்பது பனையோலையில் எழுதப் பெற்ற ஓலைச்சுவடிகளையே. இவ்வோலைச் சுவடிகள் பல்லாண்டுகளுக்கு முற்பட்டவைகள். அவைகள் ஆலயங்களிலும் தனியாரிடத்தும் பேணப்பட்டு வந்துள்ளமையைக் காணமுடிந்தது. ஆயினும் இப்பிரதேசத்தில் பாறைகளில் எழுதப்பெற்ற மூன்று கல்வெட்டுகளும் கள ஆய்வின்போது திருக்கோயிலில் காணப்பெற்றன.

மட்டக்களப்புப் பிரதேசம் பல்வேறுபட்ட குலங்களையும் குடிகளையும் உள்ளடக்கியுள்ளது. மட்டக்களப்புச் சமூகத்தை ஆதிக் குலங்களாகவும் வந்தேறிய குலங்களாகவும் இரு பிரிவுகளாகக் கொண்டு ஆராயப்பட்டுள்ளன. ஆதிக் குலங்களாக இயக்கர், நாகர், வேடர் குறிப்பிடப்படுகின்றனர். ஏனைய குலங்களான வந்தேறிய குலங்களின் குடியேற்றம் கலிங்க நாட்டிலிருந்தும் சோழநாட்டிலிருந்தும் பாண்டி நாட்டிலிருந்தும் பண்டைய காலம் முதலாக

காலத்துக்குக் காலம் நடைபெற்று வந்துள்ளதாக கூறப்படுகிறது. மட்டக் களப்பில் பிரதான குடிமுறை, தொழும்புகள், தொண்டூழியங்கள் கலிங்க மாகோனால் வகுத்தளிக்கப் பெற்றதாக அறியமுடிகிறது.

மட்டக்களப்புக் கல்வெட்டுகளின் ஆய்வுத் தரவுகள் பண்டைய சமுதாய மானது மேலாண்மையாலும், ஆலயங்கள் வாயிலாகவும், சமூக அமைப்பின் கட்டுப்பாடுகளாலும் ஒழுங்கான முறையில் வந்திருப்பதைத் தெளிவுபடுத்தி யுள்ளன.

தமிழர் என்பவர்கள் ஆதிகாலத்தில் சைவசமயத்தவர் என்றே கருதப் பட்டனர். ஆயினும் பின்னர் அந்நியராட்சியில் ஏற்பட்ட சமயக்கலப்பினால் தமிழரில் சைவர்கள் மட்டுமன்றி கிறிஸ்தவ சமயத்தைத் தழுவியோரும் உள்ளனர். ஒரு இனத்துக்குத் தனித்துவமானது மொழி. ஆனால் இஸ்லாமிய சமயத்தைச் சார்ந்தவரும் பேசுவது தமிழ்மொழியாக இருப்பினும் அவர்கள் தமது சமயத்தை அடிப்படையாக வைத்து முஸ்லிம் இனமாகப் பிரித்துக் கொண்டனர். அதுமட்டுமன்றி இலங்கையில் உத்தியோகபூர்வ அறிக்கைகளும் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் என மூன்று இனங்களாகக் காட்டுகின்றன. எனவே இந்நூலில் மட்டக்களப்புத் தமிழர் சமூகத்தில் சைவ, கிறிஸ்தவ சமயங்கள் மாத்திரமே உள்ளதெனக்கொண்டு சமயப்பண்பாடு ஆராயப் பட்டுள்ளது.

மட்டக்களப்பில் வாழ்கின்ற சைவசமயத்தைச் சார்ந்த தமிழர்கள் பொது வாக எல்லாத் தெய்வங்களையும் வேறுபாடின்றி வழிபட்டாலும் சிவன், பிள்ளையார், முருகன், விஷ்ணு, காளியம்மன், மாரியம்மன், கண்ணகி யம்மன், திரௌபதியம்மன் போன்ற தெய்வங்கள் பெரும்பான்மையாக வழிபடப்பட்டன. வீடுகள் தோறும் மாரி, பேச்சி ஆகிய அம்மன் வழிபாடு களும், வைரவர் வழிபாடும் நடைபெற்றன. விவசாயம் செய்யுமிடங்களில் பிள்ளையார் வழிபாடு, வைரவர் வழிபாடு, நாகவழிபாடு என்பனவும், மாட்டுப்பட்டி உள்ள இடங்களில் வதனமார் வழிபாடும் பிரபல்யம் வாய்ந்த வைகளாக விளங்கின. வழிபாட்டுச் சடங்குகளின் போது தெய்வமாடுதலும் கட்டுரைத்தலும் முக்கியம்சமாக இடம்பெற்றன. ஒவ்வொரு தெய்வவழி பாட்டு முறையிலும் வெவ்வேறான அம்சங்கள் காணப்பெறுகின்றன. இவ்வம்சங்களின் மூலமாக மட்டக்களப்புச் சமயப் பண்பாட்டில் காணப்பெற்ற பண்பாட்டுக் கூறுகள் பலவற்றை அறிந்துகொள்ளக்கூடியதாக உள்ளது.

மட்டக்களப்புப் பிரதேசத்தில் பல கோயில்களும் தேவாலயங்களும் அமைந்திருந்தாலும் ஊர்கள்தோறும் சைவக்கோயில்கள் பல இருப்பதைக் காணமுடிகிறது. அவற்றின்கண் புராதன ஆலயங்கள், தேசத்துக் கோயில்கள் எனக்கூறப்படும் திருப்படைக் கோயில்கள் ஆகியவற்றின் வரலாறுகள்,

கட்டுமான அமைப்புகள், சுற்றாடல், வழிபாடுகள், தொழும்புகள், பரிபாலனம், சமூகத் தொடர்புகள் என்பன கூறப்பெற்றுள்ளன. மட்டக்களப்புக் கோயில்கள் தமிழர் பண்பாட்டைக் காட்டுகின்ற ஊடகமாக விளங்குகின்றன. மட்டக் களப்புச் சைவ சமயத்தினரிற் பெரும்பான்மையோர் ஆகம நெறிசாராத வழிபாட்டுமுறையைக் கடைப்பிடிப்பவர்களாய் இருந்து வருகின்றனர் என்பதை இந்நூல் தெளிவுபடுத்துகிறது.

போர்த்துக்கீசரால் முதன்முதலாக கிறிஸ்தவ சமயம் அறிமுகம் செய்தாலும் பதினாறாம் நூற்றாண்டிலே கத்தோலிக்க குருமார் தங்கியிருந்து சமயப்பணி புரிந்த இடங்களாக மட்டக்களப்பும் திருகோணமலையுமே என அறியமுடிகிறது. கிழக்கு மாகாணத்திலிருந்த எல்லாப் பங்குகளுக்கும் தாய்ப்பங்குகளாக மட்டக்களப்பும் திருகோணமலையும் இருந்து செயற் பட்டன. இவர்களால் முதன்முதலாக கத்தோலிக்க தேவாலயம் கி.பி1624 ஆம் ஆண்டில் தாண்டவன்வெளியில் கட்டப்பெற்றதாக அறியமுடிகிறது. மெதடிஸ்த திருச்சபையின் ஆரம்ப சேவைக்காலம் கி.பி. 1814 ஆம் ஆண்டின தாகக் கருதப்படுகிறது. கத்தோலிக்க சமயம் தேவாலயங்களின் மூலமாகவும் மெதடிஸ்த திருச்சபை பாடசாலைகளின் மூலமாகவும் தமது சமயத்தைப் பரப்பினர். புளியந்தீவில் உள்ள மெதடிஸ்த தேவாலயமே மிகப் பழமையான தேவாலயமாகக் கூறப்படுகிறது. பிரித்தானியர் கி.பி. 1798 இல் இலங்கைக்கு சமய,வர்த்தக நோக்குடன் வந்தவருகையோடு அங்கலிக்கன் திருச்சபையும் வரலாயிற்று. மட்டக்களப்பில் கி.பி.1889 ஆம் ஆண்டில் அங்கிலிக்கன் தேவாலயம் கட்டிமுடிக்கப்பட்டுப் பிரதிட்டை செய்ததாகவும் தெரியவருகிறது.

தமது சமய வளர்ச்சிப் பணிக்கென்று வந்த கிறிஸ்தவர்களின் சமயப் பணியின் காரணமாகச் சமுதாயத்தில் சில மாற்றமும் அபிவிருத்தியும் ஏற்பட்டன. கத்தோலிக்க, மெதடிஸ்த கிறிஸ்தவர்களின் ஆரம்ப காலகட்டத்தில் இவர்களாற் சுதேசிகள் பல துன்பங்களுக்கு ஆளாகினர். எனினும் பல நன்மைகளும் கிடைக்கப் பெற்றன. காலத்திற்கேற்றவாறு அவர்களது பண்பாடு பல துறைகளிலும் வளர்ச்சியுறச் செய்தது.

ஒருவர் தன் தாயின் கருவறையில் கருவுற்ற காலந்தொட்டு அவர் இறந்த பின்னரும் மேற்கொள்ளப்படுகின்ற சம்பிரதாயக் கருமங்கள் ஆதிய பண்பாடு களில் மட்டக்களப்புத் தமிழர் தனித்தன்மையைக் கொண்டு விளங்குகின்றனர். மட்டக்களப்புத் தமிழரது சம்பிரதாயங்கள் வாழ்வியற் கருமங்களிலும் தொழிற்சார் கருமங்களிலும் பின்னிப்பிணைந்துள்ளன. பிறப்பு, சாமர்த்தியம், திருமணம், இறப்பு முதலான சடங்குமுறைகள், அவற்றின் கண் விசேடமாகக் கடைப்பிடித்து வருகின்ற கூரைமுடி வகைகள் சீர் வரிசைகள் முதலான பல நடைமுறை வழக்குகள் பிரபல்யம் பெற்றதாகும். மட்டக்களப்புத் தமிழரது

உபசரிப்பு, விருந்துபசாரம், மரியாதை செலுத்தும் பாங்கு, குடிமனை அமைத்தல், அவர்களது ஆடை அணிகள், அவர்கள் பயன்படுத்திய பாவனைப் பொருட்கள் என்பன அக்கால மட்டக்களப்புத் தமிழரது சால்பினைக் குறிகாட்டும் சுட்டிகளாகக் காணப்படுகின்றன.

மட்டக்களப்புத் தமிழரது பிரதான கலைகளில் கூத்துக்கலை முதலிடம் வகிக்கிறது. அது வடமோடி, தென்மோடி என இருவகைப் பாங்குகளில் ஆடப்பெற்று வருகின்றன. இக்கூத்துகள் மட்டக்களப்புத் தமிழ் மக்களின் சமய சமூக பண்பாட்டலுவல்களையும் வாழ்வின் முறைகளையும் பிரதிபலிப் பனவாகும். விளையாட்டுக் கலைகளில் கொம்பு விளையாட்டு பாரம்பரிய விளையாட்டுக்களில் ஒன்றாகவும், கண்ணகியம்மனுடன் தொடர்புடைய சமய வழிபாட்டு முறையாகவும் இருந்துவருகிறது. அதுமட்டுமன்றி இதன் கண் வசந்தன் ஆட்டம், இசைக்கலை, கரகாட்டம், அழகியற்கலை முதலியவை பேணப்பட்டுவருவதைக் காணமுடிகிறது. இவ்விளையாட்டின் மூலமாக வரட்சி நீங்க மழை பெய்வதாகவும், தொற்றுநோய்கள் முதலான பிணி துன்பங்களும் நீங்கப்பெறுவதென்பது இப்பிரதேசத் தமிழர்களது நம்பிக்கை யாகும். இவ்வகையான கலைகள் பொழுது போக்குக்காக மட்டுமன்றி உடல்நலம், சமூக இசைவாக்கம், சமூக நன்மை, சமய விழுமியங்களை அறிவுறுத்துதல், மனிதநேயம், முதலியவற்றிற்காக அச்சமூகத்தால் கைகொள்ளுப்பட்டு வந்துள்ளன.

மேலும் விசேடமாக மருந்து மந்திரக்கலை, மருத்துவக்கலை என்பன பிணிதீர்த்தல், பேயோட்டுதல், மனிதர்களை மட்டுமன்றி விலங்குகளையும் வசியம் பண்ணுதல், திருட்டினைக் கண்டுபிடித்தல், கோ'பிற்சடங்குகள் நடாத்துதல் போன்ற மனிதர்களுக்கு நன்மை பயப்பனவான செயற்பாடு களுக்குப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. தற்காலத்திலும் இம்மந்திரக்கலை பயன்பட்டு வருவது கண்கூடாகத் தெரிகிறது.

கட்டடக் கலையிற் பயன்படுத்தப்பட்ட மூலப்பொருட்கள் இயற்கைப் பொருட்களான மரம் தடிகள், இலைகுழை, புல், வைக்கோல், ஓலை, புற்று மண், களிமண், சொறிக்கல், சுடாதகல், தேன், மருதமரச்சாம்பல், நீறு, சுண்ணாம்பு முதலியன பயன்படுத்தப்பட்டன. வீடுகளில் மச்சு என்னும் அமைப்புமுறை காணப்பட்டது. விளக்குவைப்பதற்கான மாடம் சுவரில் அமைக்கப்பட்டது. அது விளக்கு மாடம் என அழைக்கப்பெற்று வந்தது.

சிற்பக்கலை கல், மண், மரம், தந்தங்கள், சுண்ணாம்பு, நீறு. வெண்கலம் பித்தளை முதலிய உலோகங்களினாற் விளக்கமுற்றிருந்தது. அவை தெய்வத் திருவுருவங்கள், இயற்கை உருவங்கள், கற்பனை உருவங்கள், பிரதிமை உருவங்கள் என்பவைகளாக அமைந்திருந்தன. ஓவியக்கலை, இலக்கியக்

குறிப்புகள், ஓலைச் சுவடிகள் ஆகியவற்றிலும், கோயில்களிலும் பொதுக் கட்டடங்களிலும், கூத்து, கொம்பு விளையாட்டு போன்ற கலை நிகழ்வு களிலும் வெளிப்படுத்தப்பெற்றன.

தமிழ் நாட்டுக்கும் இலங்கைக்கும் உறவுகள் நீண்ட காலமாக இருந்து வந்துள்ளமையால் அங்கு காலத்துக்குக் காலம் ஏற்பட்ட சமூகப்பண்பாட்டு அரசியல் தாக்கங்களின் பிரதிபலிப்புக்கள் இலங்கையிலும் ஏற்பட்டன. ஆனால் மட்டக்களப்புப் பிரதேசம் தனது பௌதீக இயற்கையமைப்பின் காரணமாக அத்தாக்கங்களுக்கு பெரும்பாலும் உட்படாது தனித்துவத்தைப் பேணிக்கொண்டது. வாழ்க்கைமுறை, மொழி வழக்கு, மருத்துவம், சோதிடம், மாந்திரீக வழக்கு, சமய வழிபாடு, கூத்துக்கலை, விளையாட்டுக்கலை முதலான நடை உடை பாவனைகளில் தனித்துவத் தன்மையைக் கொண்டுள்ளது.

மட்டக்களப்புப் பிரதேசம் குறுநில மன்னர்களால் நிருவகிக்கப்பட்டு வந்துள்ளது. வன்னியர்கள் கைவசம் மட்டக்களப்புப் பிரதேசம் இருந்தது. அவர்கள் மேலாண்மை அதிகாரம் ஒன்றிற்குக் கீழ்ப்பட்டிருந்தனர். இவர்களது காலத்தில் மருமக்கட் தாயமுறை, நிலமானிய அமைப்புமுறை முக்கியம் பெற்று விளங்கின.

மட்டக்களப்பு விவசாய வளம் நிறைந்த இடமாதலால் விவசாயமும், காடுகள் மிக்க இடங்களையும் கொண்டிருந்ததால் மந்தை வளர்ப்பும், மட்டக் களப்புப் பிரதேசம் கடல் ஆறு என்பவற்றைக் கொண்டிருத்தலால் மீன் பிடித்தலும் பெரும்பான்மையாக மேற்கொள்ளப்பட்டன. ஏனைய தொழில் களும் செய்யப்பெற்றன.

மட்டக்களப்புத் துறைமுகங்கள் மூலமாக உள்ளூர்த் துறைகளுக்கிடை யிலும், மட்டக்களப்புத் துறைமுகத்திலிருந்து தென்னிந்திய துறைமுகங் களுக்கும் ஏற்றுமதி இறக்குமதி செய்யப்பட்டன. தென் இந்தியாவிலிருந்து உடுதுணி வகைகளும் வெண்கலப்பாத்திரங்கள் மட்பாண்டங்கள் முதலிய வீட்டு உபகரணச் சாமான்களும் இறக்குமதி செய்யப்பெற்றன. மட்டக்களப் பிலிருந்து தேங்காயெண்ணெய், நெய், தேன், அரிசி, கயிறு, கொப்புறா, மரங்கள் முதலியன ஏற்றுமதி செய்யப்பெற்றன. உள்ளூர்த் துறைகளுக் கிடையில் தோணி, வள்ளம் என்பவற்றையும் நீண்ட தூரப்பிரயாணங்களுக்கு பாய்மரத் தோணி, பாய்மர வள்ளம், உரு என்பவற்றையும் நீர் ஊர்திகளாகப் பயன்படுத்தினர்

மட்டக்களப்புத் தமிழர் வரலாறுகளையும், மட்டக்களப்புத் தமிழ் இலக்கிய வரலாறுகளையும் எழுதியோர் பலர். எனினும் மட்டக்களப்புத் தமிழர் பண்பாட்டுக் கூறுகளை ஆய்வியல் முறையில் எழுதாமையால்

அத்தகைய முயற்சிக்கு இது முதற்படியாக அமையும் எனக்கருதலாம். இந்நூல் மட்டக்களப்புத் தமிழரது பண்பாட்டுக் கூறுகள் பூரணமாக கூறப் பட்டுள்ளன எனக் கருதிவிட முடியாது. ஏனெனில் பண்பாட்டினைச் சுட்டும் சில அம்சங்கள் உதாரணமாக மக்களது இயற்கையோடு அளாவளாவிய இயற்கைக்குத் தீங்கு விளைவிக்காத வாழ்க்கை பற்றிய தரவுகள் இந் நூலின்கண் கிடைக்கப்பெறாமல் உள்ளன.

இதன் அடிப்படையில் மட்டக்களப்புத் தமிழரிடையே தொன்மையானதும், தனித்துவமானதும், சால்புடையதுமான பண்பாட்டுக் கூறுகள் உள்ளதையும், இவையனைத்தையும் பலவகையான அச்சுறுத்தல்களையும், சவால்களையும் மீறி இபபிரதேசமக்கள் பேணிக்காத்து வந்துள்ளனர் என்பதையும் அறியக் கூடியதாக உள்ளது.

மட்டக்களப்புப் பிரதேசத்தின் பண்டைக்காலம் முதல் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக்காலம் வரையிலான காலப் பகுதிக்குரிய ஆவணங் களைத் தேடித் தொகுப்பது மிகவும் சிரமமான காரியம். தொடர்ந்துவரும் இருபதாம் நூற்றாண்டு காலப்பகுதியில் மட்டக்களப்புத் தமிழரது பண்பாடு பற்றியதான ஆவணங்களைத் தேடிப்பெறுவதில் சிரமம் இருக்காது. எனவே பத்தொன்பதாம் நூற்றாண்டுக்குப் பிந்திய காலத்தையும் ஆய்வு செய்தாற்றான் முழுமையுடையதாக அமைவுறும். அதற்காக இறையருளை வேண்டி அமைகின்றேன்.

# நேர்காணல் விபரங்கள்


அம்பிகாரெத்தினம், த., (2009), நூலகப்பதவி நிலை உத்தியோத்தர், ஆரையம்பதி. நேர்காணல் திகதி 07.05 2009.

அமரசிங்கம், க., (2009), ஆரையூர் அமரன், கவிஞர், ஓய்வநிலை அதிபர், (வயது 86) ஆரையம்பதி,நேர்காணல் திகதி 11.5.2009.

அழகேசமுதலி, (2003), கவிஞர், நேர்காணல் திகதி 1.5.2003.

கணபதிப்பிள்ளை, உ, (2009), சாஸ்திரியார், தம்பலவத்தை (வயது 90), நேர்காணல் திகதி 2009-11-10.

கணபதிப்பிள்ளை, மு., (2009), (மூனாக்கானா), கவிஞர், ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியரும் நாட்டார் இலக்கிய ஆய்வாளரும் (வயது 85), ஆரைப்பற்றை, நேர்காணல் திகதி 10-09-2009.

கதிர்காமத்தம்பி, K.O.V., (2007), ஓய்வுபெற்ற தபாலதிபர் (வயது 90) கல்லடி உப்போடை, நேர்காணல் திகதி 10.05.2007.

கந்தன் நாகமுத்து, (2009), வேடர் குலப்பெரியார், (வயது 71), களுவங்கேணி, நேர்காணல் திகதி 09-08-2009.

காந்தன் குருக்கள், விஸ்வப் பிரம்மம் வை.இ.எஸ்., (2006), அகில இலங்கை இந்து தர்மோதய ஸ்தாபகரும் பிரம்மாதீன குருகுல பீடாதிபதியும் - பெரிய போரதீவு ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலயப் பிரதம குரு, பட்டாபுரம், நேர்காணல் திகதி 05.10.2006.

குணரெத்தினம், க., (2009), கூத்துக்கலைஞர், (வயது 65), கன்னங்குடா, நேர்காணல் திகதி 05.07.2009.

கோவிந்தராஜா, நே., (2008) ஓய்வுபெற்ற விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தரும் கிராமசேவையாளரும், (வயது 82),மண்டூர்,நேர்காணல் திகதி 09.04.2008.

சந்திரன் கிறிஸ்பஸ், வண., (2009), ஊவா, கிழக்குப் பிரதேச அங்கிலிக்கன் திருச் சபைக் குழு முதல்வர், நேர்காணல் திகதி 08.10.2009.

சுகுணதாஸ், எஸ்., (2009), மட்டக்களப்பு, நேர்காணல் திகதி 20.08.2009.

சுசிலாதேவி மனோகரன், (2010), ஆயர்வேத முறிவு வைத்தியர், கல்லடி, நேர்காணல் திகதி5.01.2010.

செல்வநாயகம், த., (2006), ஓய்வு பெற்ற அதிபர், ஆசிரிய சிரோன்மணி. கோட்டை முனை, நேர்காணல் திகதி 11.11.2006.

செல்லத்துரை, பூ.ம., (2006), முதுபெரும் எழுத்தாளர், பெரியபோரதீவு நேர்காணல் திகதி 4.3.2006.

நல்லரெத்தினம், க., (2006), இளைப்பாறிய அதிபர், பண்டிதர், சைவப்புலவர் (காரைதீவு) மண்டூர், (வயது 78) நேர்காணல் திகதி 27.12.2006.

நாகமணி, ஆ., (2007) வீரமுனை (வயது (83). நேர்காணல் திகதி 12.11.2007.

நாகலிங்கம், இரா., (அன்புமணி), (2009), முதுபெரும் எழுத்தாளரும், ஓய்வு பெற்ற வடக்கு கிழக்கு மாகாண ஆளுனர் செயலகத்தின் சிரேஷ்ட உதவிச் செயலாளரும், ஆரையம்பதி,நேர்காணல் திகதி 08.06.2009.

பரசுராமன் மூப்பன், (2009), பறைமேளக்காரர், களுதாவளை. நேர்காணல் 10-05-2009.

பவழேந்திரன், கு., (2006), உதவிக் கல்விப்பணிப்பாளர்(தமிழ்), பிரதான வீதி-தம்பிலுவில். நேர்காணல் 7.12.2006

பாக்கியமூர்த்தி, வே., (2009), மட்டக்களப்பைச் சேர்ந்த விஷ்வ பிரம்ம குல பெரியார்களில் ஒருவரும் ஓய்வு பெற்ற அதிபருமான சைவசித்தாந்த சிகாமணி (வயது 73), நேர்காணல் திகதி 10.01.2009.

பெரியதம்பி, சி., (2007), முன்னாள் வண்ணக்கர், கோயிற் போரதீவு, நேர்காணல் திகதி 05-06-2007.

முத்துவேல், க., (2009), வேடர் குலக் கட்டாடியார், களுவன்கேணி, நேர்காணல் திகதி 27.08.2009.

யோசப் மேரி அடிகளார், வண., (2009), கல்லடி புதுமுகத்துவாரம் புனித இஞ்ஞாசியார் ஆலய பங்குத்தந்தை, நேர்காணல் திகதி 15-03-2009.

வயிரமுத்து, க., (2007), இளைப்பாறிய ஆசிரியர், துறைநீலாவணை. (வயது 93) நேர்காணல் திகதி 10.07.2007.

விநாயகமூர்த்தி, க., (2010) பண்டிதர், வைத்தியர், பிரசித்த நொத்தாரிசு, நொச்சிமுனை (வயது 91). நேர்காணல் திகதி 05.01.2010.

வினாயகமூர்த்தி, வெ., கலாசூரி, (2006), இளைப்பாறிய அதிபர், பங்குடாவெளி. நேர்காணல் திகதி 2006.07.04.

வேலழகன், ஆ.மு.சி., (2008), பிரபல எழுத்தாளர், திருப்பழுகாமம், நேர்காணல் திகதி 04.07.2008.

வேலாப்போடி, மா., (2007), கன்னன்குடா, (103 வயது), நேர்காணல் திகதி 02.11.2007.

றோசம்மா, அ., (2008), தம்பிலுவில்-2, (62வயது), நேர்காணல் திகதி 25.8.2007.

# உசாத்துணை நூல்கள்

## தமிழ் நூல்கள்

அம்மன் கிளி முருகதாஸ் (2007), *இலங்கைத் தமிழரிடையே வாய்மொழி இலக்கியம்*, குமரன் புத்தக இல்லம், கொழும்பு - சென்னை.

அருள் செல்வநாயகம் (1982), *சீர்பாதகுல வரலாறு*, திருவருள் வெளியீடு, திருவருள்நிலையம், குறுமண்வெளி, களுவாஞ்சிக்குடி.

அருளப்பு அந்தோனிமுத்து (1976), *கிழக்குப் பிராந்திய மரணச்சடங்குகளில் முக்குவ மரபு வழமைகள்* (தட்டச்சுப்பிரதி), அனைத்துலக தமிழாராய்ச்சி மன்ற மட்டக்களப்பு மகாநாடு.

இரகுபதி, பொ., (2008), ''ஈழத்தமிழர் பண்பாட்டடையாளம்'', *கூடம்*, ரொறிங்ரன் எவன்யூ, கொழும்பு

இராசமாணிக்கனார், மா., (1957), *தமிழர் திருமணத்தாலி*, 2ஆம்பதிப்பு, செல்வி பதிப்பகம், காரைக்குடி.

இரத்தினம், கா.பொ., (1951), *தமிழ் விழாமலர்*, தமிழ் வளர்ச்சிக் கழகம், யாழ்ப்பாணம்.

ஈழத்துப் பூராடனார் (2005), *மட்டக்களப்பு மாநிலத்தின் பண்டைய வரலாற்று அடிச்சுவடுகள்*, ஜீவா பதிப்பகம்-ரொரண்டோ, கனடா.

ஈழத்துப்பூராடனார் (1984), *நீரரர் நிகண்டு*, ஜீவா பதிப்பகம், தேற்றாத்தீவு, களுவாஞ்சிகுடி.

ஈழத்துப்பூராடனார் (1992), *மட்டக்களப்பு உழவர் மாட்சிக்கலம்பகம்*, நிழல் வெளியீடு, ஜீவா பதிப்பகம், கனடா, சென்னை.

ஈழத்துப்பூராடனார் (2003), *ஈழத்து மட்டக்களப்புப் பிரதேச பண்பாட்டுக் கோலங்கள்*, நிழல் வெளியீடு, ரொரன்ரோ, கனடா.

உரோலின்சன், எச்.சி.,(1961), *இந்தியா - ஒரு பண்பாட்டுச் சுருக்கம்*, அரசகரும மொழித்திணைக்களம் (வெளியீட்டுப்பிரிவு), கொழும்பு.

எதிர்மன்னசிங்கம், செ., (1976), ''மட்டக்களப்பின் பாரம்பரியக் கலைகள்'' (தட்டச்சுப்பிரதி), மட்டக்களப்பு.

ஒஸ்டின் த சில்வா, சீ.எம். (1969), *இலங்கையிற் கல்வி - நூற்றாண்டு விழா மலர்*, இலங்கைக் கல்விக் கலாசார அலுவல் அமைச்சு.

கந்தையா ஆசாரி, கா., (1928), *தாலியும் அதன் வரலாறும்*, மட்டக்களப்பு.

கந்தையா, வி.சீ., (1964), *மட்டக்களப்புத் தமிழகம்*, ஈழகேசரிப் பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றம், குரும்பசிட்டி, யாழ்ப்பாணம்.

கந்தையா, வி.சீ., (1983), *மட்டக்களப்பு சைவக் கோயில்கள்-1*, இந்துசமயத் திணைக்களம், பிரதேச அபிவிருத்தி அமைச்சு, கொழும்பு.

கந்தையாபிள்ளை, ந.சி., (தொகு) (1957), *செந்தமிழ் அகராதி*, ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், சென்னை.

கலைவாணி, க., (1998), ''கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் இரு தேர்கள்'', *தேரோட்டம் சிறப்பு மலர்*.

கமலநாதன், சா. இ., கமலா கமலநாதன், (2005), *மட்டக்களப்புப் பூர்வ சரித்திரம்*, குமரன் புத்தக இல்லம், கொழும்பு-சென்னை.

கணபதிப்பிள்ளை, மு., (1999), ''ஆரையம்பதியின் கூத்துக்கலை'', *ஆரையம்பதி ஸ்ரீ கந்தசுவாமிகோயில் கும்பாபிஷேக சிறப்புமலர்*, ஆரையம்பதி.

கவிக்கோ வெல்லவூர்க்கோபால், (2011), *மட்டக்களப்பு வரலாறு: ஒரு அறிமுகம்*, Manuvetha Publications, Baatticaloa.

கிருஷ்ணமாச்சாரியார், (2005), *பதினெண்புராணங்கள்* (தொகுப்பு), ''அக்கினி புராணம்'', நர்மதா வெளியீடு, சென்னை.

கைலாசநாதக் குருக்கள், கா., (1963), *சைவத் திருக்கோவிற் கிரியை நெறி*, மெய்கண்டான் அச்சகம், கொழும்பு.

கோவேந்தன், த., (1976), *சித்தர் பாடல்கள்,* பூம்புகார் பிரசுரம், சென்னை.

கோவிந்தசாமி, உ., (1965), "திருக்கோயில் ஆலயம்" கல்வெட்டுகளின் கையெழுத்துப் பிரதி, காரைதீவு.

சதாசிவ ஐயர், தி., (1938), *மட்டக்களப்பு வசந்தன் கவித்திரட்டு*, சுன்னாகம்.

சண்முகதாஸ், ம., (1982), ''இந்துசமயத்தில் பெண்களின் கடமையும் இடமும்'', *அகில உலக இந்து மாநாடு சிறப்பு மலர்*, மதுரை.

சண்முகதாஸ், அ., சண்முகதாஸ், ம., (1985), *இத்தி மரத்தாள்,* வாரவொல்லை வெளியீடு, பருத்தித்துறை, யாழ்ப்பாணம்.

சண்முகநாதன், கா.வே., (2008), *தீப்பள்ளயம்*, பாண்டிருப்புத் திரௌபதை அம்மன் ஆலய வருடாந்த தீப்பள்ளய உற்சவ சிறப்பிதழ் மலர் - 2008, அர்ச்சனா பப்ளிகேசன், பாண்டிருப்பு 2.

சற்குணம், ம., (1980), நடராஜா (தொகுப்புக்கள்) *மனித வளமும் வாழ்க்கையும்*, இந்து வாலிபர் முன்னணி வெளியீடு, மட்டக்களப்பு.

சிவப்பிரகாசர், ச., (1969), *திருச்செந்தூர் புராணம் - வியாசர் சுகருக்கு உபதேசித்த அத்தியாயம் 6ம் பாடல்*, சிவப்பிரகாச பண்டிதர் உரை, வெளியீடு சைவ பரிபாலன சபை, யாழ்ப்பாணம்.

சிவப்பிரகாசர், ச., (1969), *வென்றி மாலைக் கவிராயர் இயற்றிய திருச்செந்தூர் புராணம் - வள்ளியம்மை திருக்கலியாண அத்தியாயம்*, பாடல் 67, வெளியீடு, சைவ பரிபாலன சபை, யாழ்ப்பாணம்.

சிவராம், த., (2005), ''வரலாற்று அறிமுகக் குறிப்பு'', சா.இ. கமலநாதன், கமலா கமலநாதன், *மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்*, குமரன் புத்தக இல்லம், கொழும்பு - சென்னை.

சிற்றம்பலம், சி.க., (2001), *ஈழத்தமிழர் தொன்மை*, ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகம், சென்னை.

செல்வநாயகம், டி.ரி., (1957), *நறுமலர் மாலை*, விவேகானந்தா அச்சகம் - மதுரை.

வெங்கானூர் பாலகிருஷ்ணன், (2005), *ஓலைச்சுவடிகள்*, அடோன் பப்ளிஷிங் குரூப், திருவானந்தபுரம்.

செபஸ்தியான் கபிரியல், (2009), *மட்டுநகரில் மருத்துவச் சமூகம்*, மக்கள் மறுமலர்ச்சிச் சங்கம். மட்டக்களப்பு.

செல்லத்துரை, அ. (2004), *யோகசுவாமிகள் வாழ்க்கையும் வழிகாட்டுதலும்*, சிவதொண்டன் சபை யாழ்ப்பாணம்.

சேதுரகுநாதன், ந., (1961), ''சித்த மருத்துவம்'', *சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் ஆயிரத்தெட்டாவது வெளியீட்டு விழாமலர்*, கழகவெளியீடு, சென்னை.

ஞானரெத்தினம், ஈழத்துப்பூராடனார் க. (2003), *மீன்பாடும் தேன்நாட்டுச் செல்வங்கள்*, நிழல் வெளியீடு, ஜீவா பதிப்பகம், கனடா.

தனபாக்கியம், கு., (1988), *இலங்கையில் தொல்லியலாய்வுகளும் திராவிடக் கலாசாரமும்*, சென்ற் ஜோசப் கத்தோலிக்க அச்சகம், மட்டக்களப்பு.

தம்பனே குணவர்தன, (1993), ''வேடர் சமூகத்தின் சமுதாய அமைப்புமுறை'', *இயற்கை - சுற்றாடல்மஞ்சரி*, சுற்றாடல் பாராளுமன்ற விவகார அமைச்சு, கொழும்பு.

தனேந்திரா, வி.பி., (2008), ''இந்திய கிறிஸ்தவ வருகையில் காலனித்துவ செல்வாக்கு'', *பொன்விழா மலர்*, கிறிஸ்த சேவை ஆச்சிரமம், கிரான்.

தங்கராசா, இ., (2007), *மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரப் பிள்ளையார் மான்மியம்*, லட்ஜெம்ஸ், நாவற்குடா, மட்டக்களப்பு.

தங்கராசா, யு.வி., (1993), ''கிழக்குக்கரையோர வேடர் சமூகம்'', *இயற்கை - சுற்றாடல் மஞ்சரி*, சுற்றாடல் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு (தமிழில்), கொழும்பு.

தங்கேஸ்வரி, க., (2007), *கிழக்கிலங்கை பூர்வீக வரலாறு*, மணிமேகலைப் பிரசுரம், சென்னை.

தர்மதாச, கே.என்.ஓ., (1993), ''வேடர்கள் இலங்கையின் மூத்தகுடிகள்'', *இயற்கை - சுற்றாடல்மஞ்சரி*, சுற்றாடல் பாராளுமன்ற விவகார அமைச்சு, கொழும்பு.

தருமதாச, கே.என்.ஓ., (1993), ''வேடர்கள் இலங்கையில் முதற் குடிகள்'', *இயற்கை - சுற்றாடல் மஞ்சரி*, சுற்றாடல் பாராளுமன்ற விவகார அமைச்சு, கொழும்பு

திமிலை மகாலிங்கம், (2000), ''அன்றைய மட்டக்களப்பின் பிரயாண வசதிகள்'', *தேனகம்*, பிரதேச செயலக கலாசாரப் பேரவை, மண்முனை வடக்கு, மட்டக் களப்பு.

திமிலைத்துமிலன், (1998), *தேரோட்டம் சிறப்பு மலர்*, மட்டக்களப்பு.

தில்லைநாதன், எஸ்., (2008), *மட்டக்களப்புக் கோயில்களும் தமிழர் பண்பாடும்*, எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம்- மட்டக்களப்பு.

தில்லைநாதன், எஸ்., (1991), *சைவமும் நாமும்*, திருமகள் நிலையம், தி.நகர், சென்னை.

தில்லைநாதன், எஸ்., (2006), *மட்டக்களப்பில் இந்துசமய கலாசாரம்*, மணிமே கலைப் பிரசுரம், சென்னை.

தேனூரான், (1976), *பறைமேளக் கலை*, தமிழ் ஆராய்ச்சி மாநாடு, தட்டச்சுப்பிரதி, தேற்றாத்தீவு.

நடராசா, F.X.C., (1998), *மட்டக்களப்பு மான்மியம்*, மட்டக்களப்பு கலாசாரப் பேரவை. மட்டக்களப்பு.

நடராசா, F.X.C., (1980), *மட்டக்களப்பு மக்கள் வளமும் வாழ்க்கையும்*, இந்து வாலிபர் முன்னணி வெளியீடு, மட்டக்களப்பு.

நடராசா, க.செ., 1982), *ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி*, கொழும்புத் தமிழ்ச் சங்கம், கொழும்பு - 6.

நடேசபிள்ளை, சு., (1951), *இலங்கை ஆற்றுப்படை*, நான்காவது தமிழ் திருவிழா மலர், தமிழ் வளர்ச்சிக் கழகம், யாழ்ப்பாணம்.

*நாட்டார் பாடல்கள்*, (தொகு) (1984), கல்வி வெளியீட்டுத் திணைக்களம், கொழும்பு,

பத்மநாதன், சி., (1994), *இலங்கையில் இந்துக்கோயில்கள்*, இந்துசமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.

பத்மநாதன், சி., (2002), *இந்துகலாசாரம் - நடனங்களும் ஓவியங்களும்*, இந்துசமய கலாசார திணைக்களம், இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சு. கொழும்பு.

பத்மநாதன், சி., (2002), *இலங்கைத் தமிழர் தேச வழமைகளும் சமூக வழமைகளும்*, குமரன் புத்தக இல்லம், கொழும்பு- சென்னை.

பத்மநாதன், சி., (2003), *இலங்கையில் வன்னியர்*, குமரன் புத்தக இல்லம், கொழும்பு-சென்னை.

பத்மநாதன், சி., (2004), *ஈழத்து இலக்கியமும் வரலாறும்*, குமரன் புத்தக இல்லம், கொழும்பு - சென்னை.

பத்மநாதன், சி., (2008), ''அணிந்துரை'', எஸ். தில்லைநாதன், *மட்டக்களப்பு கோயில்களும் தமிழர் பண்பாடும்*, எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம், மட்டக்களப்பு.

பத்மநாதன், சி., (2010), 'இலங்கையில் தமிழர் பிரதேசங்கள்', *வீரகேசரி* 5.4.2010.

பரமு புஸ்பரெட்ணம், (2002), *தொல்லியல் நோக்கில் ஈழத்தமிழரின் பண்டைய கால மதமும் கலையும்*, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

பாலசுகுமார், (1996) *உலக நாடக அரங்கு,* அனாமிகா, 48, பெய்லி 1ஆம் குறுக்குத் தெரு, மட்டக்களப்பு,

பிள்ளை, ஏ.எம்., (1995), *சோதிடம் மூலம் திருமணப் பொருத்தம் பார்ப்பது எப்படி?,* 2ஆம் பதிப்பு, மட்டக்களப்பு

புலியூர்க் கேசிகன், (1965), *குறுந்தொகை - தெளிவுரை*, பாரி நிலையம், பிராட்வே, சென்னை.

பெரியதம்பிப்பிள்ளை, ஏ., (1982), *உள்ளதும் நல்லதும்*, புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளை நினைவுப்பணி மன்றம், மட்டக்களப்பு.

பெரியதம்பிப்பிள்ளை, ஏ., (1982), *புலவர்மணி கவிதைகள்*, புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளை நினைவுப் பணி மன்றம், மட்டக்களப்பு.

பேரம்பலம், பே., (1959), *வேளாண்மை விளக்கம்*, இலங்கை அரசகரும மொழித் திணைக்களம், இலங்கை அரசாங்க அச்சகம், புல்லர் வீதி, கொழும்பு.

பொன் சுப்பிரமணியபிள்ளை, (1956), *கலைக் கருகூலம்,* மணிப்பதிப்பகம், புதுமண்டபம், சென்னை.

மயிலை சீனி வேங்கடசாமி, (2001), *நுண் கலைகள்*, மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை, சென்னை.

மயில்வாகனம், இரா., (1993), *இரண்டாவது சிந்தனைக் கோவை,* எம்.ஜீ. அச்சகம், ஆட்டுப்பட்டித்தெரு, கொழும்பு.

*மத்திய தீபம்*, (1989), மட்டக்களப்பு மத்திய கல்லூரி 175 ஆவது ஆண்டு மலர், மட்டக்களப்பு.

*மதுரைத் தமிழ்ப் பேரகராதி (1956)*, (தொகு) உ.மா. கோபாலக் கிருஷ்னக் கோன், திருநெல்வேலி, சென்னை.

மகேஸ்வரலிங்கம், க., (1996), *மட்டக்களப்பு சிறு தெய்வ வழிபாடு - ஓர் அறிமுகம்,* தில்லை வெளியீடு, மகிழடித்தீவு.

மகேஸ்வரலிங்கம், க., (1998), ''தான்தோன்றீச்சரத்தில் பூசைகளும் விழாக்களும்'', *மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வர ஆலய கும்பாபிசேக சிறப்பு மலர்,* மட்டக்களப்பு.

மகேஸ்வரலிங்கம், க., (2005), *மட்டக்களப்பு திருமண மரபுகள்,* ஈழநாதம்.

மகேஸ்வரலிங்கம், க., (2008), *மட்டக்களப்பு வாழ்வும் வழிபாடும்,* கொழும்பு தமிழ்ச்சங்கம், கொழும்பு.

மகேந்திரராஜா, எம்.என்., (1994), *திருமணப்பொருத்தம்*, சோதிட நிலையம், தாவடி வடக்கு, கொக்குவில்.

முத்துராமன், எம். (2006), *சைவசித்தாந்தம்,* குமரன் புத்தக இல்லம், கொழும்பு-சென்னை.

முத்துக்குமாரன், எஸ்., (1968), *கிழக்கிலங்கையில் கொம்பு விளையாட்டுக் கலை,* தட்டச்சுப்பிரதி, மட்டக்களப்பு.

முத்துக்குமாரன், எஸ்., (1962), *தமிழர் நம்பிக்கையும் மர வழிபாடும்,* தினகரன் பிரசுரம், கொழும்பு.

முருகேசு, ப., (1976), *முன்னவர் தந்த விளையாட்டுக்கள்,* மலர், அகம் போரதீவு.

மௌனகுரு, சி., (1992), *பழையதும் புதியதும்,* விபுலம் வெளியீடு, மட்டக்களப்பு.

மௌனகுரு, சி., (1998), *மரபு வழி நாடகங்கள்,* விபுலம் வெளியீடு, மட்டக்களப்பு.

மௌனகுரு, சி., (2003), *மட்டக்களப்புத் தமிழகத்தில் இந்துப் பண்பாடு,* இரண்டாம் உலக இந்து மகாநாடு, மட்டக்களப்பு.

மௌனகுரு, சி., (2004), *ஈழத்துத் தமிழ் நாடக அரங்கு,* குமரன் புத்தக இல்லம், கொழும்பு- சென்னை.

யோகராஜா, செ., (2004), ''வாய்மொழி மரபுகளினடியாக மட்டக்களப்பு பாரம்பரிய கல்விமுறை'', சித்திரலேகா மௌனகுரு (தொகு), *வாய் மொழி மரபுகள் வரலாற்று மூலங்களாக,* கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

வசந்தா வைத்தியநாதன், (1982), ''பெண் என்னும் பெறும்பேறு'', *இந்து மாநாடு சிறப்பு மலர்,* மதுரை ஆசியன் பிறிண்டர்ஸ், மதுரை.

விபுலானந்த அடிகளார், (1953), ''வசந்தன் கவி'', *ஸ்ரீ லங்கா,* கொழும்பு.

விபுலானந்த சுவாமிகள், (1926), *மதங்கசூளாமணி,* மதுரைச் தமிழ்ச் சங்கம். மதுரை.

வித்தியானந்தன், சு., (1954), *தமிழர் சால்பு,* தமிழ் மன்றம், கல்ஹின்னை, கண்டி.

வித்தியானந்தன், சு., (1979), *தமிழியற் சிந்தனை,* முத்தமிழ் வெளியீட்டுக் கழகம், யாழ்ப்பாணம்.

ஸ்ரீபன் சாமுவேல் வேதநாயகம், (1996), *கி.பி 1996 திருச்சபை சீர்திருத்தத் தொகுதி-3.*

ஸ்ரீபன், அ., (2008), *இறை விழுமியம்,* முரண்பாட்டுக் கற்கை நெறி மன்றம், இலங்கைத் திருச்சபை, யாழ்ப்பாணம்.

*ஜகந்நாதன், கி.வா., (1951), மனைவிளக்கு-சங்க நூற்கட்டுரைகள்,* அமுத நிலையம், சென்னை.

## English Books


Arulanantham, K. (2004), "Physical Process and Water Quality of Batticaloa Lagoon", *Proceedings of the 10th Annual Scientifica Session of the SLAFAR,* NARA.

Beven, L. (1946), *A History of the Diocese of Colombo,* The Times of Ceylon.

Canagaratnam, S.O. (1921), *The Monograph of the Batticaloa District of the Eastern Province, Ceylon,* H.R.Cottle, Government Printer, Ceylon.

Cartman, J. (1957), *Hinduism in Ceylon,* M.D. Gunasena & Co Ltd, Colombo.

João Ribeiro (1999), *The Historic Tragedy of the Island of Ceilão;* trans. from the Portuguese by P. E. Pieris, Asian Educational Services, New Delhi.

Kamil Zvelebil (1996), *Some Features of Ceylon Tamil,* Indo - Iranian Journal 9(2).

Lange, John William (2007), "Memories of Batticaloa District", *Palm Fringed Coast: History of Trincomalee-Batticaloa Diocese (1895-1967),* Batticaloa.

Major Forbes (1740), *Eleven Years in Ceylon.*

Majumdar (1951), *The History and Culture of Indian People,* Vol-1, Bombay.

Manel Abayaratna (2007), *Delma of the Eastern Province of Sri Lanka.*

Mendis, G.C. (1948), *The Early History of Ceylon,* New Delhi.

Pathmanathan, S. (1978), *The Kingdom of Jaffna: Kingship and Administration,* Proceedings, IATR 4th Conference Seminar.

Pusadar (Ed.) (1946), *Heritage and Life of Ceylon,* Calautta.

Queyroz, F. (1930), *TheTemporal and Spiritual Conquest of Ceylon.* Translated by S.G. Perera. A.C. Richards Publication, Colombo.

Ragavan, M.D. (1953), "A Kalvettu of the Seerpatham of the Eastern Provincial", *Ethological Survey of Ceylon,* Vol-27, Part- 1, No. 07, Colombo.

Raghavan, M.D. (1952), "Seerpadam of the Eastern Province", *Spolia Zeylanica,* Vol -27, 1952, Colombo.

Shanmugaratnam, N. (1995), *The Need for and the Steps Towards a Master Plan for Suitable Utilization of the Batticaloa Lagoon,* Report submitted to NORAD.

Sheligmen, G.G. (1911), *The Veddha,* London: Cambridge.

Small,W.A.T. (1965), *History of the Methodist Church of the Sri Lanka,* Colombo.

Tennent, J.E. (1859), *Ceylon: An Account of the Island Physical, Historical and Topographical with Notices of its Natural History, Antiquities and Production,* Vol II, Reprinted in 1999 by Asian Educational Services.

Tylor, E.B. (1974), *Primitive Culture: Researches into the Development of Mythology, Philosophy, Religion, Art, and Custom,* New York: Gordon Press. First published in 1871, University Press.

Vyas, S.N. (1967), *India in the Ramayana Age,* Delhi.

# சொல்லடைவு


அ

அட்டாளை 280, 297

அமரசேனன் 11, 44

அம்மானை 1, 119, 154, 222, 223, 225, 247, 248, 301, 319, 321, 322, 323, 324, 325, 339

அரியாரி 164, 173, 174

ஆ

ஆங்கிலேயர் 21, 22, 98, 186, 281, 306, 307

ஆடகசவுந்தரி 6, 11, 98

ஆட்டுச்சடங்கு 60, 74, 75

ஆர்மன் கோணர் 20

ஆறுமுகபிள்ளை. வீ.தோ.பொ.த 50, 274, 276, 278, 310, 338

இ

இயக்கர் 6, 8, 23, 24, 27, 33, 87, 88, 341

இராவணன் 5, 6, 22, 23, 33, 34, 101

இராஜமேளம் 219, 248

இலங்ககூடம் 230

ஈ

ஈமக்கல்லறை 9

ஈமப்பேழை 9

உ

உகந்தைமலை 63, 101

உக்கிரசிங்கன் 26, 94, 95

உலகநாச்சி 11, 42, 55, 57, 78

எ

எண்ணெய்ச்சிந்து 153, 247, 309

எல்லாளன் 24

எழுவான்கரை 2

ஒ

ஒல்லாந்தர் 1, 2, 14, 17, 19, 20, 21, 61, 120, 136, 137, 173

க

கண்ணகி வழக்குரை 154, 291, 315, 316, 317

கந்தபாணந்துறை 82

கப்பல்பள்ளம் 3

கரகாட்டம் 245, 246, 247, 253, 344

கரையார் 40, 47, 49, 50, 84, 135, 180, 227, 244

கு

குணசிங்கன் 11

குமாரசிங்கன் 12

குமுக்கன ஓயா 1

குலங்குடிகள் 33, 40, 215

குரவை 71, 191, 193, 206, 213, 247, 248, 249, 250, 251, 254, 294, 296

குருவிக்காரன் 173, 174, 298

கெ

கெப்ரன் ஜோண்சன் 21

கை

கைலாயமாலை 25, 26

கொ

கொக்கட்டிச்சோலை 6, 9, 11, 13, 37, 43, 46, 48, 49, 52, 53, 54, 56, 78, 91, 218, 303, 305

கோ

கோட்டைமுனை 47

கோணேசர் கல்வெட்டு 25, 26

ச
சர்ப்ப சாத்திரம் 274
சன்னச் சடங்கு 188

சா
சாப்பு வீடு 143
சாமர்த்திரயச் சடங்கு 134, 190

சி
சிங்களவர் 25, 59, 176, 342
சித்தாண்டி 37, 47, 56, 57, 99, 255, 270, 276, 312
சிந்தன் 47, 96
சிந்து 96, 242, 248, 308, 309, 310, 311
சிறிகுலன் 10

சீ
சீர்பாதர் 40, 47, 49, 84, 135, 227, 244
சீனட்டி 192

செ
செங்குந்தர் 40, 53
செப்பேடு 28, 30, 31, 39, 48, 62, 84, 94, 95, 341
செய்கைக்காரன் 173, 174
செய்வினை 109, 239

சை
சைவோ கொய்ம்ப்ரா 18
சைவசமயம் 29, 58, 60, 62, 63, 77, 342

சோ
சோழராட்சி 12

த
தம்பதி நல்லாள் 10
தவசிகள் 40
தனக்காரர் 40, 54

தா
தாண்டவன்வெளி 122

தி
திண்ணைப் பள்ளி 153, 154
திமிலர் 40, 135
தினசிங்கன் 8, 12

தெ
தென்மோடி 227, 228, 229, 230, 231, 233, 234, 235

தே
தேசவழமை 132, 137, 138, 352
தேவாலயம் 121-128, 343

ந
நளவர் 40, 55, 227

நா
நாகர் 1, 6, 7, 8, 10, 23, 24, 27, 28, 29, 33, 34, 82, 87, 88, 341
நாதன் 8, 12, 17, 28, 39, 46, 53, 57, 62, 66, 79, 89, 91, 190, 320, 350, 351, 352
நாவிதர் 56, 57, 85, 93, 122, 172, 217

நி
நிலமானியம் 96, 172, 227
நிலவுடமைச் சமூகம் 27

ப
பஞ்சாயசபை 83
படுவான்கரை 2, 78
பட்டம் கட்டுதல் 218
பட்டிக்காரன் 79, 176, 299, 300, 314
பண்டாரத்திலகம் 93
பண்டாரப் பிள்ளைகள் 54
பத்திரகாளி 6, 56, 70, 109
பர்வதம் 22

பி
பிரசின்ன சித்து 10

பீ

பீட்டர் டீ. கிறாவ் 20

பு

புராணபடனம் 154, 247, 248, 328, 329, 331

புளியந்தீவு 1, 51, 122, 124, 125, 126, 154, 160, 186, 285, 312, 317

பெ

போரதீவு 7, 15, 22, 33, 46, 53, 70, 86, 281

போ

போடியார் 173, 299

ம

மகிடி நாடகம் 269

மகிட வேலாப்போடியார் 338

மண்டூர் 6, 9, 15, 31, 34, 37, 38, 42, 46, 47, 49, 51, 52, 57, 63, 64, 84, 85, 86, 90, 154, 158, 186, 196, 222, 255, 276, 305, 311, 323, 329, 339, 347, 348

மண்முனை 3, 11, 14, 22, 55, 56, 57, 78, 90, 97, 186, 352

மரவழிபாடு 37, 60, 63, 65, 66

மருந்து மந்திரம் 4, 105

மருமக்கட் தாயம் 138

மலைய குகநாடு 1

மா

மாந்திரீகம் 153

மாருதப்புரவீகவல்லி 26, 94

மு

முக்குவர் 40, 41, 42, 43, 44, 47, 49, 79, 88, 136, 137, 138, 244

முக்கனார் 10

முண்டர் 27

முதுசொம் 137, 138

முல்லைக்காரன் 173, 174, 297, 299

யா

யாழ்ப்பாணன் 25, 26

யாழ்ப்பாண வைபவமாலை 4, 25

வ

வடமோடி 227-236

வணிகத் தலங்கள் 12

வண்ணார் 40, 55, 56, 85, 93, 135, 172, 227

வள்ளி 64, 140, 178, 310, 329, 331

வன்னிமை 15, 29, 30, 44, 100

வன்னியர் 13, 14, 21, 25, 30, 40, 44, 86, 352

வா

வாகூரன் 10

வாலசிங்கன் 25, 31, 47, 95

வி

வித்துவான். ச. பூபாலபிள்ளை 334, 338

விஜயன் 23, 24, 28

வீ

வீரசைவம் 13

வீரமுனை 2, 47, 49, 96, 276, 312, 331, 348

## மட்டக்களப்புத் தமிழர் பண்பாட்டு மரபுகள்

**சைவப்புலவர் கலாநிதி சாமித்தம்பி தில்லைநாதன்**

பண்டைக்காலம் முதல் 19ஆம் நூற்றாண்டு வரையிலான மட்டக்களப்புத் தமிழரது சமூக கலாசார பண்பாட்டுக் கட்டமைப்புக்கள் பற்றிய தெளிவினைத் தரும் ஆவணமாக இந்நூல் அமைந்துள்ளது. இந்நூல் மட்டக்களப்பு வரலாற்றுப் பின்னணி, சமய சமூகப் பண்புகள், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், சடங்குகள், இலக்கியங்கள் என்பவற்றினூடாக மட்டக்களப்புத் தமிழரது பண்பாட்டம்சங்களை ஆராய்ந்து எழுதப்பட்டுள்ளது. ஈழத்துத் தமிழர் பண்பாட்டை அறிந்துகொள்வதற்கும் பேணலுக்கும் இந்நூல் பெருந்துணை புரியும். ஆய்வு செய்வோருக்கும் மிகுந்த பயனளிக்கத்தக்கது.



கலாநிதி எஸ். தில்லைநாதன் (1948): மட்டக்களப்பு துறை நீலாவணையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் இலங்கைப் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டத்தையும், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டத்தையும், கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றவர். அகில இலங்கைச் சைவப்புலவர் பரீட்சையில் தேறி சைவப்புலவராகவும் விளங்கு கின்றார். சைவமும் தமிழும் துறைபோகக் கற்ற புலமை யாளரான இவரை அரச/அரசசார்பற்ற பலரும் பல கௌரவப் பட்டங்களைச் சூட்டிக் கௌரவித்துள்ளனர். இவரது கல்வியுடைமையைப் பாராட்டி முன்னாள் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா அவர்கள் "வித்தியாகலாபமணி" எனும் பட்டத்தையளித்துக் கௌரவப்படுத்தினார்.

இவர் ஆசிரியராக, அதிபராக (மட்/மண்டூர் ம.வி, கொ/ விவேகானந்தாக் கல்லூரி), பிரதேச கோட்ட கல்விப் பணிப்பாளராக (பட்டிப்பளை, போரதீவுப் பற்று) பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

பல ஆய்வு நூல்களைப் படைத்துள்ள இவரது ஆய்வுக் கட்டுரைகள் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பிரசுரமாகியுள்ளன. இவைகள் ஆராய்ச்சி உலகிற்கு மிகுந்த பயன் தருவன.

மட்டக்களப்புத் தமிழ்ச்சங்க முன்னாள் தலைவராகவும், இலங்கை பூகந்தேவனார் புலவர் கழக உபதலைவராகவும், அகில இலங்கைச் சைவப்புலவர் சங்க உபதலைவராகவும், பல சமூக நிறுவனங்களின் ஆலோசகராகவும் உறுப்பினராகவும் விளங்குகின்றார்.

- செங்கதிரோன்
ஆசிரியர் செங்கதிர்

குமரன் புத்தக இல்லம்

விடயம்: சமூக வரலாறு / பிரதேச வரலாறு

ISBN 978-955-659-480-5

விலை ரூபா 975.00

#668